www.t.me/tamilbooksworld

விகடன் பிரசுரம்

# மோட்டிவ் 6

## SIX SUSPECTS

விகாஸ் ஸ்வரூப்

தமிழில்:

www.t.me/tamilbooksworld

DISCOVERY BOOK PALACE

www.t.me/tamilbooksworld

# மோட்டிவ் 6

விகாஸ் ஸ்வரூப்

தமிழில்: அஞ்சனாதேவ்

*எல்லா மரணமும் சமம் அல்ல!*

*வணக்கம் வாசகர்களே...*

*அருண் அத்வானியாகிய நான் தொடர்ந்து எழுதி வரும் புலனாய்வுக் கட்டுரைகளை நீங்கள் படித்து இருப்பீர்கள். எனவே, என்னைப்பற்றிய தனி அறிமுகம் உங்களுக்குத் தேவை இல்லை. இப்போது நான் எழுதும் இந்தக் கட்டுரை, விவேக் விக்கி ராய் கொலை தொடர்பானது.*

me/tamilbooksworld

*ரிக்ஷா மிதிப்பவன் கொலையாவதும், ரோல்ஸ் ராய்ஸ் ஓட்டுபவன் கொலையாவதும் ஒன்றாகிவிடாது. ரிக்ஷாக்காரன் குத்திக் கொல்லப்பட்டால், அவன் சடலம்போலவே அந்த நியூஸ்ும் நாளிதழின் ஏழாம் பக்கத்தில் ஏதோ ஒரு மூலையில் நாலு வரிகளில் புதைக்கப்படும். கோடீஸ்வரன் கொலை என்றால், தலைப்புச்செய்தி போட்டு ஏழெட்டு நாளைக்குக் கொண்டாடிவிடமாட்டார்களா!*

*காரணம் எளிதானது!*

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

ஏழைகள் கொலையாவதும், அகாலமாகச்சாவதும் நாட்டில் சர்வ சாதாரணம். பணக்காரர்களோ பெரும்பாலும் நரை கூடிக் கிழப்பருவம் எய்துகிற வரையில் படுஷோக்காக வாழ்ந்துவிட்டு, இயற்கையின் அழைப்புக்கு ஏற்ப ஏ.சி. ரூமில் விஸ்கி அடித்தபடி, செண்ட் வாசனையோடு சாகிறார்கள். அவர்கள் எப்போதாவதுதான் கொல்லப்படுகிறார்கள். அதனால் அது அபூர்வம்தானே?!

அப்படித்தான் விவேக் விக்கி ராய் என்ற 32 வயது ஆளுடைய, ராய் குரூப் ஆஃப் இண்டஸ்ட்ரீஸ் நிறுவனத்தின் ஓனருடைய - உத்தரப் பிரதேசத்தின் இன்றைய உள்துறை அமைச்சரின் மகனுடைய கொலை விவகாரம் இரண்டு நாட்களாக பேப்பர்களிலும் டி.வி-யிலும் அதகளப்பட்டுக்கொண்டு இருக்கிறது.

www.t.me/tamilbooksworld

புலனாய்வு நிருபரான என் நீண்ட கால சர்வீஸில், மத்திய மந்திரியின் பலே ஊழலில் தொடங்கி... கூல்டிரிங்ஸில் கலந்திருக்கும் பூச்சி மருந்து வரையில் எத்தனையோ 'ஸ்கூப்' களை அடித்திருக்கிறேன். அப்படி இருக்க, அதிரடியும் மர்மமும் நிறைந்த வாழ்க்கை வாழ்ந்த ஒரு மந்திரியின் மகனை ஃபாலோ பண்ணாமல் விட்டுவைப்பேனா?

கிட்டத்தட்ட 10 வருடங்களாக விவேக் விக்கி ராயை நோக்கி என்னை இன்வெஸ்டிகேடிவ் கவர்ச்சி இழுத்துக்கொண்டேதான் இருந்தது - விளக்கை நோக்கி இழுபடுகிற விட்டில் பூச்சி போல!

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*கிட்டத்தட்ட ஒரு பேய்ப்படம் பார்க்கிற மாதிரிதான் இருக்கிறது அவனைப்பற்றிய இருட்டு நிஜங்கள். எத்தனை க்ரைம் விவகாரங்கள் அவன் கண்ணசைவில் நடந்து இருக்கின்றன தெரியுமா? ஆனால், ஆதாரம்..? இருந்தாலும் நான் தளரவில்லை. என் மற்ற வேலைகளுக்கு நடுவில் மூச்சை தம் கட்டிக்கொண்டு, பெரிசாக... ரொம்பப் பெரிசாக ஏதாவது ஓர் ஆதாரம் அவனைப்பற்றி கிடைத்துவிடாதா என்று தேடிக்கொண்டே இருந்தேன்.*

*'மந்திரி மகனை ஃபாலோ பண்ணாதே' என்று அப்பட்டமான கொலை மிரட்டல்கள் எனக்கு வந்தன. 'உன் பத்திரிகை ஆபீஸில் சொல்லி... வேலையைவிட்டு உன்னைத் தூக்கியடிப்போம்' என்று டைட் க்ளோஸ் -அப்பில் வந்து சில அடியாட்கள் அதட்டியும் பார்த்தார்கள்.*

www.t.me/tamilbooksworld

*அதெல்லாம் தாண்டி நான் பத்திரமாக இருக்கிறேன். விக்கி ராய்தான் இப்போது இல்லை!*

*அவன் சாவு நிமிடத்துக்கு வருவோம்...*

*அது போன சனிக்கிழமை நள்ளிரவு 12.05... அதாவது, ஞாயிறின் முதல் நிமிடங்கள். டெல்லிக்கு வெளியே மெஹ்ரூலி தெரியும் இல்லையா? அங்கே இருக்கிற அவனுடைய பண்ணை வீட்டில் சுட்டுக் கொன்று விட்டார்கள். தடயவியல் ரிப்போர்ட்டின்படி ஒரே ஒரு குண்டு, செம துல்லியமாக அவன் இதயத்தைத் துளைத்துக்கொண்டு போயிருக்கிறது. அதுவும் மிக மிக க்ளோஸ் ரேஞ்சில்! உடம்பின் பின்பக்கமாக வெளியேறி, ஒரு மர அலமாரியில் குண்டு பொத்துக்கொண்டு நின்றதாம். விக்கி ராயின் உயிர் பிரிந்தது - டமீல் ஸ்தலத்திலேயே!*

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

சட்டத்தைத் துளிகூட மதிக்காத, எத்தனையோ உயிர்களுக்கு இம்சை கொடுத்த, கேவலமாக 'ப்ளேபாய்'த்தனம் பண்ணிக்கொண்டு இருந்த ஒருத்தனுக்கு எதிரிகள் எவ்வளவு பேர் இருப்பார்கள் என்று சொல்லத் தேவை இல்லை. தன் அப்பாவின் அரசியல் செல்வாக்கு தந்த உரத்தோடு, ஒரு பெரிய தொழில் சாம்ராஜ்யத்தையே அவன் உருவாக்கி வைத்திருந்தான்.

என் கட்டுரைகளைத் தொடர்ந்து படித்துவரும் வாசகர்களுக்கு நன்றாக நினைவிருக்குமே... சில வருடங்களுக்கு முன் இதே விக்கி ராய், பங்கு மார்க்கெட்டில் தனக்கு உள்ள நிழல் தொடர்பு களைவைத்து, தன் கம்பெனியின் ஷேர்கள் மதிப்பை எந்த அளவுக்கு ஊதிக்காட்டி மகா மோசடி செய்தான் என்று!

www.t.me/tamilbooksworld

விக்கி ராய்க்கு பொறுக்கித்தனமும் (இறந்து போனவனை இப்படிச் சொல்வதற்கு மன்னிக்கவும்!) ஃப்ராடுத்தனமும் சின்ன வயதில் இருந்தே கைவந்த கலை. 17 வயதில் அவன் முதன்முதலில் கோர்ட்டில் நிறுத்தப்பட்டான்.

அவனுடைய மந்திரி அப்பாவுக்கு லஞ்சமாக ஒருத்தர் பி.எம்.டபிள்யூ. கார் ஒன்றைப் பரிசு அளித்து இருந்தார். அதை எடுத்துக்கொண்டு, தன்னை மாதிரியே மூன்று அராத்து நண்பர்களைச் சேர்த்துக்கொண்டு ஒரு பாருக்குப் போய் மூக்கு முட்டக் குடித்தான். திரும்பி வரும்போது விடியற்காலை 3 மணி சுமார்... டெல்லியின் வீதிகளெல்லாம் பனி மூட்டத்தில் அமிழ்ந்து இருக்க, பிளாட்பாரத்தின் மீது காரை ஏற்றி, அங்கே படுத்திருந்த ஆறு அப்பாவிகளைக் கூழாக்கிவிட்டு, திரும்பிப் பார்க்காமல் பறந்துவிட்டான்.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

இந்த குடிபோதைக் கொலைகள்பற்றி பத்திரிகைகள் மாய்ந்து மாய்ந்து எழுதியும்தான் என்ன பிரயோஜனம்? செத்துப்போனவர்களின் சொந்தக்காரர்களே கடைசியில் கோர்ட்டில் பல்ட்டி அடித்துவிட்டார்கள். சம்பவ இரவில் அப்படி எந்த பி.எம்.டபிள்யூ காரையும் பார்க்கவில்லை என்று சொல்லிவிட்டார்கள். புரிந்திருக்குமே... சாட்சிகளை சுலபமாக விலைக்கு வாங்கிவிட்டார் விக்கி ராயின் அப்பா.

ஏழு வருடங்களுக்கு முன்னால்தான் விக்கி ராய் தெரிந்தே தன் முதல் கொலையைச் செய்தான். டெல்லி - ஜெய்ப்பூர் ஹைவேயில் போனால் 'மேங்கோ' என்று ஒரு ரெஸ்டாரன்ட் இருக்கும். தன்னுடைய 25-வது பிறந்த நாளுக்கு அங்கே படா பார்ட்டி கொடுத்தான். ராத்திரி 9 மணிக்குத் தொடங்கிய பார்ட்டி நள்ளிரவு தாண்டியும் நீண்டது. வெளிநாட்டு விஸ்கி வெள்ளமாக ஓடிக்கொண்டு இருந்தது. அரசாங்க அதிகாரிகள், சமூக சேவகர்கள் என்ற போர்வையில் வளைய வரும் 'மாமா' பசங்கள், உற்றுக் கவனித்தால் கண்டுபிடிக்கக்கூடிய லெவலுக்கான சில இந்தி ஸ்டார்கள், ஓரிரண்டு பிரபல விளையாட்டு வீரர்கள்... இதோடு விக்கியின் முன்னாள், இந்நாள் கேர்ள் ஃப்ரெண்டுகள் சிலரும் அங்கே தண்ணியில் மிதந்துகொண்டு இருந்தார்கள். விக்கியும் செம ஏத்து ஏத்தியிருந்தான்.

www.t.me/tamilbooksworld

பார் டெண்டராக இருந்த பெண்ணிடம் ராத்திரி 2 மணி வாக்கில் போய், தனக்கு ஒரு ஷாட் டக்கீலா கேட்டான் (புறங்கையில் உப்பு வைத்து, எலுமிச்சை சாறு பிழிந்துகொண்டு, ஒரே கல்பில் ஏற்றுகிற செம ஹாட்டான டிரிங்க்!). எந்த இழவாக இருந்தால்தான் என்ன... ''230 மணிக்கு எந்த டிரிங்கும் சப்ளை பண்ணக் கூடாது சார்!'' என்று அந்த பார் டெண்டர் பெண் சொல்லித்தொலைத்தாள். வெள்ளை டெனிம் டி-ஷர்ட்டும், இறுக்கமான ஜீன்ஸ் பேன்ட்டும் அணிந்திருந்த அவள் பெயர் ரூபி கில். டெல்லி யுனிவர்சிட்டியில் படித்துக்கொண்டே, லீவு நாட்களில்

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

இப்படி பார்ட்-டைம் வேலை பார்ப்பது அவள் வழக்கம். குடும்பத்துக்கு பாரமில்லாமல் படிப்புச் செலவை தானே பார்த்துக்கொள்கிற எத்தனையோ உருப்படியான மாணவமணிகளில் அவளும் ஒருத்தி.

''கண்ணு... ஒரே ஒரு டக்கீலா குடு போதும். அடிச்சிட்டுக் கிளம்பிகிட்டே இருக்க வேண்டியதுதான்!'' - நிற்க முடியாமல் ஆடினான் விக்கி.

''ஸாரி, சார்... பார்களுக்கான ரெகுலேஷன்படி...'' என்று ரூபி கில் சொல்லும்போதே...'' அடிங்.........! என்ன ......ரு ரெகுலேஷன். எனக்குத் தெரியாததா? என்னாடி... கெஸ்ட்டுங்க முன்னாடி அவமானப்படுத்தறதுதான் உங்க ரெஸ்டாரன்ட் வழக்கமா?'' என்று பாய்ந்தான் விக்கி.

www.t.me/tamilbooksworld

போதைக்கார கஸ்டமர்களின் கெட்ட வார்த்தைகள் கேட்டு ஆத்திரப்படக் கூடாது என்று அவளுக்குச் சொல்லிக்கொடுத்து இருந்தார்கள். எனவே பண்பாக, ''மன்னியுங்கள் ஸார்... ரூல்ஸ்னா ரூல்ஸ்தான். இன்னொரு டிரிங்க் தர முடியாது!'' என்றாள்.

''அடித்...............'' என்றபடியே கோட் பாக்கெட்டில் கைவிட்டு ரிவால்வரை எடுத்தான் விக்கி. ரெண்டு தடவை சுட்டான். முகத்தில் ஒன்றும், கழுத்தில் ஒன்றுமாகப் பாய்ந்து ரூபி கில் சரிந்து விழுந்து துடித்துச் சாவதை 15 விருந்தாளிகளாவது கண்ணாரப் பார்த்து இருப்பார்கள். விக்கியின் நண்பன் ஒருத்தன் அப்படியே அவனை அழுத்திப் பிடித்து மெர்சிடிஸ் பென்ஸ் காரில் ஏற்றிக்கொண்டு பறந்தான்.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

மீடியாக்களில் அந்த பச்சைப் படுகொலைபற்றி செய்திகள் பின்னியெடுக்க, 15 நாட்கள் கழித்து லக்னோ பக்கமாக எங்கோ ஒரு கிராமத்துப் பண்ணை வீட்டில்வைத்து விக்கியை போலீஸ் கைது செய்தது.

மாஜிஸ்திரேட் முன்பாக நிறுத்திவிட்டு, அவனுக்கு எப்படியோ பெயில் வாங்கிவிட்டார் வக்கீல். ஆனாலும், ஒரே ஒரு பெக் சரக்குக்காகக் கொலை செய்தான் மந்திரி மகன் என்ற பயங்கரம் ஒட்டுமொத்த தேசத்தையும் கண்கொத்திப் பாம்பாகக் கவனிக்கவைத்தது. மேலும், செத்துப்போன ரூபி கில்லின் அழகிய தோற்றம்..! அதை திரும்பத் திரும்ப அச்சு வாகனங்களும், டி.வி. மீடியாக்களும் காட்டிக்காட்டியே அனுதாபத்தை ஓவராகக் கிளறிவிட்டன.

விசாரணைக்கு அந்த வழக்கு வந்தபோது, 'பாலிஸ்டிக்' ரிப்போர்ட் என்கிற ஆயுத நிபுணர்களின் அறிக்கையில்... இரண்டு வெவ்வேறு துப்பாக்கிகளில் இருந்து குண்டுகள் வெளிப்பட்டதாக இருந்தது. சுடப்பட்டதாக சந்தேகிக்கப்படும் ஒரு துப்பாக்கி, தங்கள் பாதுகாப்பில் இருந்து எப்படியோ காணாமல் போனதாக போலீஸ் ஒரு ரிப்போர்ட் தாக்கல் செய்தது. துப்பாக்கியைக் கோட்டைவிட்ட காவலருக்கு சஸ்பென்ஷன் ஆர்டர் கொடுத்ததை கோர்ட்டில் காட்டினார்கள்.

www.t.me/tamilbooksworld

கேஸ் பாட்டுக்கு நடந்துகொண்டே இருந்தது. விக்கி தன் கோட்டில் இருந்து துப்பாக்கியை வெளியே எடுத்தபோது பார்த்ததாக முதலில் சொல்லி இருந்த ஹோட்டல் ஊழியர்கள் ஆறு பேருமே, ஏதோ குழப்பத்தில் அப்படி சொன்னதாக பிறகு குட்டிக்கரணம் போட்டார்கள்.

போன பிப்ரவரி மாதம்தான் தீர்ப்பு வந்தது. விக்கி குற்றமற்றவன் என்று கோர்ட் சொன்னதைக் கொண்டாட வேண்டாமா? அதற்குத்தான் மெஹ்ரூலியில் தனக்கு மிக வேண்டிய மிகச் சிலரை மட்டும் கூப்பிட்டு

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*இருந்தான். பார்ட்டியின்போது, மிகச் சில நிமிடங்கள் மட்டும் திடீரென்று பவர் கட் ஆக... மறுபடி விளக்கு எரிவதற்குள் துப்பாக்கி வெடிச் சத்தம் கேட்டது. வெளிச்சம் வந்தபோது விக்கி செத்துக்கிடந்தான்!*

- தொடர்ந்து சந்தேகிப்போம்...

Copyright © Vikas Swarup 2008

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

## மோட்டிவ் 6

விகாஸ் ஸ்வரூப்

தமிழில்: அஞ்சனாதேவ்

### இருட்டில் வெடித்த துப்பாக்கி!

விவேக் விக்கி ராயின் கொலை பற்றி 'பாவத்தின் சம்பளம் மரணம்' என்று சொல்லலாம். ஆனால், போலீஸ் 'இ.பி.கோ. 302' என்றது. 'திட்டமிட்ட கொலை' என்றது. போலீஸ் கமிஷனர் தனி கவனம் செலுத்தி உயிரைக் கொடுத்து விசாரிக்கிறார். பின்னே..? 'கொலையாளியை மட்டும் நீங்க உடனே பிடிக்கலேன்னா, பதவி ஓய்வுக்குப் பிறகு டெல்லி யூனியன் பிரதேசத்தின் லெஃப்டினென்ட் கவர்னர் ஆக நினைக்கும் உங்க ஆசையில் மண்ணுதான்!' என்று அவருக்கு எச்சரிக்கை வந்திருக்கிறதே.

t.me/tamilbooksworld

விஜய் யாதவ் என்று ஒரு டிராஃபிக் இன்ஸ்பெக்டர், அன்றைய தினம் துப்பாக்கி சத்தம் கேட்டு அந்த பண்ணை வீட்டுக்குள் உடனே போய்விட்டாராம். பார்ட்டிக்கு வந்திருந்த சுமார் 300 விருந்தினர்கள், சரக்கு ஊற்றவும்... சாப்பாடு சப்ளை செய்யவும் வந்திருந்த வெயிட்டர்கள், இன்னும் சில தோலான் தொப்பான்களையெல்லாம் மொத்தமாக அங்கேயே நிற்கவைத்து, பண்ணை வீட்டுக் கதவைப் பூட்டிவிட்டாராம். ஒவ்வொருத்தராகப் பிடித்து சோதித்தபோது, மொத்தம் ஆறு பேர் தங்கள் கைத்துப்பாக்கியுடன் பார்ட்டிக்கு வந்திருப்பது

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

தெரிந்ததாம். இதெல்லாமே என் ரகசிய சோர்ஸ்கள் மூலம் கிடைத்திருக்கும் தகவல்கள். அதிகாரப்பூர்வமாக இன்னும் போலீஸ் எதுவும் வெளியிடவில்லை.



சந்தேகப் பட்டியிலில் உள்ள அந்த ஆறு பேர் யார் என்ற தகவலும் எனக்கு வந்துவிட்டது. ஆறுமே ஆறு ரகம்!

www.t.me/tamilbooksworld

உத்தரப் பிரதேச மாநில முன்னாள் தலைமைச் செயலாளர் மோகன் குமார் இதில் முக்கியமானவர். பேருக்குதான் பெரிய மனிதரே தவிர, அவருடைய லஞ்ச லாவண்யமும், சைக்கிள் கேப்பில் பெண்களை ருசித்துவிடுகிற சில்லுண்டித்தனமும் உ.பி. முழுக்க அறிந்த ரகசியம். 'இவர்தாண்டா ஐ.ஏ.எஸ்.' என்று இந்திய நிர்வாகத் துறைக்கு தனி அவமான முத்திரை வாங்கிக் கொடுக்கிற சூரர்.

அடுத்த ஆள் - தன்னை ஹாலிவுட் சினிமா தயாரிப்பாளர் என்று சொல்லிக்கொண்டு, இந்தியாவில் இறங்கி இருக்கிற மட்டி யான ஓர் அமெரிக்க ஆசாமி.

அடுத்தது... பாலிவுட் ரசிகர்களின்கனவுக் கன்னி ஷப்னம் சக்ஸேனா. மும்பை சினிமா பத்திரிகைகளில் அவ்வப்போது தெறிக்கிற கிசுகிசுக்கள் உண்மை என்றால், விக்கி ராய்க்கு எப்போதுமே அவள் மீது கண். 'ஒரு

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

தடவையாச்சும் அவளை..' என்று நண்பர்களிடம் அடிக்கடி சப்புக் கொட்டிக் கொண்டே இருப்பானாம்.

நாலாவது ஆள், மையிருட்டு கலரில், ஐந்தடி உயரத்தில், தொலை தூரத்து தீவுக் காட்டில் இருந்து வந்த ஆதிவாசி. ''சார், நிச்சயம் இவன் நக்ஸலைட் பார்ட்டியாகத்தான் இருப்பான்!'' என்று சொல்லிச் சொல்லியே போலீ ஸார் அவனை எங்கோ மறைவில்வைத்து வெளுத்துக்கொண்டு இருப்பதாக என் சோர்ஸ் சொன்னார்.

இன்னொரு சந்தேகக் குற்றவாளி, முன்னா... பட்டதாரி... வேலை இல்லாத பையன்... தொழில் - மொபைல் போன்களைத் திருடி அரை விலைக்கும் கால் விலைக்கும் விற்பது!

பார்ட்டியில் துப்பாக்கி வைத்திருந்த ஆறாவது ஆள் - விக்கியின் அப்பா! உத்தரப் பிரதேசத்தின் மாண்புமிகு உள்துறை அமைச்சர் ஜெகன்னாத் ராய். 'சொந்த அப்பாவே தன் மகனைக் கொல்கிற ஈரமில்லாத காரியத்தை செய்வாரா?' என்று நீங்கள் கேட்கலாம். ஆனால், அவர் எந்த அளவுக்கு ஈரமே இல்லாத அப்பா என்று பின்னால் நான் விவரமாகச் சொல்லும்போது, உங்கள் கேள்வி காலியாகி விடும்! எப்படியோ... ஆறில் ஒருவராக அவரும் துப்பாக்கி வைத்திருந்தார் என்ற வகையில் போலீஸின் சந்தேகத்தைத் தப்பு சொல்ல முடியாது. அதற்காக, எடுத்த எடுப்பில் அவரைக் கூப்பிட்டு விசாரிக்க முடியுமா என்ன? போலீஸ் சந்தேகம் மனசோடுதான்.

www.t.me/tamilbooksworld

'பாலிஸ்டிக்' ரிப்போர்ட் தரவேண்டிய நிபுணர்கள் தீவிர சோதனையில் இருக்கிறார்கள். ஆறு பேரிடம் இருந்ததும் ஆறு விதமான துப்பாக்கிகள். பிரிட்டிஷ் வெப்லி அண்டு ஸ்காட், ஆஸ்திரியத் தயாரிப்பான க்ளாக், ஜெர்மனியின் வால்தர் பிபிகே, இத்தாலிய

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

பெரெட்டா, சீனத்து பிளாக் ஸ்டார் பிஸ்டல்... இதோடு இந்தியாவிலேயே எங்கேயோ குடிசைத் தொழிலாகத் தயாரான நாட்டுத் துப்பாக்கி... இதை டெல்லி பக்கம் 'கட்டா' சரக்கு என்போம்!

விக்கி ராய் உடம்பில் பாய்ந்திருக்கும் குண்டு எந்தத் துப்பாக்கியில் இருந்து வெளியானது என்று பாலிஸ்டிக் நிபுணர்கள் வெளியில் சொல்கிறபோது, மரணத்தின் மர்மம் அநேகமாக முடிவுக்கு வந்துவிடும். ஆனால், இந்தக் கொலையின் முழு உண்மைகளைக் கண்டுபிடித்தாலும், போலீஸால் அதையெல்லாம் வெளியில் சொல்ல முடியுமா என்பதே என் சந்தேகம். பெரிய இடத்துக் கொலை... பெரிய பெரிய மர்மங்கள்! அதனால்தான் அந்தக் காரியத்தை நானும் செய்ய முடிவெடுத்து, இந்த புலனாய்வுத் தொடரை எழுதுகிறேன்.

www.t.me/tamilbooksworld

ஆகவே வாசகர்களே... எனக்கு யார் மீதும் எந்த தனிப்பட்ட பகைமையும் கிடையாது. பாரபட்சம் இல்லாமல், என்னுடைய சொந்த விருப்பு - வெறுப்புகள் கண்களை மறைக்காமல், நடுநிலையாக இருந்து இந்தக் கொலை பற்றி விசாரிக்கப்போகிறேன். போகிற பாதையில் கிடைக்கிற அத்தனை தகவல்களையும் தெளிவாக உங்களுடன் பகிர்ந்துகொள்ள விருப்பம். கிடைக்கிற ஆதாரங்களை அப்படியே உங்கள் முன் வைக்கிறேன். அவை நமது விசாரணையின் போக்கோடு பொருந்திப் போகிறதா என்றும் பார்ப்போம். மிக நிதானமாக, ஆழமாக யோசித்து, கொலைகாரன் யார் என்று நாம் உறுதியாக முடிவு செய்வோம்.

ஆறு பேரில் யார் சுட்டவன்?

அசிங்கம் பிடித்த அரசு அதிகாரியா? அரை லூஸு போல் இருக்கும் அமெரிக்கனா? ஜிலுஜிலு கனவுக் கன்னியா? ஆதிவாசியா? மொபைல் திருடனா? விக்கி ராயின் சொந்த அப்பாவா?

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

நான் எழுதப்போகும் இந்த கட்டுரைத் தொடரைத் தொடர்ந்து படித்து வாருங்கள்... அதை மட்டுமே இப் போதைக்கு நான் சொல்ல முடியும்...

சந்தேகப் புள்ளி 1 - அதிகாரி மோகன்குமார்!

தன் நெஞ்சு மீது இருந்த 'கீப்'பின் கைகளை அகற்றி விட்டு, எழுந்துகொண்டார் மோகன்குமார். மணி பார்த்தார். ''மூணு ஆகிப்போச்சு. நாலு மணிக்கு ஒரு மீட்டிங் இருக்கு. நான் கிளம்பறேன்...'' என்று படுக்கையைவிட்டு இறங்கியவர், குவியலாகக் கிடந்த துணிகளில் தன் அண்டர்வேரைத் தேடிக் கண்டு பிடித்தார்.

பகலிலேயே இருட்டாக இருந்த அந்த அறைக்குள், ஏ.சி. இயந்திரத்தின் புள்ளியான பச்சை விளக்கு மட்டுமே வெளிச்சம். வைப்பாட்டி ரீட்டா சேத்தி வாகாகப் படுக்கையில் புரண்டபடியே, ''இந்த ஏ.சி. மெஷின் எவ்ளோ சத்தம் போடுது பாருங்க. கொளுத்துற வெயிலுக்கு சட்டுனு கூலாகவும் மாட்டேங்குது. வொயிட் வெஸ்டிங் ஹவுஸ் கம்பெனி மெஷினை வாங்கி மாட்டுங்கனு எத்தனை தடவை சொல்றது? இந்தியா பிராண்டுன்னா இப்படித்தான் உயிரை வாங்கும்!'' என்றாள் சலிப்பான சிணுங்கலோடு.

www.t.me/tamilbooksworld

மோகன்குமார் பதில் சொல்லவில்லை. பேன்ட் - சட்டை மாட்டி முடித்தவர், டீப்பாய் மீது பாதி காலியாகி இருந்த ஷிவாஸ் ரீகல் பாட்டிலில் இருந்து ஒரு லார்ஜ் எடுத்துப் போட கை நீட்டினார். அரைமனசாக வாபஸ் வாங்கினார்.

''அவசரமா எங்கே கிளம்பிட்டீங்க? இன்னும்கூட உங்களுக்கு சீஃப் செக்ரெட்டரின்னே நினைப்பா? அதான் ரிட்டயர் ஆயாச்சுல்ல?'' -

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

சோம்பல் முறித்துக்கொண்டே ரீட்டா சொல்ல... ஆறுகிற காயத்தைக் கீறுகிற மாதிரி இருந்தது மோகன்குமாருக்கு. 37 வருஷ அரசாங்க சர்வீஸில் இருந்து ஓய்வு பெற்றுவிட்டோம் என்பதை இன்னும்கூட அவரால் ஜீரணிக்க முடியவில்லை.

''போர்டு மீட்டிங்ல ஒருவேளை விவேக் விக்கி ராயும் வர சான்ஸ் இருக்கு. நான் கரெக்ட் டயத்துல அங்கே இருக்கணும்!'' என்றபடி தலையை சீவிக்கொண்டார்.

எத்தனை அரசியல்வாதிகள், எவ்வளவு தொழில திபர்கள், அவருக்குக் கீழே எத்தனை ஆயிரம் அரசாங்க ஊழியர்கள் வேலை பார்த்தார்கள்..! நின்றால், எழுந்தால், நடந்தால் சல்யூட்! அரசாங்கப் பணத்தில் அலட்சிய விமானப் பயணங்கள்... நட்சத்திர ஹோட்டல் சுகவாசங்கள்... நட்சத்திரப் பெண்களின் சகவாசங்கள். ஏழு மாநிலங்களில் அவருக்கு சொத்துகள் இருக்கின்றன. டெல்லியை ஒட்டி நொய்டாவில் ஷாப்பிங் காம்ப்ளெக்ஸ் ஒன்று பினாமி பேரில் உசந்து நிற்கிறது. ஸ்விஸ் பேங்க்கில் 'சிறுகச் சிறுக'ப் போட்டுவைத்தது மொத்தம் எவ்வளவு தொகை என்று ஆற அமரத்தான் கணக்கு பார்க்க வேண்டும்.

www.t.me/tamilbooksworld

ரிட்டயரான கொஞ்ச நாளைக்கு திடீரென்று ராத்திரியில் முழிப்பு தட்டும். மொபைல் போனில் தன்னை முதலமைச்சரோ, வேறு எந்த அமைச்சர்களோ கூப்பிட்டிருக்கிறார்களா என்று அசட்டுத்தனமாக மிஸ்டு கால் செக் பண்ணுவார். மறுபடி தூங்கினாலும் சுழலும் நீல விளக்கு காரில் போவதுபோலவே கனவு வரும். அதெல்லாமே போச்சு என்று உணரும்போது, ஏதோ ஆக்ஸிடென்ட்டில் ஒரு காலைத் துண்டித்துவிட்ட மாதிரி ஃபீலிங் வரும்.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

அதற்காக, இத்தனை வருடங்களில் அவர் சேர்த்து வைத்திருந்த தொடர்புகளும், அவருக்குக் கீழே வேலை பார்த்துவிட்டு இப்போது அரசின் பெரிய பதவிகளுக்கு வந்திருப்பவர்களின் அன்பும் வீணாகிவிடுமா என்ன? இப்போது அவர் அரை டஜன் பிரைவேட் கம்பெனிகளின் ஆலோசகர். அதாவது, அந்த கம்பெனிகளின் குறுக்கு வழி சமாசாரங்களை மறைக்கவும், அதிரடி புதிரடியாக அரசாங்கத்தில் அவர்களின் திட்டங்களுக்கு சாங்ஷன் வாங்கவும் தனது தொடர்புகளைப் பயன்படுத்திக் கொடுக்கிறார் மோகன்குமார்.

குறிப்பிட்ட சில இலாகாக்களில் தங்களுக்கு சாதகமான இன்னார் அமைச்சராக வந்தால் நன்றாக இருக்கும் என்று மெகா தொழிலதிபர்கள் முடிவு செய்யும்போது, அதற்கான பேரங்களை நடத்துகிற 'லாபியிஸ்ட்'கள் டெல்லியில் எக்கச்சக்கம். உ.பி. அரசிலும், மத்திய அரசிலும் மோகன்குமார் ஒரு முக்கிய 'லாபியிஸ்ட்'! இதையெல்லாம் மனசில் வைத்துத்தான், அவரை 'ஆலோசகர்' என்ற போஸ்ட்டில் உட்காரவைத்து, கம்பெனிகள் அள்ளிக் கொடுக்கின்றன.

www.t.me/tamilbooksworld

முக்கியமாக உள்துறை அமைச்சரின் மகன் விவேக் விக்கி ராய்க்கு இவர் ரொம்பத் தேவையாக இருந்தார். ராய் க்ரூப் ஆஃப் இன்டஸ்ட்ரீஸ் நிறுவனத்தின் கார்ப்பரேட் அலுவலகத்தில் மோகன் குமாருக்கு பெரிசாக ஒரு ரூம் ஒதுக்கிக் கொடுத்து, கிட்டத்தட்ட அவரை முழுநேர அதிகாரி போலவே சர்வ கௌரவத்தோடு வைத்திருந்தான் விக்கி. காலை 9 மணியில் இருந்து 5 மணி வரை வேலை நேரம் என்றாலும், எவ்வளவு நேரம்தான் ஃபைல்களைப் பார்க்கிற மாதிரியே நடிப்பது? தன் லேப்டாப்பில் 'சுடோகு' நிரப்பி விளையாடுவார். நிர்வாண அழகிகள் நிறைந்த வெப்சைட்டுகளைக் கொஞ்ச நேரம் வருடிக்கொண்டு இருப்பார்.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*சதா நேரம் சளசளவென பேசும் மனைவியின் கண்காணிப்பில் இருந்து வெளியே வந்து, ரிட்டயர்மென்ட்டுக்குப் பிறகும் ஜாலியாகப் பொழுதைக் கழிக்க முடிவதில் அவருக்கு நிம்மதி.*

*வாரம் ரெண்டு நாளைக்கு மதிய நேரத்தில் சந்தடி இல்லாமல் ரீட்டா சேத்தி வீட்டுக்குப் போய் படுத்துவிட்டு வரவும் இந்த கௌரவ ஆலோசகர் உத்தியோகம் உபயோகமாக இருக்கிறது.*

*ரீட்டா, தன் புருஷனை எப்போதோ விவாகரத்து செய்திருந்தாள். குழந்தைகள் கிடையாது. ஏதோ ஒரு கம்பெனியில் வேலை செய்கிறாள். வாரத்துக்கு மூன்று நாட்கள் போனால் போதும் அவளுக்கு. இவருக்கும் அவளுக்கும் 27 வயது வித்தியாசம். ஆனால், அந்த வித்தியாசத்தை 'உணர்த்தாத' அளவுக்கு சாகசமாக நடந்துகொள்வாள்.*

www.t.me/tamilbooksworld

*60 வயதானாலும் நீட்டாக டை அடித்து, பளிச்சென்று டிரஸ் பண்ணி நிற்கும்போது... சுமாருக்கும் மேலான பர்சனாலிட்டியில் தாம் இருப்பதாக மோகன்குமார் நினைப்பார். இருந்தாலும், தான் கொடுக்கிற பரிசுகளும் அளிக்கிற பணமும் எத்தனை நாளுக்கு ரீட்டாவை தன்னோடு இறுக்கிப் பிடித்துவைத்திருக்கும் என்பதில் அவருக்கு சந்தேகம் உண்டு. நாளைக்கே இன்னும் வளப்பமான, இளமையான ஒருத்தன் கிடைக்கிறான் என்றால், தன்னை அவள் உதறத் தயங்க மாட்டாள் என்பது அவருக்கும் தெரியும். அதுவரை 'மேட்னி ஷோ' ஓடட்டுமே!*

*வர்ஜினியா ஸ்லிம்ஸ் சிகரெட் ஒன்றை எடுத்து கொளுத்தியபடி ரீட்டா, ''வெள்ளிக்கிழமை சாயங்காலம் வித்தியாசமான ஒரு ஷோ இருப்பதாகச் சொன்னேனே... டிக்கெட் ரெடியா?'' என்றாள்.*

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

"என்ன ஷோ?'' - மோகன்குமாருக்கு சட்டென்று நினைப்பு வரவில்லை.

"அதான்... மகாத்மா காந்தியின் ஆவி ஒரு சாமியார் மீது வரப்போவதாகவும், ஆடிட்டோரியத்தில் உள்ளவர்களிடம் காந்தியே பேசப்போவதாகவும் சொன்னேனே... அன்றைக்கு காந்தி பிறந்த நாள்.''

மோகன்குமார் ஓர் அற்ப ஜந்துபோல அவளைப் பார்த்தார். "உனக்கு எப்போது இந்த ஆவி, பேய், பிசாசு மீதெல்லாம் நம்பிக்கை வந்தது?''

"ஏன் உங்களுக்குக் கிடையாதா?''

www.t.me/tamilbooksworld

"நான் கடவுளையே நம்புவது கிடையாது. 30 வருஷத்தில் ஒரு தடவைகூட கோயில் பக்கம் போனதில்லை, புரியுதா?''

"எனக்கு கடவுள் பக்தி உண்டு. ஆவி மீதெல்லாம் நம்பிக்கை கிடையாது. இருந்தாலும் இந்த அகோரி பாபா ரொம்ப அறிவியல்பூர்வமாக இதை நடத்திக் காட்டுகிறாராம்.''

"நாட்டில் எத்தனையோ ஃபிராடு சாமியார்கள். குடி, பீடி, பொடி, லேடி என்று எல்லா அட்டகாச மும் பண்ணிவிட்டு, தாறுமாறாகக் காசையும் குவிக்கிறான்கள். இதுவும் ஒரு ரகம்!'' என்று சிரித்த மோகன்குமார், "ஒரு முன்னாள் தலைமைச் செயலாளர் இந்த மாதிரி லூஸுத்தனமான நிகழ்ச்சிக்கெல்லாம் வருகிறார் என்று வெளியே தெரிந்தால், எத்தனை கேவலம்! நீ வேண்டுமானால் போ. ஒரு ஃப்ரீ பாஸ் வாங்கித் தருகிறேன்.''

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*''தாங்க் யூ!'' என்று மோகன்குமாரின் சுருங்கிய கன்னத்தில் ஒரு முத்தம் வைத்தாள் ரீட்டா.*

*சட்டென்று மெல்ட்டாகி, ''நானும் வந்து தொலைக்கிறேன்!'' என்று பதிலுக்கு ஒரு முத்தம் வைத்தார் இவர்.*

*மகாத்மா காந்தி ஆவி ரூபத்தில், விதி தன்னை ஏடாகூடமான திசை நோக்கிக் கூவி அழைப்பது அப்போது அவர் காதில் விழவில்லை!*

- தொடர்ந்து சந்தேகிப்போம்...

Copyright © Vikas Swarup 2008

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

# மோட்டிவ் 6

விகாஸ் ஸ்வரூப்

தமிழில்: அஞ்சனாதேவ்

இதோ, அக்டோபர் 2... டெல்லி ஸ்ரீஃபோர்ட் ஆடிட்டோரியம்... மாலை ஏழேகால் மணி...தன் ஹூண்டாய் சொனாட்டா காரிலிருந்து இறங்கும்போதே மோகன்குமாருக்கு வெட்கம் பிடுங்கித் தின்றது. மாட்சிமை தாங்கிய முன்னாள் தலைமைச் செயலாளர் மோகன்குமாராவது... இந்த மாதிரி ஆவி - பிசாசு என்று டுபாகூர் கலாட்டாக்களில் பங்கேற்பதாவது..! ஹூம்... ஆசை நாயகியின் ஆசைக்காக என்ன கருமத்தையெல்லாம் சகித்துக் கொள்ள வேண்டியிருக்கிறது!

www.t.me/tamilbooksworld

காந்திஜியின் ஆவி சாமியார் உடம்பில் வந்து பேசுவதை(?)ப் பார்க்க வந்தவர்களைவிட, பாதுகாப்புக்கு வந்த போலீஸ்தான் அதிகமோ என்று தோன்றியது. ஒரு கூட்டம் கையில் அட்டைகளுடன் நின்று ஆத்திரத்தோடு கோஷம் போட்டுக் கொண்டிருந்தது.

''விற்காதே.. விற்காதே... தேசத் தந்தையை விற்காதே!''

''காந்தியின் ஆன்மாவை கேவலப்படுத்தாதே!''

''மோசடிக்கார அகோரி பாபாவை கைது செய்!'' என்று கூவிக்கொண்டு இருந்தார்கள்.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

டி.வி. சேனல்களின் நேரடி ஒளிபரப்பு வேன்களும் மந்தை மந்தையாக நின்றிருந்தன. டி.வி. கேமராமேன்களும் தொகுப்பாளர்களும் சுற்றிச் சுற்றி ஓடிக் கொண்டு இருந்தார்கள்.

'டாக் டாக்'கென்று ஹைஹீல்ஸ்ஷூ ஒலிக்க, இவர் கையைப் பிடித்துக்கொண்டு நடந்து வந்தாள் ரீட்டா சேத்தி. மோகன்குமாரோ, கூட்டத்தைக் கண்டு மிரண்டவராக, தன் கோட் பைக்குள் இருந்த பர்ஸை நாசூக்காக அழுந்தப் பிடித்தபடியே நகர்ந்தார்.

பிரமாண்ட இரும்பு கேட்டுக்கு அருகே டி.வி. நிருபர் பர்க்கா தாஸ் நின்றிருந்ததை கவனித்தார். கையில் ஸ்டைலாக மைக் ஏந்தி, ''இந்தியாவின் தந்தை என்றும் 'பாபு' என்றும் எல்லோரும் நேசத்தோடு பூஜிக்கிற மகாத்மா காந்தியின் ஆவி இன்று தன் மீது வந்து, புதிய உண்மைகளை வெளியிடப் போவதாக 'சாமிஜி' ஒருவர் சவால் விட்டிருக்கிறார். ஆயிரக்கணக்கில் மக்களும் பணம் கட்டிவிட்டு அதைப் பார்க்க வந்திருக்கிறார்கள். மகாத்மாவின் குடும்பத்தினர், 'இது ஏமாற்று வேலை. காந்தியின் ஆன்மாவுக்கு இழைக்கப்படும் அவமானம்' என்று கூறி இருப்பதை கவனிக்கவேண்டும். இதெல்லாம் சாத்தியமா, இல்லையா என்பது குறித்து கருத்துக் கூறவோ, நிகழ்ச்சிக்கு தடை விதிக்கவோ செய்யாமல் உச்ச நீதிமன்றமும் ஒதுங்கிவிட்டது. வியாபார நோக்கம் என்று வந்துவிட்டால், அதற்காக எத்தனை புனிதமான ஆத்மாக்களையும் நம் நாடு பலியிடும் என்பதற்கு இந்த நிகழ்ச்சியும் ஓர் உதாரணம்!'' என்று 'பாய்கட்' முடியைக் கோதியபடி, கேமராவைப் பார்த்து, அன்றைய பிரைம் டைம் ஆடியன்சுக்காகப் பதிவு செய்துகொண்டு இருந்தாள் பர்க்கா தாஸ்.

t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

க்யூவில் நிற்கவைத்து செக் பண்ணித்தான் உள்ளே விட்டார்கள். இப்படி காத்திருந்து, கேள்விகளுக்கு பதில் சொல்லிவிட்டு நுழைவதெல்லாம் மோகன்குமாருக்கு வழக்கமேயில்லை. மெட்டல் டிடெக்டர் சோதனை, செல்போனைப் பிடுங்கிதனியே ஸ்கேனிங் சோதனை என்று எல்லாமே அவருக்கு மிளகாய்ப் பொடி தடவுகிற விதமாகத்தான் நடந்தேறின.

வராண்டாவில் ஒரு குழு தபேலாவும்ஆர்மோனியமும் வைத்து ''வைஷ்ணவ ஜனதோ'' பாடிக் கொண்டு இருந்தது. காந்திஜி மிக நேசித்த பஜன் பாட்டு! திடீரென்று மோகன்குமாரின் முகம் பிரகாசமானது. ஆடிட்டர் ஜெனரல், டெபுடி போலீஸ் கமிஷனர்ஒருத்தர், நான்கைந்து எம்.பி-க்கள் என்று சமூகத்தில் மரியாதைக்குரிய சில முகங்களும் அங்கே வந்திருப்பது தெரிந்தது.

www.t.me/tamilbooksworld

இவர் ஆலோசகராக இருக்கும் ஐ.டி. கம்பெனி ஒன்றின் ஏற்பாடுதான் டிக்கெட். மேடையின் எதிரில் முதல் வரிசையில், நடுவான ரெண்டு ஸீட்களை அவருக்குக் கொடுத்து இருந்தார்கள். ரீட்டா தன் தோழிகளைப் பார்த்துப்பேசி, இந்த நிகழ்ச்சிக்கென்றே மோகன்குமாரின் பர்ஸில் ஓட்டை போட்டு வாங்கிய, புது ஷிபான் புடவையைக் காட்டி அலட்டிவிட்டு, மிதப்பாக வந்து அவர் பக்கத்தில் உட்கார்ந்தாள்.

ஒருமணி நேரம் லேட்டாக, எட்டரை மணிக்கு ஆடிட்டோரியத்து விளக்குகள் மங்கின. ஸ்க்ரீன் மெதுவாக உயர்ந்தபோது, மேடையின் நடுவில் ஒரு வட்டம் போல ஸ்பாட் விளக்கு அடித்துக் கொண்டு இருந்தது. மற்றதெல்லாம் இருட்டு. அந்த வெளிச்ச வட்டத்தில் ஒரு கைராட்டை, ரெண்டு மூக்குக் கண்ணாடிகள், ஒரு கைத்தடி மற்றும் சில கடிதங்கள் இருப்பதைப் பார்க்க முடிந்தது.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*ரொம்பப் பழகிய குரல் ஸ்பீக்கரில் ஒலித்தது. ''கனவான்களே... சீமாட்டிகளே... அனைவருக்கும் மாலை வணக்கங்கள். நான்தான் வீர் பேடி. நீங்கள் தொலைக்காட்சிகளில் பார்க்கும் அதே வீர் பேடி. இன்றைக்கு மட்டும் திரைக்குப் பின்னால் இருக்கும் என்னை நீங்கள் நேரில் காண இயலாது. ஆனால், உங்களையெல்லாம் நான் நன்றாகப் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறேன். அதுபோலவேதான் ஆவிகளும்! நம்மால் காண இயலாதபோதும், அவை நம்மைச் சுற்றியிருந்து நம்மை உற்றுப் பார்த்துக்கொண்டே இருக்கின்றன!*

*இன்னும் சில நிமிடங்கள் பொறுத்து இருங்கள். இருபதாம் நூற்றாண்டின் தலைவிதியை ஒற்றை மனிதராக மாற்றிக் காட்டிய புனிதர் காந்திஜியின் ஆன்மாவை நாம் தரிசிக்கப் போகிறோம். 'இப்படி ஓர் அதிசயப் பிறவி ரத்தமும் சதையுமாக இந்த பூமியில் நடமாடினார் என்று இன்னும் சில தலைமுறைகள் கழித்துக் கூறினால், அதை யாரும் நம்பக்கூட மாட்டார்கள்' என்று மகாத்மாவைப் பற்றி மாமேதை ஐன்ஸ்டீன் சொன்னது உங்களுக்கு நினைவு இருக்கும். அந்த வகையில், எத்தனை பெரிய புண்ணியம் நீங்கள் எல்லாம் செய்து இருக்கிறீர்கள்! பாபா அகோரி பிரசாத் மிஷ்ராவின் உடலை மீடியமாக வைத்துக்கொண்டு, உங்களோடு காந்திஜி இப்போது பேசப் போகிறார். இதை பொய் என்றும் ஏமாற்று வேலை என்றும் உங்களில் சிலர் நினைக்கலாம். ஆனால், உங்களுக்கு ஒன்று சொல்வேன்...'' - வீர்பேடியின் குரல் சட்டென்று ஏதோ சதி ஆலோசனை பண்ணுகிற அடி தொனிக்கு மாறுகிறது.*

www.t.me/tamilbooksworld

*''ஐந்து வருடங்களுக்கு முன்னால், என் சகோதரியை ஒரு கார் விபத்தில் நான் இழந்தேன். ஆறு மாதங்களுக்கு முன்னால்தான் அகோரி பாபாவின் அறிமுகம் எனக்குக் கிடைத்தது. அவர் உடலை மீடியமாக வைத்து, என் சகோதரி என்னோடு பேசினாள். எனவே, பாபாவின்*

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*அறிமுகம் கிடைத்துவிட்டால், நம் வாழ்க்கையை அடியோடு மாற்றி அமைக்கும் சம்பவங்கள் அரங்கேறும் என்பதற்கு நானே உதாரணம்!''*

*டபக்கென்று வீர் பேடியின் குரலில் ஒரு வருத்தம் கலந்துகொண்டது.*

*''இந்த அற்புதமான நிகழ்ச்சிக்கு மகாத்மாவின் குடும்பத்தினர்*

*வரவேண்டும் என்று நாம் மிகவும் விரும்பினோம். ஆனால், தவறான சில சக்திகளின் தூண்டுதலால் அவர்கள் விலகியே நிற்கிறார்கள். இருந்தாலும், மகாத்மாவோடு நெருங்கிப் பழகியவர்கள் மூலமாக, அவர் பயன்படுத்திய சில பொருட்களைப் பெற்று, இதோ மேடையில் உங்கள் முன் நாங்கள் பார்வைக்கு வைத்து இருக்கிறோம்.''*

www.t.me/tamilbooksworld

*இப்போது குரலில் அதிர்வான கட்டளை தொனி!*

*''கனவான்களே... சீமாட்டிகளே... அகோரி பாபாவின் உடலுக்குள் மகாத்மாவின் ஆவி நுழைகின்ற நேரம் மிக சூட்சுமமானது. அந்த நேரத்தில் ஆவிக்கு எந்த சந்தடியும் இருக்கக்கூடாது. எனவே, உங்கள் செல்போன்களை எல்லாம் அணைத்துவிட்டீர்களா என்று மீண்டும் ஒருதடவை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். தயவுசெய்து யாரும் பேசாதீர்கள்... ஒரு இருமல் சத்தம்கூட மகாத்மாவின் ஆன்மாவை சலனப்படுத்தி திரும்பிப் போகச் செய்துவிடும்...''*

*சின்னதொரு இடைவெளிக்குப் பிறகு, ஒரு பெண் குரல் ஒலித்தது...*

*''இந்த நிகழ்ச்சியை உங்களுக்கு வழங்குவோர் - சாலிட் டூத்பேஸ்ட் - உங்கள் பற்களின் உற்ற நண்பன்... யமாச்சி மோட்டார் பைக்ஸ்...*

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

வாழ்வெங்கும் உங்கள் வழித்துணை..! லட்சக்கணக்கான மக்களுக்கு இந்த நிகழ்ச்சியை நேரடி ஒளிபரப்பாக வழங்குவோர் - சிட்டி டெலிவிஷன்! அடுத்த சில நொடிகளில் அகோரி பாபா உங்களுடன்...''

நடனக் காட்சி போன்ற ஸ்டேஜ் ஷோக்களில் செலுத்தப்படுகிற 'டிரை ஐஸ்' புகை மேடையின் தரைப் பகுதியைச் சூழ ஆரம்பித்தது. ஃபோகஸ் விளக்கின் வெளிச்ச வட்டம் மேடையின் ஓரம் நோக்கி நகர்ந்தது. வெள்ளை வேட்டி, காவி குர்த்தாவோடு கொத்தவரங்காய் மாதிரி மெல்லிய உருவம் அந்த விளக்கு வட்டத்துக்குள் வந்து, மேடையின் நடுநாயகம் நோக்கி நடை போட்டது. பாபா அகோரி பிரசாத் மிஷ்ரா என்கிற அந்த மனிதருக்கு நாற்பத்தைந்து வயது சொல்லலாம். சராசரி உயரம்... தலைமுடியை நீளமாக வளர்த்து, உச்சி மண்டையில் சுருட்டி சின்னக் கொண்டையாகக் கட்டியிருந்தார். தாடியில் லேசான நரை. பழுப்புக் கருவிழிகள் தீட்சண்யமாக அந்த இருட்டு ஆடிட்டோரியத்தை ஊடுருவின.

www.t.me/tamilbooksworld

நடுமேடைக்கு வந்ததும் மெதுவாகக் குனிந்து பார்வையாளர்களுக்கு 'நமஸ்தே' சொன்னார். குரல் ஐஸ்க்ரீம் வைத்து வழுக்கி விட்டதுபோல் இருந்தது.

''இப்போது நான் உங்களையெல்லாம் ஒரு பயணத்துக்குக் கூட்டிச் செல்லப் போகிறேன். இது ஒரு ஆன்மிகத் தேடல் பயணம். அதற்குமுன் கீதையிலிருந்து துவங்குகிறேன்... அழியக்கூடியது... அழியாதது என்று இரண்டாக நம்மை வகைப்படுத்துகிறது கீதை. இந்த உடல் அழியக்கூடியது. ஆனால், ஆன்மா அழியாதது; அழுகாதது! அது நெருப்பால் பொசுங்காது... தண்ணீர் அதை மூழ்கடிக்க முடியாது... காற்றாலும் கலைக்க முடியாது. ஆன்மாவை கத்தி கொண்டு வெட்டவும் முடியாது. ஏனென்றால் அது நிரந்தரமானது!

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

இதோ இப்போது நான் தியான நிலைக்கு செல்லப் போகிறேன். மகாத்மாவின் ஆன்மா எனக்குள் வந்து உங்கள் முன்பு பேசுவதற்கு சற்று அவகாசம் தேவைப்படும். ஒன்றை முக்கியமாக நினைவு கொள்ளுங்கள்... ஓர் ஆன்மா இன்னோர் உடலுக்குள் நுழையும் நேரத்தில் அவசியம் தேவை - அமைதி! சின்னஞ்சிறு ஒலிகூட இந்த அரங்கத்தில் எழுந்துவிடக்கூடாது. வீர்பேடி சாகேப் சற்றுமுன் சொன்னதுபோல் தயவுசெய்து அனைவரும் ஆழ்ந்த அமைதியைக் கடைப்பிடியுங்கள். இல்லையேல் அது எனக்கு மட்டுமல்ல... வந்து நுழையப் போகும் மகாத்மாவின் ஆன்மாவுக்குள் பெரும் சேதத்தை உண்டாக்கிவிடும்!''

'டிரை ஐஸ்' மெஷின் இன்னொரு டிரிப் புகை அடிக்கிறது. பாபா அகோரியின் உருவத்தையே மூடுகிற அளவுக்கு இப்போது பனிமூட்டம். அது மெள்ளத் தணியும்போது பாபா அகோரி மேடையில் சம்மணமிட்டு உட்கார்ந்து இருக்கிறார். கண்கள் மூடி இருக்கின்றன. சம்ஸ்கிருதம் மாதிரியும் - ஆனால், அது அல்லாத மாதிரியுமாக ஏதோ ஒரு மொழியில் அவர் மந்திரம் முணுமுணுக்கிற மாதிரி தெரிகிறது. மந்திரம் முடிந்ததும் அமானுஷ்யமான அமைதி அங்கே சூழ்கிறது.

''படார்!''

வெடிச்சத்தம்! அதைத் தொடர்ந்து வெள்ளி நிறத்தில் புகை கிளம்புகிறது. வண்ண ஒளிக்கோடுகள் மேடையெங்கும் நடனமாடத் துவங்குகின்றன. ஆடியன்ஸ் அத்தனை பேருக்கும் நிச்சயம் ஒரு தடவை தூக்கிப் போட்டிருக்கும்.

மேடையில் அகோரி பாபாவுக்கு முன்னால் இருந்த கைராட்டை திடுக்கென தானாகவே சுற்றத் தொடங்கியது. பாபாவுக்கும் அதற்கும் ஆறடி தூரம் இடைவெளி இருக்கும். நொடிகள் தாண்டத் தாண்ட

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*கைராட்டையின் வேகம் கூடுவதை, பார்வையாளர்கள் மூச்சை இறுக்கிக்கொண்டு கவனிக்கிறார்கள்.*

- தொடர்ந்து சந்தேகிப்போம்...

Copyright Ⓒ Vikas Swarup 2008

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

# மோட்டிவ் 6

விகாஸ் ஸ்வரூப்

தமிழில்: அஞ்சனாதேவ்

## பெருசு.. பண்ணாதே ரவுசு!

விட்டலாச்சார்யா விவகார மாக, மேடையிலிருந்த கைராட்டை தானாகச் சுற்ற ஆரம்பிக்க... அரங்கத்தி லிருந்த அத்தனை பெரிய மனுஷர்களும் 'ஆ'வென்று அதைப் பார்க்க... முன்வரிசையில் ரீட்டா சேத்தி சமேதராகஅமர்ந் திருந்த மோகன்குமாரின் உதட் டில் மட்டும் வெகு ஏளனப் புன்னகை!

www.t.me/tamilbooksworld

''இது ரிமோட் சமாசாரம்! மேடை ஓரமாக நின்றுகொண்டு அந்த டி.வி-க்கார வீர் பேடி பயல்தான் இயக்குகிறான் போலிருக்கு!'' என்று முணுமுணுத்தார். பக்கத்திலிருந்த ஆசைநாயகி காதில் அது விழ சான்ஸே இல்லை. அவள் விழி பிதுங்க மேடையை நிலைகுத்திப் பார்த்துக்கொண்டிருந்தாள்.

இப்போது மறுபடியும் 'டிரை ஐஸ்' புகை குபுகுபுவென அடுத்த ரவுண்டாக மேடையை நிறைத்தது. அது மெதுவாக அடங்கியபோது, மேடை மீது இருந்த காந்திஜி(?)யின் கைத் தடியும், மூக்குக் கண்ணாடியும் மெள்ள எழுந்து காற்றில் மிதக்க ஆரம்பித்தன. மேடையின் உச்சி வரை போய்விட்டு, மறுபடி கீழிறங்கி, தரையைத் தொடாமல் மிதந்த வாக்கிலேயே அசைந்து கொண்டிருந்தன.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

''ஃபிராடுப் பயல்கள்! கண்ணுக்குத் தெரியாத அளவுக்கு மெல்லிசாக கம்பி கட்டி தூக்குகிறான்கள்'' - கோணல் வாய்ச் சிரிப்போடு மறுபடி மோகன்குமார் எள்ளி நகையாட... இம்முறை ரீட்டாவுக்கு அது காதில் விழுந்தது. முழங்கை எலும்பால் கும்மென்று இவர் விலாவில் குத்திவிட்டு முறைத்தாள்.

பட்டென்று கைராட்டை சுற்றல் நின்றது. கைத்தடியும் மூக்குக் கண்ணாடியும் ஒரே சமயத்தில் தொப்பென்று தரையில் விழுந்தன. காந்தி நிஜமாகவே பயன்படுத்தி வந்ததாகச் சொல்லப்பட்ட அந்த மூக்குக் கண்ணாடி 'சிலீர்' என்று உடையும் சத்தம் நன்றாகவே கேட்டது. மேடைச் சாமியார் அகோரி பாபா கண் மூடியிருந்த நிலையைப் பார்த்து, அவர் தூங்கியே போய்விட்டார் என்று மோகன்குமார் நினைத்திருக்க... சாமியார் உடம்பு திடீரென்று ஜன்னி கண்டது போல் உதறத் தொடங்கியது. ''கடவுளே! இதையெல்லாம் பார்க்கிற தைரியம் எனக்கில்லை'' என்று ரீட்டா சன்னமாகக் கிறீச்சிட்டாள். அதேசமயம் மேடையிலிருந்த அகோரி பாபாவின் உதடுகள் அசைய... அந்த கீச்சுக் குரல் ஒலிக்க ஆரம்பித்தது.

www.t.me/tamilbooksworld

''ஹே ராம்! உங்களையெல்லாம் பார்ப் பதற்கு இங்கே நான் வந்து சேர்வதில் சற்று தாமதம் ஏற்பட்டு விட்டது. அதற்காக முதலில் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன்.''

''மைகாட்! சுதந்திர தினத்தின் போது ரேடியோவில் ஒலிபரப்பான குரல் பதிவை நான் கேட்டிருக்கிறேன். இது மகாத்மா காந்தியின் குரலேதான்!'' என்று உட்கார்ந்த வாக்கிலேயே குலுங்கி னார் பக்கத்து ஸீட் ஆசாமி.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

''பலே இந்தாளுக்கு மிமிக்ரியும் தெரிந்தி ருக்கிறது! அல்லது, டப்பிங் பண்ணுகிறான்கள்!'' என்று விடாப்பிடியாக டபாய்த்தார் மோகன் குமார்.

மேடைக் குரல், ''என்னருமைக் குழந்தை களே... ஏதோ வித்தை காட்ட அழைத்து வரப்பட்ட மிருகம் போல் என்னைப் பார்க்காதீர்கள். நானும் உங்களைப் போன்ற மனிதன்தான். எனக்கு நேர்ந்துவிட்ட ஒரு அநீதி குறித்து உங்களிடம் முறையிடவே இன்று இங்கே வந்திருக்கிறேன். ஆம், மோகன் தாஸ் கரம்சந்த் காந்தி என்ற இந்த தனிமனிதனுக்கு இழைக் கப்பட்ட மிகப் பெரிய அநீதி...''

அகோரி பாபா... இல்லையில்லை... அந்தக் கீச்சுக் குரல்... ம்ஹூம், மகாத்மா காந்தி... தன் வாக்கியத்தை முடிக்கவில்லை. அதற்குள்...

www.t.me/tamilbooksworld

''படார்!''

இந்த முறை சத்தம் கேட்டது அரங்கத்தின் பின் கோடியில்!

அங்கிருந்த கதவை அத்தனை வேகமாகத் திறந்த சத்தம்தான் அது. வெள்ளை பைஜாமா - குர்த்தா அணிந்து... லேசாக தாடி வைத்த ஆசாமி ஒருத்தன் படுவேகமாக மேடையை நோக்கி நடந்து வந்தான். நிகழ்ச்சியின் அங்கம் என்றே அதை நினைத்து அத்தனை பேரும் தலையைத் திருப்பி அவனைப் பார்க்க... மிக நீளமாக வளர்த்திருந்த செம்பட்டைத் தலைமுடி காற்றில் ஆட, கண்களில் அசாத்தியமான தீட்சண்யத்தோடு நடந்து வந்தான் அந்த ஆள். லத்திக் கம்போடு பின்னாடியே துரத்திக் கொண்டுவந்த இரண்டு கான்ஸ்டபிள்களை அந்த தாடிவாலா சட்டை பண்ணிய மாதிரியே தெரியவில்லை.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*நேராகப் போய் மேடையின் எதிரில் அவன் நிற்க... மேடையிலிருந்து வந்துகொண்டிருந்த கீச்சுக் குரல் இந்த திடீர் சலசலப்பால் நின்றுபோயிருந்தது.*

*''ஏய் போலிச் சாமியாரே..! நீ செய்வது கடைந்தெடுத்த துரோகம். காந்திஜியின் பெயரைச் சொல்லி இப்படியெல்லாம் கேவலமான ஏமாற்றுவேலைகள் நடத்த உனக்கு யார் அதிகாரம் கொடுத்தது?''*

*- தாடிவாலா அடிக்குரலில் அகோரி பாபாவைப் பார்த்துக் கத்தினான். முதல் வரிசையில் இருந்த மோகன்குமாருக்கு மிக அருகில்தான் அவன் நின்றுகொண்டிருந்தான்.*

*அகோரி பாபா ஆடவில்லை... அசையவில்லை... கண்களைத் திறக்கவில்லை!*

www.t.me/tamilbooksworld

*''ஷாம்பூ கம்பெனியும் பற்பசைக்காரர்களும் ஸ்பான்சர் செய்கிற அளவுக்கு காந்திஜி கேவலமாகப் போய்விட்டாரா உனக்கு? அவர் ஒரு இணையற்ற சகாப்தம் என்பது உனக்குத் தெரியாதா? உம்... கண்களைத் திறந்து பதில் சொல்லு!'' - கர்ஜித்தான் தாடிவாலா.*

*மேஜிக் நிபுணரின் தொப்பிக்குள்ளிருந்துகுதிக்கிற முயல்குட்டி மாதிரி இப்போது மேடையில் வந்து நின்றான் டி.வி. தொகுப்பாளர் வீர்பேடி. ''தயவு செய்து அமைதியாக இருங்கள்... நான் சொல்வதைசற்று கேளுங்கள்'' என்றான் பதற்றமான குரலில். கூடவே, ''பார்வையாளர்களே! வந்திருக்கும் இந்த அன்பரின் நோக்கம் என்னவென்பதை தெரிந்துகொள்வோம். அதுவரை ஒரு சிறிய விளம்பர இடைவேளை'' என்றான்.*

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

அதெல்லாம் தாடிவாலாவின் காதில் விழுந்ததாகவே தெரியவில்லை. ஜிப்பாவுக்குள் கைவிட்டு வெளியே எடுத்தான் - பளபளவென்று ஒரு ரிவால்வரை! கெட்டியாக அதைப் பிடித்து அகோரி பாபாவைக் குறி வைத்தான். பார்வையாளர்கள் வாயடைத்துப் போயிருக்க... வீர்பேடி முகமெல்லாம் பீதியின் தாண்டவம்! வெறும் லத்திக் கம்பு வைத்திருந்த ரெண்டு கான்ஸ்டபிள்களும் பேஸ்த்தடித்து லேசாகப் பின்வாங்கினார்கள்.

''நாதுராம் கோட்ஸேவைவிட மோசமான ஆளுடா நீ!'' என்றான் தாடிவாலா ஆத்திரமாக மூச்சு விட்டபடி. ''கோட்ஸேவாவது மகாத்மாவின் உடம்பைத்தான் துளைத்தான். நீயோ அவருடைய ஆன்மாவையே நாசமாக்கப் பார்க்கிறாயே..!'' கத்திக்கொண்டே துப்பாக்கியின் விசையை மூன்று தடவை அழுத்தினான். குறிதப்பாமல் மூன்று தோட்டாக்களுமே அகோரி பாபாவைத் துளைப்பதைக் காண முடிந்தது.

www.t.me/tamilbooksworld

பாபாவின் உடம்பு சின்னத் துள்ளல் காட்டியது. தலை படக்கென்று தொங்கியது. காவி குர்த்தாவில் குபுக்கென்று செந்நிற வட்டங்கள் தோன்றி, பெரிசாகத் தொடங்கின.

இரண்டு நொடி மயான அமைதி. நடப்பதை உள்வாங்கிக் கொண்ட கூட்டம், ஓலமிட்டபடி கதவுகளை நோக்கி மனிதக் காட்டாறு போல பாயத் தொடங்கியது.

''மோகன்குமார், எழுந்திருங்க!'' - ரீட்டா கத்தினாள். உயிர் பயத்தில் அலைமோதிய கும்பல் அவளை உந்தித்தள்ள, கிட்டத்தட்ட அந்தக் கூட்டத்தால் அனிச்சையாக வெளியே சுமந்து செல்லப்பட்டாள் அவள். மோகன்குமார் மட்டும் நாற்காலியை விட்டு அசையவில்லை. வெறிச்சிட்ட பார்வை யோடு மேடையை நோக்கி தலையை அப்படியே விறைத்து வைத்தபடி அமர்ந்திருந்தார்.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

''ரீட்டா... இரு நானும் வருகிறேன்'' என்று சொல்ல வாய் திறந்தார்.

அப்போதுதான் அது நிகழ்ந்தது!

ஒரு பிரமாண்டமான மின்னல் கீற்று மாதிரி ஏதோ ஒன்று அவர் வாய் வழியாக உடம்புக்குள் தன்னைச் செலுத்திக் கொள்வது போலிருந்தது. கசப்பான ஒரு சுவையை நாக்கில் தேங்கவிட்டபடி, தொண்டை வழியாக 'அது' தனக்குள் ஆக்ரமிப்பதை அவரால் நன்கு உணர முடிந்தது. அந்த அபார சக்தியை எதிர்த்து வெளியே உந்தித் தள்ளுவது போல் இதயம் ஒருதடவை குலுங்கி அடங்கியது. வயிறு முழுக்க நெருப்பை மூட்டிவிட்டதுபோல் வெப்பம் திகுதிகுத்தது.

மூளைக்குள் ஒரு சூட்சம கை நுழைந்து பரோட்டா பிசைவது போலிருந்தது. எதிர்ப்பு காட்டி மோகன்குமார் திமிறியபோது 'ஏய், அடங்குடா' என்று உள்ளிருந்தே யாரோ அவரை இழுத்துப் போட்டு அமுக்குவதுபோல் தெரிந்தது. உச்சிமுதல் உள்ளங்கால் வரை அணுஅணுவாக புதுசாக ஒன்று குடியேறுவதை துல்லியமாக உணர முடிந்தது.

www.t.me/tamilbooksworld

மிச்ச சொச்ச ஜனங்களும் கதறிக்கொண்டு அரங்கத்திலிருந்து வெளியேறுவது கடைசி மைக்ரோ செகண்டுகளில் மங்கலாகத் தெரிந்தது. 'ப்ளியீங்'கென்று ஒரு சத்தம்... எல்லாமே இருட்டாகிவிட்டது!

மோகன்குமார் கண்விழித்தபோது, அதே ஆடிட்டோரியத்தில், அதே நாற்காலியில்தான் இருந்தார். ஆனால், அரங்கம் காலியாக இருந்தது. தரையெங்கும் கைப்பைகள், செருப்புகள் என்று தாறுமாறாகக் கிடந்தது. மேடையில் அகோரி பாபாவின் உடல் ஒரு சிறு மூட்டை மாதிரி துவண்டு

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

சரிந்து கிடந்தது. அதிலிருந்து ரத்தம் கோடாக வடிந்து மேடையின் விளிம்பு வழியாக சொட்டிக் கொண்டிருந்தது.

''யோவ்! யாருய்யா நீ... இவ்ளோ மெதுவா எந்திரிக்கிறே? இத்தனை நேரம் இங்கே நடந்ததை நீ கவனிக்கலையா?'' - கான்ஸ்டபிள் குரைக்கிறார் இவரைப் பார்த்து! இவரோ மையமாக அந்த கான்ஸ்டபிளை வெறித்துப் பார்க்கிறார்.

''என்னய்யா? நீ ஊமையா? உன் பேர் என்ன?'' - மறுபடி உலுக்குகிறார் கான்ஸ்டபிள்.

பதில் சொல்ல இவர் வாயெடுக்கிறார். பேச்சு வந்தால்தானே!

''எ... என்... பேரு...''

www.t.me/tamilbooksworld

''அதான்யா நானும் கேக்கறேன்... உன் பேர் என்ன?''

விரல்களால் தொண்டையை அழுந்த நீவி விட்டுக் கொண்டே பிரயத்தனப்பட்டு உதட்டை அசைக்கிறார்- ''நான் மோகன்...'' மேற்கொண்டு வரவில்லை. கான்ஸ்டபிள் கண்ணை உருட்டி முறைக்கிறார். மோகன்குமார் தன் சக்தியைத் திரட்டி வார்த்தைகளை வெளியேற்ற... வருகிற குரல் நிச்சயம் அவருடையதல்ல!

''நான்தான் மோகன்... மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி!''

கீச்சுக் குரலில் வந்த பதிலைப் பார்த்து படக்கென்று போலீஸின் லத்திக் கம்பு உயர்கிறது. ''தோ பாரு.... ஆளு டீசன்டா இருக்கே...

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

ஆனா, நக்கல் ஜாஸ்தியா இருக்கு. திரும்பவும் கேட்கறேன்... உன் பேரு என்ன?''

இப்போது தங்குதடையில்லாமல்... போலீஸ் லத்திக் கெல்லாம் பயப்படாமல் பளிச்சென்று வருகிறது அதே கீச்சுக் குரல் -

''அதான் சொன்னேனே குழந்தாய்.... மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி!''

''அடங்.... '' டெல்லி தெருக்களுக்கே உரிய, தேர்ந்தெடுத்த ஒரு கெட்ட வார்த்தையைத் துப்பியபடியே மோகன்குமாரை தூக்கி எழுப்பி, அவர் பிட்டத்தில் பளிச்சென்று லத்தியைப் பாய்ச்சுகிறார் கான்ஸ்டபிள்.

''ரெண்டாயிரம் பேர் எதிர்ல ஒருத்தனை சுட்டுக் கொன்னிருக்காங்க. எங்களுக்கு இருக்குற தலைவலியே போதாதுன்னு உன்னோட ரவுசு வேறயா?'' மோகன்குமார் இப்போதும் அசையாமல் நின்று இனிமையாகப் புன்னகைக்கிறார்.

www.t.me/tamilbooksworld

''யோவ் பெருசு! போலீஸ் அடி என்னானு இன்னும் தெரியலியா? நீ காந்தின்னா, நான் ஹிட்லர்... புரியுதா?'' என்றபடி சரமாரியாக லத்தியை உடம்பெங்கும் பாய்ச்சுகிறார் அந்த கான்ஸ்டபிள். மோகன்குமார் அடி அத்தனையும் சாத்வீக முகத்தோடு வாங்கிக்கொண்டே சரிகிறார். கடைசியாக அவர் காதில் விழுவது போலீஸ் வண்டி ஒன்றின் சைரன் சத்தம்.

- தொடர்ந்து சந்தேகிப்போம்...

Copyright © Vikas Swarup 2008

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

## மோட்டிவ் 6

விகாஸ் ஸ்வரூப்

தமிழில்: அஞ்சனாதேவ்

### சந்தேகப் புள்ளி 2
### ஷப்னம் சக்ஸேனா!

*மார்ச் 26-ம் தேதி...*

www.t.me/tamilbooksworld

*டைரியின் இந்தப் பக்கங்களை எழுதிக்கொண்டு இருக்கிறபோது எனக்குள் எத்தனை விரக்தியும் கடுப்பும் அலைமோதுகிறது, தெரியுமா? 'பாலிவுட் கனவுக்கன்னி' என்று என்னை ஊர் உலகமெல்லாம் கொண்டாடினாலும், துளிகூட நிம்மதி இல்லாத வாழ்க்கை இது!*

*கனவுக் கன்னியாக இருப்பதன் கஷ்டங்கள் எனக்கு அல்லவா தெரியும்! கை, காலைக்கூட சுதந்திரமாக அசைக்க முடியாதபடிக்கு எந்நேரமும் தஸ்ஸு புஸ்ஸென்று உடையை மாட்டி விடுகிறார்கள். மணக்க மணக்க தங்கள் கட்-அவுட்டுக்குப் பாலபிஷேகம் பண்ணிக் கொள்கிற பல ஹீரோக்களின் மூச்சுக் காற்றில் எத்தனை செத்த எலிகள் மிதக்கிறது என்பது முத்தக் காட்சியில் முகர்ந்து குமட்டிய எனக்குத்தானே தெரியும்! எச்சில் துப்புவதைக்கூட 'க்ளிக்' பண்ணி 'ஏ' கமென்ட்டோடு பிரசுரம் செய்கிற பத்திரிகைக்காரர்களுக்கு எந்நேரமும் பயந்துகொண்டே இருக்க வேண்டும். முந்தைய ராத்திரி பார்ட்டியில் தின்றது செரிக்காமல்*

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

வயிறு உறுமினாலும்கூட, அடக்கிக்கொண்டு ரோஜாப் பூ புன்னகையோடு மேடையில் ஆடாமல் அசையாமல் நான் அமர்ந்திருக்க வேண்டும்.

இதுபோக ராத்திரியில் கூப்பிட்டு வழிகிற தயாரிப் பாளர்கள், இயக்குநர்கள், டாப் நடிகர்கள்... அப்புறம்... அப்புறம் அந்த அரிப்பெடுத்த தெருநாய் விவேக் விக்கி ராய்!

இதெல்லாம் போக, ரசிகர்கள் என்ற பெயரில் சந்திக்க வேண்டிய விநோத ஜந்துக்களும், அவர்களில் சிலர் கேட்கிற கேள்விகளும் இருக்கிறதே... யப்பப்பா!

நேற்றைக்கு அப்படித்தான் ஆனது. லண்டனில் ஷூட்டிங் முடிந்து, ஏர் இண்டியா விமானத்தில் மும்பை திரும்பிக்கொண்டு இருந்தேன். தயாரிப்பாளர் செலவில் ஃபர்ஸ்ட் கிளாஸ் கேபினில் எப்போதும் நான் விரும்புகிற '1 ஏ' ஸீட். டெனிம் ஜீன்ஷும், கொஞ்சம் ரிலாக்ஸாக மூச்சுவிட வசதியாக லூஸான பச்சை வெர்சாஸ் ஜாக்கெட்டும் அணிந்திருந்தேன். அசட்டுப் பார்வைகளையும், விசாரிப்புப் புன்னகைகளையும் தவிர்ப்பதற்காக எப்போதும் போடுகிற கறுப்புநிற கூலிங்கிளாஸை இப்போதும் அணிந்து இருந்தேன்.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

ஒருதடவை துபாய் போகும்போது என் பக்கத்து ஸீட்டில் வந்து உட்கார்ந்த ஒரு குடிகாரநாய், அத்துமீறி என்னிடம் பேசியதோடு, இடுப்புக்குள் கைவிட்டு அசிங்கம் பண்ணிவிட்டான். அதில் இருந்து ஒரு ஸீட் எனக்கும், பக்கத்து ஸீட் என்னுடைய பிரைவஸிக்குமாக இரண்டு டிக்கெட்களை புக் பண்ணச் சொல்வேன். எப்பவுமே என் பக்கத்து ஸீட்டில் என் ஹேண்ட் பேக் மட்டும் பயணிக்கும்!

காதில் ஐ-பாடை மாட்டிக்கொண்டு சாய்ந்துவிட்டால், பயணிகளோ, விமானப் பணிப்பெண்களோ ஆட்டோகிராப் அது இதுவென்று தொல்லைதரவும் முடியாது. பல சமயங்களில் காக்பிட்டைவிட்டு விமானி களே வெளியில் வந்து ஜொள்ளுவிட்டு டார்ச்சர் பண்ணுவான்கள்.

இத்தனையும் தாண்டித்தான் நேற்று அந்த விமானப் பணிப்பெண் மெதுவாக என் முன்னால் குனிந்து, ''எக்ஸ்கியூஸ் மீ மேடம்!'' என்று இளித்தாள். அவள் பின்னால் அதைவிட பெரிய இளிப்போடு ஒரு நடுத்தர வயதுப் பெண்மணியும் ஒரு சின்னப் பையனும் நின்றிருந்தார்கள்.

www.t.me/tamilbooksworld

''தொந்தரவுக்கு மன்னிக்கணும் ஷப்னம்ஜி! திருமதி தருவாலா உங்களிடம் முக்கியமாக ஏதோ சொல்ல விரும்புகிறார்!'' என்றாள். அந்த குண்டுப் பெண்மணி தருவாலா என் ரியாக்ஷனுக்குக் காத்திருக்கவில்லை. ''ஷப்னம்ஜி... ஓ, ஷப்னம்ஜி! என்னவொரு அதிர்ஷ்டம் எங்களுக்கு. இத்தனை கிட்டத்தில் உங்களைப் பார்க்க முடியும் என்று கனவுகூட கண்டதில்லை!'' என்று வயசுக்குத் தகாத ஒரு குதிப்பு குதித்தாள். பட்டும் படாமலும் ஒரு சின்ன சிரிப்பு மட்டும் சிரித்துவைத்தேன். 'உன்னோடெல்லாம் பேசுகிற மூடில் நான் இல்லை. என்ன சொல்லணுமோ... சட்டுபுட்டென்று சொல்லிவிட்டுக் கிளம்பு' என்று அர்த்தம் அதற்கு.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

''இவன் என் மகன் ஷவுரப். உலகத்திலேயே உங்களுடைய மிக தீவிரமான விசிறி இவனாகத்தான் இருக்கும். நீங்கள் நடித்த ஒரு படம்கூட இவன் விட்டுவைத்ததில்லை!'' என்றாள் குண்டம்மா.

நான் வியப்போடு புருவத்தை உயர்த்தி அந்தப் பையனைப் பார்த்தேன். நான் நடித்ததில் முக்கால்வாசி 'ஏ' படம். பிழியப் பிழிய அழ வேண்டிய காட்சியில்கூட, மார்புக் கோடும் இடுப்பும் தெரியும்படியாகத்தான் உடையைக் கொடுப்பார்கள் இயக்குநர்கள்.

ஒன்று இந்த பெண்மணி பொய் சொல்லவேண்டும். அல்லது, அந்தப் பையன் பிஞ்சில் பழுத்த கேஸாக இருக்கவேண்டும். குண்டுப் பெண்மணி முகத்தில் இப்போது சோகம். ''என் மகன் ஷவுரபுக்கு புற்று நோய் என்று டாக்டர்கள் சொல்லிவிட்டார்கள். இப்போதுகூட சிகிச்சை விஷயமாகத்தான் வெளிநாடு போய்வருகிறோம். இன்னும் எத்தனை மாதங்கள் இவன் இருப்பான் என்று சொல்ல முடியாது!'' என்று அந்தப் பெண்மணி சொல்லிக்கொண்டே போக... இப்படி ஒரு திடீர் திருப்பத்தை நான் எதிர்பார்க்கவே இல்லை.

www.t.me/tamilbooksworld

சட்டென்று அந்த சிச்சுவேஷனுக்கு ஏற்ப என் எக்ஸ்பிரஷனை மாற்றிக்கொண்டேன். பப்ளிசிட்டிக்காக எய்ட்ஸ் நோயாளிகளையும் புற்று நோய் மருத்துவமனைகளையும் விசிட் அடிக்கும்போது டி.வி. கேமராக்களுக்காக வைத்துக்கொள்வேனே... அதே முகபாவத்துக்கு இப்போது வந்திருந்தேன்.

''ஓ, ஐம் ஸாரி...'' - தருவாலா கைகளைப் பிடித்துக் கொண்டேன். பையனைப்பார்த்து, ''ஷவுரப்! உனக்கு என்ன வேண்டும்... என்னோடு பேசனும், அவ்வளவு தானே? வா, இங்கே உட்கார்!'' என்று ஹேண்ட் பேக்கை எடுத்து மடியில் வைத்துக்கொண்டு, பக்கத்து ஸீட்டைக் காலி

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

செய்தேன். தாவி உட்கார்ந்துகொண்டான் பையன். அம்மாவைப் பார்த்து, ''மம்மி... கொஞ்ச நேரம் எங்களை தனியா விடறியா?'' என்றான், செக்ரெட்டரிக்கு கட்டளை போடுகிற பாஸ் மாதிரி. ''சரிப்பா!'' என்றபடி கண்களைத் துடைத்துக்கொண்ட அம்மா, பெரிய உடம்பு குலுங்க நடந்து தன் ஸீட்டுக்குப் போனாள்.

பையன் பக்கம் திரும்பினேன். வெறி பிடித்த காதலன் மாதிரியான ஒரு பார்வையைப் பதித்திருந்தான் என் மேல்.

''உனக்கு என்ன வயசாகுது ஷ்வரப்?''

''பன்னண்டு!''

''நிறையக் கத்துக்க வேண்டிய வயசு. அப்பதான் எதிர்காலத்துல எதையும் நீயாக சமாளிக்க முடியும்!''

www.t.me/tamilbooksworld

''நான் எதையும் கத்துக்க வேண்டியது இல்லை. பதிமூனு வயசாகும்போதே நான்தான் இருக்கப்போறதில்லையே!'' - விரக்தியே உருவாக வெடுக்கென்று வந்தது பதில்.

''அப்படியெல்லாம் சொல்லக் கூடாதுப்பா... நீ ஜம்முனு ஆயிடுவே!'' என்றேன் சங்கடமாக.

''எனக்கு நம்பிக்கை இல்ல!'' என்றவன், ''சாகிறதுக்கு முன்னாடி ஒரே ஒரு விஷயத்தை உங்ககிட்டே கேட்டுத் தெரிஞ்சுக்கணும்!'' என்றான்.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*ஆஹா... இந்த உலகத்தில் நான் எப்படிப்பட்ட ஸ்பெஷல் பிறவி! மரணத்துக்கு முன்னால் கேட்டுத் தெளிவதற்கு என்னை ஒரு பையன் நாடுகிறான்.*

*''கேளுப்பா!'' என்றேன் உச்சகட்டக் கனிவோடு.*

*''கட்டாயம் பதில் சொல்லணும். பிராமிஸா..?'' என்று கையை நீட்டினான்.*

*கையில் அடித்து சத்தியம் செய்தேன். பொதுவாக குழந்தைகள் என்னுடைய அடுத்த படம்பற்றி கேட்பார்கள், இப்போதைய படத்தில் என் கேரக்டர் என்னவென்று கேட்பார்கள்... இரண்டும் இல்லாவிட்டால் தங்களுக்குப் பிடித்த ஹீரோவோடு எப்போது நான் ஜோடி போடுவேன் என்று கேட்பார்கள்.*

www.t.me/tamilbooksworld

*இந்தப் பையன் மெதுவாக என்னை நோக்கி குனிந்து கேட்டான் -*

*''நிஜம்மா சொல்லுங்க... நீங்க இன்னும் கன்னி கழியாம இருக்கீங்களா?''*

*ஸீட்டோடு தூக்கி என்னை விமானத்துக்கு வெளியே வீசிய மாதிரி இருந்தது!*

*அதிர்ச்சியை மறைத்துக் கொண்டு, அந்தப் பையனை அதோடு 'பேக்-அப்' செய்தேன். விமானப் பணிப்பெண்ணை அருகில் அழைத்து தாழ்ந்த குரலில் நான் வெளிப்படுத்திய கெட்ட வார்த்தைகளை நீங்கள் கேட்டு இருந்தால், 'ஒரு கனவுக் கன்னியின் வாய்க்குள் இப்படி ஒரு சாக்கடையும் இருக்குமா?' என்று ஆடிப்போயிருப்பீர்கள்.*

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

ஆனால் ஒன்று... அந்த 12 வயசுப் பையனுக்கு எழுந்த அதே சந்தேகம், என்னுடைய எத்தனையோ ரசிகர்களுக்கும் இருக்கும் என்பது எனக்குத் தெரியும். கனவில் கட்டிப் புரள்வதற்குக்கூட கற்பான பெண்களை எதிர்பார்ப்பதுதானே ஆண் வர்க்கத்தின் ஸ்பெஷாலிட்டி!

எனக்கு வருகிற சில கடிதங்களைப்பற்றி இந்த அந்தரங்க டைரியில் எழுதக்கூட கூசுகிறது. ஒருதடவை தபாலில் வந்த கவர்களை நானே பிரித்துக்கொண்டு இருந்தபோது, அதில் ஒரு கவருக்குள் டிஷ்யூ பேப்பர் இருந்தது. எடுத்துப் பார்த்தால் காய்ந்துபோய், வறவறப்பாக. உவ்வேக் என்று வாந்தியே எடுத்துவிட்டேன். காசு கொடுத்து டிக்கெட் வாங்கி, கேமரா க்ளோஸ்அப்பில் உருண்டு திரள்கிற என் பாகங்களைப் பார்த்த பல்லாயிரம் ரசிகர்களில் ஒருத்தரின் மன வெளிப்பாடு அப்படி!

www.t.me/tamilbooksworld

வாழ்க்கையின் அத்தனை புகழையும் ஒரே சமயத்தில் எனக்கு அள்ளிக்கொடுத்துவிட்ட அதே ஆண்டவன்தான், இதுபோன்ற வக்கிர சீண்டல்களையும் வஞ்சனையில்லாமல் ஏவிக்கொண்டே இருக்கிறான். இன்றைக்கு கட்டுக் காவல் மிகுந்த கோட்டைக்குள், கோடிகளுக்கு வாரிசாக இருப்பதால்... இந்த சீண்டல் களையெல்லாம் சமாளிக்க முடிகிறது. ஆனால், இந்திய வரைபடத்தில் ஒரு புள்ளியாகக்கூட இடம் பெறாத கிராமத்தில், ஏழைக் குடும்பத்துப் பெண்ணாகப் பிறந்த நான், என் 19 வயது வரை அனுபவித்த துன்பங்கள் கொஞ்சமா? என்னுடைய இன்றைய புகழும் கொண்டாட்டங்களும் அந்த கறுப்பு நாட்களை மறக்கடித்துவிடுமா என்ன?

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*ஜூன் 16-ம் தேதி...*

*விக்கி ராய் போனில் என்னைக் கூப்பிட்டான்! நச்சுப் பூச்சி. கிட்டத்தட்ட இரண்டு வருடங்களாக எனக்கு அவன் கொக்கி போட்டுக்கொண்டே இருக்கிறான். பினாமி பெயர்களில் நிறைய சினிமாக்கள் தயாரிக்கிறான். எனக்கும் ராணி முகர்ஜிக்கும் கால்ஷீட் பார்த்துக்கொள்ளும் ராகேஷ்ஜிகூட சொல்கிறார் - 'அவனை முறைத்துக் கொள்ளாதேம்மா' என்று!*

*''என்ன ஷப்னம்... என்னோடெல்லாம் நீ பேசவே மாட்டாயா?'' என்று இளித்தான் போனில்.*

*''பேசுவதற்கு நமக்குள் என்ன இருக்கிறது?'' என்று எரிச்சலாகவே கேட்டேன். ''என் புது மொபைல் நம்பர் உங்களுக்கு எப்படிக் கிடைத்தது?''*

www.t.me/tamilbooksworld

*''பார்த்தியா? என் பவரை திரும்பத் திரும்ப நீ குறைவாகவே எடை போடுகிறாய். மூன்று மாதத்துக்கு ஒருமுறை நீ மொபைல் நம்பரை மாற்றுவது எனக்குத் தெரியும். நீ மாற்றிய வேகத்திலேயே புது நம்பர் என் கைக்கு வந்துவிடும். என் சோர்ஸ்கள் அப்படி. அதெல்லாம் விடு... என்னால் உனக்கு எவ்வளவு நல்ல விஷயங்கள் பண்ண முடியும் தெரியுமா?''*

*''உதாரணமாக..?''*

*''உதாரணமாக, சிறந்த நடிகைக்கான நேஷனல் அவார்டு உனக்கே இந்த வருடம் கிடைக்கிற மாதிரி செய்ய முடியும். எங்கப்பா உ.பி-க்கு*

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

மட்டும்தான் மினிஸ்டர் என்று நினைத்துவிடாதே! பார்டர் தாண்டிப் போய் டெல்லியிலும் ஜாலம் செய்வார்.''

''நன்றி! ஆனால், இப்போதைக்கு எனக்கு விருது மேலெல்லாம் நாட்டம் இல்லை.''

''அடுத்த ஜூன் மாசம் துவங்குகிற மாதிரி ஒரு புதுப்படத்துக்கு திட்டம் வைத்திருக்கிறேன். ஹீரோ யார் என்று கேட்டால் விசிலடிப்பாய்... அக்ஷய்..! கால்ஷீட்கூட கொடுத்துவிட்டார்! ஒரு மாதம் மட்டும் கால்ஷீட் கொடு... உன் போர்ஷனை முடித்து அனுப்பி விடுகிறேன்.''

''உன் ஷூட்டிங் பற்றி எனக்குத் தெரியும். மேலும், ஜூன் மாசம் எனக்கு வேறு படம் கமிட் ஆகிவிட்டது. அந்த சமயம் நான் ஸ்விட்சர்லாந்தில் அவுட்டோரில் இருப்பேன்!''

www.t.me/tamilbooksworld

அடுத்ததாகத் துளிகூட கூசாமல் விக்கிராய் அதைக் கேட்டான்.

''போகிறது போ! ஒரு மாசமெல்லாம் இல்லாவிட்டால் என்ன... எனக்காக ஒரு ராத்திரி... ஒரே ஒரு ராத்திரி! அது போதும்... ஒரு படத்தில் நடித்ததற்கான எல்லாப் பலனையும் கொடுத்துவிடுகிறேன்!''

''ஒரு ராத்திரியா... எதுக்கு?''

''சும்மா நடிக்காதே! நீ டெல்லிக்கு வந்துவிடு... எந்தக் கண் உறுத்தலும் இல்லாமல் திரும்பிப் போய்விடலாம். அல்லது, நான் மும்பைக்கு வந்துவிடவா? எப்படி வசதி?''

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*''மிஸ்டர் விக்கி ராய்! இந்த டெலிபோன் பேச்சு இதோடு முடிவதுதான் நல்லது! திரும்ப என்னோடு பேச முயற்சிக்க வேண்டாம்!'' மளுக்கென்று கட் செய்தேன்.*

*இந்தத் .......ன் என்னதான் நினைத்துக்கொண்டு இருக்கிறான் என்னைப்பற்றி?*

- தொடர்ந்து சந்தேகிப்போம்...

Copyright © Vikas Swarup 2008

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

# மோட்டிவ் 6

விகாஸ் ஸ்வரூப்

தமிழில்: அஞ்சனாதேவ்

## 'என்னைப் போல் ஒருத்தி..!'

மும்பையில் எந்த மூலையில் நின்று, ''ஷப்னம் சக்ஸேனா வீடு எது?'' என்று கேட்டாலும் சரி... பானி பூரி விற்பவன்கூட, ''ஜுஹு பீச்சில் இருக்கு!'' என்று சொல்லி, எனது அபார்ட்மென்ட்டின் அடையாளங் களையும் சொல்வான். பாலிவுட்டின் பாக்ஸ் ஆபீஸை நிர்ணயம் பண்ணுகிற இன்னும் பல சினிமாப் புள்ளிகளது வீடுகூட இந்த ஏரியாவில் இருக்கிறது.

www.t.me/tamilbooksworld

இன்றைக்கு எனது ஜுஹு பீச் அபார்ட்மென்ட் ரெண்டுபட்டுக் கிடக்கிறது. என் உதவியாளன் போலா பண்ணுகிற அட்டகாசத்துக்கு அளவேயில்லை! ஆறு ஆட்களைக் கூட்டி வந்து பாத்ரூம், பெட்ரூமையெல்லாம் தலைகீழாக மாற்றி அமைக்கிறான். போலா கூட்டி வந்த ஆட்கள், பெட்ரூமில் இதுவரை இருந்த ஃபிரோஸாபாத் சரவிளக்குகளை எடுத்துவிட்டு, பிரமாதமான ஸ்வரோஸ்கி கிரிஸ்டல் விளக்குகளை மாட்டுகிறார்கள்.

திடீரென்று சினிமா நட்சத்திரமாகப் புகழ் அடையும்போது கிடைக்கும் 'பாக்கியங்களில்' ஒன்று - வருடக்கணக்கில் கண்காணாமல் தொலைந்து போன அத்தைகளையும் சித்தப்பாக்களையும் சுலபத்தில் அடைய முடிவது!

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

அதற்குமுன் பார்த்தே இராத ஒன்றுவிட்ட சகோதர - சகோதரிகளெல்லாம் தாமாகத் தேடிவந்து ஒட்டிக்கொள்கிற கூத்தை என்ன வென்பது! போலாவும் அப்படித்தான் வந்து சேர்ந்தான்.

www.t.me/tamilbooksworld

திடீரென்று ஒரு பிரகாசமான காலைப் பொழுதில் என் எதிரில் வந்து நின்று, மெயின்புரியிலிருக்கும் என் அத்தை ஜெயஸ்ரீயின் மகன் என்று அறிமுகப்படுத்திக் கொண்டான். அவன் கேட்டது - சினிமாவில் சின்னதாக ஒரு ரோல். அவனை ஏற இறங்கப் பார்த்துவிட்டு அவன் எதிரிலேயே நான் வாய்விட்டுச் சிரித்துவிட்டேன். தோயத் தோய எண்ணெய் பூசிய தலையும், புடைத்துக்கொண்டு முன்னால் வந்த தொப்பையும், காட்டுத்தனமான டிரெஸ்ஸுமாக நின்றான் அவன்.

''என்னிடம் உதவியாளனாக இரு! வாய்ப்பு வரும்போது நடிக்கிற சான்ஸ் பற்றி பார்க்கலாம்...'' என்று சொல்லி, அவனை வீட்டோடு வைத்துக்கொண்டேன். இதோ, ரெண்டு வருடமாகிவிட்டது. ஆட்டோகிராப் கேட்டு நெருக்கும் ரசிகர்களை எனது விருப்பம் தெரிந்து விரட்டுவதில் ஆரம்பித்து, ஜொள்ளு கேஸாக கொக்கி போடும் தயாரிப்பாளர்கள் - நடிகர்களிடமிருந்து வரும் போன் அழைப்புகளை டீல செய்வது வரை பிரமாதமாக சமாளிக்கிறான்!

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

பண விவகாரங்களிலும் கைநீளம் இல்லாதவன் என்ற நம்பிக்கை அவன் மீது வந்திருக்கிறது. என் அக்கவுண்ட் எல்லாம்கூட அவன்தான் பார்த்துக்கொள்கிறான். ஆனால், கால்ஷீட்டை கையாளும் பொறுப்பை மட்டும் அவனிடம் கொடுக்க நம்பிக்கை வரவில்லை. சொதப்பிவிட்டால் போச்சு... அதனால், அதை மட்டும் ராகேஷ்ஜி வசம் கொடுத்திருக்கிறேன்.

என் விரலெல்லாம் வலியில் குடைகிறது. இன்றைக்கு ஒரே நாளில் தொள்ளாயிரம் ரசிகர்களுக்கு பதில் கடிதத்தில் கையெழுத்துப் போட்டிருக்கிறேன். இது நான் செய்தாக வேண்டிய சடங்கு. புகழைத் தக்க வைப்பதற்குக் கொடுக்கிற பல விலைகளில் ஒன்று!

ரோஸி என்றொரு செக்ரெட்டரியும் இருக்கிறாள். மாதத்துக்கு சுமார் இருபதாயிரம் வரை வருகிற ரசிகர் கடிதங்களிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாகத் தேர்ந்தெடுத்து, மூன்று மாசத்துக்கொரு தடவை என் கையெழுத்துக்கு வைப்பாள். அன்பு விசாரிப்புகளை ரசிகர்களுக்குத் தெரிவிப்பது, என் அடுத்த சினிமா புராஜெக்ட் பற்றி சில வரிகள், அவர்களின் குழந்தைகளுக்கு அன்பு முத்தங்கள் என்று பெரும்பாலும் ஸ்டான்டர்டான விஷயங்கள்தான் அதில் இருக்கும். பதில் போவது ஒரு பெண்ணுக்கோ, குழந்தைகளுக்கோ என்றால் படுஅடக்கமான போஸில் எனது போட்டோ ஒன்றை அதோடு இணைப்பாள் ரோஸி. அதுவே ஆண் ரசிகராக இருந்தால், கடிதத்தில் அவர் வழிகிற வேகத்துக்குத் தகுந்த மாதிரி கிளாமரான போட்டோ ஒன்றை வைப்பாள்.

www.t.me/tamilbooksworld

கையெழுத்தையே ரப்பர் ஸ்டாம்ப் மாதிரி செய்து கடிதங்களில் குத்திக் கொள்ளலாம் என்று ரோஸி சொன்னபோது நான் மறுத்துவிட்டேன். ''சினிமாவில்தான் எல்லாமே போலி, நிழல்... ஒரு கையெழுத்துகூட ஒரிஜினலாகப் போட்டு அனுப்பாவிட்டால் எப்படி!'' என்று கூறினேன்.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*எனது கடிதத்தைப் பிரிக்கும்போதே ரசிகர்களின் முகத்தில் ஏற்படுகிற ஜொலிப்பை நான் கற்பனை செய்யும்போது, என் கைவலி மறைந்துபோகும்!*

*'அந்தரங்கம்' அதாவது... 'பர்சனல்' என்றோ 'ரகசியம்' என்றோ போட்டு வருகிற கடிதங்களை ரோஸி பிரிப்பதில்லை; எனக்கே வைத்துவிடுவாள். நேரம் கிடைக்கிறபோது படுக்கையில் சாய்ந்துகொண்டு படிப்பேன். சொந்த வாழ்க்கையில் எடுக்க வேண்டிய முக்கிய முடிவுகள் குறித்து சிலர் யோசனை கேட்டிருப்பார்கள்... சிலர் நேரில் பேச ஆர்வம் காட்டியிருப்பார்கள்... இன்னும் சிலர் என்னை சகோதரியாக - மகளாக வர்ணித்து பண உதவி கேட்டிருப்பார்கள்.*

*சின்னப் பெண்களிடமிருந்து வருகிற கடிதங்களில் அநேகமாக மனசை பாதிக்கிற மாதிரி விஷயங்களே இருக்கும். பதின்மூன்று வயதுகூட நிரம்பாத பெண்கள் வீட்டைவிட்டு ஓடி வந்து, மும்பையின் சினிமா வெளிச்சத்தில் குளிக்கிற வெறியில் இருப்பதையும்... பல கடிதங்கள் காட்டும். ஒரு நடிகை ஆவது, எத்தனை நிலைகளைத் தாண்டி வந்தால் மட்டுமே நடக்கிற விஷயம் என்பது, அவர்களுக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை.*

www.t.me/tamilbooksworld

*'வாம்மா! சினிமா சான்ஸ் பிடிக்க ஒரு போட்டோ செஷன் போட்டுடலாம்' என்று வலை விரிக்கும் 'மாமா' போட்டோ கலைஞர்களிடமோ, ஒரு சினிமா ஏஜென்ட்டிடமோ சிக்கி... பின்னர் ஒரு மசாஜ் பார்லருக்கோ அல்லது ஒரு விபசார விடுதிக்கோ போய் தங்களது வாழ்க்கையை முடித்துக்கொண்ட பல பெண்களை எனக்குத் தெரியும். அதுகூட, அப்படி வழிதவறிப் போய் மாட்டிக்கொண்ட பெண்கள் எழுதிய கடிதங்களை வைத்துத்தான்.*

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*சினிமா உலகில் பலவித சித்ரவதைகளையும் தாங்க முடிந்தவர்களே பிழைக்க முடியும். இதுதான் திக்குத் தெரியாத இந்தக் காட்டின் எழுதப்படாத சட்டம்! இதுபோன்ற பெண்களுக்கு ஆறுதல் அல்லது அட்வைஸ் சொல்லி பதில் போடுவது இல்லை. லேசாக நனையும் கண்களை யாரும் பார்க்காமல் ஒற்றித் துடைத்துக் கொண்டு, அடுத்த கடிதத்துக்குப் போய் விடுவேன்.*

*டைரக்டர் ஜே.சாட்டர்ஜியை பாலிவுட்டின் 'ஸ்டீவன் ஸ்பீல்பெர்க்' என்கிறார்கள்! மெகா பட்ஜெட், மெகா ஹிட் என்பதோடு, அவார்டுகளையும் வாங்கிக் குவிக்கின்றன அவரது படங்கள்.*

*ஆர்.கே. ஸ்டுடியோவில் என்னை சந்தித்தார் ஜே.சாட்டர்ஜி... அவரது அடுத்த படத்துக்கு நான்தான் ஹீரோயின் என்றார். சந்தோஷத்தில் ஜன்னி கண்டு போகிற மாதிரி ஆகிவிட்டது.*

www.t.me/tamilbooksworld

*''கதை எதைப் பற்றி சார்?'' - தயங்கியபடி கேட்டேன்.*

*''ஒரு பையன், பொண்ணுக்கு இடையே நடக்கிற கதை!'' என்றார்.*

*''எப்படிப்பட்ட பொண்ணு அவள்?''*

*''கவிஞர்கள் தங்கள் கனவில் மட்டுமே காணக்கூடிய அளவுக்கு அழகானவள். மிக முக்கியமான கோடீஸ்வர குடும்பத்தைச் சேர்ந்தவள்...'' - கண்களில் அந்தக் காவியத்தைத் தேக்கிக்கொண்டு, காற்றில் பியானோ வாசிக்கும் விரல்களுடன் டைரக்டர் சாட்டர்ஜி விவரித்தார்.*

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

''அவள் பேரை சாந்தினி என்று வைத்துக்கொள்வோம். சாந்தினியின் பெற்றோர் அவளுக்கு ஒரு கோடீஸ்வரப் பையனைப் பார்த்து வைக்கிறார்கள். ஆனால், அவளோ எங்குமே நிலையாக இல்லாமல், மனம் போன போக்கில் ஓடுகிற வேடிக்கையான ஒரு பையன் மேல் மனசு வைக்கிறாள்! இப்போதைக்கு அவன் பெயரை 'கே' என்று வைத்துக் கொள்.''

''அவள் குடும்பத்திலிருந்து 'கே'வுக்கு கெடுதல் எதுவும் நேருகிறதா, சார்?''

''இந்தக் கதையின் உயிரோட்டம் அந்த திசையில் பயணிக்க வில்லை. ஊர் - உலகத்தின் பார்வையிலெல்லாம் படாமல் சாந்தினி அவன் காலடியிலேயே விழுந்து கிடக்கிறாள். கடைசியில்தான் தெரிகிறது... அந்த 'கே' மிகமர்மமான பல சக்திகளைக் கொண்டவன். அமானுஷ்யமானவன்... சரியாகச் சொல்வதானால் அவன் இருட்டின் ராஜா!''

www.t.me/tamilbooksworld

''வாவ்! புரிகிறது சார்... அவன் கிட்டத்தட்ட டிராகுலா டைப்பான காரெக்டர்?''

''அதேதான்... கதையின் முடிவு இதுவரையில் வந்த எந்தவொரு ஃபார்முலாவிலும் அடங்காதது. அப்படியரு வலைப்பின்னலாக யோசித்திருக்கிறேன்...'' என்றபடி என்னை பார்வையால் ஊடுருவிய சாட்டர்ஜி, ''நீ என்ன நினைக்கிறாய்?'' என்றார்.

நான் மூச்சை ஆழமாக இழுத்து விட்டேன். ''சொல்வதற்கு என்ன இருக்கு சார்... இந்தியத் திரையுலகம் இதுவரை காணாத ஒரு

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*சப்ஜெக்டாக, ஜே.சாட்டர்ஜியின் மாஸ்டர் பீஸாக இது இருக்கப் போகிறது!''*

*''அப்போ நீதானே சாந்தினி?''*

*''கேள்வியே கிடையாது சார். நானேதான்! ஷூட்டிங் எப்போது இருக்கும்?''*

*''அதுவா...'' தாடியை வருடியபடி சிரித்தார் சாட்டர்ஜி. ''மிஸ்டர் 'கே'வை நான் கண்டுபிடித்ததும்!''*

*''சார்...?''*

*''ஆமாம்... எத்தனை நாளைக்குத்தான் இந்த சாக்லேட் மூஞ்சி ஹீரோக்களையும், சிக்ஸ் பேக் அலட்டல்களையுமே ஜனங்கள் பார்ப்பது. 'மாஸ் ஹீரோ' மயக்கத்திலிருந்து வெளியே வர மக்களே நேரம் பார்த்திருக்கிறார்கள். அவர்களுக்கு முற்றிலும் புதுசாக ஒரு முகம் தேவைப்படுகிறது. ஹீரோவும் வில்லனும் கலந்த ஒரு முகம்... படுமுரடு... அதேசமயம் மயக்கும் ஆண்மை! உன் இதயத்தைக் குளிர வைத்து, உன் ரத்தத்தை சூடாக்கக்கூடிய ஓர் இளைஞன் இப்போது எனக்குத் தேவைப்படுகிறான். அதுவரை நீ காத்திருக்க வேண்டும் ஷப்னம்!''*

www.t.me/tamilbooksworld

*ஜே.சாட்டர்ஜி சொல்லிவிட்டால் அப்புறமென்ன... காத்திருக்கத்தான் வேண்டும்!*

*'ஷப்னம் அக்காவின் தனிப் பார்வைக்கு' என்று உறை மீது போட்டிருந்த கடிதத்தைப் பிரித்தேன்.*

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

’மரியாதைக்குரிய ஷப்னம் அக்காவுக்கு,

உங்க காலைத்தொட்டு கும்பிட்டுக்கறேன். ஆண்டவன் கிருபையால் நீங்க நல்லா இருப்பீங்கனு நம்புறேன்.

என் பேர் ராம் துலாரி... பத்தொன்பது வயசாகுது. கவுராய் என்கிற என்னோட கிராமத்துலயே ஆறாங்கிளாஸ் வரைக்கும் படிச்சு பாஸ் செஞ்ச ஒரே பொண்ணு நான்தான். எங்க கிராமத்துக்கு வந்த வெள்ளம் வீடு வாசலையெல்லாம் துடைச்சுப் போட்டுட்டுப் போயிடுச்சு. நாங்க வளர்த்த ஆடு, மாடெல்லாம் அடிச்சுக்கிட்டுப் போயிடுச்சு. அப்பா - அம்மாவும் நோய் கண்டு, மனசு ஒடிஞ்சு, செத்துப் போய்ட்டாங்க.

கொஞ்ச நாள் சர்க்கார் விடுதியில் இருந்தேன். இப்ப என் சின்ன வயசு ஃப்ரெண்டு நீலம் இருக்காளே... அவ கல்யாணம் கட்டிட்டு வாழ வந்த இடத்துல, அவளோட பாட்னாவில் தங்கியிருக்கேன். இங்கே எத்தனை நாள் தங்க விடுவாங்கனு தெரியலை. எப்படியிருந்தாலும் நான் ஒரு முழு அநாதை.

www.t.me/tamilbooksworld

ஷப்னம் அக்கா... எங்க கிராமத்துல சினிமா தியேட்டர் கிடையாது. பக்கத்து ஊருல போய் பார்க்கவும் எங்க அப்பா - அம்மா அனுப்பி வெச்சதில்லே. ஆனா, பாட்னாவுல நிறைய தியேட்டர் இருக்குது. இங்கே என் ஃப்ரெண்டு நீலம் நிறைய படம் பார்த்திருக்கா... அவளுக்கு நீங்கன்னா உயிரு. எப்பவும் உங்களைப் பத்தியேதான் பேச்சு. இப்பக்கூட அவள்தான், ’கட்டாயம் உன் போட்டோவைப் பார்த்தா ஷப்னம் அக்கா நேரில் கூப்பிடுவாங்க’னு சொல்லித்தான், என்னை ஒரு போட்டோ புடிச்சு, இப்படி ஒரு லெட்டர் எழுதி உங்களுக்கு அனுப்பச் சொன்னாள்.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*அக்கா... எங்க சாதி வழக்கப்படி நான் ரொம்ப சுத்தபத்தமா, சூப்பரா சமைப்பேன். நான் தயாரிக்கிற குலாப் ஜாமூனை ஒருதடவை நீங்க ருசிச்சீங்கன்னா, அப்புறம் என்னை வேலையை விட்டு அனுப்பவே மாட்டீங்க. ரெண்டே நாள்ல முழுசா ஒரு ஸ்வெட்டர் பின்னிடுவேன்.*

*நீலம் சொல்றதையெல்லாம் பார்த்தா, எல்லா சினிமாவு லயும் நீங்க ரொம்ப இரக்கமான மனசோட வருவீங்களாம். யாருக்கும் ஒரு கஷ்டம்னா தாங்க மாட்டீங்களாம். என்னையும் ஒரு தங்கச்சியா ஏத்துக்கிட்டு, மும்பையில் இருக்குற உங்க வீட்டுல ஒரு மூலையில் இடம் கொடுங்க, அக்கா. எனக்குத் தேவையெல்லாம் மீந்துபோன ரெண்டு வேளை சாப்பாடுதான்!*

*மறுபடியும் உங்க காலைத் தொட்டு ஆசி வாங்குறேன். உங்க பதிலுக்காகக் காத்திருக்கும் தங்கச்சி, ராம் துலாரி.'- வழக்கமாக வரும் கடிதங்களில் ஒன்று; ஸ்பெஷலாக எதுவுமில்லை. இருந்தாலும், ராம் துலாரியின் கடிதம் எங்கேயோ என்னைத் தொட்டது. 'அக்கா' என்று அவள் அழைத்ததில் பாசாங்குத்தனம் எதுவுமே இல்லை என்று தோன்றியது. உத்தரப் பிரதேசத்தில், அஸம்கர் என்கிற கிராமத்தில் என் பெற்றோருடன் வசிக்கும் என் சொந்த தங்கை ஸப்னாவின் ஞாபகம் வந்தது. என் கண்கள் ஈரமாயின.*

*என் பெற்றோரும் தங்கையும் இப்போது எப்படி இருக்கிறார்களோ..! கடந்த மூன்று வருடங்களாக அவர்களோடு எனக்கு எந்தத் தொடர்பும் இல்லை. என் பெற்றோர், தங்கள் வாழ்க்கையிலிருந்து என்னை சுத்தமாக அழித்துவிட்டார்கள் என்றே சொல்லலாம். ஆனால், நான்தான் என் நினைப்பிலிருந்து அவர்களை நீக்க முடியாமல் தவிக்கிறேன்.*

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

ராம் துலாரியின் கடிதத்தை எடுத்து உறைக்குள் போடப் போனபோது, அதனுள் இருந்த போட்டோ உரசியது.

ஆறுக்கு நாலு பிரின்ட்டில் இரண்டு போட்டோக்கள். முதல் போட்டோவை எடுத்துப் பார்த்துமே, சோபாவிலிருந்து நான் கிட்டத்தட்ட குதித்துவிட்டேன். அந்த போட்டோவில் க்ளோஸ்-அப் முகமாக, துளிகூட மேக்_அப் இல்லாமல் என்னை நோக்கிப் பார்த்தது - நானேதான்! அதே பெரிய கறுப்பு விழிகள், சிமிழான மூக்கு, நீண்டு சிவந்த உதடுகள், குழிவான முகவாய்க்கட்டை...!

அடுத்த போட்டோவை அவசரமாக எடுத்துப் பார்த்தேன். மட்டமான ஒரு பச்சை தாவணியில், ஒரு மரத்தைப் பிடித்துக் கொண்டு ராம் துலாரி... இல்லை, நான்! முகம் மட்டுமில்லை... உடல்வாகு, உயரமெல்லாம்கூட என்னை அச்சாக வார்த்தெடுத்த மாதிரியே இருந்தாள் பாவத்துக்குரிய அந்தப் பெண். சரியான பராமரிப்பு இல்லாத அவளது செம்பட்டையான கூந்தல், அடர்ந்து நீண்டு... அலை அலையாகப் புரண்டது. அதுதான் வித்தியாசம்!

www.t.me/tamilbooksworld

மிகச் சீக்கிரமே வாழ்க்கையின் மிக மிக ஆபத்தான சோதனையை சந்தித்து, நான் அவளாக வேஷம் போடவும் நேரிடும் என்று அந்த நிமிஷம் எனக்கு எப்படித் தெரியும்?

- தொடர்ந்து சந்தேகிப்போம்...

Copyright © Vikas Swarup 2008

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

# மோட்டிவ் 6

விகாஸ் ஸ்வரூப்

தமிழில்: அஞ்சனாதேவ்

## சந்தேகப் புள்ளி 3...
## ஆதிவாசி

கொஞ்ச தூரத்தில்தான் கடல் இருந்தது. அவ்வப்போது படகுகள் வந்து நிற்பதற்கு வசதியாக மரத்தாலேயே ஒரு 'ஜெட்டி' கட்டப்பட்டு இருந்தது. விடாப்பிடியாக அலைகள் மோதியதில் இற்றுப்போன அந்த ஜெட்டி அப்படியும் இப்படியுமாக ஆடிக்கொண்டு இருந்தது.

www.t.me/tamilbooksworld

அது அக்டோபர் மாதம்... ஆனாலும் சூரியன் சுள்ளென்று இருந்தான். தங்க நிறக் கடல் மணல் பக்கம் பார்வையைத் திருப்பினால், கண்கள் கூசியது. கொழுந்துவிட்டு எரிந்துகொண்டு இருந்த ஒரு சிதை மீது வேதனையாகக் கடைசிப்பார்வை வீசிவிட்டு ஆதிவாசிகள் அத்தனை பேரும் கலைந்து போனார்கள். மெலேம், பெம்பா இருவர் மட்டும், நெருப்பின் நாக்குகள் அந்த உடம்பை விழுங்கும் காட்சியை வெறித்துப் பார்த்துக்கொண்டு இருந்தார்கள்.

''இந்த நாலு மாசத்துல இது மூணாவது சாவு!'' என்று பெரியவர் மெலேம் முணுமுணுத்தார். ''ஈகாங்கிற கெட்ட ஆவிகளின் ஆதிக்கம் கொஞ்சம் கொஞ்சமா அதிகரிச்சுக்கிட்டே போகும் இனிமே!'' என்று சொல்லும்போது மெலேமின் கிழட்டு உடம்பு லேசாக நடுங்கியது.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

பெம்பா அதைத் தலையாட்டி ஆமோதித்தார். ''ஆத்மா சாந்தி அடையாம வெறியோடு அலையும் ஆவிகளின் எண்ணிக்கை பெருகினா, நம் குலத்துக்குக் கெடுதல் அதிகரிக்குமே. இப்படியே போனா, கடல் பசு, விசேஷ ஆமை இனங்கள் நம் கண்ணுக்கு முன்னாலயே கொஞ்சங் கொஞ்சமா அழியுறதுபோல, நம்ம ஓங்கே இனமும் இல்லாமலே போயிடும்!''

www.t.me/tamilbooksworld

அந்த கடல் பிராணிகளாவது அடி ஆழத்தில் இன்னும் சில ஆயிரங்களாவது மிச்சம் மீதி இருக்கின்றன. அவ்வப்போது தட்டுப்படுகின்றன. ஆனால், கடும் நோய்கண்டு இன்றைக்கு இறந்துபோன ஆளைக் கழித்துவிட்டால், இந்த ஓங்கே ஆதிவாசி மனிதர்களில் இன்னும் மிஞ்சி இருப்பது 96 பேர்தான்!

''இப்பவெல்லாம் நம்ம இனத்து இளைஞர்கள் செய்ற பாவ காரியங்களைக் கண்டு கெட்ட ஆவிகள் கடும் கோபம்கொண்டு இருக்கு தலைவரே! வெல்ஃபேர் ஆபீஸர்கள்ங்கிற பெயரில், சமீபமா நம்ம தீவில் முகாம் அடிச்சு இருக்கும் வெளி உலக மனிதர்களின் பின்னால் நம்ம இளைஞர்கள் புத்திகெட்டு சுத்துறாங்க. சர்க்கார் சார்பா வந்து இருக்கும் இந்த ஆபீஸர்களுக்கு தேன் எடுத்துக் கொடுத்துட்டு, பதிலுக்கு அவங்ககிட்டே சிகரெட் வாங்கி ஊதுறாங்க நம்ம இளவட்டங்கள். என் மகன் எகேடி இருக்கிறானே... பீர் குடிக்கிறது, வெளிநாட்டுக் குளிர்

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*பானங்களுக்காக அரிய மூலிகைகளைப் பிடுங்கி விற்கிறதுன்னு அவனும்கூட நம்ம இனத்துக்கே ஒரு அவமானச் சின்னம்தான்!'' - சொல்லிக்கொண்டே தலை கவிழ்ந்தார் பெம்பா.*

*''எனக்கென்னவோ குலதேவதையிடம் கேள்வி கேட்க வேண்டிய நேரம் வந்துவிட்டதாவே தோணுது. மரண துக்கம் இன்னிக்கு ஒருநாள் முழுக்க இருக்கும். அதனால், நம் கூட்டத்து முக்கியஸ்தர்களை நாளைக்குக் காலை காட்டின் உள் பகுதியில் நம் மந்திர குரு நோகாய் வசிக்கும் குடிசைக்கு வரச் சொல்லிடு. ஞாபகம் இருக்கட்டும்... ரொம்ப ரகசியமாவே இந்த தகவல் அவங்களுக்குப் போகணும். வெல்ஃபேர் அதிகாரிகள் யாருக்கும் நம்ம ரகசிய கூட்டம் பற்றி தெரியக் கூடாது. அதிலும்... அவன் பெயர் என்ன? ஆங்... அஷோக்! அவன் காதுக்கு விஷயம் போகவே கூடாது. எனக்கென்னவோ அவனுடைய அத்தனை நடவடிக்கையுமே சந்தேகமாத்தான் இருக்கு!''*

www.t.me/tamilbooksworld

*''சரியாச் சொன்னீங்க தலைவா! அந்த அஷோக் நம்ம ஆதிவாசி இனத்துக்காரர்கள் மீது காட்டுற அளவுகடந்த அக்கறையைப் பார்த்தா, எனக்கும் சந்தேகம்தான். அந்த 'முந்திரிக்கொட்டை' அவனாவே வந்து நம் எல்லா விஷயங்களிலும் மூக்கை நுழைக்கிறான்!''*

*''பாம்பைவிட மோசமானவன் அவன். ரொம்ப ரொம்ப எச்சரிக்கை தேவை அவனிடம்!'' என்று ஆதிவாசி இனத் தலைவர் மெலேம் கண்களைச் சுருக்கியபடி சொல்ல... பெம்பா உடம்பை மடக்கி வணங்கிவிட்டு, கடலை ஒட்டிய அந்த காட்டுக்குள் வேகமாக நடந்து மறைந்தார்.*

*இந்திய வரைபடத்தில் தட்டுப்படுகிற தீவுக் கூட்டங்களில் இந்தத் தீவும் ஒரு சிறு புள்ளி. பயமும் பரவசமும் ஒருசேர ஊட்டுகிற*

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

அடர்காடுகள் நிறைந்தது. உலகம் இதுவரைக்கும் பார்த்து அறியாத பல விநோத உயிரினங்களும், தாவர வகைகளும், அதிரவைக்கிற உயரம்கொண்ட காட்டு மரங்களுமாக... பல வண்ணங் களால் இயற்கை வரைந்த முரட்டு ஓவியம் இந்தத் தீவு.

வேற்று முகம் பார்த்து அறியாத ஓங்கே இன ஆதிவாசிகள் தங்களுக்கென்று ஒரு பிரத்யேக மொழியில் பேசிக்கொண்டு, மற்றபடி தாங்களும் காட்டு விலங்குகளாகவே எந்த கல்மிஷமும் இல்லாமல் இயற்கை விட்ட வழியில் வாழ்ந்த காலங்கள் உண்டு. இப்போதோ, இயற்கையை எங்கு எல்லாம் சுரண்டிக் காசாக்கலாம் என்று பன்னாட்டு நிறுவனங்கள் பரபரக்கிற காலமாகி விட்டது. திடுதிடுவென வெளி உலகத்து மனிதர்கள் இந்தத் தீவுக்கு வந்து இறங்குகிறார்கள். வானுயர்ந்த மரங்களை வெட்டிச் சாய்ப்பதும், அரக்கத்தனமாக உறுமும் டிரக்குகளில் வைத்து எடுத்துச் செல்வதுமாக... எந்நேரமும் கூச்சலும் புகையும்தான். காட்டுப் பகுதியும் மெதுவாக சுருங்கிக்கொண்டே வருகிறது. இந்த ஆதிவாசிகளின் வாழ்க்கையிலும் கசப்பான மாற்றங்கள் தவிர்க்க முடியாமல் போய்... இவர்களின் இனமும் காடு போலவே சுருங்கிக்கொண்டு இருக்கிறது! ஏன் நடக்கிறது... என்ன நடக்கிறது... ஏன் தங்கள் இனத்தில் அடுத்தடுத்து பல துர்மரணங்கள் நிகழ்கின்றன என்பது இப்போது இவர்களின் பிரதானக் கவலை!

www.t.me/tamilbooksworld

'நோகாய்' என்ற பேரைச் சொன்னாலே, அத்தனை ஆதிவாசிகளும் கண்ணில் பீதி கொப்பளிக்க தரையோடு தரையாக வணங்கி நிமிர்வார்கள். அடிக்கப் போகிற புயலை முன்கூட்டியே கணித்துச் சொல்லவும், அந்தப் புயலால் தங்கள் இனத்துக்கு ஆபத்து வராமல் தடுக்கவும்கூட சக்தி படைத்தவர் நோகாய். காய்ந்துபோன காட்டுச் சருகுகளைக் குவித்துவைத்து, அதன் மேல் ஒரு பெரிய பாறையை எடுத்து நோகாய் வைத்துவிட்டால்... சீறுகிற புயலும் தானாக

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

அடங்கிப்போகும். வலியில் துடிக்கிற மனிதனின் முகக்குறியை வைத்தே அவனுக்கு என்ன வியாதி என்று சொல்லி, அதற்கு பரிகாரமும் சொல்லிவிடுவார். கர்ப்பமாக இருக்கும் பெண்ணின் அடிவயிற்றை ஆள்காட்டி விரலால் தட்டிப் பார்த்து விட்டு, பிறக்கப்போவது ஆணா பெண்ணா என்று துல்லியமாகக் கணிப்பார்.

கெட்ட ஆவிகளைக் கிட்டே நெருங்காமல் தடுப்பது... நல்ல ஆவிகளை வசப்படுத்தி அவற்றின் மூலம் காரியங்கள் சாதிப்பதும் இந்த மந்திர குருவுக்குத் தண்ணி பட்ட பாடு! செத்தவனை மறுபடி எழுப்புவது நீங்கலாக, மற்றதெல்லாம் இவருடைய மந்திரத்தால் சாதிக்க முடியும் என்று ஓங்கே இனத்துப் பெரியவர்கள் உறுதியாக நம்பினார்கள்.

தங்கள் இனத்தின் எண்ணிக்கை 97-ல் இருந்து 96-ஆக சுருங்கிவிட்ட நிலையில், கடைசியாக இறந்துபோனவரின் மரணத்துக்கான காரணமும் புரியாமல், அதோ ஆதிவாசி களின் தலைவர் மெலேம் வேகவேகமாக நோகாய் வீடு நோக்கி வந்துவிட்டார். அவருடன் வருவது - நேற்று பீதியோடு பேசிக்கொண்டு இருந்த பெம்பா.

இன்றைக்குப் பார்த்து நோகாய்க்கு மூடு சரி இல்லை! ஒரு ஆள் மட்டும் தரையோடு தரையாக ஊர்ந்து உள்ளே நுழைகிற அளவுக்கு வாயில்வைத்த குடிசை. பெம்பாவும் மெலேமும் உள்நோக்கி பயபக்தியோடு குரல் கொடுத்த உடனே, பதிலாக ஒரு பகீர் கர்ஜனை கிளம்பி வந்தது - ''டேய், யாரடா அவன்? நேற்று இரவு நோகாய் ஒரு துர் சொப்பனம் கண்டு இருக்கிறான். தென்படுகிற எந்த அறிகுறியுமே நல்லதாக இல்லை. இன்றைக்கு நோகாய் யாரையும் பார்ப்பதாக இல்லை. மரியாதையாக வந்த வழியே திரும்பிப் போய்விடுங்கள்!''
- மிரட்டியது நோகாயின் குரலேதான்.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

மெலேம் முகத்தில் எக்ஸ்ட் ராவாக 700 சுருக்கங்கள் நெளிந்தன. பேஜாராகிப் போய் பெம்பாவைப் பார்த்தார். பிறகு, துணிச்சலைத் திரட்டிக்கொண்டு குரல் கொடுத் தார் -''தேவதைகளுக்கு வணக்கம். மந்திர குருவுக்கு வணக்கம். நோகாய் மிக விரும்பும் கடல் ஆமையைப் பிடித்து, பக்குவமாக சமைத்து எடுத்து வந்து இருக்கிறோம். அதை ஏற்றுக்கொண்டு எங்களை கௌரவப்படுத்த வேண்டும்!'' என்றவர், பெம்பாவின் கையில் இருந்து கலயத்தை வாங்கித் திறந்து, குடிலின் நுழைவாயில் பகுதிக்குள் நீட்டினார். ஆமைக் கறியின் மணம் குடிசைக்குள் அலையாகப் புகுந்தது.

நோகாயின் ஒரே பலவீனம் - ஆமைக் கறி!

சின்ன அமைதிக்குப் பிறகு நுழைவாயிலுக்கு வெளியே ஒரு கை நீண்டது. கலயத்தை வாங்கிக்கொண்டு மறுபடி மறைந்தது. காட்டுப் பட்சிகளின் கூவலும், தூரத்தில் ஓடும் டிரக்குகளின் ஓசையுமாக சிறிது நேரம் கழிந்தது. ''சரி, வாருங்கள் உள்ளே!'' என்றது நோகாயின் அதிகாரக் குரல். மெலேமும் பெம்பாவும் தவழ்ந்து போனார்கள்.

www.t.me/tamilbooksworld

கண்களைப் பழக்கப்படுத்திக் கொண்டு பார்த்தால், வெளித் தோற்றத்துக்கு மாறாக குடிசைக்குள் நிறையவே இடம் இருந்தது. நட்ட நடுவே ஒரு மேடை. மேற்கூரையில் பலவிதமான பிராணிகளின் எலும்புகளும், சில மனித மண்டை ஓடுகளும் கட்டி ஊசலாடிக்கொண்டு இருந்தன. பாம்பு உள்ளிட்ட பிராணிகளின் தோல்களும், பற்களும் சுவற்றில் மாட்டி இருந்தன. எண்ணி முடிக்க முடியாத அளவுக்கு சின்னதும் பெரிதுமாக மண் குடுவைகள். அவற்றுக்குள் நோகாய் பயன்படுத்துகிற விநோத மருந்துகள் இருக்கும்.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

மந்திர குரு உட்கார்ந்து இருந்தது புலித் தோலின் மீது! தீராத விஷக் காய்ச்சல் ஒன்றைத் தீர்த்துக்கொள்ள பெல்ஜியத்து மகாராஜாவே இந்த தீவுக் காட்டுக்குள் வந்து நோகாயிடம் அற்புத மருத்துவம் பெற்றதாகவும், அதற்குப் பரிசாகக் கொடுத்ததுதான் அந்தப் புலித் தோல் என்றும் ஆதிவாசிகள் பேசிக்கொள்வார்கள்.

குடிசையின் ஒரு மூலையில் கணகணவென்று கலயத்தில் எரிந்துகொண்டு இருந்த நெருப்பை தன் குழி விழுந்த கண்களால் வெகுநேரம் உற்றுப் பார்த்துக் கொண்டு இருந்தார் நோகாய். ''எதற்காக இப்போது என்னைத் தொந்தரவு செய்ய வந்தீர்கள்?'' என்று சிடுசிடுப்பாகக் கேட்டார். இத்தனைக்கும் ஆமைக் கறி 'மறைந்து' கலயம் காலியாகி இருந்தது!

''குல குருவே... முதலில் சுவையான கடல் பசுக்கள் அழிவு கண்டன. அடுத்து, நாம் விரும்பிச் சாப்பிடுகிற அபூர்வ ரக ஆமைகள் அழிந்து ஒழிய ஆரம்பித்தன. காட்டுப் பன்றிகளைக்கூட அதிகம் பார்க்க முடிய வில்லை. இப்போதோ நம் அபூர்வ ஓங்கே குலத்து மனிதர்கள் ஈக்கள் போல செத்து விழுந்துகொண்டு இருக்கிறார்கள். நேற்றைக்கு ஒரு இளவயதுக்காரனின் உடலை எரித்து முடித்த கையோடுதான் இங்கே வந்து இருக்கிறோம். எந்த ஆவியின் சக்தி நம்மோடு இப்படி விளையாடுகிறது, குருவே! அதற்கு நம்மீது என்ன கோபம்?''

www.t.me/tamilbooksworld

நெருப்பை உமிழ்கிற மாதிரி முறைத்தார் நோகாய்.

''காரணம் தெரியாத மாதிரி நடிக்கிறீர்களோ..? அடுத் தடுத்து கெடுதல்கள் தொடர்வதற்குக் காரணம் உங்களிடம் இருந்த 'இன்கெடாயி' தொலைந்துபோனதுதால்தான்! கடவுளுக்குச் சமமான நம் ஓங்கே குலத்து மூதாதையான 'டோமிதி' கொடுத்துச் சென்ற பரிசு அந்த கடல் கல்!

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

உலகின் முதல் மனிதன் 'டவாமோடா' தன் கையால் வரைந்த கோடுகளைக்கொண்டதாயிற்றே அந்த 'இன்கெடாயி'! அந்தப் புனிதக் கல் இருந்தவரையில் நம் குலத்துக்கு எந்தக் கேடும் வந்தது இல்லை. சுனாமியால்கூட நம்மை அசைத்துப் பார்க்க முடியவில் லையே. முட்டாள்தனமான கவனக்குறைவால் அந்தக் கல்லைத் திருட்டுக் கொடுத்துவிட்டு, இப்போது என்னிடம் காரணம் கேட்டு நிற்கிறீர்களே... உங்களுக்கு வெட்கமாக இல்லையா?'' - கண்ணுக்குள் இருந்து நெருப்புத் துண்டு வந்து விழும்போல் இருந்தது.

''தீவின் வால்முனை மாதிரி இருக்கிற கடைக்கோடியில், நம் குலத்தைச் சேர்ந்தவர்கள் தவிர வேறு யாருமே போய்ச் சேர முடியாத கறுப்புக் குகைக்கு உள்ளே, மிக மறைவாகத்தான் 'இன்கெடாயி'யை பாதுகாத்துவைத்து இருந்தோம். அந்த இடத்துக்குப் போய் திருடுகிற துணிச்சல் கொண்டவன் யார் என்று புரியவில்லையே குருவே!'' - சொல்லும்போதே, மெலேமின் குரலில் அழுகை வடிந்தது.

www.t.me/tamilbooksworld

பெரிதாக ஒரு ஏப்பம் வெளிப்பட்டது நோகாயின் பொக்கை வாயில் இருந்து. புலித் தோலில் இருந்து வேகமாக குதித்து எழுந்தவர், ஒரு மூலையில் குவித்துவைத்து இருந்த எலும்பு மற்றும் மிருகத் தோல் குவியலில் இருந்து துழாவி ஒரு பெரிய சிப்பியை எடுத்து வந்தார்.

''பார்த்தீர்களா இதை..? கொஞ்ச நாளைக்கு முன்பு வரை இதற்கு உயிர் இருந்தது. இப்போது செத்துப் போய்விட்டது. ஏன்? இதற்குள் வசித்துக்கொண்டு இருந்த புனித ஆவி 'புலுகா' இப்போது இதனுள் இல்லை. 'இன்கெடாயி' கல் நம் தீவைவிட்டு எப்போது வெளியே போய்விட்டதோ, அப்போதே 'புலுகா'வும் இதில் இருந்து போய்விட்டது. கடவுளைக் களவுபோக அனுமதித்த நம் மீது, நமது நட்பு ஆவிகள் அத்தனையுமே கடும் கோபத்தில் இருக்கின்றன. திருடிக்கொண்டு

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*போனவனையும் அந்த ஆவிகள் சும்மாவிடப் போவதில்லை. ஆனால், 'இன்கெடாயி'யை மீட்டு வராமல் இப்படியே நின்றுகொண்டு இருந்தால், முதலில் நம்மையெல்லாம் மொத்தமாகத் துடைத்துப் போட்டுவிட்டு, அப்புறம்தான் அந்தத் திருடனைத் தேடி ஆவிகள் புறப்படும், புரிந்ததா?'' - அவர் உடம்பு சூறைக் காற்றில் சிக்கிய மரம்போல ஆடியது.*

*''கருணை வைக்கணும் குருவே! திருட்டுப்போன புனிதக் கல்லை மீட்பதற்கு வழியை நீங்கள்தான் சொல்லவேண்டும்!''*

*''ஒரே ஒரு வழிதான் இருக்கிறது. இதுவரையிலான நம் குல தர்மங்களை எல்லாம் மீறி, நம்மில் ஒருவன் இந்தத் தீவைவிட்டு வெளியில் சென்றாக வேண்டும். 'இன்கெடாயி' எங்கே இருந்தாலும் அதைத் தேடிக் கண்டுபிடித்து மீட்டுக் கொண்டு வரவேண்டும். எத்தனை சீக்கிரத்தில் இது நடக்கிறதோ... அத்தனை உயிர்கள் நம்மில் தப்பும்!''*

www.t.me/tamilbooksworld

- தொடர்ந்து சந்தேகிப்போம்...

Copyright © Vikas Swarup 2008

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

# மோட்டிவ் 6

விகாஸ் ஸ்வரூப்

தமிழில்: அஞ்சனாதேவ்

## மந்திர குருவின் சூட்சமப் பயணம்!

''இதுவரையில் நம் ஓங்கே குலத்தினர் கடைப்பிடிச்ச கட்டுப்பாட்டை மீறி, முதன் முதலாக நம்மில் ஒருவன் இந்தத் தீவைவிட்டு வெளியே போக வேண்டும். நம் இனத்தின் தெய்வத்துக்கு சமமான 'இன்கெடாயி' புனிதக் கல்லைத் திருடிட்டுப் போன பாதகன் யாருன்னு கண்டுபிடிக்கணும்.

www.t.me/tamilbooksworld

அந்தக் கல் மீண்டால்தான், நம் ஆதிவாசி இனத்தில் மிச்சம் மீதி இருக்கிற 96 பேர் பிழைச்சுத் தழைக்க முடியும். இல்லைன்னா, இந்த இனம் பூண்டோடு அழிவது உறுதி!''- மந்திர குரு நோகாய் உறுமி முடித்தபோது, அந்த இனத்துத் தலைவர் மெலேமும் பெம்பாவும் தொபுகடீரென்று அவர் காலடியில் விழுந்துகிடந்தார்கள்.

''நோகாய்தான் இதற்கு அருள் செய்ய வேண்டும். நம் ஆட்களில் 'இன்கெடாயி' தேடிப் போகக்கூடியவன் யார்? அந்தக் கல் இருப்பது எங்கே? நீங்கள்தான் அற்புத சக்தியால் முடிவெடுத்துச் சொல்ல வேணும்!''

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

''சொல்வேன்... சொல்வேன்! ஆனால், வருகிற மழைக் காலம் முழுக்க நான் குடிசைக்குள்ளேயே இருந்து ஆவிகளுடன் பேச வசதியாக, எனக்கு தினந்தோறும் ஆமைக் கறி வேண்டும்... புரிந்ததா?''

www.t.me/tamilbooksworld

இருவரும் வேகமாகத் தலையாட்டினார்கள்.

''ஒரு பானை நிறைய புதுத்தேன். அதோடு, ஐந்தாறு பன்றிகளின் மண்டை ஓடும் எனக்கு வந்தாக வேண்டும், சரியா?''

அதற்கும் அவசரமாகத் தலையாட்டினார்கள். நோகாய் கண்களில் திருப்தி. நெருப்பு எரிந்துகொண்டு இருந்த கலயத்தைத் தன் அருகில் இழுத்து வைத்துக் கொண்டார். சிவப்பு நிறக் களிமண் உருண்டையும், பழுப்பு நிறத்தில் சில விதை களையும் கையில் எடுத்தார். விதைகளைத் தூக்கி நெருப்புக்குள் அவர் போட, சடசடவென அது வெடித்து கண்ணையும் மூக்கையும் நுரையீரலையும் ஒருசேரப் பதம் பார்க்கும் நெடியோடு புகை கிளம்பியது. 'க்விர்ர்ர்ர்ரீய்' என்று காட்டுப் பறவைபோல சத்தம் செய்தபடியே, சிவப்புக் களிமண்ணை எடுத்து முகத்திலும் உடம்பிலுமாக வேகமாகப் பூசிக்கொண்டார் நோகாய் கிழவர். தன் கட்டுப்பாட்டிலேயே இல்லாதவர்போல ஆட்டத்தோடு நடந்தார்.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

மேடையில் இருந்து புலித் தோலை விலக்கி, அதன் கீழ் இருந்து சில எலும்புத் துண்டுகளை எடுத்துக் காட்டினார்.

''இவை என் விலை மதிப்பில்லாத சொத்துகள்... தெரியுதா? இதை என்னன்னு நினைக்கிறீங்க..? தெய்வத்தனம் பொருந்திய நம் மூதாதை 'டோமிதி'யின் உடம்பில் இருந்த எலும்புகள்!''

மூதாதையின் எலும்பைப் பார்த்ததும் மெலேமும் பெம்பாவும் மறுபடி தரையில் விழுந்தார்கள். தரையில் இருந்த மற்றொரு கம்பளத்தின் மீது உட்கார்ந்த நோகாய், தனக்கு நாலு பக்கமும் அந்த நான்கு எலும்புகளைப் பரப்பிவைத்தார். மண்டியிட்டு அமர்ந்து, அசாத்தியமான போஸில் வளைந்து, தன் தொடைகளுக்கு நடுவே முகத்தைப் புதைத்துக்கொண்டார். தூங்குவதுபோல் மூச்சு மட்டுமே வந்து கொண்டிருந்தது. நெருப்புக்குள் மிச்சம் இருந்த விதைகளின் சடசடப்பு சத்தம் தவிர... அந்தக் குடிசையினுள் ஒரு ஈக்குஞ்சு பறக்கும் சத்தம்கூடக் கேட்கவில்லை.

www.t.me/tamilbooksworld

ககன வெளியில் தன்னுடைய சூட்சும சரீரத்தில் மந்திரகுரு பறந்துகொண்டு இருக்கிறார் என்பது மெலேமுக்கும் பெம்பாவுக்கும் தெரியும். அங்கே போய் ஆவிகளுடன் பேசி, இந்தக் குடிசைக்குள் அழைத்து வருவார். இங்கு இருக்கிற அமானுஷ்ய சக்திகளுக்கு ஆவிகள் எப்படியும் கட்டுப்படும். நல்ல மூடில் இருந்தால் மந்திர குருவுக்கு வேண்டிய உதவிகளைச் செய்யும்.

இப்படியே சுமார் ஏழெட்டு மணி நேரம் நீண்டது. ஓட்டுக்குள்கிடக்கிற ஆமை மாதிரி அசையாமலே இருந்தது கிழவரின் தேகம். வெளியே சுடுவெயில் நீங்கி சூரியன் தங்க நிற ஒளிக்கு மாறும் வரை மெலேமும் பெம்பாவும் மூச்சுக் காட்டாமல் காத்திருந்தார்கள். திடீரென்று

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

உலுப்பிக்கொண்டு எழுந்தார் நோகாய். அவர் கண்களின் கீழே சின்னச் சின்னதாக ரத்தப் புள்ளிகள். சிவப்புக் களிமண் பூசியிருந்த இடங்களில் நீளநீளமாக ரத்தக் கீறல்கள்.

''தண்ணீர்! சீக்கிரம் தண்ணீர் கொடு!'' என்று கிறீச்சிட்டார். தயாராக வைத்திருந்த பெரிய பானையை அப்படியே பெம்பா எடுத்து நீட்ட, ஒரே மூச்சாக அதைக் குடித்து உடம்பெங்கும் வழியவிட்ட நோகாய், மூச்சுத் திணறியபடியே பேச ஆரம்பித்தார் —

''நோகாய் பயணம் வெற்றி. தன் கண்களாலேயே பார்த்துவிட்டான்... 'இன்கெடாயி' இருக்குமிடம் தெரிந்துவிட்டது!''

வெடவெடத்தபடி இருவரும் பார்த்திருக்க... அந்தப் பயணத்தைப்பற்றி மிக நுணுக்கமாக விவரித்தார் நோகாய்.

www.t.me/tamilbooksworld

அந்த தனித்தீவில் இருந்து கடல்தாண்டிப் பறந்ததாகச் சொன்னார். வழியில் பாலைவனம் வந்ததாகவும், அதைத் தாண்டி பனி மலைகளையும் மிக அடர்ந்த காட்டையும் பார்த்ததாகவும் சொன்னார்.

''உலோகத்தாலான பறவைகள் பேரிரைச்சலுடன் பறந்து போனதைப் பார்த்தேன்... இரும்பு பாம்புகள் தமக்கென பாதை போட்டுக் கொண்டு நெளிந்துபோவதைப் பார்த்தேன். ஆனால், கடைசியாக நான் பார்த்ததுதான் ரொம்பப் பயமுறுத்தும்விதமாக இருந்தது...'' என்று நிறுத்திய நோகாய், பள்ளமான கண்களைப் படபடப்பாக உருட்டினார்.

''நாம் கற்பனையே செய்ய முடியாத அளவுக்கு குன்று களைவிட உயரமான கட்டடங்களை ஓர் இடத்தில் நான் பார்த்தேன். அது ஓர் இரவு நேரம். ஆனாலும், பல ஆயிரம் நட்சத்திரங்களுக்கு சமமாக விளக்குகள்

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

அங்கே எரிந்துகொண்டு இருந்தன. அத்தனை உயர்ந்த கட்டடங்களுக்கு மத்தியில்... ஒரு சிறு சோலைக்குள், ஒரு குளத்துக்கு அருகே பச்சைக் கூரை வேய்ந்த ஒரு சின்னக் கட்டடத்தைக் கண்டேன். அதனுள் ஒரு அலங்காரமான சிறிய மேடை மேலே நம் 'இன்கெடாயி' இருப்பதை என் இரண்டு கண்களால் பார்த்தேன்!''

நோகாய் சொன்னதைப் பிரமிப்போடு கவனித்த மெலேம், ''அதை அங்கே கொண்டுபோனவனைப்பார்த்தீர்களா? யார் அவன்?'' என்றார் ஆத்திர உறுமலாக.

''அங்கே நான் பார்த்தது இரண்டு மனிதர்களை! முழுதும் வெள்ளை நிறத்தில் உடையணிந்த வயசான ஒரு பெண்மணி... அவளுடன் இருந்தவன் வழுக்கைத் தலையோடு அடர்ந்த புருவத்தோடு குண்டு மூக்கோடு மெல்லிய உதடுகளோடு இருந்த குட்டையான மனிதன். அவன் கண்களுக்கு கண்ணாடி மாட்டியிருந்தான்! நெற்றியின் இடப் புறம் நட்சத்திரக் குறி போல ஒரு வடு இருந்தது!''

www.t.me/tamilbooksworld

மூச்சை தம் கட்டியபடி, ''பேனர்ஜீ'' என்று கூவினார்கள் மெலேமும் பெம்பாவும். இரண்டு மாதத்துக்கு முன்பு வரை இதே தீவில் வேலை பார்த்துக் கொண்டிருந்த அரசாங்க நலத் திட்ட அதிகாரி. ஆதிவாசி களின் நலனுக்காகவே தன் வாழ்க்கையை அர்ப்பணித்து விட்டதாகச் சொல்லிக்கொண்டு இருந்தவன். திடீரென்று, காரணம் புரியாத ஓர் அவசரத்தோடு அந்தத் தீவைவிட்டுக் கிளம்பிவிட்டான்!

''தெய்வ ஆவியான புலுகாவுக்கு புகழ் உண்டாகட்டும். எப்படியோ... நம் கஷ்டங்கள் தீருவதற்கான அறிகுறிகள் தெரிகின்றன. நட்பு ஆவிகள் இப்போதும் நமக்கு உதவி செய்யத் தயாராகவே இருக்கின்றன!'' என்ற நோகாய், ''எப்படியாவது நம்மில் ஒருவன் போய், நீங்கள் சொல்கிற

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

அந்த பேனர்ஜி இருக்கிற இடத்தில் இருந்து 'இன்கெடாயி'யை மீட்டு வந்துவிட்டால், நம் ஓங்கே குலம் காப்பாற்றப்படும். மறுபடி நிறைய கடல் ஆமைகள் கிடைக்கும். பஞ்சம் இல்லாமல் தேன் அருந்தலாம். அகால மரணங்கள் அதோடு நின்றுபோகும்!'' என்றார் கனிவான குரலில்.

''புரிந்தது குருவே! அகால மரணத்தால் சாகிறவர்கள் தானே 'ஈகா' என்கிற கெட்ட ஆவிகளாக அலைகிறார்கள். இனி 'ஈகா' நம்மைச் சுற்றி வருகிற தொல்¯யும் இருக்காது!'' என்றார்கள் இருவரும்.

குடிசைக்குள் இருந்து ஊர்ந்து மூவரும் வெளியில் வந்தார்கள்.

அங்கிருந்து சில அடிகள் தள்ளி, காலை முதல் கவலையோடு காத்துக்கொண்டிருந்த ஓங்கே குலத்து முக்கிய ஆதிவாசிகளிடம் போய் விஷயத்தைப் பகிர்ந்துகொண்டார்கள்.

me/tamilbooksworld

''இப்போது சொல்லுங்கள்... 'இன்கெடாயி' இருக்கிற இடத்துக்கு போகப் போவது யார்?'' பெம்பே உரக்கக் கேட்க... அத்தனை பேரும் ஒருத்தர் முகத்தை ஒருத்தர் பார்த்துக் கொண்டனர். காற்று அடிப்பதுகூட தற்காலிகமாக நின்றுபோனது. சற்று தூரத்தில் வில்-அம்பும்... எலும்புத் துண்டுகளும் வைத்து விளையாடிக் கொண்டிருந்த ஆதிவாசிக் குழந்தைகளும்கூட அந்த திடீர் அமைதியில் க(ல)வரப்பட்டு அப்படியே நின்றார்கள். எங்கோ கடல் அலைகள் மோதுவது மட்டும் சன்னமாகக் கேட்டது.

''ச்சீலீர்!''

உயரத்திலிருந்து ஒரு 'கிங்ஃபிஷர்' காலி பீர்பாட்டில் வந்து மெலேமின் காலருகில் விழுந்து சிதறியது. அருகில், தன் குழந்தையை

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

மார்போடு வைத்து பால் கொடுத்துக்கொண்டு இருந்த டூமி அலறிக்கொண்டு விலகினாள். 'ஆவிகளின் கோபம் அடங்கலையோ' என்ற பயத்தோடு எல்லோரும் உயரே பார்த்தார்கள். அங்கே மரத்தின் உச்சியில் இருந்தவன் 'எகேடி'!

பெம்பாவுக்கு கோபம் ஜிவுஜிவு வென்று பிய்த்துக் கொண்டது.

''இதோ பாரு என் உருப்படாத மகனே... மரியாதையாகக் கீழே இறங்கி வந்துவிடு! இல்லையென்றால், சொந்தப் பிள்ளையை நாயாக மாற்றச் சொல்லி நோகாயிடம் பிரார்த்தனை செய்யும் முதல் அப்பனாக நான் இருப்பேன்!'' என்று சத்தமிட்டார் பெம்பா.

குரங்குகூட அத்தனை ஸ்பீடாக மரம் இறங்குமா என்பது சந்தேகம்தான். சட்டென்று கீழே வந்து அவர்கள் முன்பாக நின்றான் எகேடி. எக்கச்சக்கமான குறும்பைத் தேக்கிய சிரிப்போடு தன் அப்பா பெம்பாவைப் பார்த்தான். அங்கிருந்தவர்களின் சராசரி உயரத்தோடு ஒப்பிடுகையில் எகேடியின் ஐந்தடி சொச்ச அங்குலமே கொஞ்சம் அதிகம்தான். முறுக்கிவிட்ட மாதிரி உடம்பு. பல இடங்களில் பொத்தலாகி இருந்த பழைய சிவப்பு நிற ஷார்ட்ஸும், கலரே தெரியாத அளவுக்கு அழுக்கேறி, 'டல்லாஸ் கவுபாய்ஸ்' என்று மங்கலாகத் தெரிந்த டி ஷர்ட்டும் அணிந்திருந்தான். சூயிங்கம் அடைத்துவைக்கும் சின்ன பிளாஸ்டிக் டப்பா ஒன்று அவன் கழுத்தில் தொங்கியது. மொத்தத்தில் அந்த ஆதிவாசி குலத்தின் இயற்கையான 'உடுத்தல்' லட்சணங்கள் அவனிடம் இல்லை!

www.t.me/tamilbooksworld

வெறுப்போடு அவனை எல்லோரும் பார்க்க, ''சரி... நம் விஷயத்துக்கு வருவோம். இன்கெடாயி தேடி நம்மில் யாரை அனுப்பப் போகிறோம்?'' என்றார் மெலேம்.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

மறுபடி அங்கே மௌனம் கவிய, ''ஓங்கே குல கௌரவத்தைக் காப்பாற்ற யாருமே தயாராக இல்லையா? அல்லது, யாருக்குமே தைரியம் இல்லையா?'' - குருநாதர் நோகாய் இடியாக வெடித்தார்.

''இந்த எகேடி அதற்குத் தயாராக இருக்கிறான்...'' என்றபடி மார்பை நிமிர்த்தியபடி முன்னால் வந்தான் எகேடி.

- தொடர்ந்து சந்தேகிப்போம்...

Copyright © Vikas Swarup 2008

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

# மோட்டிவ் 6

விகாஸ் ஸ்வரூப்

தமிழில்: அஞ்சனாதேவ்

## எதற்கும் கலங்காத எகேடி!

பெம்பாவின் மகன் எகேடி, 'இன்கெடாயி' இருக்கிற இடத்துக்கு போகத் தயார் என்றதும், ஆதிவாசி தலைவர் மெலேம் அவனை எரிச்சலுடன் பார்த்தார்.

www.t.me/tamilbooksworld

''நீயா? நிஜமாகவே போகத் தயாரா? பாதி நேரம் கடற்கரையில் கோகாவும் பீரும் குடித்துவிட்டு, புகை ஊதிக் கொண்டிருப்பவனாச்சே நீ? அங்கே உலாவ வருகிற வெளிநாட்டுப் பயணிகளை மிரட்டி காசு வாங்குவதுதானே உன் வேலை... நீ எப்படி உருப்படியாக இந்தக் காரியத்தைச் செய்ய முடியும்?''

இப்போது நோகாய் முன்னால் நகர்ந்து வந்தார். ''நீங்களெல்லாம் நினைப்பதை விட எகேடி புத்திசாலி. அவனுக்கு நான் சில வருடங்களுக்கு முன் பல ரகசிய மந்திரங்கள் கற்றுக் கொடுத்திருக்கிறேன். ஆர்வமாகத் தொடர்ந்து என்னிடம் வந்திருந்தால், ஓங்கே குலத்தில் அடுத்தபடியாக என் இடத்துக்கு வந்திருக்க வேண்டியவன் இவன். இப்பவும் இந்த உலகத்துக்கே ராஜா ஆகிற வெறி அவனுக்கு இருக்கிறது. நோகாய் சொல்கிறேன்... எகேடி இதற்கு சரியான ஆள்தான்!''

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*மெலேம் தலையைத் திருப்பி, ''ஏய் பெம்பா... நீதான் முடிவு சொல்ல வேண்டும்!'' என்றார்.*

www.t.me/tamilbooksworld

*''நோகாய் சொல்வதை ஏற்கிறேன். இந்தப் பயலை இங்கேயே இருக்கவிட்டால், அரசாங்கம் அனுப்பியிருக்கிற வெல்ஃபேர் ஆபீஸர்களின் பின்னாலே சிகரெட்டுக்கும் மதுவுக்கும் சுற்றி... அவர்களின் ஒட்டுமொத்த அடிமை ஆகிவிடுவான். அதைவிட நம் குலத்தையே காப்பதற்கான தேடலுக்காக இவன் உடனே கிளம்பிப் போவது நல்லதுதான்!''*

*''எகேடி! இது மிகமிக ஆபத்தான பயணம். அது உனக்குத் புரிகிறதல்லவா?''*

*''தெரிந்துதான் ஒப்புக்கொள்கிறேன். நம் ஆதிவாசி குலத்தின் தைரியத்தை வெளி உலகத்துக்குக் காட்ட இது ஒரு சந்தர்ப்பம். ஓங்கே குலத்தின் எதிர்காலமே இதில் அல்லவா இருக்கிறது!'' - அப்பா பெம்பே ஆச்சரியப்படுகிற அளவுக்கு விவேகமாகப் பேசினான் எகேடி.*

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*''பயப்பட எதுவும் இல்லை. நோகாய் இருக்கிறேன். உனக்கு சில அற்புதக் கிழங்குகள் தருவேன். அவை உன்னோடு இருக்கும் வரை நல்ல ஆவிகளின் உதவி உனக்குத் தொடரும். எந்தவிதமான நோயிலிருந்தும் காப்பாற்றிக்கொள்ள என்னிடம் மருந்து உருண்டைகளும் உண்டு.''*

*குடிசைக்குள் போன நோகாய் திரும்பி வந்தபோது, மண்டை ஓட்டின் குழிந்த கீழ்ப் பகுதிக்குள் அந்தக் கிழங்குகளையும் கொஞ்சம் எலும்புகளையும் வைத்திருந்தார். சிறியதொரு எலும்புத் துண்டை மிருகத்தின் நரம்பு ஒன்றில் கோத்து எகேடி கழுத்தில் மாட்டினார்.*

*''எகேடி... இப்போது சொல்கிறேன்... பேனர்ஜியைத் தேடி நீ போகப் போகிற இடம் இந்தியாவின் மிகப்பெரிய நகரம் என்று மட்டும் புரிகிறது. அங்கே கள்வர்களும், கயவர்களும் நல்ல பாவனைகளோடு நடமாடுவார்கள். துளிகூட இரக்கமும், நியாயமும் இல்லாத நயவஞ்சக மனிதர்களுக்கு நடுவே போய்த்தான் நீ நமது புனிதக் கல்லை மீட்டு வரப் போகிறாய். ஆனால், இந்தப் புனித எலும்புத் துண்டு உன் கழுத்தில் இருக்கிற வரை நம் தெய்வம் புலுகாவும் உன் கூடவே இருக்கிற மாதிரிதான். யாரும் உன்னை நெருங்க முடியாது!''*

www.t.me/tamilbooksworld

*இப்போது பெம்பா கவலையாகி, ''தீவை விட்டு என் மகன் வெளியே செல்வதை வெல்ஃபேர் ஆபீஸர்கள் எப்படி அனுமதிப்பார்கள்? அதிலும் அந்த அதிகாரி அஷோக். அவன் ரொம்ப ரொம்ப புத்திசாலி. அவனை ஏமாற்றிவிட்டு இவன் எப்படி வெளியேற முடியும்? இப்படி ஒருதடவை வெளியேற நினைத்த நம் ஆள் ஒருத்தனை அதிகாரிகள் என்ன கதிக்கு ஆளாக்கினார்கள் என்று ஞாபகம் இல்லையா?''*

*எகேடி முன்னால் வந்து, ''அப்பா! அதெல்லாம் ஒரு விஷயமே இல்லை. அந்த ஆபீஸர்களோடு பழகிப் பழகியே அவர்களின் மொத்த*

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

பலத்தையும் நான் தெரிந்து வைத்திருக்கிறேன். அதிலும், இங்கு வருகிற ஃபாரினர்களிடம் பேசிப் பழகி, அந்த ஆபீஸர்களைவிட தெளிவாக நான் இங்கிலீஷ் பேசக் கற்றுக் கொண்டிருப்பதைப் பார்த்து அதிகாரி அஷோக் பிரமித்துப் போயிருக்கிறார். நான் சமாளித்துக் கொள்வேன், விடுங்க!''

''இந்தியா எவ்வளவு பெரியது தெரியுமா? இந்த வானத்தைவிட பெரியது. அங்கே போய் பேனர்ஜி என்ற மனிதத் துளியை எப்படி கண்டுபிடிப்பது?'' கூட்டத்தின் கோடியிலிருந்து ஒரு ஆதிவாசி கேட்க...

''பேனர்ஜியை எகேடிக்கு ரொம்ப நன்றாகத் தெரியும். அதனால் அடையாளம் ஒரு பிரச்னை இல்லை. பச்சைக் கூரைபோட்ட வீடு, சுற்றி சோலை, ஒரு குளம்... இதுதான் அடையாளம்!'' என்றார் நோகாய்.

www.t.me/tamilbooksworld

''இது ஒரு அடையாளமா குருஜி? ஒரே ஒரு உப்புக் கல்லை கடற்கரை முழுக்கத் தேடுகிற மாதிரிதான் இது. எனக்குத் தேவையெல்லாம் அட்ரஸ். இந்தியாவில் இருக்கிற எல்லோருக்குமே அட்ரஸ் என்று இருக்குமாம். ஒரு வெல்ஃபேர் ஆபீஸர் சொல்லிக் கேட்டிருக்கிறேன். பேனர்ஜியின் அட்ரஸ் என்ன? அதுதான் வேண்டும் இப்போது!'' என்றான் எகேடி.

ஆதிவாசி தலைவர் தங்கள் மந்திர குரு நோகாயைப் பார்த்து தலை சொறிய... மறுபடி பெரும் அமைதி.

''புலுகாவுக்குப் புகழ் உண்டாகட்டும். உங்களுக்கெல்லாம் இஷ்டம் என்றால், என்னால் உதவி செய்ய முடியும்!'' மரங்களுக்குப் பின்னாலிருந்து வெளிப்பட்ட உருவத்தைப் பார்த்து அத்தனை பேரும் அதிர்ந்து நின்றார்கள். அது இந்தியாவிலிருந்து வந்து தீவுக்குள் வேலை பார்க்கும் ஜூனியர் வெல்ஃபேர் ஆபீஸர் அஷோக்!

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

சுமாரான உயரம், சிவந்த நடுத்தரக் கட்டுக் கொண்ட தேகம், ஒளியான கண்கள், நறுக்கி வெட்டிய தலைமுடி. வயதும் முப்பதுகளில்தான் இருக்கும். ''நான் உங்கள் நண்பன் என்பதை தயவுசெய்து இப்போதாவது நீங்களெல்லாம் புரிந்துகொள்ள வேண்டும்'' - தப்பிதமில்லாத ஓங்கே மொழியில் பேசிய அஷோக், ''எகேடியை நான் கூட்டிப் போகிறேன் இந்தியாவுக்கு. எனக்குத் தெரியும் அந்த பேனர்ஜியின் அட்ரஸ்!'' என்றான்.

அவர்கள் அஷோக்கை நம்பாமல் பார்க்க, ''பேனர்ஜி இருக்கிற ஊரின் பெயர் கொல்கத்தா. அங்கே வீடும் என்னால் தேடிக் கண்டுபிடிக்க முடியும். புனிதக் கல்... இன்கெடாயி என்று பேசிக் கொண்டீர்களே... அது எப்படி இருக்கும் என்று விவரிக்க முடியுமா?''

தன் சட்டைக்குள்ளிருந்து பேனாவும், பேன்ட்டுக்குள்ளிருந்து சின்ன டைரியும் எடுத்து வைத்துக் கொண்டு, குறித்துக் கொள்ளத் தயாராக அவர்களையெல்லாம் குறுகுறுவென்று பார்த்தான் அரசாங்க அதிகாரி அஷோக்.

www.t.me/tamilbooksworld

## சந்தேகப்புள்ளி:4
## மொபைல் திருடன்!

இன்னும் ஐந்து நிமிடத்தில் நான் செத்து விடுவேன்!

முழு பாட்டில் எலிப் பாஷாணம் என் வயிற்றுக்குள் போயிருக்கிறது. ஒரு எலியைக் கொல்வதற்கு மூன்று நிமிடம் தேவை இந்த விஷத்துக்கு. மனுஷனுக்கு என்றால், அதிகபட்சம் ஆறு நிமிடம் என்று வைத்துக் கொள்ளலாம். முதலில் என் உடம்பு விறைக்கும். அடுத்து நீலமாக மாறத் தொடங்கும். இதயத் துடிப்பு தாறுமாறாக மாறி... கடைசியில்

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

நின்றுவிடும். என் இருபத்தோரு வருட வாழ்க்கை இதோடு முடிந்து போகும்.

'டேய் முன்னா! கடவுளை நினை... பண்ண பாவத்துக்கெல்லாம் மன்னிப்புக் கேளு' என்று அம்மா அடிக்கடி என்னிடம் சொல்லுவாள். அப்போதெல்லாம் வேண்டிக் கொள்ளாத நான் இபபோது வேண்டி என்ன புண்ணியம்? கைலாச மலையிலிருந்து பகவான் சிவ பெருமான் இறங்கி வந்து, இந்த கார் ஷெட்டில் செத்துக் கொண்டிருக்கிற எனக்கு உயிர்ப் பிச்சை தந்துவிடவா போகிறார்?

கடவுள் என்றைக்காவது ஏழைக்குக் கண்ணைத் திறந்திருக்கிறாரா? போதும் போதும் என்கிற அளவுக்கு அவர் அள்ளிக் கொடுப்பதெல்லாம் பணக்காரர்களுக் குத்தானே! அதனால்தான், கோயிலை ஒட்டியே எங்கள் குடியிருப்பு இருந்தாலும், நான் சாமியைக் கும்பிட்டதே இல்லை!

www.t.me/tamilbooksworld

தினேஷ் பிரதாப் பூசியா இந்த கார் ஷெட்டுக்குள் எனக்கு முன்னால் நின்று கொண்டிருக்கிறான். கையில் வெளிநாட்டு ரிவால்வர் வைத்திருக்கிறான். அதன் முனை என் நடு நெற்றியைக் குறிபார்த்துக் கொண்டிருக்கிறது. எலிப் பாஷாணத்தைக் குடிக்கச் சொல்லி துப்பாக்கி முனையில் மிரட்டியதும் அவன்தான். விஷம் குடித்துச் சாவதா, துப்பாக்கி குண்டு துளைத்துச் சாவதா என்று அவன் கொடுத்த சாய்ஸில், நானே தேர்ந்தெடுத்தது எலி விஷம். வலியில்லாமல் சாகலாம் என்பதால் இந்த முடிவு. குழப்பலான கலரில் இருந்த அந்த விஷத்தைக் குடிக்கிறபோது, ஏதோ மண்ணைக் கரைத்துக் குடிக்கிற மாதிரி ஒரு குமட்டல் மட்டும் இருந்தது.

அவன் கண்கள் என் உயிர் அடங்குவதைப்பார்க்க ஆர்வமாக மின்னிக் கொண்டிருந்தன. பூசியா சகோதரர் களிலேயே ரொம்ப

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

ஆபத்தானவன் இவன்தான். இவன் வளர்த்த நாய் ஒன்று, இவன் கூப்பிட்ட குரலுக்கு ஓடி வரவில்லை என்பதற்காக, அதன் கண்களுக்குள் குச்சி ஒன்றைத் திணித்துக் குருடாக்கியதை நேரில் பார்த்திருக்கிறேன்.

சரியாகச் சொல்வதானால், இந்த பூசியா பிரதர்ஸ் அத்தனை பேருமே வக்கிரம் பிடித்த ராஸ்கல்கள். இந்த தினேஷ் பிரதாப் பூசியாவின் அண்ணன் ரமேஷ் பூசியா பயங்கரமான பொம்பளைப் பொறுக்கி. சலவைக்காரப் பெண், வீடு துடைக்கிற பெண் என்று திரட்சியான குட்டிகள் யாரைப் பார்த்தாலும் மடக்கி, ரூபாய் நோட்டைக் காட்டி தன் காரியத்தை முடித்துக் கொள்ளுவான். அவன் பொண்டாட்டிக்கு உலகமே பியூட்டி பார்லர்தான். பியூட்டி பார்லர் பெண்கள் இவன் பொண்டாட்டி முகத்தில் விதம்விதமான கிரீமை தடவிக் கொண்டிருக்க... இங்கே ரமேஷ் பூசியாவோ விதம் விதமான பெண்களை...

www.t.me/tamilbooksworld

சுரேஷ் பூசியா என்று ஒரு இளைய சகோதரன் இவர்களுக்கு! கலப்பட மன்னன். இந்த ஊரில் அந்தேரியா மோத் ஏரியாவுக்குப் போய் அங்கே சுரேஷ் வைத்திருக்கிற பலசரக்குக் கடையில் எதை வாங்கினாலும் அதில் கொஞ்சமாச்சும் கலப்படம் கட்டாயம் இருக்கும். மணி மணியாக அரைத்த கூழாங்கற்களை பயறு வகையோடு கலப்பான். வெள்ளை மணல் துகள்களை அரிசியோடு சேர்த்துவிடுவான். மைதா மாவில் சாக் பீஸ் பவுடரை அடித்துவிடுவான். பால், சர்க்கரை, மருந்துப் பொருட்கள், கூல்டிரிங்க்ஸ், மினரல் வாட்டர் என்று இந்த ஏரியா ஜனங்களை கலப்படத்தால் பதம் பார்க்கிற பாவி அவன்.

இந்த மூன்று பேரின் அப்பன் ஜெய் பிரதாப் பூசியா மட்டும் என்ன... பிள்ளைகளுக்குக் கொஞ்சமும் குறைச்சலில்லாத வஞ்சகக்காரன். ஒரு வித்தியாசம்... வஞ்சகத்திலேயே கிழ மாடல், அவ்வளவுதான்! பொதபொத வென்று எருமை மாடு வெள்ளைக் கலரில் இருந்தால் எப்படி இருக்கும்?

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*அப்படித்தான் இருப்பான்கள் அப்பன், பிள்ளைகள் எல்லோருமே. தின்று தின்று பீப்பாய் மாதிரி பெருத்த வயிறு, சிறுத்துப் போன கண்கள், மலை மலையான பின்பக்கங்கள்..! முகத்தில் எப்போதும் ஒரு தூங்குமூஞ்சித்தனம். எரிச்சல் எரிச்சலாக வரும் அவர்களைப் பார்த்தாலே!*

*இந்த மாதிரியே பூசியா குடும்பத்துப் பெண்களும் அருவருப்பான தோற்றத்தோடு இருந்திருந்தால், இன்றைக்கு நான் இந்த நிலைமைக்கு வந்திருக்க மாட்டேன். இந்த வீட்டில் நான் வேலைக்காரனாகச் சேர்ந்ததே, பிங்க்கி பூசியாவுக்காகத்தான். அவள்தான் இந்த வீட்டின் கடைக் குட்டி. மேலே சொன்ன மூன்று பேரின் தங்கச்சி. சேட்டு வீட்டு இளவரசி. தேன் மாதிரி கலர், பி.எம்.டபிள்யூ கார் மாதிரி கச்சித வளைவுகள் கொண்ட உடம்பு அவளுக்கு. தற்செயலாக ஒருநாள் கோயில் வாசலில் அவளைப் பார்த்தேன். அங்கே பூ விற்கிற என் நண்பன் ஜக்குவிடம் தேவையில்லாமல் ஆயிரம் ரூபாய்க்கு ஒரு பந்தயம் கட்டினேன்.*

www.t.me/tamilbooksworld

*'சரியாக அறுபது நாளைக்குள் அவளை என் வலைக்குள் விழ வைக்கிறேன், பார்' என்று!*

*எடுபிடி வேலைக்காரனாக ஒரு வீட்டில் சேருவது, யுனிவர்சிட்டி டிகிரி முடித்த என்னைப் போன்ற யாருக்கும் கேவலமாகத்தான் இருக்கும். ஆனால், பிங்க்கியை கிட்டே நெருங்கி ஈர்ப்பதற்கு அவள் வீட்டுக்குள்ளேயே போவதுதான் சுலபமான வழியாகத் தெரிந்தது எனக்கு. நான் போன நேரம் பார்த்து, பூசியாக்களுக்கு ஒரு வேலைக்காரன் தேவையாக இருந்ததே... அதைச் சொல்லுங்கள்!*

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

இப்போதெல்லாம் ஓடி உழைக்கக்கூடிய நல்லதொரு வேலைக்காரனுக்கான தேவை எல்லா பணக்கார வீடுகளிலுமே இருக்கிறது. டேவூ மேடிஸ் காருக்கான ஸ்பேர் பார்ட்ஸ் மாதிரி அத்தனை அபூர்வ சமாசாரம் ஆகிவிட்டார்கள் நல்ல வேலைக்காரர்கள். கோயில் மானியக் குடியிருப்புப் பகுதியில் வசிப்பவன் என்ற ஒரு விஷயமே எனக்கு சாதகமாகி விட்டது. 'கோயிலுக்குப் பக்கத்தில் இருந்தா இந்தப் பையன் ஒழுங்கானவனாத்தான் இருப்பான்' என்று அவர்களாகவே ஒரு 'லாஜிக்' கற்பித்துக் கொண்டார்கள்.

நோகியாவும், சாம்சங்கும் கூலாக அடித்து, சட்டென்று கைமாற்றிவிட்டு ஆயிரக்கணக்கில் காசு பார்த்த எனக்கு மூவாயிரம் ரூபாய் மாத சம்பளம் கொடுத்தான்கள் பூசியா பிரதர்ஸ். பாக்கு கடிக்கிற நேரத்தில் காருக்குள்ளிருந்து மொபைல் போனை அடிக்கிற ஒரு வீராதி வீரனுக்கு... பாத்திரம் தேய்ப்பது, கடை கண்ணிக்குப் போய் வருவது போன்ற வேலைகளைக் கொடுத்தால் எத்தனை டார்ச்சராக இருக்கும் என்று பார்த்துக் கொள்ளுங்கள்.

www.t.me/tamilbooksworld

சோமவாரம்தோறும் சிவன் கோயிலுக்குப் போவது... பக்திப்பழமாக அர்ச்சனை செய்வது... வாசலில் இருக்கிற பிச்சைக்காரர்களுக்கு கர்ண பரம்பரை மாதிரி அள்ளி பிச்சை போடுவது என்று மூன்று சகோதரர்களும் போடுகிற வேஷம் அபாரம். எல்லாம் இந்த சமூகத்தின் பார்வைக்காக! ஆனால் குணத்திலும், வியாபாரத்திலும ஒன்னாம் நம்பர் டகால்டி பார்ட்டிகள் இவன்கள்.

என் நண்பனிடம் போட்ட சபதத்துக்காக இதை யெல்லாம் பார்த்துக்கொண்டு சும்மா இருந்தேன். ஆனால், பூசியா வீட்டுப் பெண்மணிகள் பண்ணிய அதிகாரத்தையும் ராங்கித்தனத்தையும் என்னால்

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

சகிக்கவே முடியவில்லை. ஏதோ அரேபிய மார்க்கெட்டில் விலைகொடுத்து வாங்கிய அடிமை மாதிரி என்னை நடத்தினார்கள்.

ஆனால், அதுவா விஷயம்... எதிர்பாராத விதமாக எனக்காகக் காத்திருந்தது அந்தத் திருட்டுப் படுக்கை...

- தொடர்ந்து சந்தேகிப்போம்...

Copyright © Vikas Swarup 2008

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

# மோட்டிவ் 6

விகாஸ் ஸ்வரூப்

தமிழில்: அஞ்சனாதேவ்

## ஓடு முன்னா, ஓடு!

பூசியா சகோதரர்கள் மட்டுமில்லை... அவர்களுக்கு வாய்த்த மனைவிகளும் இரக்கமில்லாமல் என்னை வேலை வாங்கினார்கள். ரமேஷ் பூசியாவின் பொண்டாட்டி என்னை வீடியோ கடைக்குப் போய் டி.வி.டி. வாங்கி வரும்படி விரட்டுகிற அதே நேரம் பார்த்து, சுரேஷ் பூசியாவின் மனைவி டிரைகிளீன் கடைக்குப் போகச் சொல்லி கத்துவாள்.

t.me/tamilbooksworld

அந்த வீட்டு மான்குட்டி பிங்க்கி பூசியாவுக்காகப் போட்ட சபதத்தில் ஜெயிப்பதற்காக இதையெல்லாம் பொறுத்துக் கொண்டேன். கல்லூரிக்குப் போய் வருவது, அச்சுபிச்சென்று சில தோழிகளை வீட்டுக்கு அழைத்து வருவது, காது ஜவ்வு கந்தலாகிற அளவுக்கு தன் அறையில் சத்தமாகப் பாட்டுப் போட்டுவிட்டு... அந்தத் தோழிகளுடன் டான்ஸ் ஆடுவது என்று பிங்க்கி பூசியா தனி உலகத்தில் இருந்தாள்.

'என்னடா இது... வீட்டுக்குள் துறுதுறுவென்று ஒரு வேலைக்காரப் பையன் புதுசாக சுற்றி வருகிறானே... யார் இவன்' என்று என் பக்கம் ஒரு பார்வையாவது வீசவேண்டுமே... ஊஹ¨ம்! நான் இருந்த திசைப் பக்கம்கூட அவள் திரும்பிப் பார்த்ததில்லை.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

செல்போன்களைப் பற்றிய என்னுடைய டீப்பான அறிவையும், நேஷனல் பாலிடிக்ஸ் பற்றி எனக்குள்ள தெளிவையும் சமயம் வாய்க்கிற போதெல்லாம் நைஸாக அவளிடம் அவிழ்த்துவிட்டு, இம்ப்ரெஸ் பண்ணப் பார்த்தேன். அதற்கும் அசைகிற ஆளாகத் தெரிய வில்லை அவள். ஒரு வேலைக்காரனை வைக்கிற தூரத்திலேயே என்னை வைத்திருந்தாள். அந்த வீட்டிலிருந்த மற்றவர்கள் மாதிரி அதட்டி உருட்ட மாட்டாள் என்பதுதான் ஒரே ஆறுதல்.

www.t.me/tamilbooksworld

ஆக்ஷன் மேனாகவே இருந்து பழக்கப்பட்ட எனக்கு அந்த வீட்டில் வேலை செய்வது ரொம்ப போரடிக்க ஆரம்பித்துவிட்டது. ஜக்குவுக்கு ஆயிரம் ரூபாய் கொடுத்து தோல்வியை ஒப்புக்கொண்டு, செல்போன் திருடி விற்கிற வேலையை மறுபடி பார்க்க வேண்டியதுதான் என்று நான் முடிவு செய்த சமயம்தான், ஒரு பெரிய மேட்டர் நடந்துவிட்டது.

இந்த ஆஷா இருக்காளில்லையா... அதான், தினேஷ் பூசியாவின் மனைவி... வீட்டுக்குள் எல்லோரும் அவரவர் அறைகளில் கண் அசந்திருந்த ஒருமதிய நேரத்தில் எனக்குள் நெருப்பைப்பற்ற வைத்து விட்டாள். இஸ்திரி போட்டு வந்திருந்த டிரெஸ்களைக் கொடுப்பதற்காக அவள் அறைக்குள் நான் போக... என் சட்டைக்காலரைப் பிடித்து

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

இழுத்து, மூச்சுத் திணறக் கட்டிப் பிடித்து, கண்டமேனிக்கு முத்தம் கொடுக்க ஆரம்பித்துவிட்டாள்.

இதான் சார் இப்போது நான் கார் ஷெட்டில் துளித் துளியாக உயிர் விடக் காரணம்!

இந்த உலகத்திலேயே பாவமான ஜென்மங்கள் என்றால், அது வீட்டு வேலை செய்கிற ஆட்களாகத்தான் இருக்கும். பணக்கார வீடுகளில் எப்படியெல்லாம் பயன்படுத்திக்கொண்டு, எவ்வளவெல்லாம் அவமானப் படுத்துகிறார்கள் என்று முழுசாகத் தெரிந்தால், உங்களுக்கு ரத்தக் கண்ணீரே வந்துவிடும். உழைப்புக்கு ஏற்ற ஊதியமோ... மரியாதையோ கிடைக்காதபோது, வேலை செய்கிற அந்த வீட்டின் உள் அந்தரங்கத்தைக் கவனிப்பதுதான் அவர்களுக்கு ஒரே ஆறுதலாக இருக்கும். வாயில் புல்லைக் கொடுத்தால் மெல்லுவதற்கு யோசிக்கிற சாதுவான பசு மாடு மாதிரிதான் அவர்கள் முகம் இருக்கும். ஆனால், சகலத்தையும் நோட்டம் விடுவார்கள். அந்த வீட்டு எஜமானரின் குடும்பம் மொத்தமும் உட்கார்ந்து டி.வி-யில் சீரியல் பார்க்கும்போது, வேலைக்காரி மட்டும் அந்தக் குடும்பத்து உறுப்பினர்களின் அசைவுகளை சுவாரஸ்யமாக நோட்ட மிடுவாள். அந்தக் குடும்பத்தில் யாருக்கெல்லாம்... எவரிடமிருந்தெல்லாம் போன் வரும், எந்தெந்த போன் வந்தால் அவர்கள் எப்படி நடந்துகொள்வார்கள் என்பதெல்லாம்கூட வேலைக்காரிக்கு அத்துப்படியாகி இருக்கும்.

www.t.me/tamilbooksworld

எஜமானரின் வியாபாரம் சுத்தமாகப்படுத்து, அவர் திவால் நோட்டீஸ் கொடுக்கப் போகிறார் என்பது எஜமானியம்மாவுக்கு முன்பாகவே ஒரு வேலைக்காரனுக்குத் தெரிந்துவிடும். அந்த வீட்டின் செல்லப் பெண் சீக்கிரமே ஒரு ரகசிய அபார்ஷனுக்குத் தயாராக வேண்டி வரும் என்பதை, கண்ணைக்கூட நிமிர்த்தாமல் வீடு பெருக்கும் ஒரு

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

வேலைக்காரியால் சொல்லிவிட முடியும். கடைசி வரை அந்தப் பெண்ணின் அம்மாவுக்கு அது தெரியவே தெரியாது!

வேலைக்காரர்களின் மனசு கொந்தளித்தால் அவர்கள் எப்படி பழி தீர்ப்பார்கள் என்பதற்கு டெல்லிப் பட்டணத்தில் நிறைய உதாரணங்கள் உண்டு. பிள்ளைகளை வெளிநாட்டு வேலைக்கு அனுப்பிவிட்டு இங்கே தனியாக இருக்கிற வயசான ஆட்கள் கழுத்து அறுபட்டு செத்துக் கிடக்கிற செய்திகளை நீங்களும் படித்திருப்பீர்கள்.. அந்த வீட்டு பீகாரி சமையல்காரனோ, நேபாளி டிரைவரோ கைதாவதையும் பார்த்திருப்பீர்களே..!

இப்படித்தான் பூசியா சகோதரர்களின் டார்ச்சர்களுக்கு நான் பழி வாங்க முடிவு செய்தேன். உதாரணமாக, ஊருக்கெல்லாம் கலப்பட சரக்கு சப்ளை செய்து லட்ச லட்சமாகக் குவிக்கிற சுரேஷ் பூசியாவுக்கு, அவன்

www.t.me/tamilbooksworld

சாப்பிடுகிற ஆலூ பரோட்டாவில் நான் எச்சில் துப்பி வைத்திருக்கிறேன் என்பது தெரியவே தெரியாது. கிழட்டு அப்பா பூசியாவுக்கு கண்ணும், காதும் மட்டுமின்றி... வாசனை பிடிக்கிற சக்தியும் பாதிக்கு மேல் மங்கி விட்டது. எனக்கு அதானே வேண்டும்!. மிளகு போட்டு சுடச்சுட வெஜிடபிள் சூப் கொண்டு வரச் சொல்லுவார்... நான் சமையலறையிலிருந்து அப்படியே தோட்டத்துப் பக்கம் ஒரு நடை போய், காக்காய் எச்சத்தை எடுத்து கலந்து கொண்டு வந்து தருவேன். அதைக் குடிக்கிற அவரைவிட, பார்த்துக் கொண்டிருக்கிற எனக்குதான் அதிக ஆனந்தம்.

''டேய் முன்னா... போய் இன்னும் கொஞ்சம் சூப் கொண்டா...'' என்று தாத்தா சப்பு கொட்டிச் சொல்லும்போது, மறைவாகப் போய் வயிறு நோகச் சிரிப்பேன்.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*இதெல்லாம் ஜுஜுபி... எனக்கான பேரானந்தமே தினேஷ் பூசியாவைப் பழி வாங்குவதில்தான் கிடைத்தது. அவன் மனைவி ஆஷா, என்னோடு படுக்கையில் விழ ஆரம்பித்த ஒருசில நாட்களிலேயே ஒரு பெரிய உண்மையைச் சொல்லிவிட்டாள். அவள் புருஷன் தினேஷ் பூசியா பேசுவது, நடந்துகொள்வதெல்லாம்தான் பெரிய புல்டாக் மாதிரி இருக்குமே தவிர, படுக்கையில் அவன் எலிக்குஞ்சை விட மோசமாம்.*

*''உனக்குத் தெரியுமா முன்னா! அந்தாளு ஃபிலிம் இல்லாத கேமரா'' என்று சொல்லி கெக்கலி கொட்டிச் சிரித்தாள் அவன் தர்ம பத்தினி.*

*ரெண்டு மாசம் நான் தினேஷ் பூசியாவுக்கு அவன் படுக்கையிலேயே 'ப்ராக்ஸி' போட்டுக் கொண்டிருந் தேன். எல்லாமே வெகுதூரத்தில் உள்ள தனது செங்கல் சூளையை மேற்பார்வையிட தினேஷ் பூசியா வெளியே போகும் நேரத்தில். பெரும்பாலும், மேட்னி ஷோ! இதில் கரும்புக்கான கூலி வேறு. கஞ்சப் பிசினாறிக் குடும்பத்தின் அந்த மூத்த மருமகள் எனக்கு அவ்வப்போது காசும் கொடுக்க ஆரம்பித்தாள்.*

www.t.me/tamilbooksworld

*இன்றைக்கு மத்தியானம்கூட, தினேஷ் பூசியாவின் படுக்கையில் அவன் பொண்டாட்டியோடு நான் இருந்தேன். சினிமாக்களில் காட்டுவார்களே... அச்சு அசலாக அதே மாதிரிதான் இதுவும் நடந்தது.*

*போன வேலை பாதியில் முடிந்து கணவன் திடீரென்று வீட்டுக்கு வந்துவிடுவான். உள்ளே வந்து கதவைத் திறப்பான். அன்றைக்கென்று பார்த்து அந்த கதவு தாழிட்டிருக்காது. படுக்கையில் தன் பொண் டாட்டியை இன்னொருத்தனோடு பார்த்ததுமே சிலையாகி நிற்பான். அதிர்ச்சியில் அவன் வாய் பிளந்துகொள்ளும்.*

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

''அடித் தே....!''

தினேஷ் பூசியா கிறீச்சிட்ட அதேசமயம்... நான் படுக்கையிலிருந்து பாய்ந்து எழுந்து என் துணிகளையெல்லாம் சுருட்டி எடுத்துக்கொண்டு, டாய் லெட்டுக்குள் போய் உள்பக்கம் கதவைத் தாழிட்டேன். ஆஷாவுக்கு செமத்தியாக உதை விழுவதையும், கூட்டுக் குடும்பத்து வீட்டுக்குள் அவள் அதிக சத்தம் போடாமல் வலியில் கதறுவதையும் கேட்க முடிந்தது. நாலைந்து நிமிடம் கழித்து பாத்ரூம் கதவை யானை மாதிரி உதைத்தான் தினேஷ் பூசியா. திறக்காமல் என்ன செய்ய? வெளியே வந்தால், கையில் மின்னுகிற ரிவால்வரோடு நிற்கிறான்! இன்னொரு கையில் அந்த எலி பாஷாண பாட்டில்!

''எச்சில் தட்டுல திங்குற வேலைக்கார நாயே! உனக்கு என் வீட்டு தங்கத் தட்டு கேக்குதா? உன்னை என்ன செய்யணும்னு எனக்குத் தெரியும்டா!'' என்றபடி என்னை வெளியே இழுத்துப் போட்டவன், கழுத்தைப் பிடித்துத் தள்ளினான். தரைத் தளத்தில், கார் ஷெட்டுக்குள் என்னை துப்பாக்கி முனையால் அழுத்தி தள்ளிக்கொண்டே வந்தான். சாவதற்கான சாய்ஸை என்னிடமே கொடுத்தான். எலி பாஷாண பாட்டிலை வாயில் திணித்தான்.

www.t.me/tamilbooksworld

இதான்... இப்படித்தான் நான் செத்துக் கொண் டிருப்பது! அநேகமாக, என் சாவு போலீஸின் ரெக்கார்டுகளில் தற்கொலையாகப் பதிவாகும்.

நான் கார் ஷெட்டைச் சுற்றிலும் கண்களை ஓட்டினேன். அங்கே வரிசையாக அடுக்கப்பட்டிருந்த மூட்டைகளைப் பார்த்தேன். எல்லாமே சுரேஷ் பூசியாவின் கைங்கரியத்தில் தயாரான கலப்பட சமாசாரங்கள். அவன் கடையில் விற்க விற்க... இங்கிருந்து ஸ்டோருக்குப் போகும்.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

அம்மா நினைப்பும் என்மேல் உயிரையே வைத்திருக்கும் சம்ப்பி நினைப்பும் வந்தது எனக்கு. அதை உதறித் தள்ள முயன்றேன்.

தினேஷ் பூசியா தன் கைக்கடிகாரத்தைக் கவலை யாகப் பார்க்கிறான். பிறகு என்னைப் பார்க்கிறான். பாட்டிலின் மொத்த விஷமும் என் வயிற்றுக்குள் போய் இருபது நிமிடங்களுக்கு மேலாகிவிட்டிருந்தது. இந்நேரம் அது முழுசாக தன் வேலையை முடித்திருக்க வேண்டும். உடம்பு இறுகி, இதயம் நிற்பதற்கு பதிலாக... கோலி சோடா குடித்த மாதிரி வயிறு கடமுடாவென்று இரைய ஆரம்பித்திருந்தது. உள்ளுக்குள் ஏதோ பிரஷர் கிளம்புகிற மாதிரி இருந்தது. திடீரென்று ஜெட் ஏரோப்ளேன் மாதிரி சீறிக்கொண்டு பீய்ச்சி அடித்து, தினேஷ் பூசியாவின் முகத்தையும் வெள்ளைச் சட்டையையும் மொத்தமாக நனைத்தது என் வயிற்றுத் திரவம்!

www.t.me/tamilbooksworld

முகம் சுளித்து, தட்டுத் தடுமாறி பின்வாங்குகிறான் அவன். கையிலிருக்கிற ரிவால்வர் நழுவிக் கீழே விழுகிறது. கொசு அடிக்கிற நேரத்தில் செல்போனை அடித்துவிடுகிற இந்த முன்னாவுக்கு அந்த சொற்ப நொடிகள் போதாதா? சட்டென்று எழுந்து நிற்கிறேன். கீழே கிடந்த துப்பாக்கியை எட்டி தூரே உதைக்கிறேன். வில்லாகப் புறப்பட்டு ஓட ஆரம்பிக்கிறேன்.

- தொடர்ந்து சந்தேகிப்போம்...

Copyright © Vikas Swarup 2008

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

## மோட்டிவ் 6

விகாஸ் ஸ்வரூப்

தமிழில்: அஞ்சனாதேவ்

### ஓ, என் நண்பனே!

உயிர் பயம் மாதிரி உத்தமமான வேறு சக்தி இல்லை. ஒரு ஒலிம்பிக் வீரன்கூட என் அப்போதைய வேகத் துக்கு ஓடி இருக்க முடியாது. தினேஷ் பூசியாவின் துப்பாக்கியில் இருந்து தப்பி, சிவன் கோயிலை

நெருங்கினேன். என் வீடு இருக்கும் ஏரியா வுக்குள் போனதுமே சற்று நின்று மூச்சு வாங்குகிறேன். தினேஷ் பூசியா துரத்தி வருகிறானா என்று திரும்பிப் பார்க்கிறேன்.

www.t.me/tamilbooksworld

அத்தனை கிட்டத்தில் சாவு வந்து கண் சிமிட்டி யதைப் பார்த்த பிறகு, இப்போது நான் உயிரோடு இருக்கிறேன் என்பதை என்னால் நம்பவே முடியவில்லை! அப்படியானால், என்னைத் தழுவிக்கொள்ள வந்த சாவு போலிதானா? சுரேஷ் பூசியா ஸ்டோரில் இருந்து அவன் அண்ணன் கொண்டுவந்து வீட்டில் வைத்திருந்த எலி பாஷாணம் மாதிரியே என் அருகில் வந்த சாவும் வீரியம் இல்லாத கலப்பட சரக்குதானா?

அதோ... குல்மொஹர் மரத்துக்குக் கீழே தன் வழக்கமான இடத்தில் சம்ப்பி உட்கார்ந்திருக்கிறாள். அவள் மேல் விழுந்து அப்படியே இறுகக் கட்டிக் கொள்கிறேன்.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

''ஏய்... என்னாச்சு? லாட்டரியில் கோடிக்கணக்கா பிரைஸ் அடிச்சிருச்சா?'' என்று சிரித்தாள்.

www.t.me/tamilbooksworld

''அப்படித்தான் வெச்சுக்கயேன்!'' என்று மூச்சு வாங்கினேன். ''இன்னிக்கு நான் ரெண்டு விஷயம் முடிவு பண்ணிட்டேன் சம்ப்பி!''

''என்னது?''

''இனிமே எவனுக்குக் கீழேயும் வேலைக்காரனா இருக்க மாட்டேன்!''

''நல்லது! இன்னொண்ணு?''

''என் பழைய தொழிலுக்கே... மொபைல் திருடுற வேலைக்கே திரும்பப் போறேன். ஆனா, தயவு செஞ்சு அம்மாகிட்டே சொல்லாதே!''

ஒரு காலத்தில் என் பேரைவிடவும், எனக்கு அந்த ஏரியா ஜனங்கள் வைத்த பட்டப்பெயரை ரொம்ப ரொம்பப் பிடிக்கும். 'மொபைல் முன்னா'

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

அப்படினு சொன்னா, எங்க ஏரியா பொண்ணுங்க அத்தனை பேருக்கும் தெரியும். வெறும் முன்னா அப்படின்னு சொன்னா, ஏதோ டீக்கடையில் வேலை செய்யற பையன் மாதிரியோ, மெக்கானிக் ஷாப்பில் ஸ்பேனர் திருப்புற பையன் மாதிரியோ தோணும். ஆனா, 'மொபைல் முன்னா' என்கிற பேரைச் சொல்லும்போதே ஜில்லுனு ஒரு 'ரிங்' அடிக்குதா!

நாலு வருஷத்துக்கு முன்னால் தற்செயலாகத்தான் இந்தத் தொழிலுக்குள் வந்தேன். நான் அடித்த முதல் செல்போனும், அதை என்னிடம் பறிகொடுத்த பெண்மணியும்கூட சூப்பரா நினைவிருக்கு. சிவன் கோயில் வாசலில் தன் வெள்ளை நிற ஓபல் ஆஸ்ட்ரா காரை நிறுத்திவிட்டு, தேகம் குலுங்கப் பிரார்த்தனைக்கு ஓடினாள் அந்த செக்கச் செவேல் குண்டுப் பெண்மணி. வணங்கப்போவது கடவுளாக இருந்தாலும், பதற்றத்திலும் அவசரத்திலும் இருந்தால் நல்லது நடக்கும் என்று உத்தரவாதம் இல்லை. காரின் கதவைப் பூட்டாமல், டேஷ் போர்டில் 'பிராண்ட் நியூ' சோனி எரிக்ஸன் மொபைலை மறந்து வைத்துவிட்டுப் போனாள் அந்த குண்டு. திரும்பி வந்து பார்த்தபோது செல்போன் இல்லை என்றதும் கொஞ்ச நேரம் முழித்துவிட்டு, பிறகு கிளம்பிவிட்டாள்.

www.t.me/tamilbooksworld

பக்கத்திலேயே இருந்த மொபைல் ஷாப்பின் ஓனர் மதனிடம் அந்த செல்போனைக் கொண்டுபோய் விற்றேன். 200 ரூபாய் கொடுத்தான். அதுவரைக்கும் நான் பார்த்துக்கொண்டு இருந்த செருப்பு திருடும் தொழிலில் கிடைப்பதைவிட 10 மடங்குப் பணம் இது. செல்போனை அடித்து ரவுண்டாக 200 ரூபாய் கிடைத்ததுமே என் மூளை அதி தீவிரமாக யோசிக்க ஆரம்பித்தது. அடுத்தடுத்து விளையாட ஆரம்பித்தேன். சிம் கார்டு, மெமரி கார்டு, ஹெட் செட் என்பதெல்லாம் அதற்குப் பிறகு எனக்கு அத்துப்படி ஆகிவிட்டது. நோக்கியா, மோட்டோ ரோலா என்று

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

சாதாரணமாக என் கையில் புழங்கின. வந்த வேகத்திலேயே விற்பனைக்குப் போயின.

மொபைல் திருடுவது செருப்பு விவகாரம் மாதிரி இல்லை. இதற்கு கூடுதல் கைப் பக்குவமும், பக்காவான மற்றொரு ஆள் துணையும் தேவை என்பதை போகப் போக உணர்ந்தேன். என் பால்ய நண்பன் லல்லான் இதற்குத் தோதாக இருப்பான் என்று அவனையும் கூட்டாளியாகச் சேர்த்துக்கொண்டேன்.

பிஸியான சிக்னல்களில் நடைபாதை ஓரம் ஒருத்தருக்கொருத்தர் சம்பந்தம் இல்லாத மாதிரி நாங்கள் நிற்போம். கண்ணாடியை இறக்கிவிட்டிருக்கிற கார்தான் எங்கள் குறி. அதில் டேஷ் போர்டில் செல்போன் வைத்திருந்தால் முடிஞ்சேபோச்சு. சிக்னலில் ஆரஞ்சு விழுகிற சமயம் அந்தக் காரை நோக்கி நடக்க ஆரம்பிப்போம். பச்சை விழுந்து உறுமிக்கொண்டு வண்டிகள் சீறிப் பாய்கிற சமயம், ஒரு மேஜிக் போல என் கைகள் நீண்டு மொபைலைக் கவ்விவிடும். காரில் இருப்பவர்கள் கண்டுகொண்டாலும் காணாவிட்டாலும் நொடி நேரத்தில் அதை லல்லானின் கைகளுக்கு மாற்றிவிட்டு, பதறாமல் நடந்து போய் ஜனத்திரளில் கலந்துவிடுவேன்.

www.t.me/tamilbooksworld

லல்லான் எங்கள் குடியிருப்பு அருகே இருக்கும் குறுக்கு சந்தில் எனக்காக தயாராகக் காத்திருப்பான். நான் போய் அவனுடன் சேர்ந்துகொள்வேன். ஒரே கடை என்று வைத்துக்கொள்ளாமல் நகரின் வெவ் வேறு கடைகளுக்குத்தான் மொபைல்களை நாங்கள் விற்போம்.

மூன்று வருட காலம் தொடர்ச்சியாக நாங்கள் அடித்த செல்போன்களின் முழு ரெகார்டும் என் மனதில் அப்படியே பதிந்திருக்கிறது. கரெக்டாக 99 மொபைல்களை லாவினோம். கலர் கலராக

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*டிரெஸ்கள், தினுசு தினுசாக ஷ¨க்கள் என்று செம மஜாதான். பெர்ஃப்யூம்கூட போட ஆரம்பித்துவிட்டேன். இதைவிட முக்கியமாக, ஹோட்டல் - சினிமா என்று என்னோடு சுற்றுவதற்கு எங்க ஏரியா பெண்கள் போட்டி போட்டார்கள். சேல்ஸ் ரெப் என்றோ, கம்ப்யூட்டர் கம்பெனியில் இருக்கிறேன் என்றோ அவர்களிடம் நான் டாவு காட்டவில்லை. நான் எப்படி யெல்லாம் மொபைல் போன்களை அடிக் கிறேன் என்பதைக் கேட்பதில் தனி த்ரில் அந்தப் பெண்களுக்கு!*

*சில பெண்கள் 'சிறப்பாக' ஒத்துழைக்க வேண்டு மானால், செல்போன் பரிசு கொடுக்க வேண்டி வந்தது. மோட்டோரோலா கொடுத்தால்... மேல் சட்டையில் கை வைக்க முடிந்தது. நோக்கியா 'என்' சீரிஸ் என்றால்... போங்க சார்... இதெல்லாமா விளக்கமாகச் சொல்ல முடியும்!*

www.t.me/tamilbooksworld

*வீட்டு வேலை செய்வது, பால் பாக்கெட் போடுவது, புருஷன் - பொண்டாட்டி வேலைக்குப் போகிற வீடுகளில் குழந்தைகளைப் பார்த்துக்கொள்வது இப்படித்தான் நாலு காசு சம்பாதிப்பார்கள் எங்க ஏரியா பெண்கள். அந்த நேரத்து ஆசைக்கு அவர்கள் எனக்குப் போதுமாக இருந்தார்கள். ஆனால், பள்ளிக்கும் கல்லூரிக்கும் கார்களில் வந்து இறங்குகிற தளதளப்பான பணக்காரப் பெண்கள்தான் என கனவின் உச்சத்தில் இருந்தார்கள். ஹோட்டல்களிலும், சினிமா தியேட்டர்களிலும் வெளியே நின்று பார்த்துக்கொண்டே இருப்பேன். விலை கூடும்போது ஷேப்பும் அழகும் கூடுகிற செல்போன் மாதிரியேதான் பெண்களையும் கடவுள் படைத்திருப்பதாக நினைத்துக்கொள்வேன். அது எப்படித்தான் இந்த பணக்காரப் பெண்களுக்கு ஆண்டவன் அப்படி ஒரு பளபளப்பும் மென்மையும் கொடுக்கிறானோ!*

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

அது கிடக்கட்டும்... என் 99-வது செல்போனை அடித்த இடத்துக்கு வருவோம்.

அன்றைக்கு நானும் என் திருட்டுக் கூட்டாளி லல்லானும் குதுப்மினார் அருகில் மெர்சிடிஸ் பென்ஸ் காரில் இருந்து சாம்சங் போனை அடித் தோம். வழக்கம்போல போனை அவனிடம் கைமாற்றிவிட்டு நான் 'எஸ்'ஸாகிவிட்டேன். வழக்கமான சந்துக்கு வந்து வெகுநேரம் காத்திருந்தும் லல்லானைக் காணோம். அப்புறம்தான் தெரிந்தது, குதுப்மினார் ஏரியா கடைக்காரர்கள் சிலர் அவனை போனும் கையுமாக போலீஸில் பிடித்துக் கொடுத்துவிட்டார்கள் என்று.

மெஹ்ரூலி ஏரியா ஸ்டேஷனில் இருந்த விஜயசிங் யாதவ் என்ற சப்-இன்ஸ் பெக்டர்தான் லல்லானை விசாரிக்க ஆரம்பித்தான். ஏரியா கிரிமினல்கள் அவனை 'கசாப்புக்காரன்' என்றுதான் சொல்வார்கள். அப்படி இருக்கும் அவனுடைய சித்ரவதை விசாரணை. வேறு ஒருத்தனாக இருந்தால், அந்த கசாப்பு சப்-இன்ஸ்பெக்டரின் டார்ச் சரில் கட்டாயம் கூட்டாளியைக் காட்டிக் கொடுத்திருப்பான். ஆனால், லல்லான் கடைசி வரை என்னைப்பற்றி மூச்சுகூட விடவில்லை.

www.t.me/tamilbooksworld

போலீஸ் ஸ்டேஷனில் பிறகு என்ன நடந்தது என்பதை இன்று நினைத் தாலும்... அது என் தூக்கத்தைக் கெடுக் கிற பயங்கரம். லாக்-அப்பில் அவனைத் துணி இல்லாமல் போட்டு, லத்தியாலும் இரும்புக் கம்பியாலும் அடி அடியென்று அடித்து... மூன்று நாளைக்கு சாப்பாடு கொடுக்காமல், தூங்கவிடாமல் விசாரித்து இருக்கிறார்கள். அந்த ஏரியா போலீஸ் ஸ்டேஷனில் வரிசையாகப் பதிவாகி இருந்த செல்போன் திருட்டு புகார்களையெல்லாம் கையில் எடுத்து வைத்துக்கொண்டு உதைத்திருக்கிறான் சப்-இன்ஸ்பெக்டர். நாலாம் நாள் ஸ்டேஷனில் லல்லான் இல்லை. அவனை ரிலீஸ் பண்ணி அனுப்பிவிட்டதாக போலீஸ்

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

சொன்னது. நாங்களோ லோக்கல் கார்ப்பரேஷன் ஆஸ்பத்திரி தொடங்கி 'எய்ம்ஸ்' ஆஸ்பத்திரி வரை எல்லா இடங்களிலும் போய்த் தேடிப் பார்த்துவிட்டோம். லல்லான் போன இடம் தெரியவில்லை.

மூன்று நாள் தேடி ஓய்ந்தபோது... அந்தேரியா பாக் ஏரியாவில் ஓடுகிற ராட்சத சாக்கடை நதியில் ஊதிப் பெருத்துப்போன நிலையில் லல்லான் உடம்பை நாங்கள் கண்டெடுத்தோம். காயத்தில் பிளந்த மார்பு பகுதியில் ஈக்கள் மொய்க்க, கிழிந்து சீழ் வடிந்த அவன் கண்களின் ஓரம் புழுக்கள் நெளிந்தன. தெருநாய்க்குக்கூட வாய்க்கக் கூடாத கேவலமான மரணம்!

லல்லான் மரணம் எனக்கு எச்சரிக்கை மணி. ஒரு நாள் என்சாவும் இப்படி அமையலாம் என்று மனசு அலறியது. வேறு ஏதாவது வேலை செய்து பிழைத்துக்கொள்வதாக எனக்குள் சபதம் எடுத்தேன்.

www.t.me/tamilbooksworld

ஆனாலும், டிகிரி படிப்பெல்லாம் வசதியான வீட்டுப் பிள்ளைகளுக்குத்தான் வேலை வாங்கித் தரும். சிபாரிசோ, லஞ்சப் பணமோ இருந்திருந்தால், நானும் ஏதாவது ஒரு ஏர்கண்டிஷன் ஆபீஸில் கிளார்க்காக போய் உட்கார்ந்திருப்பேன். அல்லது, சர்க்கார் ஆபீஸில் ஒரு பியூன் வேலைக்காவது சேர்ந்திருப்பேன். வேலை தேடுபவன் கையில் காசே இல்லாத ஒரு முன்னாள் திருடனாக இருக்கும்போது வேலைகளுக்கான வாய்ப்பு அநியாயத் துக்கும் குறுகிவிடுகிறது.

இப்படியாகத்தான், மளிகைக் கடையில் கணக்கு எழுதி கொஞ்ச காலம்... ஒரு லாரி டிரான்ஸ்போர்ட் கம்பெனியில் சூபர்வைஸராக கொஞ்ச காலம் இருந்துவிட்டு... பெண்ணாசையில் மதிகெட்டுப் பந்தயம் கட்டி, பூசியா வீட்டில் வேலைக்காரனாகச் சேர்ந்தேன். அந்த வீட்டுப் பெரிய மருமகள் என் சட்டை காலரைப் பிடித்து படுக்கைக்கு இழுத்ததால்,

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*கலப்பட எலி விஷத்தைக் குடித்துவிட்டு... கடைசி வாய்ப்பாக உயிர் பிழைத்து இப்போது மூச்சு வாங்க ஓடி வந்து என் வீட்டின் அருகேநிற்கிறேன்.*

*ஆமாம் சார்... இன்றைக்கு சாவின் வாயில் இருந்து தப்பி வந்திருப்பது இன்னொரு ஜென்மம். எப்படி இருந்தாலும், லல்லான் மாதிரியோ, இயற்கையாகவோ நானும் ஒருநாள் சாகத்தான் போகிறேன். எதற்காக பயந்து நடுங்க வேண்டும்? அதான், மறுபடி மொபைல் திருட்டையே கையில் எடுக்க முடிவு பண்ணிவிட்டேன். பிங்க்கியாவது... பூசியாவாவது! அவள் திசைக்கே ஒரு கும்பிடு. அப்பப்போ ஆசை கிளம்புகிற போது என் ஏரியா குஜிலிகளே போதும் என்று முடிவெடுத்துவிட்டேன்.*

*ஆனால், விதிக்கு என்னோடு நிறையவே விளையாட ஆசைபோல! 2,000 ரூபாய் கிடைத்தாலே செம குஷியாகிற என்னைத் தேடி கட்டு கட்டாக நோட்டு வந்தது!*

www.t.me/tamilbooksworld

- தொடர்ந்து சந்தேகிப்போம்...

Copyright © Vikas Swarup 2008

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

## மோட்டிவ் 6

விகாஸ் ஸ்வரூப்

தமிழில்: அஞ்சனாதேவ்

### கட்டுக் கட்டா நோட்டிருந்தால்..!

அன்றைக்கு ஜனவரி 26... இந்தியத் திருநாடு குடியரசாக மாறிய நாள். மறுபடி மொபைல் திருட்டுத் தொழிலுக்கு அன்றுதான் பூஜை போட்டேன்.

www.t.me/tamilbooksworld

டெல்லி, மெஹ்ரூலியில் ஒரு பெட்ரோல் பங்க்கின் பின்னால் படபடப்போடு அந்த மொபைலை பாக்கெட்டில் மறைத்துக் கொண்டு நிற்கிறேன். இது என் கைக்கு வந்திருக்கும் 100-வது மொபைல்!

பனிக் காலத்தின் சாயங்காலம் என்பதால், சில அடிகள் தள்ளி இருப்பதே மங்கலாகத்தான் தெரிந்தது. சோடியம் வேப்பர் லைட்டுகளின் வெளிச்சத்தில் டெல்லியின் அந்த அகல சாலை மஞ்சள் குளித்துக்கொண்டு இருந்தது. அரை மணி நேரத்துக்கு முன்புதான் ரோட்டோரம் பிளாட்பாரத்தில் வந்து நின்றேன். டியூப் லைட் பக்கத்தில் பூச்சி பிடிக்கக் காத்திருக்கிற பல்லியாக அசைவில்லாமல் காத்திருந்தேன். சிக்னலில் ரெட் விழவும், பேய் வேகத்தில் வந்த அந்த மாருதி எஸ்டீம் என்னை உரசினாற்போல் கிரீச்சிட்டு நின்றது.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

காரினுள் பார்த்தேன். சுருள் முடியோடு, தடிமனாக ஒரு ஆள். ஜேம்ஸ்பாண்ட் படத்தில் வருகிற வில்லன்களை நினைவூட்டுகிற மாதிரி சதுர முகம்.. ரொம்ப சீரியஸாக ரோட்டையே பார்த்துக் கொண்டு இருந்தான். ஸ்டீயரிங்கைப் பிடுங்கி எடுத்துவிடுவதுபோல் ரொம்ப இறுக்கமாகப் பிடித்திருந்தான். அந்தக் குளிர் காலத்திலும், மழையில் நனைந்த வெள்ளைப் பன்றி மாதிரி மொத்தமாக வியர்த்திருந்தான்.

முன்பக்கம் காலியாக இருந்த இடது ஸீட்டுக்கு எதிரே, டேஷ்போர்டு மீது பளபளத்த மொபைல் போனைப் பார்த் ததுமே எனக்குள் இருந்த பல்லி நாக்கைச் சுழற்றியது. பச்சை விழுந்து கார் நகர ஆரம்பித்தது. ஒரு தோட்டா வின் வேகத்தோடு காரினுள் பாய்ந்த என் கை, அதைவிட வேகமாக இரையைக் கொத்திக் கொண்டு வெளியே வந்துவிட்டது. கார் போயே போய்விட்டது!

அது 'இ' சீரிஸில் லேட்டஸ்ட் மாடல் நோக்கியா. ரொம்ப நாள் கழித்து ரெண்டு ஜதை ஜீன்ஸும் டி ஷர்ட்டும் வாங்கித் தரப் போகிற நோக்கியா. மூச்சு முட்ட பீர் குடித்து, அருமையான சிக்கன் பிரியாணியோடு நான் சினிமா பார்க்கக் கை கொடுக்கப் போகிற நோக்கியா.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*மாருதி எஸ்டீமுக்குப் பக்கத்தில் இருந்த ஃபோர்ட் ஐகான் காரை ஓட்டி வந்த ஒரு பெண்மணி என் செயலைப் பார்த்திருக்கலாம். அவள் வண்டியை நகர்த்தும் முன் என்னை ஒரு கணம் முறைக்கிற மாதிரி தெரிந்தது. மாருதி எஸ்டீம்காரனை விரட்டிப் போய் மடக்கி அலர்ட் பண்ணாலும் பண்ணுவாள். நான் அங்கே இருந்து சட்டென்று அகன்று, வெகுதூரம் இருட்டு சாலைகளில் ஊடுருவி இந்த பெட்ரோல் பங்க்கின் பின்னால் வந்து நின்றுகொண்டேன்.*

*வெயிட்! ஒரு நிமிஷம் இருங்கள்... இந்த மொபைல் ரிங் அடிக்கிறது!*

*'பிரைவேட் நம்பர்' என்று காட்டுகிறதே! ஏதோ யோசனையில் சட்டென்று 'யெஸ்' பட்டனை அழுத்தி காதில் வைத்து விட்டேன்.*

www.t.me/tamilbooksworld

*''ஹலோ, பிரிஜேஷ்..! 'மால்' எங்கே எடுத்துக்கணும்னு இடத்தைச் சொல்றேன்... கேட்டுக்கிறியா?''*

*கட்டையான அதிகாரக் குரல் அது.*

*''ம்!'' என்று மட்டும் சொல்கிறேன் உஷாராக.*

*''ராமோஜி ரோடுக்குப் போ! அங்கே கோயங்கா பப்ளிக் ஸ்கூல் வரும். ஸ்கூல் காம்பவுண்டை ஒட்டி ஒரே ஒரு குப்பைத் தொட்டி இருக்கும். அதுக்குள்ளே கறுப்பு ப்ரீஃப்கேஸைப் போட்டிருக்கேன். அரை மணி நேரத்துக்குள்ளே போய் எடுத்துடு புரியுதா? இல்லாட்டி, எச்சிலைக்காக இழுக்கிற நாயோ, மாடோ அந்த ப்ரீஃப்கேஸை வெளியே இழுத்துப் போட்டுடும்!''*

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

''சரி!'' என்றேன்.

''ரைட்... பெட்டியை எடுத்துக்கிட்டு என்னைக் கூப்பிடு. அதுக்கப்புறம் விஷயத்தைப் பேசிக்கலாம், ரைட்டா?''

பதிலை எதிர்பாராமல் எதிர் லைன் கட் ஆகிறது.

இந்தி சினிமாக்களில் இப்படி ப்ரீஃப்கேஸ் மாற்று வதைப் பார்த்திருக்கிறேன். உள்ளே பணம் இருக்கும்... பதிலுக்குத் தங்கம் கை மாறும். பாலிதீன் கவர்களில் அடைத்த போதைப் பொருள்கூட கை மாறும்! இந்தக் குரல் போனில் சொல்வது என்ன விவகாரம்?

வண்டியில் போனால் ஐந்து நிமிடங்கள்... நடந்தே போனால் இருபது நிமிடங்கள் அந்த ராமோஜி ரோடுக்கு. நான் நடக்கிறேன். பெரிய பெரிய பணக்கார வீட்டுப் பசங்கள் படிக்கிற பள்ளிக்கூடம் அது. காலையிலும் மதியத்திலும் பயங்கர டிராஃபிக் ஜாம் ஆகிற தெரு! இப்போது ராத்திரி எட்டு மணிக்கு அங்கே ஈ - காக்கா காணோம். காம்பவுண்ட் ஓரமே நடந்து சென்று, அந்த குப்பைத் தொட்டியைப் பார்த்துவிட்டேன். விளக்குக் கம்பத்தில் இருந்து சற்றே தள்ளி அரையிருட்டில் இருந்தது. அதன் ஓரமாக ஒரு நாய் படுத்திருக்க... ''ச்சூ!'' என்று விரட்டினேன். காதை விடைத்து என்னை விரோதமாகப் பார்த்துவிட்டு, எழுந்து ஓடியது நாய்.

www.t.me/tamilbooksworld

தகர கேன்கள், பிளாஸ்டிக் பாட்டில்கள், அலுமினிய ஃபாயில்கள் அனைத்தையும் தாண்டி என் கைகள் உள்ளே துழாவின. நாற்றம் பொறுக்கவில்லை. தண்ணியடித்துவிட்டு காலி பாட்டிலையும் மிச்சம் மீதி சைடு டிஷ்ஷையும் எச்சில் இலைகளையும் மொத்தமாக பாலிதீன் கவரில் வைத்து முடிச்சிட்டுப் போட்டிருந்தான் ஒரு முண்டம். எடுத்து வெளியே

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

போட்டுக்கொண்டே இருந்தேன். உடைந்த டிரான்சிஸ்டர், வீட்டு விலக்கு நேரத்து பஞ்சு சமாசாரம்!

அதற்கும் கீழே அது தட்டுப்பட்டுவிட்டது!

சரட்டென்று வெளியே இழுத்தேன். போனில் சொன்ன மாதிரியே கறுப்பு கலர்தான். வி.ஐ.பி. ப்ரீப்கேஸ். ஒரு பெரிய பிளாஸ்டிக் கவருக்குள் வைத்து உள்ளே போட்டிருந்தான். கவரை உரித்துவிட்டு பெட்டியின் இரண்டு பக்க 'லாட்ச்'சையும் திறந்தேன். தலைக்குள் ஹை வோல்ட் கரன்ட் அடித்த மாதிரி இருந்தது. அப்புறம், இதயத்துக்குள் யாரோ பொக்கென்று குத்திய மாதிரி இருந்தது. கடைசியாக, தன்னிலைக்கு நான் வந்தபோது ஐஸ் கிரீமை அள்ளி அள்ளி தலையில் யாரோ தேய்க்கிற மாதிரி இருந்தது.

www.t.me/tamilbooksworld

எல்லாமே 1,000 ரூபாய் நோட்டுகள், அடுக்கடுக்காக! லாட்டரிச் சீட்டு விளம்பரத்தில்தான் அத்தனை கட்டு ரூபாய்களைப் பார்த்திருக்கிறேன். சினிமாக்களில்கூட டம்மி நோட்டுக் கட்டுகள்தான் வைப்பார்களாமே... பட்டென்று ப்ரீஃப்கேஸை மூடிவிட்டு சுற்றுமுற்றும் பார்த்தேன். என்னைக் கவனிப்பதற்கு அங்கே சிங்கிள் ஆத்மாகூட இல்லை என்று உறுதி செய்துகொண்டேன். எடுத்துப் போட்ட குப்பை கச்சடாக்களை மறுபடி அந்த தொட்டிக்குள்ளேயே அள்ளித் திணித்தேன். பதற்றத்தையும் பீறிட்ட சந்தோஷத்தையும் அமுக்கியபடி சந்தேகம் வராதபடி மெதுவாக நடக்க ஆரம்பித்தேன்.

செல்போன் அடித்தது. அதே(?) பிரைவேட் நம்பர்! ஒரு ரவுண்ட் அடித்து முடிகிற வரை காத்திருந்தேன். பின், நடுங்கும் விரல்களால் போனை ஸ்விட்ச் ஆஃப் செய்தேன். பின்னோக்கி நடந்து அந்த குப்பைத்

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

தொட்டிக்குப் போனேன். அந்தக் குப்பைகளுக்கு அடியில் கை நுழைத்து போனைச் செருகினேன்.

இயல்பான வேகத்தில் கறுப்பு பெட்டியோடு நடக்க ஆரம்பித்தேன்!

சந்தேகப் புள்ளி 5...

உள்துறை அமைச்சர் ஜெகன்னாத் ராய்!

''ஹலோ, ஆன்மிக தியானப் பயிற்சி மையமா?''

''ஆமாங்க!''

''மதுரா நகரில் இருக்கே... அதானே?''

www.t.me/tamilbooksworld

''ஆமாம்!''

''ஸ்வாமி ஹரிதாஸ்ஜி இருக்காருங்களா? அவர்கிட்டே பையாஜி அவசரமா பேசணுமாம்.''

''பையாஜியா? யாருங்க அது?''

''ஹலோ பொண்ணு... பயிற்சி மையத்துக்கு நீ புதுசா? ஒட்டுமொத்த உத்தரப் பிரதேசத்துக்கும் 'பையாஜி'ன்னா அது ஒருத்தர்தான். மினிஸ்டர் ஜெகன்னாத் ராய் பேசுறாருனு உங்க ஸ்வாமிஜிகிட்டே சொல்லு!''

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

''ஐயோ, ஸாரிங்க. உள்துறை அமைச்சர் பேசணுமா? ஆனா, இப்ப ஸ்வாமிஜி பிரசங்கம் நடத்திட்டு இருக்காரே.. பாதியிலே போய் அவரைத் தொந்தரவு பண்ணா கோவிச்சுக்குவாரு.''

''தோ பாரு பொண்ணு... நேரா போ! லைன்ல பையாஜி வெயிட் பண்றாருன்னு சொல்லு. ஸ்வாமிஜி கட்டாயம் வருவாரு!''

சில நிமிட அமைதி...

''ஹலோ, ஸ்வாமிஜி இன்னொரு இன்டர்காம்ல வெயிட் பண்றாரு. மினிஸ்டருக்கு லைனைக் கொடுங்க!''

பீப்.. பீப்... பீப்...

www.t.me/tamilbooksworld

''நமஸ்காரம் குருஜி! ஜெகன்னாத் ராய் பேசுறேன்.'

''சம்போ மகாதேவ! பிரசங்கத்துக்கு நடுவே என்னைக் கூப்பிடுகிற அளவுக்கு அப்படி என்ன அவசரம் ஜெகன்னாத் ராய்?''

''கை மீறி சில விஷயம் போய்ட்டிருக்கு குருஜி. அவசரமா உங்க ஆலோசனை தேவை!''

''என்னாச்சு..? ரூபி கில் கொலை கேஸுல உன் மகன் விக்கி ராய்க்கு எதிராத் தீர்ப்பு வந்துடும்னு நினைக்கிறியா..?''

''இல்லீங்க குருஜி! அந்த கேஸை நான் ஒருமாதிரி சரிபண்ணிட்டேன்! நான் கவலைப்படுறது என் மேல் உள்ள கேஸுக்கு.''

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

''உன் மேலே நிறைய கேஸ் இருந்துச்சே... நீ எதைச் சொல்றே?''

''அதான் குருஜி, 2002-ல் ரெஜிஸ்டர் ஆச்சே... அந்த கொலை கேஸ்.''

''யாரைக் கொலை பண்ணே?''

''முகமது முஸ்தகீம் அப்படினு ஒரு உதவாக்கரையை. என்னையே எதிர்த்து நின்னான். அதான் சுட்டேன். எவனுமே எனக்கு எதிரா சாட்சி சொல்ல வரலை. திடீர்னு பார்த்தா, பிரதீப் துபே அப்படினு ஒருத்தன் கிளம்பி இருக்கான். நான் சுடறதை நேரில் பார்த்ததா கோர்ட்டுக்கு வந்து சாட்சி சொல்லப் போறானாம். வர்ற அஞ்சாம் தேதி கேஸ் ஹியரிங் வருது. என்னத்தை சொல்லப் போறானோ? இந்த கேஸ்ல மட்டும் எனக்கு எதிரா தீர்ப்பு வந்திட்டா, அப்புறம் என் பொது வாழ்க்கையே பொங்கல் ஆயிடும் குருஜி. உங்களுக்கே தெரியும்... ஏதாவது சாக்கு வெச்சு என்னை அமைச்சரவையில் இருந்து தூக்கலாம்னு முதலமைச்சர் நேரம் பார்த்துட்டிருக்காரு. அவருக்கு என் மேல எப்பவுமே ஒரு காண்டு!''

''உன் ஜாதகப்படி சனீஸ்வரன் அஞ்சாவது வீட்டுல உட்கார்ந்திருக்கான். அடுத்த நாலு மாசத்துக்கு பிடிச்சு ஆட்டத்தான் செய்வான். அப்புறம் உனக்கு எல்லாமே உச்சம்தான்!''

''இந்த நாலு மாசத்துக்கு நான் என்ன செய்யணும் குருஜி?''

(பெருஞ்சிரிப்பு) ''எப்பவும் உன்னைச் சுத்தி போலீஸ் இருக்கு... அதனால் உன் உயிருக்கு ஆபத்து இருக்காது. மத்தபடி, மரகதக் கல் பதிச்ச மோதிரம் ஒண்ணு குடுத்து அனுப்பறேன். போட்டுக்க... உன் தோஷத்தை எல்லாம் அது எதிர்த்துப் போராடும்.''

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

''நன்றி குருஜி. உங்ககிட்டே பேசினாலே பெரிய நிம்மதி வந்திடுது.''

''குரு என்று ஒருத்தர் இருக்கிறதே அதுக்குத்தானேப்பா. அது போகட்டும்.. உன்னாலே எனக்கு ஒரு சின்ன காரியம் ஆகணும் ஜெகன்னாத் ராய்!''

''நீங்க சொல்லணும்... நான் செய்யணும். அது என் பாக்கியம் குருஜி!''

''கான்பூர் பக்கத்துல 20 ஏக்கர் நிலத்துக்கு நடுவுல சின்னதா ஒரு வீடு கட்டி இருக்கேன்! அந்த நிலத்தோட ஒரு பகுதியில பக்கத்து சேரியில் இருந்து சிலர் வந்து குடிசை போட்டுத் தங்கிட்டாங்கனு கேள்விப்பட்டேன். இந்த மாசக் கடைசியில் நான் உலக சுற்றுப்பயணம் கிளம்புறேன். அதுக்குள்ளே என் நிலம் கிளியர் ஆயிடுச்சுனு தெரிஞ்சா நிம்மதியா போய் வருவேன்.''

www.t.me/tamilbooksworld

'

'நாளைக்கு கார்த்தால அங்கே புல்டோசர்கள் போயிடும். நீங்க போயி உங்க பிரசங்கத்தைத் தொடருங்க குருஜி.''

''சம்போ மகாதேவ! விவேக் விக்கி ராய் சந்தோஷமா இருக்கானா? நான் கொடுத்த பவள மோதித்தை எப்பவும் போட்டுக்கறானா? யாகத்துல வெச்சு எடுத்த பவர்ஃபுல்லான மோதிரம் அது.''

''ரூபி கில் கொலை கேஸ்ல அவனுக்கு சாதகமா தீர்ப்பு வர்ற வரைக்குமாவது உங்களுக்கும் எனக்கும் கொஞ்சமாச்சும் அவன் பயப்படுவான் குருஜி!''

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*''சரிப்பா... நான் வெச்சிடறேன். அமெரிக்காவுலருந்து ரிச்சர்ட் கியர் இன்னிக்கு என் பிரசங்கத்தைக் கேட்க வந்திருக்கார்.''*

*''கியரா? யாரு குருஜி அது? ஏதாச்சும் கார் கம்பெனி ஓனரா?''*

*(பெருஞ்சிரிப்பு) ''இல்லேப்பா... இது பிரபலமான ஹாலிவுட் நடிகர்... வெச்சிடட்டா? சம்போ மகாதேவ!''*

- தொடர்ந்து சந்தேகிப்போம்...

Copyright Ⓒ Vikas Swarup 2008

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

# மோட்டிவ் 6

விகாஸ் ஸ்வரூப்

தமிழில்: அஞ்சனாதேவ்

## ஒரு கொலையின் விலை !

பார்ட்டியில் சுட்டுக் கொல்லப்பட்ட விவேக் விக்கி ராயின் அப்பாவும், உத்தரப்பிரதேசத்தின் உள்துறை மந்திரியுமான ஜெகன்னாத் ராய், தன் குருஜியான ஒரு தந்திரா சாமியுடன் நடத்திய போன் உரையாடலைக்

கேட்டோம். தனது அரசியல் எதிர்காலத்துக்கே வேட்டு வைக்கக்கூடிய கொலை வழக்கில் பிரதீப் துபே என்ற நபர் தனக்கு எதிராக சாட்சியளிக்கத் தயாராகிவிட்டது குறித்து, சாமியாரிடம் உள்துறை அமைச்சர் கவலையோடு ஆலோசனை நடத்தியதையும் கவனித்தோம். அமைச்சர் தரப்பில் இருந்து அடுத்தடுத்த போன் உரையாடல்களுக்கும் காது கொடுப்போம்...

www.t.me/tamilbooksworld

''ஏன்யா திரிபுராரி ஷரன்... சொன்ன நேரத்துக்கு நீ போன் பண்ண மாட்டியா?''

''மன்னிச்சிடுங்க அமைச்சர் சார்... அந்த பிரதீப் துபேவைத் தேடிப் பிடிச்சுப் பார்க்கிறதுக்கு நேத்து ரொம்ப லேட்டாயிடுச்சு. உங்களை தூக்க நேரத்துலடிஸ்டர்ப் பண்ண வேண்டாம்னுதான், காலையில போன் பண்றேன்.''

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

''போவுது விடு... என்ன சொல்றான் அவன்? கொடுக்குற காசை வாங்கிட்டு சாட்சி சொல்லாம ஓடிடறானாமா?''

''இல்லீங்க அமைச்சர் சார்... அவன் ரொம்ப முறுக்கு பார்ட்டியா இருக்கான். லட்சியம், சத்தியம், ஜனநாயகம்னு சவடால் பேசுறான். 'அமைச்சர் சுட்டுக் கொன்னதை நேரிலேயே பார்த்திருக்கேன். எப்படி அதை கோர்ட்டில் சொல்லாம இருக்க முடியும்?'னு ரொம்பத் திமிராப் பேசுறான். 10 லட்சம் வரைக்கும் பேசியும் படிய மாட்டேங்கிறான். ஒரு விஷயம் நல்லாத் தெரியுது சார்... அவன் இருக்கிறது லக்கன் தாக்கூரோட தொகுதியில். அந்த ஆள்தான் இவனை ரொம்ப உசுப்பிவிடுறாரோனு தோணுது!''

www.t.me/tamilbooksworld

நீண்ட அமைதி. பிறகு...

''ம்ம்ம்ம்... இதுல லக்கன் தாக்கூரோட விளையாட்டு வேற இருக்குதா? அடுத்த ஆட்சியில் உள்துறை அமைச்சரா ஆகணும்னு கனவு கண்டுட்டு இருக்கான் அந்தப் பன்னி! அதுக்கு முந்தி அவன் என்னை ஒழிக்கப் பாக்குறான். அஞ்சு வருஷத்துக்கு முந்தி அட்ரஸ் இல்லாம இருந்தவன். தேர்தல்ல ஜெயிச்சு எம்.எல்.ஏ. ஆனதும் அவன் எத்தனை டிம்பர் டெப்போ வாங்கிப் போட்டான், எத்தனை ஆம்னி பஸ்ஸுக்கு லைசென்ஸ் எடுத்தான், எத்தனை இன்ஜி னீயரிங் காலேஜ் தொடங்கினான்னு கணக்கு இருக்கு என்கிட்டே! நண்டு கொழுத்தா

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*வளையில தங்காதுன்னு சொல்வாங்க... போனாப் போகுது வளர்ந்துட்டுப் போகட்டும்னு பார்த்தா, அந்தப் புறம்போக்கு என் அரசியல் வாழ்க்கைக்கே வேட்டு வைக்கப் பாக்குது. அவனுக்கு எப்படி ஸ்கெட்ச் போடணும்னு எனக்குத் தெரியாதா?''*

*''ஐயா, அந்த ஆளை அடுத்துப் பார்க்கலாம்ங்க. முதல்ல இந்த பிரதீப் துபே! அடுத்த மாசம் அஞ்சாம் தேதி அவன் கோர்ட்டுக்கு வந்தா பிரச்னைதாங்க.''*

*''சரி, நம்ம ஆளு முக்தார் அன்சாரியை உடனே வந்து என்னைப் பார்க்கச் சொல்லு!'*

*'*

*'உங்களுக்குத் தெரியாதுங்களா? நாலு நாளைக்கு முந்தி காஸியாபாத்ல அவனை போலீஸ் பிடிச்சிட்டாங்க...''*

www.t.me/tamilbooksworld

*''ஏன்யா... என்ன விவகாரம்?''*

*''ரேப் கேஸுங்க! சேர்ந்தாப்பல நாலு நாளைக்கு அவனால பைஜாமா நாடாவை முடிச்சுப் போட்டு வைக்க முடியாது! எப்பப் பாரு பொம்பளை பின்னாடி ஓடுறதே வேலையாப் போச்சு அவனுக்கு.''*

*''நம்ம ஆளுனு போலீஸுக்குத் தெரியுமேய்யா. அப்படி இருந்தும் எவன் அரெஸ்ட் பண்ணது?''*

*''புதுசா அந்த ஏரியாவுக்கு வந்திருக்கிற எஸ்.பி-தாங்க. நவ்நீத் பிரார்னு பேரு. கொஞ்சம் அடங்காமத்தான் இருக்காப்ல!''*

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*''எல்லாம் கெட்ட கிரகம் பண்ற வேலைய்யா! சரி விடு... சாட்சியை சரிக்கட்ட உனக்குத்தான் துப்பு இல்லே. அந்த புது எஸ்.பி. நம்பரை வாங்கிக் கொடு. அவன் மூலமா நான் எப்படி காட்டுறேன் பாரு விளையாட்டு!''*

*''ஹலோ, நவ்னீத் பிரார் ஸ்பீக்கிங்!''*

*''வணக்கம் ஆபீஸர் ஸார்... நான்தான் உங்க துறையோட தலைவர், உள்துறை அமைச்சர் ஜெகன்னாத் ராய் பேசுறேன்.''*

*''வணக்கம் சார்.''*

*''முக்தார் அன்சாரினு ஒருத்தனை நீங்க அரெஸ்ட் பண்ணி யிருக்கீங்கனு கேள்விப்பட்டேன்.''*

www.t.me/tamilbooksworld

*''ஆமாம் சார். ரேப் கேஸ். அதுவும் மைனர் பொண்ணு!''*

*''என்னய்யா பெரிய வார்த்தையெல்லாம் பேசிகிட்டு... அவனை உடனே வெளியில அனுப்பிடு, புரியுதா?''*

*''இப்படி எல்லாம் நீங்க எனக்கு ஆர்டர் போட முடியாது சார்.''*

*''யோவ், ஆர்டர் போடறதுக்குத்தான்யா மினிஸ்டரு. சல்யூட் அடிக்கத்தான் போலீஸு... புரியுதா?''*

*''விவகாரம் மாஜிஸ்திரேட் டேபிள் வரைக்கும் போயிடுச்சு. அதனால நீங்க கோர்ட்ல பார்த்துக்குங்க சார்.''*

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

''வேலை போனாலும் உனக்குக் கவலை கிடையாதோ?''

''வேலைனு ஒண்ணு இருக்கிற வரைக்கும் அதை சரியா செய்யலாம்னு நினைக்கிறேன் சார்!''

''மிஸ்டர் நவ்நீத் பிரார், ஐ.பி.எஸ்... உனக்கு மண்டை சூடு ஜாஸ்தியா இருக்குது. நிச்சயம் அனுபவிப்பே!''

''காக்கியை மாட்டும்போதே எல்லாத்துக்கும் தயார் ஆயிட்டேன், சார்!'' படாரென்று போன் வைக்கப்படுகிறது.

''ஜெய் ஹிந்த்! டி.ஜி.பி. வீட்டுல கான்ஸ்டபிள் ராம் அவதார் பேசுறேங்கய்யா!''

www.t.me/tamilbooksworld

''டி.ஜி.பி. இருக்காரா?''

''இருக்காருங்க. ஆனா, நீங்க யாரு?''

''அமைச்சர் ஜெகன்னாத் ராய் வீட்டுல இருந்து பேசுறோம். டி.ஜி.பி-யை உடனே லைனுக்கு வரச் சொல்லு!''

''பாதி ராத்திரி தாண்டிடுச்சே... ஐயா தூங்கியிருப் பாங்களே!''

''முட்டாள் கழுதைக்குப் பொறந்தவனே... போயி எழுப் புய்யா. இல்லாட்டி உன்னோட சேர்ந்து உன் டி.ஜி.பி-க்கும் வேலை போயிடும். மினிஸ்டர் ஐயாவோட கோபம் எப்படினு உனக்கு தெரியாதுபோல!''

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

'ஐயா மன்னிச்சுக்கோங்க. இதோ, டி.ஜி.பி-யோட பெட்ரூமுக்கு லைன் மாத்துறேன்!''

பீப் பீப் பீப்...

தூக்கக் கலக்கத்துடன், ''ஏய், யாரு மேன் அது... நடு ராத்திரி எழுப்புறது?''

''ஐயா, உள்துறை அமைச்சர் பேசணுமாம்... லைன் குடுக்கறேன்!''

பீப்... பீப்... பீப்...

''மிஸ்டர் மவுர்யாதானே பேசுறது?''

www.t.me/tamilbooksworld

''யெஸ் சார். இந்த நேரத்துல நீங்க எதுக்கு சார் போன் போட்டு கஷ்டப்பட்டுக்கிட்டு? தகவல் சொல்லி விட்டிருந்தா வீட்டுக்கு நானே வந்திருப்பேனே...''

''ஏன்யா, நீ எத்தனை நாளா டி.ஜி.பி-யா இருக்கே?''

''எட்டு மாசமா சார்?''

''போட்டிக்கு ஏழெட்டுப் பேர் இருந்தும் உன்னை டி.ஜி.பி. ஆக்கினது யாரு?''

''நீங்கதான் சார்!''

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*''உன்னை இந்தப் பதவியில உட்காரவைக்கிறதுக்கு ஏன்டா கையெழுத்துப் போட்டோம்னு இப்ப நான் நொந்துட்டிருக்கேன் தெரியுமா?''*

*''ஸாரி சார். நம்ம டிபார்ட்மென்ட்ல ஏதாவது பிரச்னையா சார்? என்ன சார் நடந்தது?''*

*''முக்தார் அன்சாரினு ஒருத்தன்... சாதாரண ரேப் கேஸுய்யா... நவ்நீத் பிரார்னு ஒரு எஸ்.பி.... ரொம்ப ராங்கி புடிச்சவன்யா...''*

*''காஸியாபாத் ஏரியாதானே சார்?''*

*''ஆமா... நாளைக்குக் கார்த்தால எனக்கு முக்தார் அன்சாரி வெளியில வந்தாகணும்.''*

www.t.me/tamilbooksworld

*''அப்ப உடனே அந்த எஸ்.பி-யை அங்கிருந்து மாத்தணும் சார்.''*

*''அதைச் செய்! பசங்களுக்கு நல்ல ஸ்கூலும், சுத்தி சூப்பரா சினிமா தியேட்டரும், கூப்பிடுற தூரத்துல காய்கறி மார்க்கெட்டும் இருக்குற ஏரியால வேலை பார்த்தா, போலீஸ்காரங்களுக்கு மூளையில ஓவரா 'திமாக்' ஏறிடுதுய்யா. பேசாம இந்தாளை அட்டைப் பூச்சி நெளியுற காட்டுப் பக்கமா ஏதாச்சும் ஒரு டியூட்டி பார்த்து போடு. அப்பதான் கொஞ்சம் சைஸுக்கு வருவான்!''*

*''செஞ்சிடலாம் சார். நாளை காலை புது எஸ்.பி. கோர்ட்டுக்குப் போய் பேப்பர்ஸை ரிலீவ் பண்ணிடுவாரு. அடுத்த பத்தாவது நிமிஷம் உங்க ஆள் வெளியில இருப்பான் சார்!''*

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

''சந்தோஷம். அதான்யா நீ டி.ஜி.பி. பதவி வரைக்கும் வந்திருக்கே.''

''சார், ஒரு சின்ன நினைவூட்டல்... என் ஒய்ஃப் நிர்மலாவுக்கு எம்.எல்.ஏ. ஸீட் கேட்டிருந்தேனே சார்... வர்ற தேர்தல்ல நிறைய புதுமுகங்களை கட்சி அறிமுகப் படுத்தப்போறதா ரிப்போர்ட் வருதே, சார்... எப்படியாவது ஒரு ஸீட் வாங்கிக் கொடுங்க சார்.''

''முந்தியே சொல்லியிருந்தியே. நான் மறக்கலை. தேர்தலுக்கு முழுசா ரெண்டு வருஷம் இருக்கு. கரெக்டா செஞ்சி தருவேன் கவலைப்படாதே!''

''தேங்க்ஸ் சார்... குட் நைட் சார்!''

''முக்தார்?''

www.t.me/tamilbooksworld

''பாஸ்! அஸ்ஸலாமு அலைக்கும். இவ்ளோ சீக்கிரமே வெளியே கொண்டாந்ததுக்கு ரொம்ப நன்றி பாஸ்!''

''யார்ரா அது பொண்ணு... ரேப் பண்ணியாமே?''

''விடுங்க பாஸ்... லேசா போதையில நடந்துபோச்சு.''

''எப்படா நீ திருந்தப்போறே? இதே ரேட்டுல போனா, நீ ரேப் பண்ணிப் பொறக்குற குழந்தைகளைவெச்சே பாதி உத்தரப் பிரதேசம் ரொம்பிடும். அப்படி ஏதாச்சும் கின்னஸ் சாதனை பண்ற ஐடியா இருக்கா?''

''ஸாரி பாஸ். இனிமே போலீஸ்ல மாட்டாம உஷாரா இருப்பேன்.''

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

''அதைவிடு, உனக்கு ஒரு அசைன்மென்ட் இருக்கு!''

''சொல்லுங்க!''

''பேரு குறிச்சிக்க... பிரதீப் துபே. முஸ்தகீம் கொலை கேஸ்ல எனக்கு எதிரா சாட்சி சொல்ல ரெடி ஆயிட் டான்டா! லக்கன் தாக்கூர் உசுப்பிவிடறான். இந்த நாயும் புத்தி இல்லாம கோர்ட்டுக்குக் கிளம்பிடுச்சி. முதல்ல இந்த பிரதீப் துபேவை சைலன்ட் பண்ணிடு. அடுத்து இவனை உசுப்பிக்கிட்டிருக்கானே... அவனையும் கவனிக்கணும்!''

''லக்கன் தாக்கூர்னா... அந்த எம்.எல்.ஏ-வையா? அந்தாளையுமா முடிக்கணும்?!''

www.t.me/tamilbooksworld

''ஏண்டா... அது அவ்ளோ பெரிய வேலையா?''

''நமக்கு எதுவுமே பெரிய வேலை கிடையாது, பாஸ். ஆனா, எப்பவும் ஏழெட்டு பாடிகார்டு வெச்சிக்கிட்டுதான் அந்தாளு சுத்துறாரு.''

''அப்ப அந்த பாடிகார்டுகளையும் சேர்த்துப் போடு! நாளைக்கு வீட்டுப் பக்கம் வா... என் செக்ரெட்டரிகிட்டே அமவுன்ட் இருக்கும். வாங்கிட்டுப் போயிடு!''

''யெஸ் பாஸ்!''

- தொடர்ந்து சந்தேகிப்போம்...

Copyright © Vikas Swarup 2008

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

# மோட்டிவ் 6

விகாஸ் ஸ்வரூப்

தமிழில்: அஞ்சனாதேவ்

''ஹலோ, யார் பேசறது?''

''நான் யாருங்கிறது இருக்கட்டும்... நீ பத்திரிகைக்காரன் பிரேம் கல்ராதானே?''

www.t.me/tamilbooksworld

''ஆமாம்.''

''இப்ப தெரிஞ்சுக்க... நான் அமைச்சர் ஜெகன்னாத் ராய் பேசுறேன். இன்னொரு தடவை என்னைப் பத்தி எடக்குமடக்கா எழுதுனா, அடுத்த நியூஸ் எழுத உனக்கு விரல் இருக்காது.''

''சார்... உங்க பதவிக்குத் தகுந்தபடி பேசுறது நல்லது!''

''என் பதவிக்கே என்னாலதாண்டா மரியாதை! இன்னிக்கு காலையில் வந்த உங்க பத்திரிகையில் என்னடா எழுதியிருக்கே?''

''நீங்கதான் சொல்லுங்களேன் சார்?''

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

''பிரதீப் துபேனு யாரோ ஒருத்தன் செத்துப் போனதை எடுத்துப்போட்டு, அவனை நான்தான் ஆள்வெச்சுக் கொன்னதா எழுதி இருக்கியே... அந்த ஆளு லாரி அடிச்சு ஆக்சிடென்ட்டுல செத்துப்போயிட்டான்னு போலீஸே கேஸை மூடிடுச்சு. அதுக்கப்புறம் என்னடா உங்க .... .... ....ரு புலனாய்வு?''

www.t.me/tamilbooksworld

''ஹலோ சார்... வார்த்தையை அளந்து பேசுங்க. நாங்களா ஒண்ணும் உங்களை இதுல இழுக்கலை.

எம்.எல்.ஏ. லக்கன் தாக்கூர் சட்டசபையில என்ன பேசினாரோ... அதையே நாங்க கொஞ்சம் விரிவாப் போட்டிருக்கோம்.''

''போடுவே, போடுவே! நான்கூடத்தான் உன் மேல அவதூறு வழக்கு போடப்போறேன். 30 கோடி நஷ்டஈடு கேட்கப்போறேன். கேஸ் போடுறதுக்கு நான் கோர்ட்டுல கட்டுற ஸ்டாம்ப் டியூட்டி பணம் எவ்ளோ தெரியுமா? அதைவெச்சு உன் பத்திரிகை ஆபீஸையே வாங்கிடலாம்!''

''சார்... உங்ககிட்டே பணத்துக்கு பஞ்சம் இல்லேனு எங்களுக்கும் தெரியும். ஆனா, சமூகத்துக்கு நன்மை செய்யணும்னு வர்ற எங்களை

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*மாதிரி சிலரை உங்களால் விலைக்கு வாங்க முடியாது. பயமுறுத்தி வாயடைக் கவைக்கவும் முடியாது.''*

*''யோவ், நீ என்னய்யா சமூக சேவை பண்றது? அதுக்குத்தானே ஜனங்க எங்களுக்கு ஓட்டுப் போட்டு, சட்டசபைக்கும் நாடாளுமன்றத்துக்கும் அனுப்புறாங்க. முடிஞ்சா, எங்க சேவையைப் பாராட்டி நாலு வரி எழுது. இல்லாட்டி, கதை, கவிதை, ஜோக்கு போடுங்க. கை நிறைய கவர்மென்ட் விளம்பரம் வாங்கிக்க... புரியுதா?''*

*''அட்வைஸுக்கு நன்றி மினிஸ்டர் சார். எங்க பத்திரிகைக்கு ஒரு நெறிமுறை இருக்குது. நீங்க போனை வெச்சிடுங்க!''*

*''ஹலோ... உள்துறை அமைச்சர் வீடா? முதலமைச்சர் லைனுக்கு வரப்போறாரு. அமைச்சரைக் கூப்பிடுங்க!''*

www.t.me/tamilbooksworld

*''நீங்க லைனைக் கொடுங்க... அதை நான் மினிஸ்டருக்கு மாத்தறேன்!''*

*''மிஸ்டர்... உங்க மினிஸ்டரைவிட சீஃப் மினிஸ்டர் பெரியவருன்னு தெரியாதா உங்களுக்கு? முதல்ல அமைச்சரை லைனுக்கு வரச் சொல்லுங்க.''*

*''கோவிச்சுக்காதீங்க சார். இதோ லைன் கொடுக் கறேன்!''*

*பீப்... பீப்... பீப்...*

*''ஹலோ, ஜெகன்னாத் ராய்?''*

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

''வணக்கம் முதல்வர் சாஹேப்...''

''ஜெகன்னாத்... உங்களுக்கே தெரியும். எனக்கு ஓவரா நெருக்கடி வந்துட்டிருக்கு...''

''புரியுதுங்க, ஐயா. ஆனா, போதிய சாட்சிகள் இல்லேன்னு சொல்லி, என் மேல் இருந்த கொலை கேஸை நீதிமன்றம் தள்ளுபடி பண்ணிடுச்சே!''

''உங்க விஷயம் முடிஞ்சுபோச்சு. ஆனா, உங்க பையன் விக்கி ராய் மேலே இருக்கிற ரூபி கில் கொலை கேஸ் பத்தி மீடியாவுல கிழிகிழின்னு கிழிக்கிறாங்களே. இதால, நம்ம கட்சியோட இமேஜே காலி ஆயிடும்போலிருக்கே!''

www.t.me/tamilbooksworld

''ஐயா... நீங்க தப்பா நினைக்கக் கூடாது. என் மேலே 32 கேஸ் இருந்தும், கட்சித் தலைமை என்னை உள்துறை அமைச்சர் பதவியில் அமர்த்தலியா? பிறகு என்ன ஆச்சு? ஒரு கேஸ்லயாவது என்னை குற்றவாளினு சொல்லி தீர்ப்பு வந்ததா? அப்புறம், என் மகன் கேஸ்ல மட்டும் எதுக்காகத் தேவை இல்லாம நீங்க பதற்றப்படணும். தீர்ப்பு வரட்டும்... அப்புறம் சொல்லுங்க!''

''மத்த வழக்குகள் மாதிரி இது கிடையாது ஜெகன்னாத்! ரூபி கில் கொலை வழக்குதான் இன்னிக்கு அத்தனை டி.வி-யிலும் ஹைலைட் நியூஸ். நாடு முழுக்க தினமும் இதோட முன்னேற்றத்தைக் கவனிக்கிற அளவுக்கு ஹை புரொஃபைல் கேஸ் ஆயிடுச்சு.''

''ஐயா, நீங்களும் வக்கீலுக்குப் படிச்சவங்க. உங்களுக்குத் தெரியாதா? நாளைக்கு இந்த மீடியாக்களா கவுன் மாட்டிக்கிட்டு வந்து

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*தீர்ப்பு சொல்லப்போகுது? நீதிபதிதானே சொல்லணும்? மீடியா சொல்லுதுன்னு எல்லா மினிஸ்டரும் ராஜினாமா பண்ண வேண்டியிருந்தா, கேபி னெட்டில் மூணில் ரெண்டு பங்கு நாளைக்கே காலியாயிடும். என் பையன் கேஸில் தீர்ப்பு வரட்டும். அப்புறம் என்ன பண்றதுன்னு பார்த்துக்கலாம். சரிங்களா ஐயா?''*

*''உள்ளாட்சித் தேர்தல் முடிகிற வரைக்கும் நம்ம கட்சித் தலைமையை நான் எப்படியோ சமாளிச்சிட்டேன். ஆனா, இனி உங்க விஷயத்துல என்னால எதுவும் செய்ய முடியும்னு தோணலை ஜெகன்னாத். முக்கியமா, அந்த பத்திரிகைக்காரன் அருண் அத்வானி எழுதுற கட்டுரைகளை நீங்க படிக்கிறீங்கதானே... ரூபி கில் கேஸில் இருந்து உங்க பையனை விடுவிக்கிறதுக்காக நீங்க நீதிபதிக்கே பணம் கொடுத்துட்டீங்கனு இன்னிக்கு எழுதியிருக்கான். இப்படி எல்லாம் எழுதறதுக்கு இடம் கொடுத்தா, வர்ற தேர்தல்ல நம்ம கட்சி கட்டாயம் காலி ஆயிடும்னு தலைமை பயப்படுது!''*

www.t.me/tamilbooksworld

*''எழுதிட்டுப் போறான் விடுங்க ஐயா! அவன் இங்கிலீஷ்லதானே கிறுக்குறான். நம்ம வாக்காளர்களில் எவனுக்கு இங்கிலீஷ் படிக்கத் தெரியும் சொல்லுங்க? இதுக்குத்தான் நம்ம கல்வி அமைச்சர்கிட்டே அடிக்கடி சொல்லுறேன்... எல்லா இங்கிலீஷ் மீடியம் பள்ளிகளுக்கும் தடை கொண்டுவரணும்னு! நம்ம தாய்மொழியான இந்தியில் மட்டும்தான் பாடம் சொல்லிக் கொடுக்கணும். அப்படி செஞ்சாத்தான், தாய்மொழிப் பற்று வளரும். கூடவே, அடுத்த தலைமுறைகிட்டேயும் நாம நிம்மதியா அரசியல் பண்ண முடியும். மூங்கிலா இருக்கும்போதே பிடுங்கி எறிஞ்சிட்டா, அப்புறம் எவன் புல்லாங்குழல் ஊத முடியும், சொல்லுங்க!''*

*(ஜெகன்னாத் ராயின் இடிச் சிரிப்பு)*

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

''சரி ஜெகன்னாத் ராய். உங்க மகன் கேஸ்ல தீர்ப்பு அவனுக்குப் பாதகமா வந்தா, அப்புறம் என்னால உங்களைக் காப்பாத்த முடியாது. அப்புறம் நீங்க, என் மேல வருத்தப்படவும் கூடாது... புரியுதா? நாளைக்கு கேபினெட் கூட்டத்தில் சந்திப்போம். வணக்கம்!''

''வணக்கம், முதல்வர் சாகேப்!''

''ஹலோ, ருக்ஸானா?''

''இப்பதான் நினைப்பு வந்துச்சாக்கும். என்கூட பேசாதீங்க... நேத்து மட்டும் 100 எஸ்.எம்.எஸ். அனுப்பி இருப்பேன். அதுக்கு ஒரு வரி பதில் அனுப்பக்கூட ஐயாவுக்கு நேரம் இல்லையாக்கும்!''

www.t.me/tamilbooksworld

''கண்ணு... அரசியல்னா அவ்ளோ சாதாரணம்னு நினைச்சிட்டியா? அதுவும் உள்துறை அமைச்சர்னா, எவ்ளோ பேஜார் தெரியுமா? ஆயிரம் தலைவலி, லட்சம் குழப்படி! அதுவும் இந்த ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். அதிகாரிங்க இருக்கானுங்க பாரு... எதுக்கெடுத்தாலும் நாலு ஃபைலைத் தூக்கிட்டு வந்து, வளர்ச்சிப் பணி, சட்டம் - ஒழுங்கு, அது இதுனு மீட்டிங் போட ஆரம்பிச்சிடுறானுங்க. சீஃப் மினிஸ்டருக்கும் வயசான காலத்துல வேற பொழுதுபோக்கு எதுவும் இல்லை... நாள் கணக்கா மீட்டிங்ல உக்காந்துக்கறாரு. அப்புறம் எங்கே நான் எந்திரிச்சு வந்து உன்கூட பேசுறது?''

''இன்னும் பதவியில இருந்து எவ்வளவுதான் சம்பாதிச்சுக்கிட்டே இருப்பீங்க? இந்த அரசியல் சனியனையெல்லாம் ஒரேயடியாக தலை முழுகிட்டு வந்திடுங்களேன்!''

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

''அடிப் பாவி! என்னைப் பொறுத்தவரைக்கும் நீ எவ்ளோ பெரிய போதையோ... அதைவிடப் பெரிய போதை இந்த அரசியலும் பதவியும்! ஒரு தடவை உள்ளே நுழைஞ்சிட்டா, அப்புறம் வெளியே வர்றதிலெல்லாம் யாருக்கும் இஷ்டம் இருக்காது!''

''அப்ப என்னை விட்டாலும் விடுவீங்க... அரசியலையும் பதவியையும் விட மாட்டீங்க, அப்படித்தானே?''

''பைத்தியம்... ஊர் உலகத்துக்குத் தெரியாம, இந்த உள்துறை அமைச்சருக்கு உள்ளே பொங்குற காதலை எத்தனை கவிதை எழுதிச் சொன்னாலும் தீராது. அது போகுது... வேறென்ன விசேஷம் சொல்லு!''

''பெரிசா ஒண்ணும் இல்லை. பியூட்டி பார்லருக்குப் போயிருந்தேன். 'வேக்ஸிங்' பண்ணிக்கிட்டேன். அப்படியே ஃபேஷியலும் பண்ணிட்டேன். பட்டு மாதிரி இருக்கும், இப்போ எங்கே தொட்டாலும்! நீங்கதான் வரவே மாட்டேங்கறீங்க!''

www.t.me/tamilbooksworld

''வர்றேன்... வர்ற வெள்ளிக்கிழமை என் பொண்டாட்டி சுமித்ரா அவளோட சொந்த ஊருக்குப் போறா. அன்னிக்கு ராத்திரியே கிளம்பி வந்திடறேன். ரெண்டு நாள் உன்னோடதான் எல்லாமே!''

''நிஜம்மா சொல்லுங்க... இலக்கியம், கவிதை எல்லாம் என்கிட்டே பேசுறீங்களே... உங்க சம்சாரத்தோட இதெல் லாம் பகிர்ந்துக்க முடியுதா?''

''விவரம் புரியாத காலத்துல நான் செஞ்ச ஒரே தப்பு அவளைக் கல்யாணம் பண்ணிக்கிட்டதுதான்!''

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

''ஏன், இப்ப மட்டும் விலகி வந்திட முடியாதுக்கும்?''

''பொது வாழ்க்கைக்கு வந்த பிறகு, நம்ம சொந்த வாழ்க்கைபத்தி அத்தனை சீக்கிரம் முடிவெடுக்க முடியாது. நம்ம இமேஜோட சேர்த்து கட்சி இமேஜும் காலி ஆயிடும். பத்திரிகைக்காரனுங்க இதுக்குத்தானே நாக்கைத் தொங்கப் போட்டுக்கிட்டு வேட்டை நாய் மாதிரி அலையுறானுங்க...''

''பாவம்தான் நீங்க!''

''பொண்டாட்டியை விடு கண்ணு... என் புள்ளை மட்டும் என்ன... கொஞ்ச நஞ்ச டார்ச்சரா கொடுக்கறான்? சின்ன வயசுல இருந்தே அவனால எனக்கு விதம் விதமான தொல்லை. இப்ப என் பதவியையே காவு கேக்குற அளவுக்கு ஒரு கொலை கேஸுல மாட்டி இருக்கான். பார்ட்டி கொடுக்குற இடத்துல பல பேரு பாக்குற மாதிரி, போதையில ஒரு பொண்ணை சுட்டுத் தள்ளி இருக்கான். இன்னொரு பக்கம் என் பொண்ணு கொடுக்குற டார்ச்சரும் தாங்க முடியலை... 'வேணும்'னும் சொல்லாம, 'வேணாம்'னும் சொல்லாம, எல்லாத்துக்கும் ஊமைக் கோட்டான் மாதிரியே திரியுறா. அவ மேலே நான் உசுரையே வெச்சிருக்கேன். அற்புதமான குடும்பத்துல மாப்பிள்ளையைத் தேடிப் பிடிச்சு, நாடே பார்த்து அசந்துபோற மாதிரி கல்யாணம் பண்ணிவைக்கணும்னு ஆசைப்படறேன். ஆனா, கல்யாணமே வேணாம்னு சொல்லிக் கழுத்தறுக்குறா!''

www.t.me/tamilbooksworld

''வேற ஏதாச்சும் காதல், கத்திரிக்காய்னு இருக்கப் போகுதுங்க...''

''அதுவும் தெரியலையே... வீடு பெருக்குறவன், கார் துடைக்கிறவன் வீட்டுக் குழந்தைகளோடதான் எந்நேரமும் பேச்சு, சிரிப்பு! அந்த மாதிரிக்

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*குடும்பத்துல இருக்கிற ஒண்ணுக்கும் உதவாத பையன் எவனையாச்சும் திடீர்னு இழுத்துக்கிட்டு ஓடிப் போயிடுவாளோனு பயமா இருக்கு. அப்படி ஏதும் செஞ்சு எங்க குடும்ப கௌரவத்தை மண்ணுல தேய்க்க நினைச்சா... சத்தியமா அந்த நிமிஷமே அவளை நான் சுட்டுக் கொன்னுடுவேன்!''*

*''ஐய... விடுங்க! இல்லாத ஒரு விஷயத்தைக் கற்பனை பண்ணி எதுக்கு பிளட் பிரஷரை ஏத்திக்கிறீங்க?''*

*''ம்ம்ம்... குருஜியும் அதைத்தான் சொல்றாரு. என்னமோ போ கண்ணு... நீயும் குருஜியும் மட்டும்தான் என்னை நல்லாப் புரிஞ்சுவெச்சிருக்கீங்க.''*

*''ஆனா, நீங்க என் ஆசையைப் புரிஞ்சுக்கவே மாட்டேங் குறீங்க... ஃபாரின் டிரிப் கூட்டிட்டுப் போங்கனு எத்தனை தடவை கேட்டிருப்பேன்!''*

www.t.me/tamilbooksworld

*''பார்த்தியா... மறுபடி முருங்கை மரம் ஏறுறியே. எனக்கு இப்ப இருக்குற குத்தல் குடைச்சலுக்கு நடுவுல உன்னை கூட்டிக்கிட்டு பிளேன்ல ஏறுனா, வேற வினையே வேண்டாம். அதிலேயும் அருண் அத்வானினு ஒரு பத்திரிகைக்காரன் இருக்கான். நாம் தங்குற இடத்துக்கே பறந்து வந்து, ரகசிய கேமரா 'ஸ்டிங்' ஆபரேஷன் நடத்தி அசிங்கப்படுத்திடுவான். கொஞ்ச நாள் பொறுத்துக்க... சரியா?''*

*(விசும்பி அழும் குரல்)*

*''ருக்ஸானா செல்லம்! இப்படியெல்லாம் என் மனசைக் கஷ்டப்படுத்தலாமா? நீ கேட்டு வேற என்ன நான் செய்யலை சொல்லு? இந்தா, வெள்ளிக்கிழமை வரைக்கும் தாங்குற மாதிரி முத்தம் கொடுக்கிறேன்... வெச்சுக்க...''*

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*மொச்... மொச்... மொச்!*

*''அப்பா!''*

*''சொல்லு விக்கி...''*

*''தீர்ப்பு ஒண்ணும் பிரச்னையா இருக்காதே...''*

*''இருக்காது. இருந்தாலும், தீர்ப்பு சொல்ற தேதியை பிப்ரவரி 15-க்கு மேலே ஒத்திப்போடுற மாதிரி ஏற்பாடு பண்ணிட்டேன். உன் ஜாதகப்படி நல்ல நேரம் அதுக்கு அப்புறம்தான் தொடங்குறதா குருஜி சொல்லி இருக்கார்.''*

*''அப்ப நான் கவலைப்பட வேணாம்ல?''*

www.t.me/tamilbooksworld

*''வேணாம். ஆனா, உன்னால எனக்கு எத்தனை வேதனைனு கொஞ்சமாச்சும் புரிஞ்சுக்க மாட்டேங்குறியே... திரும்பத் திரும்ப ஏதாச்சும் வில்லங்கமாப் பண்ணிட்டு வந்து நின்னா, எத்தனை காலத்துக்கு நான் உன்னைக் காப்பாத்திக்கிட்டே இருக்க முடியும்?''*

*''அப்புறம் அப்பானு ஒருத்தர் எதுக்குதான் இருக்குறது?''*

*''நல்ல கேள்விடா மவனே. இப்படி எல்லாம் துளிகூட என் மேல அன்போ, அக்கறையோ இல்லாம நீ பேசுறதைப் பார்க்கும்போது, நிஜமாவே நீ எனக்குத்தான் பொறந்தியானு சந்தேகமா இருக்குடா!''*

*''அம்மாகிட்டே வேணா கேட்டுச் சொல்லவா?''*

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*''போனை வையிடா பொறுக்கித் … … … …னே!''*

*ஙொய்… ஙொய்… ஙொய்!*

- தொடர்ந்து சந்தேகிப்போம்…

Copyright © Vikas Swarup 2008

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

# மோட்டிவ் 6

விகாஸ் ஸ்வரூப்

தமிழில்: அஞ்சனாதேவ்

## சந்தேகப் புள்ளி: 6
## அசட்டு அமெரிக்கன் லாரி பேஜ்!

ஹாய்! என் பெயர் லாரி பேஜ். டெக்ஸாஸின் ஒரு சுமாரான நகரத்தில் இருக்கும் சூப்பர் மார்க்கெட்டில் சாமான்களை சுமந்து சென்று அடுக்குகிற 'ஃபோர்க் லிஃப்ட்' வண்டிக்கு டிரைவராக இருக்கிறேன்.

www.t.me/tamilbooksworld




www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*பலரும் என்னை ‘லூஸு... முட்டாள்!’ என்று இங்கே சொல்கிறார்கள். இப்போது நான் சொல்லப்போகிற விஷயங்களைப் பொறுமையாகக் கேளுங்கள். அப்புறம் சொல்லுங்கள்... உங்களுக்கும் அதே அபிப்பிராயம்தானா என்று!*

*முதல் விஷயம்... என் வாழ்க்கையிலேயே இன்று மிக மகிழ்ச்சியான நாள். நான் பிறந்து வளர்ந்த அமெரிக்காவில் இருந்து... முதல் தடவையாக விமானம் ஏறி, எனக்குப் பிடித்த இந்தியாவுக்குக் கிளம்பப் போகிறேன். மட்டனுக்கும் மகாராஜாக்களுக்கும் பெயர் பெற்ற தேசம் அல்லவா இந்தியா. ‘டிங்குடிங்கு’ என்று பிரமாண்டமான யானைகள் எங்கும் நடமாடும் நாடு... அதேபோல் எங்கும் தெருக்களில் ஒட்டகங்கள் வண்டி இழுத்துக்கொண்டு ஓடுமாமே!*

*எல்லாவற்றுக்கும் மேலாக, உலகத்திலேயே மிக மிக அழகான சப்னா சிங் வாழ்கிற தேசம் என்ற ஒரு காரணம் போதாதா எனக்கு! சப்னா சிங் யாரென்று உங்களுக்குத் தெரியாது... இல்லையா? அவள் அடுத்த இரண்டு வாரங்களில் எனக்கு மனைவி ஆகப்போகிறவள்!*

www.t.me/tamilbooksworld

*இந்தியத் திருமணங்கள் எப்படி எல்லாம் நடக்கும் என்று சப்னா சிங் எனக்கு எழுதிய கடிதங்களின் மூலமே அறிந்துகொண்டேன். அதிரும் இசைக்கு நடுவே, இந்தியப் பெண்கள் ஆடும் நடனம் அப்படி ஒரு மயக்கத்தை உண்டாக்குமாமே. என் அம்மாவுக்குத் திருமணம் என்றால் ரொம்பப் பிடிக்கும். அவள் மட்டுமே இது வரை நாலு திருமணங்கள் நடத்திக்கொண்டாள் என்றால் பார்த்துக்கொள்ளுங்கள்! ஆனால், நான் ஓர் இந்தியப் பெண்ணை மணந்துகொள்ள முடிவு செய்தபோது, அவள் ஏகத்துக்கும் டென்ஷன் ஆனாள்.*

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

'இந்தியர்கள் நாற்றம் பிடித்தவர்கள். அழுக்கா னவர்கள். ஓட்டை இங்கிலீஷ் பேசுகிறவர்கள்' என்று அவளாகவே ஒரு கருத்துடன் இருந்தாள். சப்னா சிங்கின் போட்டோவையும், அவள் எழுதிய கடிதங்களையும் காட்டியபோது பிரமித்துப்போனாள். பிரபஞ்சத்திலேயே மிக அழகான ஒரு பெண்ணை தன் மகன் மணக்கப்போகிறான் என்று பூரித்தாள். டெக்ஸாஸ் ஏரியாவில் தனக்குத் தெரிந்த அத்தனை பேரிடமும் போட்டோவைக் காட்டி பீற்றிக்கொண்டாள் என் அம்மா.

நானும் என் அம்மாவும் ஒருவர் மீது ஒருவர் உயிருக்கு உயிராகப் பாசம் வைத்திருக்கிறோம். எனது மிகவும் சின்ன வயதிலேயே அப்பா வீட்டை விட்டு ஓடிவிட்டார். நாங்கள் இருவரும் சோற்றுக்கே சிங்கி அடிக்கும் அளவுக்கு மோசமான வறுமையில் வாடினோம். எப்படியோ என் அம்மாவை ஒரு ஜென்டில்மேன் மணந்துகொண்டார். நாங்கள் வைத்திருந்த தம்மாத்தூண்டு வீட்டையும், சில கால் நடைகளையும் விற்றுவிட்டு, என்னையும் என் அம்மாவையும் கிராமாந்தரத்தில் இருந்து நகரப் பகுதிக்குக் கூட்டி வந்தார் அந்த ஜென்டில்மேன்.

www.t.me/tamilbooksworld

சோகமான அந்தப் பழசுகளை விட்டுத்தள்ளுங்கள்... என் கனவுக் கன்னி சப்னா சிங்கை நான் எப்படி சந்தித்தேன்? அதுதான் நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டிய வசீகரக் கதை. 'திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றன!' என்று உறுதியாக நம்புகிறவன் நான். அதிலும் யாரை... யார்... எப்போது... எங்கு திருமணம் செய்ய வேண்டும் என்பதை, கடவுள் தனது டைரியில் நச்சென்று குறித்துவைத்து இருப்பதாக நம்புகிறேன்!

ராண்டி ஏல் என்று எனக்குப் பள்ளித் தோழன் ஒருத்தன் உண்டு. அவனை மாதிரி ஒரு சிலருக்கு உடம்பு பூராவும் மச்சம் வைத்துப் படைத்ததும் இறைவன்தான். ராண்டி ஏலுக்கு ஒரு பெண் மீது ஆசை

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*வந்துவிட்டால்... போதும்! அதிரடி புதிரடியாக அவளை பிக்கப்பண்ணி, அதைவிட சீக்கிரமாக 'டிராப்' பண்ணி மறந்தும்விடுவான். அடுத்த பெண்ணை அதற்குள் ரெடி பண்ணியிருப்பான்!*

*என்னை மாதிரி, காய்ந்துபோய்க் காத்திருக்கும் ஜன்மங்களையும் இறைவன்தான் படைக்கிறான். இத்தனைக்கும் நான், என் சூப்பர் மார்க்கெட் சூபர்வைஸர் ஜானி ஸ்கார்ஃபேஸ் மாதிரி அசிங்கமான தோற்றத்தில் இருப்பதாக நினைக்கவில்லை. ஐந்து அடி ஏழு அங்குல உயரம். மணல் கலர். 10 வயதான என் சொந்தக்காரச் சிறுமி ஒருத்தி, ''லாரி பேஜ்... உன் முகம் இன்னும் கொஞ்சம் ரவுண்டாகவும், மூக்கு இன்னும் கொஞ்சம் சின்னதாகவும், தலைமுடி இன்னும் சற்று அடர்த்தியாகவும், எடை இன்னும் 50 பவுண்டு குறைவாகவும் இருந்தால் நீ ஹாலிவுட் அழகன் டாம் க்ரூஸ் மாதிரியே இருப்பாய்!'' என்கிறாள். என் எடையைக் குறைக்க நானும் கடும் முயற்சியில் இருக்கிறேன். மூக்கையும் தலைமுடியையும்தான் எப்படி மாற்றுவது என்று தெரியவில்லை!*

www.t.me/tamilbooksworld

*28 வயசைத் தாண்டியும் எனக்குக் கல்யாண ஆசை வராமல் இருப்பதைப் பார்த்து என் அம்மா கவலை அடைந்தாள். ஒருவேளை, 'ஓ! அவனா நீ?' வகையறாவாக இருப்பேனோ என்றுகூட சந்தேகப் பட்டாள். என்னோடு பழகிய மிகவும் சொற்பமான ஆண் நண்பர்களையும் விரட்டியடிக்க ஆரம்பித்தாள். நல்லகாலமாக, 'பேனா நண்பர்கள்' சங்கம் ஒன்று என் அம்மாவின் எண்ணத்தை முறியடித்தது. இந்த பேனா நண்பர்கள் சங்கத்துக்கு உறுப்பினர் கட்டணமாக 40 டாலர்கள் கட்டினால் (தவணையில் கட்டவும் அனுமதி உண்டு), அவர்கள் உலகின் வெவ்வேறு நாடுகளில் வசிக்கிற ஏழு பேரழகிகளின் அட்ரஸ்களை நமக்குத் தருவார்கள் (பெண்கள் பணம் கட்டினால் பேரழகர்கள்*

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*அட்ரஸ்!). அப்படி அவர்கள் கொடுத்த ஏழு அட்ரஸில் சில நாடுகளின் பெயரே எனக்கு அப்போதுதான் தெரியும்.*

*ஒரே சமயத்தில் ஏழு நாட்டுப் பேரழகிகளை தபால் மூலம் டீல் செய்வதற்கு ரொம்பத்தான்திணறினேன். இருந்தாலும் ஆங்கில எழுத்து வரிசைப்படி ஒவ்வொரு பெண்ணாகத் தேர்ந்தெடுத்து, லெட்டர் போட்டேன்.*

*ஆப்கானிஸ்தானில் இருந்த அலிஃபா, கிழக்கு திமோரில் வாழ்ந்த ஃபோரீஸ், ஃபிஜி தீவில் இருந்த ஜெனிஃபர், இரான்காரி லைலா, லத்தீவியாவின் லோலிடா, கொசாவா அழகி ரகத் என்று வரிசையாக லெட்டர் போஸ்ட் செய்தேன். கடைசியாகத்தான் இந்தியாவின் சப்னா சிங்குக்கு லெட்டர் போட்டேன்.*

www.t.me/tamilbooksworld

*அந்தப் பெண்களும் எனக்கு பதில் போட்டார்கள். இதில் மூன்று பெண்களுக்கு ஒழுங்காக இங்கிலீஷ் எழுதத் தெரியவில்லை. ஸ்பெல்லிங் கொலை! 'லவ், அமெரிக்கா, பியூட்டிஃபுல்' போன்ற வார்த்தைகளைத்தான் அவர்கள் குறிப்பிடுகிறார்கள் என்பதைக் கண்டுபிடிக்கவே எனக்கு மணிக்கணக்கில் ஆனது. ஆப்கானிஸ்தான், கிழக்கு திமோர் நாட்டுப் பெண்களோ, தங்கள் நாட்டு அரசியல் விவகாரங்களைப்பற்றி எழுதி, என் மண்டையைக் குழப்பினார்கள். ஃபிஜி நாட்டு பஜாரி, தன் முதல் லெட்டரிலேயே துளிகூட கூச்சம் இல்லாமல் என் கிரெடிட் கார்டு நம்பரைக் கேட்டு பகீர் பண்ணினாள்.*

*ஒரு கட்டத்தில் இது எதுவுமே சரிப்படாது என்று தோன்றியது எனக்கு. லத்தீவியாவில் லோலிடாவின் கதை மொத்தமாக வேறு மாதிரி. 'ஹலோ ஹாரி... நீ என்னை 011-371-75298980 என்ற நம்பரில் கூப்பிடேன். உன் குரலைக் கேட்கணும்போல இருக்கு' என்று லெட்டரில்*

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

சொல்லி இருந்தாள். '16 வயதான அழகிய இளம்பெண்' என்றும் சொல்லி இருந்தாள். என் வயசுக்கு அவள் ரொம்ப இளசுபோல தெரிந்தாலும் நான் விடவில்லை. சைக்கிள் பம்ப்பை வைத்து கிணற்று ஆழத்தை அளக்க முடியுமா? அந்த மாதிரி வயசை வைத்தெல்லாம் காதலை அளந்துவிட முடியுமா என்ன? நான் அவளை போனில் கூப்பிட்டேன்.

அநேகமாக, லோலிடா சொன்ன வயசு தப்பாக இருக்க வேண்டும். சத்தியமாக அது 16 வயசுக்கான குரல் அல்ல. ஆண்டு அனுபவித்த ஒரு தடிப்பு அவள் குரலில் தெரிந்தது. அல்லது, கடுமையான ஆஸ்துமா நோய் அவளுக்கு இருக்க வேண்டும். போனை எடுத்து தஸ்ஸ¨புஸ் ஸென்று மூச்சு வாங்கியபடி பேசினாள். நேரில் பார்த்து இருந்தால்... அப்போதே எனக்காகப் படுக்கையை விரிக்கிறமாதிரி அவள் பேசியதும் அதிர்ச்சியைக் கூட்டியது.

www.t.me/tamilbooksworld

அந்த போன்காலுக்கு 57 சொச்சம் டாலர் பில் வந்தபோது எனக்கு மூச்சு அடைக்கிற மாதிரி இருந்தது. 'லோலிடா இருக்கும் திசைப் பக்கமே இனி திரும்புவதில்லை!' என்று முடிவு எடுத்தேன்.

ஆக, இந்தியாவில் இருந்து பதில் கடிதம் எழுதியிருந்த சப்னா சிங் மட்டுமே பாக்கி என்பது உங்களுக்கும் இந்நேரம் புரிந்திருக்கும். என்னவோர் அழகான ஆங்கிலத்தில் அவள் பதில் எழுதி இருந்தாள் தெரியுமா? பெண் விடுதலைக்காகவும், சாதியக் கொடுமைக்கு எதிராகவும் இந்தியாவில் போராடி வருவதாக அவள் சொல்லி இருந்தாள். வீட்டில் போன் வசதி கிடையாதாம். அந்த அளவுக்கு வறுமையான குடும்பமாம். அதைப் படித்ததுமே எனக்கு அழுகை வந்துவிட்டது. சப்னா சிங்குக்கு அடுத்த கடிதம் போட்டேன். அவள் அதற்கும் பதில் போட்டாள். இரண்டே

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

மாதங்களில் நாங்கள் எங்கள் போட்டோக்களைப் பரிமாறிக்கொள்ளும் அளவுக்கு நெருங்கிவிட்டோம்.

நானும் எத்தனையோ உலக அழகிகளையும், பிரபஞ்ச அழகிகளையும், எத்தனையோ நடிகைகளையும் பத்திரிகைகளில் பார்த்திருக்கிறேன். அப்போது எல்லாம் வெளிப்பட்ட பிரமிப்பும் பெருமூச்சும் எத்தனை அபத்தமானது என்று இப்போது எனக்குப் புரிந்தது. அவர்களை எல்லாம் தூக்கிச் சாப்பிடுகிற அழகி அல்லவா இப்போது எனக்கு 'பேனா தோழி'யாக கிடைத்திருக்கிறாள்! தோழியா... சேச்சே! அவள் அனுப்பிய போட்டோவை பார்த்ததுமே என் உச்சந்தலையில் இருந்து உள்ளங்கால் வரைக்கும் 'காதல்... காதல்!' என்று அலற ஆரம்பித்துவிட்டது!

www.t.me/tamilbooksworld

தைரியம் மொத்தத்தையும் திரட்டிக்கொண்டு கடந்த ஜூன் மாதம் அவளுக்கு ஒரு கடிதம் எழுதினேன். அவளைத் திருமணம் செய்துகொள்ள விரும்புவதை பளிச்சென்று சொன்னேன். அத்தனை சீக்கிரத்தில் பாசிட்டிவ்வாக அவள் பதில் கடிதம் போடுவாள் என்று நம்பவே முடியவில்லை. நியூயார்க்கில் இப்போது இல்லாத இரட்டை கோபுரத்தின் உச்சியில் ஏறிக்கொண்டு கூவலாம்போல் இருந்தது - 'நானே உலகின் நம்பர் ஒன் அதிர்ஷ்டசாலி' என்று!

அதன் பிறகு வேகவேகமாக இந்தி கற்க ஆரம்பித்தேன். எனக்காக சுவையான சாக்லேட் பிரவுனி தயாரிப்பது எப்படி என்று அவளும் யாரிடமோ கற்றுக்கொண்டதாக லெட்டர் போட்டாள். கல்யாணத்துக்கு நாளும் குறித்தோம். அதற்கான ஏற்பாடுகளை இந்தியாவில் செய்வதற்கு அவள் 5,000 டாலர் கேட்டாள். முதலில் மூச்சடைத்தாலும்... அங்கே இங்கே அலைந்து திரிந்து, கையேந்தி கடன் வாங்கி... பணத்தை இந்தியாவுக்கு அனுப்பிவைத்தேன்.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

***மூன்று வாரங்களுக்கு முன்னால்தான் எங்கள் கல்யாண அழைப்பிதழை இந்தியாவிலேயே அச்சடித்து அனுப்பிவைத்தாள் சப்னா சிங். இதோ, மாப்பிள்ளை ஜோருடன் நியூ டெல்லிக்கு விமானம் ஏறத் தயாராகிவிட்டேன்!***

- தொடர்ந்து சந்தேகிப்போம்...

Copyright © Vikas Swarup 2008

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

# மோட்டிவ் 6

விகாஸ் ஸ்வரூப்

தமிழில்: அஞ்சனாதேவ்

## கல்யாணப் பெண்... கனவுக் கன்னி!

''ஹாய் பொண்ணுங்களா? ஹவ் ஆர் யூ ஆல்?'' என்று விசாரித்தேன் விமானத்தில். இந்தியாவுக்கு கிளம்பிக்கொண்டு இருந்த அமெரிக்கன் ஏர்லைன்ஸ் விமானம் அது. நான் ஹாய் சொன்ன பணிப் பெண்கள் கண்ணாடி பொம்மைகள்போல இருந்தார்கள். ஆனால், சப்னா சிங் பக்கத்தில் நின்றால்... அவர்கள் தூசு!

www.t.me/tamilbooksworld

நெட்டைக் கொக்கு மாதிரி இருந்த ஒரு விமானப் பணிப்பெண் என்னை 116-பி என்கிற ஸீட் நோக்கி நடத்திப் போய் உட்காரவைத்தாள். எனக்கு அந்த இடம் ரொம்பப் பிடித்தது. ஏரோப்ளேனின் கடைசியில் ஒதுக்குப்புறமாக இருந்தது. பக்கத்திலேயே டாய்லெட் வசதி!

என் ஒரு பக்கத்து ஸீட்டில் ஒரு குண்டு லேடி உட்கார்ந்து சுவருக்கு பெயின்ட் அடிக்கிற மாதிரி லிப்ஸ்டிக் தீற்றிக்கொண்டு இருந்தாள். இன்னொரு பக்கம் இந்தியன் போல தெரிந்தவன், டைட்டாக டி ஷர்ட் போட்டு, பரீட்சைக்குப் போகிறவன் மாதிரி படித்துக்கொண்டு இருந்தான். தலையில் ஒரு குல்லா!

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

குண்டு லேடியின் தோளைத் தொட்டுக் கேட்டேன் - 'ஹல்லோ மேடம். நீங்க எங்கே போறீங்க?''

அம்மை போட்டவனைப் பார்த்து அலறி ஒதுங்குகிற தோரணையில் தன் உடம்பைக் குலுக்கிக்கொண்டாள் அந்தப் பெண்மணி. முறைத் தாள் என்னை. இந்திய இளைஞன் கொஞ்சம் ஃப்ரெண்ட்லியாகத் தெரிந்தான்.

''ஹலோ பிரதர்! வீட்டுல அம்மா, மத்தவங்க எல்லாரும் நல்லா இருக்காங்களா?'' என்று கேட்டு வைத்தேன்.

வீட்டு வாசலுக்கு வந்து நிற்கிற கன்றுக்குட்டியைப் பார்க்கிற மாதிரி என்னைப் பார்த்தான். ''எக்ஸ்கியூஸ் மீ! இப்ப நீங்க என்ன கேட்டீங்க?'' என்றான்.

நானா அசருவேன்!

''ஆப் கைஸே ஹைங்?'' என்றேன் கற்றுவைத்த இந்தியை வைத்து.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

''ஐ'ம் ஃபைன்!'' என்றான் பிரமாதமான இங்கிலீஷில்.

''கியா ஆப் பீ இந்தியா ஜா ரஹே ஹைங்?'' என்றேன் விடாப்பிடியாக.

''ஏய் மிஸ்டர். எதுக்காக நீ இப்படிப் புரியாத பாஷையில் பேசுறே? எனக்கு நீ சொல்றது புரியலே!'' என்றான் அவன் கோபமான இங்கிலீஷில்.

''நீங்க இந்தியர்தானே?'' என்றேன் குழப்பமாக.

''கரெக்‌ஷன் டியூட்! நான் அமெரிக்கன்!'' என்ற குரலில் கோபம் குறையவில்லை. தனது கோட்டுப் பைக்குள் இருந்து அமெரிக்கன் பாஸ்போர்ட்டை உருவி என் மூக்கின் முன் நீட்டினான் ஆதாரத்துக்கு.

www.t.me/tamilbooksworld

''ஓ!'' என்று வாயை மூடிக்கொண்டேன்.

பிளேன் கிளம்புவதற்கு முன் பணிப்பெண் வந்து நின்று கை, காலை அசைத்து எக்ஸர்சைஸ் செய்தாள். விமானம் கடலில் மூழ்கினால்... எந்த வழியாக ஓடிப் போய்க் குதிக்க வேண்டும் என்று சொல்லி, பயமுறுத்தினாள். நானோ, என் ஸீட் அருகே வைத்திருந்த சேஃப்டி அறிவுரை அட்டையை எடுத்து வேகமாக மனப்பாடம் செய்ய ஆரம்பித்தேன். ஆனால், விமானத்தில் இருந்து யாருமே அதைப் படிக்கிற மாதிரி தெரியவில்லை!

இதையெல்லாம் நான் யோசித்துக்கொண்டு இருந்த போதே, ஏரோப்ளேன் கிளம்பிப் பறக்க ஆரம்பித்திருந்தது. குட்டைப் பணிப்பெண் ஒருத்தி தள்ளுவண்டியில் பானங்களை அடுக்கிக்கொண்டு வந்தாள்.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

''நீங்கள் என்ன குடிக்க விரும்புகிறீர்கள் சார்?'' என்றாள்.

''கோக்!''

''ஸாரி ஸார். கோக் தீர்ந்துவிட்டது. பெப்ஸி குடிக் கிறீர்களா?''

''பரவாயில்லை. கொடு! ஆனால், என்ன விலை என்று முதலில் சொல்லிவிடு!'' என்றேன் உஷாராக.

''விலையெல்லாம் கிடையாது சார். ஃப்ரீதான்!'' என்றாள் பணிப்பெண் என் னைக் கேவலமாகப் பார்த்து.

பக்கத்து ஸீட் காரனும், ''மிஸ்டர்! நீங்கள் விமானத்தில் பயணம் செய்வது இதுதான் முதல் தடவையா?'' என்றான்.

www.t.me/tamilbooksworld

''யா!'' என்றேன் ஸ்டைலாக. அதான் சாக்கு என்று என் கையை அவனிடம் நீட்டி, ''என் பேர் லாரி பேஜ்! நீங்கள்?'' என்றேன்.

''லாரி பேஜ்?! கூகுள் உருவாகக் காரணமானவர் பெயரும் இதுவேதான்!'' என்று வியப்பு காட்டினான், குலுக்குவதற்குத் தன் கையை நீட்டாமலே!

எனக்குப் பெருமை பிடிபடவில்லை. ''யா! என்னிடம்கூட இதையேதான் நிறைய பேர் சொன்னார்கள். கூகுள் என்றால், அது கம்ப்யூட்டர்கள் சம்பந்தப்பட்ட விஷயம், சரியா?''

''ஆமாம்... அது மிகப் பிரபலமான சர்ச் இன்ஜின்!''

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

''என்ன இன்ஜினோ... என் சூபர்வைஸர் ஜானி ஸ்கார்ஃபேஸ் கம்ப்யூட்டரில் வேலை பார்ப்பதை கவனித்திருக்கிறேன். அதோடு சரி. ஒரு பன்றிக்கு பியானோ பற்றி எவ்வளவு தெரியுமோ, அவ்வளவுதான் எனக்கு கம்ப்யூட்டர்பற்றித் தெரியும்!'' என்றேன் அவனிடம்..

''அதனால் என்ன மிஸ்டர் லாரி...'' என்றவன், இப்போது சாவகாசமாகக் கையை நீட்டி, ''என் பேர் லாலதேந்து வித்யாதர் பிரசாத் மொபாபாத்ரா... சுருக்கமாக பிட்டி!'' என்றான்.

''அப்படியா பிட்டி. பார்க்க ஸ்டூடன்ட் மாதிரி இருக்கீங்களே... என்ன பண்றீங்க?''

''சரியா சொன்னீங்க. நான் இலினாய்ஸ் பல்கலைகழகத்தில் மைக்ரோ எலெக்ட்ரானிக்ஸ் மற்றும் நேனோ டெக்னாலஜி படிக்கும் ரெண்டாவது வருஷ ஸ்டூடன்ட்!''

www.t.me/tamilbooksworld

நானும் டெக்ஸாஸில் வேலை பார்க்கிற சூப்பர் மார்க்கெட் பெயரைச் சொன்னேன். ''அந்தப் பக்கம் வந்தா எட்டிப் பாருங்க. நீங்க வாங்குற பொருளுக்கு கட்டாயம் அஞ்சு பர்சென்ட் தள்ளுபடி வாங்கித் தர்றேன்!'' என்றதற்கு அவன் சிரித்தான்.

பேச்சு வளர்ந்ததில் ஒருவழியாக அவன் கலகலப்பாகிவிட்டான். ஒரு கட்டத்தில் என் பயண நோக்கம் பற்றி அவன் கேட்கவும், சப்னா சிங் பற்றி சொன்னேன். அடுத்த கொஞ்ச நேரத்தில் அவள் போட்டோவையும் அவனுக்குக் காட்டிவிட்டேன். கல்யாண ஏற்பாடு களுக்கு நான் அனுப்பிவைத்த பணத்தில் தனக்கென்று நிறைய உடை களும் எடுத்துக்கொண்டதாக எழுதியிருந்தாள் சப்னா சிங். கலர் கலரான உடைகளில் நின்று போட்டோ எடுத்து, அனுப்பியவை.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

அந்த போட்டோக்களைப் பார்த்தவன் கண்களில் திகைப்பு.

''இது... இது நீங்க சொல்ற சப்னா சிங்கா? இவங்களையா கல்யாணம் பண்ணிக்கப் போறதா சொல்றீங்க?'' என்று கேட்டான்.

''யா!'' என்றேன் பெப்ஸியை ஸ்டைலாக உறிஞ்சியபடி.

''எப்பவாவது இவங்களை நீங்க நேரில் பார்த்திருக்கீங்களா?''

''இல்லை. நியூ டெல்லி ஏர்போர்ட்டில் எனக்காக அவள் காத்திருப்பாள். உங்களோடு சேர்ந்து நானும் அப்போதுதான் முதல் முதலாகப் பார்க்கப்போகிறேன்.''

www.t.me/tamilbooksworld

''கல்யாணச் செலவுக்காக இவங்க உங்களிடம் 5,000 டாலர் கேட்டாங்களா?''

''ஆமாப்பா பிட்டி! என்ன பண்றது? அவள் ரொம்ப வறுமையான குடும்பத்தைச் சேர்ந்தவள்.''

''இவங்களோட உங்களுக்கு கட்டாயம் கல்யாணம் நடக்கும்னு நினைக்கிறீங்களா?'' என்று அவன் கேட்டது எனக்கு கடுப்பு ஏற்றியது.

''ஆமாய்யா... இன்னியிலிருந்து ரெண்டு வாரத்தில். அக்டோபர் 15-ம் தேதி! இந்திய முறைப்படி நடக்கப்போகுது. நான் ஏறிப் போறதுக்கு, வெள்ளை குதிரையைக்கூட வாடகைக்கு பேசி வெச்சிட்டதா சப்னா சிங் லெட்டர் போட்டிருக்கா!''

உதட்டைச் சுழித்து கொஞ்ச நேரம் யோசித்தான் பிட்டி.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*''ஸாரி மிஸ்டர் லாரி பேஜ்! எங்கியோ பெரிய மிஸ்டேக் நடந்திருக்கு. என்னை நான் அமெரிக்கன் என்று சொல்லிக்கொள்ள விரும்புறேனே தவிர... அடிப்படையில் இந்தியன்தான். இந்தப் பெண்ணை உங்களுக்குத்தான் சரியாத் தெரியலை. ஆனா, இந்தியாவில் இருக்கிற எல்லோருக்குமே தெரியும். இவங்க பேரு சப்னா சிங் கிடையாது. ஷப்னம் சக்ஸேனா. இவங்க இந்தி சினிமா உலகத்தைக் கலக்கிட்டு இருக்கிற கனவுக் கன்னி! நீங்க வெச்சிருக்கிற சில போட்டோக்கள்கூட இப்போ எடுத்தது கிடையாது. அவங்க நடிச்ச சினிமாக்களுக்காக எடுத்த ஸ்டில் ஃபோட்டோ!''*

*''அப்படின்னா..?''*

*''உங்களை யாரோ சக்கையா ஏமாத்தியிருக்காங்க!'' என்றான் பிட்டி.*

www.t.me/tamilbooksworld

*ஏரோப்ளேன் நெட்டுக்குத்தாக கடலை நோக்கிப் பாய்வதுபோல் இருந்தது எனக்கு!*

- தொடர்ந்து சந்தேகிப்போம்...

Copyright © Vikas Swarup 2008

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

# மோட்டிவ் 6

விகாஸ் ஸ்வரூப்

தமிழில்: அஞ்சனாதேவ்

## ஒரு அதிகாரி... ஒரு டிரைவர்

'மகாத்மா காந்தியின் ஆவி எனக்குள் நுழைந்து பேசப் போகிறது' என்று டெல்லி ஸ்ரீஃபோர்ட் ஆடிட்டோரியத்தில் ஒரு சாமியார் சவால்விட்டதும்... காந்திஜியின் கீச்சுக் குரலில் அவர் பேச ஆரம்பித்த

சில நொடிகளிலேயே ஒரு நபர் வந்து சாமியாரை சுட்டுக் கொன்றதும், வாசகர்களுக்கு நினைவிருக்கும். கண்ணெதிரில் அரங்கேறிய கொலையைத் தொடர்ந்து, ஆடிட்டோரியத்தில் இருந்த ஜனம் அல்லோலகல்லோலமாய் அலறி ஓடிய சமயம், உ.பி-யின் முன்னாள் தலைமைச் செயலாளர் மோகன் குமார் மயங்கி நாற்காலியில் சாய்ந்துவிட்டார். மறுபடி நினைவு வந்தபோது, எதிரில் இருந்த கான்ஸ்டபிள்கள் அவரை அதட்ட... ''என் பேர் மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி!'' என்று இவர் சொல்ல... கான்ஸ்டபிள் இவரது புட்டத்தில் லத்தியால் விளாச... அதிர்ச்சியை விழுங்கிக்கொண்டு ஆடிட்டோரியத்துக்கு வெளியே ஓடி வந்தார் மோகன் குமார். மேற்கொண்டு....

தட்டுத் தடுமாறி, தலையை அழுத்திப் பிடித்துக் கொண்டு ஸ்ரீஃபோர்ட் ஆடிட்டோரியத்துக்கு வெளியே வந்தார் மோகன் குமார். நாலாபுறமும் ஜனங்கள் கிறீச்சிட்டு ஓடிக்கொண்டு இருந்தார்கள். திமுதிமுவென்று

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

போலீஸ் வந்து குவிந்திருந்தது. சகட்டுமேனிக்கு டி.வி. கேமராமேன்கள் வேறு கட்டி ஏறிக்கொண்டு இருந்தார்கள்.

கார் பார்க்கிங்கில் நிறுத்தி இருந்த தனது வெள்ளி நிற ஹுண்டாய் சொனாட்டா காரை அவர் அடைந்தபோது, அவருக்காகவே காத்திருந்த பென்சில் மீசை ஆசாமி ஓடி வந்து எதிர்கொண்டான்.

''சாப்! நல்லவேளை பத்திரமா வெளியே வந்து சேர்ந்தீங்க... உள்ளே யாரையோ சுட்டுக் கொன்னுட்டாங்களாமே சாப்? கூட்ட நெரிசலில் வேறு ரெண்டு பேர் அவுட்டாமே!''

www.t.me/tamilbooksworld

மோகன்குமாரின் கவலையோ அவருடைய வைப்பாட்டி மீது!

''ப்ரிஜ்லால்... என்னோடு இருந்த ரீட்டா சேத்தியும் இநதக் கூட்டத்தில் புகுந்துதானே ஓடி வந்து இருக்கணும். அவள் எங்கே?''

''வேற ஒரு அம்மாளோடு சேர்ந்து மெர்சிஸிடிஸ் கார்ல ரீட்டா மேடம் ஏறிப் போனதை நான் பார்த்தேன், சாப்!''

''என்னது! நான் வர்ற வரைக்கும் காத்திருக்கக்கூட அவளுக்குப் பொறுமை இல்லையா? சரி, சரி... வண்டியை எடு!''

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*காரின் பின் கதவை அந்த பென்சில் மீசை டிரைவர் திறந்துவிட... ஏறி உட்காரப்போன சமயம் மோகன் குமாரின் முகம் சுருங்கியது.*

*''ஏய் ப்ரிஜ்லால்! கார் கதவுல இதென்ன இவ்ளோ பெரிய கீறல்?'' டிரைவரும் பார்த்துத் திடுக்கிட்டான்.*

*''அடடா... குறுக்கே மறுக்கே ஆளுங்க ஓடிக்கிட்டே இருந்தாங்க சாப். யாராச்சும் கான்ஸ்டபிளோட லட்டி பட்டுத்தான் இந்தக் கீறல் வந்திருக்கணும்!''*

*''கார் பக்கத்துல காவலுக்கு நிக்காம, நீ எங்கே பராக்கு பார்க்கப் போயிருந்தே?''*

*''சாப், நீங்க வரலியேனு கவலையாயிடுச்சு. உங்களைத் தேடிக்கிட்டு வந்தப்பதான் இப்படி ஆகியிருக்கு. மன்னிச் சிடுங்க.''*

*''மூளை முழுசும் வேலையில்தான் இருக்கணும்னு உனக்கு லட்சம் தடவை சொல்லியாச்சு. இந்தக் கீறலை சரிபண்ண எவ்ளோ செலவாகும் தெரியுமா? வர்ற மாச சம்பளத்தில் பிடிச்சாத்தான் உனக்குப் புத்தி வரும்!''*

*ஐயாவுக்குக் கெட்ட கோபம் வந்தால் என்னவெல்லாம் பேசுவார், செய்வார் என்பது பிரிஜ்லாலுக்குத் தெரியாதா என்ன? அவர் கோபம்தான் உத்தரப் பிரதேசம் முழுக்கவும் ஃபேமஸாச்சே! வாயே திறக்காமல் வண்டியைக் கிளப்பினான்.*

*அவனைப் பொறுத்தவரை, ஐயாவும் அனுமார் சாமியும் ஒன்று. ஐயாதான் அவனுடைய எல்லா சுகதுக்கங்களையும் நிர்ணயிக்கிற அன்னதாதா!*

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*மின்சார வாரியத்தில் 27 வருடங்களுக்கு முன்னால் அவனுக்கு வேலை வாங்கிக் கொடுத்தவர் அவர். அப்புறம் சர்க்கரை வாரியத்துக்கு மாறி வந்தபோது சர்க்கார் வேலையை பெர்மெனன்ட் பண்ணிக் கொடுத்தவரும் அவரே. 'டிரைவிங் கத்துக்கோ... உதவும்' என்று அவர் சொல்லித்தான் கற்றுக்கொண்டான். கடந்த 20 வருடங்களுக்கும் மேலாக, அவர் அரசுத் துறையில் எந்தப் பிரிவுக்கு மாறிப்போனாலும், அரசாங்கம் அவருக்கு ஒதுக்கும் வெள்ளை அம்பாசிடர் காருக்கு அவன்தான் டிரைவர்.*

*ஆறு மாதங்களுக்கு முந்தி மோகன் குமார் ஓய்வு பெற்றபோது, இவனுக்கு மூன்று வருஷ சர்வீஸ் மிச்சம் இருந்தது. இருந்தாலும், தன் எஜமான விசுவாசத்துக்கு அடையாளமாக இவன் வி.ஆர்.எஸ். எழுதிக் கொடுத்துவிட்டு, இவருடைய சொந்த வண்டிக்கு டிரைவராக வந்துவிட்டான்.*

www.t.me/tamilbooksworld

*அந்த விசுவாசம்கூட பிரிஜ்லாலைப் பொறுத்தவரை ஒரு சொந்தக் காரணமாகத்தான். ஐயா என்றைக்காவது ஒருநாள் தன்னைப்போலவே, தன் மகன் ரூபேஷுக்கும் சர்க்கார் ஆபீஸில் டிரைவர் வேலை வாங்கித் தருவார் என்று நம்பினான். அவர் மஜாவாக இருந்த ஒரு நேரத்தில் அவரிடமே காதில் போட்டான். அவரும், டெல்லியிலேயே கவர்மென்ட்டில் வேலை வாங்கித் தருவதாகச் சொல்லி இருக்கிறார்.*

*மகன் ரூபேஷுக்கு அரசாங்க வேலை கிடைத்து விட்டால், 19 வயசாகும் தன் மகள் ரன்னோவுக்கு ஒரு கல்யாணத்தைப் பண்ணிவைத்து, மொத்தமாக நிம்மதியாகிவிடலாம் என்று கணக்கு போட்டுக் காத்திருந்தான் ப்ரிஜ்லால். அதுவரை மோகன் குமார் தன் முகத்தில் காறித் துப்பினாலும் துடைத்துப் போட்டுவிட்டு, 'சலாம் சாப்' போடத் தயாராக இருந்தான்!*

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

ரியவ் வியூ மிரரில் ஸ்ரீஃபோர்ட் ஆடிட்டோரியம் சிறிதாகி மறைவதைப் பார்த்துக்கொண்டே, தன் மொபைல் போனை ஸ்விட்ச் ஆஃப் செய்தான் பிரிஜ்லால். வண்டி ஓட்டும்போது அது மணியடித்தால்கூட சாப் கடித்துத் துப்பிவிடுவார்.

மோகன்குமார் ஸீட் பெல்ட்டைப் போட்டுக்கொண்டே வெளியே மேகத்துக்கு நடுவில் மங்கிப்போய் இருந்த நிலாவைப் பார்த்தார். டிராஃபிக் குறைந்திருந்தது. டெல்லி போக்கு வரத்துக் கழக பஸ்கள்கூட ரொம்ப அரிதாகவே கிராஸ் ஆகின. 54.சி அவுரங் காபாத் ரோடு பங்களாவுக்குள் கார் நுழைந்துவிட்டது. தன் பங்களாவைப் பார்க்கும்போதெல்லாம் மோகன் குமாருக்கு மனசு பெருமிதத்தில் துள்ளும். மார்பிள் வைத்து அப்படி இழைத்துக் கட்டி இருந்தார். அதன் போர்ட்டிகோ மாடல் என்ன, அசாத்தியமான புல்தரை என்ன... சற்றுத் தள்ளி வேலைக்காரர்களுக்குக்கூட குடியிருப்பு ஒதுக்கி இருந்தார். பிரிஜ்லால் குடும்பம் தவிர, சமையல்காரன் கோபி, தோட்டக்காரன் பிஷ்ணு ஆகியோரும் அங்கே குடியிருந்தனர்.

www.t.me/tamilbooksworld

''எந்த வேலைக்குப் போனாலும், நல்லா உழைடா மகனே! அப்பதான் ஒருநாள் நீயும் சாப் மாதிரி பெரிய ஆளா வருவே! இந்த மாதிரி ஒரு பங்களாவில் நீயும் குடியிருக்கணும். நான் வாங்குற சம்பளத்தை எட்டு வருஷத்துக்கு சேர்த்துவெச்சாத்தான் இந்த மாதிரி பங்களாவுக்கு ஒரு மாச வாடகைப் பணத்தைச் சேர்க்க முடியும்..'' என்று கண்கள் மின்ன தன் மகன் ரூபேஷிடம் பிரிஜ்லால் சொல்வதுண்டு.

போர்ட்டிகோவிலேயே மோகன் குமாரின் மனைவி ஷாந்தி நின்றிருந்தாள். சின்ன உருவம்தான். நரைத்த தலைக்கு டை அடிக்கவில்லை. பொதுவில் சிரித்த முகமாக இருக்கிறவள் முகத்தில் அன்று ஏகப்பட்ட கவலைக் குறி. அதுவேறு அவள் வயசைக் கூட்டிக்

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

காட்டியது. ''அப்பாடா... வந்து சேர்ந்தீங்களா? அந்த ஆடிட்டோரியத்துக்குள் நடந்த கலாட்டாவை பிரிஜ்லால் சொன்னதும் எனக்கு நிம்மதியே போச்சு!'' என்று புருஷனை வரவேற்றாள்.

மோகன் குமார் மளுக்கென்று திரும்பி டிரைவர் மீது ஒரு நெருப்புப் பார்வை போட்டார். ''நான் போற வர்ற இடத்தையெல்லாம் மைக் வெச்சு சொல்லிட்டிருக்கக் கூடாதுனு எத்தனை தடவை சொல்லி இருக்கேன்? அதுக்குள்ள உன்னை யாரு வீட்டுக்குப் போன் பண்ணச் சொன்னது?''

பிரிஜ்லால் அப்படியே பெண்டாகி, ''அங்கே நடந்த அமளிதுமளியில் பயந்துபோய்ட்டேன் சாப். அம்மா கிட்டே சொல்றதுதான் நல்லதுனு தோணுச்சு!''

www.t.me/tamilbooksworld

பொடேரென்று கார் கதவை மூடிவிட்டு விலுக்கென்று நடந்து வீட்டுக்குள் போனார் மோகன் குமார்.

''அந்த ஆடிட்டோரியத்துல அப்படி என்னதான் கூத்து? எல்லாம் அந்த சிறுக்கி ரீட்டா சேத்தி பண்ற வேலைதானே... அந்த சூனியக்காரி அப்படி என்னதான் மந்திரம் போட்டு உங்களை இடுப்புல முடிஞ்சுவெச்சிருக்காளோ?'' - புலம்பிக்கொண்டே பின்தொடர்ந்தாள் ஷாந்தி.

''பாரு ஷாந்தி. இந்த விஷயத் தைப்பத்தி எத்தனை தடவை பேசினாலும் உனக்குப் பிரயோஜனம் கிடையாது, புரியுதா?'' என்று ஆள்காட்டி விரல் நீட்டி எச்சரித்த மோகன்குமார்,

''அந்த கோபி பயல், என் ரூம்ல ஐஸூம் சோடாவும் ரெடியா வெச்சிருக்கானா?'' என்று கேட்டுக் கொண்டே படியேறினார்.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*''வெச்சிருக்கான். போங்க.... எவ்வளவு சீக்கிரம் உங்க ஈரலை நாசம் பண்ணிக்க முடியுமோ, பண்ணிக்கோங்க!'' என்றபடி நகர்ந்தாள் ஷாந்தி.*

*''எல்லாம் எனக்குத் தெரியும்!'' என்று மடேரென அறைக் கதவை அறைந்து மூடினார் மோகன் குமார்.*

- தொடர்ந்து சந்தேகிப்போம்...

Copyright © Vikas Swarup 2008

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

# மோட்டிவ் 6

விகாஸ் ஸ்வரூப்

தமிழில்: அஞ்சனாதேவ்

## க்றீச்... டங்கார்... ச்சீலீர்!

சாமியார் சுடப்பட்டதை நேரில்பார்த்து சுமாராக மூன்று வாரங்கள்ஓடியிருக்கும்.

ஆடிட்டோரியத்தில் நடந்ததெல்லாம் கிட்டத்தட்ட மோகன்குமார் நினைப்பில் இருந்து முக்கால்வாசி மங்கியிருந்தது. வழக்கம் போல... தான் கன்சல்டன்ஸி கொடுக்கிற தனியார் நிறுவனங்களின் போர்டு மீட்டிங்குகளுக்குப் போய் வந்தபடி இருந்தார் மோகன்குமார். புதுசாக ஒரு கம்பெனிக்கும்கூட கன்சல்டன்ட் பொறுப்பை ஏற்றிருந்தார். ஞாயிற்றுக்கிழமைகளில் கோல்ஃப் ஆடினார். வாரம் ரெண்டு நாளைக்கு வைப்பாட்டி ரீட்டா சேத்தி வீட்டுக்குப் போகவும் தவறவில்லை.

www.t.me/tamilbooksworld

எல்லாம் நார்மலாக நடக்கிற மாதிரியே இருந்தாலும், ஏதோ ஓர் அமானுஷ்யமான விஷயம் அவருக்குள் நடக்கிற மாதிரி இருந்தது. ஏதோவொரு நினைவு விரல் அவருடைய மனசாட்சிக்குள்புகுந்து அசைத்துக்கொண்டு இருக்கிற மாதிரியான உணர்வு அது.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

காலையில் கண் விழித்து எழும்போது சிலநாட்கள் அவர் கட்டிலுக்கு வெகு தொலைவில் தரையில் படுத்திருந்தார். ஒருநாள் பாத்ரூமில்கூட! படுக்கையில் இருந்தவர், எப்படி அங்கே வந்து படுத்தார் என்று என்ன யோசித்தும் புரியவில்லை. ஓரிரு நாள் போர்டு மீட்டிங்குகளில்கூட தனது கட்டுப்பாட்டை மீறி ஏதோ சில வார்த்தைகளை உதிர்த்துவிட்டு, நாக்கைக் கடித்துக் கொண்டு குழம்பினார். ரீட்டாவோடு பகலில் படுத்திருக்கும் நேரத்தில், உற்சாகமாக இயங்கத் தயாராகும் சமயத்தில் தடக்கென்று ரொம்ப வயசானதுபோல உணர்ந்து, மனசிலும் உடம்பிலும் ஒருவித தளர்வு வந்து, ஆசை இழந்து மறுபடி பைஜாமாவை மாட்டிக்கொண்டதும் நடந்தது.

''போஸ்ட் டிராமாடிக் ஸ்ட்ரெஸ் டிஸ்-ஆர்டர்தான் இது!'' என்றார் அவருடைய குடும்ப டாக்டர் சோனி. எம்.ஆர்.ஐ. ஸ்கேனிங்கெல்லாம் எடுத்துப் பார்த்தும், தப்பாக ஏதும் இல்லை.

''ஏதோ நோய் பேரு சொன்னீங்களே, டாக்டர்?''

''ஒரு ஆளை நட்டு நடு மேடையில் வெச்சு சுட்டுக்கொல்றதையும், ரத்தம் பீய்ச்சறதையும் நேருக்கு நேராப் பார்த்திருக்கீங்க. அந்த அதிர்ச்சி

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*யோட எஃபெக்ட் உங்களால் உணர முடியாத அளவுக்கு அடிமனசுக்குள் ஏறி உட்கார்ந்திருக்கும். அந்த ஆடிட்டோரியம் சம்பவத்தின் பின்விளைவுதான் இதெல்லாம். சிலருக்குக் கெட்ட கனவா வரும்... எப்பவோ நடந்த ஷாக்கான விஷயங்கள் ஃப்ளாஷ்பேக்கா ஓடும்... இன்னும் சிலருக்கு தூக்கத்துல நடக்கிற வியாதியும் தற்காலிகமா வரக்கூடும். நல்ல தூக்க மருந்தாத் தர்றேன். ஒரு வாரத்துல ஜம்முனு ஆயிடுவீங்க...'' என்றார் டாக்டர் சோனி.*

*டெல்லியில் பிக்காஜி காமா ப்ளேஸ் பக்கம் நீங்கள் காரை நிறுத்த முயற்சி செய்திருந்தால் புரியும் - பார்க்கிங் இடம் கிடைப்பது எத்தனை கஷ்டம் என்று. அந்த ஏரியாவில்தான் மோகன் குமாரின் கன்சல்டன்ஸி ஆபீஸ் இருந்தது. அன்றைக்கு அவர் இறங்கி உள்ளே போனதும், வாகான இடம் தேடிப் பார்த்து காரை நிறுத்தினான் டிரைவர் ப்ரிஜ்லால். வழக்கமாக அந்த ஏரியா டிரைவர்கள் கூடுகிற இடத்துக்குப் போய் ஒரு ரவுண்டு ரம்மி ஆடினான். மொபைல் கூப்பிட்டது. ப்ரிஜ்லாலின் மகள் ரன்னோவை சமீபத்தில்தான் பெண் பார்த்துவிட்டுப் போயிருந்தார்கள். பையன் ரயில்வேயில் வேலை பார்க்கிறான். அந்த மாப்பிள்ளையின் வீட்டில் இருந்துதான் கூப்பிட்டார்கள். ப்ரிஜ்லால் டவுரியாகத் தருவதாகச் சொல்லியிருந்த தொகைக்கும் மேலே 25 ஆயிரம் கேட்டார்கள். மென்று முழுங்கி யோசித்துவிட்டு ஏதோ ஒரு குருட்டு தைரியத்தில், தர ஒப்புக்கொண்டான் ப்ரிஜ்லால். பொடி நடையாகப் பக்கத்துக் கோயிலுக்குப் போய், நல்லபடியாக கல்யாணம் முடிய வேண்டிக்கொண்டு வந்தான்.*




tamilbooksworld

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

மூன்று மணி வாக்கில் மோகன் குமார் வந்து காரில் ஏறினார். ரீட்டா வீட்டுக்குத்தான். இவன் ஸ்வீட் பாக்ஸை நீட்டவும், ''என்ன விஷயம்?'' என்றார் மந்தகாச மாக. ''எல்லாம் உங்க ஆசீர்வாதம்தான் சாப்!'' என்று விஷயத்தைச் சொன்னான்.

''வெரிகுட். ஷாந்திகூட சொல்லிட்டிருந்தா, நீ உன் மகளுக்கு மாப்பிள்ளை பார்க்கிறேன்னு!''

''சாப், அதுல ஒரு பிரச்னை... மேற்கொண்டு 25 ஆயிரம் டவுரி கேக்கறாங்க. நீங்க கடனாக் கொடுத்தீங்கன்னா...''

மோகன்குமார் சட்டென்று ஜன்னலுக்கு வெளியே பார்வையைத் திருப்பிக்கொண்டார்.

www.t.me/tamilbooksworld

''ஏற்கெனவே உனக்கு 15 ஆயிரம் அட்வான்ஸ் கொடுத்திருக்கேன். இப்ப இது வேறயா? அடுத்தடுத்து கடன் வாங்கினா, திருப்பித் தர முடியாம நீதான் அவஸ்தைப்படுவே''

''சாப்...''

''எதுக்குத்தான் இப்படி சக்திக்கு மீறி செலவு பண்ணி, பெரிசாக் கல்யாணம் நடத்துறீங்களோ... வீட்டுல திங்கறதுக்கே எதுவும் இருக்காது. ஆனா, பொண்ணுக்கு மாப்பிள்ளை மட்டும் வசதியானவனா உங்களுக்கு வேணும். என்னை டிஸ்டர்ப் பண்ணக் கூடாது, புரிஞ்சுதா? நான் முக்கியமான ஒரு ரிப்போர்ட்டைப் படிக்கணும்!'' - மோகன்குமார் ஒரு ஃபைலைப் பிரித்து வைத்துக்கொண்டார்.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*வசந்த விஹார் பக்கம் டிராஃபிக் தேங்கியது. கல்யாண ஊர்வலம் போனது. இந்தி சினிமா பாட்டு ஒன்றை பேரிரைச்சலாக இசைத்துக்கொண்டு நகர்ந்தது பேண்டு வாத்திய கோஷ்டி. கல்யாண கும்பலில் மொத்தமே 20 பேர்கூட இருக்காது. ரத்தசோகை பிடித்த மாதிரி ஒரு மாப்பிள்ளை. அவனைவிட சோனியான குதிரை மேலே உட்கார்ந்திருந்தான். காடி கலரில் ஒரு ஷெர்வானி மாட்டியிருந்தான். சக ஏழையாக, பரஸ்பர பரிதாபத்தோடு அந்தக் கல்யாண ஊர்வலத்தைப் பார்த்தான் ப்ரிஜ்லால்.*

*பணத்தை மட்டும் புரட்டிவிட்டால், கொஞ்சம் வசதியாகவே நம்ம மகள் கல்யாணத்தை நடத்திவிடலாம் என்று நினைத்தான். ஒரு நல்ல இசைக் குழுவாகப் போட்டு நாலு பேர் ரசிக்கிற மாதிரி ஊர்வலத்தையும் நடத்திவிடலாம். ஆபீஸர்ஸ் கிளப்பில் பெரிய வீட்டுக் கல்யாணங்கள் நடக்கிற சமயங்களில் உள்ளே இருந்து வருகிற ஷெனாய் இசையை அவன் கேட்டிருக்கிறான். மல்லிகை, மரிக்கொழுந்து வாசத்தையும் நுகர்ந்திருக்கிறான். சாப் கொஞ்சம் மனசு வைத்தால், ஆபீஸர்ஸ் கிளப்பேகூட கல்யாண வரவேற்புக்கு இலவசமாகக் கேட்டு வாங்கிவிடலாம்.*

www.t.me/tamilbooksworld

*மாப்பிள்ளையின் அப்பாவால் நம்பவே முடியாது. ''மண்டபம் ஏதாச்சும் மாறிப்போச்சுங்களா?'' என்பார். ''இல்லீங்க... உங்க மகனுக்கும் என் மகளுக்கும் இந்த ஆபீஸர்ஸ் கிளப்பில்தான் கல்யாண வரவேற்பு. எல்லாம் எங்க முதலாளி கருணை!'' என்று மோகன் குமார் பக்கம் ப்ரிஜ்லால் கற்பனையில் கை நீட்டிக் காட்ட....*

*''டேஏஏஏஏய்! என்ன பண்றே? முட்டாள்... பிரேக் போடு... பிரேக் போடு!'' என்று முதலாளியின் அலறல் பெரிதாகக் கேட்டது. அதற்குள் காரியம் கை மீறிவிட்டது. 'டங்கார்' என்று ஒரு மோதல்...*

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

’ர்ரொய்ங்’கென்று காதுக்குள் ஒரு கிறீச்சல்.... ’ச்சிலீர்’ என்று கண்ணாடிகள் கல்கண்டாகச் சிதறுவது தெரிந்தது. ஸ்டீயரிங் வீல் மீது ப்ரிஜ்லாலின் தலை பலமாக மோதியது. பெரும் குலுக்கலுடன், அலறியபடி முன்னால் வந்து தலையை மோதிக்கொண்ட மோகன் குமார்... தீராத மயக்கத்தில் ஆழ்ந்துபோனார்.

- தொடர்ந்து சந்தேகிப்போம்...

Copyright © Vikas Swarup 2008

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

## மோட்டிவ் 6

விகாஸ் ஸ்வரூப்

தமிழில்: அஞ்சனாதேவ்

### ஆசைக் காதலி அழகிய வில்லி!

விபத்தின் அதிர்ச்சியில் இருந்து டிரைவர் ப்ரிஜ்லால் மீண்டு வந்து கண்களைக் கசக்கியபடி நிமிர்ந்து பார்த்தபோது, கார் லேசாக நடைபாதை மீது ஏறி இருந்தது. அதன் மோதலில், ஒரு விளக்குக் கம்பம் அசாத்தியமான ஒரு கோணத்தில் 'ஙொய்' என்று வளைந்து கிடந்தது.

www.t.me/tamilbooksworld

வாயோரம் வழிந்த ரத்தத்தைக்கூட துடைக்காமல் வண்டியைவிட்டு இறங்கி முன்னே போய்ப் பார்த்தான் ப்ரிஜ்லால். ஹ¨ண்டாய் சொனாட்டாவின் முன் பக்கம் நச்சென்று நசுங்கி இருந்தது. வாங்கிய அடியைப் பார்த்தால், உள்ளே ரேடியேட்டரும் டேமேஜ் ஆகியிருக்கும்.

'முடிஞ்சுபோச்சு. என் 20 வருஷ சர்வீஸில் இதுதான் முதல் ஆக்ஸிடென்ட். ஆனால், இதிலேயே எல்லாம் முடிஞ்சுபோச்சு...' - அவன் உடம்பு நடுங்க ஆரம்பித்து.

'காரில் ஒரு கீறல் விழுந்ததுக்கே கத்திக் குமிப்பாரு நம்ம சாப்... இந்தளவு ஆகிப் போச்சுன்னா கட்டாயம் இனி வேலையில் இருக்க விட

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*மாட்டார். மகன் ரூபேஷுக்கு சர்க்கார் வேலை... மகள் ரன்னோவுக்கு கல்யாணம்... எல்லாமே காலி' என்று புலம்பிக்கொண்டான் தனக்குள்.*

www.t.me/tamilbooksworld

*உடைந்த கண்ணாடி வழியே பின் ஸீட்டைப் பார்த்தான். மோகன் குமார் கண்கள் மூடி அப்படியே சிலையாகச் சாய்ந் திருந்தார். செத்த பிணம்மாதிரி!*

*இப்படியே ஓடிப்போய்... பொண்டாட்டி, மகன், மகளைக் கூட்டிக்கொண்டு ரயில்வே ஸ்டேஷனை அடைந்து, லக்னோ மெயில் பிடித்து சொந்த கிராமத்துக்கு ஓடி, கொஞ்ச நாளைக்கு அங்கே மறைந்திருப்பது. பிறகு, வேறு ஏதாவது பெரிய ஊராகப் பார்த்துப் போய் டிரைவர் வேலை வாங்குவது. பெண்ணுக்கு வேறு ஒரு வரன் பார்ப்பது.*

*இதைவிட்டால் வேறு என்னதான் பண்ணுவது..?*

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*இதற்குள் கல்யாண குரூப்பில் இருந்தவர்கள் வந்து ப்ரிஜ்லாலை சூழ்ந்து கொண்டார்கள். டிரம்பெட் ஊதுகிற ஆள் கவலையாக, ''ரத்தம் வருது... தொடைச் சிக்கோ'' என்றான். குதிரையில் இருந்து ஷெர்வானி மாப்பிள்ளை இறங்கி வந்து, காரின் நசுங்கிய முன் பகுதியை ஆர்வமாக எட்டிப் பார்த்தான். எங்கிருந்தோ தோன்றிய கான்ஸ்டபிள், ''ஏய், நகரு.. நகரு... என்ன வேடிக்கை?'' என்று லத்தியைச் சுழற்றினான்.*

*பின் ஸீட் கதவைத் திறந்த கல்யாண மாப்பிள்ளை, மினரல் வாட்டர் பாட்டில் தண்ணீர் எடுத்து மோகன் குமார் முகத்தில் சுளீரென்று தெளித்தான். சிலுப்பிக்கொண்டு நிமிர்ந்த மோகன் குமார் காரைவிட்டு இறங்கி கூட்டத்தைச் சுற்றுமுற்றும் பார்த்தார்.*

*''இப்ப நான் எங்கே இருக்கேன்?'' என்றார்.*

www.t.me/tamilbooksworld

*கூட்டத்துக்கு நடுவே ஒளிந்து பார்த்துக் கொண்டு இருந்த ப்ரிஜ்லாலுக்கு அழுகையே வந்துவிட்டது. ஓடிப் போய் முதலாளி காலில் விழுந்து, ''சாப்... எல்லாம் இந்தப் பாவி செஞ்ச தப்பு... மன்னிச்சிடுங்கோ ஸாப்'' என்று சின்னப் பிள்ளையாகத் தேம்பினான்.*

*மெதுவாக அவன் தோளில் கை கொடுத்துத் தூக்கி நிறுத்திய மோகன் குமார், ''நீ யாரு?'' என்றார்.*

*இவன் பேந்தப் பேந்த முழித்தான். ''நான்தான் ப்ரிஜ்லால் ஸாப். உங்க டிரைவர்!''*

*''ஏம்ப்பா... அடிபட்டதுல இந்த ஆளுக்கு நினைவு தப்பிப் போயிடுச்சா?'' என்று மாப்பிள்ளை பக்கம் திரும்பிக் கேட்டார் கான்ஸ்டபிள்.*

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

''நான் நல்ல நினைப்போடதான் இருக்கேன். நீதானே அன்னிக்கு

என்னை ஸ்ரீரிஃபோர்ட் ஆடிட்டோரியத்தில் லட்டியால் அடிச்சது?'' - புன்னகைத்த முகத்தோடு கேட்டார் மோகன் குமார்.

கான்ஸ்டபிளுக்குத்தான் நினைவில் இல்லை. ''இந்தாளுக்கு மறை கழண்டுபோச்சுபோல..?'' என்றவர், ''ஐயா... நான் இப்பதாங்க முதல் முதலா உங்களைப் பார்க்கிறேன். லட்டியால அடிக்கிறதாவது...'' என்றார்.

''பலப் பிரயோகம் என்பது எப்போதுமே தப்பு. அதுவும் சட்டத்தைக் காக்கிற பொறுப்பில் இருக்கிற உங்களைப் போன்றவர்கள் வன்முறையை நாடவே கூடாது!'' என்றார் சாந்தமாக.

''உங்க முதலாளிக்கு நிச்சயமா ஏதோ ஆயிடுச்சுப்பா'' என்று நெற்றிப்பொட்டில் ஆள்காட்டி விரலை வைத்து வட்டமாக சுற்றிக் காட்டிச் சிரித்தார் கான்ஸ்டபிள்.

www.t.me/tamilbooksworld

மடேர் மடேரென்று தலையில் அறைந்துகொண்ட ப்ரிஜ்லால், ''ஐயோ... மூளை பிசகிடுச்சா? எல்லாம் என்னால வந்தது...'' என்று கேவ ஆரம்பிக்க,

''ப்ரிஜ்லால்... எனக்கு ஒன்னும் ஆகலை. உனக்குத்தான் ரத்தம் வருது பாரு. இப்ப இருக்கிற கண்டிஷனில் நம்ம கார் ஓடுமா, பாரு. அல்லது. நான் டாக்ஸி பிடிச்சுப் போய்க் கறேன். நீ ரிப்பேருக்குக் கொண்டுபோ!''

தனக்குத்தான் ஏதாவது ஆகிவிட்டதோ என்று இப்போது சந்தேகம் வந்தது ப்ரிஜ் லாலுக்கு. கிள்ளிப் பார்த்துக்கொள்ளவும் நேரம் இல்லாமல்

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

ஓடிப் போய் டிரைவர் ஸீட்டில் உட்கார்ந்து சாவியைத் திருகினால், வண்டி ஸ்டார்ட் ஆகிவிட்டது.

''வண்டி போகும் சாப்'' என்று கிட்டத்தட்ட கத்தினான். மோகன் குமார் அமைதியாக ஏறி மறுபடியும் பின் ஸீட்டில் உட்கார்ந்துகொள்ள... நடுங்கும் கைகளால் ஸ்டீயரிங்கைத் திருப்பினான் டிரைவர்.

''இப்போ நாம் எங்கே போய்க்கொண்டு இருந்தோம்?''

''ரீட்டா மேடம் வீட்டுக்கு ஸாப்...''

''அது யாரு?''

''அங்கே போய்ச் சேர்ந்ததும் உங்களுக்கு தன்னாலே ஞாபகம் வந்திடும் சாப்'' என்றான் ப்ரிஜ் லால் பிரமிப்பு விலகாமல்.

www.t.me/tamilbooksworld

வீட்டின் அழைப்பு மணியை கொஞ்ச நேரம் அழுத்திவிட்டு, அவன் தர்மசங்கடமாக விலகி நின்றான். பிங்க் நிற நைட் கவுனில் வந்து கதவைத் திறந்தாள் ரீட்டா.

''என்ன டார்லிங், இவ்ளோ லேட்டா வர்றீங்க?'' என்றபடி மோகன் குமாரின் உதட்டில் முத்தம் வைக்கப் பார்த்தாள். வண்டு கொட்டிய மாதிரி பதறி நகர்ந்தார் மோகன்குமார்.

''கூடாது... கூடாது... நீ விலகி நில்லு'' என்று உடல் நடுங்கினார்.

''என்னாச்சு டார்லிங் உங்களுக்கு?''

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

''நீ யார் என்று தெரிந்துகொள்ளலாமா?''

ரீட்டாவுக்கு முதலில் எரிச்சல் தோன்றியது. பிறகு, ''ஐயா செம மூடுல இருக்கீங்கபோல...'' என்று சிரித்தவள், உடம்பை ஜப்பானிய பாணியில் வளைத்து நிமிர்ந்தாள்.

''மகா கனம் பொருந்திய மோகன் குமார் அவர்களே... என் பெயர் ரீட்டா சேத்தி. நான் உங்களுடைய ஆசை நாயகி. வாரம் இரு முறை இங்கே வருவதும், என்னோடு படுக்கையில் களித்துவிட்டுச் செல்வதும் தாங்கள் தவறாமல் கடைப்பிடிக்கும் வழக்கங்கள்!'' என்றாள். ப்ரிஜ் லால் நெளிந்தபடி தூர நகர்ந்தான்.

''மனைவி அல்லாத பெண்ணுடன் உறவா? ஆண்டவனே!'' என்று மோகன் குமார் சுவரைப் பிடித்துக்கொள்ள...

www.t.me/tamilbooksworld

''இதோ பாருங்க. இதெல்லாம் ஓவர்'' என்று சிடுசிடுத்தாள் ரீட்டா.

''மிஸ் சேத்தி... நான் பிரம்மச்சர்ய விரதம் பூண்டிருப்பது தங்களுக்குத் தெரியாதா?''

''சரிதான்... ஏதாச்சும் டிராமா கம்பெ னியில் சேர்ந்துட்டீங்களா? மகாத்மா காந்தி வேஷம் கொடுத்து, வசனத்தை பிராக்டிஸ் பண்ணச் சொல்லி இருக்காங்களா?'' - மறுபடி சிரிக்க முயன்றாள் ரீட்டா.

''நான் காந்தியேதான்!''

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*இப்போது அடக்க முடியாமல் விழுந்து விழுந்து சிரித்தாள். ''அப்ப சரி... காந்தியாவே இருந்துட்டுப் போங்களேன். காந்தியோட 'கீப்'னு சொல்லிக்கிறதில் எனக்கு ஒண்ணும் ஆட்சேபனை இல்லை!''*

*''சிரிக்காதே பெண்ணே! உனக்கு நான் முன்பே சொல்லியிருக்கவேண்டும்... இருந்தாலும் இப்போது சொல்கிறேன். வெறுக்கத்தக்க பாவங்கள் மொத்தம் ஏழு. கொள்கை யில்லாத அரசியல், உழைப்பில்லாத செல்வம், குணமில்லாத அறிவு, நேர்மையில்லாத வியாபாரம், மனிதநேயம் இல்லாத அறிவியல், தியாகம் இல்லாத பக்தி, மனசாட்சியே இல்லாத மகிழ்ச்சி...'' - கூடவே விரல் விட்டுக்கொண்டு வருகிறார்.*

*''இதில் மனசாட்சியே இல்லாத மகிழ்ச்சி பல விதங்களில் வரும். ஒரு மனிதனுக்கும் அவன் மனைவி அல்லாத ஒரு பெண்ணுக்கும் இடையே உண்டாகிற உடல் உறவும்கூட அந்த வகைதான். நான் சொல்வதன் முக்கியத்துவம் உனக்குப் புரிகிறதல்லவா?''*

www.t.me/tamilbooksworld

*சட்டென்று சினிமாக்களில் வருகிற வில்லி முகத்துக்கு மாறினாள் ரீட்டா.*

*''புரியுதுய்யா... நல்லாப் புரியுது. அதாவது, என் மேல நிஜமான அன்பு இல்லை உனக்கு. வெறும் அரிப்புக்குத்தான் என் வீட்டுக்கு வந்து போய்ட்டிருந்தே! இப்ப என்னை உனக்கு வெறுத்துப்போச்சு. அதான் ஏதோ டிராமா போட்டுக் கழட்டிவிடப் பார்க்கிறே. இதை சுத்தி வளைக்காம சொல்ல வேண்டியதுதானே...'' என்று பல்லைக் கடித்தாள்.*

*''போய்யா... முதல்ல இங்க இருந்து கிளம்பு. உன்னை மாதிரி ஒரு சுயநலம் புடிச்ச *****பனை நம்பி இத்தனை நாள் என் இளமையைக்*

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

கழிச்சேன் பாரு. என்னை செருப்பால அடிக்கணும்'' - மோகன் குமாரின் புஜத்தைப் பிடித்துத் தள்ளினாள் ரீட்டா.

''கிளம்புகிறேன். அதற்கு முன் உனக்கு பிரத்யேகமாக ஓர் அறிவுரை சொல்லவா... தயவு செய்து இனியாவது ஒழுக்கத்துடன் வாழப் பழகு. கற்பு என்பது நினைத்துப் பார்க்கவும் முடியாத ஓர் உறுதியை அளிக்கக்கூடியது!''

''டேய் பன்னி!'' கிறீச்சிட்டாள் ரீட்டா. பொளீரென்று மோகன் குமாரின் இடது கன்னத்தில் ஓர் அறைவிட்டாள். தடுமாறிக் கதவின் மேல் சாய்ந்தார் அவர்.

''இது தேவையற்ற ஒன்று. ஒரு வேளை இந்த மூர்க்கத்தனம் உனக்கு அமைதியைத் தரும் என்றால், என் வலது கன்னத்திலும் அறைந்து உன்னை சாந்தப்படுத்திக்கொள்!''

www.t.me/tamilbooksworld

இந்த தடவை இன்னும் வேகமாக அவரைத் தள்ளிவிட்டு, ''யோவ் மோகன் குமாரு... இதோட போய்த் தொலை. அது போதும் எனக்கு!'' என்றபடி கதவை அறைந்து மூடினாள் ரீட்டா.

''திருத்தம் பெண்ணே! மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி!''

மூடிய கதவைப் பார்த்துப் பேசிவிட்டுத் திரும்பிய மோகன் குமாரை காணக் காண திகைப்புதான் ப்ரிஜ் லாலுக்கு!

''என்ன ஸாப்... இன்னிக்கு இவ்ளோ சீக்கிரமாத் திரும்பிட்டீங்க?''

''இங்கே வருவதே இதுதான் கடைசி தடவை, ப்ரிஜ் லால்!''

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*''அம்மா கேட்டா ரொம்ப சந்தோஷப்படுவாங்க சாப்!''*

*''அம்மாவா? யார்?''*

*ப்ரிஜ் லால் இந்நேரம் இந்த விளையாட்டுக்குப் பழகி இருந்தான்.*

*''உங்க சம்சாரம்தான் ஸாப்!''*

*''என் மனைவியா? அவள் இன்னும் உயிரோடு இருக்கிறாளா?!''*

- தொடர்ந்து சந்தேகிப்போம்...

Copyright © Vikas Swarup 2008

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

# மோட்டிவ் 6

விகாஸ் ஸ்வரூப்

தமிழில்: அஞ்சனாதேவ்

## காந்தி போனார்... டேஞ்சர் வந்தது... டும் டும் டும்!

மோகன் குமாரை இப்போது நீங்கள் பார்த்தால், அந்தலை சிந்தலையாகிவிடுவீர்கள். தினந்தோறும் காலையில் மனைவி ஷாந்தியோடு சேர்ந்து கோயிலுக்குப் போகிறார். ஒரு மணி நேரம் பக்தி பொங்க பஜன்களில் ஈடுபடுகிறார். கோட் - சூட் போடுவதை நிறுத்திவிட்டார். காட்டன் பைஜாமா, கதர் குர்த்தா மட்டுமே அணிகிறார். தலைக்கு டை அடிப்பதையும் நிறுத்திவிட்டார். காந்தி குல்லா மீது அவருக்கு அப்படி ஒரு காதல் வந்துவிட்டது. மாமிசம் வீட்டுக்குள்ளேயே வரக் கூடாது என்று கடும் உத்தரவு. மரக்கறி உணவுதான். காபி ஸ்டாப். பால் மட்டுமே. அதற்கும் சர்க்கரைக்கு பதில் வெல்லம் போட்டுக்கொள்கிறார்.

www.t.me/tamilbooksworld

''டெல்லியில் எங்காவது ஆட்டுப் பால் கிடைக்குமா ஷாந்தி?'' என்று விசாரிப்பு வேறு.

பல கம்பெனிகளின் ஆலோசகராக போர்டு மீட்டிங்குகளில் கலந்துகொள்வதும் நஹி. பகவத் கீதை இத்யாதி பக்திப் புத்தகங்களைத் தேடித் தேடிப் படிக்கிறார். நியூஸ் பேப்பர்களைப் படித்துவிட்டு, நாட்டின் அக்கறையுள்ள பிரஜையாக ஊழல் மற்றும் வன்முறை விவகாரங்களை

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*எதிர்த்து 'லெட்டர் டு எடிட்டர்' கடிதம் எழுதுகிறார். ஆனால், ஒரு கடிதத்தைக்கூட நியூஸ் பேப்பர்கள் பிரசுரிக்கத் துணிவதில்லை. பின்னே... 'மோகன்தாஸ் கரம் சந்த் காந்தி' என்று அதில் கையெழுத்துப் போட்டால்..?*

*குறிப்பாக, பாருக்குள் கொலையான ரூபி கில் வழக்கு தொடர்பான விவரங்களை இப்போதெல்லாம் தேடித் தேடி சேகரிக்கிறார் மோகன்குமார். அதையெல்லாம் வரிசையாக, தேதிவாரியாக ஒரு நோட்டில் ஒட்டி, ஏதோ குறிப்புகள் எழுதிக்கொண்டு வருகிறார்.*

*''ஏங்க, அந்த மந்திரி மகன் விக்கி ராய் சம்பந்தப்பட்ட கேஸ்தானே இது? இதிலே உங்களுக்கு என்ன அவ்ளோ இன்ட்ரஸ்ட்?'' என்று கேட்டாள் ஷாந்தி.*

*''அந்தப் பெண் என் மீது பெரும் பக்திகொண்டு இருந்தாள். சுட்டுக் கொல்லப்படுவதற்கு முந்தைய நாள் வரை - காந்தியம் என்ற தலைப்பில் என் வாழ்க்கைக் கதைபற்றிய ஆராய்ச்சியில் ரூபி கில் தீவிரமாக*

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

ஈடுபட்டு இருந்தாள். அதில் டாக்டரேட் வாங்குவதற்காக அந்த சின்னப் பெண் கடுமையாக உழைத்தாள், பாவம்!''

சமையல்காரன் கோபியிடம் தாழ்ந்த குரலில் பேசிக்கொண்டு இருந்தான் டிரைவர் ப்ரிஜ் லால். ''நம்ம சாப் இப்ப தன்னைத்தானே மகாத்மா காந்தினு நினைக்க ஆரம்பிச்சிட்டாருப்பா... முழு மென்ட்டல் ஆயிட்டாருனு அக்கம்பக்கத்துல பேசிக்கிறாங்க. நம்ம மேம் சாப் அவரை இன்னும்கூட டாக்டர்கிட்டே கொண்டுபோய்க் காட்டாம இருக்கிறாங்களே... அதான் ஏன்னு புரியலை?''

''விடுப்பா... பணக்காரங்க எல்லாருக்குமே கொஞ்சமாச்சும் மென்ட்டல்தனம் இருக்கத்தான் செய்யும். ஒருவேளை குடி, கூத்தி பக்கமெல்லாம் போகாம நம்ம ஐயா இப்படி கிறுக்குத்தனமா எதையாவது பேசிக்கிட்டு வீட்டோட இருக்குறதே மேம் சாபுக்கு நிம்மதிபோலிருக்கு!''

www.t.me/tamilbooksworld

''அதுவும் சரிதாம்பா! நரி இடமாப் போனா என்ன... வலமாப் போனா என்ன? கண்டதுக்கும் நம்மளைப் போட்டு கடிக்காம இருக்குதே... அதுவே போதும்!''

அன்றைக்கு தீபாவளி. மோகன் குமாரின் பங்களா முழுக்கப் பெரிய

சைஸ் மின்மினிப் பூச்சிகளாக சீரியல் விளக்கு சரங்கள் தொங்கின. வெளியே வானம் பிங்க் நிறத்துக்கு மாறி இருந்தது. அதிரும் வேட்டுச் சத்தம் ஊரெங்கும் கேட்டது. இடைவிடாமல் தீபாவளி வாணங்கள் கிறீச்சிட்டு வானத்தை முட்டிக்கொண்டு இருந்தன. வீட்டுத் தோட்டமெங்கும் அக்கம்பக்கத்துக் குழந்தைகளின் கும்மாளக் கூச்சல்.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

பக்கத்து பங்களா வேலைக்காரனின் மகனும், தெருக் கோடி பிளாட்ஃபாரத்தில் செருப்பு தைக்கிற ஆசாமியின் மகனும் ஓவர் அலம்பல். கோக் பாட்டில் ஒன்றினுள் ராக்கெட்டை நிறுத்திக் கொளுத்தினான் ஒருவன்.

''டேய்! பாட்டிலை படுத்தவாக்குல வெச்சு ராக்கெட் டைக் கொளுத்து. என்னாகுதுனு பார்ப்போம்'' என்றான் அடுத்தவன்.

பாட்டிலை பங்களாவின் மெயின் கேட்டை நோக்கி இவன் சாய்த்துப் பிடித்துக்கொள்ள, அவன் நெருப்பு வைத்தான். சீறிக் கிளம்பிய தீபாவளி ராக்கெட், பாதி தூரம் வரை கேட்டை நோக்கி சரியாகத்தான் போனது. ஏனோ, திடீரென்று ரூட்டை மாற்றிக் கொண்டு திரும்பி, லேசாக மேலெழுந்து பங்களாவின் முதல் மாடியில் ஒரு ஜன்னலை நோக்கிப் பாய்ந்து, நெருப்பைக் கக்கியபடி கரெக்டாக அதனுள் நுழைந்து விட்டது.

www.t.me/tamilbooksworld

''டேய், என்னடா இப்படி ஆயிடுச்சு?''

''ஷ்ஷ்ஷ்! இருக்கிற பட்டாசு பாக்கெட்டையெல்லாம் அள்ளிக்க! பங்களா ஆளுங்க கண்டுபிடிச்சு வந்து நம்மைப் பிடிக்கிறதுக்குள்ளே எஸ்கேப் ஆயிடுவோம்!''

நடந்தது தெரியாமல், மோகன் குமாரின் மனைவி ஷாந்தி கையில் அகல் விளக்குகள் அடுக்கிய டிரேவை எடுத்தபடி தோட்டத்துக்கு வர... கூடவே இன்னொரு தட்டில் ஸ்வீட்களை அடுக்கி ஏந்தியபடி சமையல்காரன் கோபியும்!

தோட்டத்தின் இன்னொரு மூலையில் 'ஆட்டம் பாம்' ஒன்றை குழந்தைகள் பெரும் சத்தமாக வெடிக்க, ஷாந்திக்கும் உடம்பு தூக்கிப்

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

போடுகிறது. சமையல்காரன் கோபி முகம் சுளித்தபடி அந்த திசை பக்கம் பார்த்துவிட்டு, ''நம்ம ஐயா பண்றது கொஞ்சம்கூட நல்லா இல்லேம்மா. தெருவில் கிடக்குற இந்தப் பிசாசுங்களையெல்லாம் ஏன் பங்களாவுக்குள் விட்டாருனு புரியலை. வீட்டுத் தோட்டம் எப்படி நாசமாகுது பாருங்க... கேட்குற ஒவ்வொரு வெடிச் சத்தத்துக்கும் குறைஞ்சது 100 ரூபாயாச்சும் கரியாகுது.''

தோட்டத்தில் டிரைவர் ப்ரிஜ் லாலும் அவன் மகன் ரூபேஷும் நின்றிருந்தார்கள். ''என்னப்பா... உன் மக ரன்னோ கல்யாண ஏற்பாடெல்லாம் எந்த அளவில் இருக்கு?'' என்று விசாரித்தாள் ஷாந்தி.

''ஐயாவும் நீங்களும் காட்டுற கருணையால் நல்லபடியா ஏற்பாடு நடக்குது, மேம் சாப். டிசம்பர் 5-ம் தேதி. நீங்களும் ஐயாவும் கட்டாயம் வரணும்! அதுக்குதான் கல்யாணத்தை ஞாயித்துக் கிழமை வச்சிருக்கேன், மேம் சாப்.''

www.t.me/tamilbooksworld

''கட்டாயமா வர்றோம், ப்ரிஜ் லால்! ரன்னோ எங்களுக்கும் பொண்ணு மாதிரிதானே!''

திடீரென்று ப்ரிஜ்லால் மகன் ரூபேஷ் கண்ணைச் சுருக்கி மாடியைப் பார்த்தான்.

''மேம் சாப்... அங்கே பாருங்க புகை வருது!''

''ஐயையோ... உள்ளே நெருப்பு பிடிச்சிருச்சு... அது அவரோட ரூம்... உள்ளே அவர் தூங்கிட்டு இருந்தாரே... ரூபேஷ்... ஓடு! அவருக்கு என்னாச்சுனு பாருப்பா!'' - திருமாங்கல்யத்தை எடுத்து கண்ணில் ஒற்றியபடி பதறுகிறாள் ஷாந்தி.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

எல்லோருமே ஓடுகிறார்கள். அறை உள்பக்கம் தாழிடப்பட்டு இருக்கிறது. ''ஐயா... கதவைத் தொறங்க... சீக்கிரம் தொறங்க!'' என்றபடி மாறி மாறிக் கதவை இடிக்கிறார்கள்.

''புகை மூட்டத்துல மயக்கமாயிட்டாரா?'' - சொல்கை யிலேயே ஷாந்தியின் குரல் நடுங்குகிறது.

''கதவை உடைச்சுத் திறக்கலாமா... சொல்லுங்கம்மா!''

ரூபேஷ் பின்னால் ஓடிப் போய், படுவேகமாகக் கதவை நோக்கி வருகிறான். அதன் மேல் தோள்பட்டையால் மோதப் போகும் நேரம் டக்கென்று கதவு திறக்கிறது. தானே கதவைத் திறந்துகொண்டு மோகன் குமார் நிற்கிறார். முகம் ஜிவுஜிவுத்துப் போயிருக்கிறது. ''உஃப்... உஃப்'' என்று மூச்சுத் திணறுகிறது அவருக்கு. கிட்டத்தட்ட அவரை மோதித் தள்ளிக்கொண்டு ரூபேஷ் போய் உள்ளே விழுகிறான்.

www.t.me/tamilbooksworld

கோபியும் ப்ரிஜ் லாலும் சேர்ந்து உள்ளே போய் போராடி தீயை அணைத்துவிட்டு வர... முகத்திலும், உடையிலும் ஏகமாக சாம்பல் படர்ந்திருக்கிறது அவர்களுக்கு. வெளியே சோபாவில் சாய்ந்து கண் மூடிக்கிடக்கிறார் மோகன் குமார். அவருக்குத் தண்ணீர் புகட்டிக் கொண்டிருக்கிறாள் ஷாந்தி.

''மேம் சாப். ஒருவழியாத் தீயை அணைச்சிட்டோம். தோட்டத்துல விளையாடின பசங்களில் யாரோ ஒருத்தன்தான் பட்டாசு கொளுத்தி உள்ளே போட்டிருப்பான் போலிருக்கு!'' என்று ப்ரிஜ் லால் மூச்சுவாங்க...

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

''நம்ம பங்களா தோட்டத்துல பசங்க விளையாடுறாங்களா? எந்தப் பசங்க?'' மோகன் குமாரின் குரல் ஓங்கி ஒலிக்கிறது.

''எல்லாம் இந்த ஏரியாவில் இருக்கிற குடிசைவாசிப் பசங்கதான் எஜமான். நீங்கதானே தீபாவளியை முன்னிட்டு கூட்டியாரச் சொன்னீங்க..?''

இப்போது மோகன் குமார் சோபாவிலிருந்து ஆங்காரமாக எழுந்து நிற்கிறார். ''மூளை கெட்ட முண்டமே... தெருப் பசங்களை என் பங்களாவுக்குள் நான் கூட்டி வரச் சொன்னேனா? பைத்தியம் பிடிச்சிருக்கா உனக்கு?'' - ஜெட் ஏரோப்ளேன் தலைக்குமேல் கிளம்பிப் போகிற டெசிபலில் அலறுகிறார் ஆத்திரமாக.

www.t.me/tamilbooksworld

அடுத்த கொஞ்ச நேரத்தில் டைனிங் டேபிளில் இருந்த பீங்கான் பாத்திரங்கள் எல்லாம் காற்றில் பறக்கின்றன. அவை தன் மேல் படாமல் ஒதுங்கி உயிர் தப்புகிறான் கோபி.

''என்ன கொழுப்பு உனக்கு..! வெங்காயமும் பூண்டும் இல்லாம நான் சமைக்கச் சொன்னேனா? உப்பே போடாம ரொட்டி சுடச் சொன்னேனா? சிக்கன்இல்லாம ஒருவேளைகூட சாப்பிட மாட்டேன்னு தெரிஞ்சுக்கிட்டே விளையாடுறியா?'' என்று இரைகிறார் மோகன்குமார்.

10 நிமிடங்கள்கூட போயிருக்காது. மாடியில் இருந்து மறுபடி மோகன் குமாரின் கூவல். ''ஏய் அறிவு கெட்ட ஷாந்தி. எங்கே நான் வாங்கிவெச்சிருந்த ஸ்காட்ச் பாட்டில் ஒண்ணையும் காணோம்?''

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

தட்டுத் தடுமாறி மாடிக்கு ஓடிய ஷாந்தி, ''நீங்கதானே அதையெல்லாம் தூக்கிக் கடாசச் சொன்னீங்க. மொத்தமாத் தூக்கிப் போட்டாச்சு!''

''அடிப்பாவி... நான் போடச் சொன்னேனா? நான் குடிச்சிட்டு நிம்மதியா இருக்கிறது பிடிக்காம நீதாண்டி தூக்கிப் போட்டிருக்கே.''

இப்போது ஷாந்திக்கு பொறுமை காலி. ''நீங்க குடிச்சா எனக்கென்ன, குடிக்காட்டி என்ன... 30 வருஷமா சாயங்காலம் ஆனா, தினமும் அந்தக் கூத்தைத்தானே பார்த்துட்டு இருந்தேன்!''

''அந்த பாட்டிலை யாருகிட்டே கொடுத்தே, சொல்லு!''

''ப்ரிஜ் லால்கிட்டே கொடுத்து குப்பையில் போடச் சொன்னேன்!''

www.t.me/tamilbooksworld

''கூப்பிடு அந்த டிரைவர் பன்னியை!''

மழையில் ஊறிய கோழிக் குஞ்சாக வெடவெடத்து வந்தான் ப்ரிஜ் லால்.

- தொடர்ந்து சந்தேகிப்போம்...

Copyright © Vikas Swarup 2008

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

## மோட்டிவ் 6

விகாஸ் ஸ்வரூப்

தமிழில்: அஞ்சனாதேவ்

'டாக்டர், நான் யார்?'

''கூப்பிடு அந்த டிரைவர் பன்னியை!'' என்ற மோகன் குமாரின் இடி முழக்கக் குரல் கேட்டு, மழையில் ஊறிய கோழிக் குஞ்சாக வெட வெடத்து வந்து நின்றான் ப்ரிஜ் லால்.

www.t.m sworld

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

''மேம் சாப் சொன்னதாலதான் மது பாட்டில்களைக் கொண்டுபோய் குப்பையில் போட்டேன்யா! அவங்க சொன்ன பிறகு கேள்வி கேக்கறதுக்கு நான் யாருய்யா?''

டேபிளில் கிடந்த போனை எடுத்து சுவரில் அடித்து உடைத்தார் மோகன் குமார்.

''அவளைக் கேட்டா... நான்தான் அதையெல்லாம் தூக்கிப் போடச் சொன்னதாப்புளுகுறா... ஆளாளுக்கு விளையாடுறீங்களா? இப்பவே... இந்த நிமிஷமே எனக்கு டிரிங்க் வேணும். போய் வாங்கி வா!''

''ஐயா, இன்னிக்கு தீபாவளி ஆச்சுங்களே... நம்மூர்ல கடை எதுவும் இருக்காதுங்க!''

www.t.me/tamilbooksworld

''அதெல்லாம் தெரியாது. போய் எங்காச்சும் கடையை உடைச்சு திருடிட்டாவது வா!''

மனைவி ஷாந்தி நொந்துபோனவளாக, ''ஆண்டவன் என் மேலே கருணை வெச்சிட்டான்னு நினைச்சேன். மகாத்மா காந்தி பேரில் வந்து சும்மா ஒரு நாடகம்தான் ஆடியிருக்கான். ப்ரிஜ் லால்! நீ முதல்ல இந்த மனுஷனை இங்கே இருந்து கூட்டிட்டுப் போ. எங்கயாச்சும் ஒரு பார் திறந்திருக்கும். எந்நேரமானாலும் தேடிக் கண்டுபிடிச்சு, அங்கே இவரை இறக்கிவிடு. தயவுசெஞ்சு கூட்டிட்டுப் போயிடு!'' என்றபடி விசும்பிக் கொண்டே படி இறங்கினாள். மறுநாள் காலை கான் மார்க்கெட்டில் வழக்கமாக, தான் மதுபாட்டில் வாங்கும் கடையில் வண்டியை நிறுத்தச் சொன்னார் மோகன் குமார். யோசனையோடு நிறுத்தினான் ப்ரிஜ் லால். இவர் தலையைப் பார்த்ததுமே கடை முதலாளிக்கு வாயெல்லாம் பல்.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

''வாங்க மோகன் குமார் சார்... உங்க வீட்டுல இருந்த சூப்பர் கலெக்ஷன் கண்ணாடிக் கிண்ணமெல்லாம் எங்களுக்குக் கொடுத்ததுக்கு ரொம்ப நன்றி. எல்லாமே வெளிநாட்டு கலெக்ஷன் போலிருக்கே. இன்னும்கூட கிண்ணங்கள் இருந்தா, தயவுசெஞ்சு எங்களுக்கே வித்துடுங்க. நம்ம பார்ல அந்த கிண்ணத்தைப் பார்த்துட்டு கஸ்டமருங்க ரொம்பப் பாராட்டினாங்க!''

மோகன் குமாருக்கு டென்ஷன் எகிறியது. ப்ரிஜ் லாலைக் கூப்பிட்டார். கால்கள் பின்ன, காரில் இருந்து இறங்கி அவன் நடந்து வந்தான்.

''இதோ, இந்த ஆளுதானே கிண்ணத்தையெல்லாம் கொண்டுவந்து உங்களுக்கு வித்தவன்?''

www.t.me/tamilbooksworld

''இவனேதான்!'' என்றார் மதுக் கடை முதலாளி.

முந்தின இரவு எத்தனை தேடியும் பெக் அடிக்க முடியாமல் செம கடுப்போடு வீடு திரும்பி இருந்தார் மோகன் குமார். தூக்கம் வராமல் வெகுநேரம் புரண்டார். இப்போது பெக் அடிக்காமலே கண்கள் ரத்தமாகச் சிவந்தன அவருக்கு. ப்ரிஜ் லாலைப் பிடித்து முன்னால் இழுத்தார்.

''சொல்லுடா நாயே... எவ்வளவு காசுக்கு வித்தே?'' கடைக்காரர் குறுக்கிட்டு, ''ரொம்ப அபூர்வமான பொருளாச்சே சார்... 15,000 கொடுத்தேன்!''

''பாட்டிலைத்தானே குப்பையில் போடச்சொன்னாங்க உன் எஜமானி! அந்த மது கிளாஸ்களை ஏன்டா கொண்டாந்து வித்தே? அந்த

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*கலெக்ஷனோட வேல்யூ தெரியுமா உனக்கு?'' ''அதையும் அம்மாதான்யா தூக்கி வீசிடச் சொன்னாங்க!''*

*''அது ஒரு முண்டம்! வித்த காசை நீ என்ன பண்ணே... அதைச் சொல்லு!'' ''பொண்ணு கல்யாணத்து டவுரிக்கு அதை அட்வான் ஸாக் கொடுத்திட்டேன் சாப்... தயவுசெஞ்சு மன்னிச்சிடுங்க சாப்!'' - காலில் விழுந்து ப்ரிஜ் லால் கதற... கொத்தாக அவனைத் தூக்கி எழுப்பி பேய்த்தனமாகக் கன்னத்தில் அறைந்தார் மோகன் குமார்.*

*''என் வீட்டு உப்பைத் தின்னுவளர்ந்த நாய் நீ... கொஞ்சம்கூட கூசாமத்திருட்டுத்தனம் பண்றியா? இன்னிக்கு மத்தியானத்துக்குள் எனக்கு 15,000 ரூபாய் வந்தாகணும். இல்லாட்டி, போலீஸ்ல சொல்லுவேன். உன் பொண்ணு கல்யாணத்துக்குப் பதில் உன் கைக்குக்காப்புக் கல்யாணம் நடக்கும், புரியுதா? ஓடிப் போ!''*

www.t.me/tamilbooksworld

*அன்றைக்கு மதியமே ஒரு கவருக்குள் பணத்தோடு வந்து நீட்டினான் ப்ரிஜ் லால். வாங்கி எண்ணிப் பார்த்து, திருப்தியாகத் தலையாட்டினார் மோகன் குமார்.*

*''கரெக்ட்டா இருக்கு! இதான் உனக்கு கடைசி மன்னிப்பு. அடுத்த முறை இப்படி ஏதாச்சும் செஞ்சா... உன் ஸீட்டைக் கிழிச்சுத் துரத்திடுவேன். வயித்துக்கு சோறும் இருக்காது... வாழுறதுக்கு ஒரு கூரையும் இருக்காது, புரியுதா?''*

*ப்ரிஜ் லால் எதுவுமே பேசாமல் வெளியே போனான்.*

*அவனுக்கே தெரியாது - தன் எஜமானருக்கு எதிராக ஒரு நாள்... தான் கத்தி தூக்கப்போகிறோம் என்று!*

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

இப்போது தினம் சாயங்காலமானால், மோகன் குமார் ரூமுக்குள் கிளாஸில் ஸ்காட்ச் தளும்புகிறது. ஒரு வார்த்தைகூட பேசாமல் சோடாவும் நொறுக்குத் தீனியும் வைத்துவிட்டு வெளியே போகிறாள் ஷாந்தி. உணவு சாப்பிடும் நேரத்தில்கூட அவள் மோகன் குமாரின் எதிரே வருவதில்லை. சமையல்காரன் கோபி வாய் திறக்காமல் சிக்கனும் மட்டனும் பரிமாறுகிறான். வெங்காயம், பூண்டு இல்லாத சமையல் என்பதெல்லாம் அவன் நினைத்தும் பார்ப்பதில்லை.

நாலைந்து தடவை ரீட்டா சேத்திவீட்டுக்கு போன் அடித்துப் பார்த்தார் மோகன் குமார். சள்ளுபுள்ளென்று எரிந்து விழுந்துவிட்டு போனை அடித்துச் சாத்தினாள் அவள். ஒரு லெவலுக்கு மேல் இவருக்கும் தன்மானம் சுரண்ட... போன் பண்ணுவதைக் கைவிட்டார். அதே சமயம், அவளுக்கு இதுவரை என்னவெல்லாம் தண்டம் அழுதோம் என்று ஒரு கணக்கு பார்ப்பதற்காக தன் வங்கி ஸ்டேட்மென்ட்டை வாங்கிப் பார்த்தார். வரிசையாகப் பார்த்துக்கொண்டே வந்தவருக்கு, ஒரு வாரத்துக்கு முன் கடைசியாகக் கொடுக்கப்பட்டதாக ஸ்டேட்மென்ட்டில் காட்டியிருந்த பிரமாண்டமான செக் தொகையைப் பார்த்து மயக்கம் வந்தது.

www.t.me/tamilbooksworld

ரீட்டா சேத்திக்கு அல்ல... ஒரு பள்ளிக் கூடத்தின் பெயருக்கு அவர் கணக்கில் இருந்து கொடுக்கப்பட்ட செக்!

சிஸ்டர் கமலாதான் அந்த அநாதைக் குழந்தைகளுக்கான பள்ளியின் தலைமை நிர்வாகி. மோகன் குமார் பல்லைக் கடித்தபடி எதிரில் அமர்ந்திருக்க, வழக்கமான புன்னகையைத் தொலைத்துவிட்டு சிஸ்டர் கமலாவும் சிடுசிடுப்பாகத்தான் இருந்தார்.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

''நேராகவே கேட்டுவிடுகிறேன் மிஸ்டர் மோகன் குமார்... ஹெச்.எஸ்.பி.ஸி. வங்கியில் இருக்கிற உங்கள் கணக்கில் இருந்து, உங்கள் செக் புக்கைப் பயன்படுத்தி, எங்கள் பள்ளியின் பெயருக்கு நாங்களே மோசடியாக 20 லட்ச ரூபாயை மாற்றிக்கொண்டோம் என்று குற்றம் சாட்டுகிறீர்கள்... அப்படித்தானே?''

மோகன் குமார் இன்னும் ஓவராக நறநறத்தார். ''அதைத்தானே இத்தனை நேரமாகத் திரும்பத் திரும்பச் சொல்லிக்கொண்டு இருக்கிறேன். மரியாதையாக அந்தப் பணத்தைத் திருப்பிக் கொடுத்துவிடுங்கள். நான் உத்தரப் பிரதேச அரசாங்கத்தையே சுண்டு விரலில் வைத்து ஆட்டிய தலைமைச் செயலாளர் தெரியும் இல்லையா? இப்போது ஒரு போன் போட்டால் போதும்... உங்கள் பள்ளிக்கூடத்தையே இழுத்து மூட வேண்டியதுதான்!''

www.t.me/tamilbooksworld

சில்லியான ஜந்துவாக அவரைப் பார்த்தாள் சிஸ்டர் கமலா. இன்டர்காமை அழுத்தினாள். ''சிஸ்டர் விமலா... கடந்த வாரம் திருவாளர் மோகன் குமார் நம் பள்ளிக்காக 20 லட்ச ரூபாய் நன்கொடை அளித்தாரே... அதற்கான டாகுமென்ட்களை அப்படியே கொண்டு வாருங்கள், உடனே!''

கமலா சிஸ்டரைவிட தடிமனான மூக்குக் கண்ணாடி போட்டிருந்த விமலா சிஸ்டர், கீழ்ப் பார்வையில் மோகன் குமாரை அளவெடுத்த படியே ஒரு ஃபைல் சகிதம் வந்தார்.

''மிஸ்டர் மோகன் குமார். அன்றைக்கு நீங்கள் அளித்த செக்கின் ஜெராக்ஸ் பிரதி இதோ இருக்கிறது. இதில் இருப்பது உங்கள் கையெழுத்து தானா என்று பார்த்துச் சொல்லமுடியுமா?''

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*செத்துப் போனவனின் உயிலை எடுத்து ஆராய்கிற நீதிபதி மாதிரி வெகுநேரம் அதை உற்றுப் பார்த்தார் மோகன் குமார். பிறகு அதிர்ச்சியாக நிமிர்ந்து, ''என் கையெழுத்து மாதிரியேதான் இருக்கிறது. படுகில்லாடித்தனமாகத்தான் மோசடியை நடத்தி இருக்கிறீர்கள். புரிந்துகொள்ளுங்கள் மிஸ்... இதற்காக நீங்கள் ஜெயிலுக்குப் போக வேண்டி வரும்!''*

*கமலா சிஸ்டர் அந்த ஃபைலில் இருந்து ஒரு போட்டோவை எடுத்தாள். ''இதுவும் மோசடி போட்டோ தானா என்று பாருங்கள். நீங்கள் செக் கொடுக்க இந்தப் பள்ளிக்கூடத்துக்கு வந்தபோது நாம் சேர்ந்து எடுத்துக் கொண்டது. எங்கள் பள்ளிக்கூட ஆண்டு மலரில் போடுவதற்காக எடுத்தது...''*

*மோகன் குமார் வாங்கிப் பார்த்து அயர்ந்தேவிட்டார். ''எ... என்னைப் போலத்தான் இருக்கிறது!'' என்றார் குழப்பமாக. சிஸ்டர்களுடன் சேர்ந்து அப்படி ஒரு சிரிப்போடு இருந்தார் கதர் குல்லா மாட்டியபடி!*

- தொடர்ந்து சந்தேகிப்போம்...

Copyright © Vikas Swarup 2008

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

# மோட்டிவ் 6

விகாஸ் ஸ்வரூப்
தமிழில்: அஞ்சனாதேவ்

## நாளை ஒரு நாடகம்!

கமலா சிஸ்டர் காட்டிய போட்டோவைப் பார்த்ததும், ''இதில் இருப்பது... எ... என்னைப் போலத்தான் இருக்கிறது...'' என்று மோகன் குமார் திகைப்புடன் தடுமாறினார்.

கமலா சிஸ்டர் சிறிய சிரிப்போடு, ''போல அல்ல... இது நீங்களேதான்! நாங்களா உங்களைத் தேடி வந்து நன்கொடை கேட்டோம்? நீங்களாகத்தான் இங்கே வந்தீர்கள். இதே நாற்காலியில் என் முன் உட்கார்ந்தீர்கள். தயாராகக் கொண்டுவந்த செக்கில் எங்கள் பள்ளியின் பெயரைக் கேட்டு எழுதினீர்கள். அன்னை தெரஸா மீது உங்களுக்கு எப்படி ஒரு மதிப்பும் மரியாதையும் உண்டு என்பதுபற்றி அரை மணி நேரத்துக்கும் மேலாக லெக்சர் அடித்தீர்கள்! தேவைக்கு மீறி ஒரு மனிதன் செல்வத்தை வைத்துக் கொள்வது எவ்வளவு பெரிய குற்றம் என்றுகூட உரை நிகழ்த்தினீர்கள்!''

tamilbooksworld

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

''அப்படி எதுவும் நடந்ததாக எனக்கு நினைப்பே இல்லை. அதையெல்லாம் விடுங்கள்... 2,000 ரூபாய் வேண்டுமானால் எடுத்துக்கொண்டு, மீதியை என்னிடமே நீங்கள் திருப்பித் தந்துவிட முடியாதா?'' - புலம்புகிற தொனியில் இருந்தது மோகன் குமார் குரல்.

''ஸாரி மிஸ்டர்... அந்தத் தொகையைப் பணமாக்கி பள்ளியின் வளர்ச்சிப் பணிகளுக்கு ஒதுக்கிவிட்டேன். மனநிலை சரியில்லாத குழந்தைகளுக்கு விடுதியாக ஒரு சிறு கட்டடம் கட்டவும், அநாதைக் குழந்தைகளுக்கு மேலும் சில வகுப்பறைகள் கட்டவும் அட்வான்ஸாகக் கொடுத்துவிட்டோம். அந்தக் குழந்தைகளின் பிரார்த்தனை உங்களுக்கு எப்போதும் இருக்கும்!''

''பிரார்த்தனையைக் கொண்டுபோய் நான் நாக்கு வழிப்பதா? மரியாதையாக என் பணத்தைத் திருப்பிக்கொடுங்கள். நான் ஐ.ஏ.எஸ். ஆபீஸராக்கும்... நேராக போலீஸுக்குப் போவேன்!'' என்று முரட்டுத்தனம் காட்டினார் அவர்.

www.t.me/tamilbooksworld

இப்போது சிஸ்டர் விமலா பேசினார் - ''போலீஸுக்கு அல்ல... நீங்கள் போக வேண்டியது ஒரு நல்ல மனநல டாக்டரிடம். மேற்கொண்டு உங்களுடன் பேச நேரம் இல்லை. பள்ளிக்கூடத்துக்கு பிரேயர் டயம் ஆகிவிட்டது. கிளம்புகிறீர்களா?''

டெல்லி டிஃபென்ஸ் காலனியில் இருக்கிறது டாக்டர் எம்.கே.திவான் கிளினிக். லேசான சத்தத்தோடு குளிரை வாரி இறைக்கும் ஸ்பிலிட் ஏ.ஸி. ஆளையே போட்டுப் புதைக்கிற ஆடம்பர சோபா, இரண்டு புறமும் சுவரில் பதிக்கப்பட்ட மெகா சைஸ் ஃபிளாட் டி.வி-க்கள், மூளைக்கு ஓவராகவே சவால்வைக்கும் மாடர்ன் ஆர்ட் ஓவியங்கள்... அத்தனைக்கும்

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

ஒப்பனை செய்த மாதிரி ஜிவ்வென்று வயசுப் பெண் ஒருத்தி வரவேற்பாளராக!

மகா, மெகா ஆட்கள்தான் வைத்தியத்துக்கு அங்கே வர முடியும் என்பதற்கான அத்தனை அடை யாளங்களும் இருந்தன.

உள்ளே, அப்பாயின்ட்மென்ட் கிடைப்பதற்கரிய டாக்டர் திவான் இருந்தார். நல்ல உயரம். கோதுமை நிறம்... பிரிட்டிஷ் இங்கிலீஷில் பிய்ச்சு உதறினார். ''உங்கள் ஷ¨வை உதறிவிட்டு இந்தப் படுக்கையில் படுங்கள் பார்ப்போம்...'' என்றார் மோகன் குமாரிடம். பக்கத்திலேயே ஒரு சுழல் நாற்காலி யை இழுத்துப்போட்டு உட்கார்ந்தார் டாக்டர். தோல் அட்டை மாட்டிய தடிமனான டைரியும், மினு மினுக்கும் சில்வர் பேனாவும் அவர் கைகளில்.

www.t.me/tamilbooksworld

''சொல்லுங்கள்... உங்கள் பிரச்னை என்னவென்று உங்களுக்குத் தோன்றுகிறது?''

''டாக்டர்! எனக்குள் என்னையும் மீறி நான் விரும் பாத ஒன்றும் புகுந்துகொண்டதுபோல் இருக்கிறது. தீராத பல் வலி மாதிரி, அது உள்ளே இருந்து 'விண்விண்'ணென்று உந்துகிறது. நான் பேசுவது, யோசிப்பது, நடந்துகொள்வது அத்தனையும் வேறு ஒரு மனிதரைப்போலவே இருக்கிறது!''

''அந்த இன்னொரு நபர் யாரென்று அடையாளம் தெரிகிறதா?''

''சொன்னால், நீங்கள் நம்ப மாட்டீர்கள் டாக்டர்!''

''சும்மா... சொல்லித்தான் பாருங்களேன்!''

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

''காந்தி... மகாத்மா காந்தி!''

டாக்டர் குபுக்கென்று சிரிப்பார் என்று நினைத்தார் மோகன் குமார். அவரோ, புருவத்தை ஒரு மில்லி மீட்டர்கூட உயர்த்தவில்லை. பேனாவால் டைரியில் தட்டிக் கொண்டே, ''ம்... இப்போது என்னிடம் பேசுவது யார்?'' என்றார்.

''மோகன் குமார் ஐ.ஏ.எஸ்... உத்தரப் பிரதேசத்தின் முன்னாள் தலைமைச் செயலாளர்... எந்த நிமிஷத்திலும் மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி ஆகிவிடுவேன்!'' என்றபடி மெதுவாகத் தலையை உயர்த்திய மோகன் குமார்,

''பாபாஜிக்குள் காந்திஜியின் ஆவி வருவதாக ஒரு நிகழ்ச்சி நடந்ததே... அன்றில் இருந்துதான் இந்தக் கோளாறு! டாக்டர்... நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? நிஜமாகவே என் உடம்பை காந்தியின் ஆவி டேக்-ஓவர் பண்ணி இருக்குமா?''

www.t.me/tamilbooksworld

''ஆவியெல்லாம் சினிமாவில் மட்டும்தான் மிஸ்டர் மோகன் குமார்!''

''அப்படியானால் எனக்குப் பைத்தியம் பிடித்து விட்டதா?''

''மிக தெளிவான மனிதர்களேகூட சில சமயங்களில் மன நோயாளிகள்போல நடந்துகொள்வதுண்டு. மூளையின் சூட்சுமம் அப்படி. வேறு ஆள் உங்களுக்குள் இருந்து செயல்படுவதாகச் சொல்லும் சமயங்களில் அதை நீங்கள் உணர்கிறீர்களா?''

''ஆரம்பத்தில் தெரியவில்லை. எல்லாம் முடிந்த பிறகு, அடுத்தவர்கள் சொல்லித்தான் தெரிந்துகொண்டேன். வரவர, நான் என்னை மீறி

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*இன்னொரு நபராகச் செயல்படுவது கொஞ்சம் கொஞ்சமாக அந்த சமயத்திலேயே எனக்குத் தெரிகிறது. ஆனால், என்னால் அதைக் கட்டுப்படுத்த முடியவில்லை!''*

*அரை மணி நேரத்துக்கும் மேலாக நடந்தது ஆராய்ச்சி. மோகன் குமாரின் கண்களுக்குள் டார்ச் அடித்து, முட்டிகளில் ரப்பர் சுத்தியலால் தட்டிப் பார்த்து, நேராகவும் கோணல் மாணலாகவும் அவரை நடக்கச் சொல்லி சோதித்து... கடைசியில் டாக்டர் சொன்னார் -*

*''இதை நாங்கள் 'டிசோஸியேட்டிவ் ஐடென்டிட்டி டிஸ்ஆர்டர்' என்போம். 'ஸ்பிலிட் பெர்சனாலிட்டி' என்றும் சொல்வார்கள். இந்த டி.ஐ.டி. பாதிப்பு வரும்போது, தான்மிகவும் விரும்புகிற அல்லது வெறுக்கிற நபர்களின் குணங்களும் செயல்பாடுகளும் அந்த மனிதர்களுக்குள் நுழைந்துகொண்டு ஆட்டிப் படைக்கும். ரொம்ப விளக்கமாகச் சொன்னால்... உங்களுக்குக் குழப்பம்தான் அதிகமாகும். உங்களுக்கு ஆட்சேபனை இல்லையென்றால், ஒரு முறை ஹிப்னாடிஸ சோதனை நடத்திப் பார்த்துவிடலாமே..?''*

www.t.me/tamilbooksworld

*''என்ன செய்வீர்கள் அந்த சோதனையில்?''*

*''உங்கள் சுய நினைவையும் தாண்டி ஆழ் மனதுக்குள் போவோம். அங்கே உங்கள் மேல் மனதுக்குத் தெரியாமல் ஒளிந்திருக்கும் விஷயங்களை அறிய முயல்வோம்.''*

*''ரொம்ப பெர்சனலான விஷயங்களை எல்லாம் மயக்கத்தில் ஆழ்த்திவிட்டுக் கேட்பீர்களா?'' - மோகன் குமாருக்கு வேறு கவலை வந்துவிட்டது.*

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

''அதுவும் தேவைப்படும்.''

''அப்படியானால், அந்த ஹிப்னாடிஸ இழவெல்லாம் வேண்டாம்.'' புஸ்ஸென்று மூச்சுவிட்டார் டாக்டர் திவான். ''தயவுசெய்து என்னிடம் நீங்கள் வெளிப்படையாக இருக்க முயலுங்கள். சின்ன வயசில் குழந்தையாக இருந்தபோது உங்களிடம் யாராவது தவறாக நடக்க முயன்றது உண்டா?''

படுத்துக்கொண்டே தலையைத் திருப்பிப் பேசிக் கொண்டு இருந்த மோகன் குமார் தொபுக்கென்று எழுந்து உட்கார்ந்தார்.

''உங்களுடைய சிக்மண்ட் ஃப்ராய்ட் தத்துவத்தை என் தலையில் போட்டுப் பார்க்காதீர்கள். நான் இனிமேல் மகாத்மா காந்தி ஆகக் கூடாது. அதற்கு என்ன வழி? சட்டென்று சொல்லுங்கள்!'' என்றார் செம எரிச்சலாக.

www.t.me/tamilbooksworld

மொத்தத்தில், ஹிப்னாடிஸ சிகிச்சைக்குப் பயந்து விடை எதுவும் தெரியாமல் ஃபீஸை மட்டும் கொடுத்துவிட்டு அங்கே இருந்து வெளியேறினார்.

இப்போது மோகன் குமாரின் ஒவ்வொரு செல்லுக்குள்ளும் ஓடும் எரிச்சல் அணு என்றால்... அது மகாத்மா காந்தி! அந்தப் பெயரைக் காதால் கேட்பதையோ, அச்சில் படிப்பதையோகூட அடியோடு தவிர்க்க ஆரம்பித்துவிட்டார். 'அமெரிக்கன் காந்தி' என்று பட்டப் பெயர் கொடுத்த மார்ட்டின் லூதர் கிங் பற்றி வெளியான புத்தகத்தைக்கூட தன் வீட்டு லைப்ரரியில் இருந்து தூக்கிக் குப்பையில் போடச் சொல்லிவிட்டார். ராத்திரி தூக்கத்தில் அரையாடையும் கைத்தடியுமாக கனவில் காந்தி வந்துவிடுவாரோ என்ற கவலையில், மாலை வேளை போடும்

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

'பெக்'குகளையும் அதிகப்படுத்திவிட்டார். தன்னிலை மறந்த தூக்கத்துக்கு சீமைச் சரக்குதான் ஒரே வழி என்பது அவருடைய நம்பிக்கை!

சமையல்காரன் கோபி மறுபடியும் சிக்கன் ரோஸ்ட், மட்டன் சாப்ஸ் என்று பொரிக்கத் தொடங்கினான். வஞ்சகம் இல்லாமல் உள்ளே தள்ளுகிறார் மோகன் குமார். டிரைவர் ப்ரிஜ் லாலுக்கு முக்கிய உத்தரவு - 40 கிலோ மீட்டர் வேகத்துக்கு மேல் காரை ஓட்டக் கூடாது என்பது. அதோடு, புத்தியை ரோட்டில் மட்டுமே வைத்து ஓட்ட வேண்டும் என்றும்!

மோகன் குமார் தனது அறையில் இரண்டாவது ரவுண்டு விஸ்கியுடன் இருக்கிறார். கையில் இருப்பது ராய் டெக்ஸ்டைல் மில் தொடர்பான கோப்பு. ஜன்னலுக்கு வெளியே சீஸனுக்கு சம்பந்தம் இல்லாமல் இடிச்சத்தமும் மின்னல் வெட்டும். போன் அடிக்கிறது...

www.t.me/tamilbooksworld

''குமார்?''

விவேக் விக்கி ராய்தான்.

இவருடைய சர்வீஸ் அளவுகூட இருக்காது அவன் வயது. ஆனால், எத்தனை அதிகாரமாக, ஒரு மிஸ்டர்கூட போடாமல் கூப்பிடுகிறான், ராஸ்கல்! உள்துறை அமைச்சராக இருக்கும் இவன் அப்பனின் திமிர் அப்படியே இவனுக்கும் இருக்கிறது. ஆனாலும், வேறு வழி இன்றி இதை மோகன் குமார் சகித்துக்கொள்ளப் பழகி இருந்தார்.

''யெஸ் சார்!'' என்றார் பணிவாக.

''நாளைக்கு நம்ம கம்பெனியின் போர்டு மீட்டிங் இருக்கிறது...''

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

''ஆமாம் சார். அது சம்பந்தமான ஃபைலைத்தான் பார்த்துக்கொண்டு இருக்கிறேன்!''

''கம்பெனியில் இருந்து கணிசமான ஆட்களை வேலை நீக்கம் செய்யும் முடிவை எடுத்திருக்கிறோம். அதை நீங்கள்தான் நியாயப்படுத்தி நாளைக்கு மீட்டிங்கில் பேசப்போகிறீர்கள்.''

''தெரியும் சார். 150 பேர் வரை வீட்டுக்கு அனுப்ப முடியும். டெக்ஸ்டைல் மில்லில் நஷ்டம், உற்பத்திக் குறைப்பு என்றும்... மில்லில் அவசரமாக சில மாற்றங்களைக் கொண்டுவராவிட்டால் மொத்தமாக இழுத்து மூட வேண்டி இருக்கும் என்று நாளைய மீட்டிங்கில் பேசுவோம். ஏற்கெனவே பேசிவைத்தபடி காய் நகர்த்துவோம்!''

''என் கவலை எல்லாம் யூனியன் சைடில் இருந்து பிரதிநிதியாக போர்டு மீட்டிங்குக்கு வரப்போகும் தத்தா பற்றித்தான். அந்த தத்தா கம்மனாட்டியை சமாளிக்கிற பொறுப்பு உங்களுடையது. குட் நைட்!''

www.t.me/tamilbooksworld

போனை வைக்கும்போது, அறைக் கதவு தட்டப்படுகிறது. எழுந்து போய் மோகன் குமார் திறந்தால், டிரைவர் ப்ரிஜ் லால். சொட்டச் சொட்ட நனைந்திருந்தான். கண் ரத்தமாகச் சிவந்திருக்கிறது.

இவர் ஏற்றியிருந்த விஸ்கி தள்ளாட்டத்திலும், அவனிடம் இருந்து வந்த பழவாடை மூக்கைச் சுளிக்கவைத்தது.

- தொடர்ந்து சந்தேகிப்போம்...

Copyright © Vikas Swarup 2008

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

# மோட்டிவ் 6

மோட்டிவ் 6
SIX SUSPECTS

விகாஸ் ஸ்வரூப் தமிழில்: அஞ்சனாதேவ்

## மீண்டும் வந்தாச்சு... மகாத்மா காந்தி!

மோகன் குமாரின் விஸ்கி மூக்கு, டிரைவர் ப்ரிஜ் லாலின் நாட்டுச் சரக்கு வாடையை நன்றாகவே கண்டுகொண்டது. கடுப்பாக அவனிடம், ''ஏய், என்ன வேணும் உனக்கு?'' என்றார்.

''போச்சு எசமான்... எல்லாமே போச்சு!'' - விசும்ப ஆரம்பித்துவிட்டான் ப்ரிஜ் லால்.

www.t.me/tamilbooksworld

''சினைப்பன்னி மாதிரி கிடந்து முணங்காதே. இப்போ என்ன ஆகிப்போச்சு? குடிச்சிருக்கியா நீ? சாக்கடை மாதிரி நாறுதே...''

''ஆமா... எசமான். குடிச்சிருக்கேன். நாட்டுச் சரக்கு என்ன பன்னீர் மாதிரி மணக்கவா செய்யும்? என் சக்திக்கு அதானே முடியும்?'' - ப்ரிஜ் லால் குரலில் திடீர் ஆத்திரமும், வியூப்பூட்டும் நக்கலும் தொனித்தது. இவரை நெட்டித் தள்ளிக்கொண்டு அறைக்குள் வந்துவிட்டான்.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

''ஏய், போ வெளியே! தண்ணி சொட்டி கார்ப்பெட் எல்லாம் நாசமாகுது.''

''கார்ப்பெட்தானே நாசமாகுது... நீங்க என் குடும்பத்தோட எதிர்காலத்தையே நாசம் பண்ணிட்டீங்களே.''

''என்ன உளறுறே?''

''உளறலை எசமான்... கெடந்து குமுறுறேன். இன்னிக்கு என்ன தேதி தெரியுதா?''

''டிசம்பர் ரெண்டு, ஞாயித்துக்கிழமை. இப்ப என்ன அதுக்கு?''

''யோவ் பெரிய மனுஷா... இன்னிக்கு தான்யா என் பொண்ணு ரன்னோவுக்கு கல்யாணம் நடந்திருக்கணும். என் சொந்த பந்தங்களோட உட்கார்ந்து ஷெனாய் கச்சேரி கேட்டு, ஸ்வீட் சாப்பிட வேண்டிய நேரம் இது. ஆனா, என் பொண்ணு, பையன், பொண்டாட்டி அத்தனை பேருமே முக்காடு போட்டு மூலையில் உட்கார்ந்து அழுதுட்டு இருக்காங்க. எல்லாம் யாராலே? உன்னாலே!''

www.t.me/tamilbooksworld

''என்னாலா? ப்ரிஜ் லால் சரக்கு ரொம்ப ஓவராப் போட்டு இருக்கியா?''

''யோவ் மோகன் குமாரு.... நான் ஒண்ணும் உன்னை மாதிரி புத்தி பேதலிச்சுப் பேசற பரம்பரைக் குடிகாரன் கிடையாதுய்யா. குடிக்கிறதை நிறுத்திட்டதா பெரிய மகாத்மா மாதிரி நீயே சொன்னதாலதான், உன் பொண்டாட்டி மது பாட்டிலை எல்லாம் ரோட்டுல போட்டு உடைக்கச் சொன்னாங்க. அதோட சேர்த்து தூக்கிப் போடச் சொல்லி என்கிட்டே

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*கொடுத்த கண்ணாடிக் கோப்பைகளைக் கொண்டுபோய் கடையில் வித்தது ஒரு மகா பாவமா? அதுக்குப் போயி என்னை திருடன் முத்திரை குத்தி, போலீஸு அது இதுனு மிரட்டி... என் பொண்ணுக்கு சம்பந்தம் பண்ண வீட்டுல கொடுத்திருந்த டவுரி பணத்தைத் திருப்பி வாங்கவெச்சியே! நான் மானஸ்தன்யா... ஆனா, வாழ முடியாமத் தவிக்கிற ஏழை! உன்னை மாதிரி பெரிய ஆளுங்க ஊரை அடிச்சு உலையில போட்டுக் காசு குவிப்பீங்க. ஆனா, ஒழுங்கா வரி கட்ட மாட்டீங்க. சாயங்காலம் ஆனா, பொண்டாட்டி கையாலேயே ஊத்திக் கொடுக்கச் சொல்லிக் குடிப்பீங்க. அப்படியே கூத்தியாரு வீட்டுக்குப் போயி கும்மாளம் அடிப்பீங்க. ஆனா, என்னைப்போல ஏழைங்க மட்டும் வாழ வக்கில்லாம நடு வீட்டுல நாண்டுக்கிட்டு சாகனுமா? தப்பித் தவறி எங்களுக்கு நாலு காசு கிடைச்சு, கொஞ்சம் சந்தோஷமா இருக்க சான்ஸ் கிடைச்சாலும், உன்னை மாதிரி பெரிய மனுஷங்களுக்கு கண்ணு பொறுக்காது. அப்படித்தானே?''*

www.t.me/tamilbooksworld

*''ப்ரிஜ் லால்.... நீ ரொம்பத் தள்ளாடுறே! எதுவானாலும் காலையில் பேசிக்கலாம். இப்பக் கிளம்பு!''*

*''வாழ்க்கை பூரா உனக்கு கார் ஓட்டியே அடிமையாக் கழிச்சதுக்கு நீ செஞ்ச பதில் உபகாரம் இதானா? இப்ப கல்யாணம் நின்னு போயித் தவிக்குற என் பொண்ணுக்கு என்ன வழி? சொல்லுய்யா! எனக்குப் பொண்ணாப் பொறந்த ஒரே பாவத்துக்காக அவ காலம் பூரா கன்னி கழியாமலே இருக்கணுமா?''*

*''ப்ரிஜ் லால்... நீ லிமிட் தாண்டிப் போயிட்டிருக்கே?''*

*''அப்படிங்களா எசமான்... சரிங்க எசமான்... நீங்க உங்களால முடிஞ்ச உதவியை என் குடும்பத்துக்கு செஞ்சிட்டீங்க. பதிலுக்கு*

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

உங்களுக்கு செய்யறதுக்கு இந்த ஏழைகிட்டே பெரிசா என்ன இருக்குது? இது ஒண்ணுதான் இருக்குது!''

தன் குர்த்தா மறைப்பில் இருந்து ப்ரிஜ் லால் எடுத்தது - முழங்கை நீளத்துக்கான ஒரு கத்தி. மேலே தொங்கிய சரவிளக்கின் வெளிச்சத்தை உள்வாங்கிப் பிரதிபலிக்கக்கூட முடியாத அளவுக்கு துருப் பிடித்த கத்தி!

'ஃபட்டீர்' என்று இடிச் சத்தம் ஜன்னல் வழியே கிழித்துக்கொண்டு வழிந்தது.

''யார் எதிர்ல என்ன பண்றோம்னு விளைவு புரியாமப் பண்ணிட்டிருக்கே, ப்ரிஜ் லால். உன்னை நான் கடைசித் தடவையா எச்சரிக்கிறேன்!''

www.t.me/tamilbooksworld

''விளைவாம் விளைவு! உருவி எடுக்க உருப்படியா ஒரு கோவணம் கூட இல்லாத என்னை மாதிரி ஆளுங்களுக்கு, என்னாங்கடா பெரிய விளைவு வந்துடப்போகுது? என் பொண்டாட்டியும் பொண்ணும் எப்படியும் தற்கொலை பண்ணிட்டு சாகப்போறாங்கனு தெரிஞ்சுபோச்சு. என் பையன் எங்கியாச்சும் ஒரு வேலை வாங்கிட்டுப் போயிடுவான். உங்களைக் கொன்னு முடிச்சுட்டு நானும் தற்கொலை பண்ணிக்கிட்டா, அப்புறம் என்னத்த... பெரிய விளைவு?''

அவன் சும்மா பயமுறுத்த வரவில்லை என்பது இப்போதுதான் மெதுவாக உறைக்கிறது மோகன் குமாருக்கு. வயிற்றுக்குள் போயிருந்த ரெண்டு பெக் விஸ்கி ஆவியாகிவிட்டது.

''ப்ரிஜ் லால். அவசரப்படாதே. உனக்கு உன் பொண்ணு கல்யாணம் நடக்கணும்... அதானே... நானே முழு செலவும் பண்ணி ஜாம்

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

ஜாம்னுநடத்தி வைக்கிறேன். ஃபைவ் ஸ்டார் ஷெரட்டன் ஹோட்டல்ல ரெண்டு நாள் விருந்து கொடுக்குறேன். முதல்ல நீ அந்தக் கத்தியை கீழே போடு!''

டிரைவர் இன்னும் இறுக்கமாகக் கத்தியைப் பிடித்தபடி முன்னால் வருகிறான்.

''ஐயோ, வேணாம் ப்ரிஜ் லால்... உனக்கு இந்த பங்களா வேணுமா, எடுத்துக்க! உன் பொண்ணு ரன்னோ எனக்கும் பொண்ணு மாதிரிதான்...''

''அட போய்யா! தொண்டைக் குழியைத் தொடுற தூரத்தில் கத்தி வந்திட்டா, கழுதைக்குக்கூட அப்பனா இருக்கத் தயார்னு சொல்லுவீங்களே... பணக்காரன் பித்தலாட்டம் எனக்குத் தெரியாதா?''

www.t.me/tamilbooksworld

ப்ரிஜ் லால் கத்தியை தலைக்கு மேல் ஓங்க... 'ஓ'வென்ற அலறலுடன் கண்களை இறுக மூடிக்கொள்கிறார் மோகன் குமார். படுவேகமாகக் கத்தி இறங்குகிறது. ஏழையின் வலி அறியாத பணக்காரத் திமிரை ஒட்டுமொத்தமாகக் கிழித்தெடுப்பதுபோல், அந்தக் கத்தி மோகன் குமாரின் நடு மார்பைக் குத்திக் கிழிக்க...கிழிக்க... வில்லை!

இறங்கிய கையை பாதியில் நிறுத்துகிறான் ப்ரிஜ் லால். ஒருகணம் சிலைபோல் நிற்கிறான். மறுகணம், அப்படியே துவண்டு கீழே சரிகிறான்.

ஃபட்டீர்!

அடுத்துக் கேட்ட இடிச் சத்தம் மோகன் குமாரின் உடம்பை உலுக்கிப் போடுகிறது. மெதுவாகக் கண்களை அவர் திறந்தபோது, அவர் காலடியில் விழுந்துகிடக்கிறான் ப்ரிஜ் லால்.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

''ஏய் ப்ரிஜ் லால்... என்ன ஆயிற்று உனக்கு? இன்றைக்கு டிசம்பர் இரண்டாம் தேதி அல்லவா? உன் மகளின் திருமணத்துக்கு என்னை அழைப்பதாகச் சொல்லி இருந்தாயே...'' - கீச்சுக் குரல் வெளிப்படுகிறது மோகன் குமாரின் தொண்டையில் இருந்து.

இதற்குள் கதவை அடித்துத் தள்ளிக்கொண்டு அவர் மனைவி சாந்தி ஓடி வருகிறாள். அங்கே காண்கிற காட்சியில் எதுவும் புரியாமல், ''என்னங்க ஆச்சு? நீங்க உரக்கக் கத்தின மாதிரி இருந்ததே... ப்ரிஜ் லால் உனக்கு என்ன வேணும்?'' என்கிறாள்.

மூடிய கண்களை மோகன் குமார் திறக்கும்போது, அங்கே ஒட்டுமொத்தமாக சாந்தம் குடியேறி இருக்கிறது.

''கஸ்தூரி பா... நீயே கேள். ப்ரிஜ் லால் மகளுக்கு இன்று திருமணம் அல்லவா? நம்மை ஏன் இவன் அழைக்கவே இல்லை? அவனுக்கு நம் மீது என்ன கோபம் என்று கேள்!'' என்று சொல்லிக்கொண்டே, காலடியில் கிடந்த ப்ரிஜ் லாலின் முதுகை வருடிக்கொடுத்தார் மோகன் குமார். அவரை மிரள மிரளப் பார்த்தாள் ஷாந்தி.

www.t.me/tamilbooksworld

''உங்களைப் புரிஞ்சுக்கவே முடியலை. ஒருநாளைக்கு சைத்தான் மாதிரி ஆட்டம் போடுறீங்க. இன்னொரு நாளைக்கு மகாத்மா ஆயிடுறீங்க. ப்ரிஜ் லாலோட பொண்ணு கல்யாணம்தான் டவுரி கொடுக்க முடியாம நின்னு போச்சே! நீங்கதானே இவனை போலீஸ்ல புடிச்சுக் கொடுத்துடுவேன்னு சொல்லிப் பணத்தைத் திரும்ப வாங்கினீங்க...'' மூச்சு வாங்கினாள் சாந்தி.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

''அப்படியா!'' - கண் நிறைய ஆச்சர்யமும் வருத்தமும் தேக்கிக்கொண்டு பார்த்தார் மோகன் குமார்.

''அப்படி ஒரு தவறை நான் செய்திருப்பேனேயானால், கூப்பிய கரங்களுடன் உன்னிடம் மனமார மன்னிப்பு கேட்டுக்கொள்கிறேன் ப்ரிஜ் லால்!''

இப்போது ப்ரிஜ் லால் பெரிசாக ஓலமிட்டான். ''ஐயோ அப்படியெல்லாம் சொல்லாதீங்க எசமான். நீங்கதான் என்னை மன்னிக்கணும். கத்தியால குத்திக் கொல்ல வந்த என்னை தடுக்கக்கூட செய்யாம, கண்ணை மூடிக்கிட்டு அமைதியா நின்னீங்களே... இப்பவும் இவ்வளவு கருணை காட்டிப் பேசுறீங்களே... தப்பு பண்ண இருந்த கடைசி நொடியில உங்க முகத்துல தெரிஞ்ச அந்த தேஜஸைப் பார்த்து அப்படியே என் கை நின்னுபோச்சு எசமான். நீங்க மனுஷன் இல்லை... கடவுள். கடவுளேதான்!''

www.t.me/tamilbooksworld

ப்ரிஜ் லாலின் தோளை மென்மையாகப் பிடித்து எழுப்புகிறார் மோகன் குமார். ''கடவுளா? ஒரு மனிதனை அப்படி நீ ஒப்பிடலாமா? இறைவன் என்பவன் பெருங்கடல் போன்றவன். நாமெல்லாம் மிகச் சிறு துளிகள். அதெல்லாம் போகட்டும்... கத்தி போன்ற வன்முறை ஆயுதங்களை உன் மனதாலும் நினைத்துப் பார்ப்பவன் அல்லவே நீ? எப்படி இதை எல்லாம் இங்கே கொண்டுவரத் துணிந்தாய்?'' - கேட்டுக்கொண்டே ப்ரிஜ் லாலை தன்னோடு சேர்த்து அணைத்துக்கொள்கிறார். வெகுநேரம் டிரைவரின் உடல் குலுங்கிக்கொண்டே இருக்கிறது.

- தொடர்ந்து சந்தேகிப்போம்...

Copyright © Vikas Swarup 2008

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

# மோட்டிவ் 6

விகாஸ் ஸ்வரூப்

தமிழில்: அஞ்சனாதேவ்

முந்தின நாள் டிரைவர் ப்ரிஜ் லாலின் கத்தி கழுத்துக்கு நேரே வந்து நின்ற கணத்தில், மறுபடியும் 'மகாத்மா'த்தனம் குடியேறிய மோகன்குமார்... மறுநாள் மாலை 4 மணிக்கு ராய் டெக்ஸ்டைல் மில்லின் போர்டு ஆஃப் டைரக்டர்ஸ் மீட்டிங் நடந்த அரங்கத்துக்குள் விசுக் விசுக்கென்று நடந்து நுழைகிறார்.

www.t.me/tamilbooksworld

வெள்ளை பைஜாமாவும் குர்த்தாவுமாக வந்து உட்கார்ந்த அவரை

மற்ற போர்டு உறுப்பினர்கள் புதிராகப் பார்க்கிறார்கள். விவேக் விக்கி ராயின் பக்கத்தில் போய் அவர் உட்கார, அவன் இவர் காதில் குனிந்து கிசுகிசுக்கிறான் -

''கிரேட்! சூப்பர் வேஷம் போட்டு வந்துவிட்டீர்கள் குமார். இந்த உடையில் நீங்கள் சாத்விகமாகப் பேசியே யூனியன் சைடைக் கவிழ்த்துவிட நினைக்கிறீர்கள், சரிதானே?''

மோகன்குமார் புன்னகை மட்டும் தருகிறார். ஐந்து ஆண்களும் ஒரு

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

பெண்மணியும் அந்த கான்ஃபரன்ஸ் ஹாலில் இருந்தார்கள். போட்டுவைத்த திட்டத்தின்படி, விவேக் விக்கி ராய் முதல் ஆளாகப் பேசினான். ஆலை நஷ்டத்தில் இயங்குவதால் ஆட்குறைப்பு செய்வது அவசியம் என்று அவன் சில புள்ளி விவரங்களை எடுத்துப் போடுகிறான்.

''மதிப்புக்குரிய அங்கத்தினர்களே... கடந்த ஒரு வருடத்தில் மட்டும் நமது மில் 35 கோடி ரூபாய் நஷ்டத்தை சந்தித்திருக்கிறது!'' என்று அவன் கூற... ''பச்சைப் பொய்!'' என்று சீறுகிறது யூனியன் பிரதிநிதியான தத்தாவின் குரல். ''எங்கள் யூனியன் கொடுத்த ஒத்துழைப்பு மற்றும் ஏற்கெனவே அமல்படுத்தப்பட்ட சிக்கன நடவடிக்கைகள் ஆகியவற்றை வைத்துப் பார்த்தால், எங்கள் கணக்குப் படி போன வருடம் குறைந்தது இரண்டு கோடியாவது மில்லுக்கு லாபம் வந்திருக்க வேண்டும்!''

www.t.me/tamilbooksworld

தத்தாவுக்கு ராஹா என்ற போர்டு உறுப்பினர் தன் வசம் இருக்கும் 'செட்-அப்'பான பதிலைத் தருகிறார். ''இந்தியாவின் மிகச் சிறந்த டெக்ஸ்டைல் மில்களில் ஒன்றாக இதை உயர்த்துவதுதான் திருவாளர் விவேக் விக்கி ராயின் லட்சியம். அதற்குத் தேவை சில அதி நவீனமான இயந்திரங்கள். அவை மட்டும் வந்து இறங்கிவிட்டால், நம் டெக்ஸ்டைல் மில்லின் நஷ்டங்கள் குறைந்து மறுபடி லாபத்தை நோக்கி நாம் நடை போட முடியும். ஆனால், இயந்திரங்களுக்கான கடனை எப்படி அடைப்பது? அதற்குப் பணம் வேண்டாமா? நமது மில்லில் இருக்கும் சீனியர் தொழிலாளர்கள் அத்தனை பேரின் குடும்பத்திலும் சோறு பொங்க வேண்டும் என்றால், ஜூனியரான சில தொழிலாளர் களை வேலையைவிட்டு நீக்க வேண்டும் என்பதுதான் நிலைமை. இந்த கசப்பான முடிவை நாம் எடுக்காவிட்டால், ஆலையை இழுத்து மூடும் நிலைமை விரைவிலேயே ஏற்படும்!'' என்ற ராஹா, இந்த முறை யாரையும்

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

நிமிர்ந்து பார்க்காமல், தனது மூக்குக் கண்ணாடியைக் கழற்றித் துடைப்பதில் மும்முரமானார்.

தன் நாற்காலியை மடேலென்று பின்னால் தள்ளிவிட்டு எழுந்து நின்றார் தத்தா. ''ஆலைக்கு நஷ்டம்... அதை நவீனப் படுத்தவேண்டும் என்றெல்லாம் பொய்யான காரணங்களைச் சொல்லிக்கொண்டு, ஆட்குறைப்பை சாமர்த்தியமாக நடத்தி விடப் பார்க்கிறீர்கள். யூனியன் சார்பாக நான் இந்த எண்ணத்தை முழுவதுமாக நிராகரிக்கிறேன்!'' என்றார் கூச்சலாக.

மற்றவர்களின் பார்வை சொல்லிவைத்தாற்போல் இப்போது விவேக் விக்கி ராயின் பக்கம் திரும்பி நிலைத்தது. எளிதில் கணிக்க முடியாத ஒரு முகபாவத்துக்கு வந்திருந்த விக்கி ராய், தன் விரல்களால் மேஜை மீது தாளம் போட்டான். தீவிரமாக சிந்திப்பதுபோல் நடித்தான். தொடர்ந்து,

www.t.me/tamilbooksworld

''ஓகே! யாருடைய உணர்வுகளையும் புறக்கணிப்பது நம் நோக்கம் அல்ல. ஆலையை நவீனப்படுத்துவது என்ற இந்த தீர்மானத்தை இங்கே ஓட்டெடுப்புக்கு விடலாம்! இதை ஆதரிப்பவர்கள் மட்டும் 'யெஸ்' என்று சொல்லுங்கள்!'' என்றான் அமைதியாக. அடுத்தடுத்து நான்கு பேர் ஆட்குறைப்பு முடிவை ஆதரிப்பதாகவே சொல்ல...''மிஸ்டர் தத்தா?'' என்றான் விவேக் விக்கி ராய். ஏற்கெனவே கொந்தளித்துப் போயிருந்த அவர்,

''சத்தியமாக ஏற்க முடியாது. நோ!'' என்று சீறினார்.

''சரி, மிஸ்டர் (மோகன்)குமார்?''

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

மோகன்குமார் முகத்தில் இப்போது பால் வடியும் புன்னகை. ''நல்லது... இப்போது நாம் நடத்திக்கொண்டு இருப்பது மிக முக்கியமான, அற்புதமான ஒரு விவாதம். என்னைப் பொறுத்தவரையில் மூன்று விஷயங்களை உங்கள் அனைவரின் முன்பும் நான் வைக்க விரும்புகிறேன். முதலாவது, மிக அடிப்படையான விஷயங்கள் குறித்த விவாதங்களில் மெஜாரிட்டியினரின் கருத்து என்பது மட்டுமே முடிவு செய்வதற்கான தகுதியாக இருக்க முடியாது!'' - என்றபடி மோகன்குமார் மெதுவாக விக்கி ராய் பக்கம் திரும்ப, அவன் புருவம் முடிச்சுப் போட்டு இருந்தது.

''இரண்டாவது விஷயம்... இங்கே இருக்கும் அனைவருமே, அப்பாவி ஏழைத் தொழிலாளர் களின் வாழ்வுக்கான காப்பாளர்களாகத் தங்களைக் கருதவேண்டுமே தவிர... மற்ற புள்ளிவிவரங்களை ஒத்திவைத்துவிட வேண்டும். நம் தேசத்தில் லட்சக்கணக்கான ஏழைகள் உடல் உழைப்பு அளித்து வயிற்றுக்கு சோறு தேடக் காத்திருக்கும்போது, குறுகிய காலத்தில் லாபத்தைக் கூட்டுவதற்காக இயந்திரங்களை நாடிச் செல்வது நல்லதாகத் தோன்றவில்லை. இதுவே, என் மூன்றாவது விஷயத்துக்கும்வித்திடுகிறது...''

www.t.me/tamilbooksworld

விக்கி ராயின் முகம் இஞ்சி தின்ற குரங்காக மாறியது. மோகன்குமார் நாற்காலிக்கு அடியில் இருந்து ஒரு பெரிய கவரை எடுத்தார். பொறுமை யாகப் பிரித்தார். அதனுள் இருந்து அவர் வெளியே எடுத்தது ஒரு கைராட்டை!

''இதுதான் இந்த தேசத்துக் குடிமகனின் மானம் காக்கும் அடையாளம். துணி உற்பத்தியில் எத்தனையோ முன்னேறிவிட்டோம் என்று நாம் பெருமைப்படலாம். ஆனால், நம் ஆன்மா முழுவதும் இந்த கைராட்டையில்தான் இருக்கிறது. இந்த ராட்டையை உங்களுக்கு

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

அளிப்பதற்காக நான் எங்கெல்லாம் தேடி அலைந்தேன் தெரியுமா? சாந்தினி சவுக் பகுதியில் ஒரு கடையைக் கண்டுபிடித்து வாங்குவதற்கு எனக்கு முழுதாக இரண்டு நாட்கள் தேவைப்பட்டன. கைராட்டை என்பது உழைப்பின் அடையாளம். உழைப்பாளியின் அடையாளம். இதை நமது மதிப்புக்கு உரிய யூனியன் பிரதிநிதி ஏற்றுக்கொள்வார் என்று நம்புகிறேன்!'' என்றபடியே தத்தா பக்கம் நிலை குத்திப் பார்த்தார் மோகன் குமார். பார்ட்டியின் குள்ளநரித்தனங்கள் நன்றாகத் தெரியும் என்பதால், நடப்பதை நம்ப முடியாமல் தத்தாவின் வாய் பிளந்து இருந்தது.

மற்றவர்களெல்லாம் அவசரமாக தங்களுக்குள் கிசுகிசுத்துக்கொண்டார்கள். பிறகு விக்கி ராய், ''ஓகே.! நமக்குள் ஒருமித்த கருத்து இந்த விஷயத்தில் உருவாகவில்லை. எனவே, இன்னொரு முறை உட்கார்ந்து பேசுவோம். தேவைப்பட்டால், இப்போது உங்கள் முன் வைத்த தீர்மானத்தில் சில மாற்றங்களைச் செய்து முன்வைக்கப்படும்!'' என்று சொல்லி அவசரமாக அந்தக் கூட்டத்தைக் கலைத்தான். கதவைத் தாண்டி வெளியே போகும்போது மோகன்குமாரை நோக்கி புலியாக ஒரு பார்வையை வீசினான். 'சேம் சைடு கோல் போட்ட கிழவா! உன்னை ஒருவழி பண்றேண்டா!' என்று மௌனமாக உறுமியது அந்தப் பார்வை.

www.t.me/tamilbooksworld

அடுத்த இரண்டு வாரங்கள் மோகன்குமார் பிஸியோ பிஸி! விக்கி ராய்க்கு எதிராக, ரூபி கில் கொலை வழக்கில் கடுமையான தீர்ப்பு தர வேண்டும் என்று நீதிமன்றத்துக்கு வெளியே போராட்டம் நடத்திய குழுவில் மோகன்குமாரும் இருந்தார். போராட்டவாதிகளோடு சேர்ந்து நடு ரோட்டில் தர்ணா நடத்தினார். அடுத்து, சர்தார் சரோவர் அணைக்கட்டு விவகாரத்தில் அப்பாவி மக்களுக்கு பாதிப்பு ஏற்படுத்தக் கூடாது என்று அரசாங்கத்துக்கு எதிராக நடந்த அடையாள

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*உண்ணாவிரதத்தில் முன் வரிசையில் உட்கார்ந்தார். கள்ளச் சாராயத்துக்கு எதிராக மகளிர் குழுவினர் நடத்திய சாலை மறியலில் கலந்துகொண்டு லேசாக போலீஸ் தடியடி வாங்கினார். வெளிநாட்டு மூக்குக் கண்ணாடியைத் தூக்கிப் போட்டுவிட்டு, ஒயர் ஃபிரேம் மாட்டிய ரவுண்டு கண்ணாடியை அணிய ஆரம்பித்துவிட்டார். அவர் பேச்சும், குரலும், நடத்தையும் பார்த்து இப்போது மீடியாக்காரர்கள் அவருக்கு பட்டப் பெயரே வைத்துவிட்டார்கள் - 'காந்தி பாபா' என்று!*

*சிறப்புப் பொருளாதார மண்டலத்தை எதிர்த்து நடந்த ஒரு கூட்டத்துக்குப் போகிற வழியில், கனாட் பிளேஸ் ஏரியாவில் கடும் டிராஃபிக்கில் மோகன்குமாரின் கார் சிக்கி நின்றது. சுவரில் ஒட்டி இருந்த ஒரு சினிமா போஸ்டரைப் பார்த்து முகத்தை அஷ்ட கோணலாக்கினார்.*

*உடம்பில் 'கால்'வாசி பாகத்தை மட்டுமே மறைத்துக்கொண்டு நின்ற நிர்வாணப் பெண்! 'ஆள் விழுங்கும் அழகி' என்று அந்தப் படத்துக்கு ஒரு அலேக் தலைப்பு! 'கதி கலங்கவைக்கும் காலைக் காட்சி' என்று கொட்டை எழுத்தில் போட்டதோடு, 'காமத்துக்கு மொழி இல்லை' என்று ஒரு தத்துவத்தை வேறு உதிர்த்து, சகலரையும் தியேட்டருக்கு அழைத்தது அந்த போஸ்டர்.*

www.t.me/tamilbooksworld

*''ராம்... ராம்'' என்று தலையில் அடித்துக்கொண்டார் மோகன்குமார். ''இதை எல்லாம் அரசாங்கம் எப்படித் தான் அனுமதிக்கிறதோ..?''*

*அதற்குள் அந்த சினிமா தியேட்டரே வந்துவிட, ''ப்ரிஜ் லால்! வண்டியை நிறுத்து!'' என்று கட்டளை இட்டார். காரில் இருந்து குதித்து இறங்கினார். சுண்ணாம்பு கண்டு பல வருடங்கள்ஆகி, மகா அழுக்கு பில்டிங்காக இருந்தது அது. 12, 13 வயசுப் பையன்களெல்லாம் வாயில்*

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*போதைப் பாக்கு வழிய கெட்ட வார்த்தைகளை உதிர்த்தபடி டிக்கெட் வாங்க நெக்கி அடித்துக்கொண்டு இருந்தார்கள்.*

*வரிசையில் அல்லாடியபடி நகர்ந்து போய் கவுன்ட் டரை அடைந்தார் மோகன்குமார். பென்சில் மீசை வைத்து இருந்த வழுக்கைத் தலை ஆசாமியிடம், ''டிக்கெட் எவ்ளோப்பா?'' என்றார்.*

*''பால்கனியா, ஃபர்ஸ்ட் கிளாஸா, செகண்ட் கிளாஸா? தரை டிக்கெட்டா?'' என்றான் நிமிர்ந்து பார்க்காமல். அத்தனைக்கும் அது ஒரே கவுன்ட்டர்தான்!*

*''எல்லாமே வேணும்ப்பா! அதாவது இந்த தியேட்டர் முழுசுக்கும் இருக்கிற எல்லா டிக்கெட்டுமே வேணும்!'' என்று இவர் சொல்ல... நிமிர்ந்து பார்த்தான் பென்சில் மீசை.*

www.t.me/tamilbooksworld

*''பெரியவரே! நீ ஏதாச்சும் ஒரு காலேஜுக்காக குரூப் புக்கிங் பண்ண வந்தியா?''*

*''இல்லையப்பா! நான் மொத்தமாக டிக்கெட்டுகளை வாங்கிக் கிழித்துப் போடுவதற்காக வந்தேன்!''*

*''என்னாது?''*

*''ஆமாம்... மனதைக் குப்பை ஆக்குகிற இதுபோன்ற கீழ்த்தரமான படங்களைத் திரையிட்டு, காசு சம்பாதிக் கிறீர்களே... உங்களுக்கெல்லாம் துளிகூட அவமானமாக இல்லையா? இந்த நாட்டின் எதிர்காலமாக இருக்கிற இளைஞர்களை நாசமாக்குகிற செயல் இது என்று உங்களுக்குத் தெரியாதா?''*

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*டிக்கெட் கொடுக்கிற ஆள், குறுகுறு வென்று இவரைப் பார்த்துக்கொண்டே கவுன்ட்டரில் இருந்து எழுந்து கிட்டத்தட்ட ஓடிப் போனான். சில நிமிடங்களில் அங்கே குட்டையான மற்றொரு ஆசாமி தோன்றினார்.*

*''பெரியவரே! உங்களுக்கு என்ன வேணும்? நான்தான் இந்த தியேட்டருக்கு மேனேஜர்!''*

*''உங்களிடம் நான் கொஞ்சம் பேச வேண்டும்...''*

*''பேசலாமே! என் ரூமுக்கு வாங்க. இன்னும் கொஞ்ச நேரத்துக்கு இங்கேயே நின்னு நீங்க வம்பு பண்ணா, பின்னாடி நிக்கிறவங்க பொறுமை போயிடும். உங்களை சாத்தி எடுத்துடுவாங்க!''*

www.t.me/tamilbooksworld

*மேனேஜர் ரூமில் இத்துப்போன சோபாவும் ஒரு மேஜை நாற்காலியும் மட்டும் இருந்தது. கறுப்பு நிற டெலிபோன் ஒன்று டேபிள் மீது தூசு படிந்து கிடந்தது. மேனேஜர் இவரிடம்,*

*''பெரியவரே... இந்த தியேட்டர் யாரோடது தெரியுமில்ல? இந்தத் தொகுதி எம்.எல்.ஏ. ஜெகதீஷ் பால் இருக்காரே... அவரோடது!''*

*''அப்படியானால், நான் யார் என்பதையும் நீ தெரிந்துகொள்ள வேண்டும் அப்பனே... நான்தான் மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி!''*

*மேனேஜருக்கு முதல் தடவையாக முகத்தில் சிரிப்பு உதித்தது. அதுவே வளர்ந்து பெருஞ்சிரிப்பாக வெடித்தது. ''யோவ் பெருசு! 'முன்னாபாய்' படம் வந்து ரொம்ப நாளாச்சுய்யா... இதெல்லாம் ஓல்டு மாடல் டயலாக்!''*

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*''அப்பனே... நாட்டு மக்களுக்கு நல்லதொரு விழிப்பு உணர்வை ஏற்படுத்தும் வகையில், நாளை முதல் இந்த தியேட்டர் வாசலில் சத்தியாகிரகப் போராட்டம் நடத்தப் போகிறேன்.''*

*''சந்தோஷமா பண்ணுங்க பெரியவரே... அப்படியே உங்க ஜாதகக் கட்டத்தையும் பார்த்துக்கோங்க. போதாத நேரம் பொள்ளு பொள்ளுனு அடிக்குதுனு நினைக்கிறேன்!''*

- தொடர்ந்து சந்தேகிப்போம்...

Copyright © Vikas Swarup 2008

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

# மோட்டிவ் 6

விகாஸ் ஸ்வரூப்

தமிழில்: அஞ்சனாதேவ்

## மோகன் குமார் மூக்கு பஞ்சர்!

மறு நாள் காலை மோகன் குமார் வெள்ளை கதர் வேட்டியும், கதர் குர்த்தாவும், தலையில் ஒரு காந்தி குல்லாவுமாக, ஆபாச சினிமா ஓடும் தியேட்டருக்கு வந்து, டிக்கெட் கவுன்ட்டருக்கு அருகில் தரையில் உட்கார்ந்தார். 'இந்தப் படத்தைப் பார்ப்பது பெரும் பாவம்!' என்று எழுதிய அட்டையை கையில் பிடித்துக்கொண்டார்.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*தியேட்டருக்கு வந்து டிக்கெட் வாங்க கியூவில் நிற்கிற ஜனம் அவரை வேடிக்கை பார்க்கிறது. அட்டையைப் படித்துவிட்டு சிலர் சிரிக்கிறார்கள். சிலர் காசு போடுகிறார்கள். ஆனால், ஒருவர்கூட திரும்பிப் போகாமல், கனகாரியமாக டிக்கெட் வாங்கிக்கொண்டு தியேட்டருக்குள் நுழைகிறார்கள். 10 மணியை நெருங்கும்போது, டிக்கெட் முழுசும் விற்றுத் தீர்ந்து, மோகன் குமாரின் எதிர்ப்பு அட்டைக்குப் போட்டியாக 'ஹவுஸ்ஃபுல்' அட்டை ஒன்று கவுன்ட்டர் முன்பாக தொங்கவிடப்படுகிறது.*

*மோகன் குமாரின் மனைவி சாந்தி, பரபரக்க காரில் வந்து இறங்குகிறார். ''ஏங்க, அவ்ளோ ஆவேசமாக் கிளம்புனீங்களே... ஒருத்தராவது உங்க புத்திமதியைக் கேட்டாங் களா? ஹவுஸ்ஃபுல் போர்டே மாட்டிட்டாங்க. வாங்க வீட்டுக்குப் போகலாம்.''*

www.t.me/tamilbooksworld

*''அடுத்த காட்சியின்போதும் இங்கேயே இருப்பேன்... என் போராட்டத்தைக் கண்டு ஒரே ஒரு மனிதனாவது இந்த ஆபாசக் குப்பையை பகிஷ்கரித்தாலும்கூட, அது எனக்குக் கிடைத்த வெற்றிதானே!''*

*''சரிங்க... இதுக்காக பட்டினி கிடப்பேன்னு அடம்பிடிச்சா எப்படி? இந்தாங்க, ஜூஸ் கொண்டாந்திருக்கேன். இதையாவது குடிங்க.''*

*''என் அருமை கஸ்தூரிபா... இது எனக்கும் கடவுளுக்கும் இடையில் நடக்கும் போராட்டம். உணவும் தண்ணீரும் மட்டுமே என்னைக் காப்பாற்றிவிட முடியாது. நீ வீட்டுக்குப் போ!''*

*வெகுநேரம் வாதாடித் தோற்ற சாந்தி கிளம்பிப் போகிறார்.*

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

இரண்டு மணி நேரத்துக்கு மேல் வீட்டில் இருக்கப் பொறுக்காமல் மறுபடி திரும்பி அதே தியேட்டருக்கு வந்தபோது சாந்திக்கு ஆச்சர்யம் காத்திருந்தது. மரத்தால் ஆன ஒரு சின்ன மேடை அங்கே போடப்பட்டிருந்தது. அதில் மெத்தை ஒன்று விரிக்கப்பட்டு அதன் மேல் ஒய்யாரமாக அமர்ந்திருந்தார் மோகன் குமார். அவருக்குத் துணையாக நடுத்தர வயது மனிதர் ஒருவரும் அந்த மர மேடையில். சுற்றிலும் சுமார் 200 பேர் திரண்டு இருந்தார்கள். ''காந்தி பாபா ஜிந்தாபாத்! ஆபாசப் படம் போடாதே! தியேட்டர் ஓனர் எம்.எல்.ஏ. ஜெகதீஷ் பால் ஒழிக!'' என்று மாறி மாறி கோஷங்கள்.

''எப்படிங்க வந்தது இத்தனை கூட்டமும்?'' என்று சாந்தி கேட்க... பக்கத்தில் இருந்த நபரை சுட்டிக்காட்டினார் மோகன் குமார்.

www.t.me/tamilbooksworld

''கேளு கஸ்தூரிபா! இந்த நல்ல மனிதரின் பெயர் அவதேஷ் பிஹாரி. ஒரு மணி நேரத்துக்கு முன் என் உண்ணாவிரத சேதியை அறிந்துவந்தவர், இந்த புனிதமான நோக்கத்துக்காக தானும் போராட்டத்தில் பங்கேற்க முடிவெடுத்து விட்டார். இவருடைய ஆதர வாளர்கள்தான் இங்கே சுற்றிலும் கூடி இருக்கிறார்கள்...'' என்று மோகன் குமார் பூவாகச் சிரிக்க... அந்த அவதேஷ் பீஹாரியை ஏனோ முதல் பார்வையிலேயே சாந்திக்குப் பிடிக்காமல் போனது.

''வணக்கம் அண்ணி! இந்த மாதிரி ஓர் உத்தமர் உங் களுக்கு கணவராகக் கிடைக்க நீங்கள் பல ஜென்மம் தவம் செய்திருக்க வேண்டும்!'' என்றார் அந்த நபர்.

''சரிங்க.. நீங்க என்னவா இருக்கீங்க?'' என்ற சாந்தியின் கேள்விக்கு...

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

''நான் அறிவு மறுமலர்ச்சிக் கழகம்னு ஒரு கட்சி நடத்தறேன். இந்த தியேட்டர் முதலாளி ஜெகதீஷ் பாலை எதிர்த்து, கடந்த தேர்தலில் போட்டியிட்டேன். பணபலம், குண்டர் பலத்தைவைத்து அவர் ஜெயிச்சிட்டாரு. ஏராளமாக் கள்ள ஓட்டு போட்டாங்க.''

''அதாவது, ஜெகதீஷ் பாலைப் பழிவாங்க இது உங்களுக்கு ஒரு சான்ஸ், அப்படித்தானே?'' - சாந்தியின் குரலில் காரம்.

''என்ன அண்ணி இப்படி சொல்லிட்டீங்க? நாட்டில் அக்கிரமம் எங்கே நடந்தாலும், தட்டிக்கேட்பதுதான் எங்க அ.ம.க-வோட லட்சியம். கொஞ்ச நாளைக்கு முந்திகூட 'கேர்ள் ஃப்ரெண்ட்ஸ்'னு ஒரு ஏடாகூட சினிமா வந்ததே... கோர்ட் தடைக்குக்கூட பயப்படாம ஒரு தியேட்டரை அப்போ அடிச்சு உடைச்சோம் நாங்க. பேனரை எல்லாம் பிய்ச்சு நெருப்பு வெச்சோமே... ரெண்டு மூணு நாளைக்கு எங்க நியூஸ்தானே எல்லா டி.வி-யிலும் வந்தது...'' - பெருமை பொங்கப் பேசினார் அவதேஷ் பீஹாரி. ''அந்த ஜெகதீஷ் பால் நேரில் வந்து மன்னிப்பு கேட்டு, இந்த சினிமாவைத் தூக்காத வரையில் எங்க போராட்டமும் உண்ணா விரதமும் தொடரும்...'' என்று கர்ஜிக்க வேறு செய்தார். சாந்தி எவ்வளவோ சொல்லியும் மோகன் குமார் அங்கே இருந்து எழுந்து வருவதாக இல்லை.

இரண்டு நாட்கள் இப்படியே ஓட, மோகன் குமாரின் உடல்நிலை மோசமாகத் தொடங் கியது. குடும்ப டாக்டர் வந்து பிளட் பிரஷர், சுகர் எல்லாம் செக்-அப் செய்து பார்த்துவிட்டு, ''இப்படியே போனால்... ஆபத்துதான்!'' என்று எச்சரித்தார். அப்படியும் தியேட்டர் ஓனர் அந்த திசைப் பக்கம்கூட எட்டிப் பார்க்கிற அறிகுறி தெரியவில்லை.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

அன்றைக்கு மதியம் தலையில் டிஷ் ஆன்டெனா வைத்த பெரிய வேன் ஒன்று வந்து நின்றது. படுஉயரமாக இருந்த, காலோடு வைத்துத் தைத்த மாதிரி, இறுக்கமாக ஜீன்ஸ் போட்ட ஒரு பெண் கையில் மைக்குடன் வேனில் இருந்து குதித்தாள். பின்னாடியே கேமராமேனும் இறங்கி ஓடி வந்தான். அந்தப் பெண் நிருபரைப் பார்த்ததுமே, படுஉற்சாகமாக எழுந்து நின்றான் அவதேஷ் பீஹாரி.

''ஹலோ ஜீ... இந்தத் தடவையும் உங்களோட ஆக்ஷன், அதிரடி எல்லாம் உண்டா? ஏதாச்சும் பரபரப்பா செய்யுங்க, பாஸ்!'' என்றாள் பெண் நிருபர். தரையில் சோர்ந்து சுருண்டு கிடந்த மோகன் குமாரைப் பார்த்தவள், ''உத்தரப் பிரதேச அரசாங்கத்தின் முன்னாள் தலைமைச் செயலாளர் இந்த கதியில் கிடக்கிறார் என்றால் சும்மாவா?'' என்றபடியே அவதேஷ் பீஹாரியின் காதுப் பக்கம் குனிந்தவள், ''இந்தப் பெரிசு மட்டும் இப்படியே உயிரைவிட்டால்... பெரிய கலாட்டா ஆகிவிடும். உங்க அரசியல் எதிரி ஜெகதீஷ் பால் அதோடு காலி!'' என்று காது வளையங்கள் குலுங்கச் சிரித்தாள். பிறகு, கேமராமேனைப் பார்த்து, ''இந்தப் பெரியவரின் கால் மாட்டில் இருந்து ஆங்கிள் வைத்து, அப்படியே கேமராவை நகர்த்தி, அந்தக் கூட்டத்தையும் அதையும் தாண்டி தியேட் டரைக் காட்டு!'' என்று கட்டளை பிறப்பிக்க ஆரம்பித்தாள்.

www.t.me/tamilbooksworld

'காந்தி பாபா உடல்நிலை பின்னடைவு' என்று தலைப்பு போட்டு அலறின மறு நாள் காலை பேப்பர்கள். டி.வி-யிலும் வெள்ளமாக செய்திகள்! ஆள்வைத்துக் கூட்டி வரவேண்டிய அவசியமே இல்லாமல் தியேட்டர் வாசலில் திமுதிமுவெனக் கூட்டம் சேரத் தொடங்கியது.

வேகமாக வந்து நின்ற பெரிய காரில் இருந்து இறங்கினார் எம்.எல்.ஏ. ஜெகதீஷ் பால். கட்டைகுட்டையான தோற்றமும், சதுர முகமும், கன்னங்கரேர் தலைமுடியுமாக இருந்த அவர், நேராக மோகன்

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*குமாரின் அருகில் போய் உட்கார்ந்தார். ''காந்தி பாபா சாகேப்... உங்களுக்கு இப்ப என்னதான் வேணும்?'' என்றார்.*

*''வக்கிரத்தைப் பரப்பும் இதுபோன்ற சினிமாக்களைத் திரையிடுவது நிற்க வேண்டும். பெண்களை போகப் பொருளாக்கி வியாபாரம் செய்யும் நிலை மாற வேண்டும்!'' என்ற போது, அந்தப் பட்டினியிலும் மோகன் குமாரின் குரலில் ஓர் இரும்புத்தனம் இருந்தது.*

*ஜெகதீஷ் பால், ''ஏங்க... வக்கிரத்தை நானா பரப்புறேன்? இது சென்சார்ல சர்ட்டிஃபிகேட் வாங்கி ஓட்டுற சினிமா. பெரியவரே... கொஞ்ச தூரத்துலதானே பாலிகா பஜார் இருக்குது. அங்கே சில கடைகளைக் காட்டுறேன் வாங்க. 50 ரூபாய்க்கு பச்சை பச்சையாப் படம் ஓடுற சி.டி. வித்துட்டு இருக்கான். போய் அங்கே தர்ணா பண்ண வேண்டியதுதானே... பொம்பளைங்களைவெச்சு வியாபாரம் பண்றதுன்னா அர்த்தம் என்ன தெரியுமா? ஜி.பி. ரோடு பக்கமா வாங்க... 10 ஆயிரம் ரூபாயில இருந்து, 100 ரூபாய் வரைக்கும் கிராக்கிகளை நிறுத்திவெச்சு விசிலடிச்சுக் கூப்பிடு றானுங்க மாமா பசங்க. அவங்களுக்கு எதிராப் போயி போராட்டம் நடத்துங்க!'' என்று பல்லைக் கடித்தார்.*

www.t.me/tamilbooksworld

*மோகன் குமார் துளியும் அசங்காமல், ''தவறு என்பது யார் செய்தாலும் கண்டிக்கத்தக்கதுதான். இப்போது நான் நடத்தும் போராட்டம் என்பது ஆபாசத்துக்கும் வக்கிரத்துக்கும் துணை போகிற எல்லாரையும் எதிர்த்துதான்!'' என்றார்.*

*''எதுக்கு வீண் பேச்சு? சினிமா விநியோகஸ்தர்கள் சங்கத்துல கலந்து ஆலோசனை பண்ணிட்டு வந்துதான் உங்க கிட்டே பேசுறேன்.*

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

இந்த உண்ணாவிரதத்தை நிறுத்திட்டு, ஜூஸ் குடிச்சிட்டு, வீட்டுக்குப் போக உமக்கு எவ்ளோ ரூபா வேணும்?''

''பணமா..? அதற்கெல்லாம் விலை போகிறவனா நான்?'' என்று மோகன் குமார் எகத்தாளமாகச் சிரிக்க... ''அப்ப இதை யாச்சும் வாங்கிக்கடா கிழவா!'' என்றபடி அவர் முகத்தில் நங்கு நங்கென்று சரமாரியாகக் குத்தித் தள்ளினார் ஜெகதீஷ் பால். முன்னாள் பாக்ஸிங் சாம்பியனான இந்த இந்நாள் அரசியல்வாதியின் குத்து இடியாக இறங்கியதில், மோகன் குமாரின் மூக்கு துவாரத்தில் இருந்து பீய்ச்சியது ரத்தம்!

ஆத்திரம் தீர்ந்ததும் சுதாரித்த ஜெகதீஷ் பால், பலர் பார்க்க நடந்துவிட்ட விபரீதத்தின் விளைவைப் புரிந்துகொண்டவராக கபாலென்று எழுந்து தன் காரை நோக்கி ஓடினார். ''ஹே ராம்!'' என்று முனகியபடி தரையில் கிடந்து துடித்தார் மோகன் குமார்.

www.t.me/tamilbooksworld

- தொடர்ந்து சந்தேகிப்போம்...

Copyright © Vikas Swarup 2008

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

# மோட்டிவ் 6

விகாஸ் ஸ்வரூப்

தமிழில்: அஞ்சனாதேவ்

## ''அடிச்சுக் கொல்லுங்கடா, அவனை!''

முன்னாள் பாக்ஸிங் சாம்பியனும் இந்நாள் அரசியல் ரவுடியுமான ஜெக தீஷ் பால் விட்ட 'நாக்-அவுட்'டில், மோகன் குமாரின் மூக்கு வெத்தலை பாக்கு போட்டுக்கொண்டது. பீய்ச்சியது ரத்தம்!

ஆத்திரம் தீர்ந்ததும் சுதாரித்த ஜெகதீஷ் பால், பலர் பார்க்க நடந்துவிட்ட விபரீதத்தின் விளைவைப் புரிந்துகொண்டவராக கபாலென்று எழுந்து தன் காரை நோக்கி ஓடினார். ''ஹே ராம்!'' என்று முனகியபடி தரையில் கிடந்துதுடித்தார் மோகன் குமார்.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

''காந்தி பாபாவை அடிச்சிட்டாண்டாஇந்த எம்.எல்.ஏ.! அவனை விடக் கூடாதுடா!'' என்று காட்டுத் தீயாகச் சடசடத்தபடி,கூட்டம் எகிறிப் பாய்ந்தது. ஜெகதீஷ் பாலின் அரசியல் எதிரியும், அசராத தந்திர நரியுமான அவதேஷ் பால், ''அடிச்சுக் கொல்லுங்கடா அந்த நாயை!'' என்று பிளிற... கூட்டத்தில் கலந்து இருந்த அவனுடைய ஆதரவாளர்கள்ஜெகதீஷ் பாலின் காரை அடிக்கத்துவங்க.. ஜனத்தைப் பிளந்துகொண்டு பறந்தது கார்.

''கொளுத்துங்கடா தியேட்டரை!'' என்று அடுத்த பிளிறல் பிறந்தது அவதேஷிடம் இருந்து. வலியில் துடித்தபடியே 'கிர்'ரடித்த தலையைப் பிடித்தபடி மயங்கிச் சரிந்தார் மோகன். தியேட்டருக்குள் பாய்ந்த ஜனக் கூட்டம் பேனர்களையெல்லாம் அடித்து நொறுக்கியது. தியேட்டரின் கதவுகளை அடித்துச் சாய்த்தது. சற்று நேரத்தில் உள்ளே இருந்து புகை மண்டலம்கிளம்ப... படம் பார்த்துக்கொண்டு இருந்த ரசிகர்கள் அலறியபடி வெளியே ஓடிவர ஆரம்பித்தனர்.

www.t.me/tamilbooksworld

ஒரு சில நிமிடங்களில் தீயணைப்பு வண்டி வந்து நீரைப் பீய்ச்ச, இன்னொரு பக்கம் போலீஸ் வண்டிகள் வந்து நின்றன. லத்தி சுழல, புட்டத்திலும் பிடரியிலும் பின்னங்காலிலுமாக பலருக்கு விளாசல் விழுந்தது. மோகன் குமாரை நோக்கி வந்தார் ஒரு இன்ஸ்பெக்டர். பின்னாடியே வந்தார் தியேட்டர் மேனேஜர்.

மெதுவாக மயக்கம் தெளிந்து எழுந்து உட்கார்ந்த மோகன் குமாரைக் காட்டி, ''இந்தாளுதானா?'' என்று இன்ஸ்பெக்டர் கேட்டார். ''ஆமாம் சார்!'' என்று கூக்குரலிட்டார் மேனேஜர். ''இந்தாளுதான் எல்லாத்துக்கும் காரணம்!''

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

''மிஸ்டர் மோகன் குமார்! யூ ஆர் அண்டர் அரெஸ்ட்!'' என்ற இன்ஸ்பெக்டரை கோபமாக முறைத்துப் பார்த்தார் இவர். மூக்கில் பொங்கிய ரத்தத்தை கர்ச்சீப்பால் அழுத்திப் பிடித்தபடியே, ''நான் என்ன தப்பு செஞ்சேன்?'' என்றார் வீக்காக.

''கேட்டுக்கோ மிஸ்டர் காந்தி பாபா! செக்ஷன் 307 கொலை முயற்சி, செக்ஷன் 425 சொத்துகளை நாசம் செய்கிற போக்கிரித்தனம், செக்ஷன் 153 கலவரத்துக்குத்தூண்டுதல்...'' என்று இன்ஸ்பெக்டர் லிஸ்ட் போட்டுக் கொண்டே போனார்.

இதுவரை இல்லாத ஒரு கலவரமும் பயமும் மோகன் குமார் முகத்தில் அப்பியிருந்தன. ''என்னை இப்போ ஏன் காந்தி பாபானு கூப்பிட்டீங்க? என் பேர் மோகன் குமார். நான் உத்தரப் பிரதேசத்தின் முன்னாள் தலைமைச் செயலாளர்! நான் எப்படி இங்கே வந்தேன்னு தெரியலை. எவனோ ஒருத்தன் என் மூக்குல குத்திட்டுப் போயிருக்கான். அவனை அரெஸ்ட் பண்றதை விட்டுட்டு என்கிட்டே வந்து உங்க பவரைக் காட்டுறீங்களா? என்கிட்டே விளையாட்டு வெச்சுக்கிட்டீங்கன்னா, உங்களை தண்ணியில்லாத காட்டுக்கு மாத்த ஏற்பாடு செஞ்சிடுவேன்!'' என்றார் விறைப்பாக. விழுந்த குத்தில்... அவருக்குள் இருந்த மகாத்மா காந்தி 'ஆப்சென்ட்' ஆகி இருந்தார். காந்திஜியின் கீச்சுக் குரல் போய், வழக்கமான கடமுடா குரல் வந்திருந்தது. முகத்திலும் சாந்தம் மறைந்து திமிர் சதிராடியது.

www.t.me/tamilbooksworld

''ஓஹோ..! நீங்க என்னை மாத்தப்போறீங்களா? போலீஸ் ஸ்டேஷனுக்கு வந்து, அங்கே இருந்தே அதுக்கு ஏற்பாடு பண்ணுங்க!'' என்றபடியே கான்ஸ்டபிளைப் பார்த்தார் இன்ஸ்பெக்டர். மோகன் குமாரை நெம்பித் தள்ளி போலீஸ் ஜீப்பில் திணித்தார் கான்ஸ்!

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*மேற்கு டெல்லியில் ஏழு பிளாக்குகளில் அமைந்தது திகார் ஜெயில். 7,000 பேர் வரை இருக்கலாம். ஆனால், அதற்குள் 13,000 பேரையும் தாண்டி கைதிகளைத் திணித்து இருக்கிறார்கள்.*

*கொழுகொழுவென்று இருந்தார் வார்டன். ஓய்வுபெற இன்னும் நாலைந்து வருடங்கள் இருக்கும் அவருக்கு. தன் எதிரில் மிகவும் கோபமாக நின்று இருந்த மோகன் குமாரைப் பார்த்து எகத்தாளமாகச் சிரித்தார்.*

*''வெல்கம் சார். உங்களை மாதிரி பெரிய பதவியில் இருந்த, இருக்கிற சிவில் சர்வென்ட்களை வரவேற்கிற பாக்கியம் எப்பவாச்சும்தான் கிடைக்குது!''*

www.t.me/tamilbooksworld

*வார்டனின் இந்த நக்கல் மோகன் குமாரின் மண்டைக் கடுப்பை பன்மடங்கு உயர்த்தியது. ''என்னை நாலு மாதம் ஜெயிலில் ரிமாண்ட் செய்ய வேண்டும் என்று உத்தரவு போட்ட மாஜிஸ்திரேட்டின் மூளையை ஸ்கான் பண்ணிப் பார்த்தால் தேவலை. அது போகட்டும்... என் பேட்ச்மேட்டாகசிவில் சர்வீஸில் நுழைஞ்சவர்தான் இப்போதைய போலீஸ் கமிஷனர். அவர் உங்களுக்கு போன் செஞ்சி இருப்பாரே..?''*

*''ஆமாம் சார். உங்களை ஹை செக்யூரிட்டி செல்லுக்குள் வைக்கச் சொன்னார். அதான்... பப்லூ திவாரி இருக்கிற இடத்தில் உங்களை வைக்க முடிவெடுத்து இருக்கிறோம்!''*

*''பப்லூ திவாரியா? பயங்கர தாதா கூட்டத் தலைவனாச்சே அவன்? அவனோட சேர்த்து என்னை அடைக்கிறதுதான் எனக்கு நீங்க காட்டுற மரியாதையா?''*

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

''அங்கே போனதும் உங்களுக்குப் புரியும் சார்.''

நிஜம்தான்!

ஜெயிலின் தெற்கு மூலையில் இருந்த செல்லின் ராஜபோகம் அப்படி!

''பொதுவாக ஏழுக்கு பத்து என்பதுதான் இந்த பிளாக்கில் உள்ள அறைகளின் அளவு. நீங்கள் பப்லூ திவாரியுடன் சேர்ந்து இருக்கப் போகிற செல் மட்டும் அடுத்தடுத்த இரண்டு அறைகளை சேர்த்து டபுளாக அமைக்கப்பட்டது...'' என்று சொல்லிக்கொண்டே சாவி போட்டு அந்த அறையைத் திறந்தார் வார்டன். பார்த்ததுமே கண்ணைக் கட்டியது மோகன் குமாருக்கு. பாதத்தில் குளிர் தாக்காமல் இருக்கும் வகையில் தரை முழுக்க கார்பெட் போடப்பட்டு இருந்தது. ஒரு சின்ன டி.வி. இருந்தது. மினி பார்கூட இருந்தது. புஸ்ஸ 8 புஸ்ஸென்று ஒரு மெத்தையில் கொழுகொழுவென்ற ஓர் ஆள் தூங்கிக்கொண்டு இருந்தான். அதற்கு மேல் அடுக்கில் ரயில் பெர்த் மாதிரி இன்னொரு மெத்தை இருந்தது.

www.t.me/tamilbooksworld

வார்டன் உள்ளே போய் நின்று தன் இரு கைகளையும் விரித்து, ''திகார் சிறை தங்களை வி.ஐ.பி. ஸ்டைலில் வரவேற்கிறது!'' என்றார்.

''பிரமாதம்! இந்த உதவிக்கு மிக்க நன்றி!'' என்று புளகாங்கிதமாக அறையைச் சுற்றிவரப் பார்த்த மோகன் குமார், ''என்னை எதற்கு இன்னொரு ஆளோடு போட்டு அடைக்கிறீர்கள்? நிம்மதியாக... தனியாக இருக்கவே விரும்புகிறேன். இந்த ஆளை வேறு அறைக்கு மாற்றிவிட முடியாதா?'' என்றார். வார்டன் சிரித்துவிட்டு, ''என் இஷ்டப்படி ஆட்களுக்கு அறை ஒதுக்க இது ஒன்றும் ஹோட்டல் கிடையாது, சார்.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*மேலும், திருவாளர் பப்லூ திவாரிக்காகத்தான் மெயினாக இந்த வசதிகள். அவர் உங்களைவிட அரசியல் உலகில் அதிக செல்வாக்கு படைத்தவர்!'' என்றவர், திவாரியின் தோளில் மென்மையாகத் தட்டி எழுப்பினார் - ''திவாரிஜி... உங்களுக்கு ஒரு புதிய நண்பர் கிடைத்திருக்கிறார்!''*

*எழுந்து உட்கார்ந்த அந்த தாதா தலைவனை நன்றாகப் பார்த்தார் மோகன் குமார். ஆள் குட்டைதான். ஆனால், செக்கச் செவேலென்று வட்ட முகத்தோடு சுத்தமாக ஷேவ் பண்ணி இருந்தான். சேமியா மாதிரியாக நீளநீளமாக அடர்ந்த தலைமுடி. முன் நெற்றியை அது மறைத்தது. கொட்டாவி விட்டபடியே வார்டனைப் பார்த்த பப்லூ திவாரி, ''என்ன ஸாப். எதுக்கு நல்ல தூக்கத்துல எழுப்புனீங்க?'' என்றான் சலிப்பாக.*

*''உத்தரப் பிரதேசத்தின் முன்னாள் தலைமைச் செயலாளர் மோகன் குமார் உங்களோடு சில காலம் இருக்கப்போகிறார்!''*

www.t.me/tamilbooksworld

*நிமிர்ந்து பார்த்த பப்லூ, ''ஓ! பேப்பர்ல உங்க போட்டோ பார்த்தேன். நீங்கதானே உங்களை மகாத்மா காந்தினு சொல்லிக்கிட்டு திடீர்னு அலம்பல் பண்றது?'' என்றான். மோகன் குமாருக்கு எரிச்சலாக வந்தது. அமைதியாக இருந்தார்.*

*''நீங்க என்னவாச்சும் சொல்லிட்டுப் போங்க. என்னோட சேர்ந்து தங்கி இருக்கும்போது, என்னைத் திருத்தறேன் பேர்வழினு லூஸுத்தனமா எதுவும் பண்ணாம இருந்தா சரி!'' என்றவன், ''வார்டன் சார்... என் மொபைலுக்கு இன்னொரு புது சிம் கார்டு கேட்டிருந்தேனே... என்னஆச்சு?''*

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*''உஷ்... இப்படி எல்லாம் சத்தமாக் கேட்காதீங்க. ஜெயில்ல சுவருக்குக்கூட காது உண்டு!'' என்று பதற்றமான வார்டன், ''ஏற்பாடு பண்ணிட்டேன்... நாளைக்கு உங்களுக்குக் கிடைச்சிடும்!'' என்றார். வார்டன் போன பிறகு, தன் தலையணைக்கு அடியில் இருந்து ஒரு பிராண்ட் நியூ செல்போனை எடுத்து, யாரிடமோ அதிகார தொனியில் பேச ஆரம்பித்தான் பப்லூ. மோகன் குமார் கஷ்டப்பட்டு மேல் பர்த் கட்டிலுக்கு ஏறி மெத் தையில் படுத்துக்கொண்டு கண்களை மூடினார். கம்பிக் கதவின் வழியாக வந்த காற்று, ரொம்பக் குளிராக இருக்கவும், காலடியில் கிடந்த கம்பளியை எடுத்துப் போர்த்திக்கொண்டார். அது யார் யார் உபயோகித்ததோ... போர்த்திய கொஞ்ச நேரத்திலேயே உடம்பில் ஆங்காங்கே லேசாக அரிப்பு. பொங்கி வந்த அழுகையைக் கட்டுப்படுத்திக்கொள்ள ரொம்பவே கஷ்டப்பட்டார் மோகன் குமார்.*

*மதியம் உணவு வந்தது. ஒரு ஸ்டீல் பிளேட்டில் நான்கு தடிப்பான ரொட்டிகள்... கொஞ்சூண்டு கூட்டு மாதிரி ஏதோ... வேகவைத்து நீர்த்த பருப்புக் கரைசல் ஒரு கப்... ஒரு ரொட்டிக்கு மேல் மோகன் குமாரால் முழுங்கவே முடியவில்லை. துக்கம் தொண்டையை அடைக்க... அதை அப்படியே ஓரங்கட்டி வைத்துவிட்டார். பப்லூ திவாரி சுத்தமாகவே அதைத் தொடவில்லை.*

www.t.me/tamilbooksworld

*படுக்கையில் கிடந்தபடியே சும்மா பத்திரிகை படிக்கிற மாதிரி நடித்தார் மோகன் குமார். வயிறு 'கவா.. கவாங்' என்று பசியில் இரைந்தது. எப்போது தூங்கினாரோ தெரியவில்லை.. கனவில் ஸ்காட்ச்சும் பட்டர் சிக்கனும் வந்து நாட்டியமாடின. படக்கென்று விழிப்பு தட்டிப் பார்த்தால், நிஜமாகவே அவர் எதிரில் ஒரு கிளாஸ் பொன்னிறத் திரவம் தளும்பிக்கொண்டு இருந்தது. அதற்கு அப்பால் இருந்து சிரித்த உருவம் பப்லூ திவாரியேதான்.*

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*''என்னா பெரியவரே... ஒரு பெக் போடுவீங்க தானே?'' என்றான். ''இது என்னது?'' என்றார் லேசாக நாக்கைச் சுழற்றியபடி. ''ஸ்காட்ச். 20 வருஷத்து மதிப்புள்ளது!'' என்றபடியே பப்லூ தனது தம்ளரை உயர்த்திக் காட்டினான்.*

*''ஒரே ஒரு பெக் வேணா போட்டுப்பாக்கறேன்...'' என்றபடி கபக்கென்று எடுத்து சிப் அடித்தார் மோகன் குமார்.*

- தொடர்ந்து சந்தேகிப்போம்...

Copyright © Vikas Swarup 2008

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

# மோட்டிவ் 6

விகாஸ் ஸ்வரூப்

தமிழில்: அஞ்சனாதேவ்

## ஜெயிலுக்குள்ளே ஜாலி... ஜாலி!

காய்ந்த மாடு கழனித் தண்ணியைக் குடிக்கிற வேகத்தில் ஒரே 'கல்ப்'பாக ஸ்காட்சை அடித்துத் தீர்த்தார் மோகன் குமார். ஓசி குடிக்கு தான் காட்டிய அலைச்சலை நினைத்து அவருக்கே வெட்கமாக இருந்தது. ஜெயில்மேட் தாதா பப்லூ திவாரி எகத்தாளமாகச் சிரித்தான்.

www.t.me/tamilbooksworld

சாயங்காலம் 4 மணி வாக்கில் அறைக் கதவைத் திறந்துவிட்டார்கள். "வாங்க, அப்படியே ஃப்ரெஷ்ஷா காத்தை சுவாசிச்சிட்டு வரலாம்!" என்று இவரையும் கூட்டிக்கொண்டு கிளம்பினான் பப்லூ. வெளியே ஃபுட்பால் கிரவுண்டு சைஸுக்கு மைதானம் சிறைக்கு உள்ளேயே இருந்தது. தாடிவிட்டு, பளிச்சென்று ஷேவ் செய்து, 60 வயதுக்கு மேல், 20 வயதுக்குள் என்று வெவ்வேறு விதமான மனிதர்கள் காணப்பட்டார்கள். சிலர் வாலிபால் ஆடிக்கொண்டு இருந்தார்கள். சிலர் ஒரு ரேடியோ பெட்டியைச் சூழ்ந்து உட்கார்ந்து

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

கேட்டபடி இருந்தார்கள். கொஞ்சம் பேர் குவியல் குவியலாக உட்கார்ந்து அரட்டை. எல்லோருமே பப்லூ திவாரியின் தலையைப் பார்த்ததும் அடித்த அதி மரியாதையான சலாம், சிறைக்குள் இவனுடைய மதிப்பு என்னவென்று புரியவைத்தது. மூன்று பேர்கொண்ட ஒரு குழு மட்டும் பப்லூ வருவதைக் கண்டும் காணாமலும் தங்கள் அரட்டையைத் தொடர்ந்தது.

''அந்த ஏரியா பக்கம் திரும்பிப் பார்க்காதீங்க. அவனுங் களோட பேசாதீங்க. போன வருஷம் செங்கோட்டையில் குண்டு வெடிச்சதே... அந்த வழக்கில் கைதாகி இருக்கிற தீவிரவாதிங்க அவனுங்க!'' என்றான் பப்லூ. ''இவங்க ஹை ரிஸ்க் கைதிகளாச்சே... எப்படி இவ்ளோ ஃப்ரீயா விட்டு இருக்காங்க?'' என்று மோகன் குமார் வியப்பு காட்ட... ''அப்படிப் பார்த்தா, நீங்களும் நானும்கூடத்தான் ஹை ரிஸ்க் வகையறாவுல இருக்கோம்!'' என்று சிரித்தான்.

www.t.me/tamilbooksworld

''சரிப்பா... நீ அப்படி என்ன தப்பு பண்ணதுக்காக இங்கே வந்தே?''

''நான் என்ன பண்ணலைன்னு கேளுங்க. இந்தியன் பீனல் கோட் சொல்ற எல்லா செக்ஷன்களிலும் நான் புகுந்து வந்திருக்கேன். ஆனா, ஒரு கேஸ்கூட எனக்கு எதிரா ஜெயிக்காது. இப்பக்கூட நானேதான் விருப்பப்பட்டு ஜெயிலுக்குள்ளே இருக்கேன். வெளியே ஒரு முக்கியமான வேலையை எங்க ஆளுங்க முடிக்கிற வரையில் எனக்கு இங்கேதான் சேஃப்டி!''

முரட்டுத்தனமாக முகம் காட்டிய ஒருசிலரிடம் பேசி விட்டு வந்தான் பப்லூ. இதற்குள், அரும்பு மீசை இளைஞன் ஒருவன் ஓடி வந்து மோகன் குமாரின் காலைத் தொட்டு வணங்கினான். ''டேய், தம்பீ... என்ன இதெல்லாம்?'' என்று அவர் பதறி ஒதுங்க... ''ஐயா, என் பேரு குட்டு...

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

ஜனங்க எல்லாம் உங்களை மகாத்மா காந்தினு சொல்றாங்க. அதான் ஆசி வாங்கினேன்!'' என்றான்.

மோகன் குமாருக்கு நெற்றி சுருங்கி விரிந்தது. ''சரிப்பா... நீ என்ன பண்ணதுக்காக ஜெயிலில் போட்டாங்க?''

''ஒரு கடையில் பிரெடு திருடிட்டேன்யா... எனக்காகக்கூட இல்லை... பசி பொறுக்காமல் துடிச்ச எங்க அம்மாவுக்காக எடுத்தேன். பிடிச்சுப் போட்டுட்டாங்க. இங்கே தினமும் ஜெயில் ஆளுங்க எதுக்காச்சும் போட்டு அடிச்சுக்கிட்டே இருக்காங்கய்யா... நீங்க நினைச்சா என்னை வெளியே போகவைக்க முடியும்யா!''

மோகன் குமார் செம கடுப்பாகிவிட்டார். ''ச்சூ... தூர தள்ளிப் போ! முதல்ல நானே எப்படி வெளியே போறதுன்னு புரியாம யோசிச்சுட்டு இருக்கேன். இதுல உன்னை வேற காப்பாத்தனுமா? இதோ பாரு... என்னைப் பார்த்து மகாத்மா காந்தி அது - இதுனு அசிங்கமாப் பேசினா, நான் சும்மா இருக்க மாட்டேன், புரியுதா?'' என்று இவர் சீற... அந்தப் பையன் மிரண்டு ஓடினான்.

www.t.me/tamilbooksworld

''இது என்னய்யா விநோதமா இருக்கு. என் காலைத் தொட்டு ஒருத்தன் கும்பிடுறான்... நான்தான் காப்பாத்தனும்னு சொல்றான்... இது என்ன ஜெயிலா, இல்லாட்டி பைத்தியக்கார ஆஸ்பத்திரியா?'' என்று முணுமுணுத்தபடியே பப்லூ திவாரியின் பின்னால் நடந்தார் மோகன் குமார்.

ராத்திரி தூங்கப் போகும்போதும் பப்லூ பெரிசாக எதுவும் சாப்பிடவில்லை. ஆச்சர்யமாக அவனிடம் இவர் காரணம் கேட்க, ''பெரியவரே... நமக்கு சாப்பாடெல்லாம் இதான். ராத்திரிக்கு மட்டும் ஒரு

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

டோஸ் ஏத்திக்கிட்டா பசி, தூக்கமே இருக்காது!'' என்றபடியே எங்கே இருந்தோ ஓர் ஊசியை எடுத்து, தன் கையில் ஏற்றிக்கொண்டான்.

''அடப் பாவி... நீ போதை மருந்து அடிமையா?'' என்று இவர் பதற..

''இது ரொம்ப உசத்தியான கோகெயின். ஆனா, கன்ட்ரோல்ல வெச்சிருக்கேன். இதான் எனக்கு அடிமை!'' என்று சொல்லிவிட்டு, ''ஒரு ஷாட் ஏத்திக்கிறியா பெருசு? அப்புறம் உனக்கு ஸ்காட்ச்கூட தேவைப்படாது!'' என்று இளித்தான். ''ஆளை விடுப்பா...'' என்றபடி அவசரமாக மேல் பர்த் படுக்கையில் ஏறி கம்பளியை இழுத்துப் போர்த்திக்கொண்டார் மோகன் குமார்.

நாட்கள் நகர நகர... மோகன் குமாரின் வாழ்க்கைமுறையே மாறுகிறது. அதிகாலை 5 மணிக்கு தலைகளை எண்ணுவதற்காக ஜெயில் அதிகாரிகள் கூவி அழைத்து எழுப்பிவிடுவார்கள். வயிற்றைப் புரட்டும் டாய்லெட்டில் மூக்கைப் பொத்திக் கொள்ளாமலே உட்காரும் அளவுக்குப் பழகிவிட்டார். கூடவே, சிறையின் கொட்டைக் கொட்டை சோற்றையும், தோல் மாதிரி ரொட்டியையும் சாப்பிடப் பழகி இருந்தார். பஞ்சாபிக் கொலை காரர்கள், குஜராத்தி போதை வியாபாரிகள், நைஜீரிய இன்டர்நெட் பண மோசடி ஆசாமிகள், உஸ்பெகிஸ்தான் கள்ள நோட்டு கும்பல், வட இந்திய ரேப்பிஸ்ட்டுகள், தென்னிந்திய ஒயிட் காலர் ஃபிராடுப் பேர்வழிகள் என்று பலரும் இவருக்கு இப்போது பழக்கம். அதிலும், திருமூர்த்தி என்று ஒரு சம்ஸ்கிருத வாத்தியார் செம சுவாரஸியமான ஆள்!

www.t.me/tamilbooksworld

ஸ்காட்ச் விஸ்கி பப்லூ புண்ணியத்தில் ஓரளவு கிடைக்கிறது. புதன்கிழமைகளில் மட்டும் வீட்டில் இருந்து மனைவி சாந்தி செய்து

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*அனுப்பும் சிக்கன் பிரியாணி, மட்டன் கறி விசேஷ சலுகையாக இவருக்கு அனுமதிக்கப்படுகிறது. வக்கீல்கள் வந்து பார்த்துவிட்டுப் போகிறார்கள் - சீக்கிரம் வெளியே கொண்டுவந்துவிடுவதாக வாக்குறுதி கொடுக்கிறார்கள். பத்திரிகை படிக்கிற மாதிரி லைட்டாகக் காதை தீட்டிக்கொண்டால், பப்லூ தன்னுடைய இரண்டு மூன்று செல்போன்களில் மாறி மாறி கிசுகிசுப்பான குரலில் பேசுவது கேட்கிறது. ஆள் கடத்தல், தேர்தலுக்கு கள்ள ஓட்டு கும்பல் சப்ளை, வெளிநாட்டுக்கு கோகெயின் கடத்துவது, வீடு - பங்களாக்களைக் காலி செய்வது என்று ஒவ்வொரு பாவ காரியத்துக்கும் ஒரு கும்பலை வைத்துக்கொண்டு, இங்கு இருந்தபடியே அவன் இயக்குவது தெரிந்தபோது... முதலில் ரொம்ப பயந்தார்... பிறகு வியந்தார்!*

*பப்லூ தன் பவரின் உச்சகட்டத்தை ஜெயில் சகாக் களுக்குக் காட்டுவதற்குக் குறித்திருந்த தேதி, நியூ இயர் தினம்!*

www.t.me/tamilbooksworld

*அன்றைக்கு சிறை அதிகாரிகள் மற்றும் கைதிகளுக் கென்றே ஒரு ஸ்பெஷலோ ஸ்பெஷல் புரோகிராமை வெளியில் இருக்கும் தன் ஆட்களின் மூலமாக ஏற்பாடு செய்துவைத்து இருந்தான் அவன்!*

*டிசம்பர் 31-ம் தேதி முன்னிரவிலேயே ஜெயிலுக்குள் அந்த ஸ்பெஷல் ஏரியா களை கட்டிவிட்டது. முட்டிக்கு மேலாக ஸ்கர்ட்டும், டவலை மடக்கி மார்பில் கட்டிய மாதிரியான ஒரு மேலுடுப்பும் அணிந்துகொண்டு, வழுக்கு மொழுக்கென்று ஒரு அழகி அந்த தற்காலிக மேடையில் ஏறி ஆடிக்கொண்டு இருந்தாள். பாலிவுட் கனவுக் கன்னி ஷப்னம் சக்ஸேனாவின் லேட்டஸ்ட் படத்தின் பாடல் ஒன்று ஸ்பீக்கரில் அலறிக்கொண்டு இருக்க, இந்த அழகி வளைந்தும் நெளிந்தும் குனிந்தும் காட்டிய போஸ் அத்தனை ஆபாசம்!*

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

மேடைக்கு முன்னால் முதல் வரிசையில் பப்லூ திவாரி அமர்ந்திருக்க, அவனுக்கு ஒரு பக்கம் ஜெயில் உயர் அதிகாரியும், இன்னொரு பக்கம் ரூம்மேட் மோகன் குமாரும் வாயைப் பிளந்து டான்ஸ் பார்த்துக்கொண்டு இருந்தார்கள். பின் வரிசைகளில் பப்லூ திவாரி பெரிய மனசு பண்ணித் தேர்ந்தெடுத்த 15 கைதிகளும், சிறையின் ஊழியர்களும் இருந்தார்கள்.

நெய்யில் வறுத்த முந்திரி இத்யாதிகள் முன்னால் பரப்பிக்கிடக்க, ஜானி வாக்கர் ரெட் லேபிள் ஸ்காட்ச்சை வாயில் சரித்துக்கொண்டு, முந்திரியைப் போட்டு அதக்கினான் பப்லூ. மேடையில் பாட்டும் டான்ஸும் சூடு பிடித்தபோது, ஜெயில் ஊழியர்கள் சிலர் மேடைக்கு மேலே தாவி ஏறி அந்த அழகியின் ஸ்கர்ட்டைத் தொட்டு விளையாடினார்கள். ஒருத்தர் அவளுக்கு ஈடுகொடுத்து இடுப்பைச் சுழற்றினார். 'ஹேய் டார்லிங்' என்பதில் தொடங்கி... கெட்ட கெட்ட வர்ணனைகளை வாயாலும் விரல்களாலும் வெளியிட் டார்கள் இன்னும் சிலர். ஒரு கட்டத்தில் பப்லூவும் மேடையின் மீது ஏறி அந்த அழகியை தன் உடம்பால் போட்டு அரைக்க ஆரம்பிக்க... ஜெயிலர் சற்று கவலையாகி, தன் கையில் இருந்த புத்தம்புது ரோலக்ஸ் வாட்ச்சைப் பார்த்துக்கொண்டார். அது ஹேப்பி நியூ இயர் பரிசாக அன்றைக்குக் காலை பப்லூ அளித்தது.

www.t.me/tamilbooksworld

ஆட்டம் பாட்டத்துக்கு நடுவே மோகன் குமாரைப் பார்த்து கண்ணடித்தான் பப்லூ. ''இன்னா சாரே... நியூ இயரை பெர்சனலா கொண்டாடுறதுக்கு ஜெயிலை விடப் பாதுகாப்பான இடம் கிடைக்குமா, சொல்லு?'' என்றான். ''நான்கூட முதல்ல ரொம்ப தப்பாத்தான் நினைச்சுட்டேம்ப்பா. திகார் ஜெயிலும் ரொம்ப ஜாலியாத்தான் இருக்கு!'' என்று வயசுக்குத் தகாமல் வழிந்தார் மோகன் குமார்.

ஓசி விஸ்கியும் சோடாவுமாக மானாவாரிக்கு அவரும் முழுங்கி இருந்தார். அடிவயிற்றில் 'மூச்சா' முட்டியது. பப்லூவிடம் ஒற்றை விரல்

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*காட்டிவிட்டு எழுந்து டாய்லெட் நோக்கி நடந்தார். வானத்தில், நியூ இயரை முன்னிட்டு வண்ணமயமாக வாணங்கள் வெடித்துச் சிதறிக்கொண்டு இருக்க... அந்த சத்தத்தை அழகியின் ஆட்டத்துக்கான ஸ்பீக்கர் சத்தம் அமுக்கிப் போட்டுக்கொண்டு இருந்தது.*

*இருட்டு வராண்டாவில் நடந்து, ஒரு திருப்பத்தை மோகன் குமார் அடைந்தபோது சடக்கென நீண்ட ஒரு முரட்டுக் கை அவருடைய வாயைப் பொத்தி இழுத்தது.*

- தொடர்ந்து சந்தேகிப்போம்...

Copyright © Vikas Swarup 2008

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

# மோட்டிவ் 6

விகாஸ் ஸ்வரூப்

தமிழில்: அஞ்சனாதேவ்

## காந்தி கிடையாதுய்யா.... பயங்கரமான ஃபிராடு!"

இது மோகன் குமார் சற்றும் எதிர்பாராத தாக்குதல்.

அவரை மடக்கிப் பிடித்த உருவம், கழுத்தைப் போட்டு வெறித்தனமாக அழுக்க... இன்னும் இரண்டு உருவங்கள் வந்து அவர் வயிற்றில் கும்மாங்குத்துகள்விட்டன. வாக்கிங் போன சமயத்தில், 'ஹை ரிஸ்க் தீவிரவாதிகள்' என்று சொல்லி பப்லூ திவாரியே பயந்து ஒதுங்கிய அதே ஆசாமிகள்தான் அவர்கள்!

mybooksworld

மோகன் குமாரை அப்படியே அழுத்திப் பிடித்து நெம்பிக்கொண்டு நகர்ந்தார்கள் அந்த மூவரும். ஜெயிலின் அந்த வராண்டா முடிவில் இருந்த வாயிற்கதவுக்கு அப்பால் ஒரு சென்ட்ரி மட்டும் இருந்தார். கூடுதலாக இருக்க வேண்டிய மற்ற இருவர்,

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

உள்ளே நடந்த டான்ஸ் பார்ட்டியில் குத்தாட்டம் போட்டுக்கொண்டு இருந்தார்கள். இருந்த ஒரு சென்ட்ரியும் லேசாகக் கண் அசந்துகிடந்தார். அவர் கையில் இருக்க வேண்டிய துப்பாக்கி சுவரில் சாத்தி வைக்கப்பட்டு இருந்தது.

தீவிரவாதிகளின் தலைவன்போல் இருந்தவன் கம்பிக் கதவு வழியாகக் கைவிட்டு அந்தத் துப்பாக்கியை சத்தமில்லாமல் கையில் எடுத்தான். தலைகீழாகத் திருப்பிப் பிடித்து, பலம்கொண்ட மட்டும் வேகமாக இறக்க... 'நச்'சென்று ஒரு சத்தம் மட்டும் கேட்டது. நடுமண்டையில் அது பாய்ந்த வேகத்தில் சின்னத் துள்ளல் வெளிப்பட்டது அந்தக் காவலரிடம் இருந்து. அப்படியே அடங்கிப்போனார்.

அவருடைய இடுப்பில் கைவிட்டுத் துழாவி சாவியை எடுத்து, கம்பிக் கதவைத் திறந்தார்கள். அதற்கும் அப்பால் இருந்த பெரிய மதிலை அடைவதற்கான கம்பி கேட்டை நெருங்கினார்கள். இவர்களைக் கவனித்துவிட்ட ஒரு காவலர் பதறிப்போய் சட்டென்று துப்பாக்கி எடுத்துக் குறி பார்க்க... மோகன் குமாரை முன்னால் நிறுத்தியபடியே நகர்ந்தார்கள். வேறு வழி இல்லாமல் அந்தக் காவலர் சுடாமல் தேங்கி நிற்க... அவரை நெருங்கியதும், ''மரியாதையா சாவியைக் கொடுத்துடு!'' என்று குரைத்தான் தீவிரவாதிகளின் தலைவன். சில நொடி யோசனைக்குப் பின் வெளிறிய முகத்தோடு சாவிக் கொத்தை அவர் எடுத்துக் கொடுக்க... தன் இடுப்புப் பகுதிக்குள் கைவிட்டுத் துழாவி ஒரு பிஸ்டலை எடுத்தான் தலைவன். அதை வைத்தே அந்தக் காவலரின் நெற்றிப்பொட்டில் நச்சென்று போட்டான். அவர் மௌனப் படம் மாதிரி தொய்ந்து சரிந்தார்.

ஒன்னுக்குப் போக வந்த மோகன் குமாரின் அடிவயிற்றில் இப்போது என்னென்னமோ செய்தது. பீதியில் பாதி உயிர் போயிருந்தது.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

''எ... எ... என்னைக் கொன்னுடாதீங்க!'' என்று அவர் வாய் தந்தியடிக்க... வார்த்தையை முடிப்பதற்குள் தீவிரவாதி தலைவன் சத்தம் வராமல் அவரைப் பார்த்துச் சிரித்தான். அதுதான் கடைசியாக இவர் நினைவில் நின்ற காட்சி. அதையடுத்து... தலையில் ஒரு வலி வெடித்து, தள்ளாடி விழுந்தார் மோகன் குமார்.

வழக்கமான சினிமா வசனத்தோடுதான் நினைவு மீண்டார் மோகன் குமார் - ''நான் எங்கே இருக்கேன்?''

''ஆஸ்பத்திரியில்!'' என்று சொன்ன நர்ஸ் பார்க்கப் பளிச்சென்று இருந்தாள். பக்கத்தில் கிடந்த செய்தித்தாளை சிரமப் பட்டு எக்கி எடுத்துப் பிரித் தார். முதல் பக்கத்திலேயே அவர் போட்டோ!

''சிறையில் காந்தி பாபா மீது தாக்குதல்!'' என்றது தலைப்புச் செய்தி. 'திகார் சிறைக்குள் இருந்த வெளிநாட்டுத் தீவிரவாதிகள் மூவர் தப்பி ஓட்டம். மிகப் பயங்கரமான இந்தத் தீவிரவாதிகளுக்கு ஒரு பிஸ்டலும் வேறு சில உபகரணங்களும் எப்படி சிறைக்குள் கிடைத்தன? இவர்கள் தப்பிச் சென்ற நேரத்தில் சிறை அதிகாரிகள் காபரே பார்த்துக் களித்துள்ளனர். காந்தி பாபாவையும் மேலும் சில சிறைக் காவலர்களையும் தாக்கிவிட்டுச் சென்று இருக்கும் இந்த தீவிரவாதிகளைத் தேடுவதற்கு சிறப்புப் படைகள் நாலா புறங்களிலும் முடுக்கிவிடப்பட்டு உள்ளன. நாடு முழுவதும் உள்ள சிறைகளில் பாதுகாப்பு நிலவரங்கள் குறித்து சோதனை நடக்கிறது' என்று கூறியது அந்தச் செய்தி.

www.t.me/tamilbooksworld

திகார் ஜெயிலுக்கு புது அதிகாரியைப் போட்டார்கள். சிறைக்குள் நடந்த அதிரடி சோதனையில், விதம் விதமாக உள்ளே புழங்கிய சொகுசு சமாசாரங்கள் கைப்பற்றப்பட்டன. பப்லூ திவாரியும் மோகன் குமாரும் இருந்த குஜாலான டபுள் ரூம் இழுத்துப் பூட்டப்பட்டது. இருவருக்கும்

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*வேறு ஒரு 'டஞ்சன்' ரூமை ஒதுக்கினார்கள். ஆஸ்பத்திரியில் இருந்து அப்போதுதான் திரும்பி வந்து இருந்த மோகன் குமாரிடம், பப்லூ திவாரி புலம்பித் தள்ள ஆரம்பித்தான். தப்பி ஓடிய தீவிரவாதிகளைத் திட்டித் தீர்த்தான்.*

*''அவனுங்க செஞ்ச காரியத்துக்கு இப்ப எனக்கு ரிவிட் அடிச்சிட்டானுங்க. சரக்கு போட முடியலை... கோகெயின் கிடைக்கலை. டி.வி. - ரேடியோவும் கிடையாது... அதெல்லாம்கூடப் போவுது... செல்போன் இல்லாம என் தொழில் என்னத்துக்கு ஆகுறது?'' என்று உறுமிய பப்லூவை தீர்க்கமாகப் பார்த்தார் மோகன் குமார்.*

*''மகனே! பகவத் கீதா சொல்வதை நீ அறிய மாட்டாயா? இந்த உலகின் அற்ப சுகங்களில் இருந்து உன்னை விடுவித்துக்கொள். சக மனிதர்களுக்கு உதவி செய்வதையே உண்மையான மகிழ்ச்சியாகக் கருது!''*

www.t.me/tamilbooksworld

*'ஜெர்க்' ஆகிப் பார்த்தான் பப்லூ!*

*''பெரியவரே! யார் இந்த கீதா?''*

*''அது யாரோ ஒரு மனிதப் பிறப்பைக் குறிப்பது அல்ல. தெய்வமே நேரில் வந்து அருளிய வாழ்க்கை வேதம்! மனிதன் செய்யக்கூடிய பாவங்கள் அத்தனையும் அவனை எப்படி எல்லாம் பாதிக்கும் என்பதைத் தெள்ளத் தெளிவாக பகவத் கீதா கூறுகிறது...''*

*பப்லூ முகம் விகாரமாக மாறியது. ''நல்லா இருக்குதுய்யா கதை. அந்த சொகுசு ரூம்ல இருந்த வரைக்கும் என்னோட சேர்ந்து ஸ்காட்ச் விஸ்கியை சப்பிச் சப்பிக் குடிக்கத் தெரிஞ்சது. வயிறு புடைக்க சிக்கனும்*

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

மட்டனும் தின்னத் தெரிஞ்சது. அவுத்துப்போட்டு ஆடுற பொம்பளையைப் பார்த்து ஜொள்ளுவிடத் தெரிஞ்சது. ஆனா, இப்ப எல்லா வசதியும் என்கிட்டே இருந்து புடுங்கிட்டதும், நீ தத்துவம் பேசுறியா? மறுபடியும் காந்தி பாபா வேஷத்துக்கு மாறிட்டியா? நீ காந்தி கிடையாதுய்யா.... பயங்கரமான ஃபிராடு!'' என்று கூரைக்கும் தரைக்குமாகக் குதித்தான்!

அன்று மாலை வாக்கிங் போவதற்காக வெளியில் வந்தபோது, மதுரையில் இருந்து அரெஸ்ட் ஆகி இங்கே வந்திருந்த சம்ஸ்கிருத வாத்தியார் திருமூர்த்தி ஓடி வந்தார். பொய் கேஸில் தன்னைப் பிடித்துப் போட்டுவிட்டதாக எந்நேரமும் புலம்பிக்கொண்டே இருப்பார் அவர்.

''பப்லூ சாப்... பேப்பரைப் பார்த்தீங்களா... உ.பி. உள்துறை அமைச்சர் ஜெகன்னாத் ராவின் மகன் விவேக் விக்கி ராய் மீதான கொலை வழக்கு தீர்ப்பை பிப்ரவரி 15-ம் தேதிக்குத் தள்ளிவெச்சுட்டாங்களாம்...'' என்றார்.

www.t.me/tamilbooksworld

அருகில் இருந்து மோகன் குமாருக்கு உடம்பு லேசாகக் குலுக்கிப் போட்டது. ''விவேக் விக்கி ராய் என்றால்..? ரூபி கில் கொலை வழக்கைப்பற்றியா நீங்கள் சொல்கிறீர்கள்?'' என்றார் சம்ஸ்கிருத வாத்தியாரிடம்.

''அவனேதான்! நீங்க வேணா பாருங்க... அவன் விடுதலை ஆகி வெளியே வந்துடுவான்!'' என்றான் பப்லூ திவாரி.

''இறைவனுக்கும் மேலானது நீதி. அது குற்றம் செய்தவர் களை ஒருபோதும் தப்பவிடாது. நிச்சயம் விவேக் விக்கி ராய்க்கு உரிய தண்டனை கிடைக்கும்...'' என்று சாந்தமாகச் சொன்னார் மோகன் குமார்.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

அடுத்தடுத்த நாட்களில் பப்லூ திவாரியின் நடவடிக்கைகளில் பெரிய மாற்றங்கள் தெரிந்தன. எதற்கெடுத்தாலும் பதற்றப்பட்டான். சுள்ளென்று எரிந்து விழுந்தான். வயிறு புரட்டிக்கொண்டே இருப்பதாகவும், பார்வை மங்குவதாகவும் சிறை அதிகாரிகளிடம் புலம்பினான்.

சம்ஸ்கிருத வாத்தியார் திருமூர்த்திதான் கரெக்டாகக் கண்டுபிடித்தார். ''காந்தி பாபா... இவருக்கு போதை மருந்து இப்போதெல்லாம் கிடைக்காததால் உடல்நிலையில் மாற்றம் ஏற்பட்டு இருக்கிறது. இதைத்தான் 'வித்டிராயல் சிம்டம்' என்று மருத்துவம் கூறுகிறது. எப்படியாவது முயற்சி செய்து, மறுபடியும் கோகெயின் கிடைக்கிற மாதிரி செய்ய வேண்டும். இல்லாவிட்டால், பப்லூ சாப் இறந்தேபோவார்!'' என்றார் திருமூர்த்தி.

www.t.me/tamilbooksworld

மோகன் குமாருக்கு இதில் உடன்பாடு இல்லை. ''ஒரு நல்ல மருத்துவன் தன்னிடம் வரும் நோயாளியிடம் இருந்து தீமைகளை முற்றிலுமாக அகற்றுவான். அதற்குப் பதிலாக, சத்தான, தூய விஷயங்களைச் செலுத்துவானே தவிர... மேலும் மேலும் தீய விஷயங்களைச் செலுத்தித் தற்காலிகத் தீர்வை ஒருபோதும் அளிக்க மாட்டான்!'' என்று கூறியவர், ''பப்லூவுக்கு இப்போது தேவை அன்பும், பரிவான கவனிப்பும்தானே தவிர... போதை மருந்து அல்ல!'' என்றார் கணீரென்று.

மறுநாள் காலை பிரேயர் ஹாலுக்குச் சென்ற மோகன் குமார், சிறை அதிகாரிகளிடம் ஒரு வேண்டுகோள் வைத்து, அவர்கள் அனுமதியுடன் நீண்ட உரை நிகழ்த்தினார். போதையின் தீமைகளைப்பற்றி படுசுவாரஸ்யமாகவும், எளிமையாகவும் அவர் தந்த விளக்கங்கள் அங்கிருந்த பல கைதிகளைக் கவர்ந்தது. உபன்யாசத்துக்குப் பிறகு, தனித்தனியாகக் கைதிகளைத் தன்னிடத்தில் அழைத்தவர், அவர்களுடைய

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*சொந்த வாழ்க்கையில் நேர்ந்த துன்பங்கள்பற்றியும், அவர்கள் போதைக்கு அடிமையானவர்கள் எனில், அதில் இருந்து எப்படி விடுபடுவது என்பது பற்றியும் நிறைய விஷயங்களை விவாதித்தார்.*

*தொடர்ந்த நாட்களில்... சிறையின் நூலகத்தில் இருந்து, போதையின் தீமைகள் குறித்த புத்தகங்களை எடுத்து வந்து கவனமாகப் படித்தார். சிறையின் எல்லா மூலைகளிலும் கட்டப்பட்டு இருந்த ஸ்பீக்கர்களின் மூலமாக, மனதுக்கு இதமான பஜன் பாடல்கள் தினமும் ஒலிக்கும்படி ஏற்பாடு செய்தார். 'மதிய சாப்பாட்டுக்குப் பதிலாக, ஆட்டுப் பாலும் வேகவைத்த நிலக்கடலையும் கிடைக்குமா?' என்று கேட்டு சிறை அதிகாரிகளைத் திகைக்கவைத்தார்!*

- தொடர்ந்து சந்தேகிப்போம்...

www.t.me/tamilbooksworld

Copyright © Vikas Swarup 2008

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

# மோட்டிவ் 6

விகாஸ் ஸ்வரூப்

தமிழில்: அஞ்சனாதேவ்

## அமைதிக்கான நோபல் பரிசு யாருக்கு?

மோகன் குமாரின் தொடர் போதனைகளால் கைதிகளிடம் நல்ல மாற்றம். எதிர்பாராத ஒரு சாந்தம். பப்லூ திவாரிதான் இப்போது அவருடைய முதல் சீடன். போதை மருந்தின் தேவையே இல்லாமல் அவன் இப்போது தெளிவாகிவிட்டான். ''காந்தி பாபா! ஒரு மனிதன் வாழும்போதே மறுபிறவி எடுக்கிறான் என்றால்... அது எப்போது தெரியுமா?'' என்றான்.

tamilbooksworld

''சொல் மகனே!'' என்றபோது இவர் கண்களில் கசிந்த சாந்தத்தைப் பார்க்க வேண்டுமே!

''இறைவன் மீதும், மதத்தின் மீதும் துளிகூட நம்பிக்கையே இல்லாத ஒருவன்... அனைத்துக்கும் மேலான ஒரு பரம்பொருள் உண்டு என்பதை மனப்பூர்வமாக உணர்ந்து நம்புகிறானே... அந்தத் தருணம்தான்

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

மறுபிறவி வாய்க்கிறது. அதை எனக்கு அருளச் செய்த உங்களுக்கு நான் வாழ்நாள் முழுவதும் கடமைப்பட்டு இருப்பேன்.'' என்றான் பப்லூ.

அடர்ந்து முடி வளர்ந்த அவனுடைய சேமியாத் தலையை இவர் அன்போடு வருட... ''நான் மொட்டை அடித்துக்கொள்ளப் போகிறேன், பாபா. இனிமேல் சுத்த சைவம் மட்டுமே சாப்பிடப்போகிறேன்!'' என்றான் கண்கள் கலங்க.

''அப்படியே, உன் குற்ற நடவடிக்கைளையும் நிறுத்திவிடேன் மகனே!''

''ஏற்கெனவே அந்த சபதத்தை நான் எடுத்தாகி விட்டது பாபா. இனிமேல் இந்த பப்லூவுக்கும் துப்பாக்கிக்கும் வெகு தூரம்!'' என்றபடியே அவர் தோளில் சாய்ந்துகொண்டான்.

www.t.me/tamilbooksworld

சம்ஸ்கிருத வாத்தியார் திருமூர்த்தியின் மைத்துனன் ஒருவன் டெல்லியில் வசிக்கிறான் என்றும், அவன் ஒரு ஐ.டி. நிபுணன் என்றும் அறிந்துகொண்ட மோகன் குமார், தன் சன்மார்க்க சேவையை ஹைடெக் ரேஞ்சிலும் விரித்தார். அந்த மச்சினன் மூலமாக ஓர் இணையதளம் துவங்கவைத்து, சிறைக் கைதிகள் வரையும் ஓவியங்களை வெளியே கொடுத்து அனுப்பி, அந்த இணையதளத்தின் மூலம் விற்பனை செய்ய ஏற்பாடு செய்தார்.

பெண்கள் சிறையில் அவர் அடிக்கடி போய் உபதேசம் கொடுக்கிறார். அவர்கள் மூலமாக சுவையான நொறுக்குத் தீனிகளை சிறைக்குள்ளேயே தயாரிக்க ஏற்பாடு செய்து, அவற்றை வெளியில் விற்றுக் காசாக்கும் ஐடியாவை வெற்றி கரமாகச் செயல்படுத்திவிட்டார்.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

‘பாபுஸ் சாய்ஸ்’ என்ற பெயரில் அந்தத் தயாரிப்புகள் மார்க்கெட்டில் சக்கைப்போடு போடுகின்றன.

அதே சிறையில் இருக்கும் இரண்டு பிரிட்டிஷ் போதைக் கடத்தல் புள்ளிகள், மோகன் குமாரின் பின்னாடியே நாய்க்குட்டி மாதிரி சுற்றுகிறார்கள். அவருடைய வாழ்க்கை வரலாற்றைப் புத்தகமாகக் கொண்டுவரும் பொறுப்பை அவர்கள் ஏற்றிருக்கிறார்கள். இவை எல்லாமும் அந்த இணையதளத்தில் ஏறிக்கொண்டே இருக்க... புகழ்பெற்ற பல்கலைக்கழகத்தின் மாணவர்கள் சிலர், மோகன் குமாரின் வாழ்க்கைபற்றி ஆராய்ச்சி நடத்துகிறார்கள். அமைதிக்கான நோபல் பரிசை அவருக்குத் தர வேண்டும் என்று சிபாரிசு செய்கிறது அந்தப் பல்கலைக்கழகம்.

www.t.me/tamilbooksworld

பிப்ரவரி 15-ம் தேதி நெருங்க நெருங்க... விவேக் விக்கி ராய்க்கு என்ன தீர்ப்பு வரும் என்பதே சிறை முழுவதும் பேச்சாக இருந்தது. தீர்ப்புக்கு முந்தைய தினம் எல்லாக் கைதிகளும் தூங்கிப்போனாலும், மோகன் குமார் மட்டும் ஏதோ சிந்தனையில் புரண்டபடி இருந்தார். தீர்க்கமான ஒரு முடிவோடுதான் காலையில் படுக்கையைவிட்டு எழுந்தார். மறுநாள் மதியச் சாப்பாடு முடிந்ததும், எல்லாக் கைதிகளையும் கூட்டமாகத் திரட்டிக்கொண்டு ஜெயிலரின் அறைக்குப் போனார் அவர்.

''விவேக் விக்கி ராய் வழக்கின் தீர்ப்பை நாங்கள் தொலைக்காட்சி செய்தி மூலம் அறிய முடியுமா?'' என்கிறார் ஜெயிலரிடம். ''அதுக்கென்ன... நானே பார்க் கலாம்னுதான் இருந்தேன்'' என்றபடி டி.வி. பட்டனைத் தட்டினார் ஜெயிலர்.

ஐ.டி.என். தொலைக்காட்சியில் லைவ் டெலிகாஸ்ட்... பெண் செய்தியாளர் பர்க்கா தாஸ் கையில் மைக்குடன் டெல்லி நீதிமன்றத்துக்கு

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

வெளியே நிற்கிறாள். ''ஓ.ஜே.சிம்ஸன் வழக்கின் தீர்ப்பு வெளியான சமயம் ஒட்டுமொத்த அமெரிக்காவும் எப்படி மூச்சுக்கூட விடாமல் காத்திருந்ததோ... அதுபோலவே விவேக் விக்கி ராய்க்கு என்ன தீர்ப்பு தரப்படும் என்று எதிர்பார்த்து இந்திய தேசம் காத்திருக்கிறது...'' என்று பில்ட்-அப் கொடுத் தாள் பர்க்கா தாஸ்.

''நீதிமன்ற அறைக்குள் எங்கள் விசேஷ நிருபர் சுப்ரதோ ராய் இருக்கிறார். உள்ளே நடக்கும் நிகழ்வுகளை நொடிக்கு நொடி நம்மோடு அவர் பகிர்ந்துகொள்கிறார்...'' என்றவள், ''சுப்ரதோ ராய்... தீர்ப்பு வழங்கப்பட்டுவிட்டதா?'' என்கிறாள் தன் வாய் அருகே இருந்த இன்னொரு மைக்கில். காதில் மாட்டி இருக்கும் உபகரணத்தை நன்றாக அழுத்திப் பிடித்தபடி காது விடைத்துக் கவனிக்கிறாள். பிறகு, ''நேயர்களே! தீர்ப்பின் சாராம்சத்தை நீதிபதி வாசித்துவிட்டார். ரூபி கில் கொலை வழக்கில் இருந்து விவேக் விக்கிராய் விடுவிக்கப்படுகிறார்!'' என்கிறாள் தானும் வியப்பு தாங்காதவளாக.

www.t.me/tamilbooksworld

கைதிகள் அத்தனை பேரும் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொள்ள... மோகன் குமாருக்கு மூச்சு முட்டுகிறது. ஜெயிலர் டி.வி-யை நிறுத்திவிட்டு, ''கேட்டாச்சில்லையா... கிளம்புங்க இங்கிருந்து!'' என்கிறார் கண்டிப்போடு.

பப்லூ திவாரி மெதுவாக மோகன் குமார் பக்கம் திரும்பி, ''காந்தி பாபா... நான் அப்போதே சொல்லவில்லையா? இப்படித்தான் ஆகுமென்று?'' என்றான். சம்ஸ்கிருத வாத்தியாருக்கு ஏகக் கடுப்பு. ''இவனெல்லாம் நிரபராதி என்றால், அப்புறம் நாம் மட்டும் ஏன் இந்த ஜெயிலுக்குள் கிடந்து நாறிக்கொண்டு இருக்கிறோம்?'' என்று சீனிப் பட்டாசாக வெடித்தார்.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

''கூல் வாத்தியாரே! உங்க அப்பா உத்தரப் பிரதேசத்தின் உள்துறை அமைச்சராக இல்லை... அவ்வளவுதான்விஷயம்'' என்று கண் சிமிட்டினான் பப்லூ திவாரி!

அடுத்த மூன்று நாட்களும் மோகன் குமார் பச்சைத் தண்ணிகூட பல்லில் படாத அளவுக்கு கொலைப் பட்டினி! மாலை வேளைகளில் உலாத்துவதற்குக்கூட செல்லைவிட்டு வர மறுத்தார். படுத்தமேனிக்கே கிடந்தார். கண்ணோரம் சதா நீர் வடிந்துகொண்டே இருந்தது. கண்கள் மேற்கூரையை வெறித்தபடி இருந்தன.

சோற்றைக் கையில் எடுத்து வந்து அவருக்கு ஊட்டிவிட முயன்றான் பப்லூ திவாரி. ''சாப்பிடுங்க காந்தி பாபா... இப்படி பட்டினி கிடக்கிறதால் ரூபி கில் ஆத்மா அமைதியாகிடுமா என்ன?''

www.t.me/tamilbooksworld

மோகன் குமார் கண்களைத் துடைத்துக்கொண்டு மெதுவாகத் திரும்பிப் பார்த்தார். ''பப்லூ... பலர் பார்க்க அநியாயமாக நடந்த கொலை அல்லவா அது? அந்த அப்பாவிப் பெண் ரூபி கில் ஆத்மா இந்தத் தீர்ப்பின் மூலம் முற்றிலுமாக நிம்மதி இழந்திருக்கும். அதை அமைதிப்படுத்த நம்மால் முடியும். அது நடக்க வேண்டும் என்றால், விவேக் விக்கி ராய் கொல்லப்பட வேண்டும்!''

பப்லூ திவாரிக்குத் தலை கிறுகிறுத்துப் போனது. விரலால் காதை நன்றாகக் குடைந்துவிட்டுக்கொண்டு, ''பாபா... நீங்கதான் இப்படி பேசுறீங்களா?'' என்றான் பிரமித்து.

''ஆம்... விவேக் விக்கிராய் கொல்லப்பட வேண்டும். அதுதான் சரியான தீர்ப்பு!''

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

''காந்தி பாபா... வன்முறைக்கு ஆதரவாக நீங்களா பேசுவது?''

''அப்படி இல்லை பப்லூ... மன்னிக்க முடியாத ஒரு அநீதிக்குத் தீர்வாக கோழைத்தனமும், வன்முறையும் இரண்டு வாய்ப்புகளாக முன்வைக்கப்பட்டால்... அதில் வன்முறையைத் தேர்ந்தெடுப்பது தவறு இல்லை என்பேன். ஒரு படுபாதகக் கொலைகாரனைத் தண்டிக்காமல் வெளியே உலாவவிட்டு, அவன் அடுத்தடுத்து பெரும்பாவங்கள் செய்வதற்கு வாய்ப்பு தருவதைவிட... அவனைக் கொல்வதன் மூலம் மேற்கொண்டு பாவங்கள் நடக்காமல் தடுப்பது நல்ல காரியம்தான்!''

பப்லூ சிலையாகப் பார்த்திருக்க... ''எனக்காக கடைசியாக ஒருமுறை நீ ஆயுதம் ஏந்துவாயா பப்லூ?'' என்றார் மோகன் குமார். பப்லூவுக்கு புரிந்துவிட்டது, அவருடைய அசைன்மென்ட் என்னவென்று!

www.t.me/tamilbooksworld

''மன்னியுங்கள் பாபா... உங்களுக்காக என் உயிரைக் கொடுப்பதற்கும் நான் சித்தமாக இருக்கிறேன். ஆனால், இனிமேல் என்னால் இன்னொரு உயிரை எடுக்க முடியும் என்று தோன்றவில்லை. உங்களின் அன்பான போதனையால் மாறிவிட்ட என் மனசாட்சி, இனிமேல் இதுபோன்ற பாவங்களுக்கு ஒத்துழைக்காது!''

''பப்லூ... எனக்காகக்கூட இதைச் செய்ய மாட் டாயா?''

''அகிம்சை, அன்பு, சகிப்புத்தன்மை பற்றி நீங்கள் தந்த உபதேசங்கள் சாதாரணமா பாபா? கட்டாயம் இனி என்னால் ஆயுதம் ஏந்தவோ, ஒரு உயிரைக் கொல்லவோ முடியாது!''

மோகன் குமாரின் கண்கள் ஒரு தடவை விரிந்து சுருங்குகின்றன. ''இந்தப் புண்ணிய கிரியை என் கையால்தான் நிறைவேற

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

வேண்டும்போல் இருக்கிறது. பரவாயில்லை... நானே செய்கிறேன்'' என்று பப்லூவை ஊடுருவிப் பார்த்தார்!

- தொடர்ந்து சந்தேகிப்போம்...

Copyright © Vikas Swarup 2008

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

## மோட்டிவ் 6

விகாஸ் ஸ்வரூப்

தமிழில்: அஞ்சனாதேவ்

### துப்பாக்கி ரெடி!

''வேறு வழியில்லை...'' என்று பெருமூச்சுவிட்ட மோகன் குமார் மறுபடியும் தெளிவாகச் சொன்னார் - ''விவேக் விக்கி ராயின் கதையை நானே என் கையால் முடிக்கிறேன்... துப்பாக்கியால் எப்படி சுடவேண்டும் என்று மட்டுமாவது எனக்கு நீ கற்றுத் தருவாயா?''

www.t.me/tamilbooksworld

கொலை பல கண்டு, இப்போது வாயில் விரல் வைத்தாலும் கடிப்பதில்லை என்கிற அளவுக்கு அகிம்ஸாவாதியாக மாறிவிட்ட பப்லூ திவாரிக்கு செமத்தியான ஷாக்! இருந்தாலும், ''உங்களது வைராக்கியமும் மன உறுதியும் எனக்குத் தெரியும், காந்தி பாபா. ரிவால்வரால் சுடுவதற்கு நானே உங்களுக்குக் கற்றுத் தருகிறேன். நீங்கள் சிறையிலிருந்து வெளியே சென்றதும், நல்லதொரு ரிவால்வர் கிடைப்பதற்கும் நானே ஏற்பாடு செய்கிறேன்! ஆனால், இரண்டு மாதங்கள் கழித்து நீங்கள் வெளியே செல்வதற்குள் உங்கள் கோபம் ஆறிவிட வேண்டும் என்றும்,

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

உங்களுக்கு துப்பாக்கி தேவைப் படாமல் போகவேண்டும் என்றும் எல்லாம் வல்ல பரம்பொருளை வேண்டிக்கொள்கிறேன்!''

''இரண்டு மாத காலமா? ஹ... அடுத்த வாரமே நான் வெளியே போய்விடுவேன்!''

மறுபடி பிரமித்தான் பப்லூ திவாரி. ''பாபா... சிறையிலிருந்து தப்புவதற்கு ரகசியமாக சுரங்கம் ஏதும் தோண்டியிருக்கிறீர்களா?''

''அதெல்லாம் தேவையில்லை மகனே... சிறையின் பிரதான வாசல் வழியாக எல்லோரும் பார்க்கும்படி வெளியே செல்லத்தான் போகிறேன்! அதற்காக, நீயும் சக கைதிகளும் ஒரு உதவி செய்ய வேண்டும்!''

www.t.me/tamilbooksworld

அடுத்த நாள்... சிறைக்குள் தொடங்கியது கைதிகளின் ஒத்துழையாமை இயக்கம். சமைக்க, தோட்ட வேலை செய்ய, சிறை வளாகத்தை சுத்தம் செய்ய... எதற்குமே ஒத்துழைக்க மறுத்தார்கள் கைதிகள். ''அரசில்வாதிகளின் கைப்பாவையாக சட்டம் மாறுவதற்கு அனுமதிக்க மாட்டோம். சொந்தப் பகைமைகளைத் தீர்த்துக்கொள்ள, நல்லவர்களைத் துன்புறுத்தாதீர்கள்! காந்தி பாபாவை இனியும் சிறையில் அடைத்து வைக்காதீர்கள்!'' என்று சத்தியாக்கிரகக் குரல் கொடுத்தார்கள்.

ஜெயிலர் நேராக மோகன் குமாரிடம் வந்தார். ''என்ன மிஸ்டர்! என்னதான் நடக் கிறது இங்கே?''

''சத்தியத்துக்கு சோதனை வரும்போது ஒத்துழையாமை என்பது அவசியமாகிறது...'' என்று வந்தது இவர் பதில்.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

ஒத்துழையாமை துவங்கி ஒரு வாரத்துக்குள் சிறை நாறிப் போனது. வழக்கமாக திகார் சிறையின் பணிச்சாலையில் நடக்கவேண்டிய தச்சு உள்ளிட்ட எந்த வேலையும் நடக்கவில்லை. அந்த வளாகம் எங்கும் குப்பை கூளம். பாத்ரூம், டாய்லெட் பக்கம் நெருங்கக்கூட முடியவில்லை. சிறை அறைகளிலும் துளிகூட சுத்தமில்லாமல் ஏக துர்நாற்றம். மொத்தத்தில், சிறை ஸ்தம்பித்தது.

கைதிகளின் கோரிக்கை பற்றி பத்திரிகைகளும், இணைய தளங்களும், தொலைக்காட்சிகளும் மாறி மாறி ஃப்ளாஷ் நியூஸ் தட்ட.... அரசாங்கமே தலையிட்டது. நீதிமன்றத்திடம் அதிகாரிகள் போய் பேசினார்கள். மோகன் குமாருக்கு விதிக்கப்பட்ட நான்கு மாத ரிமாண்ட் முடிவதற்குள் அவர் ரிலீஸ் ஆனார்!

www.t.me/tamilbooksworld

சிறையின் வாசலில் காத்திருந்த அவர் மனைவி சாந்தி வெற்றித் திலகமிட்டு வரவேற்க... திரண்டிருந்த பெருங்கூட்டத்தின், ''காந்தி பாபா ஜிந்தாபாத்'' கோஷம் காதைக் கிழித்தது. மோகன் குமார் தன் வீட்டுக்கு காரில் கிளம்பியபோது, கார்களும், டிரக்குகளும், மோட்டார் பைக்குகளுமாக வாழ்த்துக் கோஷம் போட்டபடி அவர் வீடு வரை தொடர்ந்து வந்தன.

அதற்கடுத்த வாரம்...

ஒற்றைக்கண் தாடி ஆசாமி ஒருவன் மோகன் குமாரின் பங்களா வாசலுக்கு வந்தான். அவரை உடனே பார்க்க வேண்டும் என்றான். 'பப்லூ திவாரி'யின் பெயரைஅவன் சொன்னதுமே, அவனை உள்ளே அனுமதிக்கச் சொன்னார் மோகன் குமார். வந்தவன் கையில் இருந்தது கனமான பார்சல். உள்ளே வால்த்தர் பி.பி.கே. பாயின்ட் 32

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

கைத்துப்பாக்கி நச்சென்று மின்னியது. ''சினிமாக்களில் ஜேம்ஸ்பாண்ட் உபயோகிக்கிற அதே ரக துப்பாக்கி!'' என்றான் ஒற்றைக் கண்ணன்.

''இதற்கு நான் எவ்வளவு விலை தர வேண்டும்?''

''பப்லூ சாப் சொல்லி இதை உங்களுக்கு நான் சப்ளை பண்றேன். அவர் விஷயத்தில் நான் எதுவும் யாருக்கும் சார்ஜ் பண்றது கிடையாது!''

''புல்லட்?''

''உள்ளே ஒரு மேகஸின் முழுக்க தோட்டா நிரப்பி இருக்கு!''

ஜில்லென்று இருந்த துப்பாக்கியை கையில் எடுத்தவர், மெதுவாக வீட்டின் தோட் டத்துப் பக்கம் நடந்தார். ''இதை நான் எப்படி சுட வேண்டும்?'' என்றவருக்கு, அடுத்த அரை மணி நேரம் பக்காவாக கிளாஸ் எடுத்தான் ஒற்றைக் கண்ணன்.

www.t.me/tamilbooksworld

''ஒரு தடவை வேணா டிரை பண்ணிப் பார்த்துடவா?'' என்றார்.

''இங்கேயா?!'' - கேள்வியுடன் அவரைப் பார்த்தான்.

''ம்!'' என்றவர், தோட்டத்தின் சிமெண்ட் பெஞ்ச் மீது சற்று தூரத்தில் இருந்த காலி கோக் பாட்டிலைக் குறி வைத்தார். தயங்காமல் விசையை அழுத்தினார். படீர், படீர் என்று இரட்டைச் சத்தம் - துப்பாக்கி வெடித்ததும், பாட்டில் சிதறியதும்! அன்றைய தினமே சொல்லி வைத்தாற்போல், விவேக் விக்கி ராயிடமிருந்து அந்த இன்விடேஷன் வந்தது. தங்க நிறத்தில் தகதகத்த கவருக்குள் படுகிராண்டாக இருந்தது அந்த 'பார்ட்டி' கார்டு. 'ரூபி கில் என்கிற அப்பாவிப் பெண்ணைப்

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*பச்சைப் படுகொலை செய்துவிட்டு, நீதியின் கழுத்தை முறித்து, அந்த வழக்கிலிருந்து விடுதலையாகி விட்டதைக் கொண்டாடுவதற்கு' என்ற வார்த்தைகள் அந்த கார்டில் இல்லையே தவிர, பார்ட்டி அதற்குத்தான் என்பதை சொல்லாமல் சொன்னது இன்விடேஷன்!*

*மார்ச் 23-ம் தேதி...*

*விவேக் விக்கி ராய் தனது பாவ காரியங்கள் பலதையும் அரங்கேற்றும் பண்ணை வீட்டில்தான் பார்ட்டி! கார்டை பார்த்ததும், பீரோவுக்குள் பத்திரப்படுத்தி வைத்திருந்த புதிய துப்பாக்கியை ஒரு தடவை எடுத்துத் தடவிக் கொடுத்தார் மோகன் குமார். அப்போது எழுந்த புன்னகையில் அவர் உதடு கோணியது!*

*மறுபடியும் 'மொபைல் முன்னா!*

www.t.me/tamilbooksworld

*இந்த 'மொபைல்' முன்னாவை இன்னும் ஞாபகம் இருக்கா, சாரே..! செல்போனில் யாருக்கோ சொல்ல வேண்டிய தகவலை என்னிடம் ஒருத்தன் சொல்லி... அவன் அடையாளம் சொன்ன பள்ளிக்கூட காம்பவுண்டு பக்கம் நான் உடனே போய்... அங்கிருந்த கறுப்பு பிரீப்கேஸை எடுத்துத் திறந்து பார்த்து... உள்ளே கட்டுக்கட்டாகப் பணத்தை எடுத்துக்கொண்டு அங்கிருந்து எஸ்கேப் ஆனேனே..! அதே 'மொபைல்' முன்னா..! பிரீப்கேஸுடன் ஒரு பஸ்ஸைப் பிடித்து எங்கள் குடியிருப்புக்கு வந்தேன். அம்மாவும் என் வளர்ப்புத் தங்கை சம்ப்பியும் அப்போது வீட்டில் இல்லை. குடிசைக்குள் நுழைந்ததுமே பிரீப்கேஸை எங்கே ஒளித்து வைக்கலாம் என்று பரபரப்பாகத் தேடினேன். குப்பை சாமான்களைக் கொட்டி வைத்திருந்த ஒரு மூலையில், அவற்றுக்குக் கீழே கிடந்த பொத்தல் கம்பளத்துக்கும் கீழே பிரீப்கேஸைச் செருகி வைத்தேன்.*

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

ராத்திரி அம்மாவும் சம்ப்பியும் தூங்கியபிறகு, ஒரு டார்ச் லைட்டை காலிடுக்கில் நிறுத்தி வைத்துக்கொண்டு, பெட்டியில் இருந்த பணத்தை எண்ண ஆரம்பித்தேன். ஆயிரம் மற்றும் ஐந்நூறு கட்டுகள் வரிசையாக உள்ளே அடுக்கியிருந்தன. ஆயிரம் கட்டு ஒன்றை எடுத்து எண்ணத் தொடங் கினேன். ஆயிரம், ரெண்டாயிரம், மூவாயிரம்...15 ஆயிரம், 40 ஆயிரம், 78 ஆயிரம்... ஒரு கட்டை எண்ணி முடிப்பதற்குள்ளேயே என் உதடு காய்ந்து போனது. கண்கள் டபுளடித்தன. தலை சுற்றியது.

அடுத்தடுத்த ஆயிரம் கட்டுகளிலும் நூறு நூறு நோட்டுகள் இருந்தன. எல்லாமே மொறு மொறு வென்று புதிய நோட்டுகள். ஐந்நூறு கட்டுகள் வேறு நிறைய இருந்தன. என்னால் அன்று ராத்திரிக்குள் எண்ணி முடிக்க முடியாத அளவுக்கு இருந்தது அந்தத் தொகை!

www.t.me/tamilbooksworld

எனக்கு பயங்கரமாக வியர்த்தது. முக்கியமான ஒரு பயம் கிளம்பியது. பிரீப்கேஸை நான் குப்பைத் தொட்டியிலிருந்து எடுத்ததை யாராவது பார்த்துவிட்டு, சத்தமில்லாமல் பின்தொடர்ந்து வந்து என் வீட்டை அடையாளம் கண்டிருந்தால்..? அல்லது, இத்தனை பணம் என்னிடத்தில் இருப்பது யாராவது தாதா அல்லது திருடர் கும்பலுக்குத் தெரிந்தால்..? பணக்காரனாக இருந்தால் வங்கிக் கணக்கு இருக்கும். அதில் போட்டு வைக்கலாம். சாதாரண மொபைல் திருடனாகிய நான் எந்த வங்கிக் கணக்கில் போடுவது? எங்கள் குடியிருப் புக்குப் பக்கத்தில் இருக்கும் சஞ்சய் காந்தி பார்க் ஏரியாவில், நூறு - இருநூறு ரூபாய்க்கே கழுத்தை அறுத்துப் போடுகிற ஆசாமிகள் உண்டு. பெட்டியை எங்கே எப்படி நான் பத்திரமாக வைப்பது?

- தொடர்ந்து சந்தேகிப்போம்...

Copyright © Vikas Swarup 2008

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

## மோட்டிவ் 6

# மோட்டிவ் 6
SIX SUSPECTS

விகாஸ் ஸ்வரூப் தமிழில்: அஞ்சனாதேவ்

## கட்டுக் கட்டாய் நோட்டு இருந்தால்..!

நான் லவட்டிய நூறாவது மொபைல் போனில், யாருக்கோ போக வேண்டிய செய்தி எனக்கு வந்ததைத் தொடர்ந்து... சூட்கேஸில் கட்டுக் கட்டாக இப்போது என்னிடம் பணம். இதை யாருக்கும் தெரியாமல் எங்கே நான் வைப்பது?

w.t.me/tamilbooksworld

பண விஷயத்தில் இதுதான் விநோதமே! பணம் இல்லாமல் அவதிப்படுவது எத்தனை பெரிய கொடுமையோ... அதே போல் அதிகமான பணம் இருப்பதும் அதே அளவுக்குக் கொடுமைதான்!

சின்ன வயதில் பள்ளிக்கூடத்தில் ஹரி பிரசாத் சயினி என்று ஒரு வாத்தியார் இருந்தார். சில சமயங்களில் அவர் மூளைக்கு வேலை கொடுக்கிற விளையாட்டுகளில் எங்களை ஈடுபடுத்துவார். அப்படி ஒரு நாள், ''லட்ச ரூபாய் திடீரென்று உனக்குக் கிடைத்துவிட்டால், நீ என்ன செய்வாய்?'' என்று கேட்டார். என் நண்பன் லல்லான், ''மொத்த மாக ஒரு பொம்மைக் கடையை வாங்குவேன்!'' என்றான். ஒருவன், ''சினிமா தியேட்டரை அந்த பணத்தைக் கொண்டு வாங்க முடியுமா?'' என்று கேட்டான். நான், ''அப்படியே எங்க அம்மாகிட்டே கொடுத்துடுவேன் சார்!'' என்றேன்.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*இப்போது லட்சத்தை எல்லாம் ஜுஜுபி ஆக்குகிற தொகை பம்பர் பிரைஸ் மாதிரி கிடைத்து இருக்கிறது! ஆனால், இந்த விஷயத்தைப் பற்றி என் அம்மாவிடம் நான் மூச்சுக்கூட காட்டப்போவது இல்லை. அவளைப்பற்றி எனக்குத் தெரியும். இந்தப் பணம் எப்படி வந்தது என்று கேட்டு மிரட்டுவாள். கடைசியில், போலீஸ் ஸ்டேஷனுக்கு என்னை இழுத்துப் போய் நிறுத்தி, ''இன்ஸ்பெக்டர் சாப்... என் மகன் யாரிடம் இருந்தோ கட்டுக் கட்டாக ரூபாய் திருடிக்கொண்டு வந்துவிட்டான்!'' என்று மாட்டிவிடுவாள். அதனால், அம்மாவிடம் மூச்சு விடவில்லை.*

www.t.me/tamilbooksworld

*சம்ப்பியிடம்கூட சொல்லக் கூடாது என்பதில் உறுதியாகத்தான் இருந்தேன். ஆனால், அவளிடம் நான் எதையுமே சொல்லாமல் மறைத்தது இல்லை. இரண்டே நாட்களில் இந்த விஷயத்திலும் அப்படித்தான் ஆனது. பக்கத்துக் கோயிலுக்கு அம்மா போயிருந்த நேரம் பார்த்து, சம்ப்பியைக் கூப்பிட்டேன். விஷயத்தை விலாவாரியாகச் சொன்னேன். ''இது ஒண்ணும் நல்ல காரியத் துக்காகப் பயன்படுத்த வெச்சிருந்த பணமாத் தெரியலை. அப்படி இருக்க, அதை நாம எடுத்துப் பயன்படுத்திக்கிட்டா என்ன தப்பு?''என்றேன்.*

*''எவ்ளோ பணம் இருக்கும் மொத்தம்?'' என்றாள்.*

*''அதுபத்தி உனக்கென்ன? உனக்கு ஆபரேஷன் செஞ்சு ஜம்முனு உன்னை ஆக்குற அளவுக்கு தாராளமாவே இருக்கு!'' என்றேன்.*

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

''திருட்டுப் பணத்தில் எனக்கு ஆபரேஷன் பண்ண வேண்டிய அவசியம் இல்லே!'' என்று முகத்தைத் திருப்பிக்கொண்டாள் சம்ப்பி.

''நல்லா சொன்னே போ... உன்னை ஒருத்தன் கையிலே பிடிச்சுக் கொடுக்க வேண்டாமா? அது வரைக்கும் எனக்கும் எங்க அம்மாவுக்கும் ஏது நிம்மதி? நீ இப்படி இருந்தா, உன்னைக் கட்டிக்க யார் வருவான் சொல்லு?'' என்றேன்.

சம்ப்பி அமைதியாக இருந்தாள்.

போபாலில் விஷ வாயுக் கசிவு ஏற்பட்டு ஆயிரக்கணக்கானவர்கள் பரலோகம் போனது நினைவிருக்கிறதா? வருடக்கணக்காக வழக்கை இழுத்தடித்து, கடைசியில் அத்தனைக்கும் மெயின் காரணமான ஒரு வெளிநாட்டுப் புண்ணியவானுக்கு எந்த தண்டனையுமே தராமல் 'சள்'ளென்று ஒரு தீர்ப்பு வந்ததே... அந்த விவகாரத்தில் பாதிக்கப்பட்ட ஜீவன்களில் ஒருத்தி சம்ப்பி.

www.t.me/tamilbooksworld

இவளுடைய அம்மா பாத்திமா பீ போபாலில் தான் வசித்தாள். விஷ வாயுக் கசிவின்போது, எப்படியோ அவள் தப்பிவிட்டாள். ஆனால், அதற்கு ஐந்து வருடங்கள் கழித்து அவள் கர்ப்பம் தரித்து, சம்ப்பி பிறந்தபோது டாக்டர்களே அதிர்ந்துபோனார்கள். மேல் உதடே இல்லாமல், ஒரு பக்கத்துக் கன்னத்தின் சதை மொத்தமாக இழுத்துக்கொண்டு, இரண்டு கண்களிலும் பார்வை இல்லாமல் பிறந்து இருந்தாள் சம்ப்பி. விஷ வாயுவின் கொடூர குணம் பாத்திமா பீ உடம்புக்குள் ஐந்து வருடங்களாகச் சிறைப்பட்டுக்கிடந்து, அது சம்ப்பியின் கரு மீது படிந்து இருக்கிறது. வளர வளர சம்ப்பியின் உருவம் மேலும் குரூரமானது. அவளை போட்டோ பிடித்து வெளிநாட்டுப் பத்திரிகைகள்கூட அச்சிட்டன. சி.என்.என். டி.வி-யில்கூட அவளைக்

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

காட்டினார்களாம். பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நஷ்டஈடு கேட்டு நடந்த வழக்கு வருடக்கணக்காக இழுத்துக்கொண்டே போனபோது, பாதிக்கப்பட்டோர் ஆதரவு சங்கம் ஒன்று ஆரம்பித்தார்கள். அந்த சங்கம், சுப்ரீம் கோர்ட் வரை வந்து வாதாடியது. வருடத்துக்கு ஓரிரண்டு தடவை இந்த வழக்கின் விசாரணை வருகிற சமயத்தில், பாதிக்கப்பட்ட சிலரும் இந்த சங்கத்தினரோடு சேர்ந்து டெல்லிக்கு வருவார்கள். கோர்ட்டுக்கு வெளியே நீதி கேட்டு கோஷம் போட்டுவிட்டுத் திரும்புவார்கள். இப்படி வந்து போய்க்கொண்டு இருந்த பாத்திமா பீ, ஒரு கட்டத்தில் டெல்லியிலேயே தங்க முடிவெடுத்தாள். அப்படித்தான் சஞ்சய் காந்தி பார்க் ஏரியாவில் ஒரு குடிசை பிடித்துத் தங்கினாள்.

அவள் புருஷன் அன்வர் மியான் எங்கோ ஒரு சிமென்ட் ஃபேக்டரியில் வேலை தேடிக்கொண்டான். தினந்தோறும் மூக்கு முட்டக் குடித்துவிட்டு வீட்டுக்கு வருவான். கட்டுக் கட்டாக பீடி இழுப்பான். ஒரு நாள் வழக்கம்போல வீட்டுக்கு வந்தவன், படுத்துத் தூங்கும்போதே போய்ச் சேர்ந்துவிட்டான். ஹார்ட் அட்டாக்காம்!

www.t.me/tamilbooksworld

அவனுக்கு அப்புறம் தன்னையும் மகள் சம்ப்பி யையும் காப்பாற்றிக்கொள்வதற்காக, தையல் வேலையைத் தொடங்கினாள் பாத்திமா பீ. அக்கம் பக்கங்களுக்குக் குறைந்த கூலியில் துணி தைத்துக் கொடுத்தாள். அப்படித்தான் எங்கள் குடும்பத்துக்கும் அறிமுகம். எனக்கு பாத்திமா தைத்துக் கொடுத்த சட்டைகள் மாதிரி பொருத்தமாக வேறு ஒருத்தரும் இது வரை தைத்தது இல்லை. வீட்டுப் பக்கம் அடிக்கடி வந்து போவது, சொந்தக் கதை - சோகக் கதையைப் பகிர்ந்துகொள்வது என்று அம்மாவுக்கும் அவள் மிகப் பிடித்த தோழி ஆனாள்.

விதி அவளையும் விடவில்லை. காச நோயின் கடும் தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாமல் ஒரு நாள் செத்துப்போனாள். போபால் விஷ

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

வாயுவால் பாதிக்கப்பட்டோர் ஆதரவு சங்கத்துக்காரர்கள் வீடு வீடாக வந்து கேட்டார்கள்... அநாதையாகிவிட்ட சம்ப்பியை யாராவது வைத்துக் காப்பாற்ற முடியுமா என்று! சங்கத்தின் சார்பில் மாதம் ‘ 300 (இப்போது ‘400) கொடுத்துவிடுவதாகவும் சொன்னார்கள். சம்ப்பியின் முக அமைப்பும், பார்வை இல்லாத நிலைமையும் பார்த்து எல்லோரும் முகம் சுளித்து ஒதுங்கினார்கள். என் அம்மாதான் சீக்குப் பிடித்த பாம்பைக்கூட பரிதாபப்பட்டு மடியில்விட்டுப் பால் தருவாளே... மறு கேள்வியே இல்லாமல் சம்ப்பியை தன் வளர்ப்புப் பெண்ணாக எடுத்துக்கொண்டாள். தானே பெற்ற மகள் மாதிரி அவளை அள்ளி அணைத்துக்கொண்டாள்.

இதான் சம்ப்பி எங்கள் வீட்டுக்கு வந்த கதை!

அவள் முகத்தை எப்படியாவது சரிப்படுத்த வேண்டும் என்று என் அம்மா சில முயற்சிகள் செய்தாள். டெல்லி சிட்டிக்குள் யாரோ ஒரு பிளாஸ்டிக் சர்ஜரி டாக்டரைக்கூட போய்ப் பார்த்தாள். அந்த டாக்டர் மூன்று லட்ச ரூபாய் கேட்டாராம். லட்சம் என்ற வார்த்தையைக் கேட்டதுமே, மயக்கம் வராத குறையாகத் திரும்பிவிட்டாள் அம்மா. சம்ப்பியும் தனக்கு விதிக்கப்பட்டது இதுதான் என்று ஒரு சமாதான நிலைக்கு வந்திருந்தாள்.

www.t.me/tamilbooksworld

ஆனால், இந்த நிமிடம் நான் கோடீஸ்வரன். இப்போது மூன்று லட்சம் எனக்கு தூசு!

சம்ப்பி மௌனம் கலைத்தாள் - ’’முன்னா... நான் சொல்றதைக் கேளு. இது ஏதோ பயங்கரமான முரட்டுக் கும்பலின் சட்டவிரோத சமாசாரத்துக்கு கைமாற வேண்டிய பணம்னு புரியுது. அந்த கும்பலில் இருக்கிறவங்க உன்னைப் பிடிச்சிட்டா, அதோட முடிஞ்சது உன் கதை.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*அம்மாவுக்குத் தெரியாம மொபைல் திருடுற விவகாரம் மாதிரி இதையும் சாதா ரணமா நினைச்சிடாதே!'' - கவலையோடு சொன்னாள் அவள்.*

*''தோ பாரு... அந்த கும்பலுக்கு என்னைத் தெரியக் கூடிய சான்ஸே இல்லை. இது இனி என் பணம். நான் ஜாலியா அனுபவிக்கப்போறேன்! அம்மாவும் நாளையில இருந்து வேலைக்குப் போக வேண்டாம். அவளை 100 வயசு வரைக்கும் உட்காரவெச்சு சோறு போட என்னிடம் காசு இருக்கு!''*

*சம்ப்பி அவசரமாகக் குறுக்கிட்டாள் - ''மூளை மழுங் கிடுச்சா உனக்கு? இந்தப் பணத்தை நீ இப்போதைக்கு வெளியே எடுக்கிறதே தப்பு. கொஞ்ச நாள் பொறுத்திரு. வெளியில் யாராவது இதைத் தேடுறாங்களா... உன்னை சந்தேகப்படுறாங்களானு பார். அப்புறமா, இதை செலவழிப்பது பற்றி யோசி!''*

www.t.me/tamilbooksworld

*சம்ப்பி சொல்வதும் சரியாகவே பட்டது. ''சரி, இன்னும் ஒரு வாரம் நான் காத்திருப்பேன். ஆனா, எப்பவுமே நீ அம்மாவிடம் இதுபற்றி மூச்சு காட்டக் கூடாது, சரியா?'' என்றேன் வேகமாக. தலையாட்டி னாள் சம்ப்பி.*

- தொடர்ந்து சந்தேகிப்போம்...

Copyright © Vikas Swarup 2008

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

## மோட்டிவ் 6

# மோட்டிவ் 6
SIX SUSPECTS

விகாஸ் ஸ்வரூப் தமிழில்: அஞ்சனாதேவ்

### தேவதையைக் கண்டேன்!

ஒரு வாரம் ஓடி இருக்கும்... தற்செயலாக அம்மாவே பேச்சை எடுத்தாள்.

''ஏண்டா முன்னா... புதையல் காத்த பூதம் மாதிரி, எப்பவும்வீட்டுக்குள்ளேயே முடங்கிக்கிடக் குறியே... ஏதாச்சும் ஒரு வேலைக்குப் போயி சம்பாதிக்கிறதா எண்ணமே இல்லியா?''

www.t.me/tamilbooksworld

நான் மழுப்பலாகச் சிரித்தேன். படக்கென்று ஒரு யோசனை வரவும், ''எனக்கு வேலை கிடைச்சிடுச்சிம்மா! எம்.ஜி. ரோட்டுல அட்டைப் பெட்டி தயாரிக்கிற கம்பெனியில் வேலை. மாசம் பத்தாயிரம் சம்பளம்! இன்னும் ரெண்டு நாள்ல போயி சேரணும்...'' என்றேன்.

''டேய், புளுகுறியா? என்னதான் டிகிரி முடிச்சிருந்தாலும், முன் அனுபவம் ஏதும் இல்லாத உனக்கு யாருடா அவ்ளோ சம்பளம் கொடுப்பாங்க?'' என்றாள் நம்பாமல்.

''அட, செத்துப்போன அப்பா மேலே சத்தியமா சொல்றேம்மா...'' என்று நான் போட்ட போடில், அம்மா அகமகிழ்ந்து போனாள். ''எல்லாம்

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

அந்த கைலாசநாதரோட அருள்தான்டா!'' என்று என் கன்னத்தை வழித்து, நெட்டி முறித்தாள். கவனித்துக் கொண்டு இருந்த சம்ப்பிக்கு முகம் சுருங்கியது.

''எப்படித்தான் இவ்ளோ தைரியமாப் புளுக முடியுதோ... உனக்குப் பொண்டாட்டியா வரப் போறவளை நினைச்சா... பாவமா இருக்கு!'' என்றாள் பிறகு.

''சத்தியபுத்திரனா இருக்கிற ஒரு பன்னாடையோட வாழுறதைவிட,

என்னை மாதிரி கோடீஸ்வரப் புளுகனோட இருக்கத்தான் எந்தப் பொம்பளைக்கும் பிடிக்கும்.'' என்றபடியே விசிலடித்தவாறு வெளியில் கிளம்பினேன்.

tamilbooksworld

பணத்தைத் தேடி எவனும் வராததால்... இன்று முதல் என் அதிர்ஷ்டத்தின் துளிகளை சுவைக்க முடிவு செய்தேன். பெட்டிக்குள் இருந்து கொத்தாக சலவை நோட்டுகளை உருவி எடுத்து பாக்கெட்டில் போட்டேன்.

டாக்ஸி ஸ்டாண்டில் சர்தார்ஜி டிரைவரிடம், ''என்னண்ணே... சவாரி போலாமா?'' என்றேன்.

என் அழுக்கு பேன்ட்டையும், கசங்கிய சட்டை யையும் ஏற இறங்கப் பார்த்தார் சர்தார்ஜி. ''தம்பி... மீட்டர் காசு எவ்ளோ ஆகும்னு தெரியுமா?''

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

உச்சி மண்டையில் மிளகாய் தேய்த்த மாதிரி ஆத்திரம் புறப்பட்டது எனக்கு. ''உன் டாக்ஸி என்ன விலைன்னு சொல்லு... ரேட்டு போட்டு வாங்கவும் என்னால முடியும்!'' என்றபடி பாக்கெட்டில் இருந்த நோட்டுகளை எடுத்துக் கண் எதிரே ஆட்டினேன்.

சரண்டர்ஜி ஆனார் சர்தார்ஜி. ''ஏறுப்பா!'' என்று கதவைத் திறந்துவிட்டார்.

டெல்லியின் ஹைஃபை ஷாப்பிங் காம்ப் ளெக்ஸில் நுழைகிறேன்...

நைக்கி ஷூ, லாகோஸ்ட் பர்ஃப்யூம், பெனிட்டன் லெதர் ஜாக்கெட், ரேபான் கிளாஸ், லீவைஸ் ஜீன்ஸ், மார்க்ஸ் அண்டு ஸ்பென்ஸர் சட்டை என்று எல்லாமே பக்கா பிராண்டுகளாக அள்ளிப் போட்டேன். 10 வருஷத்து விண்டோ ஷாப்பிங் ஏக்கங்களை ஒரே நாளில் தீர்த்துக் கொண்டேன். என்ன பிசாத்துப் பணம்... இருபதாயிரம்தான் செலவாச்சு.

www.t.me/tamilbooksworld

பக்கத்தில் இருந்த டாய்லெட்டுக்குள் போய் நன்றாக சோப்பு போட்டு முகம் கழுவினேன்... புது உடைகளை அணிந்தேன் பெர்ஃப்யூமில் மூழ்கி எழுந்தேன். பழைய சமாசாரங்களை - செருப்பு உட்பட அப்படியே ஒரு பிளாஸ்டிக் பைக்குள் நொந்தி, கையோடு எடுத்துப்போய் டாக்ஸிக்குள் வைத்தேன்.

விசில் அடித்தபடியே வெளியே வந்த என்னை ஹைஹீல்ஸ் அலட்டல் பெண் ஒருத்தி, சின்ன மின்னல் கண்ணோடு பார்த்துவிட்டுத் தாண்டினாள். சில நிமிடங்களுக்கு முன்னால் அழுக்கு டிரெஸ்ஸில் நான் தாண்டிப் போய் இருந்தால், விளக்கு கம்பத்தில் சுச்சா அடிக்க வந்த நாய் மாதிரி பார்த்திருப்பாள். எல்லாம் 'மால்' பண்ணுகிற கமால் வேலை!

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

சவுத் எக்ஸ்டென்ஷன் மார்க்கெட் பக்கம் கொஞ்சம் உலாத்தினேன். பளபள கார்களில் வந்து இறங்கிய வழுவழுப் பெண்களின் பின்னால் கொஞ்ச நேரம் சுற்றினேன். அப்புறம் டீலக்ஸ் இண்டியன் ரெஸ்ட்டாரன்ட் உள்ளே புகுந்தேன். பட்டர் சிக்கன், சீக் கபாப் என்று வரிசையாக அயிட்டங்களைச் சொல்லி அடித்தேன். எண்ணூறு சொச்சம் வந்த பில்லுக்கு தொள்ளாயிரமாகக் கடாசிவிட்டு வெளியில் வந்தேன்.

என் அடுத்த ஸ்டாப் 'இன்ஃப்ரா ரெட்'!

அது ஒரு டான்ஸ் கிளப். தலைநகரில் இருட்டு விழுந்ததுமே ரொம்ப ஹிப் - ஹாப்பான அயிட்டங்கள் புகுந்து கலக்குகிற இடம் அது. எங்கள் சேரி ஏரியாவில் இருந்து வந்து இங்கே சில நாள் வெயிட்டராக வேலை செய்த தினா என்பவன் சொல்லி இருக்கிறான் - மிகப் பெரிய குடும்பத்தின் இளம் சிட்டுகள், அரையும் குறையுமாக டிரெஸ் போட்டுக்கொண்டு, முக்கால் போதையில் இங்கே வந்து விழுந்துகிடக்குமாம்.

www.t.me/tamilbooksworld

டாக்ஸியைவிட்டு அந்த கிளப் வாசலில் நான் இறங்கியபோது, வாசலில் ஒரு கியூவே இருந்தது. மெள்ள மெள்ள நகர்ந்து நுழைவாயிலை அடைந்தபோது, அங்கே வழுக்கைத் தலையும், மலையான புஜமுமாக கிங்கரர்கள் ரெண்டு பேர் கோட் போட்டு முறைத்தார்கள். ''எவ்வளவு?'' என்றேன். ''நீ ஒண்டியாக வந்திருப்பதால் சார்ஜ் அதிகம். மூவாயிரம்'' என்றான் ஒருத்தன் முறைப்பாக. ''மூவாயிரமா..?!'' என்று வாய் பிளக்கப்போனதை அடக்கிக்கொண்டேன். இப்போதான் இது ஜுஜுபியாச்சே! மூன்று நோட்டுகளை உருவிக் கொடுத்ததும், நுழைவாயிலில் இருந்த வெல்வெட் கயிற்றை விலக்கி என்னை உள்ளே அனுப்பினான்கள்.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

அண்டர் கிரவுண்டில் இருந்தது அந்த ஹால். முன்பகுதி இருட்டாகத் தெரிந்தது. தூரத்தில் எங்கோ டிரம்ஸ் அதிர்வது கேட்டது. ஒரு தடிமனான கதவைத் திறந்ததும், நாலைந்து யானைகள் ஓடி வந்து முட்டிய மாதிரி சவுண்டு வெறித்தனமாகத் தாக்கியது. அந்த சின்ன ஹாலுக்குள் அத்தனை கொடூர சவுண்டில் ஸ்பீக்கர் வைத்து டிரம்ஸ் அடித்துப் பாடிக்கொண்டு இருந்தனர். சொற்பமாக எரிந்தன விளக்குகள். அவற்றைச் சுற்றி இருந்த கண்ணாடி வேலைப்பாடுகள் மயக்கமான பல வண்ணங்களைக் காட்டின. சுவர்களே தெரியாதபடி எங்கும் கண்ணாடிகள்.

ஜோடி ஜோடியாகக் கோந்து தேகங்கள் ஓர் உடலாக அசைந்துகொண்டு இருந்தன. நடன அரங்கத்தின் பக்கவாட்டில் இருந்து அவ்வப்போது வெள்ளைப் புகை தரையோடு தரையாகக் கிளம்பி, இடுப்பு வரைக்கும் அந்த ஜோடிகளை மறைத்தது. என் ஃபிரெண்டு தினா சொன்னது சரிதான். அங்கே இருந்த செவேல் பெண்களில் முக்கால்வாசிப் பேர் அண்டர்வேரை மறைக்கிற அளவுக்கே குட்டை ஸ்கர்ட் அணிந்து இருந்தனர். உடம்புத் தோலோடு ஒட்டி அத்தனை வளைவுகளையும் புள்ளி சுத்தமாகக் காட்டும்படி பனியன். இன்னும் சிலர் கீழே மட்டும் ரெண்டு பட்டனைப் போட்டு சட்டையை லூஸாகவிட்டு இருந்தனர்.

www.t.me/tamilbooksworld

இருட்டுக்குப் பழக்கமாக நிதானித்தபோது, டான்ஸ் ஆடியவர்கள் தவிர சுற்றிலும் சிறு மேஜைகள் போட்டு ஆணும் பெண்ணுமாக அமர்ந்து இருப்பது தெரிந்தது. டி.வி-யில் அடிக்கடி பார்க்கிற சில பிரபல முகங்கள்கூட அங்கு இருந்தன! அங்கேதான்... அந்தக் கூட்டத்துக்கு நடுவில்... ஃபேன்ஸி பருந்துகளுக்கு நடுவில் அந்த சோகப் புறாவை முதன் முதலில் நான் பார்த்தேன்.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

நடன அரங்கத்தில் இருந்து கொஞ்சம் ஒதுங்கி கேபின் மாதிரி இருந்த அறைக்குள் புகைத்துக்கொண்டும் குடித்துக்கொண்டும் ஜோடி ஜோடியாக அரட்டையில் இருந்த சிலருக்கு நடுவே அவள் தனியாகத் தெரிந்தாள். பின்புறம்தான் எனக்கு முதலில் தெரிந்தது.

நான் அருகில் போய், ''ஹலோ...'' என்றேன் என் புது கெட்அப் கொடுத்த துணிச்சலில். திரும்பிப் பார்த்தவளுக்கு ஓவல் முகம். செவேர் நிறம். நீள முடி. அந்த அரைகுறை ஆடை சூழலுக்குச் சற்றும் பொருந்தாமல் முழுவதும் மறைத்த சல்வார் கமீஸ்.

அவளுடைய அழகிய கண்களில் ஒரு சோகம் படர்ந்து இருப்பது தூக்கலாகத் தெரிந்தது. சற்றே அதட்டினாலும் உடைப்பெடுத்து கண்ணீர் வடியும்போல் இருந்தது. உதட்டையும் அழுந்தக் கடித்தபடி இருந்தாள்.

www.t.me/tamilbooksworld

''ஹாய்...'' என்றேன் மறுபடி. பதில் சொல்லாமல் மறுபடி டி.வி. பக்கமே திரும்பிக்கொண்டாள்.

எங்கே இருந்தோ வந்து அங்கே முளைத்தாள் இன்னொருத்தி. ''ரீத்து! ஸாரிய்யா... நானும் டோனியும் இன்னும் ரெண்டு பாட்டுக்கு மட்டும் டான்ஸ் ஆடிட்டு வந்திடறோம். உடனே நாம கிளம்பிடலாம், ஓகே-யா?'' என்றாள். பிதுங்கி வழியும் ஜீன்ஸ், மேலே வெடித்துவிடும் அளவு டி-ஷர்ட் போட்டு இருந்த அந்தத் தோழி, உதட்டில் லிப்ஸ்டிக் அள்ளிப் பூசி இருந்தாள். கண்களில் லேசான குடி மயக்கம்!

தோழிகளுக்குள் என்னவொரு துருவ வித்தியாசம்!

என் பக்கம் திரும்பிய டி-ஷர்ட்காரி, ''மிஸ்டர்... என் ஃப்ரெண்ட் ரீத்துவுக்கு ஒரு டிரிங்க் வாங்கி வருகிறாயா? தனியாக ரொம்ப

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

போரடித்துக்கிடக்கிறாள், பாவம்...'' என்றாள் சரளமான இங்கிலீஷில். டிகிரி முடித்து இருந்தாலும் இங்கிலீஷை ஓரளவுக்குப் புரிந்துகொள்ள முடியுமே தவிர, சகஜமாகப் பேச வராது எனக்கு.

''தாராளமா டிரிங்க் வாங்கிட்டு வர்றேன். ஆனா, அவங்க வாயைத் திறந்து பேசுவாங்களான்னு நீங்களே கேட்டுச் சொல்லுங்க!'' என்றேன் இந்தியில். ஈறு தெரியச் சிரித்தவள், ''என் பெயர் மாலினி... இவ பேர் ரீத்து!'' என்றாள். என் கையைப் பிடித்துக் குலுக்கிவிட்டு, ''நீங்க..?''

நான், ''விஜய்... விஜய் சிங்!'' என்றேன். கனவில்கூட சில சமயம் வந்து மிரட்டும் முரட்டு இன்ஸ்பெக்டர் விஜய்சிங் யாதவ் ஞாபகத்தில்தான் அந்தப் பேரைச் சொன்னேன்.

www.t.me/tamilbooksworld

''ரீத்துவுக்கும் இங்கிலீஷ் தகராறுதான். நீ இவளோடு இந்தியிலேயே பேசலாம்...'' என்றபடி ஓடிவிட்டாள் மாலினி. நான் நீட்டிய கையை மெஷின் மாதிரிபற்றிக் குலுக்கினாள் ரீத்து.

''விஜய் சிங் என்றால்...? நீயும் என்னை மாதிரியே தாக்கூர் பரம்பரையா?'' என்றாள் சின்னதாகக் கண்கள் மின்ன. எனக்குப் பிடி கிடைக்கிற மாதிரி இருந்தது. ''அட, கரெக்டாகக் கண்டுபிடித்துவிட்டாயே! நாங்களும் தாக்கூர் குடும்பம்தான்!'' என்று போட்டேன்.

''என்ன பண்ணுகிறாய்?''

''ஏற்றுமதி - இறக்குமதி!'' - எனக்கு என்னமா வருது பொய்!

''எங்கே உங்க வீடு?'' - விடாமல் நோண்டியவளிடம், ''அது இருக்கட்டும்... உன் வீடு எங்கே?'' என்று திருப்பினேன்.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*''நான் டெல்லி கிடையாது. லக்னோ! லக்னோ பல்கலைக்கழகத்தில் பி.ஏ. படிக்கிறேன்'' என்றவள், ''நீ என்ன படிச்சு இருக்கே விஜய் சிங்?'' என்றாள்.*

- தொடர்ந்து சந்தேகிப்போம்...

Copyright © Vikas Swarup 2008

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

## மோட்டிவ் 6

### நெருங்கி நெருங்கி..!

என் படிப்பு பற்றி ரீத்து கேட்டதும், ''நான் டிகிரி வரைதான் முடிக்க முடிஞ்சது. அதற்குள் அப்பா என்னை பிசினஸுக்குள் இழுத்துட்டாரு!'' என்றேன், இல்லாத அப்பாவை நினைத்தபடி!

தபால் மூலம் திக்கித் திணறி அந்த டிகிரியை முடிப்பதற்குள் நான் பட்டபாடு நினைப்புக்கு வந்தது. சிரிப்பை அடக்கிக்கொண்டேன்.

www.t.me/tamilbooksworld

''லக்னோ பல்கலைக்கழகத்தில் படிக்கிறேன்னு சொல்றியே... இப்ப டெல்லிக்கு எதுக்காக வந்திருக்கே?'' என்றேன்.

மிகச் சில நொடிகள் மட்டும் தயங்கி மௌனம் காத்தவள், '' டெல்லியில் என் அம்மாவோடு தங்கிப் படிக்கலாம்னு ஆசை. இங்கேயும் எங்களுக்குத் தனி பங்களா இருக்கு!'' என்று மட்டும் சொன்னாள்.

இரண்டு மணி நேரத்துக்கும் மேல் நாங்கள் தனியாகப் பேசிக்கொண்டு இருந்தோம். இருவருக்கும் பொதுவான ஆர்வங்கள் நிறைய இருப்பது தெரிந்தன. இருவருக்குமே சினிமாபற்றிப் பேசப் பிடித்து இருந்தது. அதிலும், இருவருமே நடிகை ஷப்னம் சக்ஸேனாவின்

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

ரசிகர்களாக இருந்தோம். அரசியல்வாதிகள் பண்ணுகிற அராஜகம் குறித்து நாங்கள் வெறுப்போடு பேசிக்கொண்டோம்.

அவள் லக்னோபற்றி நிறையச் சொன்னாள். நான் டெல்லியின் சுவாரஸ்யங்களை எடுத்துவிட்டேன். ஒரு வழியாக, அவள் தோழி மாலினி தன் கூத்து களை முடித்துவிட்டு வரவும்... அவளோடு ரீத்து கிளம்பினாள். ''ஓகே விஜய் சிங்... நாம் மறுபடியும் சந்திப்போம்னு நினைக்கிறேன்!'' என்றபடி, ஒரு துண்டு பேப்பர் எடுத்து தனது மொபைல் போன் நம்பரைக் குறித்துக் கொடுத்துவிட்டு நடந்தாள்.

tamilbooksworld

வெளியே கிளப் வாசலில் அந்த நடுராத்திரி நேரத்திலும் நீளமாக வரிசை கட்டி நின்றிருந்தது ஜனம். விறுவிறுவென்று மாலினியோடு நடந்த ரீத்து, பிளாட்ஃபாரத்தின் ஓரத்தை அடைந் தாள். கை தட்டினாள். பளபளவென்று ஒரு பி.எம்.டபிள்யூ. கார் வந்து நின்றது. டிரைவர் ஸீட்டுக்குப் பக்கத்தில் இருந்து விருட்டென்று இறங்கினான் துப்பாக்கி ஏந்திய ஒரு செக்யூரிட்டி. என் பக்கம் திரும்பிப் பார்க்காமல் தவிர்த்தவளாக, தோழி மாலினியுடன் காரின் பின் ஸீட்டில் ஏறிக்கொண்டாள் ரீத்து.

'யார் இந்த துப்பாக்கி தேவதை?' என்று நான் யோசிக்கும்போதுதான், அவள் தன் குடும்பம் குறித்த விவரங்களை என்னிடம் சொல்லாமல் கவனமாகத் தவிர்த்தாள் என்று உறைத்தது.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

அதேசமயம், காரணம் இல்லாமல் மொபைல் நம்பரை எனக்குக் கொடுத்து இருக்க மாட்டாள் என்றும் தோன்றியது.

மறுநாள் பொழுது விடியும்போதே குறுகுறுப்பு. ரீத்து கொடுத்த நம்பரில் அவளைக் கூப்பிடலாமா என்று நினைத்தேன்! அவளின் சோகம் படிந்த விழிகளும், களங்கம் இல்லாத பேச்சும் என் மூளைக்குள் பாம்பு கணக்காகச் சுருண்டு படுத்து இருந்தது. அவசரப்பட்டுக் கூப்பிட்டால், 'அலைஞ்சான் கேஸ்' என்று நினைப்பாள். ரொம்ப லேட் பண்ணினாலும், 'திமிர் புடிச்சவன்!' என்று நினைத்து விடக்கூடும். இதெல்லாம் போக, அவளிடம் பேசுவதற்கு என்னிடம் ஒரு செல்போன் இல்லை என்பது நினைவுக்கு வந்தது. வேடிக்கையைப் பார்த்தீங்களா..! இதுவரை 100 மொபைல்களைத் திருடி விற்ற கில்லாடி முன்னாவுக்கு, இப்போது சொந்தமாக ஒரு மொபைல் போன் இல்லை!

www.t.me/tamilbooksworld

சூட்கேஸில் இருந்து உருவிவைத்து இருந்த நோட்டுக் கற்றைகளை பாக்கெட்டில் அடக்கியபடி, மொபைல் கடைக்குப் போனேன். திருட்டு மொபைல் விற்றே பழக்கப்பட்ட நான்,2,000 கொடுத்து ஒரு பேஸிக் மாடல் செல்போனை வாங்குவது எனக்கே விசித்திர மாகத்தான் இருந்தது.

புது சிம் கார்டு வாங்கி போனுக்குள் போட்டு, ரீத்து கொடுத்த நம்பரை அழுத்தினேன். அதற்கு என்றே காத்திருந்த மாதிரி முதல் ரிங்கில் எடுத்துவிட்டாள்.

''ஹலோ ரீத்து!'' என்றதும், ''ஹலோ விஜய் சிங்!'' என்று என் ரத்தத்தை உல்லாசமாக வீறிடவைத்தாள். என்ன பேசுவது? ''டெல்லியில்தானே இருக்கே? வர்றியா, எங்காச்சும் ஷாப்பிங் போலாம்!'' என்றேன் குன்ஸாக. வொர்க் அவுட் ஆனது!

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

''ஓ! போலாமே!''

''எங்கே இருக்கு உங்க டெல்லி பங்களா?''

''மெஹ்ரௌலி!''

''பாருடா! நானும்கூட மெஹ் ரௌலிக்கு ரொம்பப் பக்கமாத்தான் இருக்கேன்! எங்கே மீட் பண்ணலாம் சொல்லு!''

''இந்த ஏரியாவுக்குள் வேணாம். ரொம்ப தூரமா வேற ஏதாவது ஏரியா சொல்லு. கரெக்டா மதியம் 3 மணிக்கு அங்கே இருப்பேன்!'' - தானாகவே தடதடவென்று கைக்குள் வந்து விழுந்தது தங்க மயில். ஒரு விஷயம் நன்றாகப் புரிந்தது எனக்கு. லக்னோவிலேயே பிறந்து வளர்ந்த ரீத்துவுக்கு, டெல்லியின் பிரமாண்டமும் பரபரப்பும் பிடித்து இருக்கிறது. அதிலும், வீட்டுக்குத் தெரியாமல் ஒரு பையனுடன் - தன்னைப் போலவே ஒரு தாக்கூர் பையனுடன் - சுற்ற ரொம்ப ரொம்பவே ஆசை இருக்கிறது.

www.t.me/tamilbooksworld

கனாட் பிளேஸில் விம்ப்பி என்ற ஷாப்பிங் மால் பெயரை அவளுக்கு சொல்லி இருந்தேன். கன் டைமுக்கு அங்கே போய்விட்டேன். சூப்பரான புது டிரஸ்ஸில் காத்திருந்தேன். அவளுக்காக20 ஆயிரம்கூட ஷாப்பிங் செலவு நடத்துவதற்கு தயாராக வந்து இருந்தேன். சொன்ன டயத்துக்கு 10 நிமிஷம் லேட்டாக மெர்சிஸிடிஸ் காரில் வந்து இறங்கினாள். காரின் முன் ஸீட்டில் இருந்து குதித்து பின் கதவை அவளுக்குத் திறந்துவிட்டான் அதே அசத்தல் உயர துப்பாக்கி செக்யூரிட்டி. அவனிடம் ஏதோ ரீத்து சொல்ல, கார் மிதந்து நகர்ந்து போகிறது. இறுக்கிப்பிடித்த டாப்ஸ¬டன் இந்தி சினிமா ஹீரோயினிபோல இருந்தாள்.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

கூட்டத்துக்கு நடுவிலும் என்னைக் கண்டுபிடித்து, ''ஹாய் விஜய்!'' என்று கையாட்டினாள். ''உன்னை என்ன தங்கத்தை உருக்கியா செஞ்சிருக்கு? எப்பவும் எதுக்குத் துப்பாக்கி பாதுகாப்பு?'' என்றேன் தலை வெடிக்கிற ஆர்வத்தில்.

''எல்லாம் எங்க அப்பா ஏற்பாடு. அவருக்கு எதிரிகள் நிறைய. அதனால், எங்க குடும்பத்தில் எல்லாருமே கொஞ்சம் ஜாக்கிரதையா நடமாடணும்னு அப்பா சொல்லி இருக்காரு!''

''உங்கப்பா ரொம்ப பெரிய பிசினஸ்மேனோ?''

''ம்... அப்படித்தான்!'' என்றாளே தவிர, அதற்கு மேல் சொல்லவில்லை.

www.t.me/tamilbooksworld

''என்னவெல்லாம் உனக்கு வாங்கணும், சொல்லு!'' என்றேன் கைகளைப் பரபரவென தேய்த்துக்கொண்டு. ஷாப்பிங் மாலுக்குள் போனோம். கோடிகள் அவளுக்கு சாதாரணம் என்றபோதும், துணிமணிகளின் டிஸைனை விடவும் விலை அட்டையைத்தான் முதலில் பார்த்தாள். உதட்டைச் சுளித்தபடி, ''யம்மாடி! இந்த ஒரு டிரஸ் செட்டுக்கு இங்கே கொடுக்கிற விலையில், நான் 10 டிரஸ் லக்னோவில் வாங்கிடுவேன்!'' என்றாள்.''அதனால்தான் அது லக்னோ... இது டெல்லி, புரியுதா? டெல்லிக்காரன் நான் வாங்கித் தர்றேன். லக்னோக்காரிக்கு வாங்கிக்க என்ன கஷ்டம்?'' - ரொடீம்பதான் க்ளோஸ் ஆகி 'பிட்'டுகளைப் போட்டேன்.

ரீத்து, ''அரே.. நீ எதுக்கு எனக்காக செலவு பண்ணணும்? நீ எனக்கு அண்ணனா... தம்பியா?'' சுருக்கென்று குத்தின மாதிரி இருந்தது.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

''சரி... வா இன்னும் நிறையக் கடை இந்த ஏரியாவில் இருக்கு!'' என்று வெளியே கூட்டி வந்தேன். ''பாலிகா பஜார்ல போனா ரொம்ப சீப்பா டிரஸ் கிடைக்குமாமே...'' என்றவளை உற்சாகமாகப் பார்த்தேன். அவளோடு சேர்ந்து எங்காவது சுற்ற வேண்டும். அவளே அடுத்த இடத்துக்குக் கூப்பிடுகிறாள். விசிலடித்து ஒரு ஆட்டோவைப் பிடித்தேன்.

பாலிகா பஜாரில் கடை கடையாக ஏறி இறங்கினாள். டி-ஷர்ட், ஜீன்ஸ் என்று அவள் வயதுப் பெண்கள் புகுந்து விளையாடிக்கொண்டு இருக்க... இவள் சல்வார் கமீஸ் விற்கிற கடைகளை மட்டுமே நோட்டமிட்டாள். கடைக்காரன்500 சொன்ன ஒரு செட்டை300க்குப் பேரம் பேசி மல்லாடினாள். கடைசியில்375-க்கு பேரம் படிய... நான்1,000 நோட்டை நீட்டினேன். என் கையைத் தட்டிவிட்டு, தன் கைப்பையில் இருந்து கரெக்டாக சில்லறை சுத்தமாக எண்ணிக் கொடுத்துவிட்டு நடந்தாள்.

www.t.me/tamilbooksworld

இடுப்பு பெல்ட் விற்கிற பிளாட்பாரக் கடைக்காரன் குறுக்கே ஓடி வந்தான்.

''சாப், ஒரிஜினல் தோலில் செஞ்ச பெல்ட்...300 தான்... வாங்கிக்கோங்க!'' என்றான்.

''இது ஒரிஜினல் லெதரா?'' பெல்ட்டை வாங்கிப் பார்த்துவிட்டு, ''தம்பீ... இது ரெக்ஸின். பார்த்தாலே தெரியுதே!'' என்று நகர ஆரம்பித்தேன். ''நம்புங்க சாப். இங்கே பாருங்க!'' என்று லைட்டரை வைத்து பெல்ட்டின் நுனியைக் கொளுத்திக் காட்டினான். ''எப்படி பொசுங்குது பாருங்க... ரெக்ஸினா இருந்தா உருகிடும் சாப்...300 கூட வேணாம்... குறைச்சே கொடுங்க!'' என்றான்.200... அடுத்து100-க்கு இறங்கி வந்தான். ''50 -க்கு தருவியா?'' என்றேன்.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*பக்கத்திலிருந்த ரீத்து, ''ஏய் விஜய்...100 நியாயமாத்தான் தோணுது. பெல்ட் நல்லாத்தானே இருக்கு.. நான் வேணா பணம் தர்றேன், வாங்கிக்கோ!'' என்றாள்.*

*பெல்ட்காரன் பிரகாசமாகி, ''மேம் சாப் சொல்றாங்க பாருங்கோ. வாங்கிக்கோ சாப். ரெண்டு பேருக்கும் ராஜாவாட்டம் குழந்தையை ஆண்டவன் கொடுப்பான்!'' என்று வலிய வந்து வாழ்த்தினான்.*

*கால் நொடியும் மிஸ் பண்ணாமல் நான் ரீத்து முகம் பார்த்தேன். குப்பென்று சிவந்து இருந்தது அவள் கன்னம்.*

- தொடர்ந்து சந்தேகிப்போம்...

Copyright Ⓒ Vikas Swarup 2008

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

## மோட்டிவ் 6

### முத்தம் போதாதே...

கடைக்காரன் எங்களைப் பார்த்து தம்பதி என்று நினைத்து வாழ்த்தியதும் ரீத்துவின் கன்னங்கள் சிவப்பதைக் கண்டு குஷியாகி, 200 எடுத்துக் கொடுத்து பெல்ட்டை வாங்கிக்கொண்டு நடக்க ஆரம்பித்தேன். ''என்ன இது... நான் சொன்னதுக்காக இப்படித்தான் காசை அள்ளி இறைக்கிறதா?'' என்றவள் பக்கம் திரும்பி,

www.t.me/tamilbooksworld

''பணமா முக்கியம்? அவன் பிரார்த்தனை பலிக்கணும். அதானே முக்கியம்!'' என்று அடித்துவிட்டேன். இப்போது ரீத்து முகம் இரண்டாம் தடவை செஞ்சாந்து ஆனது.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

கடிகாரம் பார்த்தவள், ''ஐயோ ரொம்ப நேரம் ஆயிடுச்சு. ராம்சிங் அங்கே வந்து காத்திருப்பான்!'' என்றாள்.

''யாரு ராம்சிங்?''

''அதான் என் பாடிகார்டு! இந்நேரம் நான் கனாட் பிளேஸில் அதே இடத்தில் இருக்கணும்!'' என்று பதறினாள்.

''வா, நான் கூட்டிட்டுப் போறேன்!''

''வேணாம்... நானே ஆட்டோவில் போய் இறங்கிக்கறேன். அப்புறம் உன்கிட்டே பேசறேன்!'' என்று பறந்தாள் ரீத்து.

அடுத்த ஒரு வாரம் அவளிடம் இருந்து போன் இல்லை. இளவரசி மாதிரி மெர்சிடிஸில் வந்து இறங்கி, பிச்சைக்காரிபோல கடையில் பேரம் பேசிய அவளது கேரக்டர்... ஏனோ எனக்குள் கெட்டியாக உறைந்துவிட்டது! ஒருவேளை அவள் மறந்து இருப்பாளோ என்று நான் நினைத்த சமயம் செல் கூவியது.

www.t.me/tamilbooksworld

''விஜய் சிங்?''

''ஏய் ரீத்து! நீ என்னை மறந்தே போய்விட்டாய் என்று நினைத்தேன்!'' - இப்போது நான் கூவினேன்.

''லக்னோவில் இருந்து என் பாட்டியோட ஊருக்குப் போயிருந்தேன். இதோ மறுபடி டெல்லி வந்தாச்சு. இன்னிக்கு எங்கே பார்க்கலாம் சொல்லு!'' என்றபோது அவள் குரலிலும் தவிப்பு இருந்தது.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*''லஞ்ச்சுக்கு மீட் பண்ணலாம். உனக்கு என்ன பிடிக்கும் சொல்லு!''*

*''சைனீஸ்?''*

*''சூப்பர்!''*

*அப்படியாக அவள் தாஜ் நட்சத்திர ஹோட்டலின் சைனீஸ் ஸ்பெஷல் ரெஸ்ட்டாரன்ட்டுக்கு என்னை வரச் சொன்னது... நான் அங்கே போனது... பார்த்தறியாத, பேர் தெரியாத உணவு வகையெல்லாம் வரவழைத்து அவளோடு சாப்பிட்டது... அந்தப் பேச்சின் இடையே என்னை ஒரு மகா பணக்கார எக்ஸ்போர்ட் வியாபாரியாக ஆணித்தரமாக ரீல் சுற்றியது என்று கனவுபோல எல்லாம் நடந்தன. எனக்கொரு அம்மாவும் தங்கையும் மட்டும் இருப்பதைச் சொன்னேன். அவர்களுடன் நான் ராமோஜி ரோட்டில் சூப்பர் பங்களாவில் வசிப்பதாக சொன்னேன்.*

www.t.me/tamilbooksworld

*''நானே என்னைப்பத்தி சொல்லிட்டு இருக்கேனே... நீ உன் குடும்பம்பற்றிச் சொல்லு!'' என்றேன் ஒரு கட்டத்தில் அவள் கேள்விகளை சமாளிக்க முடியாமல்.*

*''இப்போதைக்கு வேணாமே, ப்ளீஸ்! உன்னை நான் இன்னும் நல்லா புரிஞ்சுக்கிட்ட பிறகு முழுசா எல்லாத்தையுமே சொல்வேன்!'' என்றாள் என் விரல்களைத் தொட்டு. கிளம்புகிறபோது, சற்றே இடைவெளிவிட்டு என்னை வரச் சொன்னாள். ஹோட்டலின் போர்ட்டிகோவில் மெர்சிடிஸில் துப்பாக்கி பாடிகார்டு திறந்துவிட... ஏறிப் பறந்தாள். அந்த மதியத்தின் சந்தோஷத்தை லேசாக அரித்துப் பார்த்த விஷயம், சாப்பாட்டின் முடிவில் வந்த பில். 3,800!*

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

என் வாழ்க்கையின் மிக மிக காஸ்ட்லியான லஞ்ச். ஆனால், 'டேய் முன்னா பயலே! ஓசி-யில் வந்த துட்டுதானேடா! கண்ணை மூடிக்கிட்டுச் செலவழி. சீக்கிரமே ஒரு நாள் இவளை நீ படுக்கையில் வீழ்த்துறதுக்கு இதுகூட செலவழிக்காட்டி எப்படி?' என்று கேட்டது என் திருட்டுப் புத்தி! திடீரென்று நேற்று எங்க ஏரியா செம பரபரப்பாகிவிட்டது. குடிசைப் பகுதிகளுக்குள் புகுந்து வந்து நின்றது ஐ.டி.என். டி.வி-யின் பெரிய வேன். அதிலிருந்து பர்க்கா தாஸ் இறங்க... ஏரியா ஜனங்களுக்கு செம த்ரில்லாகிவிட்டது. கேமராக்காரரை முன்னே விட்டபடி, கையில் மைக்கோடு குடிசைவாசி ஜனங்களிடம் பேட்டி எடுத்தாள் பர்க்கா தாஸ்.

''மாணவி ரூபி கில் படுகொலை வழக்கில் நீதிமன்றத் தீர்ப்பு வந்து இருக்கிறது. உத்தரப் பிரதேச உள்துறை அமைச்சர் ஜெகன்னாத் ராயின் மகன் விவேக் விக்கி ராயை நிரபராதி என்று கூறி விடுதலை செய்து இருக்கிறது கோர்ட். இதுபற்றி உங்கள் கருத்து என்ன?'' என்பதுதான் அவள் எல்லோரிடமும் கேட்ட கேள்வி.

www.t.me/tamilbooksworld

''கோர்ட், கேஸு எல்லாமே பணம் இருக்கிறவங்களை ஒண்ணும் செய்யாது தாயி. எங்களை மாதிரி நாதியத்த ஏழை வீட்டுப் பொண்ணாமே அந்த ரூபி கில்... அவளை சுட்டுக் கொன்னவன் வெளியில வந்ததுல என்ன ஆச்சர்யம் இருக்குது?'' என்று சீறினாள் பூக்காரப் பெண்மணி.

தலையில் எப்போதும் சிவப்புத் துணி கட்டிக்கொண்டு அலையும் கம்யூனிஸ்ட் அனுதாபி ஒருத்தன் எங்க ஏரியாவில் பிரபலம். அவன் திபுதிபுவென்று ஓடி வந்து பர்க்கா தாஸிடம் இருந்து மைக்கைப்பிடுங்கிக்கொண்டான். ''சுட்டுக் கொல்லணும். தப்பு பண்ற நாய்களை சுட்டுக் கொல்லணும்! இந்த முதலாளித்துவ உலகத்தில் நீதிமன்றத் துக்கு மதிப்பே கிடையாது. புரட்சி ஓங்குக!'' என்று கத்தித் தீர்த்தான்.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

கூட்டத்தில் முண்டி அடித்த என் அம்மாவிடம் மைக்கைக் கொடுத்தாள் பர்க்கா தாஸ். ''அம்மாஜி... புரட்சி வந்தால்தான் ஏழைக்கு விடிவா? நீங்க என்ன நினைக்கிறீங்க?'' என்றாள். உற்றுப் பார்க்கிற கேமராவால் நாக்கு உலர்ந்துபோன என் அம்மா, ''புரட்சியா? அதெல்லாம் எனக்குத் தெரியாது தாயி... போன ஜென்மத்துல பண்ண பாவத்தைத்தான் இப்படி சேரியிலே பொறந்து அனுபவிக்கிறோம். அவங்க அவங்க செஞ்ச கர்மாவை யார் நினைச்சாலும் மாத்திவைக்க முடியாது!'' என்றாள் தட்டுத் தடுமாறி.

தூரத்தில் நின்று பார்த்துக்கொண்டு இருந்த எனக்கு அம்மா மீது பாவமாக இருந்தது. குப்பைத் தொட்டிக்குள் இருந்து என் கைக்கு வந்த பணப் பெட்டி எந்த கர்மாவின் செயல்? எனக்குள் நானே சிரித்துக்கொண்டேன்!

www.t.me/tamilbooksworld

ரீத்து போன் வந்தது. ''இன்னிக்கு நாம் பார்க்கலாமா?'' என்றாள். குரலில் சோகம் தூக்கலாக இருந்தது. ''லோதி கார்டன் தெரியுமா? டெல்லியின் இன்னொரு கோடியில் இருக்கு!'' என்றேன். ''தெரியும்... வர்றேன், இரண்டு மணிக்கு!'' என்று கட் பண்ணினாள். பிங்க் நிற சுடிதாரில் ஒரு ஆட்டோவில் வந்து இறங்கினாள். 'ஆஹா, துப்பாக்கி தூக்கின பாடிகார்டு வரலை. இன்னிக்கு இவளை எப்படியாவது தொட்டுடணும்னு நினைச்சு வந்ததுக்கு, இது நல்ல சகுனமா இருக்கே!' என்று நினைத்துக்கொண்டேன்.

மதிய நேரத்தில் பார்க்கில் மூலைக்கு மூலை காதலர்கள் ஈஷிக்கொண்டு இருக்க... பார்த்துமிரண்டாள் ரீத்து. ''இந்த நேரத்துல இவ்ளோ பேர் இங்கே என்ன பண்றாங்க? நாம் வேற எங்காச்சும் போகலாம்!'' என்றவளை, மெதுவாக கை பிடித்து கூட்டிக்கொண்டு போய், ஒரு சிமென்ட் பெஞ்சில் உட்காரவைத்தேன். ''டெல்லியில் எந்த

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*பார்க் பக்கம் போனாலும், இந்த டயத்துக்கு ஜோடி ஜோடியா இப்படிக் கும்மிக்கிட்டுத்தான் இருப்பாங்க!'' என்றதும் சிரித்தாள். நான் நன்றாக நகர்ந்து அவளை ஒட்டி உட்கார்ந்தேன்.*

*எந்த நேரமும் பக்கத்து புதர் மறைவில் இருந்து தன் அப்பா எம்பிக் குதித்து வந்துவிடுகிற மாதிரி மருட்சியாகக் கண்களை உருட்டிக்கொண்டே இருந்தாள். மெள்ள அவள் கைகளை எடுத்து எனக்குள் பொதித்தேன். அவள் எதிர்க்கவில்லை... பெரிசாக ஒத்துழைக்கவும் இல்லை. 'முத்தம் சட்டுனு வெச்சிடு' என்று உள்மனசு சொல்ல... மெள்ள நெருங்கி கன்னத்தில் உதட்டை ஒற்றினேன். அவள் இரு கைகளால் கன்னத்தைப் பொத்திக் கொண்டாள். கைகளை விலக்கிப் பார்த்தபோது... அவள் வெட்கப்பட்டுக்கொண்டு இருந்தாள்!*

www.t.me/tamilbooksworld

*அடுத்த முத்தம் அஞ்சாமல் வைத்தேன் - இந்த முறை உதட்டிலேயே. இப்போது ரீத்து எனக்கு பதில் முத்தம் கொடுத்தாள். எத்தனை இந்தி படம் பார்த்து இருப்பாள்!*

*''ஐ லவ் யூ ரீத்து!'' என்றேன், என்னால் முடிந்த சிறந்த பாவனையில்.*

*''எனக்கும் உன்னை ரொம்ப பிடிச்சிருக்கு விஜய்!'' என்று அவள் சொன்னபோது ரத்தத்தில் சர்க்கரை கலந்தது.*

*உங்களிடம் சொல்வதற்கு என்ன... இது ஒன்றும் முதல் முறையாக ஒரு பெண் என்னிடம் சொல்கிற வார்த்தை இல்லை. இதற்கு முன்பும் பல பெண்கள் என் காதோரம் கிசுகிசுத்ததுதான். ஒரே வித்தியாசம்... இவளைப்போல அவர்கள் பவித்திரமானவர்கள் அல்ல. எங்கள் குடியிருப்பிலும் பக்கத்து ஏரியாக்களிலும் சமயம் கிடைக்கிறபோது,*

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

சான்ஸ் கொடுக்கிற பையன் களோடு போய் வரக்கூடியவர்கள். மட்டமான பவுடர் வாசனையோடு அவர்கள் இருக்க... உள்ளே போன சரக்கின் வாசனை என் மீது நெடியாக அடிக்க... இருட் டில், உச்சத்தில் அவர்கள் சொன்ன வார்த்தைகள் அவை.

உள்ளுக்குள் ஒரு குற்ற உணர்ச்சி முகம் காட்டியது. 'டேய் முன்னா... பாவம்டா இவ! கள்ளம் கபடம் இல்லாத பொண்ணு' என்று அலறியது மனசு. ஆனால், உடன் பிறந்த சைத்தான் விடுவதாக இல்லை.

''வா ரீத்து... இன்னும் தனிமையான இடத்துக்குப் போலாம்!'' என்று அவளை கை பிடித்து எழுப்பினேன். எதுவும் பேசாமல் நடந்து வந்தாள். என் பாக்கெட்டில் இருக்கிற பணத்துக்கு நான் ஐந்து நட்சத்திர ஹோட்டலில் கூட ரூம் போட முடியும். ஆனால், அங்கே ஓவராகக் கேள்வி கேட்பார்கள். எனக்குத் தெரிந்த எத்தனையோ லாட்ஜ்கள் இருக்கின்றன. அங்கே மேனேஜர்கள் எதுவுமே கேட்பதில்லை. மேலும், மணிக் கணக்கு போட்டு மட்டுமே பணம் வாங்குவார்கள். அதைவிட முக்கியமாக, ரீத்துவை அடையாளம் காணக்கூடிய மெர்சிடிஸ் பென்ஸ் குடும்ப ஆசாமிகள் அந்த ஏரியாக் களில் மறந்தும் கால்வைக்க மாட்டார்கள். அதான் எனக்கு சேஃப்ட்டி!

www.t.me/tamilbooksworld

பாஹர்கஞ்ச்சில் அந்த லாட்ஜுக்குள் தயங்கித் தயங்கித்தான் வந்தாள் ரீத்து. மேனேஜர் என்னைப் பார்த்ததுமே இளித்து சல்யூட் வைத்தான். ''ஒன் ஹவர் மட்டும்!'' என்று 1,000 நோட்டு ஒன்றை வைத்தேன். 800 திருப்பிக் கொடுத்து, ''ரூம் நெம்பர் 109!'' என்று துருப்பிடித்த சாவியைக் கொடுத்தான்.

- தொடர்ந்து சந்தேகிப்போம்...

Copyright © Vikas Swarup 2008

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

# மோட்டிவ் 6

## 'என் வைரம், அல்லவா!'

35

படியேறியபோது என்னிடம் இருந்த ரீத்துவின் கைகளில் நடுக்கம் தெரிந்தது. கச்சடா லாட்ஜாகத்தான் இருந்தது அது. நீண்ட காரிடாரின் கடைசியில் இருந்தது அந்த ரூம். சுவரின் ஓரமெல்லாம் அழுக்கு சாயத் தீற்றல்கள்... கரப்பான் பூச்சிகள் பறந்தன.

t.me/tamilbooksworld

'கொஞ்சம் பெட்டராகவே இடம் பார்த்து இருக்கலாமோ?' என்று தோன்றியது. ஆனால், இனி இடம் மாற்றுவதற்கு நேரம் இல்லை; இந்த சான்ஸை விட முடியாது!

அறையின் கதவைத் திறந்தபோது கொஞ்சம் ஆச்சர்யமாக இருந்தது. லாட்ஜின் அழுக்கோடு ஒப்பிடுகையில் உள்ளே சுத்தமாக இருந்தது. கறை இல்லாத வெள்ளை விரிப்போடு டபுள் மெத்தை. புஸ்ஸென்ற தலையணைகள். தடிமனான சிவப்பு திரைச் சீலைகள் போட்ட ஜன்னல்... ஏ.ஸி. இல்லாவிட்டாலும் சற்றுக் குளுமையாகவே இருந்தது அந்த ரூம். குடிக்க சுத்தமான பிளாஸ்டிக் ஜெக்கில் தண்ணீரும், பிளாஸ்டிக் பேப்பர் சுற்றிய இரண்டு டம்ளர்களும் வைத்திருந்தார்கள். சின்னதாக டி.வி.கூட இருந்தது.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

டி.வி-யைப் பார்க்கவா வந்தேன்?!

தொழில் நுணுக்கத்தின் உச்சமாக, அந்த அறைக்குள் இருந்த அலமாரியின் கடைசித் தட்டில் நான்கு... ஐந்து ஆணுறைகளும் போட்டு வைத்திருந்தார்கள்.

கட்டிலில் அவளை உட்காரவைத்து... மெதுவாக இடுப்பைச் சுற்றி

வளைத்தேன். தலைக்குப் போட்டிருந்த ஸ்கார்ஃபை எடுத்துவிட்டுக் காதிலும் கன்னத்து ஓரமும் முத்தமிட்டேன். ரீத்து அசையவில்லை. அவள் அணிந்திருந்த சல்வாரின் இரண்டு பட்டனைகளைக் கழற்றி அதை அவள் தலைவழியாக நீக்கினேன். ரீத்து எங்கோ வெறித்துப் பார்த்தபடி இருந்தாள். அதற்குள் இருந்த ஷிம்மீஸைக்கூட தலைவழியாகக் கழற்றியாயிற்று. இப்போது மிச்சம் அவள் மேலுடம்பில் இருந்தது மெல்லிய பிரா ஒன்று மட்டுமே. அதைக் கழற்றும் முன் மெதுவாக அவளை என் இடக் கையில் சாய்த்தேன்.

me/tamilbooksworld

அப்போதுதான் கவனித்தேன்... ரீத்துவின் கண்களில் இருந்து தாரை தாரையாகக் கண்ணீர் உருண்டு சிதறுவதை. இது போன்ற சமயங்களில் சில பெண்கள் சின்னதாக எதிர்ப்புக் காட்டுவதும், சிணுங்குவதும் சகஜம்தான். இல்லாவிட்டால், கூட இருக்கிற ஆணுக்கு அந்தப் பெண்ணின் கடந்த கால ஒழுக்கம் பற்றி சந்தேகம் வந்துவிடும் என்பதால் இருக்கலாம். அப்படித்தான் ரீத்துவும் அழுகிறாள் என்று நினைத்தேன். அவள் இஷ்டம் இல்லாமலா இத்தனை தூரம் வந்து இருப்பாள்!

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*ஆனால், நொடிகள் கரையக்கரைய அவளுடைய மௌன அழுகை மிகப் பெரிய சத்தத்தோடு வெடித்து... அந்த அறையின் சுவர்களை அறைந்து தாக்கத் தொடங்கியது. மேற்கொண்டு அவளைத் தொட்டுக் கையாள முடியாமல் ஏதோ ஒன்று என்னைத் தடுத்தது. அதை மீறி அவளை நான் ஏதும் செய்தால், அது குருட்டுப்பிச்சைக்காரனின் தட்டில் இருந்து சில்லறையைத் திருடுவதற்கு சமம் என்று தோன்றியது.*

*எப்படிக் கழற்றினேனோ... அப்படியே அவள் உடைகளை அணிவித்தேன். பட்டன்களைப் போட்டு, ஸ்கார்ஃபையும் நானே தலையில் சுற்றினேன். அவள் கண்களைத் துடைத்தேன். நாங்கள் இருவரும் எதுவும் பேசாமல், ஒருவருக்கொருவர் இறுக்கமாகக் கைகளைப் பற்றியபடி பல நிமிடங்கள் ஆடாமல் அசையாமல் அப்படியே அமர்ந்து இருந்தோம்.*

www.t.me/tamilbooksworld

*சாலையில் ஓடும் ஆட்டோ ரிக்ஷாக்கள்... லாட்ஜ் ஜன்னலின் விளிம்பில் அமர்ந்து கரையும் காகங்கள்... கூவிப் பழம் விற்கும் யாரோ ஒரு பெண்ணின் குரல்... அறைக்குள் மாட்டி இருந்த சுவர் கடிகாரத்தின் டிக் ஒலி... அத்தனையும் துல்லியமாகக் கேட்டன. நான் திரும்பி ரீத்துவின் கண்களுக்குள் பார்த்தேன். அங்கே காமம் இல்லை. இப்போது என்னிடத்திலும் அது இல்லை. ரீத்து என்ற பெண்ணின் கண்களுக்குள் எனக்கான மொத்த உலகமும் அடங்கிப் போயிருப்பதுபோல் இப்போது தோன்றியது.*

*அறைக் கதவைத் தட்டிய சத்தம் அமைதியைக் குலைத்தது. ''ஒரு மணி நேரம் ஆயிடுச்சு, சார்!'' என்றான் அந்த மேனேஜர். ஒரு மணி நேரமா அதற்குள் ஓடிவிட்டது! கதவைத் திறந்தபோது, மேனேஜருக்குப் பின்னால் புதிய படுக்கை விரிப்பை மாற்றத் தயாராக ரூம்பாய் ஒருத்தனும் நின்று இருந்தான்.*

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*ரீத்துவும் நானும் அமைதியாக வெளியில் வந்து டெல்லியின் ராட்சத ஜனசந்தடியில் கலந்தோம். இப்போது பகலின் வீரியம்வற்றி, மாலையின் தண்மை சேர ஆரம்பித்து இருந்தது.*

*''லேட்டாயிடுச்சு. நான் உடனே கிளம்பியாகணும். இல்லாட்டி ராம்சிங்குக்கு சந்தேகம் வந்துடும்!'' - பலவீனமாக வந்தன அவள் வார்த்தைகள்.*

*''திரும்பவும் எப்ப நாம பார்க்கறது?'' என்றேன்.*

*''இன்னிக்கு ராத்திரி நான் லக்னோ போயிடுவேன். மூணு வாரம் கழிச்சு மறுபடி டெல்லி வருவேன்.''*

www.t.me/tamilbooksworld

*''மூணு வாரமா? அது வரைக்கும் உன்னை எப்படிப் பார்க்காமல் இருக்கிறது?'' - நான் அழுகிறேன் என்பது எனக்கே அதிர்ச்சியாக இருந்தது.*

*''மார்ச் 10-ம் தேதி என் பிறந்த நாள். அன்னிக்கு சந்திப்போம்!''*

*இப்போது என் குரலில் மறுபடி உற்சாகம். ''வெரிகுட்! இப்பவே உனக்கு அட்வான்ஸ் ஹேப்பி பர்த்டே! உனக்கு சூப்பர் பிரசென்ட் வாங்கி வெச்சுட்டுக் காத்திருப்பேன்!''*

*ரீத்து அத்தனை ஜனக் கூட்டத்துக்கும் கவலைப்படாமல் என் கன்னத்தில் முத்தம் பதித்தாள். ''நீதான் எனக்கு அருமையான பிரசென்ட் கொடுத்திட்டியே...''*

*''நானா? என்ன கொடுத்தேன்?''*

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

''என் பெண்மைக்கு மரியாதை! நீ கூப்பிட்டதுமே நான் எதுவும் பேசாமல் வந்தேன். ஆனா, நீ ஆசையைத் தாண்டினது காதல்னு நிரூபிச்சிட்டே. எப்படிக் கூட்டி வந்தியோ, அதே மரியாதையோடு அனுப்பி வைக்கிறே. அதுதான் ஒரு பெண்ணுக்குக் கிடைக்கக்கூடிய மிகப் பெரிய பரிசு விஜய்!'' - விருட்டென்று கடந்த ஒரு ஆட்டோவை நிறுத்தி, பேரம் எதுவும் பேசாமல் ஏறினாள். ஆட்டோவை மறைத்தது டிராஃபிக்கும் என் கண்ணீரும்.

மார்ச் 10...

ரீத்துவின் பிறந்த நாளுக்கு மூன்று வாரம் இருந்தது. தெருப் பொறுக்கியாகச் சுற்றிக்கொண்டிருந்த என்னை ஒரு பெண்ணின் தூய்மையான காதல் இத்தனை தூரத்துக்கு மாற்றிவிடும் என்று நான் நினைத்தே பார்க்கவில்லை.

www.t.me/tamilbooksworld

பணக்கார வீட்டுப் பெண் ஒருத்தியையாவது தொட்டுப் பார்க்க வேண்டும் என்ற என் துடிப்பு, இப்போது கோடீஸ்வர ரீத்துவின் மீது நிஜமான காதல் வந்த பிறகு மொத்தமாக திசை மாறிவிட்டது. அவள் ஒருத்திக்காக நான் எதையும் செய்யத் தயாராக இருப்பதாக என் இதயம் அடித்துச் சொன்னது.

அவள் அந்தஸ்துக்கும் என்னைப் போல் ஒரு சேரிக்காரனின் அந்தஸ்துக்கும் எப்படி ஈடாகும்? சூட்கேஸில் கிடைத்த பணம் அந்த இடைவெளியை நிரப்புமா?

இந்திப் படங்களில்தான் பார்க்கிறேனே... 'ப்யார்' என்ற காதல் ஜாலம் சொர்க்கத்துக்கும் நரகத்துக்கும் நடுவிலான இடைவெளியைக்கூட எட்டிப் பிடித்துவிடுகிறதே!

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

துளைக்கும் சிந்தனையோடு கழிந்தன இரவுகள். மூன்று வார காலம் ரீத்துவைப் பார்க்க முடியாது என்பதையும் நல்லதுக்கு எடுத்துக்கொண்டேன். எங்கள் குடியிருப்புக்குப் பக்கத்து ஏரியாவில் ஸ்போக்கன் இங்கிலீஷ் கிளாஸில் சேர்ந்தேன். ராமோஜி நகரில் ஒரு பங்களாவை வாடகைக்கு எடுக்க ஏற்பாடு செய்தேன். ரீத்துவிடம் என் சொந்த பங்களா என்று சொல்லிக்கொள்ளத் திட்டம்! நிஜமாகவே எம்.ஜி. ரோடில் இருக்கும் பெட்டி தயாரிப்பு கம்பெனிக்கு உள்ளே போய், அந்த கம்பெனியின் செயல்பாடுகள் பற்றித் தெரிந்துகொண்டேன். கம்பெனிக்கே நான்தான் ஓனர் என்றல்லவா ரீத்துவிடம் பீலா விட்டிருக்கிறேன்!

என் காதல் தேவதைக்குப் பிறந்தநாள் பரிசு வாங்க வைர நகைக்கடைக்குப் போனேன். கடுகு சைஸில் இருந்த ஒரு வைரத்தைப் பதித்து, அந்த தங்க மோதிரத்துக்கு விலை ஐம்பதினாயிரம் ரூபாய் என்றாள் கடைப் பெண்.

www.t.me/tamilbooksworld

''ஏ பொண்ணு... எங்க ஏரியா பிளாட்பார கடைக்கு வா! இதே மினுமினுப்பு, ஜொலிஜொலிப்போடு ஐந்நூறு ரூபாய்க்கு மோதிரம் வாங்கிக் காட்டுகிறேன்!'' என்றேன் கடுப்பாக.

''சார்... நீங்க சொல்ற கல்லுக்கு கியூபிக் ஸிர்கோனியம்னு பேர். அச்சு அசலா வைரம்மாதிரியே ஜொலிக்கும். ஆனா, வைரம்னா அது வைரமாத்தானே இருக்கணும்?'' என்று சிரித்தாள் கடைப்பெண்.

ஒரு சின்ன யோசனை... என்னதான் என் காதல் ஒரிஜினல் என்றாலும், அதற்காக ஐம்பதாயிரம் ரூபாயா தண்டம் அழுவது? அந்த ஸிர்கோனியம் டூப்ளிகேட்டையே தங்க மோதிரத்தில் பதித்துக்கொடுத்தால் என்ன? ரீத்துவிடம் கொட்டிக்கிடக்கிற பணத்துக்கு, அவள் என் பரிசை என்ன டெஸ்ட் பண்ணியா பார்க்கப் போகிறாள்?'

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*இந்த ஐடியா தோன்றிய அடுத்த நொடியே, என் மனசாட்சி முன்னால் வந்து என்னை செருப்பால் அடித்தது. 'டேய் புறம்போக்கு! தூய்மையான காதலில்கூட உன் திருட்டு மொபைல் புத்தியைக் காட்டுறே பார்த்தியா?' என்று சிடுசிடுத்தது. பின்னந்தலையில் தட்டிக்கொண்டேன். இன்னும் கூட அம்சமாக ஒளிவிட்ட வேறொரு வைர மோதிரத்தைத் தேர்ந்தெடுத்து விலை கேட்டேன். ஒரு லட்சத்து இருபதாயிரம் சொன்னாள் அந்தப் பெண். ''கிஃப்ட் பார்சலா ரெடி பண்ணிடு'' என்று, உப்பிப் புடைத்த பர்ஸை எடுத்தேன்.*

*வைரக் கடையில் இருந்தே மொபைல் போட்டேன் ரீத்துவுக்கு.*

*''ஹாய் செல்லம்! உனக்கு என் பர்த்டே கிஃப்ட் தயார். மார்ச் 10 அன்னிக்கு கட்டாயம் டெல்லியில்தானே இருப்பே?''*

www.t.me/tamilbooksworld

*''ம்! அன்றைக்கு காலையில்தான் வர்றேன்.''*

*''சரி, அன்னிக்கு மதியம் நேரு பார்க்கில் நாம மீட் பண்றோம்!''*

*''எங்க அப்பாவும் அன்னிக்கு டெல்லியில்தான் இருப்பாரு. வீட்டுல பர்த்டே கொண்டாட்டத்துக்கு பெரிய ஏற்பாடு பண்ணியிருக்காங்க. நான் வீட்டை விட்டு வெளியே வரமுடியுமானு தெரியலையே!''*

*''நீ எப்படியாச்சும் வர்றே... டயம் சொல்லு!''*

*சின்ன தயக்கத்துக்குப் பிறகு, ''மதியம் ரெண்டு மணி'' என்றாள் பெரிய மனசு பண்ணி ரீத்து.*

- தொடர்ந்து சந்தேகிப்போம்...

Copyright © Vikas Swarup 2008

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

## மோட்டிவ் 6

### ஓடிப் போலாமா..?

நேரு பார்க்... சொன்ன நேரத்துக்கு என் பர்த்டே பேபி ரீத்து

36 வந்துவிட்டாள். ஸ்வீட் பாக்ஸில் இருந்து இனிப்பை எடுத்து ஊட்டிவிட்டேன். மேல் பாக்கெட்டில் இருந்த பரிசுப் பெட்டியை நீட்டினேன். பளபள பேப்பரைக் கிழித்தாள். வெல்வட் பெட்டியைத் திறந்தாள். அதனுள் இருக்கும் வெங்காயச் சருகு சிவப்புக் காகிதத்தை நீக்கினாள். மின்னிய வைர மோதிரத்தைப் பார்த்து முதலில் திகைத்து, பிறகு மகிழ்ச்சியில் துள்ள...வில்லை! ரீத்துவின் கண்களில் எப்போதும் தெரிகிற சோகம் ரெண்டு வீசை கூடிப்போனது.

www.t.me/tamilbooksworld

என்னை நிமிர்ந்து பார்த்தவள், ''இதற்குப் பெயர் பிறந்த நாள் பரிசா? இல்லாட்டி, நீ கொடுக்கிற நிச்சயதார்த்த மோதிரமா?'' என்றாள்.

எனக்கே அப்போதுதான் உறைத்தது. 'ஓ, அப்படி ஒண்ணு இருக்கோ?'

''ஆமா ரீத்து. 'ப்ரப்போஸ்' பண்ணத்தான்! நீ என்னைக் கல்யாணம் பண்ணிப்பியா?''

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

பார்க்கின் வெளியே விரையும் வாகனங் களை வெறித்தாள். ''எனக்கு ஏற்கெனவே கல்யாணத்துக்கு நிச்சயமாகிருச்சு விஜய்!''

''ஹேய், சும்மாதானே கலாய்க்கிறே?''

www.t.me/tamilbooksworld

''நிஜமாவே சொல்றேன்! உத்தரப் பிரதேசத்துல இருக்கிற ராஜ குடும்பத்துப் பையன் கன்வர் இந்தர் சிங்... அவன்தான் தனக்கு மருமகனா வரணும்னு எங்க அப்பா முடிவு பண்ணிட்டார். குறைஞ்ச பட்சம் ஒரு டிகிரி வாங்குற வரையாச்சும்கல்யாணம் வேண்டாம்னு போராடினேன். 'அப்ப நிச்சய தார்த்தத்தை மட்டுமாவது இப்ப முடிச்சிடு வோம்'னு நடத்திட்டாரு அப்பா!''

''உனக்கு மாப்பிள்ளையைப் பிடிச்சிருக்கா ரீத்து?''

''பணமும் பகட்டும் மட்டும் அவனுக்கு இருந்தா பரவா இல்லையே... எங்க அப்பாவுக்கும் அண்ணனுக்கும் இருக்கிற அதே வெறித்தனம் அவனுக்கும் இருக்கு. நிச்சயதார்த்தம் நடந்த அன்னிக்கே அவன் என்கிட்டே நடந்துகிட்ட விதம் அவ்ளோ வலி உண்டாக்கிடுச்சு.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

அம்மாகிட்டே சொல்லி அழுதேன். அவங்கதான், படிப்பு முடியற வரையாவது ஒரு மாற்றம் இருக்கட்டும்னு போராடி, என்னை லக்னோவில் இருந்து டெல்லி காலேஜில் கொண்டாந்து சேர்க்க பெர்மிஷன் வாங்கினாங்க. ஆனாலும், அப்பப்ப லக்னோ போகும்போதெல்லாம் அந்த கன்வர் இந்தர் சிங் என்னைத் தேடி வந்து கொடுக்கிற டார்ச்சர் தாங்கவே முடியலை!''

என் தேகம் நெருப்புக் குழம்பானது.

''அப்ப எதுக்காக யோசிக்கிறே ரீத்து? இந்த நிமிஷமே, இப்படியே என்கூட வந்திடு! நான் உன்னை ராணி மாதிரி வெச்சுக் காப்பாத்தறேன். ஏற்கெனவே நான் எல்லா ஏற்பாடும் பண்ணிட்டேன்!''

www.t.me/tamilbooksworld

ரீத்து என்னை கலவரமாகப் பார்த்தாள். ''வேணாம் விஜய். உனக்கு எங்க குடும்பம்பத்தித் தெரியாது... எனக்கு நிச்சயம் ஆகியிருக்கிற கன்வர் இந்தர் சிங் ஃபேமிலிபத்தியும் தெரியாது. உன்னாட்டம் ஒரு பையன் என் வாழ்க்கையில வர்றான்னு தெரிஞ்சாலே போதும். முடிஞ்சது உன் கதை!''

''எனக்கும் சப்போர்ட் பண்றதுக்கு ஆள் படை இருக்கு! என் மேலே கை வைக்கட்டுமே... பார்க் கலாம்!'' என்று தலை உலுக்கி, சட்டைக் கையை மடக்கி நான் சிலுப்பினேன்.

ரீத்து என் தோளைத் தொட்டுத் திருப்பினாள். ''என் குடும்பம்பத்தித் தெரிஞ்சுக்கணும்னு நீ ஆசைப்பட்டியே... இப்ப சொல்றேன் கேளு! என் அப்பா யாரு தெரியுமா? உத்தரப் பிரதேச உள்துறை அமைச்சர் ஜெகன்னாத் ராய்!''

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*எலெக்ட்ரிக் டிரான்ஸ்ஃபார்மரில் சிக்கிய காக்கா போல் ஆனேன். ''ஜெகன்னாத் ராயா? உ.பி. முதலமைச்சருக்கே சவால்விடுற சக்தினு சொல்வாங்களே... மாஃபியா கும்பலை வெச்சுக்கிட்டு எதையும் சாதிக்கிற டெரர் லீடர்னு சொல்வாங்களே... அந்த ஜெகன்னாத் ராயா உங்க அப்பா?'' - நாக்கு ஒட்டிக் கொண்டது.*

*''ம்...!''*

*''நீ மெஹ்ரூலி ஏரியாவுல தங்கியிருக்கிறதா சொன்னியே... அது..?''*

*''கேள்விப்பட்டிருப்பியே.... விவேக் விக்கி ராய்! என்னோட சொந்த அண்ணன். அவனோட பங்களாவுலதான் இருக்கேன்! 'நம்பர் சிக்ஸ்'னு சொன்னாலே, அந்த ஏரியாவுல எல்லோருக்கும் தெரியும்... அந்த பங்களாதான்!''*

www.t.me/tamilbooksworld

*''ரூபி கில் அப்படினு ஒரு அப்பாவிப் பொண்ணைக் கொன்னுட்டு... அந்த வழக்கில் இருந்து சுலபமா தப்பிச்சு வந்தானே... அந்த விவேக் விக்கி ராயோட தங்கச்சியா நீ?''*

*ரீத்து துவண்டு என் தோளில் சரிந்தாள்.*

*''அந்த கேஸ்ல எங்க அண்ணன் விடுதலை ஆனதுக்கு அப்புறம், ஊரே எங்க குடும்பத்துக்கு சாபம்விடுது விஜய்! அந்தக் குடும்பத்துல ஏன்தான் பொறந்தேனோன்னு அவமானமா இருக்கு. ஈவு இரக்கம் இல்லாம அடுத்தவங்க சொத்துகளை அபகரிக்கிறது... மனசாட்சியைக் கொன்னுட்டு உயிர்களைப் பறிக்கிறதுனு பாவக் கணக்கை ஏத்திக்கிட்டே போறாங்க என் அப்பாவும் அண்ணனும். என் அம்மாவும் நானும் எவ்வளவோ அழுது கெஞ்சியும் அவங்க மாறுற வழியாத் தெரியலை.*

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

என்னை மாதிரியே என் அம்மாவும் நடைபொணமாத்தான் நடமாடிக்கிட்டு இருக்காங்க!'' என்று கதறினாள்.

நான் அவள் கண்ணீரில் உதடு பதித்தேன். ''அழாதே ரீத்து. இனி அவங்க யாருமே உனக்கு வேணாம். நான் இருக்கேன்!''

''இவ்ளோ சொல்றேனே... இதுக்கு அப்புறமும் நீ என்னைக் கல்யாணம் பண்ணிக்கிற ஐடியாவில்தான் இருக்கியா விஜய்?'' - விசும்பலின் ஊடே வியப்பு காட்டினாள் ரீத்து.

நான் மூச்சை ஆழமாக இழுக்கிறேன். ''நீ உன்னைப்பத்தி எல்லாமே சொல்லிட்டே... இதுக்கப்புறமும் உன்கிட்டே சில விஷயங்களை நான் மறைக்கிறது பாவம். ஒளிவு மறைவு இல்லாம இருக்கிறதுதான் நம்ம காதலுக்குச் செய்யுற நிஜமான மரியாதை. இப்ப நான் சொல்றதைக் கேளு. அதுக்கு அப்புறம் நீதான் சொல்லணும்... நாம கல்யாணம் பண்ணிக்கலாமா, வேண்டாமானு!''

www.t.me/tamilbooksworld

ரீத்து காத்திருந்தாள்.

என் பேர், சாதி, அந்தஸ்து... அவளிடம் நான் சொல்லிவைத்த எதுவுமே உண்மை இல்லை என்பதைப் போட்டு உடைத்தேன். ரீத்துவின் விழிகளில் உக்கிரம்! மாறி மாறி என் கன்னத்தில் அறைந்தாள். மறுபடியும் விசும்பத் தொடங்கினாள். ''அப்போ நீ விஜய் சிங் தாக்கூர் கிடையாது. உன் பேர் முன்னா... அப்படித்தானே! ஏண்டா என்னைச் சுத்தி எல்லாருமே இப்படி அயோக்கியனுங்களா வந்து வாய்க்கறீங்க? அப்ப நீ யாரு? இத்தனை தூரம் எனக்காக செலவு பண்றியே... ஏது இந்தப் பணம் எல்லாம்?'' - என் சட்டை காலரைப் பிடித்து உலுக்கினாள்.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

தூய காதலன் தன் அடிப்படை அடையாளங்களை மறைக்கக் கூடாது என்கிற அளவுக்கு நான் தர்மம் காத்துவிட்டேன். ஆனால், நான் ஒரு மொபைல் திருடன் என்பதையோ, சூட்கேஸில் கிடைத்த பணத்தைத்தான் இப்படி 'ஜல்சா' பண்ணிக்கொண்டு இருக்கிறேன் என்பதையோ அவளிடம் இப்போதைக்கு சொல்ல வேண்டாம் என்று அறிவு தடுத்தது.

''அட்டைப் பெட்டி தயாரிக்கிற கம்பெனிக்கு நான் ஓனர்னு சொன்னது பொய். அங்கே நான் மேனேஜரா இருக்கேன்!''

இப்போது இன்னும் ஆழமாக என்னை ஊடுருவுகிறாள்.

''அப்படின்னா இந்த வைர மோதிரம் வாங்க உன்கிட்டே ஏது காசு? திருடினியா... கொள்ளை அடிச்சியா... சொல்லு!''

www.t.me/tamilbooksworld

நான் மிச்சம் வைத்திருந்த அந்த ஒரு பொய் இன்னொரு பொய்யைக் குட்டி போடவைத்தது. ''மன்னிச்சிடு ரீத்து. இது ஒரிஜினல் வைரம் இல்லை. டூப்ளிகேட்! இதுக்குப் பேரு கியூபிக் ஸிர்கோனியம்!'' - கடைக்காரப் பெண் சொன்னது இங்கே உதவியது.

''எதுக்கு முன்னா... ஏன் இப்படி? என்னைப்பத்தி நீ என்னதான் நினைச்சே? இப்படி ஒரு போலி வைரத்தை தங்க மோதிரத்தில் பதிச்சுக் கொடுக்கணும்னாகூட, உன்னோட ஒரு மாச சம்பளத்தில் பாதி போயிருக்குமே... இதெல்லாம் கொடுத்துதான் உன் காதலை நீ நிரூபிக்கணுமா?'' - மறுபடி கண்ணீரால் என் சட்டையை நனைத்தாள். கூடவே,

''அப்ப அன்னிக்கு ஃபைவ் ஸ்டார் ஹோட்டல்ல என்கிட்டே சண்டை போட்டு பில் கொடுத்தியே... அதுவும் நீ மாசம் பூரா ரத்தம் சிந்தி

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*உழைச்ச காசுதானே? ஒரு பொண்ணை இம்ப்ரெஸ் பண்ணுறதுக்காக இப்படி பந்தா காட்டி, உன் அம்மாவையும் தங்கச்சியையும் பட்டினி போட்டியா?'' என்று கேவினாள்.*

*''லட்சமும் கோடியும் எனக்கு வேணாம் முன்னா! பொய்யும் பித்தலாட்டமும் துரோகமும் இல்லாத ஒரு வாழ்க்கை இருந்தா... அதுவே போதும். இப்பவாச்சும் உண்மையைச் சொன்னியே... அது போதும்டா எனக்கு!''*

*முத்தங்களால் என் கன்னத்தை நனைத்தாள் ரீத்து.*

*''நம்ம நட்பு தொடருமானு கேட்டியே... அதுக்கு இதாண்டா பதில்!'' என்றவள், என் மீது தூக்கி எறிந்த மோதிரப்பெட்டியைத் திரும்பவும் வாங்கிக் கொண்டாள். அதில் இருந்த மோதிரத்தை எடுத்து தன் மார்பு உள்ளாடைக்குள் நழுவவிட்டாள். ''உன்னோட நிச்சயதார்த்த மோதிரத்தை ஊர் உலகத்துக்குத் தெரியுற மாதிரி என்னாலே போட்டுக்க முடியாது. நேரம் வர்ற வரைக்கும் இது என் இதயத்துக்குப் பக்கத்திலேயே இருக்கட்டும்!''*

www.t.me/tamilbooksworld

*அணைத்துக்கொண்டாள் ஆசை ஏஞ்சல்.*

*எத்தனை நேரம் கட்டுண்டு இருந்தோமோ... யானையின் துதிக்கை ஒன்று என் தோளை அழுத்தி முறித்தபோது வலி பொறுக்காமல் நிஜ உலகம் மீண்டேன்.*

- தொடர்ந்து சந்தேகிப்போம்...

Copyright © Vikas Swarup 2008

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

## மோட்டிவ் 6

### காதல் சடுகுடு...

என் முதுகை அமுக்கியது யானை அல்ல... முறுக்கு மீசையோடு கனல் தெறிக்கக்காட்சி தந்தவன் ராம்சிங்! ரீத்துவின் துப்பாக்கி பாடிகாட்! இன்னொரு கையால் ரீத்துவை இழுத்தான்.

www.t.me/tamilbooksworld

“பாப்பா... உன்னை இப்படி ஒரு நிலைமையில் பையாஜி மட்டும் பார்த்திருந்தா, என்ன நடந்திருக்கும் தெரியுமா? அப்பாவும் அம்மாவும் பிறந்தநாள் கேக்கோட வீட்டுல காத்திருக்கிற நேரத்துல, நீ செய்யக்கூடிய காரியமா இது?” என்றபடி அவளை மூட்டை கட்டித் தூக்காத குறையாக இழுத்துச் சென்றான் ராம்சிங். சற்று தூரம் போனதும் அழுத்தமாக ஒரு தடவை என்னை முறைத்தான். ‘மவனே, வெச்சுக்கறேண்டா உன்னை!’ என்பதாக என்னை ஏற இறங்க அளந்து... கண்களால் போட்டோ பிடித்தான்.

கூலிக்கு மாரடிக்கிற மெய்க்காப்பாளனுக்கே இத்தனை கோபமும், வெறியும் இருந்தால்... ரீத்துவின் அப்பாவும் அண்ணனும் என்னை என்ன செய்வார்கள்!

உஷார்டா முன்னா... உஷார்!

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*இனி ரீத்துவைப் பார்க்க முடியும் என்ற நம்பிக்கையே போய்விட்டது. என் காதல் அந்த பார்க்கிலேயே புதைக்கப்பட்டது என்ற முடிவோடு நான் வீடு திரும்பிய அதே மாலை, எங்கள் குடிசைக்குப் பக்கத்தில் இருக்கிற குல்மொகர் மரத்தடியில் என் வளர்ப்புத் தங்கை சம்ப்பி, ஒரு நெட்டை ஆளோடு நின்று பேசிக்கொண்டு இருப்பதைப் பார்த்தேன். அட்டைக்கரியாக இருந்தான் அவன். பேச்சே திக்கித் திக்கி வந்தது. அவனுக்கு என்னைத் தெரியாது. சம்ப்பிக்கோ இரண்டு கண்ணும் கிடையாது. நான் கண்டும் காணாததுபோல அவர்ளைத் தாண்டிக் குடிசைக்குள் வந்துவிட்டேன்.*

*மறுநாள் காலை, ''யாரு சம்ப்பி, நேத்து நீ பேசிட்டு இருந்தியே?'' என்றேன்.*

*சம்ப்பியின் பார்வையற்ற கண்களின் இமைகள் பட்டாம் பூச்சியாகப் படபடத்தன. ''நீயும் பார்த்தியா அவரை. நம் குடியிருப்புக்குப் பக்கத்துலதான் இருக்காரு. என் ஃப்ரெண்டு'' என்றவள், துளி மௌனம் காத்து, ''அவரு பார்க்கறதுக்கு எப்படி இருக்காரு முன்னா?'' என்றாள் வெட்கத்தோடு!*

www.t.me/tamilbooksworld

*புரிந்தது எனக்கு.*

*''கறுப்பா... உயரமா... நல்லாத்தான் இருக்கான்!''*

*சம்ப்பி முகத்தில் அரும்பிய புன்னகை எனக்கொரு சந்தோஷத்தைக் கொடுத்தது. 'பொண்ணே... உன் ஆளு தென்னை மரத்துல பாதியா, கோமாளி மாதிரி இருக்கான்' என்று சொல்லி அவள் காதலைக் கெடுக்க விருப்பம் இல்லை. அவள் குறைகள் தெரிந்தும், கைப்பிடிக்க ஒருத்தன் கிடைத்தால் சரி!*

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*அடுத்த வாரம் பூரா ரீத்து கூப்பிடவே இல்லை. என் வலி கூடிக்கொண்டே போனது. திடீரென்று அவள் ஃப்ரெண்டு மாலினி அழைத்தாள்.*

*''முன்னா! ரீத்துவை பயங்கரமா காவல் போட்டு வீட்டுல அடைச்சு வெச்சிருந்தாங்க. நான் எப்படியோ பொய் சொல்லி கொஞ்ச நேரத்துக்கு வெளியே கூட்டி வந்திருக்கேன். வெஸ்ட் எண்ட் ஏரியாவுக்கு உடனே வா. உன்கிட்டே அவ அவசரமா ஏதோ சொல்லணுமாம்.''*

*அட்ரஸைக் குறித்துக்கொண்டு டாக்ஸியில் பறந்தேன். தள்ளித் தள்ளி வீடுகள் இருந்த ஒதுக்குப்புற ஏரியா... வீட்டு வாசலிலேயே நின்றிருந்த மாலினி என்னை உள்ளே கூட்டிப்போனாள்.*



tamilbooksworld

*அங்கே ஓர் அறைக்குள் இருந்த ரீத்து என் குரல் கேட்டு ஓடி வந்தாள். பார்த்ததும் நொறுங்கிப் போனேன். கன்னம் கிழிந்து வீக்கம் கண்டிருந்தது. நெற்றியில் நீளமாகக் காயம்... தையல் போட்டு இருந்தது. கண்களைச் சுற்றி மைபோல கருவளையம்!*

*நொண்டி நொண்டி நடந்துவந்து என் மீது மொத்தமாக விழுந்தாள் ரீத்து.*

*''ஐயோ ரீத்து... என்ன ஆச்சு உனக்கு?''*

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

''அன்னிக்கு எல்லாத்தையும் ராம்சிங் வீட்டுல சொல்லிட்டான், முன்னா. என் பிறந்த நாள் என்கிறதால், அப்பா என்னை அடிக்காமவிட்டாரு. ஆனா கத்தித் தீர்த்துட்டாரு. ராத்திரி அண்ணன் வீட்டுக்கு வந்ததும் அவன்கிட்டே எல்லாத்தையும் சொல்லிட்டாரு. அவன்தான்... அவன்தான் என்னை...''

''யாரு.... அந்த நாய்ப்பயல் விக்கி ராய்தான் இப்படி காட்டுத்தனமா அடிச்சானா? இப்ப அவன் எங்கே இருக்கான் சொல்லு! அவனைக் கொன்னு புதைக்காம விடறதில்லை இன்னிக்கு!'' என்று வீறிட்டு அலறினேன். ரீத்துவின் ஒவ்வொரு துடிப்பும் எனக்குள் வலியாக இறங்கியது.

''என் மொபைல் போனையும் பிடுங்கிட்டாங்க, முன்னா. நல்லகாலமா மாலினி வந்தா வீட்டுக்கு. சாக்குபோக்கு சொல்லி அவளோட வர முடிஞ்சது! உன்னை உஷார்ப்படுத்தத்தான் வந்தேன், முன்னா. நமக்குள்ளே காதல் எல்லாம் வேணாம். அது நடக்காது. நீ நல்லா இருந்தா, அதுவே போதும். போயிடு முன்னா... என்னைப்பத்தி இனிமே யோசிக்காதே! டெல்லி போலீஸிலும் அவங்களுக்கு இல்லாத ஆள்கிடையாது. அவங்க எப்படியாச்சும் உன்னைத் தேடிக் கண்டுபிடிச்சுடுவாங்க...''

www.t.me/tamilbooksworld

வாய்மொழிதான் விலக்கியதே தவிர, ரீத்துவின் கரங்கள் என்னை இறுகத் தழுவியிருந்தன.

''ரீத்து... உன்னை இந்த நிலைமையில விட்டு எப்படி நான் போவேன்? உன் உயிருக்கு ஏதாச்சும் ஆயிடுமோனு பயமா இருக்கு ரீத்து!'' என்று கதறினேன்.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*''இல்லே முன்னா... என்னை அவங்க ஒண்ணும் பண்ணமாட்டாங்க. என்னை நிச்சயம் பண்ணி இருக்காங்களே மாப்பிள்ளை... அவனோட குடும்பத்தை வெச்சு, உ.பி. அரசியலில் என் அப்பாவும் அண்ணனும் பெரிசா காய் நகர்த்தப்போறாங்க. அதுக்கு அவங்களுக்கு நான் உசுரோட வேணும். என்னை அந்த கன்வர் இந்தர் சிங் கையில பத்திரமா புடிச்சுக் கொடுத்தே ஆகணும் அவங்களுக்கு! அதுக்காகவாவது இனி என்னை ஒண்ணும் செய்ய மாட்டாங்க!''*

*''நீ இப்பவே என்னோட வந்துடு ரீத்து! கண்காணாம எங்காச்சும் ஓடிப் போயிடலாம். யாருக்கும் இது வரைக்கும் நான் யாருன்னு தெரியாது. என் வீடும் தெரியாது. இந்த உலகம் ரொம்பப் பெரிசு ரீத்து'' - நான் சொல்லிக்கொண்டு இருக்கும்போதே என் மொபைல் போன் அடிக்கிறது. புது போனை வாங்கிய பிறகு, ரீத்து தவிர ஒருத்தருக்கும் நான் என் நம்பரைக் கொடுக்கவில்லை. ஸ்கிரீனில் தெரிந்தது முற்றிலும் புதிய நம்பராக இருந்தது.*

www.t.me/tamilbooksworld

*பட்டனைத் தட்டி காதில் வைத்தேன். செல்போன் குலுங்கியது-*

*''அடிங்... யாருகிட்டே வந்து விளையாடுறே? என் தங்கச்சியோட இனி உன்னைப் பார்த்தேன்... பன்னி அறுக்கிற மாதிரி துண்டு துண்டா அறுத்து என் பண்ணையில் இருக்கிற நாய்களுக்குத் தீனியாப் போட்டுடுவேன்! புரியுதாடா திருட்டுத்...'' என்று மறுமுனை பிழம்பு கக்க...*

*''ஹலோ! ஹலோ... யாரு?'' என்று குரல் உடைந்தேன்.*

*''நான்தாண்டா... அவளோட அண்ணன் விவேக் விக்கி ராய்!''*

*படக்கென்று அறுந்தது இணைப்பு.*

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

ரீத்து, ''பேசினது என் அண்ணன்... ரைட்டா முன்னா?'' என்றாள் திகிலோடு.

''ஆமா... ஆனா, அவனுக்கு எப்படி என் நம்பர் தெரியும் ரீத்து?''

''அவங்கதான் என் மொபைலைப் பிடுங்கி வெச்சுக்கிட்டாங்களே... அதில் இருந்து கண்டுபிடிச்சிருப்பாங்க!'' என்று வெடவெடத்தவள், ''இனி உன்னை அவங்க ஈஸியா தேடி வந்திடுவாங்க. இப்ப நமக்கு இருக்கிற ஒரே வழி நீ சொன்ன மாதிரி ஓடிப் போயிடறதுதான்!'' என்று பரபரத்தாள்.

''ஆமா ரீத்து... இந்த நிமிஷமே நான் தயார்.''

''எங்கே போவோம்?''

www.t.me/tamilbooksworld

''எங்கே வேணாலும்..! உன்னை நல்லபடி வெச்சுக்காப்பாத்த என் கிட்டே பணம் இருக்கு!''

''ஏது முன்னா... எப்படி?''

''எல்லாம் அப்புறம் சொல்றேன் ரீத்து! நீ கிளம்பு போகலாம். நாம ஓடி ஒளிஞ்சாலும் கண்டுபிடிக்க முடியாத பெரிய சிட்டின்னா... அது மும்பைதான்!''

ரீத்து இப்போது யோசித்தாள். ''ஒண்ணு செய்வோம்! மார்ச் 23-ம் தேதி என் அண்ணன் தன்னோட பண்ணை வீட்டுல ஒரு பெரிய பார்ட்டி வெக்கிறான். ரூபி கில் கொலை கேஸில் தப்பி வந்ததுக்கு! அன்னிக்கு அவனோடதான் என் அப்பாவும் இருப்பாரு. அவங்க ரெண்டு பேர்

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*கவனமும் பார்ட்டியில இருக்கும்போது தப்பிச்சுப் போனாத்தான்... சுதாரிக்கிறதுக்குள்ளே வெகு தூரம் போய்ச் சேர முடியும்!'' என்று அவள் சொன்னதும் எனக்கு சரியாகவே பட்டது!*

- தொடர்ந்து சந்தேகிப்போம்...

Copyright © Vikas Swarup 2008

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

# மோட்டிவ் 6

## விதி வீசிய வாள்!

38

மார்ச் 23 அன்று 'கொலைகார நிரபராதி'யான தன் அண்ணன் கொடுக்கிற பார்ட்டியைக் குறிப்பிட்ட ரீத்து, அதுதான் நாம் சந்தடி இல்லாமல் மும்பைக்கு ஓடிப் போக உகந்த நாள் என்று சொன்னபோது, 'அது சரி' என்றே பட்டது எனக்கு.

www.t.me/tamilbooksworld

"அப்படின்னா... மார்ச் 23-ம் தேதி ராத்திரி மும்பை கிளம்புற டிரெயினில் டிக்கெட் எடுத்துவெச்சிடவா?" என்றேன் அவசரமாக.

ரீத்துவின் தோழி மாலினி, "விடியற்காலை அஞ்சரை மணிக்கு பஞ்சாப் மெயில் கிளம்புறதா எனக்கு ஞாபகம்!" என்றாள்.

"நல்லது! முன்னா, நீ 24-ம் தேதி விடியற்காலை கிளம்புற டிரெயினுக்கு டிக்கெட் எடுத்துடு. 23-ம் தேதி ராத்திரி 11 மணிக்கு என் அண்ணன் வீட்டுக்கு வந்திடு. அதுக்குப் பின்புறம் ஒரு கேட் இருக்குது! டாக்ஸியோடு தயாராக் காத்திரு. நேரா ஸ்டேஷனுக்குப் போகாம எங்காவது ஒளிஞ்சிருந்துட்டு, ரயில் கிளம்புற நேரத்துக்குப் போய் ஏறிடலாம்!" என்று கச்சிதமாகத் திட்டத்தைச் சொன்னாள் ரீத்து.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*ஆமாம், திட்டம் என்னவோ கச்சிதமாகத்தான் இருந்தது. ஆனால், விதி வேறு ஒரு திரைக்கதை வசனம் எழுதிவிட்டது!*

*ரயிலுக்கு டிக்கெட் ரெடி! ஆனால், என் அம்மா மற்றும் சம்ப்பி பற்றிய கவலை என்னை அரித்தெடுத்தது. அம்மாகூட கொஞ்ச நாளைக்கு நான் இல்லாமல் தாக்குப்பிடிப்பாள். ரெண்டு கண்ணும் இல்லாத சம்ப்பி?*

*சமீபகாலமாக அவள் சிரித்துப் பேசி மகிழ்ச்சி காட்டும் நெட்டை ஆளின் ஞாபகம் வந்தது. அவனோடுதான் தன் வாழ்க்கை என்ற முடிவுக்கு சம்ப்பி வந்திருந்ததாகவே தோன்றியது. கடைசியாக ரெண்டொரு தடவை அந்த நெட்டையோடு அவளைப் பார்த்தபோது, வாய்விட்டுக் கலகலவென்று சிரித்துக்கொண்டு இருந்தாள். அப்படி ஒரு சிரிப்பை அவளிடம் அதற்கு முன்பு நான் பார்த்தது இல்லை.*

*சொல்லாமல்கொள்ளாமல் காணாமல் போகக் கூடாது. அம்மா, சம்ப்பியின் மனம் நொறுங்கிப்போகும்.*

*''அம்மா, இன்னும் மூணு நாளில் நான் மும்பை போறேன்!'' என்றேன்.*

*''என்ன விஷயம் முன்னா.... புதுசா வேலை கிடைச்சிருக்குனு சொன்னியே... அது விஷயமாவா?''*

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

''இல்லம்மா... நான் கல்யாணம் பண்ணிக்கப்போறேன்!''

அம்மாவின் புருவம் சுளித்து, ரிலாக்ஸ் ஆனது.

''யாருடா பொண்ணு? அதையாச்சும் எங்களுக்குச் சொல்லுவியா?''

''அவ பேரு ரீத்து!''

''அவ மும்பையில இருந்து இங்கே வந்தவளா?''

''இல்லே... இதே மெஹ்ரூலி ஏரியாவுல இருக்கிறவதான்!''

''ஓ! மெஹ்ரூலியில் ஏதாச்சும் வீட்டுல பத்து பாத்திரம் தேய்க்குறாளா?''

www.t.me/tamilbooksworld

''இல்லம்மா... அந்த பங்களாவுக்கே அவதான் இளவரசி. சொல்லப்போனா, நம்ம நாட்டுல இருக்கிற பெரிய பணக்காரக் குடும்பங்களில் அவ குடும்பமும் ஒண்ணு!''

''போடா முன்னா... உனக்கு எப்பவுமே விளையாட்டுதான்!''

''நிஜமாத்தாம்மா சொல்றேன். நானும் அவளும் மும்பைக்கு ஓடிப்போறோம். அங்கே போய் நான் செட்டில் ஆனதும் தகவல் அனுப்புறேன்... நீயும் சம்ப்பியும் அங்கே வந்திடுங்க. சம்ப்பிக்கு மும்பையில்தான் கண் ஆபரேஷன். ஜம்முனு கல்யாணம் பண்ணிக்கிட்டு அவளும் நம்மோடத்தான் வாழப் போறா!''

''குழப்புறியேடா மகனே! பொண்ணு யாருனு சொல்லு!''

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

''நான் குழப்பலைம்மா... ஜெகன்னாத் ராய் தெரியுமா? உ.பி. மினிஸ்டர். அவரோட பொண்ணுதான்!''

இப்போது அம்மாவின் கைகள் அதிர்ந்து வாயைப் பொத்திக்கொள்கின்றன. ''ஈஸ்வரா! இதென்னடா கூத்து?''

''அம்மா... பதறாமக் கேளு! நீதானே 'கர்மா... கர்மா'னு புலம்பிக்கிட்டே இருந்தே. இதுவரைக்கும் நாம பட்ட அவஸ்தைக்கெல்லாம் எந்த கர்மா காரணமோ... அதே கர்மாதான் இனிமே நம்ம வாழ்க்கையை சூப்பரா மாத்தப்போகுது.''

''கிடையாதுடா முன்னா... கிடையாது! 'கர்மா' மறுபடி நம்மைக் கொண்டுபோய் அந்த கொலைகாரக் குடும்பத்துக்கிட்டே மாட்டிவைக்கப் போகுது... அதான் பாழாப்போன உன் காதல் ரூபத்துல இப்போ நடக்குது!''

www.t.me/tamilbooksworld

''என்னம்மா சொல்றே நீ?''

''டேய், நம்ம அப்பா எப்படி செத்துப்போனாருனு உனக்கு ஞாபகம் இருக்குதா? இந்த குடிசைக்கு வர்றதுக்கு முந்தி நாம பிளாட்பாரத்துலதான் இருந்தோம்... அதுவாவது உனக்கு ஞாபகம் இருக்குதா? ஒருநாள் ராத்திரி படுத்துக்கிடந்த நம்ம கூட்டத்து மேல, போதையிலே வந்து காரை ஏத்தினது யாருனு நினைக்குறே? நம்ம அப்பா ரத்த வெள்ளத்துல துடிச்சு, செத்துப்போனாரே... அதுக்குக் காரணம் யாருனு நினைக்குறே? அந்த ஜெகன்னாத் ராயோட புள்ளை விவேக் விக்கி ராய்தாண்டா!''

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

காலடியில் தரை கீழே இறங்குவது மாதிரி இருந்தது. மிகப் பக்கத்திலேயே பேசிக்கொண்டு இருந்த அம்மாவின் குரல் எங்கோ வெகுதூரத்தில் இருந்து ஒலிப்பதுபோல் மாறியது.

''ஆமாண்டா முன்னா... காரை ஓட்டின அந்த விவேக் விக்கி ராயை நேரில் பார்த்த யாரும் கோர்ட்டுக்கு வந்து சாட்சி சொல்லிடாதீங்கனு அந்த ஜெகன்னாத் ராயோட ஆளுங்க வந்து மிரட்டுனாங்கடா! மீசைகூட முளைக்காத வயசுல இருந்த அந்தப் பயலை, அந்த ராத்திரி நேரத்துலயும் தெருவிளக்கு வெளிச்சத்துல பளிச்சுனு பார்த்தவங்கள்ல நானும் ஒருத்தி. ஆனா, அந்தத் திமிரு புடிச்ச பணக் காரங்களை எதுத்து நான் என்னன்னு போயிடா சாட்சி சொல்றது? புத்தி தெரிஞ்சும் தெரியாத வயசுல உன்னையும் வெச்சுக்கிட்டு, அப்புறம் நான் எப்படி வாழ முடியும், சொல்லுடா?'' - நிறுத்திவிட்டு மூக்கைச் சிந்தினாள் அம்மா.

www.t.me/tamilbooksworld

''இதோ இப்ப இருக்கோமே... இந்த வீட்டைப் பிடிக்கிறதுக்கும், நாம வாழுறதுக்கும் பணத்தைக் கொடுத்ததே அந்த ஜெகன்னாத் ராய்தாண்டா! உன் அப்பன் ரத்தத்தை தெருப் புழுதியில ஊறவெச்சிட்டு, அதுக்கு விலையாத்தாண்டா இந்த வாழ்க்கையை நான் வாங்கிக்கிட்டேன். பக்கத்து சிவன் கோயில்ல வேலை செஞ்சு வர்ற காசுல வயித்தை வேணா கழுவிக்கலாம். ஆனா, காத்து மழைக்கு ஒண்டிக்க இந்த வீடு இல்லாம, உங்க அப்பாவோட துணையும் இல்லாம, நாம என்னடா ஆகியிருப்போம்? உன்னை டிகிரி வரைக்கும் படிக்க வெச்சிருக்க முடியுமாடா என்னால?'' - என் சட்டை காலரைப் பிடித்து உலுக்கினாள் அம்மா.

''இதோ பாருடா மகனே... நீ அந்த வீட்டுப் பொண்ணை இழுத்துகிட்டுப் போயி கல்யாணம் பண்றேன்னு சொல்றதை என்னால ஏத்துக்கவே முடியாது. நன்றி உணர்ச்சினு ஒரு வார்த்தை இன்னிக்கும்

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*நம்மளை மாதிரி ஏழைங்களாலதாண்டா உசுரோட இருக்குது. அதை என்னால சாகடிக்க முடியாது. நான் இப்பவே போறேன்... அந்த விவேக் விக்கி ராய் பங்களா எங்கே இருக்குதுனு எனக்குத் தெரியும். நேராப் போயி விஷயத்தை நானே அவன் கிட்டே சொல்றேன்!'' என்று அம்மா குடிசையில் இருந்து வெளியே போக... நான் சிறுத்தையாகப் பாய்ந்து அவளை உள்ளே இழுத்தேன். சம்ப்பி திக்பிரமை பிடித்தவளாக அத்தனையும் பார்த்துக்கொண்டு இருந்தாள்.*

*''தோ பாரும்மா... இந்தக் கல்யாணத்தை நீ நிறுத்திடலாம்னு நினைச்சா, அதைவிட முட்டாள்தனம் எதுவும் கிடையாது. அந்தப் பொறுக்கிப் பயல் விக்கி ராய் ஏற்கெனவே என்னை போன்லகூப்பிட்டு மிரட்டினான். நான் எங்கே இருக்கேன்னு கண்டுபிடிக்க அவனுக்கு ரொம்ப நேரம் ஆகாது. நாங்க ரெண்டு பேரும் மும்பைக்கு ஓடிப்போகத் திட்டம் போட்டிருக்கோம்னு தெரிஞ்சா, முதல்ல அவன் நீத்துவைத்தான் வெட்டிப் போடுவான். தேடி வந்து என்னையும் கண்ட துண்டமாக்கிடுவான். அதான் உனக்கு வேணுமா சொல்லு?''*

*தலையில் அடித்துக்கொண்டு அழுதாள் அம்மா. அப்பாவின் மரணத்துக்குப் பின்னால் இருப்பவனும் அதே கிராதகன்தான் என்பது தெரிந்து, பீஸ் பீஸாகியிருந்தேன் நான். விதி எப்படியெல்லாம் வாள் வீசுகிறது!*

www.t.me/tamilbooksworld

- தொடர்ந்து சந்தேகிப்போம்...

Copyright © Vikas Swarup 2008

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

## மோட்டிவ் 6

### வீட்டுக்குள் வேட்டை நாய்கள்!

''டேய் விவேக் விக்கி ராய்! நீ என் அப்பாவை என்கிட்டே இருந்து நிரந்தரமாப்பிரிச்சே. பிச்சைக் காசு போட்டு எங்கம்மா வாயை அடக்கிட்டே! இப்ப நான் உன் தங்கச்சியைப் பிரிக்கப்போறேன்டா, உன் குடும்பத்துல இருந்து. நாங்க சந்தோஷமா வாழுவோம். நீயும் உங்கப்பனும் புழுங்கிப் புழுங்கிச் சாவுங்கடா!'' என்று கதறினேன் கூரையைப் பார்த்து.

www.t.me/tamilbooksworld

கூடவே, அடி மனசில்... அடி வயிற்றில் ஒரு குழப்பம் பிசைந்தெடுத்தது. வெள்ளைத் துணியில் பொட்டலம் மாதிரி கட்டிக்கிடந்த என் அப்பாவின் சடலம் கண்முன்னால் வந்தது. போலீஸ் இன்ஸ்பெக்டர் அடித்துக் கொன்ற என் நண்பன் லல்லானின் பிணமும் பொட்டலமாக என் முன் வந்தது. திடீரென்று பிரமாண்ட பங்களாவின் பளிங்குத் தரையில் கண்ணாடிப் பெட்டிக்குள் ரீத்து கண் மூடிக்கிடந்தாள். குடிசைக்கு

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

வெளியே மர பெஞ்ச் போட்டு, மட்ட ரக மலர்களால் ஆன மாலை சூட்டி என் சடலம் கிடந்தது. திடுதிடுவென ஆட்கள் சூழ்ந்துகொண்டு ஓலமிட்டார்கள். யாரோ என் தலைமுடியைப் பற்றி இழுத்து, ''அடப் பாவி... இப்படி பண்ணிட்டியேடா'' என்று ஓல மிட்டார்கள்.

இல்லை... ஓலமிடவில்லை... யாரோ அடிக்குரலில் அதட்டுகிறார்கள். என் முடியைப் பற்றி இழுப்பதுகூட நிஜம்தான்!

''எந்திரிடா தே... ..லே!'' - என் அடி வயிற்றில் ஒரு ரீபோக் ஷூ அதிவேகமாக இறங்கி மீள்கிறது. குப்பென்று வாயில் ரத்தம் கசிய சுருண்டு தரையில் கிடக்கிறேன். சக்தி வாய்ந்த ஒரு டார்ச் லைட்டை என் கண்ணுக்கு நேராக அடிக்கிறான் ஒரு குண்டன். இன்னொருத்தன் என் முடியை மறுபடி இறுக்கமாகப் பற்றித் தூக்கி நிறுத்துகிறான்.

www.t.me/tamilbooksworld

வந்திருப்பது மூன்று பேர். ஒருத்தன் வழுக்கைத் தலையன். தாட்டியாக இருக்கிறான் இறுக்கமாக டி ஷர்ட் அணிந்து தொப்பையை இறுக்கி ஜீன்ஸ் போட்டிருக்கிறான். அடுத்தவன், குட்டை ஆசாமி... முழுக்கை சட்டையை பேன்ட்க்குள் இன் பண்ணி யிருக்கிறான். மூன்றாவது ஆள் ரொம்ப உயரமாக, சுருட்டை முடியாக, சதுர முகமாக!

''நீதானேடா மொபைல் முன்னா?'' - வழுக்கை மண்டையன் என் தலைமுடியைப் பற்றி உலுக்குகிறான்.

''ஏய், நீங்க யாரு?'' என்கிறேன் ரத்தத்தைத் துடைத்த படி.

''பிரிஜேஷ்... நீ சரியா பார்த்துச் சொல்லு!'' டார்ச்சை இன்னும் க்ளோஸாக என் முகத்தில் அடிக்கிறான்.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

பிரிஜேஷ் என்கிற சதுர முகத்தான் என்னை டைட் க்ளோஸப்பில் பார்த்துவிட்டு, ''இவனேதான். இந்த நாய்தான் என் கார்ல இருந்து மொபைல் போனை அடிச்சவன்!'' என்றான். இப்போது எனக்கும் ஞாபகம் வருகிறது. நான் அடித்த நூறாவது மொபைல் இவனுடையது. எதிர் முனையில் பணப் பெட்டிபற்றி உத்தரவிட்ட குரலும் 'பிரிஜேஷ்' என்றுதானே சொன்னது!

வழுக்கை மண்டையன், ''மொபைல் மட்டுமில்லே தம்பீ... எங்களோட இன்னொரு பொருளும் உன்கிட்டே இருக்கு!'' என்றான்.

''எடுய்யா கையை! நீங்க என்ன சொல்றீங்கனு புரியலை!''

''சூட்கேஸ் கிடைச்ச பிறகு சாருக்கு கொலஸ்ட்ரால் கூடிப்போச்சு! இவரு இப்படித்தான் சொல்வாரு... நீங்க சர்ச் பண்ணுங்கப்பா!'' என்று உத்தரவு பிறக்க.. மற்ற இருவரும் வீட்டை கவிழ்த்துப் போட ஆரம்பிக்கிறார்கள். டார்ச்சின் ஒளி வட்டம் வீட்டின் ஒவ்வொரு அங்குலமாக தடவிக்கொண்டே நகர, தட்டுமுட்டு சாமான்கள் அத்தனையும் உருவிக்கொண்டு விழுகின்றன. இறுதியாக அந்த மூலையில், கந்தலான தடித்த கார்ப்பெட் சுருட்டிக்கிடக்க... அதை உருவியதும் அடியில் சூட்கேஸ் சாதுவாக மின்னியது!

www.t.me/tamilbooksworld

விசில் அடித்தான் பிரிஜேஷ். ''சூப்பர்!'' சூட்கேஸை அவன் கையில் எடுத்த அதே சமயம்... காற்றுக்காக குடிசைக்கு வெளியே படுத்திருந்த அம்மா சத்தம் கேட்டு உள்ளே வந்தாள். ''யாருய்யா நீங்க? என்ன வேணும் உங்களுக்கு'' என்றவள், அவர்களின் பிடிக்குள் நான் கிடக்கிற நிலையைப் பார்த்துக் கூச்சலிட்டாள். சதுரமுகன் பிரிஜேஷ் சற்றும் யோசிக்காமல், தன் கையிலிருந்து டார்ச் லைட்டை ஓங்கி விசிறினான் அம்மாவின் முகத்தில். 'த்தட்'டென்று ஒரு சின்ன சத்தம். அம்மா சுருண்டு

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

விழுந்து உருண்டபோது அவள் கடைவாயில் இருந்தும் மூக்கு நுனியில் இருந்தும் ரத்தம் கொட்டியது. அந்த வயதிலும் தாக்குப்பிடித்து எழுந்து அவள் அழுகல் வார்த்தைகளில் சாபம்விட, குள்ளமாக இருந்தவன் தன் பாக்கெட்டில் இருந்து பளபளவென்று ஒரு பிஸ்டலை எடுத்து, அதைத் திருப்பிப் பிடித்து அம்மாவின் நடு மண்டையில் நச்சென்று இறக்கினான். சத்தம் நிறுத்திக் கொண்டு அவள் சரிந்து விழுந்தாள்.

இதற்குள் வழுக்கையன் தன் கையில் எடுத்த சூட்கேஸைத் திறந்து பார்த்துவிட்டு திருப்தியாகத் தலையாட்டினான். ''ரெண்டு மூணு கட்டுதான் குறையுது பிரிஜேஷ். மத்தபடிக்கு ஓகே!'' என்றபடி என்னைப் பார்த்து கேவலமாக இளித்தான்.

''எங்க பணத்துல கொஞ்சம் மஞ்சக் குளிச்சியா ராஜா?'' என்றபடி சதுர முகன் தன் துப்பாக்கியை நாடி என் மூக்கு நுனியில் அழுத்த... டிரிக்கரின் க்ளிக்கும் சத்தத்தைக் கேட்டுவிட்டு, உலகத்தில் இருந்து விடைபெற நான் தயாரானேன்.

www.t.me/tamilbooksworld

பூசியா வீட்டு கார்ஷெட்டில் எலிப்பாஷாணம் குடித்துவிட்டு, துப்பாக்கி முனைக்கு நேரே நொடிகளை எண்ணிய நிமிடங்கள் நினைவுக்கு வந்தது. டிரிக்கர் அழுத்துவதற்குள் வழுக்கையனின் செல்போன் அடித்து. ஜீன்ஸுக்குள் கைவிட்டு எடுத்தவன், நம்பரைப் பார்த்து பதற்றமானான். ''பாஸ்! யெஸ் பாஸ்! ஆளைப் புடிச்சிட்டோம். பெட்டியும் புடிச்சிட்டோம்...'' என்றபடி நடந்து கதவின் அருகில் போனான். அவன் பேசுவது நன்றாகவே காதில் விழுந்தது.

''என்னது? இப்பவேவா? ஓகே, பாஸ்... பிரிஜேஷும், நட்டுவும் இருக்கட்டும். நான் இப்பவே கிளம்பி அங்கே வர்றேன்!''

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

பிரிஜேஷ் என்கிற நெட்டை மற்றும் நட்டு என்கிற குட்டையிடம், ''பாஸ் அவசரமா வரச் சொல்றாரு. நான் கிளம்புறேன்... நீங்க இவனுக்கு செய்ய வேண்டிய மரியாதையை செஞ்சிடுங்க!'' என்ற வழுக்கை, துப்பாக்கியால் என்னைக் குறி பார்த்துவிட்டு, டிரிக்கரை அழுத்தாமல்... ''டிச்சூவ்'' என்று பொய்யாக சுட்டுவிட்டுப் புறப்பட்டான். வெளியே பைக் உதைத்து சீறும் சத்தம் கேட்டது.

''தம்பீ... நீ 'ஷோலே' படம் பார்த்திருக்கியா?'' என்றான் குட்டை. நான் கம்மென்று இருந்தேன்.

''கொள்ளைக்காரத் தலைவன் கப்பர் சிங் அந்தப் படத்துல தாக்கூர்கிட்டே கேப்பானே... 'உன் கையை எனக்குக் கொடுப்பியா?' அப்படினு! நான் உன்னைக் கேக்கறேன்... நீ முழுசாக் கையைத் தர வேணாம். உன் பத்து விரல்களை மட்டும் எனக்குக் குடுப்பியா?''

www.t.me/tamilbooksworld

நெட்டையன் என்னை நன்றாக அழுத்திப் பிடித்துக்கொள்ள, என் இடது கையின் ஆள்காட்டி விரலைப் பிடித்து பின்னால் மடக்கத் துவங்கினான் குட்டை. வலியில் நான் அலற ஆரம்பித்தபோது, கர்ச்சீப்பை எடுத்து என் வாயில் நெட்டை திணித்தான். பின்னோக்கி மிக அசாத்தியமான கோணத்தில் மடக்கப்பட்ட என் ஆள்காட்டி விரல், 'பட்'டென்றெ சத்தத்துடன் தன் எலும்பு இணைப்பைத் துண்டித்துக்கொண்டு துவண்டுபோக... அடுத்து என் நடுவிரலைப் பிடிக்குள் கொண்டுவந்தான் குட்டை. செய்கிற காரியத்தில் ரொம்ப சுவாரஸ்யம் ஏற்பட்டுப் போய், இடது கையில் கடைசியாக என் கட்டை விரலை பின்னால் வளைத்துக்கொண்டு இருந்தான் நட்டு. நான் வலியின் உச்சத்தைத் தொட்டு, ஒருவித நிச்சலனமான நிலை நோக்கிப் போனேன். கட்டை விரலின் 'கட்டக்' சத்தம் கேட்பதற்கு முன், குடிசையின் கதவு மறுபடி திறந்தது.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

''முன்னா... யாரு வந்திருக்காங்க? என்ன சத்தம்?'' என்றபடி, சுவரைத் தடவித் தடவி சம்ப்பி வந்தாள்.

பிறப்பிலேயே உருக்குலைந்த முகமும், மேலே செருகிய பார்வையற்ற விழிகளும் அழுக்கு உடையுமாக இருந்த அவளைப் பார்த்து பிரிஜேஷ் முகம் சுளித்தான். குட்டை நட்டுவோ, துப்பட்டா போடாத அவளின் மார்பை வெறித்தபடி விசிலடித்தான்.

''முன்னா மச்சான்... மேடம் யாரு... உன் தங்கச்சியா?'' - அவன் பார்வை மேய்ந்த விதம் கண்டு நான் பதறினேன். வாயைப் பொத்திய கர்சீப்பை வலுக்கட்டாயமாக விலக்கியபடி, ''இதோ பாரு... எதுவானாலும் என்னோடவே இருக்கட்டும். பாவம் அவ... ரெண்டு கண்ணும் தெரியாதவ!'' என்று அலறினேன்.

www.t.me/tamilbooksworld

''குருடுன்னா சொல்றே? எனக்கு அப்படித் தெரியலியே... சரி டெஸ்ட் பண்ணிப் பார்த்துடுவோமா?'' என்றபடியே, சம்ப்பியின் இடது மார்பை விரலால் சுண்டினான் நட்டு. நெருப்பு அள்ளிக் கொட்டிய மாதிரி துள்ளி நகர்ந்தாள்.

நான் நடுங்கி எச்சரித்தேன். ''இதோ பாரு... என் தங்கச்சி மேலே இன்னொரு தடவை விரல் பட்டாலும் உங்க ரெண்டு பேரையும் கொன்னு புதைக்காம விட மாட்டேன்!'' வயிற்றில் பூட்ஸ் காலால் உதைத்து, கன்னம் ஓட்டையாக்கும்படி ஒரு குத்துவிட்டான் நட்டு. மறுபடி பிரிஜேஷ் என் வாயை கர்சீப்பால் இறுக்கி, மற்றொரு கையால் ராட்சசத்தனமாக என்னை அமுக்கினான். சம்ப்பியைக் கீழே தள்ளி அவளுடைய வாயை ஒரு கையால் பொத்தினான் நட்டு. இன்னொரு கையால் சல்வாரை மேலே உயர்த்த ஆரம்பித்தான். சிங்கத்தின் கடிவாயில் சிக்கிய மான்போல... சத்தம் இல்லாமல் சலனம் காட்டினாள் சம்ப்பி.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

என்னோடு சேர்ந்து மொபைல் திருடிய குற்றத்துக்காக, போலீஸில் சிக்கிச்செத்து, சாக்கடை நதியின் ஓரம் புழுக்கள் நெளியக்கிடந்த என் நண்பன் லல்லான் ஞாபகம் வந்தது எனக்கு. இப்போது, சூட்கேஸ் பணத்தைக் கொண்டுவந்த என் குற்றத்துக்காக, என் உடன்பிறவாத தங்கை சூறையாடப்படுகிறாள்.

21 வருடங்களில் ஒருபோதும் நான் கடவுள் இருப்பதாக நம்பியதோ, வேண்டியதோ இல்லை. ஒருவேளை அப்படி ஒருத்தர் இருந்தாலும்கூட, ஏழைகள் கேட்டால் எதையும் தர மாட்டார் என்பதில் திடமாக இருந்தவன். முதல் தடவையாக இறைஞ்ச ஆரம்பித்தேன். 'இறைவா! நீ ஒருவன் உண்மையில் இருந்தால், இந்தத் தருணத்தை இதற்குமேலும் கோரமாக முன்னேறாமல் தடுத்து நிறுத்து!' என்று மனதுக்குள் மருகினேன்.

www.t.me/tamilbooksworld

பிரிஜேஷின் பிடியை பேய்த்தனமாக உதறித் தளர்த்தினேன். சம்ப்பியின் மீது பரவியிருந்த நட்டுவின் நடுமுதுகில் என் காலால் ஓங்கி மிதித்தேன். பின்புறத்தில் உதைபட்ட வெறிநாயாக, ஆக்ரோஷமாக என் பக்கம் திரும்பிய நட்டு, தன் பான்ட்டுக்குள் கையைவிட்டு நீண்டதொரு சைக்கிள் செயினை உருவி எடுத்தான்.

ஒரு முனையை நன்றாகக் கைகளில் சுற்றிக்கொண்டு, மறுமுனையை பலங்கொண்ட மட்டும் சுழற்றி என் முகம் நோக்கி வீசினான். மண்டை முழுக்க மின்னல் வெட்டு! 'இறைவா! நீ இருக்கிறாயா?' என்று இறுதியாக ஒரு தடவை இறைஞ்சினேன்.

சினிமாக்களில் வருகிற மாதிரி எந்தக் கோயில் மணியும் அடிக்கவில்லை. தரை பிளந்துகொள்ளவில்லை. ஒளிவெள்ளமாக ஒரு பிரமாண்ட பேரருள் உருவம் அங்கே தோன்றவில்லை.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

***இரண்டாவது சைக்கிள் செயினின் அடியும் என் மண்டை மீது விழுந்தது. நான் மெதுவாகச் சரிந்தபோது, குடிசையின் கதவை யாரோ மடேலென்று திறப்பது தெரிந்தது!***

- தொடர்ந்து சந்தேகிப்போம்...

Copyright © Vikas Swarup 2008

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

## மோட்டிவ் 6

மோட்டிவ் 6
SIX SUSPECTS
• விகாஸ் ஸ்வரூப் • தமிழில்: அஞ்சனா தேவ்

### தேவை ஒரு துப்பாக்கி..!

40

ஆஸ்பத்திரியில் நினைவு மீண்டபோது, இடது கையின் விரல்கள் அத்தனையும் தனித்தனியே பேண்டேஜ் மாட்டி, அதற்கு மேலே பாக்ஸிங் கிளவுஸ் மாதிரி டைட்டாக மூடியிருந்தது. பின்னந்தலையில் அபார வலி, கொக்கிபோட்டு இழுத்துக் கொண்டிருந்தது. இடது பக்கப் படுக்கையில் ஆழ்ந்த மயக்கத்தில் அம்மா! அருகில் சம்ப்பி... அழுது அழுது கண்கள் வீங்கிப் போய் இருந்தாள். என்னையே கவலையாகப் பார்த்துக்கொண்டு இருந்தவளின் கழுத்தில், ஸ்பாண்டிலிட்டிஸ் வந்தவர்களுக்கு மாட்டுகிற கூடு போட்டிருந்தது.

www.t.me/tamilbooksworld

''என்னாச்சு சம்ப்பி?'' என்கிறேன் தீனறலாக.

''தெய்வ கிருபை. பெரிய அதிசயம்தான் நடந்து உன்னையும் என்னையும் காப்பாத்தியிருக்கு!'' என்றாள்.

இதற்குள் டாக்டர் வருகிறார். ''தம்பீ... நீ பொழைச்சது பெரிய அதிசயம்பா! இடது கையில் எல்லா விரலுமே எலும்பு உடைஞ்சு போச்சு. இன்னும் ஆறு வாரத்துக்கு சின்னதா கூட அசைக்கக்கூடாது... புரியுதா?''

நான் தலையாட்டுகிறேன். ''அம்மா எப்படி இருக்காங்க, டாக்டர்!''

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

''பொழைச்சுக்குவாங்க!'' என்று சொல்லிவிட்டு, என் படுக்கையில் மாட்டியிருந்த சார்ட்டைப் பார்க்கிறார் டாக்டர்.

''எத்தனை நாளா நான் இங்கே இருக்கேன்?''

''ரெண்டு நாளா?''

''இதுக்கெல்லாம் எவ்வளவு ஃபீஸ் கட்ட வேண்டியிருக்கும் டாக்டர்?'' - சூட்கேஸை அந்த வேட்டை நாய்கள் கொண்டு போயிருக்கும் என்று எனக்குத் தெரியும்.

''நீங்க ஒண்ணும் கட்ட வேண்டியதில்லை. கடவுள் புண்ணியத்துல உங்க மூணு பேரையும் இந்த ஆஸ்பத்திரிக்குக் கொண்டாந்துட்டாங்க. இது பெரிய அறக்கட்டளை நடத்துற ஆஸ்பத்திரி. இதுவரைக்கும் எடுத்த எம்.ஆர்.ஐ. ஸ்கானிங், எலும்பு முறிவு சிகிச்சை, இங்கே இருக்குறதுக்கு பெட் சார்ஜ்... எதுவுமே நீங்க கட்ட வேண்டியதில்லை!''

www.t.me/tamilbooksworld

''ரொம்ப ரொம்ப தேங்க்ஸ் டாக்டர். இப்ப நான் வெளியே போகலாம், இல்லையா?''

''இப்போதைக்கு நீ எங்கேயும் நகரக் கூடாது!'' என்று டாக்டர் எச்சரித்ததையும் மீறி, தயாவதி மருத்துவமனையிலிருந்து கிளம்பி, எங்கள் குடிசைக்கு வந்துவிட்டேன். புயலடித்த பூமியாக அது இருந்தது. சுவரில் தொங்கிக்கொண்டிருந்த என் புதிய சட்டைப் பைக்குள் கைவிட்டு, மும்பை போவதற்காக எடுத்திருந்த முதல் வகுப்பு டிக்கெட்டுகளை எடுத்தேன். இனி ரீத்துவை நான் நினைப்பதில் என்ன அர்த்தம்? சூட்கேஸோடு சேர்த்து என் கனவுகளும் அல்லவா பறிபோய்விட்டன! காசில்லாமல் அந்த ராஜகுமாரியை நான் மும்பை என்கிற கான்கிரீட் காட்டுக்குள் வைத்து எப்படிக் காப்பாற்ற முடியும்?

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

சூட்கேஸை என்னிடமிருந்து பறித்துச் சென்ற கும்பலின் மீது எனக்குக் கோபமில்லை. ஆனால், விவேக் விக்கி ராயின் மீது வன்மம் பொங்கி வழிந்தது. 'என் காதலை மட்டுமல்ல... என் அப்பாவின் உயிரையும் பறித்தவன் அல்லவா அவன்! ரீத்துவோடு இனி நான் வாழ முடியாது என்று ஆனாலும்தான் என்ன... அந்த விவேக் விக்கி ராய் உயிரோடு இருக்கக்கூடாது!

நான் ஒரு துப்பாக்கி வாங்கப் போகிறேன், உடனே!'

பிர்ஜு பெஹல் வான் யார் என்று உங்களுக்குத் தெரியாது.

எனக்குத் தெரியும். எங்கள் ஏரியாவே அறிந்த பெரிய தாதா. ஜீன்ஸ் பேன்ட்டுக்கு வெளியே தெரிகிற மாதிரி துப்பாக்கி செருகிக்கொண்டு எங்கள் குடிசைப் பகுதி ஏரியாவுக்குள் பிர்ஜுவின் ஆட்கள் நடமாடுவதை நான் பல தடவை பார்த்திருக்கிறேன். அவன் ஆள் ஒருத்தன் எனக்கும் பழக்கம். அவனிடம் விசாரித்தேன். மங்கள்புரியில் ஒரு அட்ரஸ் தந்தான்!

/tamilbooksworld

வெளியிலே வேறெதுவோ ஒரு கடையாகத்தான் பளபளவென்று விளக்கு மின்னியது ஷோ ரூம். என்னை அனுப்பி வைத்த ஆளின் பெயரை, கவுன்ட்டரில் இருந்த ஆளிடம் சொன்னதும்.. ஷோரூமுக்குப் பின்னால் அரை இருட்டு வராண்டா வழியாக நடத்தி, மேலே மரப் படிகளில் ஏற்றிக் கூட்டிப் போனான். சின்னதொரு அறையில் கனமான இரும்புப் பெட்டியோடு அமர்ந்து, புகையிலை மென்று கொண்டிருந்த ஆள் முன் நிறுத்தினான். ''அவசரமா ஒரு

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

துப்பாக்கி வேணும்!'' என்றேன். என்னை அனுப்பி வைத்தவனுக்கு ஒரு போன் போட்டு உறுதி செய்துகொண்டவன், ''நாட்டுச் சரக்கு போதுமில்லே...'' என்று இரண்டு மூன்று வெரைட்டியான கைத்துப்பாக்கி களை எடுத்துப் போட்டான். ஒரே ஒரு ரவுண்டு மட்டும் குண்டு போட்டு சுடக்கூடிய துப்பாக்கியைக் காட்டி, ''ஆயிரத்துநூறு ரூபாதான். போதுமில்லே?''

''இன்னும் கொஞ்சம் உசத்தியா இருந்தாலும் நல்லது. என்கிட்டே நாலாயிரத்து ஐந்நூறு ரூபாய் வரைக்கும் காசு இருக்கு!'' என்றேன் பேன்ட் பாக்கெட்டைத் தடவிப் பார்த்து. ரீத்துவுக்கும் எனக்கும் புக் செய்திருந்த டிக்கெட்டை கேன்சல் செய்ததில், ரெயில்வே கிளர்க் கொடுத்த தொகை!

www.t.me/tamilbooksworld

வெண்ணெய் காகிதத்தில் சுற்றியிருந்த இன்னொரு துப்பாக்கியை இப்போது எடுத்தான். பேப்பரைத் திறந்து காட்டினான். நிகுநிகுவென்று கறுப்புப் பிசாசாக அது ஒளிர்ந்தது. ''சைனீஸ் மாடல் பிளாக் ஸ்டார் துப்பாக்கி மாதிரியே இருக்கும். ஆனா நாட்டுச் சரக்குதான்! ஆறு குண்டு சுடலாம். ஆனா, இதுல இப்போ அஞ்சுதான் இருக்குது. எக்ஸ்ட்ரா புல்லட்ஸ் என்கிட்டே இல்லியே!'' என்றான்.

கையில் துப்பாக்கியை வாங்கிப் பார்த்தேன். முதுகுத் தண்டு சிலிர்த்தது. கனமான அந்தத் துப்பாக்கியைத் தடவிக் கொடுத்தபோது, என்னோடு பத்து ஆள் சேர்ந்து நிற்கிற மாதிரி பலமாக உணர்ந்தேன்.

''அஞ்சு குண்டு இருக்கில்லே..? அதுவே அதிகம். எனக்கு ஒரு குண்டே போதும்!'' என்றேன். பேரம் பேசாமல் பணத்தைக் கொடுத்துவிட்டு வெளியில் வந்தேன் துப்பாக்கியுடன்.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

கூர்மையாக இதுவரை ஃபாலோ பண்ணி வந்த வாசகர்களுக்கு... விவேக் விக்கி ராயைக் கொல்ல வேண்டும் என்ற 'மோடிவ்' இந்த மொபைல் திருடன் முன்னாவுக்கு எப்படி வந்தது என்று இப்போது தெளிவாகி இருக்கும். இப்போது நாம் உள்துறை அமைச்சர் ஜெகன்னாத் ராயின் அந்தரங்க டெலிபோன் உரையாடல்களுக்குள் மறுபடியும் போவோம். பண்ணை வீட்டு பார்ட்டியில் விக்கியைப் படுகொலை செய்தது யார் என்பதற்கான அடுத்த 'மோடிவ்' இங்கே காத்திருக்கிறது உங்களுக்கு!

ஆபரேஷன் செக்மேட்!

''ஹலோ... உள்துறை செயலாளர் வீடா?''

''ஆமாங்க!''

www.t.me/tamilbooksworld

''இருக்காரா? உள்துறை அமைச்சர் உடனே பேசணுமாம்!''

''இதோ சார்... லைன் குடுக்கறேன்!''

பீப்... பீப்... பீப்...

''ஹலோ, கோபால் பாக்லே ஹியர்!''

''ஒரு நிமிஷம் சார்... மினிஸ்டர் லைன்ல வர்றாரு!''

''ஹலோ சார்... வணக்கம்.''

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*''என்னய்யா கோபால்... டோன்ச்சியோ... போன்ச்சியோ... ஏதோ ஒரு அமெரிக்க படம் ஓடுதாமே... அது பத்தி நீ கேள்விப்பட்டிருக்கியா?''*

*''சார்... அப்படி எதுவும் கேள்விப்படலீங்களே...''*

*''வின்ச்சிகோ அப்படின்னாவது கேள்விப்பட்டியா?''*

*''சார்... நீங்க சொல்றதைப் பார்த்தா, டாவின்ஸி கோட் படம் பத்தி சொல்ற மாதிரி தெரியுது!''*

*''ஆ... அதேதான்யா! அதேதான்! அந்தப் படத்தை உடனே உத்தரப் பிரதேசத்துல எங்கேயும் ஓடாம தடை பண்ணியாகணும்யா.''*

www.t.me/tamilbooksworld

*''சார்... அந்தப் படம் ரிலீஸ் ஆகி ரொம்ப நாள் ஆகுதுங்களே... போட்ட தியேட்டர்ல எல்லாம் இந்நேரம் தூக்கி இருப்பாங்க...''*

*''அதெல்லாம் எனக்குத் தெரியாது. கிறிஸ்துவ ஜனங்க எல்லாரும் அந்தப் படத்தால ரொம்ப கொதிச்சுப் போயிருக்காங்களாமே.... இயேசு கிறிஸ்துவைப் பத்தி ஏடாகூடமா ஏதோ கருத்து சொல்லியிருக்கானாமே அந்த அமெரிக்க சினிமாக்காரன்.''*

*''இருக்கலாம் சார்... ஆனா ஓடி முடிச்ச படத் துக்கு...''*

*''யோவ், நீ அதிகாரி. நான் அரசியல்வாதி. நீ காருன்னா, அதுக்கு நான் டிரைவர். நான் திருப்புற பக்கமெல்லாம் நீ கேள்வியே கேட்காம திரும்பி ஓடிக்கிட்டே இருக்கணும், புரியுதா? நம்ம உள்துறை மூலமாக உடனே ஒரு ஜி.ஓ. போடு! - அந்தப் படத்தை தடை பண்றதாக அறிவிச்சுடு! கிறிஸ்துவ சமுதாய மக்களின் மனம் புண்படுவதைத் தடுக்க*

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

அமைச்சர் ஜெகன்னாத் ராய் அவசர நடவடிக்கை அப்படினு எல்லா பேப்பர்லயும் நாளைக்கு முதல் பக்க நியூஸ் வரணும்!''

''..........''

''என்னய்யா பதிலையே காணோம்? என் தொகுதியில கிறிஸ்துவ ஓட்டு எவ்ளோ இருக்குதுனு உனக்குத் தெரியுமா? நாலு வரியில ஒரு ஜி.ஓ. போடலேன்னா, நாலு வார்டுல எனக்கு ஓட்டு துடைச்சிக்கினு போயிடும், புரியுதா?''

''சரி சார்!''

''இன்னொரு விஷயம்... அந்த போலீஸ் ஆபீஸர் நவ்னீத் ப்ரார் பத்தி உன்கிட்டே சொன்னது ஞாபகம் இருக்காய்யா? வர்ற மாசம் நடக்கப் போகிற போலீஸ் அணிவகுப்பு நிகழ்ச்சியில், அந்தாளுக்கு எந்த மெடலும் கிடைக்கக்கூடாது புரியுதா?''

www.t.me/tamilbooksworld

''சார்! அந்த ஆபீஸரோட சர்வீஸ் ரெக்கார்டை நேத்துதான் பார்த்தேன். இதுல ஒரு சிக்கல் இருக்கு... ரொம்பத் துடிப்பான ஆபீஸரா இருக்காருங்க. நிறைய சாதனை பண்ணியிருக்காரு. இந்தியா - நேபாள் பார்டர்ல ரெண்டு இடத்துல நக்ஸலைட் முகாம்களை வேட்டையாடி அழிச்சிருக்காரு. அப்படிப்பட்ட ஆபீஸருக்கு எந்த மெடலும் தராம, மத்தவங்களுக்குக் கொடுத்தா, அது போலீஸ் துறைக்குள்ளே பெரிய புகைச்சலை உண்டு பண்ணிடும், சார்...''

''யோவ் கோபால் போக்லே... இங்கே நீ மினிஸ்டரா? நானா?''

''நீங்கதான் சார்... ஆனா...''

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

''அந்த 'ஆனா'வை நீ சொல்லவே கூடாது... அதுக்குத் தான் உள்துறை செயலாளரா இன்னும் உன்னை உட்கார வெச்சிருக்கேன். சொல்றதை செஞ்சிட்டுப் போற வேற ஒரு ஆபீஸரை உன் ஸீட்டுக்கு கொண்டு வர்ற துக்கு... எனக்கு எத்தனை நேரம் ஆகும்? குழந்தைகள் நல்வாழ்வுத் துறைனு ஒண்ணு உருவாக்கி, உன்னை அங்கே போஸ்ட் பண்ணிடுவேன். பத்து பைசா பெயராது, பரவாயில்லையா?''

''ஸாரி சார். புரிஞ்சுது சார்!''

''அச்சா... அதான் வேணும்!''

டிரிங்... டிரிங்... டிரிங்...

www.t.me/tamilbooksworld

''ஹலோ, யாருய்யா அது?''

''பையாஜி... நான்தான் ஆலோக் அகர்வால் பேசறேன்!''

''அடேங்கப்பா... ரொம்பப் பெரிய பிஸினஸ்மேன் ஆச்சே... மூணு நாலு மாசத்துக்கு ஒரு தடவையாவது இந்த பாவப்பட்ட மினிஸ்டர் ஞாபகம் உனக்கு வருதே!''

''மன்னிச்சுக்கோங்க பையாஜி. பிசினஸ்ல நிறையப் பிரச்னை! பின்னாடி நெருப்பு வெச்ச மாதிரி ஓடிக்கிட்டே இருந்தாத்தான் தாக்குப்பிடிக்க முடியும். இப்பக்கூட ஜப்பானுக்கு ஒரு அவசர விசிட் போயிட்டு நேத்துதான் வந்தேன்!''

''குடுத்து வெச்சவங்கய்யா இந்த பிசினஸ் ஆளுங்க! நேத்து ஜப்பான், முந்தா நேத்து அமெரிக்கா, அதுக்கு முந்தி பாங்காக்னு போயி

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*உடம்புக்கு நல்லா மஜா ஏத்திக்கிட்டு வந்துடறீங்க. என்னை மாதிரி பொது சேவகர்கள் மட்டும் உள்ளூர்லயே கிடந்து இந்த நாறப் பசங்களுக்கு மத்தியில் லோல்பட வேண்டியிருக்குது!''*

- தொடர்ந்து சந்தேகிப்போம்...

Copyright © Vikas Swarup 2008

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

மோட்டிவ் 6

# மோட்டிவ் 6

SIX SUSPECTS

• விகாஸ் ஸ்வரூப் • தமிழில்: அஞ்சனா தேவ்

## துடிப்பான பொண்ணு... இனிப்பான பேட்டி...

உள்துறை அமைச்சர் ஜெகன்னாத் ராயுடன் தொழிலதிபர் ஆலோக் அகர்வால் உரையாடல் தொடர்ந்தது...



''ஐயா... நீங்க ஏழைப்பட்ட ஜனங்களுக்கு சேவை பண்றதுக்குன்னே இருக்கீங்க. உள்ளாட்சித் தேர்தலுக்காக நீங்க பிரசாரத்துக்குப் போற இடங்களில் அலை அலையா வர்ற கூட்டத்தைப் பத்தி எனக்கு தகவல் வந்துக்கிட்டே இருக்குது.''

www.t.me/tamilbooksworld

''கூட்டம் வர்றது சரிதான்யா! அது இந்தப் பத்திரிகைக் காரனுங்களுக்குப் புரிய மாட்டேங்குதே. ஏதாச்சும் அகராதி புடிச்ச மாதிரி வம்படி பண்ணிக்கிட்டே இருக்கானுங்க. பிளட் பிரஷரை நாமளா எதுக்கு ஏத்திக்கணும்? அதான் பத்திரிகை பாக்கறதையே விட்டுட்டேன்யா!''

''ஐயா, என்னோட 'ஜோதி' சேனலை மட்டும் இந்த லிஸ்ட்ல நீங்க சேர்க்கக் கூடாதுங்க. உங்க நிகழ்ச்சிகள் அத்தனையும் விரிவா, சூப்பரா காட்டணும்னு நான் உத்தரவே போட்டிருக்கேன்!''

''அது கரெக்ட்தான். உன்னை மாதிரி ஒருசில நட்பு மீடியாக்கள்தான்யா என் மனசுக்கு கொஞ்ச மாச்சும் ஆறுதலே! என்னைப்போன்ற நல்ல அரசியல்வாதிகளை நாட் டுக்கு சிறப்பாவே

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

வெளிச்சம் போட்டுக் காட்டுறீங்க. உங்க டி.வி-யில இருந்து ஒரு பொண்ணு வருவாளே... அவகூட ரொம்ப துடிப்பான ஆளுய்யா!''

''யாருங்க... இந்த சீமா பீஷ்ட் அப்படிங்கிற பொண்ணைச் சொல்றீங்களா? ரொம்பத் திறமையான ரிப்போர்ட்டர் தாங்க. போன வருடத்தின் சிறந்த டி.வி. நிருபர் அவார்டை நூலிழையில் மிஸ் பண்ணிட்டா!''

''திறமைக்கு ஏத்த ஜொலிப்பு இருக்குதுய்யா அவகிட்டே. இந்த ஒன்-டு-ஒன் அப்படின்னெல்லாம் சொல்றாங்களே... அந்த மாதிரி ஒரு பேட்டி என்னை எடுக்கச் சொல்லி அவளை அனுப்பி வையி! நேரா எனக்கே செல்போன்ல பேசச் சொல்லு... நான் அப்பாயின்ட்மென்ட் சொல்றேன்!''

''கட்டாயமாங்க!''

''சரி... இப்போ எதுக்கு போன் பண்ணே? அதைச் சொல்லு!''

''தாத்ரி ஏரியாவுல புதுசா ஒரு பவர் பிளான்ட் போடலாம்னு...''

''ஆமா, முந்தியே சொல்லியிருந்தியே! இந்த விஷயத்துல டாடா, அம்பானி குரூப் மட்டுமில்லே... சிங்கானியா குரூப் போட்டியும் இதுல இருக்குது... அது புரியுதா?''

''இருந்தாலும் எப்படியாச்சும்...''

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*''இதுக்கு முந்தி தலைமைச் செயலாளரா இருந்த மோகன் குமார் நம்ம ஆளுய்யா... நியூஸ் பேப்பரை நீட்டுனாக்கூட அதுல ஒரு கையெழுத்துப் போடுவான். இப்போ வந்திருக்கிறவன் முதல்வரோட ஆளு. அதுவும் தவிர, அந்த சிங்கானியா குரூப்பும் முதல்வரை செமத்தியா மஸ்க்கா போட்டு வெச்சிருக்கானுவ!''*

*''அப்ப கஷ்டம்தானுங்களா?''*

*''உன்னை மாதிரி விசுவாசிங்களுக்கு நன்மை செய்யணும்னா, நானும் கொஞ்சம் போராடித்தான்யா ஆகணும். ஏற்கெனவே நம்ம டெர்ம்ஸ் என்னன்னு பேசியிருக்கோம், நினைவிருக்கா? அதும்படியே நீ எனக்கு பதில் மரியாதை பண்ணிடணும் புரியுதா? பவர் பிளான்ட் புராஜெக்ட் உனக்குத்தான். அதுக்கு நான் பொறுப்பு!''*

www.t.me/tamilbooksworld

*''ரொம்ப ரொம்ப நன்றிங்க. அப்ப என்னோட வெளிநாட்டு பார்ட்னர்களைவெச்சு நான் மீட்டிங் போட ஆரம்பிச்சிடறேன். உங்களை நம்பி அதுக்கான மெஷினெல்லாம் இறக்குமதி செய்ய ஆரம்பிச்சிடலாங்களா?''*

*''இந்த ஜெகன்னாத் ராய் சொல்லியாச்சுன்னா, மறு கேள்வி கேட்கக் கூடாதுனு கோட்டையில அத்தனை பேருக்கும் தெரியும்யா! நான் பார்த்துக்கறேன்... நீ அந்த சீமா பீஷ்ட் பொண்ணை அனுப்பு. கொஞ்சம் தனிப்பட்ட முறையில் அதுகிட்டே நான் பேட்டி கொடுக்க வேண்டியிருக்கு!''*

*''நிச்சயமாங்க. நன்றிங்க!''*

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*''ஹலோ... நான் ருக்ஸானா அஃஃப்ஸர் பேசுறேன்... மினிஸ்டர் இருக்காருங்களா?''*

*''ஏங்க, உள்ளாட்சித் தேர்தல் நடக்குதில்லே... இறுதிக் கட்டப் பிரசாரத்துக்குப் போயிருக்காரு.''*

*''அவரு பி.ஏ-தானே பேசுறீங்க? நான் யாருனு தெரியு தில்லே?''*

*''நல்லாத் தெரியுதுங்க!''*

*''அவரோட மொபைலுக்கு ஒரு வாரமா டிரை பண்ணிகிட்டே இருக்கேன். அதையும் எடுக்க மாட்டேங்குறாரே?''*

www.t.me/tamilbooksworld

*''உங்க நம்பரைப் பார்த்தும் அவர் எடுக்கலைன்னா... நீங்களாப் புரிஞ்சுக்க வேண்டியதுதானே? பொம்பளைங்க ஹேர்ஸ்டைலை மாத்துற நேரத்துக்குள்ள, எங்க மினிஸ்டர் அவரோட கேர்ள் ஃப்ரெண்டுங்களை மாத்திடுவாரு! (வெடிச்சிரிப்பு) என்ன மேடம்... புரிஞ்சுதா நான் சொல்றது?''*

*டொக்!*

*''ஹலோ... ஹலோ! (மறுபடி பெருத்த சிரிப்பு) ''இதோட லைன் கட் ஆயிடுச்சு! மேடம் நல்லாப் புரிஞ்சுகிட்டாங்க!''*

*''அப்பா!''*

*''என்ன விக்கி... குரல் ரொம்பக் கவலையா தெரியுதே..''*

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*''இன்னிக்கு ஒரு லெட்டர் வந்துச்சுப்பா... நக்ஸலைட்டுங்க அனுப்பினதாப் போட்டிருக்குது. தீவு ஏரியாவுல வரப்போற சிறப்புப் பொருளாதார மையத்தில் நான் ஃபேக்டரி தொடங்கினா, என்னைக் கொன்னுடுவேன்னு சொல்லியிருக்காங்க!''*

*''உடனே நீ பேன்ட்ல மூச்சா பேஞ்சிட்டியாக்கும். டேய், நீ யாரு புள்ளை..? சிலுத்துக்கிட்டு நிக்குற சிங்கமேசல்யூட் அடிச்சு வழிவிடுற ஜெகன்னாத் ராயோட புள்ளைடா!''*

*''அது சரி டாடி... ஆனா, நக்ஸலைட்டுங்க எங்கே எப்படி கண்ணி வெடிவெச்சுத் தூக்குவானுங்கனு தெரியாது. நான் ஆயிரம் இடத்துக்குப் போய் வர்றவன்... உங்க செல்வாக்கும் பாதுகாப்பும் எல்லா இடத்துக்கும் எப்படி வந்து என்னைக் காப்பாத்தும்?''*

www.t.me/tamilbooksworld

*''முதல்ல பங்களாவுக்கு போலீஸ் பாரா போடுறேன்...''*

*''உங்க போலீஸ் எதுக்கும் லாயக்கில்லை. நானே டெல்லி கமிஷனர்கிட்டே கேட்டு கமாண்டோ பாதுகாப்பு வாங்கப்போறேன்!''*

*''நீ ஓவரா பயப்படுறே, விக்கி. இது வரைக்கும் எந்தத் தொழிலதிபரையும் நக்ஸலைட்டுங்க கொன்னதா சரித்திரமே இல்லை!''*

*''முதல் ஆளா நான் இருந்துடக் கூடாதில்லே! வெச்சிடேறேன்!''*

*''ஜெகன்னாத்... உள்ளாட்சித் தேர்தல் முடிவைப் பார்த்தீங்களா?''*

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*''பார்த்தேன் முதல்வர் ஐயா.... நம்ம நினைச்ச மாதிரி முடிவு அமையலியே... ஓட்டுப் போடுற நாயிங்க மனசுல என்னதான் இருக்குனு புரிய மாட்டேங்குதே, ஐயா!''*

*''ஒண்ணில்லே ரெண்டில்லே... மொத்தம் எழுபத்தோரு ஸீட்டை நம்ம கட்சி இழந்துடுச்சி. வெற்றிதான் உறுதியாக் கிடைக்கும்னு என்கிட்டே சொல்லிக்கிட்டே இருந்தீங்களே... எங்கே தப்பு நடந்துச்சு?''*

*''எதிர்க்கட்சிக்காரனுங்க எக்கச்சக்கமா பணத்தைத் தேர்தல் அதிகாரிங்களுக்குக் கொடுத்திருக்கிற மாதிரி தோணுதுங்க. அதுவும் தவிர, நிறைய சுயேச்சை வேட்பாளருங்க களத்துல இறங்கிக் குட்டையைக் குழப்பிட்டானுங்க.''*

www.t.me/tamilbooksworld

*''எனக்கு வந்த தகவல் அது இல்லை... கிட்டத்தட்ட 50 தொகுதியில், நாம பார்டர்ல தோத்துப்போனதுக்குக் காரணம் முஸ்லிம் ஓட்டு மொத்தமும் வழிச்சிக் கிட்டுப் போனதுதான்.''*

*''எதுக்கு முஸ்லிம்கள் நமக்கு எதிரா ஓட்டுப் போடணும்? நம்ம அரசாங்கம்தான் அவங்களுக்கு நல்ல விஷயங்கள் ஏராளமா செஞ்சிருக்குதே?''*

*''கான்பூர்ல ஒரு கலவரத்தை நீங்க தூண்டிவிட்டீங்களே... அதான் காரணம்னு உளவுத் துறை சொல்லுது. கலவரம் நடந்தா, இந்துக்கள் ஓட்டு இன்னும் சாலிடா கிடைக்கும்னு நீங்க சொன்னீங்க. ஆனா, கூடுதலா ஒரு இந்து ஓட்டுகூட நமக்கு விழுந்த மாதிரியும் தெரியலை! முஸ்லிம்களும் கவுத்துட்டாங்க.''*

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*''ஐயா, அரசியல்னா ஏத்த இறக்கம் இருக்கத்தான் செய்யும். சில கணக்குகள் தப்பத்தான் செய்யும். வரப்போற சட்டமன்றத் தேர்தல்ல கிறிஸ்துவங்க ஓட்டை அப்படியே அள்ளுறதுக்கு வரிசையா நான் திட்டங்கள் வெச்சிருக்கேன்!''*

*''ஜெகன்னாத் ராய்... உங்க மூளை என்ன புல்லு தின்னப் புறப்பட்டுப் போச்சா? முஸ்லிம் ஓட்டு நம்ம மாநிலத்துல 18 சதவிகிதம். கிறிஸ்டியன் ஓட்டு வெறும் 1 சதவிகிதம்தான். இதைவெச்சு எப்படி அதை ஈடுகட்ட முடியும்?''*

*''ஐயா, ஓட்டுல வேணா அவங்க குறைஞ்சவங்களா இருக்கலாம். ஆனா, எனக்கென்னவோ கிறிஸ்துவ சமுதாய மக்கள் மேலே இப்பல்லாம் அபரிமிதமான ஒரு அன்பு சுரக்குதுய்யா... அவங்க ரொம்ப நல்ல ஜனங்க மாதிரி தோணுதுய்யா!''*

www.t.me/tamilbooksworld

*''நான் ஓட்டு பத்தி பேசிட்டிருக்கேன். நீ ஏதோ உன் சொந்த சென்டிமென்ட் பேசுறே? உள்ளாட்சித் தேர்தலுக்கு உன்னை பொறுப்பாளரா நம்ம கட்சித் தலைமை போட்டதுதான் முதல் தப்பு!''*

*''சொல்றேன்னு தப்பா நினைக்காதீங்க... எல்லாமே என் தப்புதானா? இந்த மாநிலத்தை ஆளுற முதல்வர் நானா, நீங்களா? இந்த ஆட்சி மேலே ஜனங்களுக்கு இருக்கிற அதிருப்தியை ஈடு கட்டி இந்தளவுக்காச்சும் ஓட்டு வாங்கிக் கொடுத்தேனே... அதைப் பாராட்டுங்க. அதுவும் தவிர, தேர்தல் வியூகமா நான் போட்ட பல திட்டங்களை உங்களோட எடுபிடிங்க குறுக்கே பூந்து பாழ் பண்ணிட்டாங்க. இதுக்கு நான் எப்படிப் பொறுப்பாக முடியும்?''*

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*''உங்ககிட்டே பேசி பிரயோஜனம் இல்லை ஜெகன்னாத் ராய். நீங்க போனை வெச்சிடுங்க!''*

*''ஹலோ... 'ஜோதி' சேனல்ல இருந்து, சீமா பீஷ்ட் பேசுறேங்க... உள்துறை அமைச்சரோட பேசணும்...''*

*''வெயிட் பண்ணுங்க!''*

*பீப்... பீப்... பீப்...*

*''ஹலோ சீமா... லேண்ட் லைன்ல ஏம்மா வந்தே? ஆலோக் உன்கிட்டே என் மொபைல் நம்பரைக் கொடுக்கலியா?''*

*''கொடுத்தாரு சார். ஆனா, இதுக்கு முந்தி உங்களை நான் பார்த்ததில்லை. எடுத்ததுமே மொபைல்ல கூப்பிட்டா, உங்களுக்கு நான் யாருன்னு புரியாமப் போயிடுமேன்னுதான்...''*

www.t.me/tamilbooksworld

*''ஓ, என்னை நீ இதுக்கு முந்தி நேர்ல பார்த்ததே இல்லையா? அப்படின்னா பார்த்துடுவோம். பிரமாதமா ஒரு பேட்டி கொடுத்திடறேன், ஓகே-தானே?''*

*''தேங்க்ஸ் சார்... உங்களுக்குப் போட்டியா வளர்ந்து வந்த லக்கன் தாகூர் எம்.எல்.ஏ-வோட மரணம்பத்தி உங்ககிட்டே கருத்து கேட்கத்தான் இப்ப அவசரமா போன் பண்ணேன்!''*

*''என்னது? லக்கன் தாகூர் செத்துப்போயிட்டாரா?''*

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

''ஆமா சார்... எங்க 'ஜோதி' சேனல்ல இப்ப அதான் பிரேக்கிங் நியூஸா ஓடிக்கிட்டிருக்கு. ஒரு மணி நேரத்துக்கு முந்தி அவரோட வீட்டைவிட்டுக் கிளம்பும்போது, மர்ம மனிதர்கள் அவரை சுட்டுக் கொன்னுட்டாங்க.''

''யாரையாச்சும் அரெஸ்ட் பண்ணி இருக்காங்களா?''

''இது வரைக்கும் இல்லை சார். ஆனா, டி.ஜி.பி-யோட அறிக்கை வந்திருக்கு... காடுகளில் மரம் வெட்டிக் கடத்துற கும்பலின் வேலையா இது இருக்கலாம் அப்படின்னு சந்தேகப்படுதாம் போலீஸ்!''

''சரி, நம்ம பேட்டி எப்ப வெச்சுக்கலாம் சொல்லு?''

''நீங்க சொல்லுங்க சார்?''

www.t.me/tamilbooksworld

''கோமதி நகர்ல எனக்கு பிரமாதமான ஒரு கெஸ்ட் ஹவுஸ் இருக்குது. இன்னிக்கு ராத்திரி பத்து மணிக்கு நீ அங்கே வந்துடு!''

''சார்... அது ரொம்ப லேட்டா இருக்குமே...''

''டின்னர் மீட்டிங்கா வெச்சுக்கலாம்மா... நீ வந்துடு!''

''சரி சார்...''

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

## மோட்டிவ் 6

# மோட்டிவ் 6

SIX SUSPECTS

• விகாஸ் ஸ்வரூப் • தமிழில்: அஞ்சனா தேவ்

**வாசகர்கள் கவனத்துக்கு...**

42

உத்தரப் பிரதேசத்தின் உள்துறை அமைச்சர் - அறிவிக்கப்படாத அதிரடி தாதா - ஊழல், கொலைக்கு அஞ்சாத (அ)சிங்கம் - ஜெகன்னாத் ராயின் பர்சனல் டெலிபோன் உரையாடல்களை நாம் ரகசியமாக ஒட்டுக் கேட்டுக்கொண்டு இருக்கிறோம்...

எப்படி செத்தாள் ருக்ஸானா?

www.t.me/tamilbooksworld

''ஹலோ பையாஜி! 'டெய்லி நியூஸ்' பேப்பரோட எடிட்டர் பிரேம் கல்ரா உங்ககிட்டே பேசணுமாம்!''

''அந்தப் பன்னியா? ஏற்கெனவே ஒரு தடவை அவனை மிரட்டினேன். அப்பவும் விட மாட்டேங்குறானே... சரி, லைனைக் கொடு!''

பீப்... பீப்... பீப்

''ஹலோ மிஸ்டர் பிரேம் கல்ரா... என்ன திடீர்னு?''

''அதிக நேரம் எடுத்துக்க மாட்டேன் சார். ருக்ஸானா அஃப்ஸர்னு ஒரு பெண்மணி இறந்து போயிருக்காங்களே... அதுபத்தி உங்க கருத்து என்ன?''

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

''அது ரொம்ப வருத்தமான விஷயம். எங்க கட்சியோட மகளிர் அணியின் மிக விசுவாசமான தொண்டர் அவங்க!''

''திடீர்னு ஏன் அவங்க தற்கொலை பண்ணிக் கணும்?''

''இது போலீஸ்கிட்டே கேட்க வேண்டியதாச்சே... எனக்கு என்ன தெரியும்?''

''அவங்க தற்கொலைக்கு முந்தி ஒரு குறிப்பு எழுதிவெச்சிட்டுப் போயிருக்காங்க... அது தெரியுங்களா?''

(சின்ன அமைதி)

www.t.me/tamilbooksworld

''குறிப்பா..? என்னது?''

''அந்தக் குறிப்பு, 'ஜெகன்னாத் டார்லிங்' அப்படினுதான் தொடங்குது. ஒரு அழகான கவிதையும் எழுதிவெச்சிருக்கு. 'நீ லேட் பண்ணாம கட்டாயமா வருவேன்னு எனக்குத் தெரியும். ஆனா, எனக்குத்தான் ரொம்ப அவசரம். அதுக்குள்ளே நான் செத்துப்போயிடுவேன்'னு அந்தக் கவிதை சொல்லுது.''

''சரிங்க... மொழி வளர்த்த கட்சி இது. எங்க தொண்டருக்குக் கவிதை உணர்ச்சி இருக்காதா என்ன? இப்ப எனக்கு எதுக்கு போன் செஞ்சீங்க?''

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

''அந்த ருக்ஸானா அஃப்ஸரோடு உங்களுக்கு ரகசியத் தொடர்பு இருந்ததாகவும்... திடீர்னு அவங்களை நீங்க கை கழுவிட்ட சோகத்தில்தான் தற்கொலை பண்ணிக்கிட்டாங்கன்னும் தகவல் பரவிட்டு இருக்கு!''

''அதெப்படி பரவும்? உங்களை மாதிரி எதிர்க்கட்சிக் கைக்கூலிப் பத்திரிகைக்காரங்க அப்படி ஒரு பொய்யைப் பரப்ப ரெடியாயிட்டீங்க... அப்படித்தானே?''

''டேப் ஒண்ணு கைவசம் இருக்குதுங்க... உள்துறை அமைச்சரான நீங்க, இந்த மகளிர் அணித் தொண்டரோடு பேசின தொலைபேசி உரையாடல்!''

(சின்ன அமைதி)

www.t.me/tamilbooksworld

''என்ன பேசினோம்னு சொல்ல வர்றீங்க?''

''ருக்ஸானா அஃப்ஸரோட ஆடம்பர ஆசைகள்பத்தி... உங்களோட கிறக்கமான கவிதைக் காதல்பத்தி. அதையெல்லாம்விட, அவங்களோடு பேசும்போது முதலமைச்சரைப்பத்தி நீங்க சொல்ற ஒரு கருத்து ரொம்பவே சுவாரஸ்யமானது!''

''இதுவும் சதின்னு புரியுது... உனக்கு எப்படிய்யா அந்த மாதிரி ஒரு டேப் கிடைச்சுது?''

''தற்கொலைக்கு முந்தி ருக்ஸானா எங்க பத்திரிகை ஆபீஸுக்கு அனுப்பிவெச்ச பார்சலில் இதெல்லாம் இருக்கு, மினிஸ்டர் சார்...''

(அமைதி. பிறகு...)

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*''இதெல்லாம் போலீஸுக்குத் தெரியுமா?''*

*''இதுவரைக்கும் தெரியாது. நான் சொன்னாத்தான் உண்டு.''*

*''உனக்கு என்ன வேணும் மிஸ்டர் பிரேம் கல்ரா?''*

*''உண்மை சார்!''*

*(பெரும் சிரிப்பு)*

*''பத்திரிகைத் துறையில முதல் காஷுவாலிட்டியே உண்மைதானேய்யா! பழைய பேப்பர்கணக்கா, நீங்கள்லாம் உண்மையை என்ன விலைக்கு எடை போட்டு விக்கறீங்கனு எனக்குத் தெரியாதா? சரி, உன்கிட்டே இருக்கிற உண்மைக்கு என்ன ரேட்? அதைச் சொல்லு!''*

www.t.me/tamilbooksworld

*(யோசனை. பிறகு...)*

*''இருபது லட்சம் சார். அதோட, அடுத்த ஒரு வருஷத்துக்குத் தொடர்ச்சியா ஒரு முழுப்பக்க அரசாங்க விளம்பரம், எங்க பேப்பருக்கு!''*

*''பணம் வேணா நான் தரலாம். விளம்பரம்பத்தி முடிவு பண்றது செய்தித் தொடர்புத்துறை அமைச்சர் பொறுப்பு. இதுல நான் சிபாரிசு செஞ்சா சந்தேகம் வரும்!''*

*''அப்ப முப்பது லட்சமா கொடுத்துடுங்க.''*

*''இருபத்தஞ்சு?''*

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

''டீல்!''

''முக்தார்?''

''யெஸ் பாஸ்!''

''நேபாள் பக்கம் இருந்து ஒரு ஆயுதபார்சலை இன்னொரு இடத்துல கொண்டுபோய் சேர்க்கணும்.''

''இப்ப கொஞ்சம் கஷ்டம் பாஸ். பார்டர் ஏரியாவுல செமத்தியாக் காவல் போட்ருக்கானுங்க. தங்கு தடையில்லாம ஆயுதத்தைக் கொண்டாரணும்னா, ஒரு விஷயம் அவசியம் தேவை பாஸ்!''

''புரியுது... செக்கிங் பண்ணாம இருக்கணும்னா, என்னோட அரசாங்க கார் வேணும். அதானே..? என் கான்வாய்ல வர்ற எட்டு கார்ல ஒண்ணை நீ எடுத்துக்கிட்டுப் போ. நம்ம கோடவுனுக்கு ஆயுதங்களைக் கொண்டாந்து சேர்த்துடு!''

www.t.me/tamilbooksworld

''ஓகே பாஸ். உள்துறை அமைச்சர் காரை நிறுத்தி சோதனை போடுற தில்லு எவனுக்கு இருக்குது? பார்த்துடுவோம் அதையும்!''

''ஹலோ... நான் சீமா பீஷ்ட் பேசுறேன்!''

''ஹேய், என் அருமை டி.வி. கண்ணாட்டி! என்னாச்சு? ஒரு வாரமா உன் குரலையே கேட்க முடியலியே...''

''பண்டிகை சீஸன் இல்லியா... சேனல்ல நிறைய அசைன்மென்ட் கொடுத்துட்டாங்க. அதோட, மும்பை கனவுக் கன்னி ஷப்னம்

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*சக்ஸேனாவோட நடன நிகழ்ச்சி ஒண்ணு நடந்துச்சு. அதைக் கவர் பண்ணவும் போயிருந்தேன்.''*

*''சினிமாக்காரிங்களை எதுக்குத்தான் இப்படி டி.வி. சேனல்ல கட்டிக்கிட்டு அழுவுறீங்களோ? காசைத்தூக்கி எறிஞ்சா கல்யாண வீட்டுலகூட துணியை கழட்டிப்போட்டு ஆடுறதுக்கு ரெடியா இருக்குது அதுங்க...''*

*''ஷப்னம் சக்ஸேனாவைப் பார்க்க ஜனங்க பொத்துக்கிட்டு குவிஞ்சிடுச்சு!''*

*''அவ்ளோ பிரபலமா அந்த நடிகை?''*

*''அந்தப் பேரைச் சொன்னாலே, வயசுப் பசங்க மயக்கம் போட்டு விழுறாங்க. உங்க மகன் சினிமாவெல்லாம் தயாரிக்கறாரு. ஆனா, நீங்க இப்படி முக்கியமான கனவுக்கன்னியோட பேர்கூட தெரியாம இருக்கீங்களே?''*

www.t.me/tamilbooksworld

*''என்ன பெரிய கனவுக் கன்னி? உன் பக்கத்துல நிறுத்தி வெச்சா, எவளுமே வேலைக்காரி மாதிரிதான் இருப்பா!''*

*''நல்லாத்தான் வெண்ணெய் தடவுறீங்க... நான் சொன்ன வேலை என்னாச்சுங்க?''*

*''எது?''*

*''எங்க மாமாவுக்கு மது தொழிற்சாலை லைசென்ஸ் கேட்டிருந்தேனே.''*

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

''ஓ, அதுவா! முடிஞ்சாச்சுனுவெச்சிக்க. ஆனா, அதை உங்க மாமாவுக்கே கிடைக்கிற மாதிரி செய்யுறதுக்கு நான் பெரியவிலை கொடுக்க வேண்டிவருது!''

''என்ன அது?''

''ஷகீல்னு ஒருத்தன் வெயிட்டாப் போட்டிபோட்டான். அவனை ஒதுங்கிக்கச் சொன்னேன். பதிலுக்கு வேற சில காண்ட்ராக்ட்களை வாங்கிக் கொடுக்கச்சொன்னான். நான் அந்த வகையில் இப்ப ஈடு கட்டியாகணும்!''

''நான் உங்களுக்கு ஈடு கட்டலியா, படுக்கையிலே..?''

www.t.me/tamilbooksworld

''என் தங்கம்... நீ ஈடு கட்டுற ஜோருலதான் நான் பைத்தியமாகிடக்குறேனே!''

''ஹலோ, உள்துறை அமைச்சருங்களா? நான் போலீஸ் ஆபீஸர் நவ்னீத் பிரார் பேசுறேன் சார்!''

''ஓ, ராங்கி புடிச்ச ஆபீஸரா? என்னய்யா விசேஷம்? எனக்கெல்லாம் நீ போன் போட்டுப் பேச மாட்டியே? இப்ப உன்னை எங்கே தூக்கி அடிச்சிருக்காங்க? புது இடத்துல க்ளைமேட் சரிப்பட்டு வருதா? சோறு தண்ணி ஒழுங்காக் கிடைக்குதா?''

''எல்லா க்ளைமேட்டையும் பாக்குறதுக்குதானே சார் இந்த யூனிஃபார்மை மாட்டியிருக்கேன். நான் நேபாள் பார்டர்ல இப்ப போஸ்டிங்ல இருக்கேன். நான் போன் செஞ்சது... உங்களுக்காக ஒதுக்கப்பட்ட அரசாங்க கார் ஒண்ணு இப்ப என்கிட்டே சிக்கியிருக்கு.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

உள்ளே முழுலோடு ஏ.கே-47 துப்பாக்கி இருக்கு. உங்க கார்ல வந்தவங்க ஓடிட்டானுங்க.''

''அதனால என்ன...''

''அரெஸ்ட் வாரன்ட் ரெடியாயிக்கிட்டே இருக்கு, உங்களுக்கு!''

''எஸ்.பி. ரேங்க்ல இருக்குற ஒருவன், உள்துறை அமைச்சரை அரெஸ்ட் பண்ணிட முடியுமா?''

''ஸாரி சார். நான் அரெஸ்ட் பண்ண வர்றது, உள்துறை அமைச்சர் என்ற பதவியைத் துஷ்பிரயோகம் செஞ்ச ஒரு ஆயுதக் கடத்தல் கிரிமினலை!''

www.t.me/tamilbooksworld

''ஏய், யூனிஃபார்ம் மாட்டிட்டாலே... நீ சூப்பர் ஹீரோ ஆயிடுவியா? அடுத்த பத்து நிமிஷத்துக்குள்ளே உன்னை ஈ அடிக்கிற மாதிரி அடிச்சிடுவேன் தெரியும்ல?''

''ட்ரை பண்ணித்தான் பாருங்களேன்... முதுகெலும்பு இல்லாத டி.ஜி.பி. மௌர்யா மூலமா இன்னும் தொலை தூரத்துக்கு என்னைத் தூக்கியடிக்கத்தான் உங்களால முடியும். ஆனா, இந்த முறை அதுவும் முடியாது. ஏன்னா, முதலமைச்சருக்கு விவரத்தைச் சொல்லிட்டுத்தான் உங்களுக்கு நான் இப்ப போன் போட்டிருக்கேன். உங்க துரதிர்ஷ்டம் பாருங்க... கொஞ்சமாச்சும் நேர்மையும் நியாயமும் உள்ள அரசியல்வாதிகளும் நம்ம மாநிலத்துல இருக்கத்தான் செய்யுறாங்க!''

''மிரட்டுறியா? டேய், உன்னால முடிஞ்சதைப் புடுங்குடா பார்ப்போம்...''

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

''அப்பா!''

''என்ன விக்கி?''

''பிப்ரவரி 15-ம் தேதிக்கு இன்னும் பத்து நாள்தான் இருக்கு! ரூபி கில் கேஸ்ல தீர்ப்பு அன்னிக்குதான்!''

''மறந்திடுவேனா மகனே..? தீர்ப்புபத்தி நீ கவலைப்பட வேண்டியதே இல்லை. நான் எல்லாத்தையும் பேசி முடிச்சிட்டேன்.''

''இல்லப்பா... நீங்க பேசி முடிச்சதுக்கு அப்புறம்கூட, அவங்க சைடுல புதுசா சில டிமாண்ட் வெச்சதாக் கேள்விப்பட்டேன்.''

''அதையும் நிறைவேத்தித்தான் ஆகணும். வேட்டை ஆடி வயிறு புடைக்கத் தின்னுற சிங்கம், சுத்திப் பறக்குறவல்லூறு களுக்கும் சின்னதாப் பங்கு கொடுக்கத்தான் வேணும்!''

''அப்ப நான் தீர்ப்புபத்தி கவலைப்படாம நிம்மதியாத் தூங்கலாமா?''

''நீ தாராளமாத் தூங்கு. ஆனா, எனக்குத்தான் இப்ப சுத்தமாத் தூக்கம் போயிடுச்சு!''

''என்னப்பா... உங்களுக்கு என்ன?''

''நவ்னீத் பிரார்னு ஒரு போலீஸ் ஆபீஸர். என்னையே கைது பண்றதுக்கு அரெஸ்ட் வாரன்ட் ரெடி பண்ணிட்டாண்டா அவன். முதலமைச்சர்கிட்டே கெஞ்சிக் கூத்தாடி இப்போதைக்கு அந்த ஆபீஸரை அடக்கிவெச்சிருக்கேன். உள்துறை அமைச்சரே ஆயுதக் கடத்தலில்

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*மாட்டினா, அது இந்த ஆட்சிக்கும் கட்சிக்கும் இமேஜை நாசம் பண்ணிடும். அதனால்தான், தற்காலிகமா என்னைக் கைது பண்ணாம இருக்க போலீஸுக்கு கொஞ்சம் டைம் கொடுத்திருக்காரு சி.எம்.!''*

*''என்னப்பா பண்ணப்போறீங்க?''*

*''அந்த நவ்னீத் பிரார் அடங்க மாட்டான். அவனை அடக்கப் பார்த்தா, பத்திரிகைக்காரங்களுக்குத் தகவலைக் கொண்டுபோயிடுவான். அதான் ரொம்ப யோசிச்சேன்... நம்ம முக்தார் இருக்கான்ல? அவனுக்கு அசைன்மென்ட் கொடுத்திட்டேன்!''*

- தொடர்ந்து சந்தேகிப்போம்...

Copyright © Vikas Swarup 2008

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

## மோட்டிவ் 6

உத்தரப் பிரதேசத்தின் உள்துறை அமைச்சர் ஜெகன்னாத் ராயின் பர்சனல் டெலிபோன் உரையாடல்கள் தொடர்கிறது...

43

பதவி பறிபோகும் அபாயம்...

''ஜெகன்னாத் ராய்?''

www.t.me/tamilbooksworld

''முதல்வரய்யா... சொல்லுங்க!''

''அந்த போலீஸ் ஆபீஸர் நவ்னீத் பிரார் கண்ணிவெடியில் சிக்கி செத்துப்போன விஷயத்தை என்னால் ஜீரணிக்கவே முடியலை...''

''என்னாலயும்தான் முதல்வர் சாப். தீவிரவாதிகளை ஒடுக்குறதுல ஒரு புலியாவே பாய்ஞ்ச தங்கமான ஆபீஸர். இது மாதிரி அதிகாரிகளோட தியாகத்தால்தான் நம்மளை மாதிரி அரசியல்வாதிகள் ஒழுங்கா ஆட்சி நடத்தவே முடியுது!''

''ஜெகன்னாத் ராய்... ஒளிக்காம சொல்லுங்க. இந்த சாவுல உங்களுக்கு எந்தப் பங்கும் கிடையாதா?''

''என்ன சாப் இப்படிக் கேட்டுட்டீங்க. எனக்கு எவ்ளோ துக்கம் தெரியுமா? நவ்னீத் பிராரை நேபாள் பார்டர்ல இருக்குற

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*நக்ஸலைட்கள்தான் கண்ணிவெடி வெச்சுக்கொன்னுட்டாங்கன்னு நாடே கண்ணீரில் மூழ்கிக்கிடக்குதே...''*

*''நாடு இருக்கட்டும். செத்துப்போன அதிகாரி உங்களுக்கு எதிரா அரெஸ்ட் வாரன்ட் ரெடி பண்ணதுக்கும் இந்த மரணத்துக்கும் சம்பந்தம் உண்டான்னு உங்களை நான் கேக்கறேன்!''*

*''ஐயா... அது எனக்கு ஒதுக்கப்பட்ட காரே கிடையாது. போலியான நம்பர் பிளேட்டை வெச்சுக்கிட்டு சட்ட விரோதக் கும்பல் அந்தக் கடத்தலை நடத்தி இருக்கு. இருந்தாலும், தனக்குக் கிடைச்ச ஆதாரங்களின் அடிப்படையில் தைரியமா என்னையே கைது பண்ணி விசாரிக்க அந்த அதிகாரி தயாரானாரு. அதை நான் பெர்சனலான கோபமா எடுத்துக்கலை. சொல்லப்போனா, அவரோட மரணத்துக்கு உரிய மரியாதை செலுத்துற விதமா, நவ்னீத் பிரார் குடும்பத்தைக் கூப்பிட்டுவெச்சு ஒரு பெரிய விருது கொடுக்கனும்னு திட்டம் போட்டிருக்கேன். உள்துறை அமைச்சர் என்கிற முறையில் இதைச் செஞ்சாக வேண்டிய கடமை எனக்கு இருக்கில்லையா?''*

tamilbooksworld

*''சரி ஜெகன்னாத்! பிரச்னை இல்லாமப் பார்த்துக்கோங்க. அவ்வளவுதான் சொல்ல முடியும். நாளைக்குதானே பிப்ரவரி 15... ரூபி கில் கொலை கேஸில் உங்க மகனுக்கு டெல்லி கோர்ட்டில் தீர்ப்பு வருதே... நீங்களும் டெல்லி போறீங்களா?''*

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*''இல்லீங்க முதல்வர் சாப்... அதைவிட எனக்கு முக்கியம் வீர மரணம் அடைஞ்ச தியாகி நவ்னீத் பிரார் இறுதி ஊர்வலம். அதுல கலந்துக்கிறதுக்காக நாளைக்கு நான் லக்னோவில் இருப்பேன். டெல்லியில் சட்டம் அதோட கடமையைச் செய்யட்டும். இங்கே நான் ஒரு அமைச்சராக என் கடமையைச் செய்யணும்.''*

*''நீங்க ரொம்பத் திறமையானவர் ஜெகன்னாத். வாழ்த்துகள்!''*

*''எல்லாம் உங்க ஆசீர்வாதம், சாப்!''*

*''அப்பாதானே பேசுறது?''*

*''ஆமா விக்கி... என்ன விஷயம் சொல்லு?''*

www.t.me/tamilbooksworld

*''அப்பா... உங்களுக்கு எவ்ளோ நன்றி சொன்னாலும் தகும். நடுவுல சில தடவை நான் உங்ககிட்டே கோபப்பட்டிருக்கேன். அதுக்காக மன்னிச்சுக்கோங்க.''*

*''நான் சொன்னது நடந்ததா இல்லையா... நீதிமன்றம் உன்னை நிரபராதினு விடுதலை பண்ணிடுச்சு பார்த்தியா?''*

*''ஜெயிலுக்குப் போக வேண்டி வருமோன்னு ரொம்ப பயந்து கிடந்தேன்... இப்ப ரொம்ப ரொம்ப ரிலாக்ஸ் ஆயிட்டேம்ப்பா!''*

*''என்னைவிட நீ முக்கியமான நன்றி சொல்ல வேண்டியது நம்ம குருஜிக்குத்தான். அவர் உலகச் சுற்றுப் பயணத்தை முடிச்சிட்டுத் திரும்பி வந்திட்டாரு. நீதியின் கரங்கள் உன் மீது கருணை பொழிய அவருடைய அருள்தான் முக்கியக் காரணம்.''*

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

''அப்பா... இதை நான் ரொம்பப் பெரிசாக் கொண்டாடணும்னு ஆசைப்படறேன். நமக்கு வேண்டியவங்க அத்தனை பேருக்கும் சேர்த்து பண்ணை வீட்டுல ஒரு பார்ட்டி கொடுக்கப் போறேன். நம்ம ஜோசியரைக் கேட்டேன்... மார்ச் 23-ம் தேதி அருமையான நாள்னு குறிச்சுக் கொடுத் திருக்காரு. நீங்களும் கண்டிப்பா பார்ட்டிக்கு வந்திடுங்கப்பா!''

''இப்ப வேணாம் விக்கி. இந்த கேஸ்பத்தி எல்லா மீடியாவும் கண்ணுல விளக்கெண்ணெய் ஊத்திக் கவனிக்குது. ஜனங்களுக்கும் இந்தத் தீர்ப்பு மேலே ஏகத்துக்கும் கோபம் இருக்குது. இந்த நேரத்துல நீ பார்ட்டி கொடுத்துக் கொண்டாடினா, அது நாமளே ஓணானை எடுத்து வேட்டிக்குள்ள விட்டுக்கற மாதிரி ஆயிடும்! தீர்ப்பு கிளப்பிவிட்ட சூடு கொஞ்சம் ஆறுற வரைக்கும் பொறுப்போமே.''

''அதெல்லாம் கிடையாது. நான் கொண்டாடியே தீரணும். நமக்கு ரொம்ப வேண்டியவங்களை மட்டும்தான் கூப்பிடப் போறேன். நீங்களும் டைரியில இப்பவே குறிச்சுவெச்சிடுங்க... மார்ச் 23.''

www.t.me/tamilbooksworld

''சரி.. சரி...''

''அப்பா...''

''என்னப்பா?''

''இனிமே நான் அவசரப்பட்டு ரொம்ப முரட்டுத்தனமா எதுவும் செஞ்சு உங்களுக்கு இப்படி வேலை கொடுக்கமாட்டேன். மார்ச் - 23 பார்ட்டியில் நான் எவ்வளவு குடிச்சாலும் சரி... ரூபி கில் மாதிரி யாரும் அங்கே துப்பாக்கி குண்டு பாய்ஞ்சு சாக மாட்டாங்க, போதுமா?''

(இடிச் சிரிப்பு... பதிலுக்கு ஒரு வெடிச் சிரிப்பு)

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*''உள்துறை அமைச்சரை லைனுக்கு வரச்சொல்லுங்க... முதல்வர் பேசணுமாம் அவசரமா...''*

*''என்னங்க விஷயம்... அமைச்சரோட மகன் நிரபராதின்னு தீர்ப்பு வந்திடுச்சே... அதுக்கு வாழ்த்துச் சொல்லவா? அப்படின்னா முதல்வர் ஐயா மூணு நாள் லேட்டு!''*

*''எதுக்கு பேசணும்னு தெரியலை... லைனைக் கொடுங்க!''*

*பீப்... பீப்... பீப்...*

*''வணக்கம் முதல்வர் சாப்!''*

www.t.me/tamilbooksworld

*''ஜெகன்னாத் ராய்... உங்க மகனை கோர்ட் விடுதலை பண்ணதுபத்தி மீடியாவுல என்னவெல்லாம் செய்திகள் வருதுனு பார்த்தீங்களா?''*

*''அவனுங்க கெடக்கறானுங்க. இந்த மீடியாக்காரனுங்க எதுக்குத்தான் சந்தோஷப்பட்டு இருக்காங்க சொல்லுங்க! யார் என்ன சொன்னா என்னங்க... உள்துறை அமைச்சரோட மகன் அந்தப் பொண்ணை சுட்டுக்கொல்லலைன்னு மாட்சிமை தாங்கிய நீதிமன்றமே சொல்லிடுச்சு. அப்புறம் என்ன..?''*

*''ஆனா, மக்கள் தீர்ப்புன்னு ஒண்ணு இருக்கில்லே...''*

*''அதைப்பத்தியெல்லாம் நான் கவலைப்படறது கிடையாதுங்க, முதல்வர் சாப்!''*

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

''நான் கவலைப்படுறேன்... நம்ம கட்சி கவலைப்படுது! அம்ரித்ஸர்லயும், ஆலப்புழாவுலயும் கல்லூரி மாணவிகள் மெழுகுவத்தி ஊர்வலம் நடத்தியிருக்காங்க. உங்க மகன் விடுதலை செய்யப்பட்டதில் துளிகூட நீதி இல்லைனு பல ஆயிரக்கணக்கானவங்க அமைதி ஊர்வலம் நடத்தி எதிர்ப்புக் காட்டியிருக்காங்க. பதினெட்டு மாநிலங்களில் ரூபி கில் மரணத்துக்கு உரிய நியாயம் கிடைக்கவில்லைனு சொல்லி தன்னார்வக் குழுக்கள் ஆர்ப்பாட்டம் நடத்தியிருக்காங்க. இதுல அரசியல் சக்திகள் விளையாடி இருக்குனு சொல்லி, லக்னோ பல்கலைக்கழக மாணவர்கள் சிலர் தீக்குளிப்பு மிரட்டல் விடுத்திருக்காங்க. டி.வி-யில் எப்போ திருப்பினாலும், நம்ம உ.பி-யில் இதுக்காகக் கிளம்பியிருக்கிற எதிர்ப்புகள் பத்தித்தான் ஸ்கிரோள் ஓடுது. சில பத்திரிகைகள், தீர்ப்புக்கு எதிராக விழிப்பு உணர்வு உண்டாக்கச் சொல்லி எஸ்.எம்.எஸ். கேம்பெயின் பண்றாங்க. இந்த 'டெய்லி நியூஸ்' பத்திரிகைக்காரன்... ஒரு தனி டிரஸ்ட்டே தொடங்கிட்டான். ரூபி கில் குடும்பத்தின் எதிர்கால நலனுக்காக நிதி திரட்டுறானாம். இப்படியே போனால், இந்த வழக்கு மறுவிசாரணைக்கு வர்றது உறுதின்னு தோணுது!''

www.t.me/tamilbooksworld

''அதுக்கு நான் என்னதான் பண்ண முடியுங்க, ஐயா..? 'இனி விவேக் விக்கி ராய் என் மகனே இல்லை' அப்படினு சொல்லி உறவை அறுத்துக்கவா? அப்பவாச்சும் உங்க இமேஜும், கட்சி இமேஜும் பொழைச்சுக்குமா, சொல்லுங்க!''

''ஸாரி ஜெகன்னாத்... அது உங்க குடும்பம் சம்பந்தப்பட்ட விஷயம். நீங்க இப்போதைக்கு அறுத்துக்க வேண்டியது - உங்களுக்கும் உள்துறை அமைச்சர் பதவிக்கும் உள்ள உறவை! அதைத்தான் நம்ம கட்சித் தலைமை விரும்புது. நீங்களா ராஜினாமா கொடுத்துடுங்க... உடல்நிலையைக் காரணம் காட்டி ஏதாவது சொல்லுங்க. கௌரவமா கொஞ்ச நாளைக்கு விலகி இருங்க. ஜனங்களோட மறதிதான் நம்ம

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*மருந்து. மறுபடி நீங்க இதே பதவிக்கு வந்து உட்காருவது பத்தி எனக்கு எந்த ஆட்சேபனையும் கிடையாது!''*

*''முதல்வர் ஐயா... உடல்நிலையைக் காரணம் காட்டுறதுக்கு நீங்க வேணா சரியான ஆளா இருக்கலாம். நான் சர்வ சௌக்கியத்தோட இருக்கேன். ரொம்பத் தைரியமாவும் இருக்கேன். நான் ராஜினாமா செய்ய முடியாதுங்க. வேணா, நீங்க என்னை மந்திரி பதவியைவிட்டு டிஸ்மிஸ் பண்ணிப்பாருங்க. அடுத்த ஆறு மணி நேரத்துல அரசியலை நான் மாத்திக்காட்டுறேன். புதிய கூட்டணி அரசாங்கத்தை உருவாக்கிக் காட்டுறேன். அப்ப பதவிவிட்டு விலக வேண்டியது நீங்களாத்தான் இருக்கும்!''*

*(இப்போது முதல்வரின் ஏளனச் சிரிப்பு!)*

www.t.me/tamilbooksworld

*''ஜெகன்னாத்... நீ வேணா பத்துப்பதினஞ்சு பேரை வெட்டிப் போட்டுட்டு, குறுக்கு வழியில் அரசியல் ஏணியில் ஏறி வந்து அமைச்சராகி, கூடவே ஒரு மாஃபியா கூட்டத் தலைவனாவும் இருக்கலாம். ஆனா, நான் ஆரம்பத்துலருந்தே அரசியல் மூலமாத்தான் எல்லா நல்லது-கெட்டதுகளையும் கத்துக்கிட்டேன். உனக்கு இருக்கிறதைவிட நூறு மடங்கு குள்ளநரித்தனமும், குயுக்தியும் எனக்கும் தெரியும். நீயா பதவி விலகலேன்னு வெச்சிக்க... உன்னை மினிஸ்டர் நாற்காலியில் இருந்து தூக்கி அடிக்கிறது மட்டுமில்லே... உன் கிரிமினல் ரெக்கார்டைப் புரட்டி எடுத்து, ஜென்ம ஜென்மாந்திரத்துக்கும் வெளியிலே வர முடியாதபடி கம்பிக்குப் பின்னாடி என்னால் தள்ள முடியும்... புரியுதா?''*

*''ஓ, அவ்ளோ தூரம் செய்வீங்களோ... மிஸ்டர் முதல்வரே! உங்க கேபினெட்ல இருக்கிற மத்த பொட்டைப் பசங்ககிட்டே இதெல்லாம்*

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*வெச்சுக்கங்க. நீங்க என் டிஸ்மிஸ் லெட்டர்ல கையெழுத்துப் போட்ட மை காயுறதுக்குள்ளே உங்க ஆட்சியை டிஸ்மிஸ் பண்ற அளவுக்கு அணிகளை உடைச்சுக் காட்டலேன்னா, என் பேரு ஜெகன்னாத் ராய் இல்லை!''*

*''மிக்க மகிழ்ச்சி ஜெகன்னாத் ராய்... இந்த நிமிடமே நமக்குள்ளான யுத்தக் கோடு வரையப்பட்டுவிட்டது. போர்க்களத்தில் சந்திப்போம்!''*

*டொக்!*

- தொடர்ந்து சந்தேகிப்போம்...

Copyright © Vikas Swarup 2008

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

## மோட்டிவ் 6

*உத்தரப் பிரதேசத்தின் உள்துறை அமைச்சர் ஜெகன்னாத் ராயின் பெர்சனல் டெலிபோன் உரையாடல்களைக் கேட்டுக்கொண்டு இருக்கிறோம்...*

### தேடுதல் வேட்டை ஆரம்பம்...

*''ஜெய் குருஜி!''*

*''ஜெய் சம்போ!''*

www.t.me/tamilbooksworld

*''அலகாபாத் தீர்த்த யாத்திரையை முடிச்சுட்டு... நீங்க எப்போ மதுரா வர்றீங்க குருஜி?''*

*''மகா மேளா முடிஞ்சதுமே வந்துடுவேன். என்ன வேணும் ஜெகன்னாத் ராய்?''*

*''என் வாழ்க்கையின் பெரிய யுத்தத்தில் நான் ஜெயிக்கிறதுக்கு உங்க ஆசீர்வாதம் வேணும்!''*

*''நீதான் அதில் ஜெயிச்சிட்டியே... நாம பேசினபடியே விவேக் விக்கி ராயை கோர்ட் விடுதலை பண்ணிடுச்சே. நான் கொடுத்த பவழ மோதிரத்தோட பவரைப் பார்த்தியா?''*

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

''அதில்லை குருஜி. என்னை டிஸ்மிஸ் பண்ண வேலை பாக்குறாரு முதல்வர். இந்த ஆட்சியை நான் கவுத்துக் காட்டலைன்னா... என் அரசியல் வாழ்க்கையே முடிஞ்சுபோயிடும் குருஜி!''

''ஓ, அப்படியா? நீ கட்டாயம் இதில் ஜெயிச்சிடுவே ஜெகன்னாத் ராய்! ஏன்னா, சமீபத்தில் ஒரு நம்பக மான ஆள் மூலமா, முதலமைச்சரோட ஜாதகத்தை நான் வாங்கிப் பார்த்தேன். அது இப்போ சரிவை நோக்கிப் போற ஜாதகம்!''

www.t.me/tamilbooksworld

''ரொம்ப நன்றி குருஜி. எம்.எல்.ஏ-க்களை இழுக்குறது... கடத்தி ஒளிச்சுவைக்கிறது... சட்ட சபை வாக்கெடுப்பில் அடிதடி வந்தா, சமாளிக்கிறதுனு இனிதான் நிறைய வேலை இருக்கு குருஜி. உங்களோட பக்கபலம் எனக்கு இந்த நேரத்துல ரொம்ப அவசியம்!''

''எப்பவும் நான் உன் பக்கம் ஜெகன்னாத். ஜெய் சம்போ!''

''ஹலோ திரிபுராரி!''

''பையாஜி... இதென்ன ஆச்சர்யமான டெலிபதி. நானே இப்ப உங்களை போனில் கூப்பிடறதா இருந்தேன்.''

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

''அது இருக்கட்டும்... நாளைக்கு மத்தியானத்துக்குள்ளே என் பதவியை முதல்வர் பறிக்க ஏற்பாடு பண்றாரு.''

''கேள்விப்பட்டேன் பையாஜி. நான் என்ன செய்யணும்... சொல்லுங்க.''

''ஆட்சியைக் கவுத்து, கவர்னர் மாளிகைக்குப் போயி நாம ஜெயிக்கணும்னா, எத்தனை எம்.எல்.ஏ-க்களை நம்ம பக்கம் கொண்டாந்து நிறுத்த முடியும்னு நினைக்கிறே? அப்படியே அதுக்கு பட்ஜெட்டையும் சொல்லு!''

''அது பெரிய காரியமே கிடையாது பையாஜி. இப்போ இருக்கிற அரசை கவுக்கணும்னா, பதினஞ்சு எம்.எல்.ஏ-க்களை உருவி உங்க பக்கம் கொண்டாந்தா போதும்! அதுக்கும் அதிகமாவே நம்ம ஆளுங்க இருக்காங்க. நீங்க ஒரு வார்த்தை சொல்லுங்க, ஈ.பி-காரன் கரன்ட்டைப் புடுங்கறதைவிட வேகமா முதல்வரோட பதவியைப் புடுங்கிடலாம்!''

''நீ நினைக்கிற அளவுக்கு அது அவ்ளோ சுலபம் மாதிரி எனக்குத் தெரியலை திரிபுராரி. பதவியை மட்டும் புடுங்கறது முக்கியமில்லை. முதல்வரோட மூக்கை மண்ணுல போட்டுப் புரட்டி எடுத்திடணும். முதல்வர் நாற்காலியில் நான் உட்கார்ந்து காட்டணும்!''

''ஐயா... என்ன சொல்றீங்க? நீங்க முதல்வர் ஆகணுமா?''

''ஏன்யா! எனக்கு என்ன குறைச்சல்? அம்பத்தஞ்சு வருஷமா இந்த பொது வாழ்க்கைப் புழுதியில கிடந்து உழண்ட எனக்கு, முதல்வர் ஆகுறதுக்குத் தகுதியில்லையா? என்கிட்டே இப்ப இருக்கிற பணத்துக்கு நான் துபாய்லயோ, அமெரிக்காவுலயோ போய் ராஜ வாழ்க்கை

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

வாழலாம். எதுக்கு அதையெல்லாம் விட்டுட்டு, இந்த கச்சடா அரசியல்ல காலத்தை ஓட்டுறேன்... ஒரு தடவையாச்சும் முதல்வர் ஆகணும்கிற லட்சியத்தாலதானே!''

''..............''

''இப்ப நான் போடுற திட்டத்துக்கு 'ஆபரேஷன் செக்மேட்'னு பேர் வெச்சிட் டேன். என்கிட்டே இருபது பேரு இருக்காங்க. கட்சித் தாவல் தடை சட்டத்தில் பதவி போகாம இருக்கணும்னா, இன்னும் அஞ்சு பேர் தேவை! கூட்டணி மந்திரி சபைதானேய்யா... ஆதரவு குடுக்கிற தோழமைக் கட்சியில் இருந்து எத்தனை எம்.எல்.ஏ-க்களை இழுக்கறேன் பாரு. இது தவிர, நான் போட்ட எலும்புத் துண்டைக் கவ்விக்கிட்டு ஓடுற சுயேச்சைகளையும் சுலபமா அமுக்கிடுவேன்!''

www.t.me/tamilbooksworld

''ரொம்பப் பெரிய அமவுன்ட்டா தேவைப்படுங்க... நான் சூட்கேஸ் ரெடி பண்ண ஆரம்பிக்கலாமா?''

''பணத்தைப்பத்தி யோசிக்கதேய்யா... இப்ப மானம்தான் முக்கியம். நான் முதல்வர் ஆனா, நீதான் சூட்கேஸ் தயாரிப்பு வாரியத் தலைவர்!''

(இடிச் சிரிப்பு)

''ஆலோக் அகர்வால்தானே?''

''ஆமா... நீங்க?''

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*''பார்த்தியா... உள்துறை அமைச்சர் பதவியை என்கிட்டே இருந்து பிடுங்கப் போறாங்கன்னு நியூஸ் வந்ததும், உனக்கு என் குரலே மறந்துபோச்சு!''*

*''ஐயோ... பையாஜி நீங்களா? இதென்ன புது மொபைல் நம்பர்ல வர்றீங்க?''*

*''தர்ம யுத்தம் தொடங்கிடுச்சே... முதல்வர் கிழவன் ஒட்டுக்கேட்க ஆரம்பிச்சிட்டான்யா. அதான் தற்காலி கமா வேற நம்பர்ல வர்றேன்!''*

*''சொல்லுங்க பையாஜி... உங்களுக்கு நான் என்ன செய்யணும்?''*

*''முதல்வரைக் கவுத்துட்டு, அடுத்த முதல்வரா நான் வர்றது உறுதி ஆயிடுச்சு. எம்.எல்.ஏ-க்கள்ல யார் யாரை இழுத்து, கவர்னர் முன்னாடி நிறுத்துற வரைக்கும் எங்கே பதுக்கிவைக்கணும்னுகூட ஏற்பாடு ஆயிடுச்சு. ஆனா, கூப்பிட்ட இடத்துக்கு வரணும்னா... அந்தக் கழுதைங்களுக்கு முன்னாடி கேரட் காட்டணும்ல... அதான் உனக்கு போன் பண்ணேன்!''*

www.t.me/tamilbooksworld

*''நீங்க முதல்வர் ஆகுறது என்னை மாதிரி தொழிலதிபர்கள் செஞ்ச பாக்கியம்! சொல்லுங்க பையாஜி... எவ்வளவு நான் தரணும்னு எதிர்பார்க்கிறீங்க?''*

*''பன்னிரண்டு அல்லது பதிமூணு கோடி தேவைப்படுது, ஆலோக் அகர்வால்...''*

*(சற்று மௌனம். பிறகு...)*

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

''ரொம்ப அதிகமா இருக்கே பையாஜி!''

''ஆலோக்... நீ எனக்கு செய்யுறது தர்மம் கிடையாது. கடனா கொடுக்குறதா நினைச்சுக்கோ. நீ எத்தனையோ பிசினஸ் பண்றே... எவ்வளவோ லைசென்ஸ்கள் வாங்க வேண்டியிருக்கு! கணக்கில்லாம வரி கட்ட வேண்டி இருக்கு. நான் முதல்வர் ஆயிட்டா, வட்டியும் முதலுமா உனக்கு லாபம் செஞ்சு கொடுத்துடுவேன்!''

''பணம் கொடுக்கிறதைப்பத்தி யோசிக்கலை பையாஜி. நான் உங்ககிட்டே கேட்டிருந்த தாத்ரி புராஜெக்ட் மட்டும் எனக்கே கிடைச்சிருந்தா... என்னை நம்பி எத்தனை கோடியும் தர்றதுக்கு ஆளுங்க ரெடியா இருப்பாங்க. நானோ, உங்களை நம்பி என் கைப்பணத்தையும் அதுல போட்டு, இப்போ புராஜெக்ட்டும் கிடக்காம முடங்கிப்போயிருக்கேன்.''

www.t.me/tamilbooksworld

''புரியுது ஆலோக். அதை உனக்கே கிடைக்கத்தான் நான் பாடுபட்டேன். ஆனா, அந்த சிங்கானியா குரூப்காரன் உன்னைவிட டபுள் மடங்கா டெண்டர் 'கோட்' பண்ணியிருந்தான். அதுவும் தவிர, முதல்வர் கிழவனோடவும் எனக்கு மோதலாகிப் போச்சா... விஷயம் கை மீறிப் போயிடுச்சு.''

''எனக்கும் புரியுது பையாஜி... ஆனா, இப்ப என்னால அவ்ளோ பெரிய தொகை புரட்டுறது முடியாதகாரியம்.''

''எவ்வளவுதான் உன்னால முடியும்?''

''ரெண்டு கோடி... ரொம்பக் கஷ்டப்பட்டா மூணு கோடிக்கு மேலே முடியாது! நான் ரொம்ப நொந்து போயிருக்கேன் பையாஜி.''

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

''புரியுது ஆலோக்... என் அரசியல் வாழ்க்கை இதோட முடிஞ்சிடுச்சினு நீ தப்பு கணக்குப் போடுறே. ரொம்ப சாமர்த்தியமா நடந்துக்கறதா நினைக்கறே! இந்த உள்துறை அமைச்சர் பதவி போனா என்ன... முதல்வர் நாற்காலியில் நான் உட்காரத்தான் போறேன். அதுக்கப்புறம் இந்த உத்தரப் பிரதேசத்துக்குள்ளே நீ ஒரு குண்டுசியைக்கூட வியாபாரம் பண்ண முடியாது. இருக்கிற பிசினஸையும் துடைச்சு எடுத்துக்கிட்டு ஏதாவது வெளி மாநிலத்துக்கு இப்பவே ஓடிடு!''

''பையாஜி... தயவு செஞ்சு...''

(டொக்)

''விக்கி?''

www.t.me/tamilbooksworld

''அப்பா... நான் கொஞ்ச நேரம் கழிச்சுக் கூப்பிடட்டா? இப்போ எனக்கு அவசரமா மீட்டிங் போயிட்டிருக்கு.''

''உன் மீட்டிங்கைத் தூக்கி உடைப்பிலே போடு. அவசரமா ஒரு விஷயம் நாம பேசியாகணும்!''

''சரி, கான்ஃபரன்ஸ் ஹால்ல இருந்து வெளியே வந்திட்டேன்... இப்ப சொல்லுங்கப்பா!''

''எனக்கு அவசரமா பத்து கோடி ரூபா ரொக்கமா வேணும்.''

''யப்பாடி... என்கிட்டே இருந்து பணம் வாங்குற நிலைமைக்கு நீங்க எப்போ டாடி வந்தீங்க?''

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

''வேடிக்கை எல்லாம் இருக்கட்டும். ரொக்கமா ரொம்ப அவசரமா தேவைப்படுது. என்னால புரட்ட அவகாசம் இல்லை...''

''ஆனா, என்கிட்டேயும் அவ்ளோ பணம் கிடையாதே டாடி. எல்லாத்தையும் அந்த தீவு புராஜெக்ட்ல கொண்டுபோய் முடக்கிவெச்சிட்டேனே...''

''மகனே! பெத்த அப்பனாக்கூட கேட்கலை... உன்னைத் தூக்குக் கயிறுல இருந்து காப்பாத்தின ஒருத்தனா கேட்கிறேன்... நீ நினைச்சா பத்து கோடியைப் புரட்ட முடியாதா?''

''டாடி... நான் எதையுமே பளிச்சுனு ஒரே தடவைதான் சொல்வேன். இப்ப நான் முக்கியமான மீட்டிங்ல இருக்கேன். ரெண்டு மணி நேரம் கழிச்சு நாம பேசலாமா?''

www.t.me/tamilbooksworld

''விக்கி... சில புள்ளைங்க தன்னோட அப்பன் பேரைக் காப்பாத்தறதுக்காகவே வாழ்க்கை பூரா லட்சியத்தோட உழைப்பானுங்க. சில அப்பனுங்களோ, தன் புள்ளை பண்ற தப்புல இருந்து அந்தப் புள்ளையைக் காப்பாத்தறதுலயே வாழ்க்கையை வீணாக்கிடுவாங்க. நம்ம உறவு ரெண்டாவது வகைனு இப்பப் புரியுது. ஆனா ஒண்ணு... இனி ஒரு பிரச்னைனு நீ என்கிட்டே வராதே... நான் காப்பாத்துவேன்னு கனவுலகூட நினைக்காதே!''

''உணர்ச்சிவசப்படாதீங்க டாடி! முடிஞ்சா, கட்டாயம் உங்களுக்கு உதவி செய்ய மாட்டேனா? மத்தபடி, இனிமே நான் எந்த பார்லயும், எந்தப் பொண்ணையும் சுட்டுக் கொலை பண்ண வேண்டிய அவசியம் வராதுனு நினைக்கிறேன். அதனால, உங்க அரசியல் பலத்தைவெச்சு நீதியை வளைக்கிற கஷ்டமான வேலை எல்லாம் உங்களுக்கு நான்

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

கொடுக்கவும் மாட்டேன். இப்போதைக்கு நான் செல்போனை சுவிட்ச் ஆஃப் பண்ணிட்டு மீட்டிங்ல உட்காரப்போறேன். ரைட்டா?''

- தொடர்ந்து சந்தேகிப்போம்...

Copyright © Vikas Swarup 2008

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

# மோட்டிவ் 6

அமைச்சர் பதவிக்கு ஆப்பு என்றதும், ஆட்சியைக் கவிழ்க்கத் திட்டம் போடும் ஜெகன்னாத் ராய்... தன் சொந்த மகனிடம் அதற்குப் பண உதவி கேட்டார். அவன் கைவிரித்த விரக்தியில் இருந்து விடுபடும் வடிகாலாக, தன் லேட்டஸ்ட் காதலி சீமாவுக்கு போன் போடுகிறார் மினிஸ்டர்...

www.t.me/tamilbooksworld

''ஹலோ சீமா குட்டி?''

''ம்!''

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

''என்ன... உன்கிட்ட இருந்து போனையே காணும்? அமைச்சர் பதவியைப் பிடுங்கப்போறாங்கனு தெரிஞ்சதும் நீயும் ஓரங்கட்டுறியா என்னை?''

''அப்படி எல்லாம் இல்லை... டெல்லியில எனக்கு ரொம்ப முக்கியமான சில வேலைகள் இருக்குது!''

''என்ன வேலை? உனக்கு இன்னொரு மாமா இருக்காரா? அவருக்கும் மது ஆலை திறக்க லைசென்ஸ் வாங்கித் தரணுமா?'' (சிரிப்பு)

''டி.வி. ரிப்போர்ட்டர் வேலையில் தெருத் தெருவா சுத்துறது எனக்குப் பிடிக்கலை. நான் பார்க்க எவ்ளோ அழகா இருக்கேன்! படிக்கும்போது என் யுனிவர்சிட்டி டிராமாவுல நடிப்புக்காக முதல் பரிசு வாங்கி னேன். நான் ஏன் சினிமாவுல ஹீரோயின் ஆகக் கூடாது? அதுக்குத்தான் சிலரை சந்திச்சுப் பேசிட்டு இருக்கேன்''

www.t.me/tamilbooksworld

''ஐயே... சினிமாவா? அது ஒரு சாக்கடையாச்சே! நான் இருக்கும்போது, உனக்கு எதுக்கு இந்த நடிப்பு, சனியன் எல்லாம்?''

''நான் ஹீரோயின் ஆகணும்! உங்க பையன் விவேக் விக்கி ராய் நிறையப் படங்கள் தயாரிக்கிறாரே...அவர்கிட்டே சொல்லி ஒரு சான்ஸ் வாங்கித் தர முடியாதா?''

''அவனா... இப்பத்தான் அவன் உறவையே கத்தரிச்சு, போனை வெச்சேன். அவன்கிட்டே எதையும் எதிர்பார்க்க முடியாது!''

''அப்ப என்னை என் போக்குலவிடுங்க...''

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

''ஏய், சீமா... சீமா கண்ணு...''

(டொக்)

''திரிபுராரி... என்னதான் ஆச்சு?''

''நமக்கு வேண்டிய அளவுக்கு எம்.எல்.ஏ-க்களை உடைச்சு, நம்ம பக்கம் கொண்டுவர்றதுக்குள்ளே டங்குவார் அறுந்துபோச்சு பையாஜி. நல்ல காலம்... உள்துறை நம்ம கையிலே இருந்தது. டெலிபோனை டேப் பண்றதுக்கு உளவுத் துறையில் சிலரை வகையா மிரட்டிப் பயன்படுத்திக்கிட்டேன். அதை வெச்சுத்தான் எந்தெந்த எம்.எல்.ஏ-க்கள் முதல்வர் மேலே அதிருப்தியில் இருக்காங்கனு ஓரளவு ஒட்டுக்கேட்டு, அவங்களை வளைக்க முடிஞ்சது. புட்டி, குட்டி, புறம்போக்கு நிலம்னு ஒவ்வொருத்தனுக்கும் ஒவ்வொரு மாதிரி வாய்க்கரிசி போட வேண்டி வந்தது. அதிலும், ரொம்ப சுலபமா நாம கூப்பிட்டதும் வந்துடுவானுங்கனு நினைச்ச சுயேச்சை எம்.எல்.ஏ-க்களோட ஒரிஜினல் முகம் தெரிஞ்சப்ப, ஆடிப்போயிட்டேன் பையாஜி. என்னமா அமவுன்ட் கேட்டு முறுக்கிட்டானுங்க தெரியுமா?''

''அதெல்லாம் சரி... நமக்கு வேண்டிய நம்பரை ரெடி பண்ணியாச்சா?''

''இன்னும் ஒரே ஒரு எம்.எல்.ஏ. வேணும் பையாஜி. எல்லா வகையிலும் முயற்சி பண்ணி முடிச்சாச்சு. ஆனா, முடியலை. அந்த ஒரு எம்.எல்.ஏ. யாருன்னு கண்டுபிடிக்கிறதைவிட, தோரா போரா மலைக்குள்ள புகுந்து பின்லேடனையே பிடிச்சிடலாம்போல!''

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

''திரிபுராரி... ஒரு தொண்டனுக்கும் தலைவனுக்கும் உள்ள வித்தியாசமே அவனுங்க சிந்திக்கிற ரூட்டுல தான்யா இருக்கு. ஒரு உண்மையான தொண்டனா நீ எல்லா வழியிலேயும் சிந்திச்சு முடிச்சிட்ட. இப்ப நான் தலைவனா யோசிச்சு, அந்த மிச்சம் ஒரு எம்.எல்.ஏ-வுக்கும் வழி சொல்லட்டா!''

''சொல்லுங்க பையாஜி!''

''போன வருஷம் ஒரு எம்.எல்.ஏ. டெல்லி ஸ்டார் ஹோட்டல்ல அவனோட மூணு வயசுப் பையனுக்காக படுகிராண்டா பர்த்டே பார்ட்டி நடத்துனானே... ஞாபகம் இருக்கா?''

''இருங்க வர்றேன். ம்... டெல்லியிலே... ஆங்... கோபால் மணி! கரெக்ட்தானே பையாஜி? ஆனா, அந்த ஆளு சாலிடா முதல்வர் பக்கம் நிக்கற ஆளாச்சே. அவனுக்கு சீக்கிரமே வனத் துறையை முதல்வர் ஒதுக்கப் போறார்னுகூட சொல்றாங் களே. அவன் எப்படி பையாஜி உங்களுக்கு ஆதரவா வருவான்?''

''பணம், பொண்ணு, சரக்கு... இது எல்லாத்தையுமே தாண்டி வலுவான ஒண்ணு இருக்குய்யா... அதுக்குப் பேருதான் பாசம்!''

''பையாஜி..?''

''மூணு வயசுப் பையனுக்காக அவன் எத்தனை பெரிய பார்ட்டி வெச்சான் பார்த்தியா?பையன் மேலே அவ்ளோ பாசம் வெச்சிருக்கான்யா அந்தகோபால் மணி. இதுக்கு மேலேயும் உனக்கு நான் விளக்கமா சொல்லணுமா?''

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*''போதும் பையாஜி! உங்க ரூட்டே தனிதான். அப்ப நான் உடனே முக்தாருக்கு அசைன்மென்ட் கொடுத்திடவா?''*

*''கேட்டுச் செய்யறதுக்கு நேரம் இல்லே... செஞ்சு முடிச்சிட்டு சொல்லு!''*

*''அலகாபாத்தில் இருந்து பேசுறோம்... உள்துறை அமைச்சரிடம் குருஜி பேசணுமாம்''*

*''அப்படியா! குருஜியே கூப்பிடுறாரா? ஒரு செகண்ட் இருங்க. லைன் தர்றேன்!''*

*பீப்.. பீப்... பீப்...*

www.t.me/tamilbooksworld

*''ஹலோ குருஜி! நீங்களே என்னை கூப்பிட்டீங்களா? அது என் பாக்கியம்!''*

*''ஜெகன்னாத் ராய். இப்ப நான் ஒரு பெரிய சிக்கல்ல இருக்கேன். உன் உதவி வேணும்''*

*''கேளுங்க குருஜி. மகா மேளாவுல தீவிரவாதிங்க குண்டு வெடிச்சதாக் கேள்விப்பட்டதும் நான் பதறிப் போயிட்டேன். நல்ல காலம்.. உங்களுக்கு ஒண்ணும் ஆகலைனு திரிபுராரி சொன்ன பிறகுதான் எனக்கு மூச்சே வந்தது''*

*''அந்த விஷயத்துல சம்போ மகாதேவ் என் பக்கம் இருந்தான் ஜெகன்னாத். ஆனா, இப்ப நான் வெளியூரில் இருக்கிற சமயம் பார்த்து, என் ஆசிரமத்துல சுகாதாரத்துறை அதிகாரிகள் வந்து ரெய்டு நடத்துறதா*

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

தகவல் வந்தது. பக்தர்களின் உடல் உபாதைகள் குணமடையறதுக்காக நான் கொடுக்கிற மூலிகைப் பிரசாதங்களில், மனித மற்றும் விலங்குகளோட எலும்பைப் பொடி பண்ணிச் சேர்த்திருக்கிறதா, அந்த அதிகாரிங்க குற்றம் சாட்டுறாங்களாம்''

''சத்தியமா இது மல்ட்டி நேஷனல் மருந்து கம்பெனிகளோட தூண்டுதலா இருக்கும் குருஜி!''

''இருக்கலாம் ஜெகன்னாத். பிரச்னை அது மட்டும் இல்லை... இதுக்கு முந்தி நான் நேரிலேயே பார்க்காத மூனு பொண்ணுங்க திடீர்னு போலீஸில் புகார் கொடுத்திருக்காங்களாம். பிரசாதத்தில் போதை மருந்தைக் கலந்துகொடுத்து, அவங்களோட நான் உடலுறவில் ஈடுபட்டதா குற்றம் சாட்டுறாங்களாம். ஆடியோ, வீடியோ, போட்டோனு எதையாச்சும் போலியா ரிலீஸ் பண்ணி, என் இமேஜை மொத்தமா காலி பண்ணிடுவாங்களோன்னு பயமா இருக்கு!''

www.t.me/tamilbooksworld

''நாம நினைக்கிறதைவிட பெரிய சதிவலையா இருக்கும்போல தெரியுதே, குருஜி!''

''ம்... எனக்குப் போட்டியா ஆசிரமம் நடத்தி விறுவிறுனு வளர்ந்துட்டு இருக்கிற யோகி ராம் தியோ பத்தி நீ கேள்விப்பட்டு இருப்பியே... அவன் முதல்வரோட ஆளு!''

''ஐயோ... உங்களுக்கு ஒரு பிரச்னை வரும்போது உதவ முடியாத பாவியாப் போயிட்டேனே... கொஞ்ச நேரத்துக்கு முந்திதான் என்கிட்டே இருந்து உள்துறை அமைச்சர் பதவியைப் பிடுங்கிட்டாங்க குருஜி. எந்த போலீஸ்காரனும் என் பேச்சைக் கேக்கமாட்டான். உங்க மீதான கைது நடவடிக்கையை என்னால் தடுக்க முடியும்னு தோணலை. நீங்க உடனே

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*அமெரிக்கா... இல்லாட்டி ஏதாவது ஒரு ஐரோப்பிய நாட்டுக்குத் தப்பிப்போயிடறதுதான் நல்லதுன்னு தோணுது. இல்லாட்டி, உங்களைப் பிடிச்சு பத்து, பதினஞ்சு வருஷத்துக்கு உள்ளே வெச்சிடுவானுங்க. இப்பல்லாம், செக்ஸ் ரீதியான குற்றச்சாட்டு வந்தா, நீதிமன்றங்களும் ரொம்ப சீரியஸாப் பாக்குது. பத்திரிகைக்காரனுங்களும் காலாட்டிக்கிட்டே கவர் ஸ்டோரி போட்டு வெளுத்துடுவானுங்க.''*

*''இப்ப நான் என்ன செய்யணும்னு சொல்ற, ஜெகன்னாத்?''*

*''நான் உங்க பாதுகாப்புக்கு உடனே ஆள் ஏற்பாடு பண்றேன். வண்டியும் ஏற்பாடு செய்றேன். நேபாள் பார்டர் வரைக்கும் பத்திரமா எங்க ஆளுங்க கொண்டுபோய் விடுவாங்க. காட்மாண்டு ஏர்போர்ட்டுக்குப் போங்க. அங்கே இருந்து, உங்க கையில் தயாரா எந்த நாட்டுக்கு விசா இருக்குதோ... அந்த நாட்டுக்குப் பறந்துடுங்க. மத்ததை அப்புறம் பேசிக்கலாம்!''*

www.t.me/tamilbooksworld

*''ரொம்ப நன்றி ஜெகன்னாத். இன்னொரு முக்கியமான உதவியும் நீ செய்யணும்...''*

*''முடிஞ்சா சத்தியமா செய்யறேன் குருஜி... தயவுசெஞ்சு சொல்லுங்க''*

*''தமிழ்நாட்டைச் சேர்ந்த ஒரு பக்தன் எனக்கு மிக விசேஷமான ஒரு சிவலிங்கத்தைக் கொடுத்து இருந்தான். ரெய்டு நடக்குறதுக்கு ரெண்டு நாள் முன்னாடி, என்னோட ஆசிரமக் குடிலுக்குள் இருந்து அந்த சிவலிங்கத்தை யாரோ திருடிட்டுப் போயிட்டாங்க. மிக அபூர்வ சக்திகொண்ட சிவலிங்கம் அந்த ஆசிரமத்தைவிட்டுப் போனதால்கூட, இந்த ரெய்டு சோதனை எல்லாம் தொடங்கி இருக்கலாம்''*

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

''நான் என்ன செய்யணும் குருஜி?''

''உன்னால் டி.ஜி.பி. பதவிக்கு வந்த மௌர்யா, நீ என்ன சொன்னாலும் செய்வார்னு சொன்னியே... அவர் உதவியோடு போலீஸை முடுக்கிவிட்டு அந்த அபூர்வ சிவலிங்கத்தைக் கண்டுபிடிக்கச் சொல்லு. நான் திரும்பி வர்ற வரைக்கும் அதை உன் கஸ்டடியில வெச்சுக்க''

''அமைச்சர் பதவி போன நிமிஷத்தில் இருந்து, அந்த டி.ஜி.பி. பயலும் என் போனை எடுக்கிறதே இல்லை குருஜி''

''அட ஆண்டவா! இப்படியா சோதனைகள் கூட்டம் கூட்டமா வரணும்? பரவாயில்லை... இப்ப நான் சொல்றேன் கேட்டுக்க... உன் பதவியைப் பறிச்ச, எனக்கு வந்த சோதனைக்குக் காரணமான அந்த முதலமைச்சர் இனியும் பதவியில் நீடிக்க முடியாது. அவருக்கு டயம் முடிஞ்சுட்டே இருக்கு!''

www.t.me/tamilbooksworld

''உங்க அருள் வாக்கு அப்படியே பலிக்கட்டும், குருஜி!''

''ஜெய் சம்போ!''

- தொடர்ந்து சந்தேகிப்போம்...

Copyright © Vikas Swarup 2008

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

மோட்டிவ் 6

**46**

உள்துறை அமைச்சர் ஜெகன்னாத் ராய் பதவி பறிக்கப்பட்டதும், ஆட்சிக் கவிழ்ப்பு வேலைகளில் ஈடுபடுகிறார். அவரது பர்சனல் டெலிபோன் உரையாடல்கள் தொடர்கிறது...

## அடிபட்ட பாம்பு!

''பையாஜி... ஒரு நல்ல நியூஸ்... ஒரு கெட்ட நியூஸ்!''

www.t.me/tamilbooksworld

''நல்ல நியூஸை முதல்ல சொல்லு, திரிபுராரி!''

''நமக்கு வேண்டிய மிச்சம் ஒரு எம்.எல்.ஏ-வையும் கரெக்ட் பண்ணியாச்சு.''

''உடனே அத்தனை பேரையும் நம்ம கெஸ்ட் ஹவுஸ்ல கொண்டுபோய் ஹவுஸ் அரெஸ்ட்ல வையி. அவனுங்களுக்கு என்ன வேணும்னாலும் கொடு. ஆனா, செல்போனை மட்டும் கொடுக்காதே. அத்தனை பேர் போனையும் புடுங்கி வெச்சிடு! கவர்னர் கூப்பிடுற வரைக்கும் அவனுங்க எங்கே இருக்கானுங்கனு யாருக்கும் தெரியக் கூடாது. அது உன் பொறுப்பு!''

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

''எல்லாம் நான் செஞ்சு முடிச்சிட்டேன் பையாஜி. ஏ.ஸி. பஸ்ல மொத்தமாப் போட்டு, பாடிகார்டுகளையும் கூடவெச்சு கெஸ்ட் ஹவுஸுக்கு அத்தனை பேரையும் 'பேக்' பண்ணிட் டேன்.''

''அப்புறம் என்ன... கெட்ட நியூஸைச் சொல்லு!''

''எதிர்க் கட்சித் தலைவர் திவாரி இப்பத்தான் பேசினாரு. நம்ம கட்சி மற்றும் சுயேச்சை எம்.எல்.ஏ-க்களை நீங்க கரெக்ட் பண்ணி வெச்சிருந்தாலும், இதுவரை முதல்வருக்குக் கொடுத்திருந்த ஆதரவை உங்களுக்குக் கொடுக்க முடியாதாம்!''

''என்னய்யா குண்டைத் தூக்கிப் போடுறே? நேத்துக்கூட நானே போன்ல பேசுனேனே... முதல்வரை ஒழிச்சிட்டு என்னை முதல்வராக்குறதுல ரொம்ப சந்தோஷம்னு சொன்னாரே அந்த ஆளு?''

tamilbooksworld

''இருக்கலாம் பையாஜி. ஆனா, அவங்க கட்சியோட தலைமை நிர்வாகக் குழுவுல நேத்து சாயங்காலம் மீட்டிங் போட்டாங்களாம். உங்களை எதிர்க்கட்சி எம்.எல்.ஏ-க்கள் ஆதரிக்கிறதுபத்தி தனிப்பட்ட முறையில் யாருக்கும் பிரச்னை இல்லை. ஆனா, உங்க பையன் விவேக் விக்கி ராய் பற்றி மீடியாக்கள் நடத்துற விமர்சனங்கள்தான் யோசிக்கவைக்குதாம். ரூபி கில் கொலை கேஸ்ல விவேக் விக்கி ராய் 'நிரபராதி'னு விடுதலை ஆனது பத்தி ஜனங்க மனசுல இருக்கிற கேள்விகளும் வெறுப்பும் எதிர்க்கட்சிக்காரங்களைப் பின்வாங்க வைக்குது. இந்தச் சூழ்நிலையில்

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

உங்களை முதல்வராக்க அவங்க ஆதரவு காட்டுனா, ஜனங்களோட வெறுப்பு அவங்க கட்சி மேலேயும் திரும்பிடும்னு பயப்படுறாங்க! கட்சிக்கு இமேஜ் போயிடும்னு நடுங்குறாங்க!''

''(பிறப்பு தொடர்பான கடும் வார்த்தையுடன்) இப்ப மட்டும் என்னய்யா அவனுங்களுக்கு பெரிசா இமேஜ் வாழுது? அவனுங்க கட்சிக்காரன் ஆளும்போது பண்ணாத ஊழலா? இப்ப மட்டும் ஜனங்க இவனுங்களை புனித சிகாமணியா நினைச்சுக்கிட்டு இருக்காங்களாமா?''

''நீங்க சொல்றதும் நியாயம்தான் பையாஜி. ஆனா, விவேக் விக்கி ராய் விஷயத்துல எதிர்க்கட்சி தவிர, சில சுயேச்சை எம்.எல்.ஏ-க்களேகூட ஆரம்பத்துல இந்தக் கருத்துதான் சொன்னாங்க. இந்த நேரத்துல விக்கி ராய் பத்தி ஆர்ப்பாட்டமா, படாடோபமா நியூஸ் எதுவும் வராமப் பார்த்துக்குறது நமக்கு நல்லது. அதே சமயம், எதிர்க்கட்சித் தலைவர் திவாரி வேறு ஒரு ஆஃபர் உங்களுக்கு வைக்கிறார்!''

www.t.me/tamilbooksworld

''அதென்னது?''

''உங்களை முதல்வர் ஆக்கி, உங்க ஆட்சிக்கு ஆதரவு கொடுக்குறது மட்டும்தான் பிரச்னையாம். அதே சமயம், இந்த ஆட்சிக்கு ஆதரவா நிக்குற தன்னோட ஹோதாவைப் பயன்படுத்தி, அவரே போயி முதல்வர்கிட்டே பேசுறாராம். உங்களை உள்துறை அமைச்சர் பதவியிலேயே தொடரச் செய்யும்படி சிபாரிசு பண்றாராம். ஆனா, அதுக்கு நீங்க 1 கோடி தரணும்னு கேக்குறாரு!''

''நீ என்ன நினைக்குற?''

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

''புள்ளைங்க பண்ற தப்புகளை, பெத்தவங்க சுமக்குறது புதுசில்ல பையாஜி. இனியாச்சும் விக்கி ராயை கொஞ்சம் அடக்கியே வாசிக்கச் சொல்லுங்க. நீங்க உள்துறை அமைச்சர் பதவியை மறுபடி தக்க வெச்சுக்கிட்டாத்தான் உங்களுக்கும் பாதுகாப்பு. இல்லாட்டி, முதல்வர் உங்களைக் கொஞ்சம் கொஞ்சமா நோண்டி நொங்கெடுத்து ஒண்ணுமில்லாம ஆக்கிடுவாரு. இன்னொரு சமயம் வரும்போது அந்த ஆளைக்கவுத்துட்டு, நீங்க ஆசைப்பட்டபடியே முதல்வர் நாற்காலியை அலங்கரிக்கலாம்!''

''ஒரு கோடி குடுத்துடலாம்னு சொல்றியா?''

''ஆமா பையாஜி!''

www.t.me/tamilbooksworld

''உடனே முடியாதே!''

''நீங்க வாக்கு கொடுத்தாலே போதும். பேங்க்ல போட்ட மாதிரினு திவாரிக்குத் தெரியும் பையாஜி!''

''ஒழியுது. அப்படியே செய்!''

''சீமாக் கண்ணு... இப்பவும் டெல்லியில்தான் இருக்கியா?''

''ஆமா... டி.வி. ரிப்போர்ட்டர் வேலையில் இருந்து விடுபட்டு, லக்னோவில் இருந்து இங்கே வந்த பிறகுதான் தாராளமா மூச்சுவிட முடியுது. லக்னோ ஒரு கல்லறை மாதிரி இருந்தது எனக்கு.''

''அப்படி சொல்லாதே கண்ணு. உன்னையே நினைச்சுக்கிட்டு நான் லக்னோவில் இருக்கேன்ல? என் மனசுக்கு ஆறுதலா நாலு வார்த்தை

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

சொல்லக்கூடிய குருஜி... ஏதோ ஃபெதர்லாந்தாமே... அங்கே போயிட்டாரு!''

''ஃபெதர்லாந்து கிடையாது. நெதர்லாந்துனுதான் ஒரு நாடு இருக்கு.''

''ஃபெதரோ... நெதரோ... உன்னைப் பாக்காம என் உடம்புதான் உதறுது! நான் வேணா உன்னைப் பார்க்க டெல்லிக்கு வரட்டா? பிரமாதமான ஹோட்டலுக்கு எல்லாம் நான் ரெகுலர் கஸ்டமர். நம்மைப் பொத்திவெச்சுப் பார்த்துக்கிட்டு, பத்திரமா வெளியே அனுப்புவான்!''

''இப்ப நாம பார்க்க வேணாம். நானே அப்புறம் சொல்றேன். இங்கே ஒரு முக்கியமான வேலையில் இருக்கேன்!''

www.t.me/tamilbooksworld

(பெருமூச்சு) ''சரி... ஒரு முத்தமாச்சும் இப்போதைக்குக் கொடேன்!''

(தயக்கத்துக்குப் பின்) பொச்... பொச்... பொச்!

''திரிபுராரி பேசுறேன், பையாஜி! எதிர்க்கட்சித் தலைவர் பேச்சை முதல்வர் கேட்டுக்கிட்டாரு. மறுபடி நீங்க உள்துறை அமைச்சர் ஆகப் போறீங்க. ஆனா, முதல்வரைக் கவுக்கிறதுக்கு எந்த சதியும் இனி செய்யக்கூடாது என்பது முக்கியமான கண்டிஷன்! முதல்வரே கட்சியில் சர்வ வல்லமைகொண்டவர் அப்படினு நீங்க ஒரு அறிக்கையும் விடணுமாம்.''

''என் தலைவிதி... விட்டுத் தொலைக்கிறேன்! என் கௌரவத்தை விட்டுக்கொடுக்காத மாதிரி நீயே வழவழா கொழகொழான்னு ஒரு அறிக்கை ரெடி பண்ணி ஃபேக்ஸ் அனுப்பு எனக்கு!''

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*''சொல்றேன்னு தப்பா நினைக்காதீங்க, பையாஜி... விவேக் விக்கி ராய் மட்டும் உங்களுக்கு மகனாப் பொறக்காம இருந்திருந்தா, இந்த சோதனைகள் உங்க பொது வாழ்க்கையில் வந்திருக்காது. முதல்வர் என்ன... நீங்க இந்திய தேசத்தின் பிரதமராகவே பதவியில உட்காரக்கூடிய அனுபவமும் தகுதியும் உள்ளவராச்சே! அதை எல்லாம் தாண்டி நீங்க பிளான் பண்ண ஆபரேஷன் செக்மேட் இப்படி ஆகிப்போச்சே!''*

*''யோவ் திரிபுராரி... நான் அடிபட்ட பாம்பு. எனக்குத் தோல்வியே கிடையாது. இப்போதைக்கு என்னோட செக்மேட் வெறும் ஸ்டேல்மேட்தான் ஆகி இருக்குது. சீக்கிரமே வேறு ஒரு காய் நகர்த்தத்தான் போறேன். அப்பப் பாருய்யா... அந்த முதல்வர் அப்படி இப்படி அசைய முடியாம, தானாவே பதவியில இருந்து இறங்கி ஆட்டத்தைவிட்டே ஓடிடுவாரு!''*

www.t.me/tamilbooksworld

*''பையாஜி! நீங்க சொல்ற ரகம் இல்லை... செஞ்சு காட்டுற ரகம். இப்ப சொல்லியே காட்டிட்டீங்க. நானும் உங்களை முதல்வர் பதவியில் பார்க்கக் காத்துக்கிட்டு இருக்கேன்!''*

*''அப்பா! ரொம்ப சந்தோஷம். திரும்ப உள்துறை அமைச்சர் பதவியைப் பிடிச்சதுக்கு! கோடிக் கணக்குல காசைப்போட்டு லம்போர்கினி கார் வாங்கிவெச்சிட்டேனா... நீங்க அமைச்சர் பதவியில் இல்லாட்டி, அதை டெல்லி தெருவில் எப்படி நான் 150 மைல் வேகத்துல தைரியமா ஓட்ட முடியும்? (பெரும் சிரிப்பு)''*

*''விக்கி... நீ எத்தனை முக்கியமான தருணத்தில் என்னைக் கைவிட்டேனு இப்பக்கூட உனக்குப் புரியலை. அது போகட்டும்... மார்ச் 23 பார்ட்டி கொடுக்கப் போறேன்னியே... தேதி கன்ஃபர்ம்தானே?''*

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

''ஆமாப்பா... ஆனா, என் செக்ரெட்டரி இருக்காளே... அவ ஒரு முட்டாள்! நான் என் ஃபைல்ல வெச்சிருந்த பழைய காண்டாக்ட் லிஸ்ட்டுக்கும் சேர்த்து பார்ட்டி அழைப்பிதழை அவ அனுப்பிட்டா! என்கிட்டே சம்பளத்தை வாங்கிக்கிட்டு, என் கம்பெனி விஷயத்துலயே மகாத்மா காந்தி வேஷம் போட்ட மோகன் குமாருக்கும் பார்ட்டி அழைப்பிதழ் போயிடுச்சு. அதே மாதிரி, உங்களுக்குப் பிடிக்காத அந்த சிங்கானியா குரூப் சேர்மனுக்கும் இன்விடேஷன் போயிருக்கு. இப்ப நான் என்ன செய்றது? அவங்களைக் கூப்பிட்டு, 'பார்ட்டிக்கு வர வேணாம்'னு சொல்லிடவா?''

''விக்கி! உன்கிட்டே பிரச்னையே இதுதான். நீ உன் செக்ரெட்டரிகளை எப்பவுமே மூளையை வெச்சுத் தேர்ந்தெடுக்கிறது இல்லே.... அழகைப் பார்த்து செலக்ட் பண்ணா இப்படித்தான் குழப்படி நடக்கும்!''

www.t.me/tamilbooksworld

''இப்ப நான் என்ன செய்ய?''

''வரச் சொன்ன ஆட்களை வேண்டாம்னு தடுக்கிறது நாகரிகம் இல்லை. அப்படியே விடு. அதோட, அந்த மோகன் தன்னை மகாத்மா காந்தினு சொல்லிக்கிட்டு அந்தப் பார்ட்டியில் ஏதாச்சும் கேலிக்கூத்து பண்ணா... அதுவும் ஒரு டைம் பாஸ் மாதிரிதான் இருக்கும்!''

''நடுவுல ஒரு சந்தேகம் டாடி... மீடியாவெல்லாம் ஒரு கூச்சலா இருக்குதே... என் கேஸை மறுவிசாரணைக்கு எடுத்துட மாட்டாங்கதானே?''

''அது எல்லாம் நடக்காது. நீ சந்தோஷமா இரு!''

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*''டாடி, ரொம்ப அவசரம்னு நீங்க பணம் கேட்டப்ப, நான் உதவ முடியாமப்போச்சு. என் மேல உங்களுக்கு வருத்தம் எதுவும் இல்லையே!''*

*''நிச்சயமா இல்லை. கடந்த காலத்தைப் புடிச்சுத் தொங்குற வழக்கம் எனக்கு எப்பவுமே கிடையாது.''*

*''இன்னொரு விஷயம்ப்பா! சீமானு ஒரு டி.வி. ரிப்போர்ட்டர் என்னைப் பார்க்க வந்தா... பேட்டி எடுப்பானு பார்த்தா, சினிமா சான்ஸ் கேக்குறா!''*

*''நீ என்ன சொன்னே?''*

*''அதெல்லாம் முடியாதுனு சொல்லத்தான் நினைச்சேன். அவ உங்களுக்கு ரொம்ப ரொம்ப க்ளோஸான பொண்ணுன்னு சொன்னா. அதுவும் தவிர...''*

www.t.me/tamilbooksworld

*''என்ன மகனே..?''*

*''அவ, எனக்கும் ரொம்ப க்ளோஸ் ஆயிட்டாப்பா. எது கேட்டாலும் கோ-ஆபரேட் பண்றா. ஆளும் நல்லா 'கிண்'ணுன்னு இருந்தாளா... என்னால மறுத்து எதுவும் சொல்ல முடியாமப்போச்சு!''*

*''அது எச்சில் தட்டுடா மகனே...''*

*''இருக்கலாம்ப்பா! நீங்க என்ன காலாகாலத்துக்கும் அதிலேயே சாப்பிட்டு, பத்திரமா உங்க பீரோவுல பூட்டிவெச்சுக்கவா போறீங்க..?*

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*என்னிக்காச்சும் நீங்க தூக்கிப் போடப்போற தட்டுதானே! அதை நானும் கொஞ்சம் யூஸ் பண்ணிக்கிட்டேன்!''*

*(மறு முனையில் அமைதி)*

*''டாடி... லைன்ல இருக்கீங்களா... ஹலோ...''*

*(டொக்!)*

- தொடர்ந்து சந்தேகிப்போம்...

Copyright Ⓒ Vikas Swarup 2008

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

## மோட்டிவ் 6

# மோட்டிவ் 6

SIX SUSPECTS

● விகாஸ் ஸ்வரூப் ● தமிழில்: அஞ்சனா தேவ்

**47**

பதவியை இழந்த ஜெகன்னாத் ராய், உள்ளடி வேலைகள் செய்து மறுபடியும் அதே உள்துறை அமைச்சர் பதவிக்கு வருகிறார். பதவி இல்லையென்று அவரைக் கண்டுகொள்ளாமல் தவிர்த்ததோடு, சினிமா சான்ஸுக்காக ஜெகன்னாத்தின் மகனையே வளைத்துப்போட்ட சீமா பீஷ்ட் மீண்டும் ஜெகன்னாத் ராயைத் தொடர்புகொள்கிறாள்.

www.t.me/tamilbooksworld

சொந்தமென்ன பந்தமென்ன?

''ஹலோ நான் சீமா பீஷ்ட் பேசுறேன். பத்து தடவை கூப்பிட்டேன். நீங்க எடுக்கவேயில்லையே... மறுபடி உள்துறை அமைச்சர் பதவியைத் தக்கவெச்சுக்கிட்டதுக்கு கங்கிராட்ஸ்! எனக்கு எவ்ளோ சந்தோஷமா இருக்கு தெரியுமா?''

''போனை வைடி தராதரம் தெரியாத தே... ..ளே!''

(டொக்)

''ஹலோ, நொவோடெல் ஹோட்டலா?''

''யெஸ் சார்!''

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

''கனெக்ட் மீ டு ரூம் நம்பர் 567, ப்ளீஸ்!''

''ஒன் மொமென்ட் சார்.''

பீப்... பீப்... பீப்...

''(பெண் குரல்) ஹலோ, ஹூ இஸ் திஸ்?''

''என் பெயர் ஜெகன்னாத் ராய்... இந்தியாவில் இருந்து பேசுறேன்... குருஜிகிட்டே கொடுங்க!''

''(கிசுகிசுப்பான குரலில்) குருஜி! ஸம் ஜெகன்னாத் ராய் ஆன் தி லைன்...''

www.t.me/tamilbooksworld

''(அதே கிசுகிசுப்புடன்) அவன் என்னோட சீடப் பையன்தான். நீ போய் டிரஸ் போட்டுக்கோ... (போனை வாங்கி) ஹலோ ஜெகன்னாத் ராய்?''

''ஆமா குருஜி... யாரது போனை எடுத்தது?''

''அதுதான் சிஸ்டர் ரீனா மாதாஜி! என்னோட ஐரோப்பிய ஆசிரம விவகாரங்களைக் கவனிச்சுக்கிற முக்கியமான சிஷ்யை. நீ சொல்லு ஜெகன்னாத்... என்ன விஷயமா இப்ப ஆம்ஸ்டர்டாமுக்குக் கூப்பிட்டே?''

''நான் ரொம்ப சலனப்பட்டுப் போயிருக்கேன் குருஜி. உயிர் வாழ்க்கை என்கிற தத்துவம் பற்றி நீங்க அடிக்கடி பிரசங்கம் செஞ்சிருக்கீங்க... அதைக் கேட்கும்போதெல்லாம் குழம்பிய மனசுக்கு ஒரு தெளிவு கிடைக்கும். இப்பவோ நீங்க பல ஆயிரம் மைல் தள்ளி

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

இருக்கீங்க... நானோ உச்சகட்டக் குழப்பத்திலும் கோபத்திலும் இருக்கேன்!''

''என்ன கோபம் ஜெகன்னாத். நீ முதல்வர் ஆக முடியலையேன்னா... நான் இங்கேயும் உ.பி. நியூஸை ஃபாலோ பண்ணிட்டுத்தான் இருக்கேன். நிச்சயம் நீ ஒரு நாள் முதல்வர் நாற்காலியில் உட்காருவே, பாரு!''

''அதுக்கு நான் சில யோசனைகள் வெச்சிருக்கேன் குருஜி. அதை எல்லாம் போன் மூலமாப் பேச முடியுமான்னு புரியலை!''

tamilbooksworld

''எப்படியோ... நீ முதல்வர் ஆகணும் ஜெகன்னாத். அதுவரைக்கும் நான் இந்தியா பக்கமே வர வேண்டாம்னு பார்க்கிறேன்!''

''குருஜி... மகாபாரதத்தில் குழம்பிப்போன அர்ஜுனன் மாதிரி உங்களைக் கேட்கிறேன். ஒருத்தரைக் கொல்வது என்பதுதான் உச்சகட்டப் பாவமா?''

''கொலையா? நித்தியமற்ற இந்த உடலையா? (பெரும் சிரிப்பு) உடல் என்பது முயலுக்குக் கொம்பு மாதிரி... கானலுக்குத் தண்ணீர் மாதிரி... அது ஒரு பொய்த்தோற்றம் ஜெகன்னாத்! நீ அழிக்காமல் விட்டாலும், இயற்கை ஒரு நாள் அந்த மாயைத் தோற்றத்தை அழித்தே தீரும்!''

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

''உடல் அழிந்தாலும், ஆன்மா அழியாதுதானே குருஜி?''

''நிச்சயமாக!''

''ஒரு உடலில் இருந்து பிரிகிற உயிர், இன்னொரு உடலாக மறுபடி இயக்கம் பெறும் என்பது சத்தியம் தானே குருஜி?''

''கட்டாயமாக!''

''நெருங்கிய உறவில் உள்ள ஒருவனைக் கொன் றாலும்கூட, அவன் மறுபடி ஜென்மம் எடுத்து வரத்தானே செய்வான் குருஜி?''

''நன்றாகப் புரிந்துகொண்டாய். நிஜமான யோகி என்பவன், உறவுகளைப் பார்ப்பதில்லை. செய்ய வேண்டிய கர்மாவை மட்டுமே பார்க்கிறான்.''

www.t.me/tamilbooksworld

''ரொம்ப நன்றி குருஜி! இப்போ எனக்குள் ஒரு தெளிவை நீங்க உண்டாக்கிட்டீங்க!''

''சம்போ மகாதேவ! என் வாரன்ட்டை கேன்சல் பண்றதுக்கு ஏதாவது செய் ஜெகன்னாத். இங்கே என்னோட விசா டைம் ரெண்டு மாசத்தில் முடிஞ்சுடும். இங்கே அதுக்கு மேல் தங்க முடியாது. என் எதிரியான அந்த ஃபிராடு சாமியார் பிரம்ம தியோ வேற குடைச்சல் பண்றான். நான் இந்தியாவில் இல்லாத நேரத்தில், அவனோட ஆசிரமத்தை வேகமா டெவலப் பண்ணுறானாம். எனக்கு எதிராகப் பல பெண்களைத் தூண்டிவிட்டு, மேலும் மேலும் செக்ஸ் குற்றச்சாட்டு புகாரை பதிவு செய்துகொண்டே இருக்கிறானாம்...''

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*''கவலையே வேண்டாம் குருஜி! எனக்குத்தான் நீங்க தெளிவு ஏற்படுத்திட்டீங்களே... விரைவில் நான் முதல்வர் ஆவேன். வெயில் கண்ட பனி மாதிரி... உங்க மேலே உள்ள வழக்கெல்லாம் ஓடி ஒளியும்! நீங்க அதே தேஜஸோடு வந்து ஆசிரமத்தை ஏற்று நடத்துவீங்க!''*

*''ஜெய் சம்போ!''*

*''முக்தார்?''*

*''யெஸ் பாஸ்!''*

*''லக்னோலதானே இருக்கே?''*

*''ஆமா பாஸ்!''*

www.t.me/tamilbooksworld

*''நீ உண்மையான இஸ்லாமியன்தானே...?''*

*''அப்படிச் சொல்ல முடியாது பாஸ். தவறாமல் தொழுகை செய்வதால் மட்டுமே, ஒருவன் உண்மையான இஸ்லாமியன் ஆகிட முடியுமா? நான் செய்கிற பல காரியங்கள் உங்களுக்குத் தெரியாதா பாஸ்?''*

*''அது போகட்டும்.. இறைவனுக்கு சித்தம் என்றால் யாரையும் பலி கொடுக்கத் தயாராக வேண்டும் என்பதை நீ ஒப்புக்கொள்கிறாயா?''*

*''பாஸ்..?''*

*''உனக்கு நான் ஒரு வேலை கொடுக்கப்போறேன். மனசைக் கல்லாக்கிட்டு அதை நீ செஞ்சுதான் ஆகணும், முக்தார்!''*

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

''உத்தரவு பாஸ். என்ன செய்யணும், சொல்லுங்க!''

''போன்ல முடியாது. நேரா என் கெஸ்ட் ஹவுஸ¨க்கு உடனே வா!''

(டொக்)

**அமெரிக்க அசட்டு மாப்பிள்ளை!**

ஹாய்... லாரி பேஜர் என்கிற இந்த அமெரிக்க இளைஞனை உங்களுக்கு நினைவிருக்கிறதா? கடிதங்களின் மூலமாகவே அறிமுகமாகி, இன்று என்னைக் கல்யாணம் பண்ணிக்கொள்ள டெல்லியில் காத்திருக்கிற இந்திய தேவதை 'சப்னா'வைத் தரிசிக்கும் கனவுகளோடு யுனைடெட் ஏர்லைன்ஸ் விமானத்தில் உங்கள் நாட்டுக்கு வந்திருக்கிறேன்.

www.t.me/tamilbooksworld

மதியம் 3.20-க்கு என் விமானம் டெல்லி ஏர்போர்ட்டைத் தொட்டது. அதுவரையில் படுடீசன்ட்டாக வந்த பயணிகள், விமானத்துக்கு வெளியே ஏதோ இலவச மிட்டாய் தருகிற ரேஞ்சுக்கு பாய்ந்தடித்துக்கொண்டு இறங்கியது வேடிக்கையாக இருந்தது எனக்கு. நான் என் ஸீட்டுக்கு அருகே இருந்த எல்லாப் பத்திரிகைகளையும், பணிப்பெண்கள் அளித்த சாக்லெட்களையும் அள்ளிப் பையில் போட்டுக்கொண்டு, மெதுவாகத்தான் இறங்கினேன்.

விமான நிலையத்தில் பாஸ்போர்ட், விசாவை சோதிக்கிற இடத்தில் இருந்த அதிகாரி மூன்றுகால் ஆமையைவிட ஸ்லோவாக இருந்தான். ரெண்டு மூன்று பயணிகளின் ஆவணங்களை சரிபார்ப்பது... உடனே போய் காபி - டீ குடிப்பது... அல்லது பக்கத்து ஸீட் அதிகாரியுடன் அரட்டையடிப்பது என்று பொறுமையை சோதித்தான். ஒருவழியாக என்

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*முறை வந்தபோது, என் பாஸ்போர்ட்டை வாங்கி, அதில் இருந்த புகைப்படத்தையும் என் முகத்தையும் மாறி மாறிப் பார்த்தான்.*

*''இதில் இருப்பது உங்களை மாதிரியே தெரியவில்லையே?'' என்றான்.*

*''ஓ! நேரில் பார்ப்பதைவிட ஸ்மார்ட்டாக அதில் காட்சி அளிக்கிறேனோ...? பாஸ்போர்ட்டுக்கு விண்ணப்பித்த போது என் அம்மாதான் சொன்னாள்... இருப்பதிலேயே அழகான போட்டோவைக் கொடு என்று! அதான் நான் ஹைஸ்கூல் படித்தபோது எடுத்த படத்தைக் கொடுத்தேன்!'' என்றேன்.*

*கேவலப் பூச்சியாக என்னைப் பார்த்தவன், எழுந்து போய் சக ஊழியனிடம் பாஸ்போர்ட்டைக் காட்டி, ஏதோ பேசினான். திரும்பி வந்து, ''ஸாரி, உங்க பாஸ்போர்ட் போலி என்று சந்தேகப்படுகிறோம். மறுபடி உங்கள் நாடான அமெரிக்காவுக்கே உங்களை டிபோர்ட் செய்வதைத் தவிர வேறு வழி இல்லை!'' என்றான்.*

www.t.me/tamilbooksworld

*நான் கதறிவிட்டேன். ''மிஸ்டர்! நான் கல்யாணக் கனவோடு, கைக்காசை எல்லாம் போட்டு டிக்கெட் எடுத்து உங்கள் தேசத்துக்கு வந்திருக்கிறேன். என் ஆசையில் மண் அள்ளிப் போடாதீர்கள்!'' என்றேன்.*

*மறுபடி சக ஊழியனுடன் சீரியஸாக ஏதோ பேசினான். திரும்பி வந்தவன், ''உங்களுக்கு உதவி செய்ய நான் தயார். ஆனால், பதிலுக்கு நீங்கள் எனக்கு ஒரு உதவி செய்ய வேண்டும்!'' என்றான்.*

*''சொல்லுங்கள்...'' என்றேன் சற்று நிம்மதியாகி.*

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

''எனக்கு ஒரு ஹாபி இருக்கிறது. வெளிநாட்டு கரன்ஸிகளை சேகரிப்பது! அதிலும் அமெரிக்க டாலர் என்றால் உயிர். அதில் எல்லா வகை நோட்டையும் சேர்த்துவிட்டேன். 100 டாலர் மட்டும்தான் என் கலெக்‌ஷனில் இல்லை. ஒரு 100 டாலர் நோட்டை உங்கள் பாஸ்போர்ட்டுக்குள் வைத்து, என் டேபிள் மீது தள்ளிவிட முடியுமா?''

நான் கடவுளுக்கு நன்றி சொன்னேன். அவனுடைய கலெக்‌ஷனில், 1,000 டாலர் நோட்டு மிஸ் ஆகியிருந்தால், என் கதி என்னவாகி இயிருக்கும்? அவ்வளவு ஏன்... அமெரிக்காவில் டிபார்ட்மென்ட்டல் ஸ்டோரில் வேலை பார்க்கும் நானே 1,000 டாலர் நோட்டைத் தொட்டுப் பார்த்தது கிடையாது!

அவன் சொன்னபடி செய்ததும், பாஸ்போர்ட்டில் முத்திரை குத்தி, ''வெல்கம் டு இண்டியா. ஹேவ் எ நைஸ் டே மிஸ்டர் லாரி பேஜ்'' என்று வாழ்த்தினான். கொஞ்சம் டாலர்களை இந்திய ரூபாய்களாக மாற்றிக்கொண்டு, விமான நிலைய ஏ.ஸி-யில் இருந்து வெளிப்பட்டு கதவைத் திறந்தபோது, பிரஷர் குக்கருக்குள் தலையைவிட்ட மாதிரி இருந்தது. இத்தனை சூடா இந்தியா?

www.t.me/tamilbooksworld

என் பாக்கெட்டில் இருந்த 'சப்னா'வின் போட்டோவை எடுத்துப் பார்த்துக்கொண்டேன். பேய்த்தனமான இந்தக் கூட்டத்தில் அவள் எங்கே நிற்கிறாள்? தேடித் தேடி அலுத்ததுதான் மிச்சம். அவள் தென்படுகிற வழியாகக் காணோம்! மூன்று மணி நேரம் அலைந்தேன். ''டாக்ஸி... டாக்ஸி!'' என்று பிடுங்கி எடுத்தவர்களிடம் இருந்து தப்பித்து அங்கும் இங்கும் அலைந்தேன். கடைசி வரை 'சப்னா'வைக் காணாமல், லக்கேஜைத் தூக்கிக்கொண்டு விமான நிலையத்தில் வெளியே செல்லும் பாதை வரை நடந்தேன். அங்கேதான் 'சப்னா'வைப் பார்த்தேன்.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*என் இதயம் கவர்ந்த அதே ஏஞ்சல் புன்னகையுடன், கைகளைக் குவித்து 'நமஸ்தே' என்றபடி, கழுத்து நிறைய நகைகளைப் போட்டுக்கொண்டு நின்று இருந்தாள்... பிரமாண்டமான பேனரில்!*

- தொடர்ந்து சந்தேகிப்போம்...

Copyright © Vikas Swarup 2008

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

மோட்டிவ் 6

# மோட்டிவ் 6

SIX SUSPECTS

● விகாஸ் ஸ்வரூப் ● தமிழில்: அஞ்சனா தேவ்

## டெல்லியில் லாரி பேஜர்!

48

நான் சட்டென்று அழுதுவிடுகிற ஆள் கிடையாதுதான். எனக்குப் பிடித்த 'அண்டர் டேக்கர்', WWF சண்டையில் அடி வாங்கி விழுந்தபோதுதான், கடைசியாக ஒரு தடவை அழுதேன். அதற்கு அப்புறம் இப்போதுதான்! டெல்லி விமான நிலையத்தின் எதிர்ப்புறம், மெகா பேனரில் கைகூப்பி ஒரு நகை விளம்பரத்தில் சிரித்துக்கொண்டு இருந்தாள் என் சப்னா! ஏழைக் குடும்பம் என்று திரும்பத்திரும்ப அவள் தன் கடிதங்களில் சொல்லி இருந்தாளே... என்னதான் பேரழகியாக இருந்தாலும், ஓர் ஏழை எப்படி நகைக்கடை விளம்பரத்தில் இப்படி விண்ணைத் தொட்டு மின்ன முடியும்? ஒருவேளை, விமானத்தில் என் பக்கத்து ஸீட்டில் வந்தவன் சொன்ன மாதிரி, இதில் ஏதோ ஆள் மாறாட்டம் இருக்கிறதோ? பித்தளை மாத்து வேலையில் நான் சிக்கிக்கொண்டு, வெட்டியாக இந்தியாவுக்கு வந்திருக்கிறேனா?

www.t.me/tamilbooksworld

பலவீனமாக நடந்து போய் ஒரு டாக்ஸி டிரைவரை அடைந்தேன். தலையில் டர்பன் கட்டி, காடு மாதிரி தாடி வளர்த்திருந்த அவர், ''சார், டெல்லிக்குப் புதுசா?'' என்றார். ''இந்தியாவுக்கு வர்றதே இதான் முதல் தடவை!'' என்று நான் சொல்லவும்...

''வாங்கோ ஸாப். எங்கே போகணும்?''

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*பர்ஸை தொட்டுப் பார்த்துக் கொண்டே, ''ஏதாவது சுமாரான லாட்ஜுக்கு!'' என்று நான் பேசிய அமெரிக்க இங்கிலீஷை எப்படியோ புரிந்துகொண்டார்.*

*அமெரிக்காவில் நான் பிறந்து வளர்ந்த ஊரைவிட, டெல்லி பெரிதாக இருந்தது. பஸ், கார், டாக்ஸி, மூன்று சக்கர வாகனங்கள், சைக்கிள் என்று எல்லாமே விழுந்தடித்துக்கொண்டு பறந்தன. ஒருத்தர் மேல் ஒருத்தர் உரசிக்கொள்ளாமல் எப்படி நெருக்கமாக, இத்தனை அதிவேகமாக இவர்கள் வண்டியை ஓட்டிச் செல்கிறார்கள் என்று பிரமிப்பாக இருந்தது. 'டாங் டாங்'கென்று ஒரு யானை போவதைப் பார்த்தேன். டி.வி-யில்தான் அதற்கு முன் அந்தப் பிராணியைப் பார்த்திருக்கிறேன்.*

*''ஐயோ, டிரைவர்... காட்டுக்குள் இருந்து இந்த விலங்கு தப்பி ஊருக்குள் வந்துவிட்டதே...'' என்று பதறினேன்.*

*''சாரே... இது ஊருக்குள்ளேயே இருக்கிற பிராணிதான். போகிற வழியிலே பாருங்க... சூப்பரான எருமை மாடு, பசு, ஒட்டகம் எல்லாம் கூட சிட்டிக்குள்ளே பென்ஸ் காருக்குப் போட்டியாப் போகும்!'' என்றார் சிரித்தபடி.*

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*கார் மணிக்கணக்கில் ஓடிக் கொண்டே இருந்தது. இடையில் ஒரு தடவை ஏர்போர்ட்டையே மறுபடி பார்த்த மாதிரிகூட இருந்தது! சந்தேகப்பட்டு விசாரித்தபோது, ''சாரே... டெல்லியில் மட்டும் ஏர்போர்ட்டுக்கும் சிட்டிக்கும் இடையில் தூரம் ரொம்ப ஜாஸ்தி. சுமார் 150 கிலோ மீட்டர்! இந்தியாவுக்கு வந்தா, நீங்கோ முதல்ல கத்துக்க வேண்டியது பொறுமைதான்...'' என்றார். எனக்கு ஒரே குழப்பமாக இருந்தது. என்றாலும், நம்பித்தானே ஆக வேண்டும்!*

*10 அடி அகலமே இருந்த ஒரு தெருவுக்குள் ஆட்கள் மீதெல்லாம் ஏற்றிக் கொல்லுகிற மாதிரி புகுந்து ஒரு பழங்காலத்து மஞ்சள் நிறக் கட்டடத்தின் முன் நிறுத்தினார் டிரைவர். அதன் மேலே, 'ரூபி கெஸ்ட் ஹவுஸ்... பாகர்கஞ்ச்!' என்று போட்டு, 'சுத்தமான - சுகமான - சொகுசு விடுதி' என்று இங்கிலீஷில் எழுதப்பட்டு இருந்தது.*

www.t.me/tamilbooksworld

*ஏர்போர்ட்டில் மாற்றிய பணத்தில் இருந்து, இந்தியப் பணம் ஆயிரத்தை வாங்கிக்கொண்டு விடை பெற்றார் டிரைவர். லாட்ஜுக்குள் போகலாம் என்று பார்த்தால், உடம்பு பூராவும் சேற்றைப் பூசிய ஒரு பசு மாடு, அசை போட்டபடி வாசலை அடைத்து நின்றது.*

*''ச்சூ!'' என்று அதை என் தோள் பையால் முட்டி நகரச் சொன்னபோது, படக்கென்று திரும்பி தன் கொம்பால் என் இடுப்பில் இடித்துத் தள்ளியது. ரோட்டோரம் கொட்டிக்கிடந்த குப்பைகளின் மீது நான் விழுந்தபோது, தெருவோரம் நின்ற வாழைப்பழ வண்டிக்காரன் விழுந்து விழுந்து சிரித்தான். யாரோ பாவப்பட்டு அந்தப் பசு மாட்டை விரட்டியடிக்க, கெந்திக் கெந்தி நடந்து லாட்ஜுக்குள் நுழைந்தேன்.*

*உள்ளே குண்டு பல்பு மட்டும் எரிந்தது. அப்படியும் மிக இருட்டாக இருந்தது. கண் பழகியபோது பார்த்தால்... தலை நிறைய எண்ணெய்ப்*

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

தடவிக்கொண்டு, கண்ணை அடிக்கிற கலரில் சட்டையும் பேன்ட்டும் மாட்டி சிரித்த முகமாய் இருந்தான் ரிசப்ஷனிஸ்ட். வாடி வதங்கிப்போன குரோட்டன்ஸ்களை அலங்காரத்துக்கு வைத்திருந்தார்கள். 2,000 அட்வான்ஸாக வாங்கிக்கொண்டான். எங்கிருந்தோ ஒரு அரை நிஜார் பையன் முளைத்து, என் சூட்கேஸைத் தூக்கிக்கொண்டு இரண்டாம் மாடிக்கு ஓடினான். நான் துரத்திப் பிடித்தபோது, அவன் அறை எண் 211-க்குள் போயிருந்தான். அதை அறை என்றா சொன்னேன்... ம்ஹூம்... பெரிய துளை, அவ்ளோதான்!

ஓட்டைக் கட்டில், உளுத்துப்போன அலமாரி, எண்ணெய் பிசுக்குத் திரைச்சீலை!

''காபி, டீ, கோக், சரக்கு, சிகரெட், பொண்ணு.. ஏதாச்சும் வேணுமா சார்?'' என்றான் அந்த சின்னப் பையன் காஷுவலாக!

www.t.me/tamilbooksworld

ஒரு கோக் குடித்தால் தேவலை போல் இருந்தது. '' 500 சார்!'' என்றான். 10 டாலரா இங்கே ஒரு கோக் விலை? நொந்துபோய் நோட்டை நீட்டினேன். வெளியே ஜன்னல் சீலையை ஒதுக்கிவிட்டுப் பார்த்தபோது, எல்லாக் கட்டடங்களுமே அழுக்காகத்தான் இருந்தன. குறுக்கும் நெடுக்குமாகப் பந்தல் போட்ட மாதிரி தெருவின் மீது வியாபித்திருந்த கேபிள் களைப் பார்த்து அசந்துபோனேன். ஒட்டுமொத்த டெக்ஸாஸுக்கும் கரன்ட் சப்ளை பண்ண இந்த ஒயர்களே போதும் போலிருந்தது.

ரூம் பாய் திரும்பி வந்தபோது, அவன் கையில் கோக் பாட்டில் எதுவும்காணோம். டவுசருக்குள் கையை நுழைத்து ஒரு சின்ன பிளாஸ்டிக் கவரை நீட்டினான். அதற்குள் வெள்ளை பவுடர் மாதிரி இருந்தது.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

''ஏய், வாட் இஸ் திஸ்?''

''துரை! இது ஹை கிளாஸ் கோக். உனக்குன்னே தேடிப் பிடிச்சு வாங்கியாந்தேன். அடிச்சுப் பாரு... ரெண்டு நாளைக்கு உலகம் சுத்திக்கினே இருக்கும்!'' என்றான்.

''டேய் நில்லு!'' என்று நான் கத்தி முடிப்பதற்குள் பையன் போயிருந்தான். பிளாஸ்டிக் கவரை எடுத்து முகர்ந்து பார்த்தேன். அது கோக் மாதிரியோ, பெப்ஸி மாதிரியோ எந்த குளிர்பானத்தின் வாசனையும் அடிக்கவில்லை. ஒருவேளை தண்ணீரில் கரைத்துக் குடிக்கிற மாதிரி இந்தியாவில் அட்வான்ஸாகப் போகிறார்களோ என்று யோசித்தேன். கரைப்பதற்கு தண்ணீரைத் தேடிய அதே சமயம், அறைக் கதவை யாரோ உதைத்துத் திறந்தார்கள். சர்க்கஸ் மிருகத்தின் பருமனில் ஒரு போலீஸ்காரர். அவர் கையில் கொத்தாகச் சிக்கியிருந்தான் ரூம் பையன்.

www.t.me/tamilbooksworld

''ஏய் மிஸ்டர்... அசையாதே...'' என்று கூச்சலிட்டுப் பாய்ந்தார் போலீஸ்காரர். என்னிடம் இருந்த பிளாஸ்டிக் கவரைப் பிடுங்கினார்.

''எனக்கு எதுவும் தெரியாது. நான் கோக் வாங்கி வரச் சொன்னா, இந்தப் பையன் இதை வாங்கி வந்திருக்கான்!'' என்றேன் பேய் முழி முழித்தபடி.

''அச்சா! வாங்கினு வரச்சொன்னது நீதான்னு நீயே ஒப்புக்கிட்டியா! இன்னும் எவ்ளோ கொகெயின் வெச்சிருக்கே சொல்லு!''

''கொகெயினா? அது பயங்கரமான போதைப் பொருள்னு கேள்விப்பட்டிருக்கேனே!'' என்றேன் அதிர்ந்து.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

''அடடா... என்னா நடிப்பு! வெளிநாட்டுல கோடி கோடியா சம்பாதிச்சாலும், உன்னை மாதிரி ஆளுங்க டெல்லியில் இந்த பாகர்கஞ்ச் ஏரியாவுல இந்த மாதிரி டஞ்சன் ஹோட்டல்ல வந்து தங்குறதே கோக், மரியுவானா மாதிரி போதையில மிதக்குறதுக்குத்தானே... கட்டாயம் உனக்கு 10 வருஷம் ஜெயில்தான்!'' என்று என்னை நெட்டி ரூமுக்கு வெளியே இழுத்தார் போலீஸ்காரர்.

''ஹேய் டியூட்! நான் கோடீஸ்வரன் கிடையாது. அமெரிக்காவில் ரொம்ப சாதாரணத் தொழிலாளி. இங்கே 'சப்னா' என்கிற பொண்ணைக் கல்யாணம் பண்ணிக்க வந்தேன்!'' என்று நான் திமிறினேன்.

போலீஸோ, தன் இடுப்பில் இருந்து கைவிலங்கை எடுத்தார். சட்டென்று எனக்கு விமானநிலைய அனுபவம் ஞாபகம் வந்தது. இந்திய மந்திரம் இங்கும் எடுபடுமா என்று பார்த்துவிட முடிவு செய்தேன். பர்ஸுக்குள்ளிருந்து 100 டாலர் நோட்டை எடுத்து போலீஸிடம் நீட்டினேன். ''பொழுதுபோக்காக டாலர் கலெக்ஷன் பண்ற ஹாபி உங்களுக்கும் இருக்குமே... உங்க கலெக்ஷனில் இதையும் சேர்த்துக்கோங்க!'' என்றேன். இப்போது போலீஸ்காரரின் கண்கள் மின்னின.

''இந்த தடவை உன்னை மன்னிச்சிட்டேன். இனிமே இப்படி எல்லாம் செய்யாதே...'' என்றபடி ரூம் பையனையும் தள்ளிக்கொண்டு வெளியே போனார். சப்னாவை போட்டோக்களில் பார்த்து மயங்கி, அவள் கடிதங்களில் வழிந்த காதலில் உருகி, கல்யாண ஏற்பாட்டுக்கு அவள் கேட்ட பணத்தையும் அனுப்பிவைத்து, அவளையே நம்பி இந்தியாவுக்கு வந்து இறங்கிய இந்தப் பரிதாப அமெரிக்கனுக்கு முதல் நாளே அனுபவங்கள் இப்படியா 'கோக்'குமாக்காக இருக்க வேண்டும்!

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

பர்ஸுக்குள் இருந்து அவளுடைய போட்டோவை எடுத்து, அவள் கண்களை ஊடுருவிப் பார்த்தேன்... 'நீ நிஜமாகவே சப்னாதானா? அல்லது, விமானத்தில் என் பக்கத்தில் பயணம் செய்தவன் சொன்ன மாதிரி, நீ இந்தியாவின் பிரபல நடிகை ஷப்னம் சக்ஸேனாவா? யாராக இருந்தாலும்... என்னை ஏன் இந்த நிலைமைக்கு ஆளாக்கினாய், பெண்ணே?'

மறு நாள் காலை தூங்கி எழுந்தபோது, ஜன்னல் வழியே நுழைந்த புறாக்கள் என் கட்டிலின் மேல் தத்திக்கொண்டு இருந்தன. அவற்றை விரட்டிவிட்டு, டாய்லெட்டுக்குள் போய் ஷவருக்குக் கீழே நின்றேன். முதலில் கொஞ்சம் சொட்டிய தண்ணீர் அப்புறம் நின்றேபோனது. அரைகுறை ஈரத்தைத் துடைத்துக்கொண்டு வெளியே வந்தேன்.

www.t.me/tamilbooksworld

தேடித் தடுமாறி, லக்கி டூர்ஸ் அண்டு டிராவல்ஸ் என்ற இடத்தைக் கண்டுபிடித்தேன். என் விவரங்களை வாங்கிப் பார்த்த அந்த டிராவல் ஏஜென்ட், ''நேத்துதான் அமெரிக்காவுல இருந்து வந்திருக்கீங்க. நாளைக்கே திரும்பிப் போகணும்னு சொல்றீங்க... அவ்ளோ சீக்கிரம் டிக்கெட் வேணும்னா எண்பதாயிரம் ஆகுமே சார்..'' என்றார்.

நான் பர்ஸை எடுத்து எண்ணிப் பார்த்தேன். ''ரொம்ப சீப்பான விமானமா பார்த்துச் சொல்லுங்களேன். என்னால நாப்பது ஆயிரத்துக்கு மேலே டிக்கெட்டுக்கு செலவு பண்ண முடியாது!'' என்றேன்.

மறுபடி தேடியவர், ''அப்படியும் ஒண்ணு இருக்கு... கொஞ்சம் சுத்தியடிச்சு நியூயார்க் போகிற பட்ஜெட் ஃபிளைட் இது. முப்பத்து ஏழாயிரம் ஆகுது. ஆனா, அம்பது நாளைக்கு அப்புறம்தான் இந்த ரேட்டுல கிடைக்கும்!'' என்றார்.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*’’அம்பது நாளா? ஆள் தெரியாத இந்த ஊரில் அத்தனை நாள் நான் தங்கி இருக்க வேண்டுமா? வேறு வழியே இல்லையா?’’*

*’’இதான் சார் உங்க பட்ஜெட்டுக்கு கட்டுப்படி ஆகும். வேற வழியே கிடையாது. அது வரைக்கும் என்ஜாய் டெல்லி!’’*

- தொடர்ந்து சந்தேகிப்போம்...

Copyright © Vikas Swarup 2008

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

## மோட்டிவ் 6

சப்னா மீதான காதலுக்காக டெல்லி வந்து சேர்ந்த அசட்டு அமெரிக்க இளைஞர் லாரி பேஜ் அவஸ்தையோ அவஸ்தையாக அலைகிறார்..!

**இப்படிக்கு கனவுக் கன்னி...**

டிராவல் கம்பெனியைவிட்டு வெளியே வந்து நடந்தபோது, சின்னதான போர்டு ஒன்று கவர்ந்தது.

www.t.me/tamilbooksworld

'ஷைலக் டிடெக்டிவ் ஏஜென்ஸி... திருமண ஏற்பாடுகளுக்குச் சிறந்த முறையில் தகவல் திரட்டித் தரப்படும்' என்றது.

ஒரு ஆளே நடக்கக்கூடிய குறுகிய வராண்டா வழியாகப் போய் உள்ளே எட்டிப் பார்த்தபோது திடுக்கிட்டேன். ஏதேனும் தீ விபத்தோ என்று பயந்தேன். அப்படி ஒரு புகை மண்டலம்!

''யாருங்க... உள்ளே வாங்க!'' என்று அந்தப் புகையின் உள்ளே இருந்து கூலாகவே குரல் கேட்டது.

புகையை நகர்த்திக்கொண்டு முன்னேறியபோது, ஒரு மேஜைக்குப் பின்னால் இற்றுப்போன சுழல் நாற்காலியில் அந்த மனுஷன் தென்பட்டான். தலையில் பிரவுன் கலர் குல்லா, சின்னக் குறுந்தாடி,

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*கூலிங்கிளாஸ். படுசுவாரஸ்யமாகக் காதைக் குடைந்துகொண்டு இருந்தான்.*

*''எனக்கு ஒரு பெண்ணைத் தேடிக் கண்டுபிடிக்கணும்!'' என்றேன்.*

*''ஜுஜுபி மேட்டர்!'' என்றவன், ''அட்ரஸ் - போட்டோ இருக்கா?'' என்றான்.*

*பைக்குள் இருந்த உறையைக் கொடுத்தேன். வாங்கிப் பிரித்து போட்டோக்களைப் பார்த்தவன், விசிலடித்தான். ''இது எங்க ஊர் கனவுக் கன்னி ஷப்னம் சக்ஸேனா. இவங்ககிட்டே உங்களுக்கு என்னா மேன் வேலை ஆகணும்?'' என்றான்.*

www.t.me/tamilbooksworld

*விமானத்தில் என் பக்கத்து ஸீட்டில் இருந்தவனும் இதைத்தானே சொன்னான்!*

*என் கதையை முழுசாகச் சொன்னேன். கேட்டுவிட்டு உச்சுக் கொட்டியவன், ''சப்னா அப்படிங்கிற பேர்ல பிரபல நடிகையோட போட்டோவை அனுப்பி, உங்ககிட்டே ஷோக்கா பணம் கறந்திருக்குது ஏதோ ஒரு பார்ட்டி!'' என்றான்.*

*''என்னை ஏமாற்றிய அந்தப் பெண்ணை என்னால் பார்க்க முடியுமா? கண்டுபிடித்துக் கொடுக்க உங்களால் முடியுமா?'' என்றேன்.*

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

''அரசாங்கம் அனுமதி கொடுத்தா, பின்லேடனையே என்னால கண்டுபிடிக்க முடியும்!'' என்றபடி புகையை இழுத்து அறையை இன்னும் கமறல் ஆக்கியவன், ''அட்ரஸ் ஏதாச்சும் கொடுத்துச்சா இந்தப் பொம்பளை?'' என்றான்.

கொத்துக் கொத்தாக அவளிடம் இருந்து வந்த கடிதங்களின் மேலுறைகளை எடுத்துப் போட்டேன். ''ஸாரி, அவ அனுப்பிய கடிதங்களை உங்களிடம் காட்ட முடியாது. அது ரொம்ப பிரைவேட்!'' என்றேன்.

கபக்கென்று பாய்ந்து கடிதங்களையும் பிடுங்கியவன், ''பிரைவேட் டிடெக்டிவ்கிட்டே வந்தாச்சுன்னா, எதுவுமே பிரைவேட் கிடையாது!'' என்றபடி ஒரே ஒரு கடிதத்தை மட்டும் படித்தான். உறையைத் திருப்பிப் பார்த்துவிட்டு, ''டெல்லியில் ஒரு போஸ்ட் பாக்ஸ் நம்பரைக் கொடுத்திருக்கு. கில்லாடி பார்ட்டிதான். ஆனா, அதுக்கு மேல நான் கில்லாடி தெரியும்ல...'' என்றபடி மறுபடி புகையைக் கக்கிவிட்டு, ''பாஸ், உங்க வேலை முடிஞ்சுதுன்னு நினைச்சுக்கோங்க...'' என்று கெக்கலித்துச் சிரித்தான்.

அட்வான்ஸாக 2,500 வாங்கிக்கொண்டு, ''அடுத்த திங்கள் கிழமை வாங்க... ஃபுல் டீடெயில் எடுத்துவெச்சிடறேன்!'' என்று மறுபடி ஒரு மேகத்தை வாயில் இருந்து செலுத்தினான். இருமிக்கொண்டே எழுந்தேன்.

லாட்ஜுக்குத் திரும்பியபோது, ரிசப்ஷனில் இருந்த டி.வி-யை சோபாவில் அமர்ந்து பார்த்துக்கொண்டு இருந்தான் ஒரு பழுப்புக் கண்ணன். என்னைக் கண்டதும், ''உங்க பேரு லாரி பேஜ்... கரெக்ட்டா? அமெரிக்காதானே?'' என்றான்.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

''அதெப்படி உங்களுக்குத் தெரியும்?'' என்றதும், ''ஹோட்டல் ரெஜிஸ்டர்ல பார்த்தேன்...'' என்றபடி மறுபடி டி.வி-யில் ஆழ்ந்தான். அங்கே சி.என்.என். டி.வி-யில் ரத்த மயமாக உடல்கள் கிடக்க, ஜனங்கள் குறுக்கு மறுக்காக ஓடிக்கொண்டு இருந்தார்கள்.

''என்னாச்சு?'' என்றேன்.

''பாக்தாத்ல மறுபடியும் ஒரு சூசைட் பாமிங் நடந்திருக்கு!'' என்றபடி என்னைக் குறுகுறுப்பாக நோட்டமிட்டான்.

''நீங்க..?'' என்றேன்.

''என் பேர் பிலால் பேக். நான் காஷ்மீர்காரன்!'' என்று பதில் வந்தது. எனக்கு காஷ்மீர் எந்த திசை என்றுகூடத் தெரியாது.

www.t.me/tamilbooksworld

''மிஸ்டர் லாரி பேஜ்! உங்க நாட்டுப் படைகள் ஏன் இன்னும்கூட ஈராக்கைவிட்டு வெளியேற மாட்டேங்குது?'' என்று அவன் கேட்டபோது, ஏதோ நான்தான் அமெரிக்க ஜனாதிபதி என்கிற மாதிரி இருந்தது அவன் கடுப்புப் பார்வை.

அன்றைக்கு சாயங்காலம், விடுதிக்கு எதிரிலேயே இருந்த தள்ளுவண்டிக் கடையில் நான் சாப்பிட்ட உணவு மரணக் காரமாக இருந்தது. சமாளித்து முழுங்கிவிட்டு அறைக்கு வந்தவன்தான்... அடுத்த மூன்று நாளைக்கு வயிறு புடைத்து வீங்கி, உறுமி, பீய்ச்சிக்கொண்டே இருந்தது. தற்செயலாக என் அறைப் பக்கம் எட்டிப் பார்த்த பிலால் பேக், எங்கோ போய் பச்சை நிறத்தில் ஏதோ ஒரு சிரப் கொண்டு வந்தான். அது குடித்த பிறகு கொஞ்சம் தேவலாம்.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

திங்கள்கிழமை நான் போனபோது, அந்த டிடெக்டிவ் அதே கெட்-அப்பில் அதே புகை சூழ இருந்தான். என்னைப் பார்த்ததும், ''ஹரே, மிஸ்டர் லாரி பேஜ். சொன்னதைச் செய்றதுதான் என்னோட ஸ்டைல். உங்க வேலையை முடிச்சிட்டேன்!'' என்றான்.

''மூச்சைப் பிடிச்சுக்கோங்க... நிஜமாவே உங்களுக்கு இந்தக் கடிதங்களை எழுதினது நடிகை ஷப்னம் சக்ஸேனாதான்! பெயரை மாத்தி எழுதி இருக்காங்க!'' என்றான்.

''அவ்ளோ பெரிய ஸ்டாருக்கு எப்படி என்னைப் புடிச்சுப்போனது..?'' என்று நான் திணற...

எனக்கு 'சப்னா' என்ற பெயரில் வந்த கடிதங்களை டேபிள் மீது போட்டவன், ''பாருங்க... கடைசியில் 'எஸ்.எஸ்.' அப்படினு கையெழுத்து போட்டிருக்காங்க... ஷப்னம் சக்ஸேனாவோட சுருக்கம் அதானே? தவிரவும், இந்தியாவுல இருக்கிற எல்லா வி.ஐ.பி-களோட ஒரிஜினல் கையெழுத்தும் என்கிட்டே இருக்கு. அதில் ஷப்னம் கையெழுத்தோட இதை ஒப்பிட்டுப் பார்த்திட்டேன். நூறு பர்சென்ட் இந்த லெட்டர்களை எழுதினது அவங்களேதான்!'' என்று சொல்லி என் முதுகில் தட்டினான்.

''நீங்க சொல்ற நடிகைதான் நிஜமாவே அனுப்பினாங்கன்னா... அவங்ககிட்டேதான் கோடி கோடியாப் பணம் இருக்கணுமே... எதுக்காக கல்யாணச் செலவுக்கு என்கிட்டே பணம் அனுப்பச் சொல்லணும்?'' என்று என் புத்திசாலித்தனத்தைக் காட்டினேன்.

டிடெக்டிவ், ''குட் கொஸ்டின்! கோடி கோடியாப் பணம் இருக்குது... ஆனா, உண்மையான அன்பு காட்டத்தான் அவங்களுக்கு யாரும் இல்லை. அதான், அவங்க போலியா ஒரு அட்ரஸ் கொடுத்து

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

உங்களோட பேனா நண்பர் ஆகியிருக்காங்க. அவங்களுக்காக நீங்க எல்லா வகையான தியாகமும் செய்யத் தயாரா அப்படினு ஒரு டெஸ்ட் வெச்சிருக்காங்க. பணத்தை அனுப்பியது மூலமாக டெஸ்ட்டில் நீங்க ஜெயிச்சிட்டீங்க!''

''அப்புறம் ஏன் ஏர்போர்ட்டுக்கு வந்து என்னை ரிசீவ் பண்ணலை?''

இப்போது டிடெக்டிவ் சுற்றுமுற்றும் கவனமாகப் பார்த்துக்கொண்டான். ''அதையும் நான் விசாரிச்சிட்டேன் மிஸ்டர் லாரி பேஜ். இப்போ, ஷப்னம் சக்ஸேனா மிக பயங்கரமான ஆபத்துல இருக்காங்க. பாலிவுட்டை ஆட்டிப் படைக்கிற சில தாதாக்கள் அவங்களோட உயிருக்குக் குறிவெச்சு இருக்காங்க.

24 நாலு மணி நேரமும் ரகசியமா கண்காணிக்கிறாங்க. வெளிப்படையா வந்து ஏர்போர்ட்டில் உங்களை ஷப்னம் வரவேற்றா, உங்க மேலே அவங்களுக்கு காதல் வந்த கதை தாதாக்களுக்குத் தெரிஞ்சிடும். அதனால், உங்க உயிருக்கேகூட ஆபத்து வரும். அதனால்தான், உங்களை நேரில் வரவேற்காமல் தவிர்த்திருக்காங்க!''

www.t.me/tamilbooksworld

என்னால் இதையெல்லாம் நம்பவே முடியவில்லை! ஆனால், இந்த டிடெக்டிவ் ஆசாமிதான் கையெழுத்தை ஒப்பிட்டுப் பார்த்ததாக அடித்துச் சொல்கிறானே!

''மிஸ்டர் லாரி பேஜ். இந்த ஷப்னம் சக்ஸேனா இன்னிக்கு வேணா புகழின் உச்சியில் இருக்கலாம். இவங்களுக்காக உயிரையே கொடுக்க ஆயிரக்கணக்கான ரசிகர்கள் தயாரா இருக்கலாம். ஆனா, இவங்களோட கடந்த காலம் பத்தி உங்களுக்குத் தெரியுமா? ஆஸம்கர் என்கிற பொட்டல் கிராமத்துல ஸ்கூல் டீச்சரா இருந்த ஒரு அம்மாவுக்கும்

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

பேங்க் கிளர்க்கா இருந்த அப்பாவுக்கும் பிறந்த மூணு பெண் குழந்தையில் இவங்களும் ஒண்ணு. பணத்துக்காக ஆசைப்பட்டு, உள்ளூர் பலே தாதா ஒருத்தனுக்கு இவங்களைக் கட்டிவைக்கப் பார்த்தாங்க. ஒரு நாள் ராத்திரி யாருக்கும் தெரியாம வீட்டை விட்டு மும்பைக்கு ஓடி வந்த இவங்களை, அதிர்ஷ்ட தேவதை சரியான ஆட்கள்கிட்டே அறிமுகப்படுத்தினா. அப்படித்தான் இன்னிக்கு புகழோட உச்சிக்குப் போயிருக்காங்க.

ஆனாலும், சின்ன வயசில இருந்து அவங்களுக்கு இன்னிவரைக்கும் உண்மையான அன்பு கிடைக்கவே இல்லை. பார்க்கிற எல்லா மனுஷங்களுமே இவங்களோட அழகுக்கும் பணத்துக்கும்தான் ஆசைப்படுறாங்க. தான் எதிர்பார்த்த அந்த அன்பை நீங்க எழுதின லெட்டர்களில் ஷப்னம்ஜி உணர்ந்து இருக்காங்க. அதான், உங்களுக்குப் பலவிதமான டெஸ்ட்கள் வெச்சு, இந்தியாவுக்கு வரவழைச்சு கல்யாணம் பண்ண முடிவு எடுத்திருக்காங்க!'' - படுகோவையாகச் சொல்லிக்கொண்டே போனான் தொப்பிக்கார டிடெக்டிவ்.

www.t.me/tamilbooksworld

''அப்படின்னா..?''

''மிக மிக ரகசியமா நீங்க ஷப்னம் சக்ஸேனாவோடு பேசுறதுக்கு நான் ஏற்பாடு செய்ய முடியும்.''

- தொடர்ந்து சந்தேகிப்போம்...

Copyright © Vikas Swarup 2008

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

## மோட்டிவ் 6

லாரிபேஜுக்கு வேறு பெயரில் லெட்டர் போட்டு வரவழைத்ததே பிரபல சினிமா ஸ்டார் சினிமா நடிகை ஷப்னம் சக்ஸேனாதான் என்று தன் 'அரிய கண்டுபிடிப்பை' டிடெக்டிவ் சொல்ல... மறுபடி நப்பாசை முளைக்கிறது இந்த பேக்கு அமெரிக்கனுக்கு!

### காலமெல்லாம் காதல் வாழ்க!

www.t.me/tamilbooksworld

''முதல்ல புதுசா ஒரு போன் வாங்குங்க. ஷப்னம் சக்ஸேனாவின் மிக மிக பெர்சனலான நம்பரை நான் உங்களுக்காகப் பாடுபட்டு தேடிப் புடிச்சிட்டேன். உயிரே போனாலும் இதை வேறு யாருக்கும் தராதீங்க. நீங்க மட்டுமே இந்த நம்பரில் அவங்ககிட்டே பேசுங்க. வேற யார் பேசினாலும் காரியம் கெட்டுப்போயிடும் புரியுதா?'' என்றபடி ஒரு துண்டுச் சீட்டில் நம்பரை எழுதி நீட்டினான் தொப்பிக்கார டிடெக்டிவ். அதை வாங்குவதற்காகக் கை நீட்டிய என்னிடம், ''என் உயிரைப் பணயம் வெச்சு இந்த நம்பரைக் கண்டுபிடிச்சேன், பாஸ். இதுக்கு எக்ஸ்ட்ராவா 2,500 தருவீங்கதானே?'' என்றான்.

இரண்டு நொடிக்கும் குறைவாகவே தேவைப்பட்டது எனக்கு, தலையை ஆட்ட! பர்ஸுக்குள் இருந்து நோட்டுகளை உருவிக்கொடுத்துவிட்டு, அந்த நம்பரை வாங்கிக்கொண்டேன். இப்போது என் மனம் துள்ளாட் டத்தில் இருந்தது.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

எத்தனை தூய்மையான காதலை வைத்திருக்கிறாள் என் மீது! அந்தஸ்து, அழகு, கலாசாரம் எல்லாம் தாண்டி வருவதுதான் காதல் என்று எங்கள் அமெரிக்காவில் யாரும் எனக்குச் சொன்னது இல்லை. ஆனால், இந்தியா ரொம்ப சென்டிமென்ட்டான தேசம் என்று நான் கேள்விப்பட்டது எத்தனை உண்மை!

''உங்களைப் பார்த்தா ரொம்பப் பொறாமையா இருக்குது பாஸ்!'' என்று வாசல் வரை வந்து தட்டிக்கொடுத்தான் தொப்பி.

நேராக மொபைல் கடைக்குப் போய் உசத்தியாக ஒரு போன் வாங்கி, ப்ரீபெய்டு சிம்கார்டும் அங்கேயே வாங்கிப் போட்டேன். விடுதிக்கு வந்து, அறைக்குள் உட்கார்ந்து விரல்கள் உதற அந்த நம்பரை டயல் செய்தேன்.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*''நீங்கள் தொடர்புகொள்ளும் எண் ஸ்விட்ச் ஆஃப் செய்யப்பட்டு உள்ளது!'' என்று பதிவான குரல் சொன்னது. திரும்பத் திரும்ப நம்பரை அழுத்திக்கொண்டே இருந்தேன்.*

*ஒரு வாரம் ஆகியும் எதிர்முனை எடுக்கவே இல்லை. போனில் பேசக்கூட பயப்படுகிறாள் என்றால் ஷப்னம் எத்தகைய ஆபத்தில் இருப்பாள் என்று எண்ணி உருகிப்போனேன். டிடெக்டிவ் கொடுத்த போன் நம்பரை எடுத்து சரிபார்த்துவிட்டு, பர்ஸுக்குள் வைக்கும்போதுதான் கவனித்தேன்... அது கிட்டத்தட்ட காலி. 1,000 இந்திய ரூபாயும்... 200 அமெரிக்க டாலரும்தான் மிச்சம் இருந்தது. ஷப்னம் சக்ஸேனாவை எப்படியாவது நேரில் சந்தித்துவிட வேண்டும். கடைசி வரையில் அது நடக்காமல்போனால், இன்னும் 40 நாட்களில் திட்டமிட்டபடி லோ பட்ஜெட் விமானத்தில் ஏறி, அமெரிக்காவைப் பார்க்கப் புறப்பட வேண்டும்.*

www.t.me/tamilbooksworld

*ஆனால், அதுவரை தாக்குப் பிடிக்கப் பணம்?*

*இந்த காலகட்டத்துக்குள் எனக்கு ஓரளவு நெருக்கமாகி இருந்தான், அதே லாட்ஜில் அடிக்கடி தென்பட்ட பிலால் பேக். அவனிடம், ''அமெரிக்காவில் நான் ஒரு டிபார்ட்மென்டல் ஸ்டோரில் ஃபோர்க் லிஃப்ட் வண்டியை ஓட்டிக் கொண்டு இருந்தேன். இங்கே அந்த மாதிரி வேலை கிடைக்குமா?'' என்றேன்.*

*என்னை பாவமாகப் பார்த்தவன், ''அந்த வேலை எல்லாம் இங்கே உங்களுக்குக் கிடைக்காது. நேற்றைய பேப்பரில் ஒரு விளம்பரம் பார்த்தேன். அது உங்களுக்கு சரியாக இருக்கும்!'' என்று பேப்பரை எடுத்துக் கொடுத்தான்.*

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*''பி.பீ.ஓ. சென்டரில் வேலை செய்பவர்களுக்கு, அமெரிக்க பாணி ஆங்கிலம் கற்றுத்தர ஆள் தேவை. உரிய சான்றிதழ்களுடன் விண்ணப்பிக்கவும்' என்று இருந்தது.*

*''நீங்களே அமெரிக்காக்காரர். உங்களுக்கு எதற்கு அமெரிக்கப் புலமைக்கு சான்றிதழ்? இந்த இன்டர் வியூவுக்குப் போங்க. கட்டாயம் வேலை கிடைக்கும்'' என்றான் பிலால் பேக். அந்த இன்டர்வியூ நாளுக்கு இடையில் பல தடவை ஷப்னம் நம்பரை முயற்சி செய்து, அதே பதிவுக் குரல் கேட்டுப் பொறுமை தொலைத்தேன்.*

*மறுபடி அந்த டிடெக்டிவ் ஆபீஸுக்கே தேடிப்போனேன். வாசலில் பெரிய போர்டு தொங்கியது... 'இடம் வாடகைக்கு கிடைக்கும்' என்று! தொப்பிக்காரன், துப்பறியும் கடையை காலி பண்ணிக்கொண்டு போயே போயிருந்தான்!*

www.t.me/tamilbooksworld

*நொந்து திரும்பி ஒரு சலூன் கடையில் ஷேவுக்கு உட்கார்ந்தபோது, அங்கே கிடந்த இங்கிலீஷ் பத்திரிகையில் ஷப்னம் சக்ஸேனா படம் பெரிசாக வந்திருப்பதைப் பார்த்தேன். அந்தக் கட்டுரையைப் படித்தபோது சிலிர்த்தே போனேன். ஆஹா... தொப்பிக்கார டிடெக்டிவ் ஒன்றும் தப்பான ஆசாமி இல்லை. ஷப்னம் சின்ன வயது தொட்டு நடிகை ஆனது வரை எப்படியெல்லாம் சோதனைகளைக் கடந்தாள் என்று அவன் சொல்லி இருந்தானோ... அது அத்தனையும் இந்த கட்டுரையில் போட்டு இருந்தது. தொப்பிக்காரன் சொல்லாத இரண்டு விஷயங்களும் தங்கச் சுரங்கம் மாதிரி இதில் எனக்குக் கிடைத்தது.*

*ஷப்னம் மும்பையில் வசிக்கும் ஃப்ளாட்டின் விலாசம் இருந்தது. கூடவே, அவள் பிறந்த நாள் மார்ச் 17 என்ற விவரமும் இருந்தது. எனக்கு 'சப்னா' போட்ட கடிதங்களிலும் தன் பிறந்த நாள் என்று*

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

இதையேதான் குறிப்பிட்டு இருந்தாள். அப்புறம் என்ன... 'சப்னா'தான் ஷப்னம் என்பதற்கு வேறு என்ன அத்தாட்சி வேண்டும், சொல்லுங்கள்!

இருக்கிற காசு முழுமைக்கும் அந்த விலாசம் நோக்கி லெட்டர் போட்டே தீர்த்துவிடுவது என்ற வெறியோடு தினம்தினம் போஸ்ட் பண்ணிக்கொண்டே இருந்தேன். ''சோத்துக்கு கொஞ்சம் காசுவெச்சுக்கோ பிரதர்!'' என்று எச்சரித்துக்கொண்டே இருந்தான் பிலால் பேக்.

கனாட் பிளேஸில் அமெரிக்க இங்கிலீஷ் டியூஷன் வாத்தியாருக்கான இன்டர்வியூ நடந்தது.

செத்த காக்காய்க்கு சட்டை பேன்ட் மாட்டி விட்ட மாதிரி இருந்த ஆள்தான் அங்கே எல்லாமே. 'பில் பக்ஷி' என்று தன்னை அறிமுகப் படுத்திக்கொண்டவன், என்னைப் பார்த்து வியந்தான். ''நிஜமாகவே ஒரு அமெரிக்க பிரஜை வந்து பி.பீ.ஓ. பணியாளர்களுக்கு வகுப்பு எடுத்தால், எங்களுக்குப் பெருமைதான்!'' என்று முதல் ரவுண்டிலேயே விழுந்தான்.

www.t.me/tamilbooksworld

பேஸ்பால், வால்மார்ட் என்று எனக்குத் தெரிந்த வரையில் அமெரிக்கா பற்றி நான் அடித்துவிட்டதில், பில் பக்ஷி ரொம்பவே இம்ப்ரெஸ் ஆகிவிட்டான். ''எங்களுடைய 'ராய் ஐ.டி. சொல்யூஷன்ஸ்' கம்பெனி உங்களுக்கு வேலை கொடுத்தாச்சு!'' என்று கிட்டத்தட்டக் கூவினான். பல வெளிநாட்டு கிளையன்ட்கள் தங்களுக்கு இருப்பதாகவும் விமான டிக்கெட் புக்கிங் தொடங்கி, வாஷிங் மெஷின் ரிப்பேர் வரை பல விஷயங்களுக்கு இந்தியாவில் இருந்துகொண்டே அந்த நிறுவனங்களுக்கு கால் சென்டராக இந்த ராய் ஐ.டி. சொல்யூஷன்ஸ் செயல்படுவதாகவும் சொன்னான்.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

''அமெரிக்கன் ரோட்சைட் அசிஸ்டென்ஸ் என்று ஒரு நிறுவனம் அமெரிக்காவில் இருக்கிறது. அந்த நிறுவனத்திடம் சந்தா கட்டியவர்கள், அந்த நாட்டில் எங்காவது போய் வழி தெரியாமல் மாட்டிக்கொண்டு திணறினால்... இந்த நிறுவனத்தின் நம்பருக்கு போன் போடுவார்கள். அவர்கள் கொடுக்கிற குறிப்பை வைத்துக்கொண்டு, சரியான வழியைச் சொல்வதுதான் நம் வேலை. அதாவது, அமெரிக்காவின் அந்த நிறுவனத்துக்கு நாம்தான் அவுட்சோர்ஸிங் கால் சென்டராக செயல்படுகிறோம். டெல்லியில் இருந்து நாம் வழிகாட்டுதல் தருவது அமெரிக்க வாடிக்கையாளர்களுக்குத் தெரியக் கூடாது. அச்சு அசலாக அமெரிக்காவில் இருந்தே பேசுவதுபோல் இருக்க வேண்டும். அதற்கேற்ற ஆங்கில உச்சரிப்பைத்தான் நீங்கள் எங்கள் கால் சென்டர் ஆட்களுக்குச் சொல்லித்தரப்போகிறீர்கள்!'' என்று விளக்கமாகவே (?!) புரியவைத்தான் பில் பக்ஷி.

www.t.me/tamilbooksworld

''அமெரிக்காவின் பகல் நேரம் என்னவோ, அதுதான் இங்கே எங்கள் வேலை நேரம். ராத்திரி 8 மணி தொடங்கி காலை 8 மணி வரை. அந்த வேலை நேரத்துக்கு இடையில் தான் ஊழியர்களுக்கு நீங்கள் இங்கிலீஷ் டியூஷனும் நடத்த வேண்டும், ஓகே-வா?'' என்றான்.

30 ஆயிரம் சம்பளம் என்றான். அவன் எதிரில் விசில் அடிக்காமல் கட்டுப்படுத்திக்கொள்ள ரொம்ப கஷ்டப்பட்டேன்.

அமெரிக்க கம்பெனிகளின் ரேஞ்சில்தான் ஜிலுஜிலு வென்று இருந்தது ராய் ஐ.டி. சொல்யூஷன் ஆபீஸ். குளீரென்று ஏ.ஸி.! டை கட்டிய ஆண்களும் பெண்களும் படை படையாக உட்கார்ந்து போனில் சன்னமான குரலில் வாடிக்கையாளர்களுக்குப் பதில் சொல்லிக் கொண்டே இருந்தார்கள். ராட்சத தேன்கூட்டுக்குள் அமர்ந்து இருப்பதுபோல சுகமான ஒரு ரீங்கார சத்தம் வந்துகொண்டே இருந்தது. பாடம் நடத்த

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*ஆரம்பித்த முதல் நாளே, ''புரொபஸர் லாரி பேஜ்...'' என்று என்னை அங்கிருந்த இளசுகள் அழைக்க ஆரம்பித்தபோது வானத்தில் மிதந்தேன். அமெரிக்காவின் தம்மாத்துண்டு ஊரில், மளிகைக் கடையில் வண்டி ஓட்டிக்கொண்டு இருந்த எனக்கு இந்த புரொபஸர் பட்டம் ஏக கிக் ஏற்றியது. 'ஐயோ, நம்ம அம்மா இங்கே இல்லையே... இதைப் பார்க்க!' என்று உருகிப்போனேன்.*

*பக்கா இந்தியப்பெயர்கள் கொண்ட ஆண்களும் பெண்களும், அமெரிக்க வாடிக்கையாளர்களிடம் ராபர்ட், சூஸன், ஜேசன், ஜேன் என்ற பெயர்களில் உரையாடுவதைக் கவனித்தேன். உச்சரிப்பில் அவர்கள் செய்யும் தவறுகளைக் குறித்துவைத்துக்கொண்டு, வகுப்பு எடுக்கும்போது திருத்தினேன்.*

www.t.me/tamilbooksworld

*வேடிக்கைப் போக்கில் நான்கு வாரங்கள் ஓடிவிட்டன. இரவு முழுக்க கால் சென்டரில் இருப்பேன்... காலை லாட்ஜுக்குத் திரும்பி சாப்பிட்டுப் படுத்தால், அலாரம் வைத்த மாதிரி மாலை ஆறு மணிக்கு எழுந்துவிடுவேன். தவறாமல் தினமும் ஷப்னம் சக்ஸேனா விலாசத்துக்கு ஒரு கடிதமாவது எழுதி, அவளுக்காக நான் காத்திருப்பதை என் விலாசம் மற்றும் மொபைலுடன் காதலாகத் தெரிவிப்பேன். மறுபடி வேலைக்கு வந்தால், மறுநாள் காலை வருவதே தெரியாமல் நேரம் ஓடியிருக்கும்.*

*விதம் விதமான புத்திசாலித்தனமும் திறமைகளும் கொண்ட இந்திய இளைஞர்கள் என்னை ரொம்ப கவர்ந்தார்கள். சாம்பார் - வடை - பூரி - பிரியாணி என்று அவர்கள் கொண்டுவரும் வகை வகையான உணவுகளும் ரொம்பப் பிடித்தன! கல்யாணம் ஆகாத பெண்கள் தங்கள் காதலைப்பற்றி என்னிடம் சொல்லி யோசனை கேட்டார்கள். கல்யாணம் ஆனவர்கள் தங்கள் மாமியாரைப்பற்றி புலம்பினார்கள்.*

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*திடீரென்று ஒருநாள் டிராவல் ஏஜென்ட்டிடம் இருந்து போன் வந்தபோதுதான் உறைத்தது. மறுநாள் நான் அமெரிக்கா திரும்புவதற்கான தினம். ஷப்னத்தைக் கடைசி வரை பார்க்காமலே ஊர் திரும்புவதா என்ற ஏக்கம் வறுத்தது. தொடர்ந்து அவள் வெளியூர் ஷூட்டிங்குகளில் இருப்பதால்தான், என் கடிதத்தைப் பார்க்க முடியாமல் போயிருக்கும் என்று எனக்கு நானாகவே சொல்லிக் கொண்டேன். டிராவல் ஏஜென்ட்டுக்குப் போன் செய்தேன்... ''பணத்துக்குப் பிரச்னை இல்லை. இன்னும் 15 நாட்கள் இங்கே எனக்கு வேலை இருக்கிறது. அதற்குத் தகுந்த மாதிரி ஃபிளைட் டிக்கெட்டை மாற்றிவிடுங்கள்!'' என்றேன். அந்த தேதிக்குள் ஷப்னத்தை பார்க்க முடியாவிட்டால், அதற்குப் பிறகு எந்த யோசனையும் இல்லாமல் அமெரிக்காவுக்குக் கிளம்பிவிடுவது என்று உறுதியாக முடிவெடுத்தேன்.*

www.t.me/tamilbooksworld

- தொடர்ந்து சந்தேகிப்போம்...

Copyright © Vikas Swarup 2008

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

## மோட்டிவ் 6

காதலியைக் கண்டுபிடிக்க முடியாமலும், சொந்த நாட்டுக்குத் திரும்ப வழி இல்லாமலும் தடுமாறுகிறது லாரி பேஜின் நாட்கள்...

### நான் அவன் இல்லை!

அந்த 15 நாட்கள் கழித்தும் ஊர் திரும்ப முடியாமல் விதி விளையாடித் தீர்த்தது. டிராவல் ஏஜென்ட்டிடம் டிக்கெட்டை வாங்குவதற்காக சாலையில் போய்க்கொண்டு இருந்தபோது எதிர்ப்பட்டது ஒரு பெரும் கும்பல். எலும்புக்கூடுபோல வேஷம் போட்டுக்கொண்டு சிலரும், பூதங்கள்போல உடை அணிந்து சிலரும் அந்தக் கூட்டத்தின் முன்னால் நடந்து வர... 'போபால் கொடுமைக்குப் பதில் என்ன? எங்களுக்கு உரிய பணத்தைக் கொடு!' என்று எழுதிய அட்டைகளைத் தாங்கியபடி ஏராளமானவர்கள் கோஷம் போட்டார்கள்.

www.t.me/tamilbooksworld

எனக்குப் புரியவில்லை. என்ன போபால்? எதற்குப் பணம்? அமெரிக்காவில் பேய்களின் தினமாகக் கொண்டாடுகிற ஹாலோவீன் தினம்போல இதுவும் ஏதோ ஒரு விழாக் கொண்டாட்டம் என்றே நினைத்தேன். இப்படித்தான் பேய் வேஷம் போட்டுக்கொண்டு வீடு வீடாக வந்து மிரட்டுவார்கள். அவர்களுக்குப் பணமோ பரிசோ கொடுத்தால்தான் அந்த இடத்தைவிட்டு நகர்வார்கள். அதுபோல, இந்தியாவிலும் இப்படி

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*ஒரு விழா நடக்கிறதுபோல என்று நினைத்தேன். பேய் வேஷம் போட்டுக்கொண்டு வந்த ஒரு பெண்ணை நிறுத்தி, ''ஹேய் லேடி! இந்த கொண்டாட்டத்துக்குப் பெயர் என்ன?'' என்று கேட்டேன்.*

*அவ்வளவுதான்... எகிறிக் குதித்து என் சட்டையை இறுக்கமாகப் பிடித்துக்கொண்ட அவள், ''என்னடா கேட்டே? எங்க சோகம் உனக்குக் கொண்டாட்டமாத் தெரியுதா? எந்த நாட்டுக்காரன்டா நீ?'' என்று உலுக்கத் தொடங்கினாள். டெல்லியில் தங்கியிருந்த இந்த நாட்களில் எனக்கு இந்தி ஓரளவு புரிய ஆரம்பித்திருந்தது. ஆனால், அவள் கோபத்துக்கான காரணம்தான் புரியவில்லை.*

*''நான் அமெரிக்காவில் இருந்து வந்திருக்கிறேன். நீங்கள் இப்படி வேஷம் போட்டு, கோஷம் போடுகிற காட்சி பார்க்க ரொம்ப ஜாலியாக இருக்கிறது...'' என்றேன்.*

www.t.me/tamilbooksworld

*''டேய் பன்னி..! நீ யூனியன் கார்பைடு கம்பெனியை நடத்துன டவ் கம்பெனியோட ஆளுதானே? ஆயிரக்கணக்கான ஜனங்க செத்து, மிச்ச சொச்சம் பேரு கண்ணு, காது இல்லாமக் கிடக்கிறோம். நாங்க படுற அவஸ்தையைப் பார்த்து ரசிக்கறதுக்காக, உன் கம்பெனிக்காரங்க உன்னை அமெரிக்காவில் இருந்து அனுப்பினாங்களா?'' என்று கிறீச்சிட்டாள் அந்தப் பெண்.*

*இதற்குள் கும்பலில் இருந்து ஆண்களும் பெண்களுமாகக் கொத்தாக என் மீது பாய்ந்தார்கள். ''டேய், நம்ம ஜனங்களைக் கொன்னுட்டு தப்பிச்சுப் போன வாரன் ஆண்டர்ஸனோட வாரிசு வந்திருக்கான்டா. போடுங்கடா இவனை!'' என்று கூவிக்கொண்டே தர்மஅடி சாத்தி எடுத்தார்கள்.*

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*''ஐயோ... எனக்கும் நீங்க சொல்ற ஆளுக்கும் எந்த சம்பந்தமும் கிடையாது. நீங்க தப்பான மரத்தைப் பார்த்துக் குரைக்கிறீங்க?'' என்று அமெரிக்க ஆங்கிலப் பிரயோ கத்தில் நான் யதார்த்தமாகச் சொன்னது, அதைவிட வில்லங்கம் ஆகிவிட்டது.*

*''என்னது! குரைக்கிறோமா? டேய், நம்ம ஊருக்கு வந்து, நம்மளையே இவன் நாய்னு சொல்றாண்டா...'' என்று ஒருத்தன் கூவ... இன்னொருத்தன், ''இவன்கிட்டே பணம் எவ்ளோ இருக்குதுனு பாருங்கடா!'' என்று துள்ளினான். ஒருத்தன் என் சட்டை பாக்கெட்டைப் பிடித்து இழுப்பதாக நினைத்து, மொத்த சட்டையையும் டர்ரென்று கிழித்து எடுத்தான். குண்டுப் பெண் ஒருத்தி என் ஜீன்ஸ் பேன்ட்டினுள் கைகளைச் செலுத்தி, அப்படியே அதை கால் வழியாக இழுத்தாள்.*

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

''ஏய, ஹாலோவீன் தினத்தன்னிக்கு 'டிரிக் ஆர் டிரீட்' கேட்பாங்களே... அதையா இவ்ளோ முரட்டுத்தனமா செய்யுறீங்க? பணம் கொடுத்திடறேன்... என்னை விடுங்க...'' என்று நான் கதறித் தீர்த்தும் யாரும் கேட்கவில்லை!

அங்கிருந்து தப்பிப் பிழைத்து மேல் சட்டை இல்லாமல் என் லாட்ஜுக்கு ஓடி வந்த பிறகுதான் பார்த்தேன். பாக்கெட்டில் வைத்திருந்த என் பர்ஸ், பாஸ்போர்ட் எல்லாமே பறிபோயிருந்தன!

டெல்லியில் உள்ள அமெரிக்கன் எம்பஸிக்குப் போய், ''நாளைக்கே நான் ஊருக்குப் போயாக வேண்டும். டிக்கெட் ரெடி. பாஸ்போர்ட் காணோம். புதுசு கொடுங்கள்!'' என்று கேட்டபோது... லாரி பேஜ் என்ற என்னுடைய பெயர் அங்கே திடீர் பரபரப்பை ஏற்படுத்தியது. மற்றவர்களை எல்லாம் தள்ளிவிட்டு, என்னை நேராக உள்ளே கூட்டிப் போய் தனி அறைக்கு முன்னால் இருந்த சோபாவில் உட்காரவைத்தார் ஓர் அதிகாரி. அடுத்த சில நிமிடங்களில் என் எதிரில் வந்து நின்று அழுத்தமாகக் கைகொடுத்து, அதைவிட அழுத்தமாக என்னைப் பார்த்துக்கொண்டே, ''வெல்கம் மிஸ்டர் லாரி பேஜ். நம் தேசத்தின் பெருமைக்குரிய அடையாளம் நீங்கள். உங்கள் பிரச்னை என்ன?'' என்று கேட்டாள் அந்த பெண் அதிகாரி. மேலே போடாமல் விட்டிருந்த அவள் கோட் பட்டனையே முறைத்துக்கொண்டு இருந்த நான் சுதாரித்தேன். நாட்டுக்குப் பெருமையாக நான் அப்படி என்ன பண்ணித் தொலைத்தேன்?

''என் பாஸ்போர்ட் களவு போய்விட்டது. உடனே புதிய பாஸ்போர்ட்டுக்கு ஏற்பாடு செய்ய முடியுமா?'' என்றேன்:

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

''நீங்கள் எவ்வளவு பெரிய ஆள்! நம் தேசத்தின் அதிபர் ஒபாமாவின் ஆபீஸுக்கு ஒரு போன் அடித்துச் சொல்லி இருந்தால், அங்கே இருந்தே இந்திய அரசாங்கத்தைத் தொடர்புகொண்டு முக்கால்வாசி வேலையை முடித்துக் கொடுத்து இருப்பார்களே...'' என்று பெண் அதிகாரி குழைய, நான் கண்டமேனிக்கு குழம்பிப் போனேன்.

''அதிபர் அலுவலகமா? அது அமெரிக்காவில் எந்த திசையில் இருக்கிறது என்றுகூட தெரியாது. நானாவது... போன் செய்வதாவது...'' என்றபடி நான் தொடர்ந்து அந்த மார்பு பட்டனையே உற்ற நோக்க... அவசரமாக அதை மாட்டிக்கொண்ட அந்த அதிகாரி, ''நீங்கள் கூகுள் கம்பெனியின் லாரி பேஜ்தானே?'' என்றாள். ''கூகுளாவது... போகிளாவது... இங்கே ஒரு பெண்ணை நம்பி வந்து ஏமாந்தேன். பட்டதெல்லாம் போதும், அமெரிக்காவுக்கே திரும்பலாம் என்று டிக்கெட் வாங்கிவைத்தேன். அதற்குள் என் பாஸ்போர்ட்டை யாரோ அடித்துவிட்டார்கள்!'' என்று நான் விளக்கவும்... நொடி நேரத்தில் தன் பார்வையைப் படுகேவலமாக மாற்றிக்கொண்ட அந்த அதிகாரி, தூரத்து மேஜையில் உட்கார்ந்து பீட்ஸாவை முழுங்கிக்கொண்டு இருந்த ஒரு ஆளை நோக்கிக் கை நீட்டினாள். அவனிடம் போனபோது, வரிசையாக சில ஃபாரங்களைக் கொடுத்து, ஏராளமான சம்பிரதாயங்களையும் சொன்னான். அவன் சொல்வதை எல்லாம் பூர்த்தி செய்து, நான் புது பாஸ்போர்ட் வாங்குவதற்கு இன்னும் ஒரு மாசம் ஆகிவிடும்போல் தெரிந்தது.

www.t.me/tamilbooksworld

நல்லகாலம் அவசரப்பட்டு வேலையை விடவில்லை!

இதையே ஷப்னத்தைச் சந்திப்பதற்கு கடவுள் நீடித்த கெடுவாக நினைத்துக் கொண்டேன். மறுபடி காலையில் வந்து தூங்கி, மாலையில் கால் சென்டர் வேலைக்குப் போக ஆரம்பித்தேன். வேலைக்கு

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

நடுவிலேயே வழக்கம்போல ஷப்னம் முகவரிக்கு லெட்டர் போட்டுக்கொண்டே இருந்தேன்.

போதாத நேரம், ஜோராகவே என் பொடனியில் அடிக்க ஆரம்பித்தது. அன்றைக்கு கால் சென்டரில் கிளாஸ் எடுத்து முடித்துவிட்டுக் காதைக் குடைந்துகொண்டு இருந்தபோது, என்னை வேலைக்கு சேர்த்த பில் பக்ஷி வந்தான்.

''புது வருஷப் பிறப்பை முன்னிட்டு அமெரிக்காவில் ஏகத்துக்கும் டிராஃபிக் இருக்கும். ஊர்விட்டு ஊர் காரில் போகிறவர்கள் நிறையப் பேர். கொண்டாட்ட மூடில் வழி மாறிப்போய் தவிப்பார்கள். அதனால், இன்றைக்கு ஓவராகவே போன்கள் வரும். நீங்களும் டெஸ்க்கில் உட்கார்ந்து கஸ்டமர்களின் அழைப்பைக் கவனிக்க முடியுமா?'' என்றான்.

www.t.me/tamilbooksworld

இதென்ன பிரமாதம் என்று உட்கார்ந்து காதில் ஹெட்போனை மாட்டிக்கொண்டதுதான் நான் செய்த தப்பு. முதலில் வந்த சில கால்களுக்கு கரெக்டாகவே வழி சொல்லிக்கொண்டு வந்தேன். டேபிள் மீது இருந்த கம்ப்யூட்டரில், அமெரிக்காவின் தம்மாத்துண்டு ரோடு வரைக்கும் பக்காவாக வரைபடம் இருந்தது. இடத்தின் பேரைச் சொல்லித் தட்டினால் பட்டென்று திரையில் வழிகள் விரிந்தன. நாலைந்து கால்களை நான் அசால்ட்டாக சமாளித்து முடித்தபோது, ''ஹலோ, அமெரிக்கன் ரோட்சைட் அசிஸ்டென்ஸா?'' என்று செம முரடாக ஒரு குரல் ஒலித்தது.

''யெஸ் சார்... உங்களுக்கு நான் எப்படி உதவ முடியும்?''

''நியூ இயரை எங்கள் நண்பன் குடும்பத்தோடு கொண்டாடுவதற்காக சான்ஃபிரான்சிஸ்கோவில் இருந்து நியூயார்க் வந்தோம். அங்கிருந்து ஃபிலடெல்பியா நோக்கிச் செல்லும்போது,

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*அதற்கான சாலையை எங்கோ தவறவிட்டு விட்டோம். இப்போது குடும்பத்தோடு ஒயிட் ஹெவன் என்கிற இடத்தில் நிற்கிறேன். நான் ஃபிலடெல்பியா ரோட்டை பிடிப்பதற்கு வழி சொல்லுங்கள்...'' என்றது குரல்.*

*''நிச்சயமாக சார்... எங்கள் அமெரிக்கன் ரோட் சைட் அசிஸ்டென்ஸ் நிறுவனம், நிலாவுக்குப் போவதற்குக்கூட உங்களுக்கு வழி சொல்ல முடியும். உங்கள் சந்தா நம்பரைச் சொல்ல முடியுமா?'' என்றேன்.*

*நம்பரைத் தந்தார் எதிர்முனை ஆள்.*

*கம்ப்யூட்டரில் ஒயிட் ஹெவன் என்று தட்டினால், அப்படி ஒரு ஏரியாவையே அது காட்டவில்லை. என்னென்னவோ ஸ்பெல்லிங் மாற்றியெல்லாம் தட்டிப் பார்த்துவிட்டேன். ஊஹூம். ஒயிட் ஹெவன் என்றால் வெள்ளை சொர்க்கம்தானே... நான் கறுப்பு நரகம் என்றுகூட அடித்துப் பார்த்தேன். எதிர் முனையில் இருப்பவனோ... நிமிடத்துக்கு நிமிடம் பொறுமை நழுவவிட்டுக்கொண்டு இருந்தான்.*

www.t.me/tamilbooksworld

*''மன்னிக்கவும் சார்... ஃபிலடெல்பியாவுக்கான சாலையை மறுபடி பிடிப்பதற்கு உடனடியாக என்னால் வழி சொல்ல முடியவில்லை. வேண்டுமானால், நீங்கள் இப்போது இருக்கிற இடத்தில் இருந்து சில நூறு மைலில் வேகோ என்று ஒரு ஊர் இருக்கிறது. அதற்கு வழி சொல்லவா?'' என்று நான் யதார்த்தமாகத்தான் கேட்டேன். அமெரிக்காவின் கடைந்தெடுத்த கெட்ட வார்த்தையைத் துப்பினான் அந்த கழிசடை.*

*''ஏய் மிஸ்டர்! கொட்டுகிற பனியில் சகலமும் விறைத்துப்போய் குடும்பத்தோடு ரோட்டில் நிற்கிறேன். இதான் உனக்கு விளையாடுகிற*

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

நேரமா? உன் பேர் லாரி பேஜ் கிடையாது. நீ இருப்பது அமெரிக்காவிலும் கிடையாது. இந்தியாவின் ஏதோ ஒரு கால் சென்டரில் உட்கார்ந்துகொண்டு இருக்கும் பக்கா இந்தியன் நீ! உன் பேர் லாரி பேஜ் கிடையாது. வெங்கட், பங்கஜ் என்று ஏதோ ஒன்று... சரியா? கூசாமல் காசு வாங்கிக்கொண்டு, ஏமாற்றுவதுதான் உங்கள் கம்பெனியின் வேலையா?'' என்று காட்டுக்கத்து கத்தத் தொடங்கினான்.

கடைசி வரை அவனைச் சமாளித்துக்கொண்டே, கம்ப்யூட்டரைத் தலைகீழாகப் புரட்டித் தட்டியும் அவன் கேட்ட ஒயிட் ஹெவன் மட்டும் இல்லவே இல்லை! எங்கள் கம்பெனியின் முதலாளி யார் என்று எனக்கே தெரியாது. அது எதிர்முனையில் இருந்தவனுக்கும் தெரிந்திருக்க வேண்டிய அவசியம் இல்லை. ஆனால், அந்த முதலாளியையும் சேர்த்தே தன் வசவில் இழுத்தவன், தூக்கு மாட்டிச் சாகும்படியான அழகல் வார்த்தைகளை, என் முதலாளி நோக்கி வீசிவிட்டு போனைச் சாத்தினான்.

www.t.me/tamilbooksworld

முகம் தெரியாத முதலாளி என்றா சொன்னேன்..! அன்றைய தினம்தான் அந்த முதலாளியைப் பார்க்கிற பாக்கியம் எனக்குக் கிடைத்தது. இந்த போன் காலை அட்டெண்ட் பண்ணிவிட்டு சோம்பல் முறித்த நிமிடத்தில் பில் பக்ஷி என் முன்னால் ஆஜரானான்!

அடுத்த சில நொடிகளில், ஹேப்பி நியூ இயர் எனக்கு மட்டும் ஆப்பு நியூ இயர் ஆனது!

- தொடர்ந்து சந்தேகிப்போம்...

Copyright © Vikas Swarup 2008

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

# மோட்டிவ் 6

கால் சென்டரை போனில் கூப்பிட்டு, ஊருக்கு வழி விசாரித்த அமெரிக்க வாடிக்கையாளரை திருப்திப்படுத்த முடியாமல் கண் பிதுங்கிப் போன லாரி பேஜுக்கு அடுத்த ஆப்பு விழுகிறது...

www.t.me/tamilbooksworld

## ஆள் கடத்தும் படலம்...

குண்டு பூசணி மாதிரி என் எதிரில் வந்து நின்ற பில் பக்ஷி, ''மிஸ்டர் லாரி பேஜ்... இன்றைக்குப் பார்த்து நமது நிறுவனத்தின் முதலாளி விவேக் விக்கி ராய் இங்கே வந்திருக்கிறார். ஒயிட் ஹெவன் என்ற இடத்தைக் கண்டு பிடித்துச் சொல்ல முடியாமல் நீங்கள் திணறியதையும், வழி சொல்ல முடியாவிட்டாலும் அந்த கஸ்டமரை சமாதானப்படுத்தாமல் டார்ச்சர் கொடுத்ததையும் விவேக் விக்கி ராய் முழுசாகக் கேட்டு விட்டார். இப்போது அவர் உங்களைக் கூப்பிடுகிறார்!'' என்றான்!

பார்ப்பதற்கு சினிமாக்காரன் மாதிரி இருந்தான் முதலாளி விவேக் விக்கி ராய். சுழல் நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு, ஸ்டைலாக கால்மேல் கால் போட்டுக் கொண்டு என்னை மிகக் கேவலமாகப் பார்த்தான். நான் வாயெடுத்து வார்த்தை களை விடுவிப்பதற்குள், ஏகே47-லிருந்து வருகிற மாதிரி என்னை நோக்கி துப்பித் தீர்த்துவிட்டான்

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

திட்டுகளை! நான் சுதாரிப்பதற்குள்ளேயே அர்ச்சனை முடிந்து, கணக்கைத் தீர்த்து, என் கையில கொஞ்சம் ரூபாய்களைச் செருகி வாசலுக்குக் கொண்டு வந்து தள்ளினான் பில் பக்ஷி!

www.t.m sworld

இப்படியாக என் கால் சென்டர் சாகசம் முடிவுக்கு வந்தது.

அடுத்து வந்த நாலைந்து நாட்கள், நான் லாட்ஜுக்குள்ளேயே சுருண்டு கிடப்பதைப் பார்த்த பிலால் பேக், ''சும்மா கிடந்து உளைச்சல் பட்டுக் கொண்டிருப்பதைவிட, என்னோடு சேர்ந்து காஷ்மீருக்கு வாயேன்!'' என்றான். அவன் சொந்த மாநிலம் அதுதான் என்றும், குடும்பச் சடங்கு ஒன்றில் கலந்து கொள்வதற்காகக் கிளம்பிக் கொண்டிருப்பதாகவும் பிலால் பேக் சொல்ல... வெட்டி மாஸ்டராக இருந்த நான், பெட்டி படுக்கையைக் கட்டிக் கொண்டு கிளம்பினேன்.

காஷ்மீரில் நிகழ்ந்த அத்தனையையும் மிக விரிவாக உங்களிடம் நான் சொல்லிக் கொண்டிருக்க முடியாது. அத்தனை வேகமாகவும், அதிரடியாகவும் எல்லாம் நடந்து முடிந்தன. வீட்டுக்கு என்னைக் கூட்டிச்

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

செல்வதாகச் சொன்ன பிலால் பேக், வாட்ட சாட்டமான மூன்று மனிதர்களிடம் கொண்டு போய் என்னை ஒப்படைத்ததும் காணாமல் போனான்.

''உன் பெயர் லாரி பேஜ்தானே? நீ அமெரிக்காதானே?'' என்று மட்டும் கேட்டு உறுதிப்படுத்திக் கொண்ட அந்த மூவரும், என்னை மலை, காடு, மேடு என்று நடத்தியே பல மைல் தூரம் கூட்டிச் சென்ற தோடு... கடைசியாக ஒரு பனி மலையின் இடுக்கில் இருந்த கூடாரத்தில் நிறுத்தினார்கள். அதுவரை ரொம்பவே மரியாதையாகப் பேசிக்கொண்டு வந்த அவர்கள், திடீரென்று முற்றிலும் முரடாக மாறியதோடு என் நெற்றிப் பொட்டில் துப்பாக்கியை வைத்து, ''மிஸ்டர் லாரி பேஜ்... இப்போது நீங்கள் எங்கள் கஸ்டடியில்!'' என்றார்கள்.

www.t.me/tamilbooksworld

டெல்லி அமெரிக்கன் எம்பஸியில் நிகழ்ந்தது போலவே, இந்த முட்டாப் பசங்களும் என்னை கூகுள் கம்பெனியின் கோடீஸ்வர லாரி பேஜ் என்றே தப்பாகப் புரிந்து வைத்திருந்தார்கள். அதாவது, பிலால் பேக் அப்படி நினைத்து விட்டிருந்தான். என்னைக் கடத்தி வந்து பணயமாக வைத்து, அமெரிக்காவையும் இந்தியாவையும் ஒரே மூச்சாக மிரட்டி, தங்கள் கோரிக்கைகளை சாதித்துக் கொள்ளத் திட்டமிட்டு இருந்த தீவிரவாதிகள் அவர்கள் என்று தெரிந்தபோது நொந்தே போனேன்!

வெந்தும் வேகாமலும் அவர்கள் கொடுத்த உணவைத் தின்றதில், ரெண் டாவது நாளே வயிறு புடுங்கிக் கொண்டது. ஒயர்லெஸ் மைக்கில் கொரகொரப்பாக அடிக்கடி யாருடனோ பேசிக்கொண்ட அவர்கள், திடீரென்று ஒரு நாள் அந்தக் கூடாரத்திலிருந்து கிளப்பி, பனி மலையின் இன்னொரு முகட்டுக்கு என்னை நெட்டித் தள்ளிக்கொண்டு போனார்கள். அந்த இடத்தில் தார்பாலின் போட்டு, அதன் மீது ஐஸ்கட்டிகளைத் தூவி வைத்து, உள்ளே ஒரு பதுங்குக் குழியை அமைத்திருந்தார்கள்.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*பதுங்குக் குழிக்குள் ஆறேழு நாட்கள் ஓடின. அவர்கள் கொடுத்த எந்த உணவுமே செரிமானம் ஆகிற ரகமாகத் தெரியவில்லை. பேருக்கு ரெண்டு வாய் தின்றுவிட்டு, அவர்களின் அடுத்த நடவடிக்கைக்காக நான் காத்திருந்தேன்.*

*பசியில் வயிறு சுத்தமாகக் காய்ந்து, என் தொப்புள் முதுகெலும்போடு ஒட்டிக்கொண்ட மாதிரி இருந்தது.*

*திடீரென்று ஒரு நாள், ''தலைவர்கிட்டே இருந்து உத்தரவு வந்தாச்சு. மளமளனு வேலை ஆரம்பிக்க வேண்டியதுதான்!'' என்று பேசிக்கொண்டார்கள் அந்த மூன்று தீவிரவாதிகளும். என் கண்களை இறுக்கமாகக் கட்டி, அந்தப் பதுங்கு குழியிலிருந்து வெளியே கொண்டு போனார்கள். காது ரெண்டும் மரத்துப் போய் கழன்று விழுகிற அளவுக்கு குளிரடித்தது. என் பின்னங்காலில் ஒருத்தன் எட்டி உதைக்க, நான் மடங்கித் தரையில் முழங்காலிட்டு அமர்ந்தேன்.*

www.t.me/tamilbooksworld

*''ஏய், உனக்கு எதிரே இப்போது வீடியோ கேமரா வைத்திருக்கிறோம். அமெரிக்க அதிபரிடம் நீ இப்போது உயிர் பிச்சை கேளு! அதை டி.வி-க்களுக்கு அனுப்பி வைத்துத்தான், எங்கள் கோரிக்கையை வலி யுறுத்தப் போகிறோம்!'' என்றான் ஒரு தீவிரவாதி. அவன் பெயர் அபு காலித்!*

*அவர்கள் கொடுத்த அடியும், பின்னியெடுத்த குளிரும், வயிற்றுக்குள் போயிருந்த ஜீரணமாகாத இறைச்சியின் துன்பமும் சேர்ந்து எனக்கு அழுகை அழுகையாக வந்தது. கைகளை வேறு பின்னால் கட்டி வைத்திருந்தார்கள். என் பின் மண்டையில் ஜில்லென்று தொட்டுக் கொண்டிருந்தது ஒரு துப்பாக்கிக் குழல்!*

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

''கேமரா ஓடுது... லேட் பண்ணாம பேசு! உயிர்ப் பிச்சை கேளு!'' என்று அதட்டினார்கள்.

''ஐயோ, இந்த தீவிரவாதிங்க என்னை இப்படி சித்ரவதை பண்றாங்களே... என் உசிரு எந்த நேரமும் போயிடும் போலிருக்கே. இப்படி ஊர் தெரியாத பனிமலைக் காட்டுலயா என் உயிர் போகணும்? அம்மா... உன் மகனுக்கு வந்த கதியைப் பார்த்தியாம்மா!'' என்று நான் பிலாக்கணம் பாட... மொட்டென்று துப்பாக்கிக் கட்டையால் என் மண்டையில் விழுந்தது அடி.

''டேய் முட்டாள் அமெரிக்க நாயே! உன்னை அமெரிக்க ஜனாதிபதிக்குப் பேசச் சொன்னா, உங்க அம்மாகிட்டே அழுது புலம்புறியா?'' என்று கர்ஜித் தான் அபு காலித்.

www.t.me/tamilbooksworld

எத்தனையோ தடவை சொல்லியும் அவர்கள் காது கொடுத்துக் கேட்காத அதே விஷயத்தை மறுபடியும் சொன்னேன். ''தம்பிகளா... நீங்க என்னைவிட பெரிய முட்டாளா இருப்பீங்க போலிருக்கே. என் பெயர் லாரி பேஜ் என்பது உண்மைதான். ஆனால், கூகுள் கம்பெனிக்கும் எனக்கும் சுத்தமா சம்பந்தம் கிடையாது! முடிஞ்சா கூகுள் கம்பெனி முதலாளி போட்டோவை ஒரு தடவை பார்த்திடுங்க!''

''ம்ஹூம்! டேய், மூடுடா வாயை! நீ அமெரிக்க அதிபரோடு சேர்ந்து விருந்தில் கலந்துக்கிட்ட போட் டோவை நாங்க வெச்சிருக்கோம். அதே மூஞ்சிதான் இது... என்ன, மூஞ்சிக்கு இப்ப கொஞ்சம் கறுத்துப் போயிருக்கே...'' என்றான் தலைவன். அதற்கு மேல் பேசி என்னத்தைப் பண்ண! ஜனாதிபதியே என் எதிரில் கேமராவைப் பிடித்திருப்பதாக கற்பனை பண்ணிக் கொண்டு, நான் கதற ஆரம்பித்த அதேநேரம்...

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

ஹாலிவுட் சினிமாக்களில் வருகிற மாதிரி பெருத்த சத்தத்தோடு மேலே வட்டமடிக்கத் தொடங்கியது ஒரு ஹெலிகாப்டர்.

''ஓடு, ஓடு! இந்தியன் மிலிட்டரி வந்திருக்கு...'' என்று மூன்று பேரும் திசைக்கொருவராகப்பறக்க... ஹெலிகாப்டரிலிருந்து பறந்து வந்த தோட்டாக்களிலிருந்து தப்புவதற்காக, கண் கட்டை அவிழ்த்தெறிந்துவிட்டு ஒரு பாறைக்குப் பின்னால் நான் ஒளிந்துகொண்டேன்.

எல்லாமே நிமிடக் கணக்கில் நடந்து முடிந்தது. சுருக் கமாகச் சொல்வதென்றால், நான் மீட்கப்பட்டேன்!

மறுபடி டெல்லி! அதே அமெரிக்கன் எம்பஸி. போன தடவை வந்தபோது என்னை பூச்சியாகப் பார்த்த அதே பெண் அதிகாரி இந்த தடவை ஏக மரியாதையை அள்ளிக் கொட்டினாள்.

www.t.me/tamilbooksworld

''மிஸ்டர் லாரி பேஜ்! ஆள் மாறாட்டம் காரணமாகத் தீவிரவாதிகளிடம் சிக்கி மீண்டிருக்கும் உங்களுக்கு இனியும் அவர்களால் ஆபத்து நேரலாம் என்று சி.ஐ.ஏ. கருதுகிறது. எனவே, உங்களோடு எப்போதும் வைத்திருக்கும் வண்ணம் இந்தத் துப்பாக்கியைக் கொடுக்கச் சொல்லியிருக்கிறார்கள். அதோடு, இத்தனை நாளும் தீவிரவாதிகளோடு தாக்குப்பிடித்த உங்கள் தைரியத்தைப் பாராட்டி அமெரிக்க அரசாங்கம் கொடுத்திருக்கும் ரொக்கப் பரிசு இதோ'' என்று ஒரு சூட்கேஸையும், மின்னிய கைத்துப்பாக்கியையும் நீட்டினாள் அந்த அதிகாரி.

பெட்டியை லேசாகத் திறந்து பார்த்தேன். தலை கிர்ரடித்தது. மில்லியன் கணக்கில் இருக்கும் போலிருந் தது. பிலால் பேக் ரூபத்தில தேடி வந்த இந்த அதிர்ஷ்டத்தை வியந்துகொண்டே அமெரிக்கன் எம்பஸியிலில் இருந்து கிளம்பத் தயாரானேன்.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*''மிஸ்டர் லாரி பேஜ்... நீங்கள் மிக விரைவில் அமெரிக்காவுக்குத் திரும்புவது நல்லது. இந்தியாவில் உங்களுக்கு பாதுகாப்பு கொடுப்பது அத்தனை சுலபமில்லை'' என்றாள் அதிகாரி. அப்போதுதான் அவளிடம் நைஸாகக் கேட்டேன் -*

*''ஓகே. மிஸ்! நான் கிளம்பத் தயார். அதற்குமுன் ஒரே ஒரு ஆசை... நிறைவேற்ற முடியுமா?''*

*''ஊர் போய்ச் சேருகிற வரை நீங்கள் எங்களின் மரியாதைக்குரிய விருந்தினர். என்ன ஆசை சொல்லுங்கள்!''*

*''இந்தியாவின் பிரபல நடிகை ஷப்னம் சக்ஸேனாவை நான் ஒரே ஒரு தடவை நேரில் பார்க்க வேண்டும். உங்களால் ஏற்பாடு செய்ய முடியுமா?''*

www.t.me/tamilbooksworld

*அந்த அதிகாரி என்னை ஆச்சர்யமாகப் பார்த்தாள். ''என்னவொரு ஒற்றுமை! இன்றைக்குக் காலையில் தான் எனக்கு ஒரு பார்ட்டியில் கலந்துகொள்ள அழைப்பிதழ் வந்தது. உத்தரப் பிரதேசத்தின் உள்துறை அமைச்சருடைய மகன் கொடுக்கும் பார்ட்டி அது. ஒரு வகையில் எனக்கு நண்பர் அவர்! இந்த பார்ட்டியில் ஷப்னம் சக்ஸேனாவும் கலந்து கொள்வதாகக் கேள்விப்பட்டேன்...'' என்றவள், ''பார்ட்டி நடக்கிற தினத்தன்று எனக்கு அமெரிக்காவில் ஒரு முக்கிய வேலை இருக்கிறது. நீங்கள் வேண்டுமானால் இந்த அழைப்பிதழை எடுத்துச் செல்லுங்கள். அங்கே நீங்கள் அந்த கனவுக் கன்னியைப் பார்க்கலாம்!'' என்று கண்ணடித்தாள். இப்படியாக... பாக்கெட்டில் என் பாதுகாப்புக்கு ஒரு துப்பாக்கியுடன், பார்ட்டி நடக்கும் பண்ணை வீட்டில் ஷப்னம் சக்ஸேனாவை சந்திக்கிற வாய்ப்பும் எனக்குக் கிடைத்தது.*

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*ஷப்னத்தை பார்க்கும்போது, ''என்னை ஏன் இப்படி கடிதம் போட்டு அமெரிக்காவில் இருந்து வரவழைத்து அலைக்கழித்தாய்?'' என்று கேட்க வேண்டும். எப்படியாவது அவளைக் கல்யாணம் பண்ணிக்கொண்டு போய், அமெரிக்காவில் இருக்கிற என் அம்மாவின் முன்பாக நிறுத்தி அசரடிக்க வேண்டும் என்ற படபடப்போடு நான் பார்ட்டிக்குத் தயாரானேன்.*

*காட்டுக் கத்தல் கத்தி அவமானப்படுத்தி, என்னை வேலையைவிட்டுத் துரத்திய விவேக் விக்கி ராய்தான் பார்ட்டி கொடுக்கிற ஆசாமி என்பதை நான் எதிர்பார்க்கவில்லை!*

- தொடர்ந்து சந்தேகிப்போம்...

Copyright © Vikas Swarup 2008

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

## மோட்டிவ் 6

### கொல்கத்தாவில் ஆதிவாசி!

கண் கொள்ளாத அளவுக்கு மரங்களும், கை கொள்ளாத அளவுக்குக் கடலுமான லிட்டில் அந்தமானின் தீவுக்குள், எண்ணி விடுகிற அளவுக்கே மனிதர்களைப் பார்த்திருந்த ஆதிவாசி எகேடி, பேச்சு மூச்சில்லாமல் போனான். கொல்கத்தா நகரின் ஜனக் கூட்டத்துக்கு நடுவே நீந்திக்கொண்டிருந்தது அந்த டாக்ஸி. எகேடியும் அவனுடைய தீவுக்கு வெல்ஃபேர் ஆபீஸராக வேலை பார்க்க வந்திருந்த அஷோக் ராஜ்புத்தும் அந்த டாக்ஸியில இருந்தனர்.

www.t.me/tamilbooksworld

வாசகர்களுக்கு நினைவிருக்கிறதுதானே? முன்பொரு அத்தியாயத்தில் இவனுடைய தீவையும், அங்கே வசிக்கும் அப்பாவி ஓங்கே இனத்து ஆதிவாசிகளையும் நாம் பார்த்தோம். அவர்களை வரிசையாக காலி பண்ணி, அந்த இனத்தையே அழித்துக் கொண் டிருக்கும் கெட்ட ஆவிகளை விரட்டி அடிப்பதற்காக, ஆதிவாசிகளின் மந்திர குருவின் ஆலோசனைப்படி முதன்முதலாகத் தீவைவிட்டு வெளியே வந்திருக்கிறான் எகேடி.

தங்கள் இனத்துக்கே காவல் தெய்வமான 'புலுகா' குடிகொண்டு இருக்கும் பழைமை வாய்ந்த 'இன்கெடாயி' என்ற கல்லை தீவில் இருந்து

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

திருடிக் கொண்டு வந்த பானர்ஜியை தேடியே இந்தப் பயணம். ஊர், உலகம் தெரியாத எகேடிக்கு வேண்டிய உதவிகளைச் செய்வதாகச் சொல்லியே அழைத்து வந்திருக்கிறான் அஷோக் ராஜ்புத்! கொல்கத்தாவில் பானர்ஜியின் வீடு இவனுக்குத் தெரியும்.

மிருகங்களிடம் இருந்து தங்கள் கூட்டத்தை உஷார்படுத்தும் சமயங்களில் அடிக்கப்படும் முரசு சத்தம், கொல்கொத்தாவில் தெருவுக்குத் தெரு கேட்பது எகேடிக்கு படுஆச்சர்யமாக இருந்தது. ''தீபாவளிக்கு இன்னும் இருபது நாள் இருக்கு சார். ஆனா, இன்னிக்கு சப்தமி பாருங்க. அதான் கோயிலுக்குக் கோயில் கொண்டாட்டம் களை கட்டியிருக்கு...'' என்று அஷோக்கிடம் சொன்னான் டாக்ஸி டிரைவர். திமுதிமுத்த கூட்டத்துக்கு இடையே படுலாகவமாக வண்டியைச் செலுத்திக் கொண்டே பேசினான். டாக்ஸிக்கு வெளியே எட்டிப் பார்த்த எகேடியை, வெடுக்கென்று பிடித்து இழுத்தான் அஷோக்.

tamilbooksworld

''நான் வாங்கிக் கொடுத்த தொப்பியை எப்பவும் போட்டுக்கிட்டு இருக்கணும்னு எத்தனை தடவை சொல்றது? உன் தலைமுடியோட கலரைப் பார்த்தாலே நீ இந்த மண்ணுக்கு சொந்தக்காரன் இல்லைங்கிறது பளிச்சுனு தெரிஞ்சிடும். அதுவும் தவிர, முதலை மாதிரி வெளியே துருத்திக்கிட்டு இருக்கிற கன்னத்து எலும்பும் நீ ஆதிவாசினு காட்டிக் கொடுத்திடும். அதுக்குதானே இந்த மப்ளரைக் கொடுத்து காது வரைக்கும் சுத்திக்கச் சொன்னேன். அதை விட்டுட்டு, முட்டாள் மாதிரி எட்டிப்

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

பாக்குறியே...'' என்று டிரைவர் காதில் விழாதபடி கிசுகிசுப்பாகச் சீறினான் அஷோக். உடனே எகேடி மௌனமாக மப்ளரைச் சுற்றி, தொப்பியை மாட்டிக் கொண்டான்.

இருந்தாலும் எகேடியின் கட்டையான உருவமும், கோடு மாதிரி இடுங்கிய கண்களும் அவனை ஆதிவாசி என்று காட்டிக்கொண்டுதான் இருந்தன. யாராவது விசாரித்தால், ஜார்கண்ட் பக்கம் உள்ள ஒரு கிராமத்திலிருந்து கிளம்பி வந்ததாக சொல்லும்படி அஷோக் ராஜ்புத் உத்தரவிட்டிருந்தான்.

மில்ட்டன் என்ற போர்டு மாட்டியிருந்த தம்மாத் துண்டு ஹோட்டலுக்குள் நுழைந்தார்கள். அஷோக் ரூம் கேட்க, காவிப் பல்லோடு நின்றிருந்த ரிசப்ஷனிஸ்ட் எகேடியை ஏற இறங்கப் பார்த்தான். ''எக்ஸ்க்யூஸ் மி சார்... உங்க பாஸ்போர்ட்டை நான் பார்க்கலாமா?'' என்றான்.

www.t.me/tamilbooksworld

''பாஸ்போர்ட்டா? அதெல்லாம் இல்லை. இதோ பாரு...'' என்று தன் ஆபீஸின் அடையாள அட்டையை நீட்டினான் அஷோக் ராஜ்புத். அவன் மத்திய அரசு ஊழியன் என்று புரிந்து, அமைதியானான் ரிசப்ஷனிஸ்ட்.

அறைக்குள் வந்ததுமே எகேடி முகம் சுளித்தான். சுவரில் பெயின்ட் நார் நாராகப் பிய்ந்து தொங்கியது. ரெண்டு கட்டில் இருந்தாலும் மெத்தை பழுப்பு கலரில் முடை நாற்றத்தோடு இருந்தது. பாத்ரூமிலிருந்து கிளம்பி வந்த கெட்டவாடை குடலைப் புரட்டியது.

''இந்த இடம் எகேடிக்கு சுத்தமா பிடிக்கலே'' என்று ஓங்கே பாஷையில் சொல்லி முகம் சுளித்தான். ஓங்கே பாஷையை நன்றாகக் கற்றிருந்த அஷோக் ராஜ்புத் கடுப்பாகி, ''ஏண்டாப் பயலே... உனக்கு

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

என்ன ஓபராய் ஹோட்டல்ல ரூம் போடணுமா...?'' என்று முறைத்தான். தனக்கு காய்ந்த ரொட்டி ஆர்டர் பண்ணிவிட்டு, அஷோக் மட்டும் கொழுத்த சிக்கனை வாங்கிக் கடிப்பதை அப்செட்டாகப் பார்த்தான் எகேடி. சாப்பிட்டு முடித்து ஒரு ஏப்பத்தை ரீலீஸ் பண்ணிக் கொண்டே அவன் ஒரு சிகரெட் பற்ற வைக்க, ''எகேடிக்கும் ஒண்ணு குடுங்களேன்'' என்று கை நீட்டினான் இவன்.

''மறந்துட்டியா? இன்கெடாயி கல்லைக் கண்டுபிடிக்கிற வரைக்கும் சுத்தபத்தமா இருப்பேன்னு உங்க மந்திர குருகிட்டே சத்தியம் பண்ணிக் கொடுத் திட்டு வந்திருக்கே...'' என்று அஷோக் ராஜ்புத் சொல்ல... ''அவருக்கென்ன தெரியவா போகுது. இங்கே என் இஷ்டப்படிதான் இருப்பேன்!'' என்று இவன் சிகரெட்டைக் கேட்க...

www.t.me/tamilbooksworld

''ஓ, அந்தளவுக்கு ஆகிப் போச்சா? மறுபடி தீவுக்குத் திரும்பிப் போகிற வரைக்கும் நீ என் இஷ்டப்படிதான் நடக்கணும். அதைப் புரிஞ்சுக்கோ!'' என்றபடி, சிகரெட்டை நசுக்கிவிட்டு கட்டிலில் படுத்தான் ஆபீஸர் அஷோக் ராஜ்புத். பக்கத்தில் படுக்க வந்த எகேடியிடம், ''ஏய், என்ன திமிரா? போய் தரையில் படுடா...'' என்று ஒரு பெட்ஷீட்டை மட்டும் வீசி எறிந்தான்.

தீவில் இருந்து இவனைக் கூட்டி வரும்போது, ஓங்கே இனத்துவாசிகளிடம் அஷோக் ராஜ்புத் பேசிக்கொண்டிருந்த விதமும் இப்போது பேசுவதற் கும் தொனி சுத்தமாக மாறிப் போயிருந்தது!

மறுநாள் காலை டிராம் வண்டியில் இருவருக்கும் பயணம். உள்ளே ஏறி நின்ற சில நிமிடங்களிலேயே கோட்டு, சூட்டு போட்டு கைகளில் சூட்கேஸ் ஏந்தி யிருந்த எக்ஸிகியூட்டிவ் ஜனத் திரளுக்குள் நசுங்கி மூச்சுத் திணற ஆரம்பித்தான் எகேடி. ஷூ போட்ட காலால் இவன்

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

காலை ஒருத்தர் மிதிக்க... வலியில் துள்ளிக்கொண்டு உடம்பைப் பின்னால் இழுத்தான். அடுத்தடுத்து ஏறிய கூட்டம் அவனை மெதுவாக டிராமின் பின்பகுதி நோக்கித் தள்ளிக்கொண்டே போனது. அஷோக் ராஜ்புத்தை விட்டுப் பிரிந்து, விலகி விலகித் தள்ளப்பட்ட எகேடி ஒரு கட்டத்தில் டிராமுக்கு வெளியே தள்ளப்பட்டான்.

பளிச்சென்று வந்த ஃப்ரெஷ்ஷான காற்றில் எகேடிக்கு மறுபடி உயிர் வந்தது. அதேசமயம், அஷோக்கை விட்டுப் பிரிந்தால் இந்த ஜனக்காட்டு நகருக்குள் மொத்தமாகத் தொலைந்தே போவோம் என்ற திகிலும் வந்தது. நகரத் துவங்கிய டிராமின் பின்பக்கம் கால்களை ஊன்றி ஒரே ஜம்பாக அதன் கூரையில் போய் உட்கார்ந்து கொண்டான் எகேடி. சுதந்திரப் பறவை ஒன்று சந்தோஷமாகச் சிறகடிக்கிற உணர்வு வந்தது அவனுக்கு. தலைக்கு மேலே போன எலெக்ட்ரிக் ஒயர் மீது தலைபட்டால் ஆள் காலி என்பதுகூட தெரியாத அந்த ஆதிவாசி, கையில் வைத்திருந்த கறுப்புப் பையை மட்டும் கெட்டியாகப் பிடித்துக் கொண்டிருந்தான். அதற்குள்தான், அவர்கள் இனத்தின் மந்திர குருவான 'நோகாய்' அவனுக்கென்றே உருவாக்கி அளித்திருந்த உயிர்காக்கும் அதிசயங்கள் ஒளிந்திருந்தன!

டிராமுக்குள் தத்தளித்த அஷோக் ராஜ்புத்தின் மனசுக்குள் அலை அலையாக எண்ணங்கள் ஓடிக் கொண்டிருந்தன. இன்று மாலைக்குள் எப்படியாவது பானர்ஜியின் பாதுகாப்பில் இருக்கும் இன்கெடாயி லிங்கத்தை, எகேடியைவிட்டு கைப்பற்றிவிட வேண்டும்; சுமார் 70 ஆயிரம் வருடங்களுக்கு முந்தைய கல் அது என்பதையும், அதற்குள் சில அதிசய சக்திகள் ஒளிந்திருப்பதாக ஆதிவாசிகள் நம்புவதையும் அஷோக் ராஜ்புத் சொன்னபோது, 'கோஸ்லா' என்ற மியூஸியத்துக்காரர்கள் செம ஆர்வமாகிவிட்டார்கள். சுமார் முப்பது அங்குல உயரம் கொண்ட அந்த இன்கெடாயி கல்லை பதினெட்டு லட்சம்

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

வரை விலைகொடுத்து வாங்கிக் கொள்வதாக உறுதியும் கொடுத்திருந்தார்கள்.

இன்கெடாயி கல்லை ஆதிவாசி எகேடி கைப்பற்றிக் கொண்டு வந்து தன்னிடம் கொடுத்ததுமே அடுத்தடுத்து என்ன செய்ய வேண்டும் என்று படுகச்சிதமாகக் கணக்கு போட்டு வைத்துவிட்டான் அஷோக்.

ஜெய்சல்மீரில் ஒரு கில்லாடி நபர் இருக்கிறான். எந்த பொருளைக் கொடுத்தாலும் அச்சு அசலாக அதற்கொரு டூப்ளிகேட்டைத் தயார் பண்ணிக் கொடுத்து விடுவான். இந்த இன்கெடாயி கல்லை அவனிடம் கொடுத்து டூப்ளிகேட் ரெடி பண்ணி, அதை எகேடியிடம் ஏமாற்றிக் கொடுத்து, அவனை லிட்டில் அந்தமான் தீவுக்கே கப்பல் ஏற்றி அனுப்பி விடுவது. ஒரிஜினலை விற்றுக் காசாக்கிக்கொள்வது. அதற்குப் பிறகு ஓங்கே ஆதிவாசிகளின் அந்தத் தீவு பக்கமே தலைவைக்காமல் இருந்துவிடுவது!

www.t.me/tamilbooksworld

இந்தத் திட்டங்களை ஒரு தடவை அஷோக் தன் மனதில் ஓட்டிப் பார்த்துக் கொண்டிருந்த அதேநேரம், டிராம் வண்டி குலுங்கி நின்றது. வண்டியை நிறுத்திய ஒரு கொல்கத்தா போலீஸ்காரர் கூரையைப் பார்த்து சத்தம் போட்டுக் கொண்டிருந்தார்.

டிராம் கண்டக்டரும் இப்போது கீழே இறங்கி, ''ஏய், மரியாதையா கீழே இறங்கு! நீ தற்கொலை பண்ணிக் கிறதுக்கு இந்த டிராம்தான் கிடைச்சுதா?'' என்று கூச்சலிட, படுலாகவமாகக் கூரையிலிருந்து குதித்து ரோட்டில் நின்றான் எகேடி. ''யப்பா... உடம்புல தார் ஊத்தி விட்ட மாதிரி எவ்ளோ கறுப்பா இருக்கான் பாருங்க. இவன் இந்தியாக்காரன் கிடையாது. ஏதாச்சும் ஆப்பிரிக்க நாட்டிலிருந்து வந்திருப்பான்!'' என்ற

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

பெங்காலியில் அந்த கண்டக்டர் படபடக்க, எகேடி அசையாமல் தலைகுனிந்து நின்றான்.

''இவனைப் பார்த்தா போதை மருந்து விக்கிறவன் மாதிரியில்லே இருக்கு! பையில் என்னடா வெச்சிருக்கே? காட்டு பார்ப்போம்...'' என்று பிடுங்கப் பார்த்தார் கான்ஸ்டபிள். வீறிட்டபடி பையை இறுக்கமாகப் பிடித்துக்கொண்டான் எகேடி.

''டிக்கெட் வாங்கியிருக்கியாடா நீ?'' என்று கத்திக்கொண்டே அவன் பையை விடாப்பிடியாக கான்ஸ்டபிள் இழுக்க, ஆதிவாசி விநோதமாகக் குரல் எழுப்பி முரண்டு பிடிக்க, அவசரமாக டிராமைவிட்டு இறங்கினான் அஷோக் ராஜ்புத்.

''சார்... நான்தான் சார் இவனைக் கூட்டி வந்தேன். இவனுக்கும் சேர்த்து டிக்கெட் வாங்கியிருக்கேன்!'' என்றபடி, இரண்டு டிக்கெட்களையும் தன் அரசாங்க கார்டை யும் இவன் காட்ட... கான்ஸ்டபிள் ஏற இறங்க எகேடியை முறைத்துக்கொண்டே நகர்ந்துபோனார். எகேடியின் கழுத்தைப் பிடித்துத் தள்ளிக்கொண்டே சற்றுத் தூரம் வேகமாக நடந்த அஷோக், படாரென்று அவன் கன்னத்தில் ஓங்கி அறைந்தான்.

www.t.me/tamilbooksworld

''கறுப்பு நாயே! உன் இஷ்டத்துக்குத் தாவுறதுக்கும் குதிக்கிறதுக்கும் இது உங்க தீவுன்னு நினைச்சியா? இன்னொரு வாட்டி என் பார்வையைவிட்டு நகர்ந்தே... உன்னை போலீஸ்கிட்டே நானே பிடிச்சுக் கொடுத்திடுவேன்! அப்புறம் நிரந்தரமாக நீ இந்த ஊர் ஜெயில்லதான் கழிக்கணும்!'' என்று உறுமினான்.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

எகேடி எதுவுமே சொல்லாமல் ஒரு தடவை அஷோக்கை ஊன்றிப் பார்த்தான். பிறகு தலை கவிழ்ந்துகொண்டான்.

''வந்த காரியத்தை நீயே பாழாக்கிடுவே போலிருக்கே!'' என்று உறுமிக்கொண்டே மறுபடி லாட்ஜுக்கே கூட்டிச் சென்றான் அஷோக். ''கிளம்புன நேரமே சரியில்லை. சாயங்காலம் போவோம் நம்ம வேட்டைக்கு!'' என்றபடி ஒரு சிகரெட்டைக் கொளுத்திக்கொண்டு, அவர்கள் தங்கியிருந்த லாட்ஜுக்கே திரும்பி நடந்தான்.

- தொடர்ந்து சந்தேகிப்போம்...

Copyright © Vikas Swarup 2008

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

# மோட்டிவ் 6

## இன்கெடாயியைத் தேடித் தேடி...

மாலை 6 மணி. எகேடியுடன் லாட்ஜில் இருந்து வெளியேறிய அஷோக் ராஜ்புத் ஆட்டோ பிடித்தான்.

''டோலி கஞ்ச் போப்பா! அங்கே இந்திராணி பார்க் பக்கத்துல இறக்கிவிடு!'' என்றான் கொல்கத்தாவை நன்கு அறிந்தவனாக!

t.me/tamilbooksworld

இந்திராணி பார்க்கில் ஆட்டோ அவர்களை இறக்கிவிட, அதை ஒட்டியிருந்த ஒரு சேற்றுக் குட்டையை ஆர்வமாகப் பார்த்தான் எகேடி. அந்தக் குட்டையை ஒட்டிய சின்ன சந்தில் மொத்தம் ஐந்தாறு வீடுகளே இருக்க... அதில் ஒரு வீட்டின் கூரை முழுக்கப் பச்சைப்பசேல் என்று இருந்தது. எகேடி துள்ளிக் குதித்தான்! ''மந்திர குரு 'நோகாய்' தன் சக்தியால் வானத்தில் பயணம் வந்து கண்டுபிடித்துச் சொன்ன அதே அடையாளம். அதுதான் பானர்ஜி வீடு!'' என்று துள்ளினான்.

அது நடுத்தர ஜனங்கள் வசிக்கிற ஏரியா என்று புரிந்தது. சந்தேகம் வராதபடி மெதுவாக அந்த வீட்டு காம்பவுண்டை அஷோக் ராஜ்புத் நெருங்கிப் பார்த்தபோது, அதில் இருந்த போர்டு எஸ்.கே.பானர்ஜி என்றது. சில ஆயிரம் கிலோ மீட்டர் தாண்டி, கடலுக்குள் இருக்கும் தீவில்

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

வசிக்கிற ஆதிவாசி மந்திர குருவின் ஞானதிருஷ்டி பற்றி இப்போது அஷோக்குக்கு நிஜமாகவே பெரும் திகைப்பு வந்தது. லேசாகப் பயமும் வந்தது. அந்த சக்தி தேர்ந்தெடுத்து அனுப்பிவைத்த எகேடியை ஏமாற்றிவிட்டு, இன்கெடாயி கல்லுடன் தப்ப முடியுமா?

''இந்த வீட்டுக்குள்ளே இப்பவேபோயி இன்கெடாயியைக் கொண்டாந்துடலாமா?'' என்றான் எகேடி.

''ஆமா, நீ போனதும் சோஃபாவுல உட்காரவெச்சு, காபி - பலகாரம் கொடுத்து அந்தக் கல்லையும் உன் கிட்டே அவங்களே கொடுத்து அனுப்பிடுவாங்க. முட்டாள், அது மிக மிக சக்திவாய்ந்த கல்லாச்சே... அதை உங்க தீவுக் குகையில் இருந்து பானர்ஜி எப்படித் திருடிக்கிட்டு வந்தானோ... அதே மாதிரிதான் நாமளும் திருடியாகணும்!''

www.t.me/tamilbooksworld

அடுத்த இரண்டு மணி நேரம் தூரத்தில் இருந்தே அந்த வீட்டைப் பலவாறாக நோட்டமிட்டான் அஷோக். உள்ளே நுழைவதற்குத் தோதான ஒரு குறுக்கு வழி இருப்பதாக அவனுக்குப் படவில்லை. திடீரென்று, ''எகேடிக்குத் தெரிஞ்சுபோச்சு. அதோ அந்த வழியா வீட்டுக்குள் போக முடியும்...'' என்று ஆதிவாசி அந்த வீட்டின் கூரையைச் சுட்டிக் காட்டினான். கரும்பச்சை நிறத்தில் புகைக் கூண்டு அது.

''அது எவ்ளோ உயரத்தில் இருக்கு பார்த்தியா? அங்கே எப்படி ஏறிப்போக முடியும்?'' - நம்பிக்கை இல்லாமல் கேட்ட அஷோக், ''சரி, இப்ப

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

வேணாம். இன்னும் நேரமா கட்டும். இந்த ஏரியா முழுக்கத் தூங்கட்டும்!'' என்றான்.

பக்கத்து ஹோட்டல் ஒன்றில் மீன் கறியும் சோறும் தின்றுவிட்டு, கொல்கத்தாவின் தெருக்களில் வெகு நேரம் உலாத்தினார்கள். இரவு ஒரு மணி வாக்கில் வந்தபோது, அந்த நாலைந்து வீடுகளிலும் விளக்குகள் சுத்தமாக அணைக்கப்பட்டு இருந்தன. தெருவோரம் இருந்த பால் பூத்துக்குப் பின் பக்கம் தன் பையோடு நகர்ந்தான் எகேடி.

''டேய், எங்கே போறே?'' என்று கிசுகிசுப்பாக அஷோக் வினவ,

''ஒங்கே குலத்தில் பிறந்த எவனும், இன்கெடாயியைக் கையால் தொட்டு எடுக்கும்போது அதற்கான மரியாதையைத் தந்தே ஆகணும்!'' என்று சொல்லிக்கொண்டே தன் உடைகள் ஒவ்வொன்றாகக் களைய ஆரம்பித்தான்.

www.t.me/tamilbooksworld

''டேய், நீ என்ன பண்றே?'' என்று அஷோக் ராஜ்புத் பதற... கையில் இருந்த பையை நிதானமாகப் பிரித்தான் எகேடி. சிவப்பும் வெளுப்புமாக இருந்த களிமண்ணை எடுத்து முகத்தில் கோடு கோடாகத் தீட்டிக்கொள்ள ஆரம்பித்தான். அதோடு மந்திர குரு கொடுத்தனுப்பிய பன்றிக் கொழுப்பையும் தன் உடலில் பூசிக்கொண்டான். பைக்குள் இருந்து எடுத்த எலும்புத் துண்டு மாலையை தன் கழுத்தில் போட்டுக்கொண்டான். இப்போது, அவன் அந்தரங்க உறுப்பை மட்டுமே ஒரு சிறு துணி மறைத்துக்கொண்டு இருக்க... வேற்று கிரகத்தில் இருந்து குதித்த ஜீவன்போல் ஆகிவிட்டிருந்தான்.

''யப்பா! உன்னைப் பார்க்க எனக்கே பயமா இருக்கு. யார் கண்லயும் படாமப் போய்ட்டு வா!'' என்று அஷோக்

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

வழியனுப்பிவைக்க... ஒரே தாவாக பானர்ஜியின் வீடு நோக்கி இருளில் தாவினான் எகேடி.

குரங்கின் திறனோடு தாவி ஏறி வீட்டின் கூரையை அடைந்த எகேடி, புகைக்கூண்டின் மேல் பலகையை அகற்றிவிட்டு, உடலைக் குறுக்கிக்கொண்டு அதனுள் இறங்கினான். ஒரு பாம்பின் தேகம் போல, வேண்டியபடி எல்லாம் அவன் உடம்பு வளைந்து கொடுக்க, புகைக்கூண்டின் பக்கவாட்டுச் சுவர்களில் கைகளையும் கால்களையும் பதித்து துளிகூட சத்தம் வராமல் இறங்கி சமையல் அறையினுள் குதித்தான். சமையலறைக் கதவைத் தள்ளியதுமே வெளியே திறந்து கொண்டது. ஹாலில் மையிருட்டாக இருக்க, தீவுக் காட்டில் பார்க்கிற அதே தீட்சண்யத்தோடு எகேடி கண்களை உருட்ட... மூன்று அறைகள் அந்த வீட்டில் இருப்பது புலப்பட்டது. உள்ளுணர்வின் உந்துதலால் ஒரு கதவை அவன் தள்ளித் திறக்க... அடுத்த கணமே அறைக்குள் பளீரென்று விளக்கு ஒளி வெள்ளம் பாய்ந்தது.

www.t.me/tamilbooksworld

வெளிர் நீல நிறத்தில் பைஜாமா குர்த்தா அணிந்தபடி, கட்டிலில் அமர்ந்திருந்தார் வயதான அந்த ஆள்.

''வா, எந்த நேரமும் நீ வரக்கூடும் என்று எதிர்பார்த்துக் கொண்டுதான் இருந்தேன்!'' என்றார் தெளிவான ஓங்கே மொழியில், துளிகூட பதற்றம் இல்லாமல்.

எகேடியும் பதறுவதாக இல்லை. ''பானர்ஜி! எங்கள் குலதெய்வம் இன்கெடாயி எங்கே? அதைக் கொடுத்துவிடு!'' என்றான்.

''உங்கள் ஓங்கே ஆதிவாசி குலத்தில் சிலருக்கு, உடம்பைவிட்டுத் தனியாகப் பிரிந்து வேறு ஒரு இடத்துக்குப் போய் வரக்கூடிய திறமை

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

உண்டு என்று கேள்விப்பட்டிருக்கிறேன். நீ வந்திருப்பதும் அப்படித்தானா? அல்லது உன் நிஜமான உடம்போடு வந்திருக்கிறாயா? என்னைக் கொன்றுவிடும்படி உனக்கு உத்தரவா?'' என்று கேட்டபோது மட்டும் பானர்ஜிக்கு லேசாக உடம்பு நடுங்கியது.

|

''அடுத்த உயிருக்குத் தேவையில்லாமல் துன்பம் தருவது எங்கள் ஓங்கே குலத்து வழக்கம் இல்லை. எனக்குத் தேவை இன்கெடாயி! கொடுத்துவிடு... போய்க்கொண்டே இருக்கிறேன்!'' என்று நெருங்கினான் எகேடி.

''அது இப்போது என்னிடம் இல்லை. உலகத்தையே வளைத்து ஆளக்கூடிய அதிர்ஷ்டத்தைத் தரும் என்று நம்பித்தான் உங்கள் தீவில் இருந்து அதை கஷ்டப்பட்டுத் திருடிக் கொண்டு வந்தேன். ஆனால், செய்த பாவத்துக்கு அந்த இன்கெடாயி என்னைப் பழிக்குப்பழி வாங்க ஆரம்பித்துவிட்டது...'' - கண்களைத் துடைத்துக்கொண்ட பானர்ஜி,

www.t.me/tamilbooksworld

''இன்கெடாயி கல் என் வீட்டுக்கு வந்த அடுத்த நாளே, என் ஒரே மகனை அது பலி கொண்டுவிட்டது!'' என்றபோது கண்கள் கலங்கி இருந்தன.

''இன்கெடாயி எங்கே?'' - எகேடி அதையே திரும்பக் கேட்டான்.

''இனிமேலும் அதை என்னோடு வைத்திருக்க நான் என்ன பைத்தியக்காரனா? பத்து நாளைக்கு முன்பே இன்கெடாயி இந்த வீட்டைவிட்டுப் போயாச்சு!''

''முட்டாள்! அந்த தெய்வக் கல்லை நீ கொண்டுவந்ததே பெரும் பாவம். இப்போது வேறு எங்கே அதைக் கடத்திவிட்டாய் சொல்லு!''

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*''சொல்கிறேன்... ஆனால், ஒரு நிபந்தனை...'' என்ற போது பானர்ஜியின் குரல் உடைந்திருந்தது. எகேடி கவனித்தான்.*

*''அமெரிக்காவில் படித்துக்கொண்டு இருந்த என் மகன் ஆனந்தா, திடீரென்று விபத்தில் இறந்துவிட்டான். இறந்துபோன அவனை எனக்கு மறுபடி உயிர்ப்பித்துத் தருவதாக இருந்தால் சொல். இன்கெடாயி இப்போது இருக்கும் இடத்தை உனக்குச் சொல்கிறேன்!''*

*''மூடனே... இறந்தவனை உயிர்ப்பிக்கும் கலை எங்கள் மந்திர குருவான நோகாய்கூட அறியாத ஒன்று! அழிந்து வரும் எங்கள் இனத்தையே அவரால் காப்பாற்ற முடிய வில்லையே. நடக்கக்கூடிய நிபந்தனை ஏதாவது இருந்தால், சொல்லு!''*

*''என் மகனை இழந்த சோகம் தாளாமல் என் மனைவி கொஞ்சம் கொஞ்சமாக மனநோயாளியாக மாறிக்கொண்டு இருக்கிறாள். இறந்த மகனை மீட்டுக் கொடுத்தால் மட்டும்தான், அந்தக் கல் இருக்கும் இடத்தைச் சொல்வேன்!'' - முகத்தை இரு கைகளால் மூடிக்கொண்டு அழுத பானர்ஜி, திடீரென்று அணில் குஞ்சு மாதிரி தாவி பாத்ரூமுக்குள் போய் கதவைத் தாளிட்டுக்கொண்டார். கதவை இடித்துச் சோர்ந்துபோன எகேடி, ஆத்திரத்தோடு அந்த வீட்டை தலைகீழாகப் புரட்டிப் போட்டான். எங்குமே இன்கெடாயி இருப்பதற் கான சுவடு தெரியவில்லை. மறுபடி பானர்ஜி இருந்த அறைக்கே வந்தபோது, கட்டில் மீது கிடந்த தோல் பை கண்ணில் பட்டது. அதை எடுத்துத் திறந்து பார்த்தான். கண்கள் விரிந்தன. அடுத்த சில நிமிடங்களில் அதே புகைக்கூண்டு வழியாகக் கிளம்பி, சாலைக்கு வந்து, அஷோக் இருந்த இடத்தைத் தொட்டான்.*

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*''இன்கெடாயி இப்போது பானர்ஜியிடம் இல்லை. எங்கே என்று சொல்லவும் மறுக்கிறான். ஆனால், உனக்காக அந்த வீட்டில் இருந்து இதைக் கொண்டுவந்தேன்!'' என்று தோல் பையை நீட்டினான் எகேடி.*

*பிரித்துப் பார்த்தால், உள்ளே கொஞ்சம் ரூபாய் நோட்டுக் கற்றைகள். பையின் ஓர் அறைக்குள் இருந்தது ஒரு விசிட்டிங் கார்டு. எடுத்து தெரு விளக்கின் வெளிச்சத்தில் படித்து விசிலடித்தான் அஷோக் ராஜ்புத்.*

*'கொல்கத்தா அரும்பொருள் விற்பனை நிலையம். உரிமையாளர் சஞ்சீவ் கவுல், பார்க் தெரு' என்று முகவரி சொன்னது கார்டு!*

*கொல்கத்தா அரும்பொருள் விற்பனைக் கடை பெரியதொரு தனிக் கட்டடத்தில் இருந்தது. உள்ளே போனால், ஒரே களேபரம். பொருட்கள் கண்டபடி இறைந்துகிடக்க... சுவரெல்லாம் கரித் தீற்றல்கள். உயரமாக, நீள மூக்கு வைத்து எதிர்ப்பட்ட நபரிடம் அஷோக் ராஜ்புத் நின்றான்.*

www.t.me/tamilbooksworld

*''மிஸ்டர் சஞ்சீவ் கவுல்?''*

*''நானேதான்! ஸாரி, இப்போது உங்களுடன் பேசுவதற்கு எனக்கு நேரம் இல்லை. இரண்டு நாட்களுக்கு முன் எங்கள் கட்டடத்தில் தீப்பிடித்து விலைமதிப்புள்ள பல பொருட்கள் கருகிப் போய்விட்டன. இன்ஷூரன்ஸ் உள்ளிட்ட சடங்கு சம்பிரதாயங்களில் பிஸியாக இருக்கிறோம்...'' என்றார் உயரர்.*

*''நீங்கள் தாராளமாக அதைக் கவனியுங்கள். அதே சமயம், பானர்ஜி என்ற மனிதர் பத்து நாளைக்கு முன்பு உங்களிடம் பழங்காலத்துக் கல் ஒன்றைக் கொண்டுவந்து விற்றாரா என்று மட்டும்*

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

சொல்லுங்கள்!'' தனது விசிட்டிங் கார்டை எடுத்து நீட்டியபடி கேட்டான் அஷோக் ராஜ்புத். அதைப் படித்துவிட்டு,

''ஆதிவாசிகளின் நலனுக்கென்று இருக்கும் மத்திய அரசு வாரியத்தில் நீங்கள் ஒரு அதிகாரியா? நல்லது. எதற்காக அந்த கல் பற்றி விசாரிக்கிறீர்கள்?'' என்றார் சஞ்சீவ் கவுல்.

''அந்தக் கல், ஓங்கே என்ற ஆதிவாசி குலத்துக்குச் சொந்த மானது. ஒரு வகையில் தொல்பொருள் இலாகாவுக்குச் சேர வேண்டியது. அதைத் திருடி வந்து விற்றிருக்கிறார் பானர்ஜி. அவர் மட்டுமில்லை... நீங்களும் இப்போது ஜெயில் தண்டனைக்கு ஆளாகப்போகிறீர்கள்!''

கவலையாகப் பார்த்த சஞ்சீவ் கவுல், ''அது திருட்டுப் பொருள் என்று எனக்குத் தெரிந்திருந்தால்... நிச்சயம் வாங்கியிருக்க மாட்டேன்!'' என்றவர், ஒரு பேப்பரை எழுதி வேகமாகக் கிறுக்கி நீட்டினார்.

www.t.me/tamilbooksworld

''எஸ்.பி.ராஜகோபால். சென்னையில் இருந்து வந்த இந்த மனிதர் அந்தக் கல்லை நல்ல விலை கொடுத்து வாங்கிப் போய்விட்டார்!'' என்றதும் சென்னை நோக்கி பயணமானார்கள்.

- தொடர்ந்து சந்தேகிப்போம்...

Copyright © Vikas Swarup 2008

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

## மோட்டிவ் 6

### எஸ்கேப் எகேடி!

55

சென்னை நுங்கம்பாக்கத்தில் அந்த பங்களா முன்பு ஆட்டோ நிற்பதற்கே இடம் இல்லை. வாசலில் கூட்டம் கூட்டமாக கார்கள்!

www.t.me/tamilbooksworld

எகேடியை அந்த ஆட்டோவுக்கு உள்ளேயே உட்காரச் சொல்லிவிட்டு இறங்கினான் அஷோக் ராஜ்புத். 'தொப்பியைக் கழற்றக் கூடாது. கழுத்து எலும்பை மறைக்கும்படி உயர்த்தி இருக்கிற டி-ஷர்ட் காலரை கீழே இறக்கக் கூடாது!' என்று மறுபடி ஆதிவாசிக்கு அழுத்தமாகக் கட்டளை போட்டான்.

பங்களாவின் கதவை அஷோக் நெருங்கியபோது, வாசலில் இருந்த செக்யூரிட்டி பெரிசாகக் கேள்வி எதுவும் கேட்கவில்லை. மாறாக, ''சீக்கிரமே போங்க சார்... பிரார்த்தனை முடியப்போகுது!'' என்றான். உள்ளே போனால், பங்களாவின் பரந்து விரிந்த ஹாலில் ஏராளமானவர்கள் அமைதியாக அமர்ந்து இருந்தார்கள். அவர்களைப் பார்க்கும் வண்ணமாக அமர்ந்திருந்த காவி உடை முதியவர், சன்னமான குரலில் ஆன்மாவின் அழியாத்தன்மை குறித்து பிரசங்கம் நடத்திக்கொண்டு இருந்தார். அஷோக்கும் ஓர் ஓரமாகப் போய் உட்கார்ந்துகொண்டான். நடுஹாலில் டேபிள் மீது ஒரு பெரிய

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

புகைப்படம் வைக்கப்பட்டு, மாலை சாத்தி இருந்தது. அதன் கீழே வெள்ளுடையில் கண் மூடி அமர்ந்து இருந்தார் ஒரு பெண்மணி.

போட்டோவில் இருந்தவருக்கு முப்பதுகளின் இறுதியில் இருக்கும் வயது. அதன் கீழ் எழுதப்பட்ட எழுத்துகளைப் படித்ததும் திடுக்கிட்டான். அவன் தேடி வந்த எஸ்.பி.ராஜகோபாலேதான்! 'தோற்றம் - மறைவு' போட்டிருந்தது. மறைவு - சரியாக மூன்று நாட்களுக்கு முன்பு. போட்டோவின் கீழே அமர்ந்திருந்த வெள்ளுடைப் பெண்மணியின் முகத்தில் கவிந்த சோகமே, அதுதான் அவர் மனைவி என்று புரியவைத்தது.

www.t.me/tamilbooksworld

மண்டையைப் போடுவதற்கு முன்னால், கொல்கத்தாவில் இருந்து கொண்டுவந்த அந்த 'இன்கெடாயி' கல்லை எங்கே வைத்திருப்பான் மனுஷன் என்று அஷோக் யோசித்தான். அஞ்சலிக் கூட்டம் முடிந்து எல்லோரும் கலைந்த பிறகு, ராஜகோபாலின் மனைவியை மெள்ள நெருங்கினான்.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

''பாபிஜி! நான் அஷோக்... கொல்கத்தாவில் இருந்து வருகிறேன். பத்து நாளைக்கு முன்புகூட ராஜகோபாலை அங்கே பார்த்துப் பேசிக்கொண்டு இருந்தேன். இத்தனை சின்ன வயதில் இப்படி ஆகுமென்று நான் நினைத்துக்கூட பார்க்கவில்லை...'' என்றான்.

அந்த அம்மாள் அழுகையெல்லாம் முடிந்து தேறி வரும் நிலையில் இருந்தார். ''கொல்கத்தாவில் இருந்து வரும்போதுகூட பூரண ஆரோக்கியமாகத்தான் இருந்தார். இப்போதெல்லாம் ஹார்ட் அட்டாக் யாருக்கு, எப்போது வருகிறதென்றுதான் ஒரு நியதியே இல்லாமல் போய்விட்டதே...'' என்று பெருமூச்சோடு போட்டோவைப் பார்த்தார்.

அதைவைத்தே நூல் பிடித்தவனாக, ''விதி இப்படி சதி செய்யும் என்று நான் துளியும் எதிர்பார்க்கவில்லை பாபிஜி. கொல்கத்தாவில் இருந்து அவர் ஒரு புனிதமான கல்லை சென்னைக்குக் கொண்டுவந்தார். இங்கேவைத்து சில நாட்கள் பூஜை செய்துவிட்டு என்னிடம் கொடுப்பதாகச் சொல்லி இருந்தார்...'' என்று இழுத்தபடியே, அந்தப் பெண்மணியின் முகத்தைப் பார்த்தான்.

www.t.me/tamilbooksworld

மறுபடி பெருமூச்சு! ''அந்தக் கல் வந்த நேரம் எங்களுக்குச் சரியாக இல்லை. சென்னைக்கு அவர் திரும்பி வந்த அடுத்த நாளே, பிசினஸில் ஒரு பெரிய நஷ்டம் ஏற்பட்டது. ரொம்ப நாளாக அவருடைய பார்ட்னர்கள் மூடி மறைத்த பல விஷயங்கள் வெளியே வந்தபோது அவரால் தாங்க முடியவில்லை. அப்போது சுருண்டவர்தான். டாக்டர்கள் எவ்வளவோ போராடியும் கடவுள் ஒரேயடியாகக் கொண்டுபோய்விட்டான்...'' என்றார் கண்கள் தேங்க!

காரியத்திலேயே குறியாக இருந்தான் அஷோக். ''மிகவும் வருந்துகிறேன் பாபிஜி. இனிமேலும் அந்தக் கல் உங்களிடம் இருக்க

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

வேண்டாம். ராஜகோபால் சொன்னபடியே என்னிடம் அதைக் கொடுத்துவிடுங்கள்!''

இப்போது இவனை நிதானமாக ஏறெடுத்துப் பார்த்தார் ராஜகோபாலின் மனைவி. ''நீங்கள் யார் என்றே சொல்லவில்லையே..''

''நான் ராஜஸ்தான் மாநிலத்துக்காரன். ராஜகோபாலுடன் கல்லூரியில் ஒன்றாகப் படித்தேன்...''

''ஓ! இங்கே சென்னை ஐ.ஐ.டி-யிலா?''

''அதுவேதான். விட்ட குறை தொட்ட குறையாக ராஜகோபாலுடன் தொடர்பில் இருந்த கல்லூரித் தோழர்களில் நானும் ஒருவன். கொல்கத்தாவில் செட்டில் ஆனேன். பிசினஸ் விஷயமாக அங்கே உங்கள் கணவர் வரும்போதெல்லாம் என்னைப் பார்க்காமல் போனதில்லை...''

www.t.me/tamilbooksworld

''இருக்கலாம். ஆனால், இப்படி ஒரு நண்பர் இருப்பதை அவர் என்னிடம் சொன்னதில்லை...'' என்று நிறுத்திய பெண்மணி, ''அவர் மறைவுக்கு அந்தக் கல்லின் வருகைதான் காரணம் என்று நினைக்கிறபோது... அதை இங்கே வெச்சுக்க வேண்டாம்னு தோணிச்சு! இப்போ அது இங்கேயிருந்து போயிடுத்து!''

''என்னது! அது... அது... எங்கே போனது?''

''இவருடைய இறுதிச் சடங்குகளில் கலந்துகொள்ள உத்தரப் பிரதேசத்தில் இருந்து வந்திருந்தார் எங்கள் குடும்ப குருஜி. அவரிடம் அந்த கல்லைக் கொடுத்து அனுப்பிவிட்டேன்!''

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*அஷோக் வெறுத்துப்போனான். கல்லை அடித்து, 18 லட்ச ரூபாய் சுளையாக சம்பாதிக்கலாம் என்று பார்த்தால்... அடுத்து உத்தரப் பிரதேசத்துக்கு டிரிப் அடித்தாக வேண்டுமா? அயர்ந்துபோனவனாக, '*

*'அடடா, குருஜியை உ.பி-யில் நான் எங்கே பார்க்கலாம்?'' என்றான்.*

*''மதுராவில் இருக்கும் ஆசிரமத்தில்தான் அவரைப் பார்க்க முடியும். ஆனால். இப்போது அவர் நீண்டதொரு வெளிநாட்டுச் சுற்றுப் பயணத்துக்குக் கிளம்பிவிட்டார். அவர் வருவதற்கு மாதக்கணக்கில் ஆகும். வெளிநாட்டுப் பயணம் முடிந்து, ஜனவரி மாதம் நேராக அலகாபாத் வருவாராம். அங்கே ஒவ்வொரு முறையும் மகாமேளா நடக்கும்போது, கங்கை - யமுனை சங்கமத்தில் புனித நீராடுவது அவருடைய வழக்கம். அவர் வெளிநாட்டுப் பயணம் முடிந்து வருகிற வரை நீங்கள் பொறுத்திருப்பது தவிர வேறு வழி இல்லை!''*

www.t.me/tamilbooksworld

*''புரிகிறது. நீங்கள் குருஜி பற்றி கொஞ்சம் சொல்லுங்கள்!''*

*''நீங்களும்கூட கேள்விப்பட்டிருப்பீர்கள். அவர் பெயர் சுவாமி ஹரிதாஸ். பெரிய பெரிய அரசியல்வாதிகளுக்கெல்லாம் அவர்தான் குடும்ப குரு!'' - ஒரு பெரிய புத்தகத்தின் அட்டையில் இரண்டு கை தூக்கி ஆசீர்வதித்துக்கொண்டு இருந்த அவருடைய போட்டோவைக் காட்டினாள்.*

*''ஓகே பாபிஜி. உங்களுக்கு இறைவன் தைரியம் அளிக்கட்டும். நான் வருகிறேன்!'' முகத்தில் பீறிட்டு வந்த ஏமாற்றத்துக்குத் திரை போட்டுக்கொண்டு வெளியே வந்தான் அஷோக்.*

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

ஆட்டோவில் காத்திருந்த ஆதிவாசி எகேடி, இவன் எரிச்சல் மூடு புரியாமல் மேலும் சூடு கிளப்பினான்.

''எவ்வளவு நேரம் எகேடி காத்திருப்பது? எனக்கு இந்த நகரத்தை ரொம்பப் பிடித்திருக்கிறது. சுற்றிப் பார்க்கலாமா?''

'நொங்'கென்று அவன் விலாவில் குத்திய அஷோக் ராஜ்புத், ''டேய் ஆதிவாசி முட்டாளே... தேடி வந்த கல் இப்போது வெகு தூரம் பயணம் போய்விட்டது. அதை எப்படி மீட்பது என்று நான் முழித்துக்கொண்டு இருக்கிறேன்!''

''எனக்கு அதைப்பற்றி கவலை இல்லை. அந்தக் கல்லை எடுத்துக்கொண்டு மறுபடி தீவுக்கு நான் திரும்புவதாகவும் இலலை.''

www.t.me/tamilbooksworld

''அப்புறம்..? ஐயா திட்டம் என்ன? இங்கே ஏதாவது ஒரு ஸ்டேட்டுக்கு சீஃப் மினிஸ்டர் ஆகப்போறீங்களோ?'' - பல்லைக் கடித்தான் அஷோக்.

''தீவில் இருக்கிற அதே முகங்களை திரும்பத் திரும்பப் பார்த்து போரடித்துவிட்டது. இந்த மாதிரி நகரத்தில் இருக்கிற கலகலப்புதான் எகேடிக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு. வகை வகையாகக் கிடைக்கிற உணவும் பிடிச்சிருக்கு. இங்கேயே இருந்து, எனக்கேத்த ஒரு பெண்ணைப் பார்த்து கல்யாணம் பண்ணிக்கொண்டு, இங்கேயே தங்கிவிட எகேடிக்கு ஆசை!''

அஷோக் செம கடுப்பானான். ''டேய்! நீ விளையாடுறியா... இல்லை வெறுப்பேத்துறியா?'' என்று சீறிக்கொண்டே ஆட்டோவில் ஏறினான். வண்டியை சீறிக் கிளப்பியபடி, ''எங்கே சார் போகணும்?'' என்றார் டிரைவர். ''ரயில்வே ஸ்டேஷனுக்கு ஓட்டுங்க!'' என்று அஷோக்

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

சொல்லிக்கொண்டு இருக்கும்போதே, ஆட்டோவுக்குள் இருந்து தாவி வெளியே குதித்த எகேடி, அந்த 'பீக் அவர்' சென்னை டிராஃபிக்கில் புகுந்து சில நொடிகளில் காணாமலே போனான்.

அடுத்து வந்த நான்கு மாதங்களில்... இந்த உலகம் எத்தனை பெரியது என்பதையும், அதே சமயம் எத்தனை சிறியது என்பதையும் ஒரே நேரத்தில் எகேடிக்கு உணர்த்தியது விதி!

அஷோக்கை விட்டுப் பிரிந்து ஆட்டோவில் இருந்து குதித்து ஓடியவன், போக்கிடம் தெரியாமல் சென்னையின் தெருக்களில் அலைந்தான். அவனுடைய இருள் கறுப்பு நிறமும், மிரண்ட முழியும் பார்த்து சந்தேக கேஸில் அமுக்கியது போலீஸ். ஸ்டேஷனில் வைத்து பெண்டு நிமிர்த்தியபோதும், ''என் பெயர் ஜிபா கோர்வா... நான் ஜார்கண்ட் மாநிலத்தில் இருந்து அஷோக் என்பவருடன் பிழைப்பு தேடி வந்தேன். அவரைவிட்டுப் பிரிந்துவிட்டேன். திரும்பிப் போக பணமும் இல்லை... வழியும் தெரியவில்லை...'' என்றே திரும்பத் திரும்ப ஒப்பித்தான். லிட்டில் அந்தமான் தீவுக் கூட்டத்தில் இருந்து வந்த ஆதிவாசி என்பதை மறந்தும் சொல்லிவிடவில்லை. ஏதோ ஒரு காரணத்துக்காகத்தான் அதை வெளியே சொல்லக் கூடாது என்று வெல்ஃபேர் ஆபீஸர் அஷோக் ராஜபுத் அறிவுரை தந்ததாக நினைத்தான் எகேடி.

www.t.me/tamilbooksworld

சக்கையாக உதைத்து, போலீஸ் துரத்திவிட்ட பிறகு அவனுக்கு அறிமுகமானான் மைக் புசாரி.

- தொடர்ந்து சந்தேகிப்போம்...

Copyright © Vikas Swarup 2008

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

# மோட்டிவ் 6

● விகாஸ் ஸ்வரூப் ● தமிழில்: அஞ்சனா தேவ்

மோட்டிவ் 6

SIX SUSPECTS

## அழைக்கிறது வாரணாசி!

அஷோக் ராஜ்புத்திடமிருந்து எஸ்கேப் ஆகி, சென்னை அண்ணா சாலையின் ஒரு பஸ் ஸ்டாப்பில் சோர்ந்து போய் முடங்கியிருந்தான் ஏகேடி. மெள்ள அவன் தோளைத் தொட்டான் புதியவன் மைக் புசாரி. தன்னைப் போலவே கறுத்த தேகமும், அமுங்கிப் போன சுருட்டை முடியுமாக இருந்த இவனைப் பார்த்து, ''பிரதர்... நைஜீரியாவிலிருந்து வந்து இங்கே தொழில் செய்துகொண்டிருப்பவன் நான். தோற்றத்தில் என்னைப் போலவே இருக்கும் ஒரு ஆப்பிரிக்க சகோதரனைச் சந்தித்ததில் ரொம்ப சந்தோஷம்!'' என்றான்.

www.t.me/tamilbooksworld

ஏகேடி பேய் முழி முழிக்கவும், ''ஒருவேளை நீ செனகல்காரனா? அல்லது டோகோவா? அல்லது, கென்யா?'' என்று அவன் பாட்டுக்கு நாடுகளை அடுக்கிக் கொண்டே போனான்.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

பசித்த வயிற்றை அழுத்திப் பிடித்தபடி எழுந்து நின்ற எகேடி, ''என் பெயர் ஜிபா கோர்வா... நான் ஜார்கண்ட் பகுதியிலிருந்து வந்தவன்!'' என்றதோடு, இங்கேயே நல்லதாக ஒரு வேலை தேடிக்கொண்டு தங்கிவிட உத்தேசித்திருப்பதையும், தனக்கு ஏற்ற ஒரு பெண் கிடைத்தால், கல்யாணம் பண்ணிக்கொண்டு குடும்பம் நடத்த விருப்பம் என்றும் கேட்காமலே மொத்தமாக கொட்டித் தள்ளினான். நைஜீரியன் மைக் புசாரி கொஞ்சம் யோசித்தான்.

''பிரதர்... கடவுளுக்கு உன் மீது கருணை இருக்கிறது. அதனால்தான் உன்னை என்னிடம் அனுப்பி வைத்திருக்கிறார்...'' என்றவன், ''நான் சொல்கிற சுலபமான சில வேலைகளை நீ செய்தால் போதும். அதை முடித்துக்கொண்டு நாம் வேறு இடத்துக்குச் செல்கிறோம். அங்கே ஒன்று என்ன... பத்துப் பன்னிரண்டு தேவதைகளை உனக்கு முன்னால் நிறுத்துகிறேன். பிடித்தவளைக் கல்யாணம் பண்ணிக்கொண்டு குஷியாக வாழலாம்!'' என்றான்.

www.t.me/tamilbooksworld

வயிறு புடைக்க சாப்பாடு, தி.நகரில் மைக் புசாரி வாடகைக்கு எடுத்திருந்த வீட்டில் சுகமான மெத்தையில் தூக்கம் என்று நாலைந்து நாள் கழிந்தது. மெரீனா பீச்சுக்குப்போய் மிளகாய் பஜ்ஜியின் காரசார ருசியில் மூழ்கினான் எகேடி. கடலில் ஆசை தீர நீச்சலடித்து, தன் தீவில் பிடிக்கிற மாதிரியே பெரிசாக ஒரு மீனையும் கையோடு கவ்விக்கொண்டு வந்து ஆச்சர்யப்படுத்தினான் மைக் புசாரியை.

''ஒருநாளும் இனி என் தீவுக்குத் திரும்புவதாக இல்லை!'' என்பதில் உறுதியாகிவிட்டான் எகேடி.

அடுத்து வந்த நாலாம் நாளில், சென்னை புறநகர் பகுதி ஒன்றுக்கு கால் டாக்ஸியில் கூட்டிப் போனான் மைக் புசாரி. ஒரு பங்களாவை

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

தூரத்திலிருந்து காட்டி, ''பிரதர்... அந்த பங்களாவுக்குப் போய் என் பேரைச் சொல்லு. உள்ளே முனுசாமி என்பவரிடம் கூட்டிப் போவார்கள். அவரிடம் இந்த கவரைக் கொடு. இதில் இருக்கிற காகிதத்தைப் படித்துப் பார்த்துவிட்டு உன்னிடம் ஒரு பெட்டி கொடுப்பார். அதை வாங்கிக்கொண்டு வந்து என்னிடம் கொடு. அவ்வளவுதான் உன் வேலை!'' என்று முதுகில் தட்டிச் சொன்னான்.

''எகேடிக்கு இத்தனை சுளுவான வேலையைக் கொடுத்தால் எப்படி?'' என்று செல்லமாகச் சலித்துக்கொண்டே பங்களாவுக்குப் போனான். கதவைத் திறந்த பெண்ணிடம் தகவல் சொல்ல, முனுசாமியிடம் அழைத்துப் போனாள். ''புசாரி வரவில்லையா? அவரைத்தான் நான் எதிர்பார்த்தேன்...'' என்று முனுசாமி சொல்லிக் கொண்டிருந்தபோதே எகேடியின் சட்டையைக் கொத்தாகப் பிடித்துத் தூக்கியது ஒரு முரட்டு போலீஸ் கரம். இடியாக பிடரியில் இறங்கியது அடி. வெள்ளையும் சள்ளையுமாக வேட்டி சட்டையில் மினுக்கிய முனுசாமி, ''சபாஷ் ஆபீஸர்ஸ்!'' என்று கெக்கலி கொட்டினார்.

www.t.me/tamilbooksworld

''படவா ராஸ்கல்... எண்ணெய் கிணறு பிசினஸ், பேங்கில் கோடிக்கணக்கா டெபாசிட்... அது - இது என்று சொல்லி இன்னும் எத்தனை பேர்கிட்டே தேட்டை போடப் போறீங்க? நீயும் நைஜீரியாக்காரன்தானே? எங்கேடா உன் பாஸ்?'' என்று நடு முதுகில் நங்கென்று குத்தினார் அந்த போலீஸ் ஆபீஸர்.

தீவுக்கு வந்து போகிற சுற்றுலாப் பயணிகளிடம் ஓசி சிகரெட்டும் கோக் டின்னுக்கும் பேசிப் பேசியே ஓட்டை இங்கிலீஷ் கற்று வைத்திருந்தான் எகேடி. அந்த இங்கிலீஷை வைத்து அவன் விளக்கிச் சொன்ன எதையுமே அந்த இன்ஸ்பெக்டர் கேட்பதாக இல்லை. அந்தமான் தீவுக் கூட்டத்துக்கு வருகிற வட இந்தியர்களிடமிருந்து தான் கற்றிருந்த

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

இந்தியில் சில வார்த்தைகளில் எகேடி பேசியபோது, ''ஓ! நைஜீரியா நாய்க்கு இந்தியும் தெரியுமா?'' என்று பதிலுக்கு இந்தியிலேயே எகிறி உதைத்தார் அந்த அதிகாரி.

சத்யப் பிரகாஷ் பாண்டே என்ற அந்த ஆபீஸர் பீகாரிலிருந்து வந்தவர் என்பதும், தனக்கு சோறு போட்டு அடைக்கலம் கொடுத்த மைக் புசாரி வெவ்வேறு பெயர்களில் இந்தியாவின் வெவ்வேறு மாநிலங்களில் ஏராளமாக பண மோசடி செய்தவன் என்றும், பீகாரில் ஒரு கொலை கேஸ் அவன் மேல் பதிந்திருப்பதும், பீகார் போலீஸ் அவனுக்குப் பொறி வைத்துவிட்டுக் காத்திருந்த சமயத்தில்தான் தமிழ்நாடு போலீஸிடமிருந்து ஒரு துப்பு கிடைத்தது என்பதும்... போலீஸின் இன்ஃபார்மராக மாறிய பிசினஸ்மேன் முனுசாமி, பணம் தருவதாக வரவழைத்து பக்காவாகப் போட்டுக் கொடுத்திருக்கிறார் என்பதும் துளித்துளியாகப் புரிந்தது எகேடிக்கு.

www.t.me/tamilbooksworld

என்ன புண்ணியம்..? மைக் புசாரி மட்டும் போலீஸ் கைக்கு சிக்கவேயில்லை. ''உன்னை பாட்னாவுக்குக் கூட்டிக்கொண்டு போய் எலும்பை எண்ணினால், இதுவரை நடத்திய பல மோசடிகளுக்கு க்ளூ கிடைக்காமலா போகும்...'' என்று ரயிலில் எகேடியை ஏற்றிக் கொண்டு கிளம்பினார் இன்ஸ்பெக்டர் சத்ய பிரகாஷ் பாண்டே!

ஓடும் ரயிலில் முதல் வகுப்பில் அவனும் இன்ஸ்பெக்டரும் மட்டுமே இருந்தார்கள்.

''சொல்லுடா உன் நிஜப் பேர் என்ன? இன்னும் யாரெல்லாம் உங்க கூட்டத்துல இருக்காங்க?'' என்று இன்ஸ்பெக்டர் ஒரு சிகரெட்டைக் கொளுத்திக்கொண்டு கேட்க...

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

''சத்தியமா எனக்கு எதுவும் தெரியாது. என் பேரு ஜிபோ கோர்வா... நான் ஜார்கண்டிலிருந்து வந்தவன்...'' என்றான் எகேடி. அவனை கத்தி போல கண்களால் துளைத்த இன்ஸ்பெக்டர், ''சரி, ஜார்கண்ட் எங்கே இருக்கு சொல்லு?'' என்று உறும... எகேடி முழிக்க... அதுவரை விழுந்த அறைகளுக்கெல்லாம் அப்பன் அறை ஒன்று அவன் கன்னத்தில் இறங்கியது! பொறி கலங்கிப் போனவனை, மூச்சுவிடாமல் இன்ஸ்பெக்டர் மிதிக்க... ஒரு கட்டத்தில் தன் முழுக் கதையையும் சொல்லியே தீரவேண்டிய நிலைமைக்கு வந்தான் எகேடி.

தீவு வாழ்க்கை, மர்மமான முறையில் அழிந்துகொண்டிருக்கும் தன் ஓங்கே ஆதிவாசி இனத்து மக்கள், தீவுக் குகையிலிருந்து திருட்டு போன இன்கெடாயி கல், அதனுள் வசிக்கும் தங்கள் தெய்வம் 'புலுகா'... கல்லை மீட்பதற்காக தன்னைத் தேர்ந்தெடுத்து அனுப்பிய மந்திர குரு 'நோகாய்'... கூட்டி வந்த ஆபீஸர் அஷோக் ராஜ்புத்..!

www.t.me/tamilbooksworld

வரிசையாகச் சொன்ன எகேடி, பத்திரமாக தன் பிடிக்குள் வைத்திருந்த பையைப் பிரித்துக் காட்டினான். பல்லாயிரம் வருடங்களுக்கு முன் வாழ்ந்த ஓங்கே இனத்தின் மூதாதையான 'டோமிதி'யின் எலும்புகளால் செய்த மாலை உள்பட நோகாய் கொடுத்தனுப்பியிருந்த விநோதமான பொருட்களை ஆராய்ந்தார் சத்ய பிரகாஷ் பாண்டே!

எகேடியின் கண்ணீரும் அதில் தெரிந்த அப்பாவித்தனமும் அவரை உருக்கியது. சிகரெட் கொளுத்திக்கொண்டு யோசித்தார். ஜன்னலுக்கு வெளியே கொஞ்ச நேரம் பார்த்துக்கொண்டிருந்தார்.

''இதோ பாரு தம்பி... நான் முரடன்தான். ஆனா, எனக்கும் மனசாட்சி இருக்கு. உன்னை ஏமாற்றித் தப்பு பண்ண வைத்த அந்த நைஜீரியக்காரனை நிச்சயம் ஒரு நாள் நான் பிடிச்சிடுவேன். ஆனா,

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

தேவையில்லாம உன்னை கோர்ட்டில் நிறுத்தி பத்துப் பன்னிரண்டு வருஷம் உன் வாழ்க்கையை ஜெயிலில் வீணடிக்க விரும்பலை. நீ உன் தீவுக்கே திரும்பிப் போவியோ... இல்லாட்டி வேறு எங்காச்சும் சுத்தித் திரிவியோ, தெரியாது. இப்ப வாரணாசியை நெருங்கி ரயில் ஓடிக்கிட்டிருக்கு. அதோ, அந்த அபாய சங்கிலியைப் பிடிச்சு இழு. ரயில் நிக்கும். இருட்டில் இறங்கி ஓடிப் போயிடு. அதான் நான் உனக்கு செய்யக்கூடிய உதவி!'' என்றார்.

நம்பிக்கை வராமல் அவரையே திகிலாகப் பார்த்துக் கொண்டிருந்தான் எகேடி. தன்னிடமிருந்த தோல் பைக்குள் அவர் கையைவிட, ''உள்ளே துப்பாக்கி வெச்சிருக்கீங்களா? ரயிலில் இருந்து இறக்கிவிட்டு என்னை சுட்டுக் கொல்லப் போறீங்களா?'' என்று நடுங்கிய அவனை பாவமாகப் பார்த்தார்.

www.t.me/tamilbooksworld

''எனக்கும் ரெண்டு குழந்தைங்க இருக்காங்க, தம்பி. அவங்க என்னை பெரிய ஹீரோவா நினைச்சுக்கிட்டிருக்காங்க. ஆனா, நானோ இந்த பாழாப்போன போலீஸ் வேலையில் மனசாட்சிக்கு விரோதமா நிறைய காரியம் பண்ணிக்கிட்டிருக்கேன். செல்வாக்கு உள்ளவங்க தப்பு பண்ணும்போது அவங்களுக்கு என்னால தண்டனை வாங்கித் தர முடியறதில்லை. ஏழை பாழைங்க மேலே பொய் கேஸ் போட்டு ஃபைலை மூடற கொடுமையை நிறுத்தவும் முடியலை. எத்தனையோ பாவத்துக்கு ஒரு சின்னப் பரிகாரமாத்தான் உன்னை விடுவிக்க நினைக்கிறேன். செயினை பிடிச்சு இழுத்துட்டு ஓடிப் போயிடு!'' என்றபடியே பைக்குள்ளிருந்து சில நூறு ரூபாய் நோட்டுகளை எடுத்து எகேடியிடம் கொடுத்தார்.

கண்களைத் துடைத்துக்கொண்டு எழுந்தான் எகேடி. ஆதிவாசிகளுக்கே உரிய பாணியில் வளைந்து இன்ஸ்பெக்டரைக்

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*கும்பிட்டான். அபாய சங்கிலியை இழுத்தான். கிறீச்சிடலுடன் அந்த இருட்டு வனாந்தரத்தில் ரயில் நிற்கவும்... அடிபட்ட சிறுத்தையாக குதித்து எதிர்ப்பட்ட கரும்புக் காடு வழியாக ஓட ஆரம்பித்தான் எகேடி.*

*தூரத்தில் மின்னிக் கொண்டிருந்த விளக்குகள் அங்கே ஒரு ஊர் இருப்பதைக் காட்டி அழைத்தன. எகேடிக்கு தீவு ஞாபகம் வந்தது. தன் சுற்றத்தார் நினைப்பும் சூழ்ந்து வந்தது. கூடவே அழுகை முட்டிக்கொண்டு வந்தது!*

- தொடர்ந்து சந்தேகிப்போம்...

Copyright © Vikas Swarup 2008

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

# மோட்டிவ் 6

விகாஸ் ஸ்வரூப் • தமிழில்: அஞ்சனா தேவ்

மோட்டிவ் 6

SIX SUSPECTS

## நடுவீதியில் ஒரு நாராசம்!

வாரணாசி புதிய ஆச்சர்யங்களைப் பொதிந்து வைத்திருந்தது. ஊருக்குள் அவன் நுழைந்த அந்தப்பின்னிரவு வேளையில், தெரு விளக்குகளின் ஒளிக்கு நடுவே சாதுக்களும், பிச்சைக்காரர்களும் படுத்து உறங்கிக் கொண்டிருந்தார்கள். ஊளையிட்ட நாய்களைப் பார்த்து நடுங்கியபடி, தட்டுத் தடுமாறி நடந்தவன், ஒரே ஒரு கடை திறந்திருப்பதைக் கவனித்து நெருங்கினான். அந்தக் கடைக்கு உள்ளே இருந்து பதற்றமாக வெளியில் வந்த ஒரு பெண்மணி, கையில் பெரிய கவரோடு வேகமாக நடப்பதைப் பார்த்தான். உள்ளுணர்வு ஏதோ சொல்ல... அந்தப் பெண்மணியின் பின்னாடியே நிழலாக ஒட்டிக்கொண்டான். கணக்கு வழக்கில்லாத இருட்டு சந்துகளின் வழியே நடந்து... கடைசியாக ஒரு வீட்டை நெருங்கிய அந்தப் பெண்மணி திடீரென்று திரும்பி எகேடியின் கையை இறுக்கிப் பிடித்தாள்.

www.t.me/tamilbooksworld

பிடியின் வலியில் அரண்டு, நெருக்கத்தில் பார்த்தபோது சல்வாருக்குள்ளிருந்து நீண்ட அந்தப் பெண்மணியின் கையில் புசுபுசுவென முடி வளர்ந்து இருப்பதையும்... மார்புப் பகுதியிலும் காடாக கேசம் இருப்பதையும் கவனித்தான் எகேடி. இருந்தாலும், பயம் துளியும் இல்லாமல் தன் கதையை மளமளவென்று அவன் கொட்டிவிடவும்... பிடி தளர்ந்தது.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

www.t...orld

# 57

டோலி என்ற அந்த சல்வார் கமீஸ் உருவம் ஒரு அரவாணி என்பதும், சக அரவாணியின் விஷக் காய்ச்சலுக்கு மருந்து வாங்கிப் போவதும் தெரிந்தது.

''காய்ச்சலை குணப்படுத்த எனக்குத் தெரியும்!'' என்ற எகேடி, மரணத்தின் வாசலில் நின்று போராடிக் கொண்டிருந்த அரவாணிக்கு, தன் பைக்குள்ளே இருந்து மூலிகை இலைகளைப் பிழிந்து சாற்றை ஊட்டினான். 'டோமிதி'யின் எலும்பு மாலையை எடுத்து கழுத்தில் சார்த்தினான். டோலியிடம் கெஞ்சிக் கூத்தாடி அந்த வீட்டின் ஓரத்தில் படுத்தவன், அடித்துப் போட்ட மாதிரி தூங்கிப் போனான்.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

ஏக ஆரவாரம் கேட்டு எகேடி கண் விழித்தபோது அவனைச் சுற்றி கொத்துக் கொத்தாக அரவாணிகள்.

''டேய் பையா! பெரிய அதிசயம் பண்ணிட்டியே... நாலஞ்சு டாக்டர்கள் பார்த்தும் குணமாகாத காய்ச்சலை ஒரே ராத்திரியில் விரட்டி அடிச்சிட்டியே...'' என்று இறுக்கிக் கொண்டாள் டோலி.

வாரணாசியில் ஒரு நட்சத்திர ஹோட்டல் கட்டுகிற இடத்தில் அவனை வேலைக்குச் சேர்த்துவிட்டாள். தினம் ஐம்பது ரூபாய் கூலிக்கு கையும் முதுகும் ஒடிய ஒடிய கல் சுமந்தான் எகேடி. ஒருவாய் சோற்றுக்கு நாய் மாதிரி உழைக்கிற இந்த அவஸ்தையைவிட, ஜாலியாக எந்த வேலையும் இல்லாமல் சுற்றித் திரிந்த தீவு வாழ்க்கை எத்தனை சுகமானது என்று எகேடியின் மனசு அடித்துக் கொண்டது. ஒரு நாள் மாலை கடைவீதி வழியாக டோலியின் வீட்டுக்குத் திரும்பும்போது, ஒரு கடையின் கண்ணாடித் தடுப்பு மீது ஒட்டியிருந்த வண்ணப் படங்களைப் பார்த்தான்.

www.t.me/tamilbooksworld

ஒரு படம் ஆணியடித்த மாதிரி நிறுத்தியது. தகதகக்கும் சூரிய வெளிச்சத்தில் மரங்கள் காற்றிலாட... தங்க நிற மணற்பரப்பில் விரிந்து கிடந்தது தீவு. அந்தமான்தான் அது என்பதை பார்த்த மாத்திரத்திலேயே அவனால் உணர முடிந்தது.

அது ஒரு டூரிஸ்ட் ஏஜென்சி. உள்ளே கவுன்ட்டரில் இருந்த பெண்மணி இவனையும், உடம்பெல்லாம் அப்பியிருந்த சிமென்ட் புழுதியையும் பார்த்து முகம் சுளித்தாள். ''இந்தத் தீவுக்கு நான் போவதற்கு எவ்வளவு பணம் தரவேண்டும்?'' என்று இவன் விசாரிக்க...

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

''பேக்கேஜ் டூரில் போக வர ஒன்பதாயிரம் ரூபாய் ஆகும்...'' என்றவள் அச்சடித்த விளம்பர காகிதத்தை வேகமாக இவன் கையில் திணித்து வெளியே விரட்டினாள்.

சொந்த மண்ணுக்குத் திரும்ப... சுற்றங்களோடு மறுபடி சேர்ந்து நிம்மதியாக வாழ... எகேடிக்குத் தேவை ஒன்பதாயிரம் ரூபாய்! திருவிழாவில் பஞ்சு மிட்டாய், ரங்கராட்டினத்தை பராக்கு பார்த்துக்கொண்டே அம்மாவைப் பிரிந்த குழந்தை... மறுபடி அவளைப் பார்த்ததும் ஓடிப் போய் மடியில் விழுந்து கதறுமே... அப்படி தீவு மண்ணில் புரண்டு கதறத் துடித்தான் எகேடி!

கட்டட வேலையில் கிடைக்கிற ஐம்பது ரூபாய் தினக்கூலியை டோலியிடமே கொடுத்து வைத்தான். ஞாயிறு உள்பட எந்தவொரு நல்ல நாளிலும்கூட வேலைக்கு லீவு கிடையாது. இருட்டு கவ்வுகிற வரையில் வேலை வாங்கிவிட்டு, சக்கையாகத்தான் வெளியே துப்புவார் கான்ட்ராக்டர். டோலியின் வீட்டுக்கு வந்து அவள் தருவதைத் தின்று தரையில் விழுந்தால் பொழுது விடிவதுதான் தெரியும்.

www.t.me/tamilbooksworld

''ஒன்பதாயிரம் ரூபாய் சேருவதற்கு இன்னும் எத்தனை நாள் ஆகும்?'' என்று அடிக்கடி கேட்ட அவனை பாவமாகப் பார்த்தாள் டோலி. தன் பணத்திலிருந்து ஆயிரம் ரூபாயை அவன் பணத்தோடு எடுத்து வைத்தாள். மொத்தம் நான்காயிரம் ரூபாய் சேர்ந்திருந்தது.

குண்டு வெடித்த மாதிரி ஒரு சத்தம்... தரையெல்லாம் குலுக்கிப் போட்டது. கட்டட வேலை பார்த்துக் கொண்டிருந்த அத்தனைபேரும் போட்டது போட்டபடி பதறிப் பார்த்தார்கள். பல நூறு அடிகளுக்குக் கட்டியிருந்த மூங்கில் சாரம் மொத்தமாக முறிந்து விழுந்திருந்தது.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*கற்குவியலுக்கு நடுவே அவர்களின் சக தொழிலாளி சூரஜ் ரத்த வெள்ளத்தில் செத்துக் கிடந்தான்.*

*''ஏய், என்னத்தை வேடிக்கை பார்த்துக்கிட்டு..? ஒழுங்கா மேலே ஏறிப்போய் வேலை பார்க்கத் துப்பில்லாத நாய், செத்துத் தொலைச்சிட்டான். போலீஸ், கேஸ்னு தேவையில்லாத அவதி! அந்தப் பிரச்னையை நாங்க பார்த்துக்கறோம். எல்லாரும் கலைஞ்சு போங்க. இன்னும்ரெண்டுநாளைக்கு வேலை கிடையாது...'' என்று தொழிலாளிகளை அவசரமாக அங்கிருந்து விரட்டினான் கான்ட்ராக்டர்!*

*தரையில் கிடந்த சூரஜின் பிணத்தை கடைசியாக ஒரு தடவை பார்த்துவிட்டு, நடக்கும் பிணங்களாக எல்லோரும் வெளியே போனார்கள்.*

www.t.me/tamilbooksworld

*அப்படித்தான் இரண்டு நாளைக்கு விடுமுறை கிடைத்தது எகேடிக்கு.*

*அன்றைய ராத்திரி நதிக்கரையில் டோலியுடன் நின்றுகொண்டு, தூரத்தில் எரியும் சடலங்களைப் பார்த்தபடியே கேட்டான் எகேடி.*

*''ஏன் டோலி... இந்த ஊரில் வந்து உயிரை விட வேண்டும் என்று நிறையப் பேர் தேடி வருகிறார்களே... அப்படி என்ன இந்த ஊருக்கு விசேஷம்?''*

*''காசியில் செத்தால் நேராக சொர்க்கம் என்பது இந்த நாட்டில் பலருடைய நம்பிக்கை. நல்லபடி வாழ நினைக்கிறவர்களும் அது வரை தாங்கள் பண்ணிய பாவத்தைத் தொலைத்துவிட்டுப் போகவும் இங்கேதான் வருகிறார்கள். வாழுவதற்கும் சாவதற்கும் ஒரே சமயத்தில் வழி பண்ணுகிற ஊர் இது!''*

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

''நீ இந்த ஊரில் இருக்கிறாய்? இங்கேதானே செத்துப் போவாய். உனக்கும் நேராக சொர்க்கம் கிடைக்குமா?'' என்றான் எகேடி குழந்தையாக.

''தெரியவில்லை. ஆணுக்கும் பெண்ணுக்கும் மட்டும்தான் சொர்க்கமா... அல்லது, என்னை மாதிரி இரண்டுமாக இல்லாதவர்களுக்கும்கூட சொர்க்கத்தில் இடம் உண்டா என்று தெரியவில்லை. யாராவது ஒரு சாதுவிடம்தான் கேட்க வேண்டும்!'' என்று சொல்லிப் பெரிதாக மூச்சுவிட்ட டோலி,

''உனக்குத் தெரியுமா எகேடி. அரவாணிகள் கைபட்டால் பிறந்த குழந்தைக்கு சிறப்பாக வாழ்க்கை அமையும் என்றும், நாங்கள் ஆசீர்வதித்தால் வியாபாரம் ஓஹோவென்று நடக்கும் என்றும் நம்புகிறவர்களை வைத்துத்தான் எங்கள் வாழ்க்கை ஓடுகிறது. அதேசமயம், விருப்பமே இல்லாமல் சில பாவ காரியங்களையும் நாங்கள் செய்ய வேண்டி இருக்கிறது. அந்த பாவத்தையும் இந்த நதியில்தான் நாங்கள் கழுவிக் கொண்டிருக்கிறோம்!''

www.t.me/tamilbooksworld

'பாவம்' என்று டோலி சொன்னது எதைப் பற்றி என்று மறுநாளே நேரில் பார்த்தான் எகேடி!

அது வாரணாசியின் முக்கியமான கடைத்தெரு. பிஸியான காலைப் பொழுது. தன்னோடு இன்னும் இருபது முப்பது அரவாணிகளைத் திரட்டிக்கொண்டு வந்திருந்தாள் டோலி.

ஒரு கடையை தூரத்திலிருந்தே எகேடிக்குக் காட்டினாள்.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

''அந்தக் கடைக்குள் போ! முதலாளி கல்லாப் பெட்டியில் உட்கார்ந்திருப்பான். அவனைப் பார்க்க யாரோ வெளியில் வந்து நிற்பதாகச் சொல்லு. எப்படியாவது அவனை வெளியே வரவழைத்துவிடு. மற்றதை தூரே நின்று வேடிக்கை பார்!'' என்று டோலி சொல்ல... விசுக் விசுக்கென்று நடந்து கடைக்குள் போனான் எகேடி. சொல்லிக் கொடுத்தபடியே இவனும் கூற... குழப்பமாகிவிட்ட முதலாளி, இவனோடு சேர்ந்து கடைக்கு வெளியே வந்தார். வீதியில் இறங்கி அவர் அப்படியும் இப்படியுமாகப் பார்க்க... தேனீக் கூட்டம் மாதிரி அப்படியே அவரைச் சூழ்ந்து கொண்டார்கள் அரவாணிகள்.

கையைத் தட்டியபடி, முகத்தில் ஏக நக்கலான சிரிப்பைத் தேக்கியபடி, அந்த கடை முதலாளியைச் சுற்றிச் சுற்றி வட்டமடித்துப் பாட ஆரம்பித்தார்கள். ''நீ உருப்பட மாட்டாய்... உன் குழந்தைகள் விளங்காமல் போகும்.. உன் பிசினஸ் நசிந்து நாசமாகப் போகும்!'' என்று வரிசையாக சாபங்களை அடுக்கினார்கள் அந்தப் பாட்டு வழியாக. நடுவே நடுவே அந்த முதலாளியின் கன்னத்தைப் பிடித்துக் கிள்ளுவது, குமட்டில் குத்துவது, அப்படியும் இப்படியுமாகத் தள்ளிவிட்டு தடுமாற வைப்பது என்று அவர்கள் அந்தர் பண்ண... அக்கம்பக்கத்துக் கடைகளிலிருந்து எல்லோரும் வெளியே வந்து கூடி விட்டார்கள். அரவாணிகளின் ஆட்டம் பாட்டத்தைவிட, இந்தக் கடை முதலாளி படுகிற அவஸ்தைகளை ரொம்பவும் ரசித்துச் சிரித்தார்கள். தெருவில் போகிற வருகிறவர்களுக்கும் அது செமத்தியான சுவாரஸ்யமாக அமைந்துபோனது.

www.t.me/tamilbooksworld

வெகுநேரம் வரை இப்படியே 'டீஸ்' செய்து முடித்தபோது, அந்த முதலாளி அவமானத்தில் குன்றிக் குறுகிப் போயிருந்தார். தரையில் மடங்கி பச்சைக் குழந்தை போல தேம்பி அழுது கொண்டிருந்தார். இறுதியாக அரவாணிகள், ''இதோ பாரு... பேங்க் அதிகாரிங்கதான் காசு

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

கொடுத்து எங்களை அனுப்பி வெச்சாங்க. வாங்கின கடனை ஒழுங்கா திருப்பிக் கட்டாம எத்தனை நாளைக்குதான் இழுத்துகிட்டு இருப்பே? இன்னும் ஒரு வாரத்துக்குள்ளே மொத்தக் கடனையும் அடைக்கிற வழியைப் பாரு. இல்லாட்டி, அடுத்த திங்கள் கிழமை மறுபடி வருவோம்...'' என்று எச்சரித்துவிட்டு நகர்ந்தார்கள் அவர்கள்.

எகேடி சிலையாகிப் போய் பார்த்திருந்தான். டோலியை நெருங்கி, ''துளிகூட ஈவு இரக்கமில்லாத காரியமா இருக்கே, இது?'' என்றான் வேதனையோடு.

''என்ன பண்ணச் சொல்றே... கொடுத்த கடனை வசூல் பண்ண இந்த ஊர் பக்கமெல்லாம் ரவுடிகளைவிட எங்களைத்தான் அதிகமா நம்புறாங்க. வங்கிக்காரங்களே காசு கொடுத்து எங்களை இப்படி அனுப்பி வைக்கிறாங்கன்னா... ஜனங்க மானம் மரியாதைக்கு எந்தளவுக்கு பயப்படறாங்கன்னு பார்த்துக்கோ! மனசுக்குப் பிடிக்கலைதான்... ஆனா, வயிறுன்னு ஒண்ணு இருக்கில்லே?'' என்றாள்.

www.t.me/tamilboooksworld

- தொடர்ந்து சந்தேகிப்போம்...

Copyright © Vikas Swarup 2008

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

# மோட்டிவ் 6

## ஹர ஹர மகாதேவ்!

மறுநாள் வேலை முடிந்து எகேடி திரும்பியபோது, டோலியின் வீட்டு முன்பு செம கூட்டம். பெரும்பாலும் அரவாணிகள். அத்தனை பேரும் ஓலமிட்டு அழுதுகொண்டு இருந்தார்கள். அவர்களை விலக்கிக்கொண்டு உள்ளே புகுந்து பார்த்தபோது, வீட்டின் சுவரெல்லாம் ரத்தச் சிதறல். பண்டம் பாத்திரம் எல்லாம் உடைந்து சிதறிக்கிடந்தது.

www.t.me/tamilbooksworld




www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

''டோலியை அந்த முதலாளி ஆள் வெச்சு அடிச்சிட்டான். இரும்பு பைப்பை வெச்சி மண்டையைப் பிளந்துட்டானுங்க அந்தப் பாவிங்க. வீட்டையும் சூறையாடி... இருந்ததை எல்லாம் கொண்டுபோயிட்டானுங்க!'' என்று கதறினார்கள் அரவாணிகள். நெஞ்சு நடுங்க அலமாரியை நோக்கி ஓடினான் எகேடி. சிறுகச் சிறுக அவன் கொடுத்து, டோலி பத்திரப்படுத்தி வைத்திருந்த பணம் இருந்த அலுமினியப் பெட்டியை அங்கே காணவில்லை. அதையும் கொள்ளையிட்டுப் போயிருந்தார்கள் ரவுடிகள்.

விம்மலோடு ஆஸ்பத்திரிக்கு எகேடி ஓடிப் போய் பார்த்தபோது, எல்லாமே முடிந்து போயிருந்தது. டோலியின் உடலை ஒரு ஓலைப் பாய்க்குள் வைத்து மார்ச்சுவரிக்கு வெளியே உருட்டிவிட்டு இருந்தார்கள்.

''அரவாணிக்கும் சொர்க்கத்துல ஒரு இடம் இருக்குமானு தெரியலை!'' - ஏக்கமாக ஒலித்தது டோலியின் குரல்.

www.t.me/tamilbooksworld

கடைசி நாள் கூலியாக வாங்கிய 50 இரண்டு வேளைக்குக்கூட போதவில்லை. வயிறு காய்ந்து சுருங்கிக்கிடக்க... தீவுக்குள் தான் தின்று தீர்க்கிற பழங்களும், சுவையான ஆமைக்கறியும் எகேடியை ரொம்பவே ஏங்கவைத்தன. அஷோக்கை விட்டுப் பிரிந்து வந்தது எத்தனை பெரிய முட்டாள்தனம். அவனோடே சேர்ந்து மறுபடி தீவுக்கே போயிருக்கலாம். ஆனால், இனி அது எப்படி?

யோசித்துக்கொண்டே கண் செருகி இருந்தவனை, டிரக் வண்டியின் குலுக்கல் திடுக்கிட்டு கண் முழிக்கவைத்தது. வசவசவென்று சூழ்ந்திருந்த பக்த கோடிகள் அத்தனை பேரும் காரேமூரேவென்ற கூச்சலுடன் டிரக்கை விட்டு இறங்கினார்கள்.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

''அலகாபாத் வந்தாச்சு... எல்லாரும் இறங்குங்க'' என்று சர்தார்ஜி டிரைவர் சத்தம் போட்டான். மகா மேளா கொண்டாட்டத்துக்காக வாரணாசி வழியாக வந்துகொண்டு இருந்த டிரக்கில் கெஞ்சிக் கூத்தாடி இடம் பிடித்திருந்தான் எகேடி.

கண் எதிரில் ரத்த வெள்ளத்தில் கிடந்த கட்டடத் தொழிலாளி சூரஜை... ரவுடிகளால் மண்டை பிளந்து செத்துப்போன டோலியை... தன்னை பெரும் சிக்கலில் ஆழ்த்திவிட்ட நைஜீரியாக்காரன் மைக்கை... அடைய முடியாத தூரத்தில் இருக்கும் தன் தீவையும், வெல்ஃபேர் ஆபீஸர் அஷோக்கையும் மறக்க நினைத்து அலகாபாதில் வந்து இறங்கிய எகேடிக்கு இங்கேயும் புதிய அனுபவங்கள் காத்திருந்தது.

மகா பிரவாகமாக ஓடிக்கொண்டு இருந்த கங்கை நதிக்குள் மாளாத நம்பிக்கைகளோடு மூங்கி எழுந்த பல்லாயிரக்கணக்கானவர்களை பிரமிப்போடு பார்த்துக்கொண்டே இருந்தான் எகேடி. இங்கே அவனுக்கு உணவு ஒரு பிரச்னையே இல்லை. கை நீட்டிய இடத்திலெல்லாம் பிச்சையாக யாராவது ஏதாவது கொடுத்துக்கொண்டே இருந்தார்கள்.

www.t.me/tamilbooksworld

காட்டு யானைகளின் கூட்டம்போல உடல் அதிரக் கூட்டமாகப் புனித நீராடலுக்கு சென்றுகொண்டு இருந்த நாகா சாதுக்களை அதிசயமாகப் பார்த்தான் எகேடி. நாகரிகமே எட்டிப் பார்க்காத அவன் தீவில் ஓங்கே ஆதிவாசிகள்கூட உடம்பில் ஒரு பொட்டுத் துணியோடுதான் இருப்பார்கள். இந்த நாகா சாதுக்களோ சாம்பல் மட்டுமே ஆடையாகத் தரித்து, விண்ணதிரும் சிவ கோஷங்களோடு துளிகூட கூச்சம் இல்லாமல் நடமாடினர். மக்களும் பயபக்தியோடு இவர்களுக்கு வழிவிட்டு ஒதுங்கினார்களே தவிர, அந்த நிர்வாணத்தால் யாரிடமும் எந்த சலனமும் இல்லை!

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

முரசுகள் கொட்ட, துந்துபிகள் முழங்க, நதிக் கரையில் காத்திருந்த கூட்டம் நாகா சாதுக்களுக்கு கோஷங்களோடு வரவேற்பு கொடுத்தது. ''ஹர ஹர மகாதேவ்'' என்று கோரஸாக எழுந்த குரலில் எகேடிக்கு ஒருவிதக் கிறக்கமும் மயக்கமும் தவிர்க்க முடியாமல் கூடியது. அதிலும் கேட்கக்கேட்க அள்ளி வழங்கப்பட்ட பூரியும் ஜிலேபியும் அவனுக்கு ரொம்பவே பிடித்தது. ஜனங்களோடு ஜனமாக இவனும் நதியில் இறங்கி ஜிலீரென்று முங்கு போட்டான்.

தீவுக்குப் போகிற ஆசையை சற்றே மறந்து சுமார் ஒரு மாத காலம் இந்த கொண்டாட்ட நகரத்தில் வளைய வந்த எகேடியை அந்த பகீர் குண்டு வெடிப்பு மொத்தமாக உலுக்கிப் போட்டது.

அன்று மகி பூர்ணிமா... புனித நீராடல் திருவிழாவின் கடைசி நாள்... நதிக்கரை, வழக்கத்தைவிட பல மடங்கு கூட்டத்தில் திணறிக்கொண்டு இருந்தது. கங்கை - யமுனை சங்கமத்தில் பாவங்களைத் தொலைக்க வந்த கூட்டத்தை ஆர்வமாக எகேடி வேடிக்கை பார்த்துக்கொண்டு இருந்த நேரத்தில்தான் அந்த குண்டு வெடித்தது. ஒரு சில நிமிடங்களுக்கு எதுவுமே புரியவில்லை. காதை அடைத்த ஒலியைத் தொடர்ந்து, ஊரையே பிளக்கும் விதமாக ஓலங்கள் எழத் துவங்கின. தட்டுத் தடுமாறி எகேடி நடந்தபோது, தனித் தனியாக சிதறிக்கிடந்த மனித உறுப்புகளும், நார் நாராகப் பிய்ந்து தொங்கிய வாகனங்களும், எங்கும் சூழ்ந்திருந்த புகை மூட்டமும் நடுநடுங்கவைத்தன.

www.t.me/tamilbooksworld

நதிக்குள் நீராடிக்கொண்டு இருந்தவர்களோ, என்ன நடந்தது, ஏது ஆனது என்றே புரியாமல் உயிர் தப்பும் வெறி ஒன்றே கொண்டவர்களாக ஒருவரை ஒருவர் தள்ளிக்கொண்டு முன்னேற, அந்த நெரிசலில் பல தேகங்கள் நசுங்கிக் கதறின.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

உணர்வுகள் மழுங்கியவனாக ஓட்டமும் நடையுமாக எகேடி ரயில்வே நிலையத்தில் வந்து விழுந்தான். ''இனி எகேடிக்கு இந்த ஊரே வேண்டாம். என் தெய்வம் 'புலுகா'வுக்கு எங்கே சித்தமோ, அங்கே கொண்டுபோய் என்னைச் சேர்க்கட்டும்...'' என்று தனக்குத் தானே பிதற்றியவனாக... பிளாட்பாரத்தில் ஓடியவனின் கண்கள் அந்த உருவத்தை அந்த குழப்பத்திலும் கவனித்துவிட்டன.

ஜம்மென்று ஷேவ் செய்துகொண்டு, நறுக்கென்று கிராப் வைத்து, ஒல்லியாக இருந்த அந்த உருவம்... ஒரு பெஞ்சில் அமர்ந்து பிஸ்கெட் தின்றுகொண்டு இருந்தது. பார்த்ததுமே பாய்ந்தோடி, காலைக் கட்டிக்கொண்டான். திடுக்கிட்டு குனிந்து எகேடியைப் பார்த்ததும், படக்கென்று கண்கள் முழுக்க சிவப்பைப் பூசிக்கொண்ட அந்த உருவம் - அஷோக் ராஜ்புத்!

www.t.me/tamilbooksworld

''கறுப்புப் பன்னி! நன்றி கெட்ட நாயே! உன்னைத் தேடித் தேடியே எனக்கு நாலு மாசம் வீணாப்போச்சுடா...'' என்றபடி எகேடியின் முதுகில் ஓங்கி ஓங்கி அஷோக் அறைய... அதை ஒரு பொருட்டாகவே நினைக்காமல் நாய்க்குட்டி மாதிரி அவன் காலிலேயே கிடந்தான் எகேடி.

''அஷோக் சாப். நான் பெரிய தப்பு பண்ணிட்டேன். உங்களை விட்டு நான் போயிருக்கக் கூடாது. இந்த உலகம் எவ்ளோ மோசமானதுன்னு இப்போ புரிஞ்சுகிட்டேன் சார். எனக்கு இந்த ஊர் எதுவும் வேண்டாம். கல்யாணமும் வேணாம்... ஒரு கண்றாவியும் வேண்டாம். என்னை தீவுக்கே மறுபடி எப்படியாச்சும் கொண்டுபோய் சேர்த்துடுங்க சாப்!'' என்று கதறினான்.

கோபம் ஒருவழியாக ஆறித் தீர்ந்த பிறகு, ''சரி, கொண்டுபோய் சேர்க்கிறேன். அதுக்கு முந்தி நீ எனக்கு ஒரு வாக்கு கொடு. இனி என்

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

சொல்லை மீறி நீ எதுவும் செய்யக் கூடாது, சரியா?'' - கேட்டான் அஷோக்.

''எங்கள் 'புலுகா' மீது ஆணை. நீங்கள் சொல்வதைத் தாண்டி இனி நான் எதுவும் செய்ய மாட்டேன்!'' என்ற எகேடி,

''என் ஆதிவாசி இனத்துப் பெரியவர்கள் கொடுத்த கட்டளையை நிறைவேற்றாமல், ஊர் சுற்றிப் பார்க்கப் போனது நான் செய்த பெரிய பாவம்... நீங்களாவது 'இன்கெடாயி' கல்லைக் கண்டுபிடித்தீர்களா?'' என்று கேட்டான் ஆர்வமாக.

''ம்ஹூம்! கொல்கத்தாவில் இருந்து சென்னைக்கு அதைக் கொண்டுபோன ராஜாகோபால் அடுத்த ஒருசில நாளில் செத்துப் போனார். அவர் மனைவி அந்தக் கல்லை தன் குடும்ப குருஜியிடம் கொடுத்ததாகச் சொன்னார். அந்த குருஜி மாதக் கணக்கில் தன் வெளிநாட்டுப் பயணத்தை முடித்துக்கொண்டு, மகா மேளாவில் கலந்துகொள்ள இப்போதுதான் அலகாபாத் வந்திருக்கிறார். அந்த விஷயம் தெரிந்துதான் நான் இங்கே வந்தேன்!''

www.t.me/tamilbooksworld

- அஷோக் சொல்லச் சொல்ல எகேடி துள்ளினான். ''அப்படியானால், 'இன்கெடாயி' கல்லை அந்த குருஜியிடம் இருந்து நீங்கள் கைப்பற்ற வேண்டியதுதானே..?''

அஷோக் முகம் அப்செட்டில் இருந்தது. ''நான் அந்த சாமியாரை தேடிப் போனேன். கொஞ்ச நேரத்துக்கு முன்புதான் தெரிந்தது. அந்தக் கல்லை எவனோ அந்த சாமியாரிடம் இருந்து அடித்துவிட்டானாம்!''

''ஐயோ... அப்புறம் நாம் என்ன செய்வது?''

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*''கொஞ்சம் காத்திருப்போம். பொறுமையாகத் தேடுவோம். கட்டாயம் கிடைக்கும். அதற்கிடையில் ஒரு சின்ன ஓய்வு எடுத்துக்கொள்வோம். ராஜஸ்தானில் இருக்கும் ஜெய்சல்மீர் என் சொந்த ஊர். இப்போது நாம் அங்கேதான் போகப்போகிறோம்!''*

- தொடர்ந்து சந்தேகிப்போம்...

Copyright © Vikas Swarup 2008

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

## மோட்டிவ் 6

### எகேடிக்கு காதல் வந்தாச்சு!

ராஜஸ்தான் மாநிலம் ஜெய்சல்மீரில் கொண்டுபோய் எகேடியை இறக்கிய அஷோக் ராஜ்புத், அங்கும் கிட்டத்தட்ட ஓர் அடிமை போலத்தான் அவனை நடத்தினான். அஷோக்கின் அண்ணன் குழந்தையும், அந்தக் குழந்தையின் தோழர்களும்தான் எகேடிக்கு சின்ன ஆறுதல். பெண்டு நிமிர்த்திய வீட்டு வேலைகளுக்கு நடுவே, அந்தக் குழந்தைகளின் கள்ளம் கபடம் இல்லாத நெருக்கத்தில் கொஞ்சம் கவலைகளை மறந்திருந்தான் எகேடி.

t.me/tamilbooksworld

எத்தனைதான் கடுமையாக வேலை வாங்கினாலும், அஷோக்கின் அண்ணி கொடுக்கும் சுவையான உணவுகளும், ஜில்லென்று அவள் தருகிற மோரும் எகேடியை இன்னும் சற்றுக் குளுமை ஆக்கின. இருந்தாலும், மறுபடி லிட்டில் அந்தமான் தீவுக் கூட்டத்துக்கே திரும்பிப் போய், எப்போது தன் இனத்தோடு சேருவோம் என்ற ஏக்கம் எகேடியை வாட்டிக்கொண்டே இருந்தது.

திடீரென்று ஒருநாள் அஷோக் வந்து அவசரப்படுத்தினான்.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*''ஏய், கறுப்பா! உடனே கிளம்பு. நாம் டெல்லிக்குப் போகிறோம். 'இன்கெடாயி' கல் இருக்கும் இடத்தை நான் கண்டுபிடித்துவிட்டேன்!'' என்று சொல்லி, தரதரவென்று எகேடியைக் கிளப்பி, டெல்லிக்கு ரயில் ஏறினான்.*

www.tamilbooksworld

*டெல்லி மகா சமுத்திரத்தில், மெஹ்ரூலி ஏரியாவில் குடிசைப் பகுதி ஒன்றில் எகேடிக்கு வீடு பார்த்திருந்தான் அஷோக்.*

*''டெல்லி... கண்காணிப்புகள் மிகுந்த நகரம். மற்ற ஊர்கள் மாதிரி எல்லாம் இங்கே நீ அத்தனை சுலபமாக நடமாடிவிட முடியாது. இந்த மாதிரி தாடி மீசையெல்லாம் வைத்துக்கொண்டு உருட்டைக் கண்களோடு நடமாடினால் உன்னைப் பிடித்து உள்ளே போட்டுவிடுவார்கள். சுத்தமாக ஷேவ் பண்ணிக்கொண்டு, இந்த குடிசைக்குள்ளேயே அடைந்துகிட! என்னோடு சேர்த்து உன்னை லாட்ஜில் தங்கவைப்பது எல்லாம் சாத்தியமில்லை...'' என்று சொல்லிவிட்டுப் போனான் அஷோக்.*

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

வேலை வெட்டி எதுவும் இல்லாமல், தனக்காக அஷோக் வாடகைக்குப் பிடித்துக் கொடுத்திருந்த குடிசையின் வாசலில் உட்கார்ந்து வானத்தை வெறித்துக்கொண்டு இருந்த எகேடிக்கு, தற்செயலாகத்தான் அறிமுகமானாள் சம்ப்பி. போபால் விஷ வாயுக் கசிவை அவள் தாய் சுவாசித்ததன் பரிசாக, இரண்டு கண்களும் இல்லாமல் பிறந்திருந்த சம்ப்பி, முகத்திலும் குரூரமான வடிவங்களோடு இருக்கவும்... எகேடிக்கு அவள் மீது தனியாகக் கவனம் பதிந்தது. 'முன்னா பாய்' என்று பாசத்தோடு அவள் அழைத்த அவளுடைய அண்ணன் ஒருவனும், அவளை எடுத்து வளர்த்த முன்னாவின் தாயும் பாதி நேரம் குடிசையில் இருப்பது இல்லை என்பதையும், தனிமையில் இருக்கும் சம்ப்பி வெளியே வந்து பார்வையற்ற விழிகளால் வானத்தை அளந்துகொண்டு இருப்பதையும் பார்த்தபோது எகேடிக்கு பரிதாபம் பொத்துக்கொண்டது.

www.t.me/tamilbooksworld

மெதுவாகப் போய் அவளிடம் பேச்சுக் கொடுக்க ஆரம்பித்தான். வீட்டுக்கு வெளியிலும் தன்னைச் சீந்துவதற்கு ஒரு ஜீவன் இருக்கிறது என்று உணர்ந்தபோது சம்ப்பிக்கு சந்தோஷம் தாங்கவில்லை. எகேடியுடன் மனசுவிட்டுப் பழக ஆரம்பித்தாள்.

முன்பொரு அத்தியாயத்தில் நாம் பார்த்தபடி, 'மொபைல்' திருடன் முன்னாவும் இந்த இருவருடைய பேச்சையும் சிரிப்பையும் தூரத்தில் இருந்து கவனித்துக்கொண்டுதான் இருந்தான். நெட்டையான அந்த கறுப்பு ஆசாமியை சம்ப்பி காதலிக்கிறாள் என்று தெரிந்தபோது, முன்னா அதை எதிர்க்கவில்லை. அவளுக்கு வாழ்க்கை கொடுக்கவும் ஒருத்தன் கிடைத்தால் சரி என்பதாகவே 'மொபைல்' முன்னா முடிவெடுத்தான்.

சம்ப்பிக்கும் இந்த நெட்டைக் கறுப்பனுக்கும் உள்ள காதலைப்பற்றி ஒருநாள் அம்மாவிடம் பேசி, அவள் சம்மதத்தையும் வாங்கிவிட வேண்டும் என்று நினைத்துக்கொண்டான் முன்னா!

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*இதற்கிடையே, அஷோக் வந்து எகேடியை சந்தித்தான். டாக்ஸியில் ஏற்றிக்கொண்டு மிகப் பெரிய பண்ணை வீடு ஒன்றின் வாசலில் கொண்டுபோய் இறக்கினான். ''கறுப்பா... நீதான் மளமளவென்று மரத்திலும் சுவரிலும் ஏறுவாயே... இந்தப் பண்ணை வீட்டுக்குள் உள்ளே போய், யார் கண்ணிலும் படாமல் நோட்டம் போட்டுவிட்டு வா...'' என்றான் எகேடியிடம்.*

*குறுகுறுவென்று பார்த்தான் எகேடி. ''அஷோக் சாப்... இந்த வீட்டுக்குள்ளேதான் இப்போ இன்கெடாயி இருக்குதா?'' என்றான் ஆர்வமாக!*

*''ஆமாம். அலகாபாத்தில் சாமியார்கிட்டே இருந்து திருட்டுப்போன கல் இங்கே எப்படி வந்து சேர்ந்ததுனு அப்புறமா நான் சொல்றேன். இது ரொம்ப ரொம்பப் பெரிய ஆளோட பண்ணை வீடு. பவர்ஃபுல்லான ஒரு அமைச்சருடைய மகன் இங்கே இருக்கான். உள்ளே கட்டுக் காவல் எப்படி இருக்கு? 'இன்கெடாயி'யை எங்கே வெச்சிருக்கானுங்கன்னு எல்லாம் கொஞ்சம் கொஞ்சமா நாம கண்டுபிடிச்சாகணும்...'' என்று படபடத்தான் அஷோக்.*

www.t.me/tamilbooksworld

*நொடிகூட வீணாக்கவில்லை எகேடி. பண்ணை வீட்டை ஒட்டியிருந்த யூகலிப்டஸ் மரத்தில் ஒரு பல்லி போல ஒட்டிக்கொண்டவன், விசையோடு செலுத்திய ராக்கெட் மாதிரி விர்ரென்று அதன் உச்சிக்குப் போனான். பண்ணை வீட்டுக்குள் கண்களை ஓட்டியவன், உசரக் குச்சியாக வளர்ந்திருந்த மரத்தை அப்படியும் இப்படியுமாக வளைத்து ஆட்டினான். எதிர் திசைக்குப் போய்விட்டு, மரம் அந்த வீட்டின் காம்பவுண்டு நோக்கி வளைந்த தருணம் பார்த்து, கவண் கல்லில் இருந்து எறிந்த கல் மாதிரி விடுபட்டு, பறக்கும் அணில் போல காற்றில் மிதந்து காம்பவுண்ட் உச்சியைப் பிடித்துக்கொண்டான் எகேடி.*

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

காம்பவுண்டின் மீது இருந்து அவன் தலை திடுக்கென்று மறைந்துபோனது. நிமிடங்கள் கரைந்துகொண்டு இருக்க... யாருக்கும் சந்தேகம் வராதபடி ரோட்டின் எதிர்ப் பக்கமாக ஒதுங்கி நின்றுகொண்டான் அஷோக். கிட்டத்தட்ட 20 நிமிடங்கள் ஓடியிருக்கும். பண்ணை வீட்டின் பெருங்கதவு லேசாகத் திறந்தது. இடைவெளிக்குள் இருந்து எட்டிப் பார்த்தது எகேடியேதான்! அஷோக் நிற்குமிடத்தை கண்களால் கவ்விப் பிடித்தவன், ''சீக்கிரம் உள்ளே வாங்க சாப்...'' என்று அழைத்தான் ஜாடையால்.

கிடுகிடுக்கும் இதயத்தோடு ஓட்டமும் நடையுமாக பண்ணை வீட்டுக்குள் புகுந்தான் அஷோக். பங்களாவுக்குள்ளேயே தூரத்தில் எங்கோ ஒரு புல்வெட்டும் இயந்திரம் உறுமுவது கேட்டது. செயற்கை நீர்வீழ்ச்சியில் இருந்து தண்ணீர் சிலுசிலுத்துக்கொண்டு இருந்தது. பண்ணை வீட்டுக் கட்டடத்தைச் சுற்றி அடர்த்தியாக வளர்ந்திருந்த ஏராளமான மரங்கள்தான் இப்போது அவர்களுக்கு உதவி புரிந்தன. மரங்களுக்கு இடையில் நின்றுவிட்டால், அங்கே ஆள் இருப்பது தெரியாது. அப்படியரு அடர்த்தி.

www.t.me/tamilbooksworld

''ஒரு ரவுண்டு இங்கிருந்தே பார்த்துட்டேன் சாப். பெரிசாக் காவலுக்கு யாரும் இல்லை. எப்பவாச்சும்தான் ஆட்கள் வருவாங்க... போவாங்க போலிருக்கு. தோட்டக்காரங்க ரெண்டு பேரு, எடுபிடிக்கு ரெண்டு பேருதான் வெளியே நடமாடுறாங்க... பங்களாவோட செக்யூரிட்டிகூட ரொம்ப அசால்ட்டாத்தான் ஓரமாகப் படுத்து தூங்குறான்...'' என்றான் எகேடி.

''வேறென்ன பார்த்தே?''

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*''காம்பவுண்ட் சுவர் மேலே இருந்து பார்த்த வகையில், இது மொத்தம் மூணு அடுக்குக் கட்டடம். பின்னாடி நீச்சல் குளம் இருக்கு. அதையட்டி ஒரு அழகான ஓய்வு மண்டபம் இருக்கு. அதோ, அந்தப் புல்தரையை ஒட்டி ரொம்ப அழகான ஒரு கோயிலும் கட்டிவெச்சிருக்காங்க. எனக்கு நிச்சயமாத் தெரிஞ்சுபோச்சு. நாம் தேடி வந்த 'இன்கெடாயி' கல் அங்கேதான் இருக்கணும்! வாங்க, இப்பவே போயி எடுத்துகிட்டு வந்துடலாம்!''*

*எகேடியின் தலையில் தட்டினான் அஷோக். ''நீ கண்ணால பார்த்தது நாலைந்து பேரா இருக்கலாம். எனக்கென்னவோ இருபது முப்பது பேர் இந்த பங்களாவுக்குள் இருக்கலாம்னு தோணுது. இந்த மரங்களைவிட்டு நாம் முன்னாடி நகர்ந்தாலே மாட்டிக்குவோம்!''*

www.t.me/tamilbooksworld

*''அப்படின்னா, இன்னிக்கு ராத்திரி மறுபடி வரலாம் சாப். கவலையே படாதீங்க. நான் யார் கண்லேயும் படாம எடுத்துக் கொடுக்கறேன் உங்களுக்கு!''*

*இப்போது அஷோக், காம்பவுண்டுக்கு மேலே பொருத்தியிருந்த சுழல் விளக்குகளைக் காட்டினான். இரவு நேரத்தில் சக்திவாய்ந்த அந்த விளக்குகள் பண்ணை வீட்டின் ஒவ்வொரு மூலையையும் தடவிப் பார்த்துக்கொண்டே இருக்கும். ஒரே ஒரு செகண்ட் இந்த மரங்களைவிட்டுக் கடந்து புல்வெளிக்குப் போனாலும் காட்டிக் கொடுத்துவிடும். கட்டாயம் 'க்ளோஸ் சர்க்யூட்' கேமராவும் வைத்து செக்யூரிட்டி ஆட்கள் கண்காணித்துக்கொண்டுதான் இருப்பார்கள், இரவில்! இவன் விளக்கியதை விழிகள் விரியக் கேட்டுக்கொண்ட எகேடி, ''அப்ப நாம் என்னதான் செய்யலாம் சாப்?''*

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

''பொறு!'' என்ற அஷோக், இன்னும் 15 நிமிடங்கள் அங்கேயே கழித்தான். சட்டென்று பிரகாசமாகி, ''அதோ, கார் நிறுத்துறதுக்காக இரண்டு ஷெட் இருக்கு பார்த்தியா...?''

எகேடி பார்த்துவிட்டுத் தலையாட்டினான்.

''அந்த லொக்கேஷனை நல்லாப் பார்த்துக்கோ! நீளமான அந்த கார் ஷெட்களைத் தொட்டுவிட்டால், அப்புறம் ஃபோகஸ் விளக்கோ, கேமராவோ உன்னை கவனிக்க முடியாது. அந்த ஷெட் வழியாகவே நடந்துபோனால் என்ன வருது?''

''அபாரம் சாப். கரெக்டா அந்தக் கோயிலோட முனை வருது!''

www.t.me/tamilbooksworld

''அவ்வளவுதான்... நீ அந்த ஷெட்டை அடைகிற வரைதான் பிரச்னை. மத்தபடி வேலையை முடிக்கிறது சுலபம்! வா, இப்ப நாம கிளம்பலாம்!''

எகேடி மறுபடி குடிசை ஏரியாவுக்கு வந்தபோது சம்ப்பி வாசலில்தான் உட்கார்ந்திருந்தாள்.

''எங்கே உன் பாசக்கார அண்ணனைக் காணோம்?'' என்றான்.

''இப்பல்லாம் எங்க அண்ணன் எங்கே போகுது... எப்ப வருதுன்னே புரியலை... வீட்டுல நான் மட்டும் தனியா கிடந்து ரொம்ப வெறுத்துப்போச்சு!'' என்றவளை, பாவமாகப் பார்த்தான் எகேடி.

''சம்ப்பி... எத்தனை நாளைக்குதான் உங்க அண்ணனும் அம்மாவும் உன்னைப் பார்த்துக்க முடியும். ஆயிரம் இருந்தாலும் அவங்க உன்னை

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*எடுத்து வளர்த்தவங்க, அவ்வளவுதானே... நான் இந்த ஊருக்கு வந்த வேலை சீக்கிரமே முடிஞ்சிடும்னு நினைக்கிறேன். என்னோட வந்திடு தீவுக்கு!''*

*சம்ப்பியின் முகத்தில் தென்பட்ட மகிழ்ச்சி அலைகளைக் கிரகித்தவனாக, ''அக்கம் பக்கத்தில் இருக்கவங்களுக்கெல்லாம் நான் ஜார்கண்ட் மாநிலத்தில் இருந்து வந்தவன்னு சொல்லிவெச்சிருக்கேன். என் பேரு ஜிபா கோர்வானுதான் எல்லாரும் நினைச்சிருக்காங்க. வந்த காரியம் முடியற வரையிலும் எல்லோரும் அப்படியே நினைக்கட்டும். என் வேலை முடிஞ்சதுமே நான் கிளம்பிடுவேன். ஆனா, நீ இல்லாம இந்த ஊரைவிட்டு நகரவே மாட்டேன், தெரிஞ்சுதா?'' என்று சொல்ல, ஈறுகள் தெரியச் சிரித்தாள் சம்ப்பி.*

www.t.me/tamilb

- தொடர்ந்து சந்தேகிப்போம்...

Copyright © Vikas Swarup 2008

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

# மோட்டிவ் 6

## எகேடிக்கு ஒரு சல்யூட்!

''என்னோடு சேர்ந்து தீவுக்கு வந்துவிடு!'' என்று எகேடி சொல்ல... சம்ப்பியின் பார்வை இல்லாத விழிகளிலும் ஓர் ஒளி பாய்ந்து மறைந்தது. ஆதிவாசி எகேடி உற்சாகமானான்.

:.me/tamilbooksworld

''நீ எங்க தீவில் எந்த வேலையும் செய்ய வேண்டாம். அங்கே ஏராளமா காடு இருக்கு. வகைவகையா, சுவையான பழங்கள் இருக்கு. கடல் நிறைய மீன் இருக்கு. வயிறாரச் சாப்பிட்டுக்கிட்டே இருக்கலாம். இங்கே மாதிரி கள்ளம் கபடமான மனுஷங்க அங்கே

கிடையாது. அதுவும் தவிர, எங்களோட மந்திர குரு 'நோகாய்'கிட்டே சொல்லி, எப்படியாவது உனக்கு பார்வை திரும்பக் கிடைக்கவும் முயற்சி பண்ணுவேன்!''

சம்ப்பி கலகலவென்று சிரித்தாள். ''இந்த ஊர்ல இருக்கிற மெத்தப் படிச்ச டாக்டர்களே பெரும் பாடுபட்டுத்தான் எனக்கு பார்வை வரவழைக்க முடியும், புரியுதா? அதுக்கே பல லட்ச ரூபாய் செலவாகும்னு சொல்லிட்டாங்க. என் அண்ணன்தான் பணத்தைத் திரட்டி கண்

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

ஆபரேஷனுக்கு ஏற்பாடு பண்ணப்போறான். நீ சொல்ற தீவுல மூலிகை, பச்சிலை எல்லாம் வச்சு உன் 'நோகாய்' என்ன பண்ணிட முடியும்?'' என்றாள்.

சம்ப்பியின் கன்னத்தை மெதுவாகத் தொட்டுச் சொன்னான் எகேடி,

''இதோ பாரு... என் கனவுக்குள்ளே இருந்த பொண்ணு நீதான். உன்னை சந்திக்கிறதுக்காகத்தான் புனித தெய்வம் 'புலுகா' என்னை இங்கே அனுப்பிவெச்சிருக்கு. 'நோகாய்' பத்தி உனக்குத் தெரியாது. செத்துப்போனவங்களை மறுபடி உயிரோட கொண்டுவர்ற ஒரு கலை மட்டும்தான் அவருக்குத் தெரியாது. ஆனா, உன் கண் பார்வையை திரும்பக் கொண்டுவர்றதெல்லாம் அவரோட மந்திர சக்திக்கு ரொம்ப சாதாரணம்!''

www.t.me/tamilbooksworld

''உன்னோட நான் வரணும்... அவ்வளவுதானே! எதுக்காக இப்படியெல்லாம் ஆசை காட்டுறே?''

''நான் சொல்றது சத்தியம் சம்ப்பி. 'நோகாய்' தன் உடம்புக்குள் இருந்து விடுபட்டு இந்த உலகத்தோட எந்த மூலைக்கும் பறந்து போற அளவுக்கு சக்திகொண்டவர். அவருக்கு என்னை ரொம்பப் பிடிக்கும். எனக்கும்கூட அந்தக் கலையைக் கத்துக்கொடுத்தாரு. ஆனா, நான்தான் அதை முயற்சி பண்ணிப் பார்த்ததில்லை...''

எகேடியின் தோளைத் தொட்டுத் தழுதழுத்தாள் சம்ப்பி... ''எதுவானாலும் சரி... எனக்கும்கூட கடவுள் ஏதோ ஒரு காரணத்தோடதான் உன்னை அனுப்பிவெச்சதாத் தோணுது. நீ போகும்போது நான் உன்னோட வந்திடறேன்... சரியா? நீயே வந்து என் அம்மாவிடமும் அண்ணனிடம் பேசு!''

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

''ம்! நேரம் பார்த்து வந்து பேசுவேன்! அதுவரை ஒண்ணு மட்டும் மனசுலவெச்சிக்க... உனக்கும் எனக்கும்தான் என் பேரும் ஊரும் தெரியும். இந்த ஏரியாவில் இருக்கும் மத்தவங்களுக்கெல்லாம் நான் ஜிபா கோர்வா. ஜார்கண்ட் மாநிலத்துக்காரன், ரைட்டா?''

வேக வேகமாகத் தலையாட்டினாள் சம்ப்பி.

www rld

அதே தினம் மாலை எகேடியின் குடிசைக்குள் அதிரடி புதிரடியாக இரண்டு பேர் வந்தார்கள். இஞ்சி கலரில் தலைமுடி வைத்திருந்தவனுக்கு 40 வயதுக்கு மேல் இருக்கும். இன்னொருத்தன் படு மாடர்ன் கட்டிங்கில் முடி வைத்திருந்தான். வயசிலும் ரொம்பக் குறைவாகத் தெரிந்தான். ரொம்ப கட்டுமஸ்தாக இருந்தார்கள். தோளில் முரட்டு சணல் பைகளை மாட்டியிருந்தார்கள்.

இஞ்சித் தலையன்தான் அதிகம் பேசினான் -

''தோழர் ஜிபா கோர்வா! எங்களுக்குத் தகவல் சொல்லக்கூடியவர்கள் இந்த டெல்லி மாநகரின் ஒவ்வொரு மூலையிலும்

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

இருக்கிறார்கள். நீங்கள் இங்கே ரகசியமாக வந்து தங்கி இருப்பதைக் கேள்விப்பட்டுத்தான் தேடி வந்தோம். நமது ஜார்கண்ட் மாநிலத்தில் ஆட்சி அதிகாரம் என்ற பெயரால் நடக்கும் அடக்குமுறைகளுக்கு ஒரு முடிவு கட்டுகிற புனிதப் பணியில் உங்களையும் இணைத்துக்கொள்வதாக முடிவெடுத்துவிட்டோம்!'' - பொதுக் கூட்ட மேடையில் பேசுகிற தொனியிலேயே இருந்தது அது.

எகேடிக்கு சத்தியமாக எதுவும் புரியவில்லை. வந்தவனோ,

''தோழரே! நீங்களும் எங்களைப்போன்ற புரட்சித் திட்டத்தோடுதான் இந்தியத் தலைநகர் டெல்லிக்குள் ஊடுருவி இருக்கிறீர்கள் என்பது எங்களுக்குத் தெரியும். நாம் ஏன் இணைந்து செயல்பட்டு அதை சாதிக்கக் கூடாது?'' என்ற இஞ்சித் தலையன், ''என் பேர் பாபுலி. இதோ இவன் பெயர் உதய்...'' என்று சொல்லி, எகேடியின் கைகளைப் பற்றிப் பேய்த்தனமாகக் குலுக்கினான்.

www.t.me/tamilbooksworld

தன்னைப்போலவே கன்னங்கறுத்த தேகமும், முதலை மாதிரி அகண்ட தாடையும், சுருட்டை சுருட்டையான தலைமுடியும் இருப்பதைக் கவனித்தான் எகேடி. ஜார்கண்ட் ஆதிவாசிகளுக்கும் லிட்டில் அந்தமான் ஆதிவாசிகளுக்கும் இருக்கக்கூடிய உருவ ஒற்றுமை அவனை உள்ளூர வியக்கவைத்தது. தன்னை ஆப்பிரிக்க ஆசாமி என்று நினைத்து கூட்டு சேர்த்துக்கொண்ட நைஜீரிய மோசடிக்காரன் நினைப்பும் வந்தது எகேடிக்கு!

எந்தப் புற்றில் எந்தப் பாம்போ... இவர்களிடம் ஏமாந்து சிக்கக் கூடாது என்று முடிவெடுத்தான்.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

''உங்களை வெளிப்படுத்திக்கொள்ள நீங்கள் தயங்கலாம். ஆனால், மண்ணின் மைந்தரான உங்களிடம் எங்களை வெளிப்படுத்துவதில் எங்களுக்குத் தயக்கம் இல்லை. 'மாவோயிஸ்ட் ரெவல்யூஷனரி சென்டர்' என்ற அமைப்பில் நாங்கள் இருக்கிறோம். சுருக்கமாக எம்.ஆர்.சி! எங்களுடைய நக்ஸல் இயக்கம் வெடித்த குண்டுகளில் எத்தனையோ துரோகிகளின் உடல்கள் சிதறிக் காற்றில் பறந்திருக்கிறது!'' - என்று இளையவன் உதய் சொல்ல... எகேடிக்குள் உதைப்பு எடுக்க ஆரம்பித்தது.

''பணத் திமிர் பிடித்த கூட்டம் ஒன்று வளமான நம் மண்ணைத் தொடர்ந்து சுரண்டிக்கொண்டே இருக்கிறது. கனிமங்களை வெட்டி எடுக்கிறோம் என்ற பெயரில், தொழிற்சாலைகளும் சுரங்கங்களும் அமைத்து அமைதியான நமது ஆதிவாசி வாழ்க்கையை மொத்தமாகச் சீரழித்துவிட்டார்கள். அற்பமான கூலியைக் கொடுத்துவிட்டு, இயற்கையின் வளங்களை நம் கையாலேயே தோண்டித் தரச் சொல்லி, அதைக் கோடிகளில் கொண்டுபோய் விற்கும் அந்தக் கூட்டத்துக்கு அரசாங்கமும் உடந்தையாக இருக்கிறது. அவர்களுக்கெல்லாம் பாடம் புகட்டும் வேலையை நாம் ஒன்றாகச் சேர்ந்து செய்தால்... இன்னும் சிறப்பாக இருக்கும் அல்லவா?''

www.t.me/tamilbooksworld

எகேடி மிரள மிரள முழித்தான்.

''நம் நிலங்களை மட்டுமா அவர்கள் ஆக்கிரமித்துவிட்டார்கள்? நம் இனத்துப் பெண்களோடு வன்புணர்ச்சிகொள்கிறார்கள். அத்தனைக்கும் காரணம் பணத் திமிர். சர்வாதிகார எண்ணம் படைத்த அரசாங்கத்தின் ஆதரவு!''

''இப்போது நான் என்னதான் செய்ய வேண்டும் என்கிறீர்கள்?''

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

''கெரில்லா யுத்தத்தில் எங்களோடு இணையுங்கள் என்கிறோம். புதிய இந்தியாவைப் படைக்கக் கை கொடுங்கள் என்கிறோம். உங்களுக்கான துப்பாக்கி எங்களிடம் தயாராக இருக்கிறது!''

''துப்பாக்கி எல்லாம் சுட்டு எனக்குப் பழக்கமே இல்லை!'' - ஒடுங்கினான் எகேடி.

''யோசியுங்கள் தோழரே... உங்களுக்கு மேலும் அவகாசம் தருகிறோம்!'' என்ற இருவரும், ராணுவ ஸ்டைலில் சுழன்று திரும்பி, வாசலுக்குப் போய் நின்றார்கள். அங்கிருந்தபடியே, ''நாட்டுக்காக... நம் ஆதிவாசி மக்களின் நலனுக்காக... எந்தத் தியாகமும் செய்யத் தயாராக இருங்கள். நாங்கள் மறுபடி வருவோம்!'' என்று சொல்லிவிட்டு, ஓங்கி ஒரு சல்யூட் அடித்து, ''இயக்கத்துக்கும் தியாகத்துக்கும் செவ்வணக்கம்!'' என்று முழங்கிவிட்டு, மோட்டார் சைக்கிளில் கிளம்பிப் போனார்கள்.

www.t.me/tamilbooksworld

மார்ச் 20-ம் தேதி, அஷோக் ராஜ்புத் அவசரமாக ஓடி வந்தான். ''டேய் கறுப்பா! சூப்பர் க்ளூ ஒண்ணு கிடைச்சிருக்குடா! இன்னும் மூணு நாள் கழிச்சு அந்தப் பண்ணை வீட்டில் ஒரு பெரிய பார்ட்டி நடக்கப்போவுதாம். மந்திரியோட மகன் ஏதோ ஒரு பெரிய கேஸ்ல இருந்து விடுதலை ஆனதுக்குத்தான் இந்த பார்ட்டியாம்...''

''ஐயோ, அப்படின்னா வழக்கத்தைவிட அதிகமான ஆட்கள் அங்கே இருப்பாங்களே...''

''அதான் நமக்கு வசதியே! இதோ இந்த யூனிஃபார்மை வெச்சிக்க. அன்னிக்கு ராத்திரி 10 மணிக்கு பண்ணை வீட்டுக்குள்ளே நீ இதை மாட்டிக்கிட்டு எப்படியாவது போய்ச் சேர்ந்துடறே... பார்ட்டிக்கு உணவு சப்ளை பண்ற குரூப் இந்த யூனிஃபார்ம்லதான் வரப்போகுது. அதனால,

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

பங்களாவுக்குள்ளே அன்னிக்கு ராத்திரி நீ அங்கே இங்கே நடமாடினாலும் யாருக்கும் சந்தேகம் வராது!''

''பிரமாதம் சாப்! இது போதும். நான் கரெக்டா அந்த கார் ஷெட் ஓரமாவே போயி, கோயிலுக்குள்ளே இருந்து 'இன்கெடாயி' கல்லைக் கொண்டுவந்திடுவேன்!''

''நல்லது! அந்த பங்களாவுக்குள்ளே இருக்கிற வரைக்கும் உன் பேரு ஷர்மா!''

''அதென்ன பேரு?''

''அது அப்படித்தான். டெல்லி ஏரியாவுல மொத்தமா பத்துப் பேரு இருக்குற இடத்துல ஒருத்தனாவது சர்மா என்கிற பெயரில் இருப்பான். அதனால, அங்கே உன்னை மறிச்சு யார் கேட்டாலும் 'சர்மா'னு சொல்லிட்டு நகர்ந்துக்கிட்டே இரு!''

''ஆனா, ராத்திரியில் லைட் வெளிச்சம் வெள்ளம் மாதிரி பாயும்னு சொன்னீங்களே... நான் கோயிலை நெருங்குறதை யாராவது பார்த்தால்..?''

''அதுக்கும் ஒரு ஐடியா வெச்சிருக்கேன். ரெண்டு கார் ஷெட்டுக்கும் நடுவில்தான் அந்த பண்ணை வீட்டோட மெயின் சுவிட்ச் போர்டு இருக்கு. முதல் ஷெட்டை எப்படியாவது தாண்டிப் போயிட்டா, அந்த மெயின் போர்டில் இருந்து 'ஃப்யூஸை' பிடுங்கிடலாம். மறுபடி ஜெனரேட்டர் போடற வரைக்குமாச்சும் மொத்த ஏரியாவும் இருட்டில்தான் மூழ்கிக்கிடக்கும். அந்த மூணு நாலு நிமிஷம் உனக்குப் போதாதா, வேலையை முடிக்க?''

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*''தாராளம் சாப். ஆனா, 'ஃப்யூஸ்'னா அது எப்படி இருக்கும்? எப்படி அதைப் பிடுங்கணும்?''*

*''என்னோட வா!'' என்று அந்த குடிசை ஏரியாவை ஒட்டியிருந்த கோயிலுக்குக் கூட்டிப் போனான் அஷோக். மெயின் போர்டை நெருங்கி, அதன் உலோகக் கதவைத் திறந்தான்.*

*''இதோ வெள்ளைப் பீங்கான் சமாசாரம் இருக்கு பாரு. இதான் ஃப்யூஸ். இதை இப்போ பிடுங்கு பார்ப்போம்!''*

*எகேடி பயந்தான். ''ஒண்ணும் ஆகாது... தைரியமாப் பிடுங்கு!''*

- தொடர்ந்து சந்தேகிப்போம்...

Copyright © Vikas Swarup 2008

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

## மோட்டிவ் 6

SIX SUSPECTS
மோட்டிவ் 6
விகாஸ் ஸ்வரூப் தமிழில்: அஞ்சனா தேவ்

### எகேடியின் உடலில் ரத்தக் காட்டேரி!

61

அஷோக் ராஜ்புத் காட்டிய பீங்கான் சமாசாரத்தை, மெயின் போர்டில் இருந்து பிடுங்கினான் எகேடி. தடக்கென்று மொத்தக் கோயிலும் இருளில் மூழ்கிவிட, செல்போனால் லைட் அடித்து மெயின் போர்டைக் காட்டிய அஷோக், ''அதை அங்கேயே திரும்ப மாட்டு!'' என்றான் அவசரமாக.

www.t.me/tamilbooksworld

எகேடி மாட்டவும், மறுபடி கோயில் விளக்குகள் உயிர்பெற்றன. ஸ்பீக்கரும் பஜன் பாடலில் அதிர ஆரம்பித்தது.

எகேடிக்கு த்ரில்லாகி விட்டது. மளுக்கென்று மறுபடி பிடுங்கினான். மறுபடி இருட்டு. பாட்டு அடங்கியது. கோயிலுக்குள் சலசலப்பு. பதறிப்போன அஷோக், ''டேய்... பொழுதுபோகாம நடத்துற விளையாட்டா இது? மாட்டுடா மறுபடி!'' என்று அதட்டினான். எகேடி மறுபடி ஃப்யூஸை மாட்டிவிட்டு கை தட்டிச் சிரித்தான்.

ஒரு அலாரம் கடிகாரத்தை எகேடியிடம்கொடுத்தான் அஷோக். ''இதை நல்லாப் பார்த்துக்கோ. தினமும் ராத்திரி பதினோரு மணி முப்பது நிமிஷத்துக்கு இது சத்தம் போடும். அதான் உனக்கு சிக்னல். மார்ச் 23-ம் தேதி ராத்திரி பத்து மணி சுமாருக்கு, யூனிஃபார்மோட நீ பண்ணை

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

வீட்டுக்குள்ளே போயிடு. மரங்களுக்குப் பின்னால் மறைஞ்சு நில்லு. இந்த அலாரம் அடிச்சதுமே மரங்களைவிட்டு வேகமா வெளியே வந்து, முதலாவது கார் ஷெட்டைத் தாண்டிப் போயிடு. தப்பித் தவறி யாராச்சும் உன்னை மறிச்சுக் கேட்டா, சாப்பாடு சப்ளை வந்த குரூப்போடு வந்த ஷர்மா அப்படின்னு சொல்லிக்க. அநேகமா எல்லார் கவனமும் அந்த வீட்டுக்குப் பின்பக்கம் நீச்சல் குளத்தை ஒட்டி நடக்கப்போற பார்ட்டியில்தான் இருக்கும். அதனால, உனக்கு சிக்கல் எதுவும் இருக்காது. ஃபியூஸைப் பிடுங்கிட்டு, கோயிலுக்குள்ளே போயி, 'இன்கெடாயி' கல்லைத் தூக்கிக்கிட்டு எஸ்கேப் ஆயிடணும். மூணு நாலு நிமிஷத்துக்குள்ளே அத்தனையும் நடக்கணும்!''

www.t.me/tamilbooksworld

இப்போது எகேடி அந்த சந்தேகத்தைக் கேட்டான்.

''எகேடி அந்த பண்ணை வீட்டுக்குள் இருக்கும்போது, நீங்க எங்கே இருப்பீங்க சாப்... வெளியிலா?''

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

''கிடையாது. நான் என் லாட்ஜ் ரூமில்தான் இருப்பேன். உனக்குத்தான் லாட்ஜ் எங்கே இருக்குன்னு தெரியுமே... நேரா அங்கே வந்து சேரு!''

''சாப்... அதுக்கு அப்புறம் எவ்வளவு சீக்கிரம் முடியுமோ, என்னைத் தீவுக்குக் கூட்டிட்டுப் போயிடணும், சரியா?''

''நிச்சயமா!''

''என்னோட சேர்ந்து இன்னொருத்தரும் வர்றாங்க... அதுக்கும் டிக்கெட் வாங்கிவெச்சிடுங்க!''

அஷோக் ராஜ்புத் இப்போது நிஜமாகவே அதிர்ச்சியாகப் பார்த்தான்.

www.t.me/tamilbooksworld

''ஆமாம் சாப். மனசுக்குப் பிடிச்ச ஒரு பொண்ணைப் பார்த்து கல்யாணம் பண்ணிக்க ஆசைன்னு சொன்னேனே... அப்படி ஒரு பொண்ணை நான் பார்த்துவெச்சிட்டேன்.''

''உன் மூஞ்சிக்கும் ஒரு பொண்ணு கிடைச்சிருக்கா? யாருடா அது?''

எகேடியின் முகத்தில் இதுவரை பார்த்தறியாத ஓர் இறுக்கம் பரவுவதைக் கவனித்தான் அஷோக். க்ளைமாக்ஸில் வந்து இவனை எரிச்சல்படுத்தி காரியத்தைக் கெடுத்துக்கொள்ளக் கூடாது என்று முடிவெடுத்தான்.

''சரிடா! அந்தப் பொண்ணுக்கும் சேர்த்தே டிக்கெட் போடறேன்!'' - கட்டை விரலை உயர்த்திக் காட்டினான். எகேடி முகத்தில் இப்போது ஜொலிப்பு!

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

அன்றைக்கு ராத்திரி எகேடிக்குத் தூக்கம் வரவில்லை. 'இன்கெடாயி' கல்லை எடுத்துக்கொண்டு தீவில் மறுபடி போய் இறங்குவதையும், தன்னோடு சேர்ந்து வந்திருக்கிற சம்ப்பியைப் பார்த்து ஆதிவாசிகள் ஆச்சர்யப்படுவதையும்... வெற்றி வீரனாகத் திரும்பிய தனக்கும் சம்ப்பிக்கும் எந்தக் கேள்வியும் கேட்காமல், தன் ஆதிவாசி இனத்துக்காரர்கள் திருமணம் செய்துவைப்பதையும் கற்பனைச் சாலையில் சுகமாக ஓட்டிப் பார்த்துக்கொண்டே இருந்தான் எகேடி.

மந்திர குரு நோகாயின் மனமார்ந்த வாழ்த்துகளும், ஆதிவாசி ஜனங்களின் உற்சாகக் கூக்குரலும் அவனுக்குள் ஒலித்துக்கொண்டே இருக்க... சட்டென்று எகேடியின் காதுகள் விடைத்தன. இப்போது நிஜமாகவே சில சலசலப்புகளும் சத்தங்களும் கேட்க ஆரம்பித்தன. அதுவும் எதிரிலேயே இருக்கும் சம்ப்பியின் குடிசைக்குள் இருந்து! முரட்டுத்தனமான உறுமல்கள், பொருட்கள் அதிவேகமாக உருளும் சத்தங்கள், திடீரென்று எழுந்தது சம்ப்பியின் அவலக் கிறீச்சிடல்!

www.t.me/tamilbooksworld

முதலாளியின் கட்டளைக்குப் பணிந்த வேட்டை நாய்போல் விருட்டென்று எழுந்து நின்றான் எகேடி. எதிர் குடிசைக்குள் இருந்து மறுபடியும் ஓங்கிக் கேட்டது சம்ப்பியின் தீனமான குரல். ஆதிவாசி பாய்ந்தான் ஒரு மிருகமாக!

குடிசைக்குள் இரண்டு முரட்டுப் புதியவர்கள் ஆக்கிரமித்திருக்க... அதில் உயரமாக இருந்தவனின் தாக்குதலில் சிக்கி சம்ப்பியின் அண்ணன் சுருண்டு கீழே சரிந்துகிடக்க... சம்ப்பியை கீழே தள்ளி அவள் மீது படர்ந்திருந்தான் குட்டை மனிதன். காட்சியைப் பார்த்த மாத்திரத்திலேயே எகேடி உடம்பின் அத்தனை அணுக்களும் ஆக்ரோஷமாகத் துடிப்பு கொள்ள... அடுத்த சில நிமிடங்களுக்கு நிர்தூளி ஆனது குடிசை.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

குட்டையனைப் போட்டுத் துவைத்தெடுத்தான் எகேடி. கையில் கத்தியோடு தாவி வந்த உயர ஆசாமி இவனைப் பிடித்து இழுக்க... முன் கையில் ஒரு வெட்டு வாங்கிக்கொண்டே அவனையும் எகேடி சுழற்றித் தள்ளினான். சம்ப்பியிடம் இருந்து குட்டையனை பிரித்தெடுத்துத் தரையில் தள்ளியவன், தனது காலால் அவனை அழுந்த அமுக்கியபடியே, சற்றும் எதிர்பாராத ஒரு காரியம் செய்தான். உயரமானவன் ஓங்கிய கத்திக்குத் துளியும் பயப்படாமல் கைகளை நீட்டித் தடுத்தவன், அவனுடைய கைகளை பின்பக்கமாக முறுக்கிப் பிடித்துக்கொண்டு, குரல்வளையைப் பிடித்துக் கடித்தான்.

கிட்டத்தட்ட ஒரு ரத்தக் காட்டேரியின் வெறியோடு பதிந்து புகுந்த பற்கள் உயர ஆசாமியை சுத்தமாகச் செயலிழக்கச் செய்தது. எகேடியின் விநோத முக அமைப்பு மற்றும் ரத்த வெறியைப் பார்த்துக் குட்டையன் கதி கலங்கிப்போனான். தாவிப் போய் குடிசை வாசலைத் திறந்துகொண்டு அவன் முதலில் ஓட... எகேடியிடம் இருந்து போராடி விடுபட்டு பின்னாடியே பறந்தான் உயர ஆசாமி.

www.t.me/tamilbooksworld

மண்டை பிளந்து, உடம்பெங்கும் காயங்களுடன் சம்ப்பியின் அண்ணன் தரையில்கிடக்க... பார்வையில்லாக் காதலியை ஆறுதலாக அணைத்துக்கொண்டான் எகேடி.

''இனியும் உன்னை நான் தனியாவிட முடியாது, சம்ப்பி. இன்னும் நாலஞ்சு நாளுக்குள் நாம் தீவுக்குக் கிளம்பிடலாம். அதுவரைக்கும் உனக்கு இதுதான் பாதுகாப்பு!'' என்றபடியே, தன் கழுத்தில் கிடந்த எலும்பு மாலையை எடுத்து அவள் கழுத்தில் மாட்டினான்.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

''மந்திர குரு நோகாய் எனக்கு மாட்டிவிட்டது இது. இதை மாட்டியிருக்கிற வரையில் உயிருக்கு ஒரு ஆபத்தும் வராது!'' என்றவனிடம்,

''அப்போ உனக்கு ஆபத்து வந்திட்டா?'' என்றாள் சம்ப்பி.

''பயப்படாதே! எங்களோட 'புலுகா' குடியிருக்கும் 'இன்கெடாயி' கல்லை இன்னும் ரெண்டு நாளில் நான் எடுத்திடுவேன். அதுக்கப்புறம் என்னைச் சுற்றி இருக்கிற யாருக்குமே எந்த ஆபத்துமே வராது!''

''கல்லா? அது எங்கே இருக்குது?''

''இதே ஊரில்தான். ஒரு பண்ணை பங்களாவுக்குள். யாருக்கும் தெரியாம அங்கே போய் அதை எடுக்கப் போறேன்!''

www.t.me/tamilbooksworld

''யாரோட பண்ணை பங்களா அது?''

''யாரோ அமைச்சர் பையனாமே... விவேக் விக்கி ராய்!''

தொடர்கிறது - கனவுக் கன்னியின் டைரி!

ஷப்னம் சக்ஸேனாவாகிய என் டைரியை வாசகர்களாகிய நீங்கள் தொடர்ந்து படித்து வருகிறீர்கள். தோற்றத்தில் அச்சு அசலாக என்னைப்போலவே இருக்கும் ராம் துலாரியின் போட்டோவைப் பார்த்த பிறகு நான் அசந்துபோனதை ஏற்கெனவே என் டைரியில் சொல்லியிருந்தேன். அவள் எழுதிய கடிதம் முழுவதிலும் 'அக்கா' என்று என்னைக் கூப்பிட்டு உருகியிருந்த விதத்தில் பாசாங்கு ஏதுமில்லை. எங்கோ ஒரு தொலைதூரக் கிராமத்தில் இருந்து மும்பைக்கு ஓடி வந்து

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

டாப் நடிகை ஆனவள்தானே நான். அதனால் ஓர் ஏழைப் பெண்ணின் வலி எனக்கு நன்றாகவே புரிந்தது. அவளுக்கு உதவியாக வேண்டும் என்று மனதுக்குள் உறுத்தல் தொடர்ந்துகொண்டே இருந்ததது. ஆகஸ்ட் 8-ம் தேதி முடிவெடுத்தேன்... என் உதவியாளனும், தூரத்துச் சொந்தக்காரனுமான போலாவை ராம் துலாரியின் ஊருக்கு அனுப்பிவைத்தேன் - ராம் துலாரியை மும்பைக்கு அழைத்து வரச் சொல்லி!

## ஆகஸ்ட் 9

'ரகசிய வீடு' என்று அந்த டாப் சேனலில் புது நிகழ்ச்சி தயாரிக்கிறார்களாம். 'பிக் பாஸ்' என்ற ரியாலிட்டி ஷோ சூப்பர் ஹிட் ஆனதால், கிட்டத்தட்ட அதையே காப்பி அடித்து, இன்னும் பல பரபரப்பான டிராமாக்களுடன் வி.வி.ஐ.பி-க்களை செட் -அப் செய்து ஒரு வீட்டுக்குள் தங்கியிருக்கச் செய்யப்போகிறார்களாம். அந்த வி.வி.ஐ.பி-க்களுக்குள் உருவாகும் மோதல், நட்பு, காதல், ஜொள்ளு என்று அத்தனையும் ஒளிபரப்பி டி.ஆர்.பி. ரேட்டிங்கை எகிறவைக்கப் போகிறார்களாம்.

www.t.me/tamilbooksworld

அந்த சேனலின் தலைமை நிர்வாகி என்னை வந்து பார்த்தாள். ''ஷில்பா ஷெட்டியைப் பார்த்தீர்களா? பிக் பாஸ்' ஷோவில் இடம்பெற்ற பிறகு உலகப் புகழ் அடைந்துவிட்டார். இப்போது எந்த நாட்டின் பிரதமரையும் ஜஸ்ட் லைக் தட் அவரால் சந்திக்க முடிகிறது. இங்கிலாந்து ராணியே ஷில்பாவுக்கு பட்டுக் கம்பள வரவேற்பு கொடுக்கிறார். நீங்கள் மட்டும் எங்கள் ஷோவில் பங்கேற்க ஒப்புக்கொண்டால், உங்கள் மார்க்கெட்டும் விண்ணைத் தாண்டிப் போய்விடும்!'' என்றாள் அந்த நிர்வாகி.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*''ஸாரி, அப்படி எல்லாம் ஒரு ரியாலிட்டி ஷோவில் இடம் பெற்று வலுப்படுத்திக்கொள்ள வேண்டிய அளவுக்கு என் மார்க்கெட் வீக்காக இல்லை...'' என்று சொல்லி அவளை அனுப்பிவைத்தேன்.*

- தொடர்ந்து சந்தேகிப்போம்...

Copyright © Vikas Swarup 2008

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

# மோட்டிவ் 6

SIX SUSPECTS
மோட்டிவ் 6
விகாஸ் ஸ்வரூப் • தமிழில்: அஞ்சனா தேவ்

## சின்ட்ரெல்லா புராஜெக்ட்!

வாசகர்களே! கனவுக்கன்னி ஷப்னம் சக்ஸேனாவின் அந்தரங்க டைரியை இப்போது நீங்கள் படித்துக்கொண்டு இருக்கிறீர்கள்.

62

### ஆகஸ்ட் 10

ராம் துலாரி என் அபார்ட்மென்ட்டுக்கு வந்துவிட்டாள். பிளந்த வாயை இன்னும்கூடபோலா மூடவில்லை. ''ஷப்னம் தீதி... இந்தப் பெண்ணை அவள் ஊரில் போய் நேரில் பார்த்தபோது, எனக்கு மயக்கமே வந்துவிட்டது. என்னையே நான் பல தடவை கிள்ளிப் பார்த்துக்கொண்டேன். அந்த அளவுக்கு இவள் உங்களைப்போலவே இருக்கிறாள். இறைவன் படைப்பு என்பது சினிமாவையும் மிஞ்சக்கூடிய ஆச்சர்யங்கள்கொண்டது என்று இப்போதுதான் நான் புரிந்துகொண்டேன்...'' - பிரமிப்பில் பிதற்றிக்கொண்டே இருந்தான் போலா.

www.t.me/tamilbooksworld

ஊன்றிப் பார்த்தால் எனக்கு மட்டும் நுணுக்கமான வித்தியாசம் தெரிந்தது. என்னைப்போலவே அவளும் ஐந்து அடி நான்கு அங்குலம் கரெக்ட்டாக இருந்தாள். இடுப்பில் என்னைவிட கூடுதல் சதைப் பிடிப்பு. வயதில் என்னைவிடக் குறைவாக இருந்தாலும், 'வொர்க் அவுட்' மூலம் பென்சில் போல் இருந்த என்னைவிட, அவள் சற்று கூடுதல் வெயிட் இருப்பாள் என்று தோன்றியது.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

இற்றுப்போன பழைய புடவை உடுத்தி இருந்தாள் ராம் துலாரி. ஐந்து நட்சத்திர ஹோட்டலுக்கு நிகராக அலங்கரிக்கப்பட்ட என் அபார்ட்மென்ட்டின் ஆடம்பரத்தைப் பார்த்து பிரமிப்பில் அவள் உடம்பு லேசாக நடுங்கிக்கொண்டு இருந்தது. அவள் கையில் இறுக்கிப் பிடித்திருந்த இற்றுப்போன சூட்கேஸைப் பிடுங்கி ஓரமாக வைத்தேன். என் சேலைகளில் இரண்டை அவளிடம் கொடுத்தேன். என் ரூமுக்குப் பக்கத்திலேயே இருந்த மற்றொரு சின்ன ரூமை ஒதுக்கிக் கொடுத்தேன். ராம் துலாரியின் கண்கள் கலக்கமாகவே இருந்தன, நெகிழ்ச்சியில்.

நான் கொடுத்த புடவையைக்கூட மாற்றிக்கொள்ளாமல், நேராக என் அறைக்கு அன்று மதியம் வந்தாள். படுத்திருந்த என் கால்களை எடுத்து மடியில் வைத்துக்கொண்டு அமுக்கிவிட ஆரம்பித்தாள். ''ஏய், நீ இதெல்லாம் செய்ய வேண்டிய அவசியம் இல்லை! உனக்கு இங்கே என்ன வேலை தரலாம் என்று நான் யோசித்துச் சொல்கிறேன்...'' என்று

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

தடுத்தபோதும் அவள் விடுவதாக இல்லை. கிட்டத்தட்ட ஒரு மணி நேரத்துக்கு கால் அமுக்கிக்கொண்டே இருந்தாள். நான் தூங்கி எழுந்தபோது, அவள் பாத்ரூமை கண்ணாடி மாதிரி அழுந்தத் தேய்த்துத் துடைத்து வைத்திருந்தாள். நன்றிக்கடன் தீர்ப்பதற்காக எதையாவது செய்துகொண்டே இருக்க வேண்டும் என்று நினைத்தாள் போல!

அன்றிரவு வெகு நேரம் நான் டி.வி. பார்த்துவிட்டு, மெதுவாக அவள் அறைக்குள் எட்டிப் பார்த்தேன். கட்டில் இருந்தும் அதில் படுக்காமல், கருப்பையில் இருக்கிற ஒரு குழந்தையைப்போல மடங்கிச் சுருண்டு படுத்து அயர்ந்து தூங்கிக்கொண்டு இருந்தாள் ராம் துலாரி.

என் வறுமை மிகுந்த இளமைக் காலத்தையும், என் கிராமத்தையும், பெற்றோரையும், என் அன்பான தங்கச்சி சப்னாவையும் நினைத்துக்கொண்டேன். அவர்கள் இப்போதும் அதே கஷ்டத்தோடுதானே இருப்பார்கள். இப்போது என் கண்கள் கலங்கின!

www.t.me/tamilbooksworld

ஆகஸ்ட் 12

ராம் துலாரிக்கு என்ன வேலை கொடுக்கலாம் என்ற யோசனை தானாகவே ஒரு முடிவுக்கு வந்தது. மகாராஷ்டிரப் பிராமணக் குடும்பத்தைச் சேர்ந்த ஒரு பெண்ணைத்தான் சமையல் வேலைக்கு வைத்திருந்தேன். அவள் கர்ப்பமாகி, சில மாதங்கள் விடுமுறை கேட்டுக்கொண்டு வந்து நின்றாள். ''தீதி! சமையல் வேலை நான் பார்த்துக்கொள்கிறேன்'' என்றாள் ராம் துலாரி.

அன்று மதியம் அவள் சமைத்துப் போட்ட உணவு வகைகளை ருசித்தபோது, ஊரில் என் அம்மாவின் கைப்பக்குவம் நினைவுக்கு வந்தது. உத்தரப் பிரதேசம், பீகார் மாநிலங்களுக்கே உரிய வெஜிட்டேரியன் சாப்பாட்டு ருசியை அப்படியே கொண்டுவந்துவிட்டாள் மும்பைக்கு!

ராம் துலாரியின் வருகை இப்படியாக எனக்கு புதிய ருசியைக் கொண்டுவந்தது. அதற்காக அவளை என்னோடே வைத்துக்கொள்கிற

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*சுயநலம் இல்லை. என் தங்கச்சி சப்னாவுக்கு நான் என்ன செய்து இருக்க வேண்டுமோ, அதை இவளுக்குச் செய்ய வேண்டுமென நினைத்துக்கொண்டேன். கிராமத்து அப்பாவித்தனத்தையும் தாண்டி, அவளிடம் ஒளிவிடுகிற அழகு என் வீட்டுக்குள்ளேயே அடங்கி வீணாகிவிடக் கூடாது.*

*நல்ல மாப்பிள்ளையாகப் பார்த்து அவளுக்குத் திருமணம் செய்துவைக்க வேண்டும் என ஆசைப்பட்டேன். அந்தத் திட்டத்துக்கு நானே ஒரு பெயரும் சூட்டிக்கொண்டேன். அதுதான் - சின்ட்ரெல்லா புராஜெக்ட்!*

*ஆகஸ்ட் 28*

*தங்கையாகவே ராம் துலாரியை நினைத்துவிட்ட பிறகு, அவளை அதே பத்தாம்பசலி தோற்றத்தோடு இருக்கவிட எனக்கு விருப்பம் இல்லை. அவள் மறுத்தபோதும் விடாப்பிடியாக சில மாற்றங்களைக் கொண்டுவர முடிவு எடுத்தேன்.*

www.t.me/tamilbooksworld

*என்னுடைய சைனீஸ் ஹேர் ஸ்டைலிஸ்ட் லோரியை வரவழைத்து, புது மோஸ்தரில் முடி வெட்டச் செய்தேன். எனக்கு ரொம்பப் பிடித்த பிங்க் சுடிதார் ஒன்றைக் கொடுத்தேன். குளித்துவிட்டு அதை அணிந்துகொண்டு வரச் சொன்னேன். அதை அணிந்துகொண்டு அவள் வெளியில் வந்து நின்றபோது, ஏழை வீட்டு சின்ட்ரெல்லாவை ராஜகுமாரியாகப் பார்த்த மாதிரிதான் இருந்தது. என் ஹேர் ஸ்டைலிஸ்ட் வாயைப் பிளந்தாள் - ''மேடம், நிஜத்திலேயே ஒரு டபுள் ஆக்ட் படம் பார்க்கிற மாதிரி இருக்கு...'' என்றாள்.*

*மனதுக்குள் நினைத்துக்கொண்டேன்... வெளித் தோற்றத்தில் மட்டும் இல்லை... மனதளவிலும் ராம் துலாரியை மாடர்னாக மாற்றிக் காட்டுவேன். ஷூட்டிங், பார்ட்டி, பேட்டி என்றே போய்க்கொண்டு*

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

இருந்த என் வாழ்க்கையில் இது ஒரு சுவாரஸ்யமான கிளைக் கதையாகவே தோன்றியது.

**ஆகஸ்ட் 30**

சூப்பர்! ராம் துலாரிக்கு இங்கிலீஷ் நன்றாகவே கற்றுக்கொள்ள வருகிறது. நல்லவேளையாக, ஏ.பி.சி.டி-யில் ஆரம்பிக்க வேண்டிய அவசியம் இல்லை. ஓரளவுக்கு எழுத்துக் கூட்டிப் படிக்கத் தெரிந்தது. ''நேரம் கிடைக்கிற நாட்களில் எல்லாம் ஒரு மணி நேரம் உனக்கு நான் சொல்லித்தருவேன். நீயும் நன்றாகப் பயிற்சி செய்ய வேண்டும், சரியா?'' என்றேன். விருப்பமாகவே தலையாட்டினாள்.

மூன்று நாள் கிளாஸ் எடுத்த பிறகு, முழுசாக ஏதாவது ஒரு வாக்கியத்தை இங்கிலீஷில் சொல்லிக்காட்டச் சொன்னேன். கொஞ்ச நேரம் யோசித்தவள், ''ஐ லைக் லேர்னிங் இங்கிலீஷ்!'' என்றாளே பார்க்கலாம்.

www.t.me/tamilbooksworld

**சபாஷ் ராம் துலாரி!**

**அக்டோபர் 11**

அவார்ட் ஃபங்ஷன், ஷூட்டிங் என்று இடையில் பல நாட்கள் பிஸியோ பிஸி. 'ஹலோ பார்ட்னர்' என்ற என்னுடைய படம் நேற்று ரிலீஸ் ஆனது. எதிர்பாராத அளவுக்குத் தோல்வி. 'போட்ட பணத்தில் பத்தில் ஒரு பங்குகூட எடுக்க முடியாது!' என்று எழுதி இருக்கிறது 'பாக்ஸ் ஆபீஸ்' என்ற பத்திரிகை.

இந்தப் படத்தின் தோல்வி எனக்கு ஒரு வகையில் திருப்திதான். பெரிய தயாரிப்பாளர் ஒருவரின் மகளை அறிமுகம் செய்வதற்காகவே கோடிகளைக் கொட்டி எடுத்த படம். எனக்கு மிக நல்ல ரோல் என்று சொல்லி புக் செய்தார்களே தவிர, நான் இடம்பெற்ற மிக முக்கியமான நான்கு காட்சிகளை அந்த டைரக்டர் முட்டாள் எடிட் செய்துவிட்டான் -

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

தயாரிப்பாளரின் மகளைப் பிரதானப்படுத்தும் நோக்கத்தோடு! படட்டும் நன்றாக!

இதற்கு நடுவில் எனக்கான பெரிய வெற்றி - ராம் துலாரி நன்றாகவே இங்கிலீஷில் பேசுகிறாள். எனக்கு வரும் போன்களுக்குக்கூட இங்கிலீஷில் பதில் சொல்கிறாளே!

டிசம்பர் 31

வருடத்தின் கடைசி நாள் மாலை... நிறைய எங்கேஜ்மென்ட்! மதியம் கொஞ்சம் ரிலாக்ஸாக இருந்தேன். என் செக்ரெட்டரி ரோஸி மொத்தமாக கடிதங்களைக் கொண்டுவந்து முன்னால் கொட்டினாள். அதில், 'லாரி பேஜ்' என்ற அமெரிக்கன் (அல்லது, அப்படி தன்னைச் சொல்லிக்கொள்ளும் ஒருவன்) எழுதிய கடிதங்கள் கற்றை கற்றையாக இருந்தன.

www.t.me/tamilbooksworld

''என்ன இதெல்லாம்?'' என்றேன் ரோஸியிடம்.

''மேடம், கிட்டத்தட்ட தினமும் ஒரு கடிதம் எழுதிவிடுகிறான் இந்த நபர். நீங்கள்தான் சப்னா சிங் என்ற பெயரில் இவனுக்கு கடிதம் போட்டீர்களாம். அமெரிக்காவில் வசிக்கும் இவனைக் கல்யாணம் செய்துகொள்ளத் தயார் என்று சொல்லி, இவனை இந்தியாவுக்கு வரவழைத்ததே நீங்கள்தானாம். உங்களைக் கல்யாணம் பண்ணி அமெரிக்காவுக்கு அழைத்துப் போவதே தன் லட்சியம் என்று புலம்புகிறான் எல்லாக் கடிதத்திலும்...'' என்றாள் ரோஸி.

கடிதங்களின் உறையில் டெல்லியில் ஏதோ ஒரு லாட்ஜ் முகவரி இருந்தது. ஒரு கடிதத்தில், 'என் ஆசை ஷப்னம்... பெயரை மாற்றிச் சொல்லி என்னை இந்தியாவுக்கு அழைத்துவிட்டு, இப்போது நீ என் போன் அழைப்புக்குக்கூட பதில் சொல்லாமல் இருப்பது ஏன் என்று எனக்குப் புரிகிறது. பாலிவுட்டை எப்பவுமே மிரட்டலில் வைத்திருக்கும் தீவிரவாதிகள் உன்னையும் பிளாக்மெயில் செய்துகொண்டு

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

இருக்கிறார்கள். அவர்கள் பார்வையில் படும்படியாக என்னை நீ சந்தித்தால் என் உயிருக்கு அது ஆபத்தாகிவிடும் என்று பயப்படுகிறாய்... அப்படித்தானே! என் உயிரே! ஒரே ஒரு முறை போனை எடுத்தாவது பேசு... ஏன் ஸ்விட்ச் ஆஃப்பிலேயே வைத்திருக்கிறாய்?' என்று உளறிக் கொட்டி புலம்பித் தள்ளி இருந்தான் அந்த அமெரிக்கப் பைத்தியம்.

கடைசித் தேதியாக வந்து சேர்ந்திருந்த கடிதத்தில், 'காத்திருந்ததெல்லாம் வீண்தானா? நான் மறுபடி அமெரிக்காவுக்கே திரும்பிப் போக முடிவெடுத்துவிட்டேன். ஆனால், கிளம்புவதற்கு முந்தைய நாள் வரை உனக்கு கடிதம் போட்டுக்கொண்டே இருப்பேன். ஒருநாள் நீ என்னை அழைப்பாய் என்று என் உள்ளம் சொல்கிறது!' என்று டயலாக் அடித்திருந்தான் அந்த லாரி பேஜ். அமெரிக்காக்காரன் என்று சொல்கிறானே தவிர, அச்சு அசலாக இந்தி சினிமாக்களில் வருகிற மாதிரியே இருந்தது அவனுடைய குருட்டு - முரட்டு சென்டிமென்ட்!

www.t.me/tamilbooksworld

நான் சிரிப்பதைப் பார்த்து கவலையாக ரோஸி சொன்னாள் - ''இவன் ஒரு சைக்கோ என்று தோன்றுகிறது மேடம். நீங்கள் பொது நிகழ்ச்சியில் கலந்துகொள்கிற நேரம் பார்த்து மேலே பாய்ந்தாலும் பாய்வான். போலீஸிடம் சொல்லிவைக்கலாம் இந்தக்கடிதங்கள்பற்றி...'' என்றாள்.

நானும் போலா மூலமாக போலீஸ் கமிஷனரிடம் கடிதங்களைச் சேர்க்கச் சொன்னேன். இப்படி ஒரு ஆளைப்பற்றி போலீஸ் ரெக்கார்டுகளில் ஏதாவது இருக்கிறதா என்றும் விசாரிக்கச் சொன்னேன்.

- தொடர்ந்து சந்தேகிப்போம்...

Copyright © Vikas Swarup 2008

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

மோட்டிவ் 6

## ஆட்டோகிராப் ப்ளீஸ்!

*வாசகர்களே... கனவுக் கன்னி ஷப்னம் சக்ஸேனாவின் அந்தரங்க டைரியை இப்போது நீங்கள் படித்துக்கொண்டு இருக்கிறீர்கள்.*

www.t.me/tamilbooksworld

ஜனவரி 7

*ராம் துலாரியை இப்போது பார்க்கும்போது, அது நான்தானோ என்று எனக்கே சந்தேகம் வந்துவிடுகிறது. அத்தனை அழகாக இங்கிலீஷ் பேசுகிறாள். ஜம்மென்று ஆங்கிலப் புத்தகங்கள் படிக்கிறாள். ஸ்பூனும் ஃபோர்க்கும் வைத்து சாப்பாடு வெளுத்துக் கட்டுகிறாள். சாப்ஸ்டிக் வைத்து நூடுல்ஸை அவள் சுருட்டி எடுத்து சாப்பிடும் நாசூக்கு செம அழகு.*

*நிஜமாகவே மிக மிக புத்திசாலியான ஸ்டூடன்ட் இந்த கிராமத்துப் பெண்.*

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

**ஜனவரி 13**

இன்று எனக்கு மோசமான நாள். பாத் டப்பில் குளித்துவிட்டு எழுந்து வெளியில் வந்தபோது வழுக்கித் தள்ளியது. சுதாரித்து சுவரைப் பிடித்துக் கொண்டாலும், கால் மடங்கி பயங்கரமாகச் சுளுக்கிவிட்டது. அடுத்த பத்து நிமிடத்திலேயே பர்கர் மாதிரி புஸ்ஸென்று கால் மணிக்கட்டு வீங்கிக் கொண்டது.

நான் லேட்டஸ்டாக நடிக்கும் படத்தின் அடுத்த ஷெட்யூல் தொடங்க இன்னும் இருபது நாட்களுக்கும் மேல் இருந்தது. அதனால், டாக்டர் சொன்னபடி பத்து நாளைக்கு ஓய்வு எடுப்பது பெரிய காரியமில்லை.

www.t.me/tamilbooksworld

ஆனால், என் மானசீக தெய்வம் மாதிரி நான் நினைத்திருக்கும் டைரக்டர் தீபக் ஹிரானியின் 'லவ் இன் கனடா' படத்துக்கான பிரிவியூ நாளைக்கு! அவர் கூப்பிட்டு நான் போகாமல் இருப்பது, அவரை ரொம்பவே நோகடிக்கும். என்ன செய்யலாம் என்று யோசித்துக்

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

கொண்டிருந்தபோதுதான், உதவியாளன் போலா அந்த ஐடியாவைச் சொன்னான் -

''நம்ம ராம் துலாரியை அந்த பிரிவியூவுக்கு அனுப்பி வச்சா என்ன?''

''என்ன சொல்றே நீ?''

''சரியாத்தான் சொல்றேன். அவ நம்ம வீட்டு சமையல்காரினு உங்களுக்கும் எனக்கும் உங்க சைனீஸ் ஹேர் டிரெஸ்ஸருக்கும்தான் தெரியும். உங்களை மாதிரியே ஒரு பொண்ணு இந்த வீட்டுக்குள்ளே இருக்கிறது நம்ம அபார்ட்மென்ட் வாட்ச்மேனுக்குக்கூடத் தெரியாது. அப்புறம் என்ன கஷ்டம்? ஷப்னம் சக்ஸேனாவாக அந்த பிரிவியூ நிகழ்ச்சிக்கு இவளை நாம அனுப்பித்தான் பார்ப்போமே...''

''யாராச்சும் ஏதாவது கேள்வி கேட்டா?''

www.t.me/tamilbooksworld

''நான் கூடவே போறேனே... 'ஷப்னம்ஜிக்கு தொண்டை கட்டியிருக்கு. அவங்களாலே பேச முடியாது'ன்னு சொல்லிச் சமாளிச்சிடுவேன்!''

''அது அத்தனை சுலபம் கிடையாது. சல்மான் கானோ, அக்ஷய் கன்னாவோ என்னை ரொம்ப நெருக்கத்தில் பார்த்திருக்காங்க. சின்னச் சின்ன வித்தியாசங்களை வெச்சே அவங்க கண்டுபிடிச்சு, ராம் துலாரி மாட்டிக்கிட்டா என்னாகுறது?''

''அது திட்டமிட்டு நாம் நடத்தின ஸ்டன்ட் அப்படினு சொல்லுவோம். அதுவே அந்தப் படத்தோட பிரிவியூ நிகழ்ச்சிக்கு ஒரு பெரிய பப்ளிசிட்டியா மாறிடும். தீபக் ஹிரானி சாரும் கோவிச்சுக்க மாட்டாரு...''

- நான் நீளமாக மூச்சு விட்டேன்.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*''சரி பண்ணித் தொலை. ஆனா, அந்த நிகழ்ச்சியில் ராம் துலாரி என் பேரில் கலந்துக்கிற காட்சிகள் அத்தனையும் நான் வீடியோவில் பார்த்தாகணும்...''*

*''அதுக்கு பக்காவா ஆள் வெச்சி ரெக்கார்டு பண்ணிடறேன், போதுமா?'' என்றான் போலா.*

***ஜனவரி 14***

*கலக்கிவிட்டாள் ராம் துலாரி. அப்படியே என்னை மாதிரியே சிரிக்கிறாள் அந்த நிகழ்ச்சியில். என்னை மாதிரியே கூந்தலை ஒதுக்கிவிட்டுக் கொள்கிறாள். ஜூஸ் கொடுக்கும்போது அத்தனை நாசூக்காகக் குடிக்கிறாள். அவள் இந்தி சினிமா எதுவுமே பார்த்ததில்லை என்பது ஒரு பெரிய நன்மையாகப் போச்சு. இல்லையென்றால் அத்தனை கிட்டத்தில் சல்மான் கானையும் அக்ஷய் கன்னாவையும் பார்க்கும்போது, தன்னையும் மீறி ஒரு ரசிகையாக அசடு வழிந்திருப்பாள். அதெல்லாம் இல்லாமல் சமர்த்துப் பொம்மை மாதிரி அந்த பிரிவியூவில் பிஹேவ் பண்ணியிருந்தாள் ராம் துலாரி.*

*நான் வியப்பாக அந்த வீடியோவைப் பார்த்துக்கொண்டே இருந்தேன்.*

***பிப்ரவரி 16***

*ரத்தம் சுவைத்த புலியாகவே மாறிப் போயிருந்தான் போலா. இன்றைக்கு என்னிடம் வந்தவன், ''சூப்பர் பிராண்ட் ஜீன்ஸ் கம்பெனிக்கு உங்களை பிராண்ட் அம்பாசிடரா இருக்கச் சொல்லி ரொம்ப நாளா கேட்டுக்கிட்டு இருக்காங்க ஷப்னம் தீதி. முதல் வேலையா, அவங்க திறக்கப் போகிற புது ஷோ ரூம் நிகழ்ச்சிக்கு நீங்க வரணும்னு கேட்டிருக்காங்க. அஞ்சே நிமிஷம் நீங்க மீடியாக்கள் முன்னாடி நின்னுட்டு வந்தாலே போதும். அஞ்சு லட்ச ரூபாய் தர்றதுக்கு அவங்க*

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

ரெடி! நாளன்னிக்கு, அதாவது வெள்ளிக்கிழமை அந்தத் திறப்பு விழா நிகழ்ச்சி...'' என்றான்.

''அதுக்கு?''

''நீங்க ஏத்துக்காட்டி ஜீன்ஸ் கம்பெனியோட மொத்த கான்ட்ராக்ட்டும் பிரியங்கா சோப்ராவுக்குத் தரப்போறதா தகவல்.''

''சரி, ஆனா என் கால்ல இவ்ளோ பெரிய கட்டுப் போட்டிருக்கே?''

''நீங்க ரெஸ்ட் எடுங்க தீதி. உங்களுக்குப் பதில் வரப்போறது ராம் துலாரி!''

''நான்சென்ஸ்! அங்கே நூத்துக் கணக்கா ரசிகர்கள் இருப்பாங்க. மொய்ச்சுக்கிட்டு ஆட்டோகிராப் கேட்பாங்க...''

''பிரச்னையே கிடையாது. கம்பெனியோட பி.ஆர்.ஓ-கிட்டே சொல்லிடுவேன்... 'ஷப்னம் மேடம் கொஞ்சம் உடம்பு சரியில்லாம இருக்காங்க. ஒருத்தரும் அவங்களை நெருங்க முடியாதபடி டைட் செக்யூரிட்டி போடணும்'னு!''

www.t.me/tamilbooksworld

''அங்கே நாலு வார்த்தையாவது பேசியாகணுமில்லே:?'' என்றேன். உடனே போலா, ''ராம் துலாரி... இங்கே வா!'' என்றான்.

வந்தாள். துணிக் கடை பொம்மை போல நின்றாள். சின்னதாகப் புன்னகைத்தாள். கைகளைக் கூப்பினாள். ''இந்நிகழ்ச்சிக்கு வந்ததற்கு நான் மிகவும் சந்தோஷப்படுகிறேன். காரணம், நான் எப்போதும் அணியும் சூப்பர் பிராண்ட் ஜீன்ஸ்! அது எப்போதும் என்னோட கலந்தது - ரசிகர்களாகிய உங்களைப் போலவே...'' என்றாள் ராம் துலாரி.

ஓரளவு பர்ஃபெக்ட்டாகத்தான் இருந்தது. கூடவே திகைப்பாக இருந்தது. என்னிடம் ஒரு வார்த்தைகூட கேட்காமல் இவளுக்கு டிரெயினிங் கொடுத்து முடித்துவிட்டான் இந்த போலா. அதைப் புரிந்துகொண்டவனாக, ''இவ மேலே நீங்க கோபப்படாதீங்க. நீங்க

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*சொன்னதா ஏமாத்தித்தான் இவளுக்கு டிரெயினிங் கொடுத்துப் பார்த்தேன்!'' என்றான்.*

*எனக்கு சிரிப்பு வந்துவிட்டது. ''ஒழிஞ்சு போங்க. வர்ற பணத்தை இவளோட கல்யாணத்துக்கு நான் செலவழிக்கப் போகிற காசோட சேர்த்துக்கலாம்!''*

***ஜனவரி 18***

*இன்று இரவு அந்த வீடியோவைப் பார்த்தேன். அசந்தே போனேன். நானே என்னைத் திரையில் பார்ப்பது போலத்தான் இருந்தது. ராம் துலாரி நடிப்பில் பிரமாதமாகத் தேறியிருந்தாள். ஒரே ஒரு சறுக்கல், அந்தத் திறப்பு விழா நிகழ்ச்சியிலிருந்து திரும்புகிறபோது.*

*செக்யூரிட்டி வளையத்தை உடைத்துக்கொண்டு ஓடிவந்த கல்லூரிப் பெண்கள் சிலர், ''மேடம், ஆட்டோகிராப் ப்ளீஸ்!'' என்று அலறினார்கள் ஆசையாக. சின்னக் குழந்தையின் மிரட்சியோடு ஒருகணம் ராம் துலாரி உறைந்துபோவதையும், பக்கத்தில் இருக்கும் போலாவை அவள் பரிதாபமாகப் பார்ப்பதையும் வீடியோ கேமரா பதிவு செய்திருந்தது.*

*சட்டென்று சுதாரித்து ராம் துலாரியை கிட்டத்தட்ட இழுத்துக்கொண்டு வந்து போலா காரில் ஏற்றுவதையும், பின்னால் கல்லூரிப் பெண்கள் கோபமாக ஏதோ சொல்வதையும் கவனிக்க முடிந்தது.*

***ஜனவரி 20***

*''ஆட்டோகிராப்னா என்ன தீதி?'' - கால் அமுக்கிக்கொண்டே கேட்டாள் ராம் துலாரி.*

*''உனக்கு நான் ஒப்படைக்காத கடைசி ஆயுதம் அது ஒண்ணுதான்!'' என்று சிரித்தேன்.*

*''எனக்குஅதைக்கத்துக்கொடுங்களேன்...'' என்றாள்.*

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*நோட்டுப் புத்தகம் ஒன்றைக் கொண்டு வரச்சொல்லி, அதில் என் ஆட்டோகிராப்பை போட்டுக் காட்டினேன். அவள் பெயரை எப்படிக் கையெழுத்தாகப் போடுவது என்றும் சொல்லித் தந்தேன்.*

*தன் கையெழுத்தைப் பழகுகிற அதே சமயம், என் ஆட்டோகிராப்பையும் நாலைந்து தடவைப் போட்டுக் காட்டினாள் விளையாட்டாக.*

*திருட்டு ராஸ்கல்! ஷப்னம் என்பதில் 'ஹெச்'சை ஒரு மாதிரி தூக்கி சக்ஸேனாவில் 'எஸ்'ஸை நான் வளைக்கிற அந்தப் பாணியை அச்சு அசலாக அப்படியே போட்டிருந்தாள்.*

*''தீதி... நீங்கள் கலந்துகொள்கிற நிகழ்ச்சிக்கெல்லாம் என்னை அனுப்பி வைக்கிறீர்களே.. உங்களுக்கு இது சரியாகப் படுகிறதா?'' என்று கேட்டாள் திடீரென்று.*

www.t.me/tamilbooksworld

*அதைப் பற்றித்தான் நான் யோசித்துக் கொண்டிருந்தேன், வேறொரு கோணத்தில். ''அது ஒன்றும் தப்பில்லை ராம் துலாரி. இதுவும் ஒரு சுவாரஸ்யமான விளையாட்டுதான்!'' என்றேன் அவள் முதுகில் தட்டி.*

*பிப்ரவரி 21*

*என் கால் வீக்கம் ஓரளவு தணிந்து, கட்டையும்கூட டாக்டர் அவிழ்த்துவிட்டார். ஆனாலும், மேலும் மூன்று நாட்களுக்காவது நான் நடக்காமல் இருப்பது நல்லது என்றார்.*

*'பழிவாங்கும் பெண் புலி' படத்தில் நான் நடித்திருந்த நெகட்டிவ் ரோலுக்காக 'சினி பிளிட்ஸ்' பத்திரிகை அவார்டு அறிவித்திருந்தது. அந்த விருது நிகழ்ச்சிக்கு ராம் துலாரியை அனுப்புவது என்று நானே முடிவு எடுத்தேன்.*

*அனுப்புவது... அங்கே அவள் துல்லியமாக என்னைப் போல நடிக்கிறாளா என்று டெஸ்ட் செய்வது... அதற்கு வேண்டிய அளவுக்கு*

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*நானே அவளுக்கு இந்த முறை நுணுக்கமாக டிரெயினிங் கொடுப்பது... விருது வழங்கும் நிகழ்ச்சியை டி.வி. நேரடி ஒளிபரப்பில் பார்ப்பது... இந்த முறை அவள் யார் கண்ணுக்கும் சந்தேகம் வராமல் விருதை வாங்கிக்கொண்டு திரும்பிவிட்டால்... திரும்பிவிட்டால்..?*

*நான் ஒரு திட்டம் வைத்திருக்கிறேன், ரகசியமாக!*

- தொடர்ந்து சந்தேகிப்போம்...

Copyright © Vikas Swarup 2008

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

# மோட்டிவ் 6

## 25 நிமிடங்கள்... ஐந்து லட்சம் டாலர்கள்!

வாசகர்களே... கனவுக் கன்னி ஷப்னம் சக்ஸேனாவின் அந்தரங்க டைரியை நீங்கள் தொடர்ந்து படித்துக்கொண்டு இருக்கிறீர்கள்.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

## ஜனவரி 24

மோனாலிசாவைப் படைத்து முடித்துவிட்டு, சற்றுத் தள்ளி நின்று பார்த்தபோது லியனார்டோ டாவின்ஸி எப்படி சிலிர்த்திருப்பார்! அப்படியரு சிலிர்ப்பு எனக்கு, டி.வி-யில் நேரடி ஒளிபரப்பு பார்த்தபோது! பல ஆயிரம் ரசிகர்களின் விண் அதிரும் முழக்கங்களுக்கு மத்தியில், செக்ஸியாகக் கட்டிய மெல்லிய ரோஸ் புடவையில் காரிலிருந்து இறங்கினாள் ராம் துலாரி.

வண்டி வண்டியான புகழ் மாலைகளுக்கு நடுவே, 'சிறந்த நெகடிவ் ரோல் நடிகை' என்ற விருதை நான்... அதாவது ராம் துலாரி அலுங்காமல் குலுங்காமல் வாங்கிக் கொள்ள... மேடைமீதே ஏறிவிட்டது ரசிகர்கள் கூட்டம். ஆட்டோகிராப் கேட்டு ராம் துலாரியை மூச்சுத் திணற வைத்தது. எனக்கு பக்கென்று இருந்தது. ஆனால், அவள் அலட்டிக் கொள்ளவேயில்லை.

www.t.me/tamilbooksworld

நெஞ்சுக்கு நேரே நீண்ட ஆட்டோகிராப் நோட்டுகளில் கையெழுத்து போட்டுத் தள்ளிக் கொண்டே இருந்தாள். 'ஐ லவ் ஷப்போ' என்று டி ஷர்ட்டிலேயே அச்சடித்திருந்த ஒரு இளைஞன் குனிந்து தன் முதுகைக் காட்ட... டி ஷர்ட் மீது ராம் துலாரி, 'ஷப்னம் சக்ஸேனா' என்று ஆட்டோகிராப் போடுவதை ஒரு கேமரா ஜூம் பண்ணிக் காட்டியது.

துள்ளிவிட்டேன் துள்ளி... என்னாலேயே கண்டுபிடிக்க முடியாது - அது கள்ளக் கையெழுத்து என்று!

நாடறிந்த கனவுக் கன்னி என்ற பெருமையோடு சேர்த்து, அந்த பிரபலத்தனம் எனக்குள் ஏற்றியிருந்த சுமைகள் அத்தனையும் பட்டென்று இறங்கிவிட்ட மாதிரி இருந்தது. என் உடம்பிலிருந்து வெளியேறி லேசாகக் காற்றில் மிதந்தபடியே என் ஸ்தூல நடவடிக்கைகளை நான் வேடிக்கை பார்ப்பது போல் உணர்ந்தேன்.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*எங்கிருந்தோ வந்தாள்... ராம் துலாரி எனக்கு மறுபிறப்பு கொடுத்துவிட்டாள்!*

*இனி என் நெடுநாள் ஆசை நிறைவேறும்!*

*பிப்ரவரி 15*

*தென்னாட்டிலிருந்து வந்து வெற்றிக் கொடி கட்டிக்கொண்டிருக்கிற இயக்குநர் செல்வ சுப்பிரமணியத்தின் பெயரிடப்படாத படத்தில் நடித்துக் கொண்டிருக்கிறேன். மெஹ்பூப் ஸ்டுடியோவில் ஷூட்டிங். ஆனால், ஏனோ இன்று இந்த யூனிட்டில் இருக்கும் எல்லோரிடமும் ஏதோ ஒரு இனம் புரியாத பரபரப்பு... எதிர்பார்ப்பு. எல்லோரும் டி.வி-யில் நியூஸ் சேனலையே பார்த்துக் கொண்டிருந்தார்கள்.*

*டி.வி. நிருபர் பர்க்கா தாஸ் டெல்லியில் கோர்ட்டுக்கு வெளியே நின்று படபடப்பாகப் பேசிக் கொண்டிருந்தார். 'இளம் பெண் ரூபி கில் கொலை வழக்கில் விவேக் விக்கி ராய் மீதான தீர்ப்பு இன்னும் சில நிமிடங்களில் வெளியாகப் போகிறது' என்றார்.*

www.t.me/tamilbooksworld

*வந்தது - விவேக் விக்கி ராய் நிரபராதி என்று தீர்ப்பு!*

*ஸ்டுடியோவில் இருந்த அத்தனை பேர் முகத்திலும் ஒருவித ஏமாற்றம்... அதிர்ச்சி. ஆனால், அதை அவர்கள் வெளிப்படையாகக் காட்டிக் கொள்ளவில்லை.*

*பாரில் வைத்து துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்பட்ட ரூபி கில் என்ற அந்தப் பெண்ணுக்கும் எனக்கும் என்ன சம்பந்தம்? ஆனால், விக்கி ராயின் துப்பாக்கியிலிருந்து புறப்பட்ட குண்டு என்னையே துளைத்துக் கொண்டு போனது போல் உணர்ந்தேன். சக்தியெல்லாம் உறிஞ்சிப் போடுகிற அளவுக்கு ஒரு சோகம் என் மீது கவிந்தது.*

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*பிப்ரவரி 17*

*அவுட்டோர் ஷூட்டிங்... ஆஸ்திரேலியா போகிறேன். திரும்பி வர மூன்று வாரம் ஆகும். வீட்டில் ராம் துலாரி மட்டும் தனியாக இருப்பாள். நடுநடுவே வந்து அவளை கவனித்துக் கொள்ளும்படி சொந்தக்கார உதவியாளன் போலாவிடம் சொல்லி இருக்கிறேன்.*

*பிப்ரவரி 20*

*ஒரே வார்த்தையில் சொல்வதானால்... சிட்னி ராக்கிங்! இதான் முதல் தடவையாக நான் ஆஸ்திரேலியா வருவது. ஷூட்டிங் நடுவே கிடைத்த நேரத்தில் நிறைய சுற்றிப் பார்க்கவும், ஷாப்பிங் செய்யவும் முடிவு எடுத்திருக்கிறேன். இங்கே என்னை அதிசயப்படுத்திய ஒரு விஷயம்... எனக்கு ஜோடியாக நடிக்கும் ஹிரித்திக் ரோஷனோடு சேர்ந்து நடனமாடுவதற்காகக் கூட்டி வரப்பட்ட ஆஸ்திரேலியப் பெண்கள்! இங்கேயும் எக்கச்சக்கமாக இந்திப் படங்கள் ரிலீஸ் ஆகுமாம். இந்தியர்களைப் போலவே இந்தப் பெண்களும் வெறிபிடித்த மாதிரி ரசிப்பார்களாம். நம்ம பாலிவுட் ஹீரோக்களுக்கு இந்த குரூப் டான்ஸ் பெண்கள் மத்தியில் தனித்தனியாக ரசிகர் பட்டாளம் இருந்தது.*

www.t.me/tamilbooksworld

*பாட்டு ஸீனுக்கு நடுவே பிரேக் விட்டபோதெல்லாம் ஹிரித்திக்கிடம் நெருங்கிப் பேசுவதற்கு இந்த ஆஸ்திரேலியச்சிகள் காட்டிய அலைச்சல் ஆச்சர்யமாக இருந்தது.*

*வெள்ளைக்காரனிடம் நாம் அடிமைப்பட்டுக் கிடந்த வரலாறு எனக்கு நினைப்பு வந்தது. இந்திய சினிமா மூலமாக காலத்தைத் திருப்புகிறதா இந்த உல்டா அடிமைத்தனம்!*

*மார்ச் 4*

*ஷூட்டிங் திட்டமிட்டபடி நடந்து முடிந்தது. நாளைக்கு நாங்கள் கிளம்புவதாகத் திட்டம். ஆனால், இன்றைக்கு விநோதமான ஒரு வியாபாரத்தில் சிக்கிக் கொண்டேன்.*

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

இத்தாலிக்காரன் என்று தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டு எப்படியோ என் அறைக்கு வந்து சேர்ந்தான் லோம்பார்டி என்பவன். கூச்ச நாச்சமே இல்லாமல் நேராக விஷயத்துக்கு வந்தான்.

வளைகுடா நாடு ஒன்றின் இளவரசர் ஒருத்தருக்கு தன்னை பிசினஸ் மேனேஜர் என்று கூறிக்கொண்டவன், ''உங்கள் சினிமாக்களை இளவரசர் பார்த்து உங்கள் மீது வெறியாகிப் போயிருக்கிறார். நீங்கள் ஒரு வார்த்தை ஓகே சொன்னால் போதும். இங்கிருந்து மார்ச் 6-ம் தேதி தனி விமானத்தில் லண்டன் போகிறோம். அன்றுதான் இளவரசரின் பிறந்த நாள். அன்று இரவுக் கொண்டாட்டத்தில் நீங்கள் அவசியம் தன்னுடன் இருக்க வேண்டும் என்று விரும்புகிறார். லண்டனிலிருந்து தனி விமானத்திலோ அல்லது நீங்கள் விரும்பும் வேறு விமானத்திலோ மும்பைக்கு திரும்பக் கொண்டு போய்ச் சேர்த்துவிடுவோம். லட்சம் டாலர் தருவதற்கு சித்தமாக இருக்கிறோம். பாதி தொகை அட்வான்ஸ் இப்போதே கொடுக்கத் தயார்!'' என்றான் லோம்பார்டி.

www.t.me/tamilbooksworld

சினிமா டைரக்டர், கால்ஷீட்டுக்காக கதை சொல்கிற மாதிரி சர்வ சாதாரணமாக இதைச் சொன்னான். பளிச்சென்று நான் சீறி விழுந்தேன்.

''மிஸ்டர். உன் இளவரசரின் அந்தப்புரத்தில் அடிமைப்பட்டுக் கிடக்கிற தாசிப் பெண் என்று என்னை நினைத்தாயா? இப்படி வந்து கேட்பதற்கு உனக்கு என்ன தைரியம் இருக்க வேண்டும்!'' என்று கொதித்தேன். லோம்பார்டி இப்படி பல பார்ட்டிகளைப் பார்த்தவன் போல. படுகூலாக, ''இரண்டு லட்சம் டாலர் வேண்டுமானாலும் வாங்கிக் கொள்ளுங்கள். தயவு செய்து மறுத்துவிடாதீர்கள். எங்கள் இளவரசர் கேட்டு எதுவுமே கிடைக்காமல் போனதில்லை. அதுவும் அவர் பிறந்த நாளன்று ஏமாற்றம் கொள்வதை நான் விரும்பவில்லை!'' என்றான் சட்டென்று பேரத்தை டபுளாக்கி.

மறுபடியும் நான் எகிறித் தள்ளினேன். ரூமைவிட்டு வெளியே போகச் சொன்னேன்.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

''ஒரே பேச்சு. ஐந்து லட்சம் டாலர்கள்!'' என்று எதிர்பாராத உயரத்துக்கு எகிறித் திகைக்க வைத்தான் லோம்பார்டி. இளவரசரின் புகைப்படம் ஒன்றைத் தன் பையில் இருந்து எடுத்துக் காட்டினான்.

கோணாமாணா முகத்தோடு, ஒரு அச்சுப்பிச்சு மல்ட்டி பில்லியனரை மனதுக்குள் நினைத்திருந்த எனக்கு ஆச்சர்யமாக இருந்தது. ஹாலிவுட் மாடல் போல இருந்தான் அந்த இளவரசன். அரபு நாட்டுக்குரிய உடையை அணிந்திருந்தாலும், அவன் மீசை தாடியை டிரிம் பண்ணி வைத்திருந்த விதமும், அவன் உடம்பின் நேர்த்தியும் பிரமாதமாக இருந்தன.

ஐந்து லட்சம் டாலர்கள்! ரூபாயில் அது எத்தனை கோடிகள் வரும் என்று கணக்குப் போட்டுப் பார்த்தேன். மூன்று வருடங்களாக சினிமாவில் நடித்தும், விளம்பரங்களில் வந்தும், தவிர்க்க முடியாத தருணங்களில் அப்படி இப்படி அடிபணிந்தும் நான் சேர்த்து வைத்திருக்கும் வங்கி பேலன்ஸை நினைத்துப் பார்த்தேன். அதில் நாலில் ஒரு பங்குத் தொகையை இந்த இளவரசன் ஒரே ராத்திரியில் எனக்குத் தரக் காத்திருக்கிறான்!

அதிகபட்சம் என்ன நடக்கும்? பாட்டு, கூத்து, குடி..! அதெல்லாம் முடிந்ததும் இரண்டு தடவை என்னோடு இருப்பானா? சதா போகத்தில் திளைத்து எழுகிற ஆசாமி என்பதால், ரொம்ப நேரம் என்னை உருட்டிப் புரட்டுமளவு இவன் தாக்குப் பிடிக்கவும் முடியாது என்றே தோன்றியது. அதிக பட்சம் 25 நிமிடங்கள்..? அதற்கா இத்தனை கோடிகள்! அப்படியானால், ஒரு நொடிக்கு என் விலை எத்தனை ரூபாய்?

பாக்ஸிங் வீரர் முகமது அலிகூட நொடிக்கு இத்தனை ரூபாய் சம்பாதித்திருக்க மாட்டார் என்று தோன்றியது. அதையும்கூட சம்பாதிப்பதற்குள் அவருக்கு முகமும் உடம்பும் எந்தளவுக்கு பஞ்சராகி இருக்கும். நான் சேதாரம் இல்லாமலே சம்பாதிக்க வளைகுடா வாய்ப்பு!

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

என்ன செய்யலாம்? யோசித்தேன்! முழுப்பத்தினி போலவே வேஷத்தைத் தொடர முடிவெடுத்தேன். அதே கடுமையோடு முகத்தை வைத்துக்கொண்டேன்.

''உங்கள் இளவரசரிடம் போய்ச் சொல்லுங்கள்... நான் அந்த மாதிரி ஆள் இல்லை என்று. இதுதான் என் இறுதி முடிவு!'' என்றபடி கதவை நோக்கிக் கை காட்டினேன் லோம்பார்டிக்கு. தயக்கத்துக்குப் பின் ஏமாற்றத்தோடு எழுந்து வெளியே போனான். போகட்டும். நிச்சயம் இளவரசரிடம் பேசுவான். இன்று இல்லையேல் நாளை... நாளை இல்லையேல் அடுத்த மாதம்... கட்டாயம் தனி விமானத்தில் திரும்பி வருவான், இந்த பெரிய லெவல் புரோக்கர். எப்படியாவது என்னைத் தொட்டுவிட வேண்டும் என்ற 'ஈகோ'வுக்காகவே இளவரசன் எனக்கான ரேட்டை இன்னும் கூட்டிக் கொடுப்பான். செய்கிற தப்பை முடிந்த வரைக்கும் காஸ்ட்லியாக செய்து வைப்போமே!

www.t.me/tamilbooksworld

- தொடர்ந்து சந்தேகிப்போம்...

Copyright © Vikas Swarup 2008

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

## மோட்டிவ் 6

### பாத்ரூம் கூரையில் ரகசிய கேமரா!

வாசகர்களே... கனவுக் கன்னி ஷப்னம் சக்ஸேனாவின் அந்தரங்க டைரியை நீங்கள் தொடர்ந்து படித்துக்கொண்டு இருக்கிறீர்கள்...

**மார்ச் 8**

www.t.me/tamilbooksworld

என் வாழ்வின் மிக மோசமான நாட்கள் துவங்கிவிட்டன என்பதற்கான மணி இன்று அடித்துவிட்டது. சிங்கப்பூர் வழியாக, மும்பைக்கு நான் வந்து இறங்கியபோது, ஏர்போர்ட்டில் எனக்காக கார் காத்திருந்தது. ஆனால், போலா வரவில்லை. ''போலா உங்களை இன்னிக்கு இந்த டயத்துக்கு வந்து பிக்-அப் பண்ணிக்கச் சொன்னாரு மேடம்!'' என்றான் டிரைவர்.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

அபார்ட்மென்ட்டுக்கு நான் வைத்திருக்கும் மாற்றுச் சாவி போட்டு உள்ளே நுழைந்ததுமே கலங்கிப் போய் நின்றுவிட்டேன். புயல் கடந்த பூமி மாதிரி தாறுமாறாகச் சிதறிக் கிடந்தது என் வீடு. சோபாவெல்லாம் தலைகீழாகப் புரண்டு கிடந்தது. தரையெல்லாம் சிக்கன் பீஸ்களும், காய்ந்து போன நூடுல்ஸும் சிதறிக் கிடந்தன. படுக்கை அறைக்கு ஓடிப்போனேன். என் பீரோக்கள் அத்தனையும் திறந்து கிடக்க, காஸ்ட்லியான உடைகள் ஒன்றுகூட இல்லை. காஸ்ட்லியான வாட்ச், பல நாடுகளிலிருந்து நான் தருவித்த பர்ஃப்யூம்கள், நகைகள், விதம் விதமான ஷூக்கள் எல்லாமே காணாமல் போயிருந்தன. வங்கிக் கணக்கில் இருக்கும் டெபாசிட்கள் போக நிறையத் தொகை நான் ரொக்கமாகவே வீட்டில் வைத்திருப்பது வழக்கம். அந்தப் பணத்தைப் பூட்டி வைக்கும் சேஃப்டி லாக்கரும் உடைக்கப்பட்டிருந்தன. அதில் இருந்த சில லட்சம் ரூபாய்களும், டாலர்களும், யூரோக்களும் சுத்தமாக வழிக்கப்பட்டு இருந்தன!

www.t.me/tamilbooksworld

போலா எங்கே போனான்? ராம் துலாரி என்ன ஆனாள்? குரல் கொடுத்துப் பார்த்தேன்... பதில் வரவில்லை. பயம் கூடிப்போனது. பாத்ரூமைத் திறந்து பார்ப்பதற்காக நகர்ந்தேன். சட்டென்று முதுகுத் தண்டில் ஐஸ் கட்டியாக திகில் பரவியது. என்னுடைய பாத்டப்புக்குள் போலாவையும், ராம் துலாரியையும் ரத்தக் களறியாகக் கொன்று தண்ணீரில் கொள்ளையர்கள் மிதக்க விட்டிருப்பதான காட்சி கற்பனையில் விரியும்போதே மயக்கம் தள்ளியது.

சமாளித்துக்கொண்டு, போன் அருகில் ஓடினேன். போலீஸுக்கு ரிங் செய்வதற்காக ரிசீவரைக் கையில் எடுத்தேன். போன் மீது ஒரு சீட்டு ஒட்டியிருப்பதை அப்போதுதான் பார்த்தேன்.

'போலீஸுக்கா? அதற்கு முன் டி.வி-க்கு அருகில் பாரு!' என்றது சீட்டு.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

கொள்ளையர்கள் ஏனோ டி.வி., ஹோம் தியேட்டரைஎல்லாம் களவாடாமல் விட்டிருந்தார்கள். டி.வி-க்கு அருகில் ஒரு டி.வி.டி மட்டும் கிடந்தது. நடுங்கும் கைகளால் அதை எடுத்து டி.வி.டி. பிளேயருக்குள் போட்டேன். பாத் டப்புக்குள் போலாவும், ராம் துலாரியும் கிடக்கிற கொடூரக் காட்சியைப் பார்க்க மனதைத் திடப்படுத்திக் கொண்டேன்.

டி.வி.டி-யில் பாத்ரூம் காட்சி விரிந்தது. ஆனால், அந்த இருவர் அதில் இல்லை. இருந்தது நான்!

மெல்லிய ராகத்தோடு பாடிக்கொண்டே உடைகளை ஒவ்வொன்றாக அவிழ்க்கிறேன். ஷவரைத் திறக்கிறேன். பாத் டப்புக்குள் இறங்குகிறேன். அதில் நின்றபடி உள்ளாடைகளையும் கழற்றிவிட்டு பிறந்த மேனியாகிறேன். என் அழகிய வளைவுகளை நானே அப்படியும் இப்படியுமாக குனிந்து பார்த்துக் கொள்கிறேன். எதிரில் இருக்கும் கண்ணாடியில் எனக்கு நானே பெருமிதமாக குசலம் விசாரித்துக் கொள்கிறேன். பாத் டப்பில் படுத்து ஒவ்வொரு அங்கமாக, மிக நிதானமாக வருடிக் கொண்டு குளிக்கத் துவங்குகிறேன். மறுபடி எழுந்து என் மேனியின் சிவப்பை மேலும் சிவப்பாக்கும் விதமாக டவலால் அழுந்தத் துடைத்துக் கொள்வதையும் கேமரா தெளிவாகப் படம் பிடித்திருந்தது.

www.t.me/tamilbooksworld

நான் பேயறைந்தாற்போல் டி.வி.டி-யைப் பார்த்துக் கொண்டே இருந்தேன். கொள்ளைக்காரர்கள் என்ன சொல்கிறார்கள்? கொள்ளை விவகாரத்தை நான் போலீஸுக்குக் கொண்டு போனால், இந்த நிர்வாணக் காட்சிகள் வெளியில் வரும் என்கிறார்களா?

தீப்பற்றிய மாதிரி ஒரு விஷயம் எனக்கு உறைத்தது... இதை யார் எப்போது எடுத்திருக்க முடியும்? என் அனுமதியில்லாமல் வீட்டுக்குள் வரக்கூடியவர்கள் யார்? வீட்டின் ஒவ்வொரு மூலையையும் பார்த்துப் பார்த்து அலங்காரம் செய்யவும், நவீன மோஸ்தரில் மாற்றங்கள்

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

செய்யவும் நான் அதிகாரம் கொடுத்திருந்த ஒரே ஆள் போலாதானே? சரி, போலா எங்கே? ஏன் ஏர்போர்ட்டுக்கு வரவில்லை?

டெலிபோனுக்குப் பக்கத்தில் வைத்திருந்த துண்டுச் சீட்டை மறுபடி எடுத்துப் பார்த்தேன். இப்போது புரிந்தது. அதில் இருக்கும் எல்லா எழுத்துமே சாய்ந்த வாட்டில் சிரித்தன. அது போலாவின் கையெழுத்துதான்! கஷ்டப்பட்டு வேறு மாதிரி எழுதுவதற்கு முயற்சி செய்திருந்தான்.

எனக்கு தேகம் நடுங்கியது. பாத்ரூம் கதவை மெதுவாகத் திறந்து பார்த்தேன். பாத்டப் காலியாக இருந்தது. விளக்குகளை ஒவ்வொன்றாக ஆன் செய்தேன். கூரையை நிமிர்ந்து பார்த்தேன். நான் பார்த்த காட்சிகளின் கோணத்தை வைத்து, கூரையின் ஒரு ஓரத்தைக் குறி வைத்துச் சோதித்தேன். அங்கே பொருத்தியிருந்த ஒரு விளக்கின் கீழே சின்னதாக கண்ணாடிப் புள்ளி தெரிந்தது. மெதுவாக விரல்களால் நெருடிப் பார்த்தேன். ரகசிய கேமராவேதான். படுபுரொஃபஷனலாக, நன்றாகத் திட்டமிட்டு டிஸைன் செய்யப்பட்டு அங்கே பொருத்திஇருந்தது அந்தக் கேமராவை.

www.t.me/tamilbooksworld

தள்ளாட்டமாக வெளியில் வந்து படுக்கையறைக்குள் சுற்றிப் பார்த்தேன். அங்கே ஏராளமான சரவிளக்குகள் உள்பட பலவிதமான விளக்குகளைப் பொருத்தியிருந்தான் போலா! இதில் எங்கே, எந்த ரூபத்தில் கேமராவை வைத்தானோ? நான் உடை மாற்றுவது, ஆடை விலகித் தூங்குவது என்று எத்தனை காட்சிகளைப் படம் பிடித்தானோ?

துரோகி! தூரத்து உறவு என்று சொல்லிக்கொண்டு, சினிமா வாய்ப்பு தேடி மும்பைக்கு வந்து, அழுத விழிகளோடு இடம் கொடுத்ததற்கு, அவன் தந்திருக்கும் பரிசா இது? எத்தனை பெரிய முட்டாள் நான்? ஆனால், கொட்டிவிட்ட பாலுக்காக இனி அழுதென்ன ஆகப் போகிறது? தன்னிரக்கம் என்னை நொறுக்க ஆரம்பித்தது. ஏதோ ஒரு புத்தகத்தில் படித்தது நினைவுக்கு வந்தது. 'துன்பமான நேரங்களில் தன்னிரக்கத்துக்கு

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

துளியும் இடம் கொடுத்து விடாதீர்கள். அது உங்களை மேலும் பலவீனமாக்கும். துன்பத்திலிருந்து விடுபடுவதற்கான தெளிவான வழியை யோசிக்க முடியாமல் செய்துவிடும்' என்ற அந்த தத்துவம் என்னை சட்டென்று திடப்படுத்தியது.

போலா இருக்கும் இடத்தை நான் தேட ஆரம்பித்தால், இந்த டி.வி.டி-யை ஏதாவது ஒரு வெப்சைட்டில் போட்டுவிடுவான் என்பது புரிந்தது. நடிகையின் வாழ்க்கை ஃபார்முலா ரொம்ப சிக்கலானது. மார்பின் நுனி வரைக்கும் வளைவுகளைக் காட்டி நடித்தாக வேண்டும். தொடையின் உச்சம் வரை, ஒரு துளியூண்டு மட்டும் மறைத்துக்கொண்டு நடிப்பது ரசிக்கப்படும். ஆனால், அவளை முழு நிர்வாணமாக இந்த உலகம் பார்த்துவிட்டால், அதன் பிறகு அவளுக்கான 'சினிமா கற்பு' காலியாகிவிடும். புகையிலை விரிந்தால் போச்சு என்பார்களே... அது முழு நிர்வாணமாகப் பார்க்கப்பட்டுவிட்டால், ஒரு நடிகையின் மார்க்கெட் வீழ்ச்சிக்கும் பொருந்தும்!

www.t.me/tamilbooksworld

போலாவை தேடும் எண்ணத்தை ஒத்தி வைத்தேன்!

நகைகள், பணத்தை எல்லாம் எடுத்துக்கொண்டு போலா எக்கேடும் கெட்டுப் போகட்டும். என் வங்கிக் கணக்கில் இருக்கும் பணத்தோடு ஒப்பிடும்போது, களவு போனது ஒரு பெரிய தொகையே அல்ல. ஆனால், அந்த அப்பாவிப் பெண் ராம்துலாரி என்ன ஆனாள்? அவளை என்ன செய்திருப்பான் அந்தப் பாவி?

என்னை நம்பி வந்த பரிதாபப் பெண்ணே... உன் ஆன்மா சாந்தி அடையட்டும். போலா, நீ செத்தபிறகு நரகத்தின் எண்ணெய் கொப்பரைக்குள் நிரந்தரமாக வெந்து கிடக்கக் கடவது!

மார்ச் 12

ராம் துலாரி கடத்தப்பட்டு நான்கு நாள் ஆகிவிட்டது. எந்தத் தகவலும் இல்லை. என்ன பண்ணியிருப்பான் போலா அவளை? கற்பை

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

சூறையாடிவிட்டு, அவள் உடம்பைத் துண்டு துண்டாக நறுக்கி, பிளாஸ்டிக் பைக்குள் போட்டு, கடலில் இருக்கும் மீன்களுக்கு இரையாகக் கொடுத்திருப்பானா? எனக்குத் தெரிந்த அத்தனை கொலைப் படங்களும் காட்சியில் ஓடின.

போலீஸுக்குப் போகாமல் இருப்பதில் என் மனசாட்சி குடைந்தது. ஒரு க்ரைம் நடந்து, போலீஸுக்குப் போவதற்கு நாட்களைத் தள்ளிப் போட்டுக்கொண்டே போகும்போது, குற்றவாளியைக் கண்டுபிடிப்பதற்கான தடயங்களும் வாய்ப்புகளும் அழிந்துகொண்டே போகும் என்று போலீஸ் சொல்வது என் நினைவுக்கு வந்தது. என்ன செய்ய? போலா எடுத்து வைத்திருக்கும் பாத்ரூம் டி.வி.டி-யும் பாழாய்ப் போன என் இமேஜும் தடுக்கிறதே! ராம் துலாரிக்காக இன்று இரவு வெகுநேரம் அழுதேன்.

மார்ச் 13

www.t.me/tamilbooksworld

லூத்ரா என்ற அந்த புரொடியூசர் படுக்கையறைக் காட்சியை மட்டுமே மூலதனமாக்கி 'சாஃப்ட் போர்னோகிராபி' எடுக்கிற 'லுச்சா' ரகம். என் செல்போன் நம்பருக்குள் இன்று எப்படியோ வந்துவிட்டான். ''ஷப்னம்ஜி! ஸ்டில் செஷன் எப்போது வைத்துக் கொள்ளலாம்? வருகிற வியாழக்கிழமை ஓகே-தானே? அதற்குப் பிறகு பூஜையை வைத்துக் கொள்ளலாம் என்று பார்க்கிறேன்...'' என்றான்.

''என்ன ஸ்டில்? என்ன பூஜை?''

''பார்த்தீர்களா? ஒரு வாரமாக போலாகூட எனக்கு போன் பண்ணவில்லை... அவனுக்கு ஏதும் உடம்பு சரியில்லையா? உங்கள் கால்ஷீட்களைப் பார்த்துக் கொள்ளும் ராகேஷ்ஜியிடம் நமது புதிய ஒப்பந்தம் பற்றி நீங்கள் ஏதும் சொல்லவில்லையா? சொல்லியிருந்தால், அவராவது பர்ஃபக்டாக உங்களுக்கு நினைவூட்டி இருப்பாரே...''

எனக்கு எரிச்சல் பொங்கியது.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*''லூத்ராஜி... நீங்கள் பேசுவதே எனக்குப் புரியவில்லை...''*

*''புரியவில்லையா? என் தயாரிப்பில் நீங்கள் நடிக்கும் புது படத்துக்கு அட்வான்ஸ் கொடுத்தேனே... போலாவோடு சேர்ந்து வந்துதானே நீங்கள் புதுப் படத்துக்குக் கையெழுத்துப் போட்டீர்கள்!''*

- தொடர்ந்து சந்தேகிப்போம்...

Copyright © Vikas Swarup 2008

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

## மோட்டிவ் 6

### ஹேப்பி பர்த் டே ஷப்னம்...

நடிகை ஷப்னம் சக்ஸேனாவின் டைரியில் மார்ச் 13-ம் தேதிக்கான பக்கங்கள் தொடர்கின்றன...




www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

இந்த வக்கிர புரொடியூசர் லூத்ரா மென்டல் ஆகிவிட்டானா? அல்லது மத்தியானமே தண்ணி போட்டுவிட்டானா? 'உங்கள் உதவியாளன் போலாவோடு சேர்ந்து வந்து நீங்கள்தானே புதுப் பட ஒப்பந்தத்தில் கையெழுத்துப் போட்டீர்கள்' என்று சொல்லி வெறுப்பேற்றுகிறானே!

நான் மூர்க்கமானேன்.

''மிஸ்டர்! ஆறு மாதங்களுக்கு முன்பே ஒரு முறை நீங்கள் கால்ஷீட் கேட்டீர்கள். நான் தரமுடியாது என்று சொல்லிவிட்டேன். மறுபடி எப்போது உங்களை நான் வந்து சந்தித்தேன் என்கிறீர்கள்?''

''சரியாப்போச்சு... நீங்களாகத்தானே மனதை மாற்றிக்கொண்டு போன வாரம் தாஜ் ஹோட்டலில் என்னைச் சந்தித்தீர்கள். போலாவையும் வைத்துக்கொண்டுதானே கையெழுத்துப் போட்டீர்கள். ஐம்பது லட்சம் அட்வான்ஸ் அப்போதே நான் கொடுத்துவிட்டேனே...'' என்று லூத்ரா சொல்ல... முதலில் குழம்பி, உடனே அதிர்ந்தேன்.

www.t.me/tamilbooksworld

பாவி போலா! நான் ஊரில் இல்லாத சமயத்தில், என் 'ரிப்ளிகா'வான ராம் துலாரியைக் கூட்டிக்கொண்டு போய், அவளை நான் என்று காட்டி ஒப்பந்தத்திலும் கையெழுத்துப் போட வைத்திருக்கிறான். அவன் என் நகைகளுடன் மட்டும் ஓடவில்லை. இப்படி பொய்க் கையெழுத்துப் போட்டு அட்வான்ஸூம் வாங்கியிருக்கிறான்.

ஐயோ, இன்னும் எத்தனை புரொடியூஸர்களிடம் இப்படி என்னை அடகுவைத்துப் பணம் பார்த்திருப்பான்!

''போட்டோ செஷனுக்கு உடைகள்கூட தயார் ஷப்னம்ஜி. நீங்கள் சொன்னபடியே ரொம்ப செக்ஸியாக இல்லாமல் கொஞ்சம் பார்த்துத்தான் ரெடி பண்ணியிருக்கிறோம். ஆனால், பிகினி டிரெஸ் ரெண்டு ஸீனில் உண்டு. ஓகே-தானே?'' என்றான் எதிர்முனை டைரக்டர்.

''லூத்ராஜி! எனக்கு இப்போது கொஞ்சம் உடம்பு சரியில்லை. அப்படியே கால்ஷீட் கொடுத்து இருந்தாலும், அந்த ஒப்பந்தத்தை நாளை

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*நேரில் கொண்டுவந்து காட்டுங்கள். அதை கேன்சல் செய்துவிடலாம்!'' என்றேன்.*

*''ஷப்னம்ஜி... இது துளியும் நியாயம் இல்லை. நான் கோர்ட்டுக்குப் போக வேண்டியிருக்கும். இதில் எனக்கு எவ்வளவு பெயர் இழப்பு ஏற்படும் தெரியுமா?''*

*''ஏற்கெனவே ரொம்பப் பேரோடுதான் நீங்கள் இருக்கிறீர்களா? தயவுசெய்து டார்ச்சர் பண்ணாதீர்கள். எத்தனை லட்சம் அட்வான்ஸ் கொடுத்திருந்தாலும் சரி... நான் உங்கள் படத்தில் நடிப்பதாக இல்லை!''*

*''ரைட்! என்னிடம் வாங்கிய 50 லட்சத்தோடு சேர்த்து நஷ்ட ஈடாக ஐந்து லட்சம் போட்டு நாளையே திருப்பிக் கொடுங்கள். இல்லையென்றால், இப்போதே நான் பிரஸ்ஸைக் கூப்பிட வேண்டியிருக்கும்!''*

www.t.me/tamilbooksworld

*மார்ச் 14*

*வங்கிக்குப் போயிருந்தேன். உயர் ரக கோட் சூட்டில் இருந்த மேனேஜர் ஏற்கெனவே எனக்கு அறிமுகமானவர்தான். நடிகை என்பதையெல்லாம் தாண்டி கோடிகளில் அந்த வங்கியில் டெபாசிட் செய்திருக்கும் வாடிக்கையாளர் என்பதால் விழுந்தடித்துக்கொண்டு என்னை வரவேற்பது வழக்கம். ஆனால், இன்றைக்கு என்னை விரோதமாகவே பார்த்து வரவேற்றார்.*

*''அவசரமாக 55 லட்சம் பணம் வேண்டியிருக்கிறது!'' என்றேன்.*

*''அவ்வளவு தொகையை ஓவர் டிராஃப்ட்டாகத் தர முடியாதே மேடம்!'' என்று அவர் சொல்ல... இப்போது நான் அவரை முறைத்தேன்.*

*''ஓவர் டிராஃப்ட்டா? நான் என் கணக்கில் இருக்கும் பணத்தில் கொஞ்சத்தை எடுக்க வந்திருக்கிறேன்!''*

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*''ஷப்னம் மேடம்... உங்களுக்கு ஏதாவது பெரிய பிராப்ளமா? பிப்ரவரி 16-ம் தேதி நீங்கள்தானே இங்கே வந்து, உங்கள் கணக்கில் இருந்த மொத்தப் பணத்தையும் சுத்தமாகத் துடைத்து எடுத்துக்கொண்டு போனீர்கள்? அப்புறம் எங்கிருந்து 55 லட்சம் உங்கள் கணக்கில் இருக்கும்?''*

*தலை சுற்றியதே தவிர, குழப்பம் வரவில்லை எனக்கு. போலா இங்கேயும் விளையாடி முடித்துவிட்டான். வங்கி மேனேஜரே அதையும் உறுதியும் செய்தார் -*

*''போலா ஸ்ரீவத்ஸவா உங்களோடு வந்திருந்தார். இதே அறையில்தான் நாம் பேசினோம். இப்படி மொத்தமாகப் பணத்தை வழித்து எடுப்பதால் உங்களுக்கு வட்டியில் ரொம்ப இழப்பு ஏற்படும் என்று நான் சொன்னேன். நீங்கள்தான் விடாப்பிடியாக மொத்தமாகக் கையெழுத்துப் போட்டுப் பணத்தை எடுத்துக்கொண்டு போனீர்கள்!''*

www.t.me/tamilbooksworld

*''ஆனால், அந்த மாதிரி எல்லாம் நடந்ததே எனக்குத் தெரியாது. உங்கள் வங்கிக்கு நான் வந்தே பல மாதங்கள் இருக்கும்.''*

*வங்கி மானேஜர் என்னைப் பார்த்த பார்வையில், 'அவசரமாக நீங்கள் ஒரு மென்டல் டாக்டரைப் பார்ப்பது நல்லது' என்ற செய்தி இருந்தது.*

*அபார்ட்மென்ட்டுக்கு திரும்பி வந்து படுக்கையில் விழுந்தேன். கால்ஷீட்களைக் கவனிக்கும் ராகேஷ்ஜியைக் கூப்பிட்டு எல்லா அப்பாயின்ட்மென்ட்களையும் கேன்சல் செய்யச் சொன்னேன்.*

*முடிந்தது! மும்பைக்கு வந்து நட்சத்திரமாக ஆகி, 'டாப்' நிலைக்கு வரும் வரைக்கும் உடலாலும் மனதாலும் நான் அடைந்த எல்லா இழப்புகளுக்கும் ஈடாகச் சேர்த்த மொத்தப் பணமும் போய்விட்டது. இனி முதல் சிங்கிள் பைசாவில் இருந்துதான் நான் என் வாழ்க்கையை மறுபடி தொடங்க வேண்டுமா?*

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*நம்பிக்கைத் துரோகம் என்பது இத்தனை தீவிரமாகக்கூட இருக்க முடியுமா? நாளை என் இருபதாவது பிறந்த நாள். அன்றைக்கு பெரிய கொண்டாட்டம் என்று எதுவும் வைத்துக்கொள்ளவில்லை என்றாலும், வாழ்த்து சொல்லி போனில் அழைப்பவர்களிடம் அழுது வடிந்துகொண்டா பதில் சொல்ல முடியும்.*

*என்னை திடப்படுத்திக்கொள்கிறேன். பிறந்த நாள் முடியட்டும். நாளை மறுநாள் போலீஸ் கமிஷனரை நேரில் பார்க்கப் போகிறேன். அதற்கான அப்பாயின்ட்மென்ட்டை இன்றைக்கே வாங்குவதற்கு ஏற்பாடு செய்வேன்.*

*போலீஸுக்குப் போயே ஆக வேண்டிய கட்டாயத்தை இப்போது போலா எனக்கு உருவாக்கி இருக்கிறான். பாத்ரூமில் நான் குளிக்கிற காட்சிதானே? வெளியிட்டால் பரவாயில்லை... அது என் பேரில் அனுதாபத்தை ஏற்படுத்துகிற அளவுக்கு உண்மைகளை நான் மீடியாக்களிடம் சொல்ல முடியும். ஏன், அதையும் சேர்த்தே முன்கூட்டி போலீஸ் கமிஷனரிடம் புகாராகப் பதிவு செய்துவிடுவேன்!*

www.t.me/tamilbooksworld

*உண்மை ஜெயித்தாக வேண்டும்!*

*மார்ச் 17*

*வாழ்த்துகள்... வாழ்த்துகள்... வாழ்த்துகள்..! எஃப்.எம். ரேடியோக்களிலும், டி.வி. சேனல்களிலும் அவர்களாகவே கொண்டாடிக்கொள்கிறார்கள். நான் நடித்த படத்தின் பாடல்கள், காட்சிகள் என்று மாறி மாறி ஒலி/ஒளி பரப்புகிறார்கள்.*

*செல்போனும், லேண்ட் லைனும் சூடேறிக் கொதிக்கின்றன. போன்களை எடுத்து என்னிடம் கொடுப்பதிலேயே செக்ரெட்டரி ரோஸி சோர்ந்து துவண்டுவிட்டாள். மொத்தம் முப்பதாயிரம் பிறந்த நாள் வாழ்த்துக் கடிதங்கள் ரசிகர்களிடம் இருந்து வந்திருப்பதாக எண்ணிப்*

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

பார்த்துவிட்டுச் சொன்னாள். அது கின்னஸுக்குப் போகக்கூடிய ரெகார்டு என்றாள்.

இந்த உலகம் மொத்தமும் என் பக்கம் இருப்பதாகத் தோன்றியது. இவர்களுக்கு முன்னால் போலா ஒரு தூசு!

மாலை நாளிதழ்களில் என் பிறந்த நாள் கொண்டாட்டச் செய்தியோடு சேர்த்து, மறுநாள் மாலை போலீஸ் கமிஷனரைப் பார்ப்பதற்கு நான் அப்பாயின்ட்மென்ட் கேட்ட செய்தியும் எப்படியோ லீக் ஆகியிருந்தது.

மார்ச் 18

சற்று தாமதமாக எழுந்து, குளித்து முடித்துவிட்டு மதியச் சாப்பாட்டுக்கு ரெடியானபோது, ரோஸி ஒரு பெரிய கவரைக் கையில் வைத்திருந்தாள். கூரியரில் அப்போதுதான் வந்ததாம். 'படு அந்தரங்கம்' என்று கவர் மீது போட்டிருந்ததால், பிரிக்காமல் வைத்திருந்தாள்.

www.t.me/tamilbooksworld

வாங்கிக்கொண்டு போய் படுக்கை அறையில் பிரித்தேன். டி.வி.டி! கூடவே துண்டுச் சீட்டு. ''வாழ்த்துகள்! போலீஸுக்குப் போக ரெடியாகி விட்டீர்கள்போல. அதற்குமுன், டி.வி.டி-யைப் பார்த்துவிட்டால், புகாரில் என்ன எழுதலாம் என்பதற்கு ஒரு ஐடியா கிடைக்கும்' என்றது சீட்டு. அதே சாய்வாட்டு எழுத்துகள். கோழை போலா, தன்னை மறைத்துக்கொள்வதற்காக கையெழுத்தை மாற்றி முயன்றிருந்தான்.

டி.வி.டி-யை ஓட விட்டேன். திரை ஒளிர ஆரம்பித்த முதல் நொடியிலேயே என் முதுகுத் தண்டில் யாரோ எலெக்ட்ரிக் ஒயரைச் சுற்றி ஹைவோல்ட் கரன்ட் அவிழ்த்துவிட்ட மாதிரி இருந்தது. கேமராவுக்கு நேராக முகத்தைக் காட்டியபடி முனகலோடு படுக்கையில் நெளிந்துகொண்டிருந்தது... நான் அல்ல... ராம் துலாரி! அவள் மீது பரவியிருந்த பருத்த தேகத்துக்காரன் தன் முகத்தைக் காட்டவில்லை.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

ஆனால், அவன் தலையின் பின்புறமும், கைகளில் முழுக்க அடர்ந்திருந்த புசுபுசு ரோமமும் எனக்கு அடையாளம் தெரிந்தது... போலாவேதான்!

மிகச் சில நிமிடங்களே ஓடி முடிந்தது டி.வி.டி.!

போலா சொல்ல வரும் தகவல் எனக்குத் தெளிவாகப் புரிந்தது. திரையில் இருப்பது நான் என்று சொல்லி அதை இன்டர்நெட்டில் போடுவான். பத்திரிகைகளுக்கு மொட்டைக் கடுதாசி வைத்து டி.வி.டி-யை அனுப்புவான். எத்தனை பத்திரிகைகள் அல்லது தொலைக்காட்சி சேனல்கள் வந்து என்னிடம் விளக்கம் கேட்டுவிட்டு அப்புறம் அதை வெளியிடும்?

இந்தியத் திருநாட்டுக்கு அடுத்த நாலைந்து மாதங்களுக்கான தொடர் தலைப்புச் செய்தி அல்லவா இது! டி.வி.டி-யில் இருப்பது நான் அல்ல... அது என்னைத் தேடி அடைக்கலம் வந்த வேறு பெண் என்று நான் சொன்னாலும், ராம் துலாரி எனக்கு எழுதிய கடிதத்தை நான் தேடிப் பிடித்துக் கொடுத்தாலும், என்னையும் போலாவையும் தவிர அவளை இந்த வீட்டுக்குள் பார்த்திருக்கும் ரோஸி மற்றும் சைனீஸ் ஹேர் டிரஸ்ஸர் ஆகியோர் இதுபற்றி பேச முன்வந்தாலும்... மீடியாக்கள் அதற்கெல்லாம் என்ன முக்கியத்துவம் தரும்?

அன்று இரவு தூங்கப் போனபோது, நான் பிறந்து வளர்ந்த கிராமமும், கட்டாந்தரையில் படுத்து நிம்மதியாகத் தூங்கிய நாட்களும் நினைவுக்கு வந்தன. ஏழையான அப்பாவும் அம்மாவும் நிழலாடினார்கள். கொடுத்ததைத் தின்று, கிடைப்பதை உடுத்திக்கொண்டு வாழ்கிற பாவப்பட்ட என் தங்கையின் உருவம் நினைவுக்கு வந்தபோது, துக்கம் தொண்டையை அடைத்தது.

வறுமையோடுகூட வாழ்ந்திருக்கலாம்... இப்படி ஒரு துரோக வட்டத்துக்குள் சிக்கிவிட்டேனே... அடுத்து நான் என்ன செய்யப்போகிறேன்?

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*ராம் துலாரி... உன்னை என் சொந்தத் தங்கைபோல நம்பினேனே... நீயுமா இந்த பனாதிப் பயலுடன் சேர்ந்துகொண்டாய்?*

- தொடர்ந்து சந்தேகிப்போம்...

Copyright © Vikas Swarup 2008

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

மோட்டிவ் 6

நடிகை ஷப்னம் சக்ஸேனாவின் டைரியைப் படித்துக்கொண்டு இருக்கிறீர்கள்...

மார்ச் 20

தெய்வம் சில சமயங்களில் கெட்டது செய்வதுபோலத் தொடங்கி எல்லா இன்பங்களையும் அள்ளிக் கொடுக்கும். சில சமயங்களில் தங்கப் பாதையைக் காட்டுவதுபோல கூட்டிச் சென்று பாழுங் கிணற்றுக்குள் தள்ளிவிடும்.

www.t.me/tamilbooksworld

மும்பைக்கு வந்து நான் நடிகை ஆன பிறகு, இத்தனை காலத்தில் முதன் முதலாக அந்தக் குரலைக் கேட்கிறேன். வெகு நேரம் அடித்துக்கொண்டு இருந்த போனை திக்திக் இதயத்துடன் எடுத்தேன். அபார்ட்மென்ட்டின் டெலிபோன் ஆபரேட்டர், ''உங்களுக்கு ரொம்ப ரொம்ப வேண்டியவங்கனு சொல்றாங்க மேடம்... ரொம்ப அழுறாங்க'' என்றபடி லைனைக் கொடுத்தான். ஆமாம், லைன் கிடைத்ததுமே எதிர்முனை பெரிசாகக் கதறியது. அது என் தாயின் குரலேதான்!

''மகளே... எங்களை எல்லாம் நினைப்பிருக்காம்மா? நான் இப்போ ஒரு பப்ளிக் பூத்ல இருந்து உனக்குப் பேசுறேம்மா... நம்ம குடும்பத்துக்கு இப்படியா ஒரு கதி வரணும்? யாரோ ஒரு புண்ணியவான் உன் போன் நம்பரைக் கொடுத்தது, தெய்வத்தோட கருணையம்மா...''

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

''அம்மா... பதற்றப்படாதீங்க... என்னன்னு சொல்லுங்கம்மா!'' என்று நானும் தவித்தேன்.

''நீ ரொம்ப ரொம்பப் பெரிய மனுஷியா பட்டணத்துல இருக்கேன்னு எல்லோரும் சொல்றாங்கம்மா. ஊரைவிட்டுப் போன உன்னை நாங்க தேடி வரலைன்னு கோவிச்சுக்காதேம்மா. தயவு பண்ணி உடனே நீ ஊருக்குக் கிளம்பி வாம்மா!'' என்று அரற்றினாள் அம்மா.

''என்னம்மா ஆச்சு..?'' என்றபோது,

''உங்க அப்பா ரொம்ப மோசமான நிலைமையில சர்க்கார் ஆஸ்பத்திரியில் இருக்காரும்மா... அதுவும் தவிர நடந்ததை எல்லாம் நான் விவரமா சொல்ல முடியாதம்மா... நீ நேரில் ஒரே ஒரு தடவை வந்து போறியா, மகளே?''

''நீ அழ வேண்டாம்மா... நான் நாளைக்கே அங்கே இருப்பேன்!''

கண்களைத் துடைத்துக்கொண்டேன். போலா எனக்கு இழைத்த துரோகத்தின் துக்கங்களை மறந்து, சொந்த மண்ணுக்குப் பறக்க ஏற்பாடு செய்தேன்.

மார்ச் 21

மும்பையில் இருந்து வாரணாசிக்கு விமானப் பயணம். அங்கிருந்து 90 கிலோமீட்டர் டாக்ஸி பயணத்தில் வந்தது என் சொந்த கிராமமான அஸம்கர். புர்க்கா போட்டுக்கொண்டு, உடம்பு முழுக்க

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

மறைத்துக்கொண்டு, இப்படி ஒரு கிராமத்தில் கனவுக் கன்னி தன்னந்தனியே வந்து இறங்குவாள் என்ற நினைப்பு யாருக்குத்தான் இருக்கும்? என் குரல்கூட காட்டிக்கொடுக்கும் என்பதால் டாக்ஸி டிரைவரிடமும் நான் அதிகம் பேசவில்லை.

இந்த மூன்று வருடங்களில் லக்னோ ஏகத்துக்கும் மாறி இருந்தது. ஆனால், அஸம்கர் பெரிசாக மாறிவிடவில்லை. அதே ஓட்டை உடைசல் ரோடுகள், ஆட்டுமந்தை மாதிரி அரசாங்க லொடலொடா பஸ்களில் தொங்கிக்கொண்டு வியர்வை பொங்கும் முகத்தோடு ஜனங்கள், ரோட்டோரத்தில் இருந்து நடுவீதிக்குக் கரை புரண்டு வரும் நாற்றச் சாக்கடைகள், பிளாஸ்டிக் போர்டுகளில் பிரமாண்டமாகச் சிரிக்கும் வஞ்சக அரசியல்வாதிகளின் முகங்கள், கன்னம் சுருங்கி, கண்கள் குழி விழுந்து... பிளாட்பார ஓரத்தில் அமர்ந்து ஹூக்கா புகைக்கும் பெரிசுகள்!

இடிந்து விழுகிற நிலையில் இருந்த என் வீட்டைக் கண்டுபிடிப்பது எனக்கு சிரமமாக இல்லை. டாக்ஸியைவிட்டு இறங்கி வீட்டுக்குள் நுழைந்து, புர்க்காவை விலக்கி முகத்தைக் காட்டிய என்னை கண்களைச் சுருக்கிப் பார்த்தாள் அம்மா. அவளால் நம்பவே முடியவில்லை, நான் வந்துவிட்டேன் என்பதை!

ஓடி வந்து என்னை அணைத்துக்கொண்டவள் குலுங்கிக் குலுங்கி கதறத் துவங்கிவிட்டாள். என்னை அவசரமாக அழைத்த காரணத்தை அவள் சொன்னபோது, என் தேகமே தீயில் மூழ்கிய மாதிரி இருந்தது.

ஸப்னா... கள்ளமில்லாத மலரான என் தங்கை காலேஜுக்குப் போய்விட்டுத் திரும்பிக்கொண்டு இருந்தாள் இரண்டு நாட்களுக்கு முன். ரவுடிக் கும்பல் சரமாரியாக வட்டமிடும் சராய் மீர் என்ற ஏரியாவுக்கு அவளைக் கடத்திக்கொண்டு போயிருக்கிறான் ஒரு தாதா. தன் மறைவிடத்துக்கு அவளைத் தூக்கிப் போயிருக்கிறான். அங்கே வைத்து ஸப்னாவை சூறையாடப் பார்த்திருக்கிறான். கைக்கெட்டும் தூரத்தில் இருந்த அவனுடைய துப்பாக்கியை எடுத்து சுட்டுத் தள்ளியிருக்கிறாள்

www.t.me/tamilbooksworld
www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

என் தங்கை, தற்காப்புக்காக. நடு நெற்றியிலும் மார்பிலுமாக குண்டு பாய்ந்து, அங்கேயே விழுந்து அந்த தாதா துடித்துக்கொண்டு இருக்க... இவள் அங்கே இருந்து தப்பி ஓடி வந்துவிட்டாள்.

இவளை அவன் கடத்திச் சென்றதையோ, இவள் அங்கே இருந்து தப்பி ஓடி வந்ததையோ யாரும் இது வரை கவனித்தார்களா என்று தெரியவில்லை. போலீஸ் இது வரை ஸப்னாவைத் தேடி வரவில்லை!

இதுதான் அம்மா என்னை அவசரமாக அஸம் கருக்கு அழைத்த காரணம். பத்திரமாக ஸப்னா திரும்பி வந்துவிட்டாலும், பயங்கர தாதா ஒருவனை சுட்டுவிட்டுத் தப்பினாள் என்பதைக் கேட்டு, என் அப்பாவுக்கு ஹார்ட் அட்டாக் வந்துவிட்டது. இப்போது அவர் ஆஸ்பத்திரியில் உயிருக்கு மன்றாடிக்கொண்டு இருக்கிறார். உடனடியாக ஆபரே ஷன் செய்ய வேண்டும் என்று மருத்துவர்கள் சொன்னாலும், அரசாங்க ஆஸ்பத்திரியில் அதற்கு வழி இல்லை. தனியார் மருத்துவமனையில் சில லட்சங்களைக் கேட்கிறார்கள்!

www.t.me/tamilbooksworld

எப்படி இருக்கும் எனக்கு என்று நினைத்துப் பாருங்கள். கோடிகளை வங்கிக் கணக்கில் வைத்துக்கொண்டு, தங்கத்தையே பாலில் கரைத்துக் குடிக்கிற வசதியுடன் நேற்று வரை வாழ்ந்துகொண்டு இருந்த என்னிடம், என் அப்பாவின் உயிரைக் காப்பாற்றுவதற்கு சில லட்சங்கள் கையில் இல்லாத நிலை!

''ஸப்னா எங்கேம்மா?'' என்றேன் சுற்றுமுற்றும் பார்த்து.

''அவள் வீட்டின் பின்கட்டில் தட்டுமுட்டுச் சாமான்களுக்கு நடுவே ஒடுங்கிப் படுத்துக்கிடக்கிறாள். அதிர்ச்சி, பயம் எல்லாம் சேர்த்து அவளை முடக்கிப் போட்டுவிட்டது. தொண்டைக்குள் பச்சைத் தண்ணீர் இறங்கியே இரண்டு நாளாகிறது!'' என்று கண்ணீர் உகுத்தாள் அம்மா.

அந்த அறைக்குள் போய் தங்கையை தட்டி எழுப்பினேன். ஜன்னல் வழியே லேசாகக் கசிந்த வெளிச்சத்தில் என் புர்க்காவைத் உயர்த்தி

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

முகத்தைக் காட்டினேன். கண்களைக் கசக்கிக்கொண்டு சில நொடிகள் மலங்க மலங்க முழித்தவள், ''அக்கா..'' என்ற அலறலுடன் இறுக்கமாக என்னைக் கட்டிக்கொண்டாள். அவள் தேகம் வெகு நேரம் குலுங்கிக்கொண்டே இருந்தது. அவள் கண்களைத் துடைத்தேன். எனக்குள் திட்டம் உருவாகி இருந்தது. ஆஸ்பத்திரியில் அப்பாவைப் பார்த்தேன். முன்புக்கு இப்போது தேகம் ரொம்பச் சுருங்கி இருந்தது. பக்கத்திலேயே இருந்தது என் அக்கா சரிதா. வாழாவெட்டியாகப் பிறந்த வீட்டுக்குத் திரும்பியவள். அவளுக்குப் பிறந்த மூன்று பிள்ளைகளும் ரொம்ப அராத்தாக, அவள் சொல் பேச்சு கேட்காத காட்டு மரங்களாகத் திரிந்தார்கள். விரக்தி மேல் விரக்திகொண்டு அவள் முகம் நிரந்தரமாக இறுகிப்போய் இருந்தது. ஆனால், இத்தனை காலத்துக்குப் பிறகு... மிக மிகப் புகழ்பெற்ற ஒரு நடிகையாகத் தன் தங்கையை அருகில் பார்த்தபோது சரிதாவின் கண்களுக்கு சின்ன ஒளி வந்தது. ஓடி வந்து என்னை மிருதுவாக அணைத்துக்கொண்டாள். குடும்பத்துக்குள் அடிக்கிற புயலை, தன் கோடீஸ்வரத் தங்கை எப்படியாவது தணித்துவிடுவாள் என்ற நம்பிக்கை அந்த அணைப்பில் எனக்குத் தெரிந்தது.

www.t.me/tamilbooksworld

ஆஸ்பத்திரிக்கு வெளியே ஸப்னாவோடு சேர்ந்து வந்தேன். அவளுக்கும் என்னை மாதிரியே புர்க்கா போட்டு இருந்தேன். ''நாம் இருவரும் இப்போது சராய் மீர் போகிறோம். அந்த ரவுடியைச் சுட்ட இடத்தை எனக்குக் காட்டு!'' என்று கட்டளை இட்டேன். நான் அருகில் இருக்கும் தைரியத்தில் மெதுவாகப் பயம் விலகிய அவள், இப்போது மறுபடி திகிலைக் கண்களில் சுமந்துகொண்டாள்.

''வேணாம் தீதி... அது மிக மோசமான இடம்...''

''எல்லாம் எனக்குத் தெரியும். இப்போது நாம் அங்கே போகிறோம்.''

சினிமாக்களில் துணிச்சலான ஹீரோயினி சாகசங்கள் செய்வதைப் பார்த்திருப்பீர்கள். நான்கூட அப்படி ஓரிரண்டு படங்களில் சில சாகசக்

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

காட்சிகளில் நடித்தவள்தான். ஆனால், நிஜத்தில் நான் அத்தனை தைரியசாலி என்று சொல்ல முடியாது. இருந்தாலும், இத்தனை வருடக் காலத்து சொகுசு வாழ்க்கையும், எத்தனையோ விதமான மனிதர்களைச் சந்தித்துவிட்ட அனுபவங்களும் கொடுத்த தைரியத்தில் சராய் மீர் ஏரியாவுக்குள் ஸப்னாவுடன் நுழைந்தேன். கெட்டியாக என் கையைப் பிடித்துக்கொண்டே ஆட்டோவில் இருந்து இறங்கினாள் தங்கை. மார்க்கெட் ஏரியா வழியாக சற்று தூரம் நடந்து போக வேண்டும். தூரத்து மசூதியில் மதியத் தொழுகைக்காக அழைப்பு ஒலிபெருக்கி வழியே காற்றில் வந்துகொண்டு இருந்தது. சின்னச் சின்னதாக இருந்த உணவுக் கடைகளுக்குள் இருந்து இறைச்சி வேகும் மணமும் காற்றில் மிதந்தது.

சிறியதொரு சந்துக்குள் என்னை அழைத்துச் சென்றாள் ஸப்னா. ரெண்டு ஆள் உயரத்துக்கு சுவர் கட்டியிருந்த ஒரு பழங்காலத்து வீடு ஒன்றின் முன் நிறுத்தினாள். கதவில் கை வைத்ததும் அது திறந்துகொண்டது. உள்ளே பெரிய கட்டாந்தரை தெரிந்தது. நடுவே சிறிய கட்டடம் இருந்தது. வளர்ந்தும் வளராமலுமாக வாடிக்கிடந்த ஒரு கொய்யா மரத்தைத் தாண்டிப் போய், அந்தக் கட்டடத்தின் கதவில் கையை வைத்தேன். அதுவும் திறந்தேதான் கிடந்தது.கொத்தாக ஈக்கள் வெளியே பறந்து போயின. கொடுமையான ஒரு துர்நாற்றம் முகத்தில் அறைந்தது. ரெண்டு பேர் படுக்கிற மாதிரி ஒரு கட்டில்... ஒரு மண் பானை - மூடிகூட இல்லாமல்... ஓட்டை மேஜை ஒன்று... அதன் மேல் திறந்தேகிடந்த டிரிப்பிள் எக்ஸ் ரம் பாட்டில் ஒன்று... காலண்டர், போட்டோ எதுவும் இல்லாமல் கறை படிந்த சுவர்கள் காலியாகவே இருந்தன.தரையில் வெள்ளை பைஜாமா குர்த்தாவில் கவிழ்ந்துகிடந்தான் அவன். நல்ல உயரமாக, மிகுந்த தாட்டியாக இருந்தான். ரொம்பச் செத்திருந்தான்.

www.t.me/tamilbooksworld

- தொடர்ந்து சந்தேகிப்போம்...

Copyright © Vikas Swarup 2008

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

## மோட்டிவ் 6

## எதையும் தாங்குவேன்... தங்கைக்காக!

வாசகர்களே... நடிகை ஷப்னம் சக்ஸேனாவின் டைரியைத் தொடர்ந்து படித்துக்கொண்டு இருக்கிறீர்கள்...

### மார்ச் 21

தரையில் வெள்ளை பைஜாமா குர்த்தாவில் கவிழ்ந்து செத்துக்கிடந்தவனுக்கு சற்று தூரத்தில் அந்த கறுப்பு ரிவால்வர் தரையில்கிடந்தது. மூக்கை அழுந்தப் பொத்திக்கொண்டு அந்த உடலைத் தாண்டினேன். ரிவால்வரைக் கையில் எடுத்தேன். நினைத்ததைவிட வெயிட் குறைவாகவே இருந்தது.

me/tamilbooksworld

"இந்தத் துப்பாக்கியால்தான் சுட்டாயா?" என்றேன் ஸப்னாவிடம். அவள் ஆமோதித்தாள் விரிந்து திகைத்த விழிகளுடன்.

"அவன் என்னைக் கெடுக்க முயன்றபோது என்ன சொன்னான் தெரியுமா அக்கா... 'உன் அக்காதானே ஊரைவிட்டு ஓடிப் போய் இன்று நாடறிந்த நடிகையாக இருப்பவள்? ஷப்னம் சக்ஸேனாவை அத்தனை சுலபத்தில் அடைய முடியாது என்று எனக்குத் தெரியும். அவளைவிட இளசான அவள் தங்கையை அனுபவிப்பது அதைவிட தனி சுகம்தானே?' என்று சொன்னான்."

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*இதைச் சொல்லும்போது, ஸப்னாவின் முகத்தில் இருந்த திகில் தற்காலிகமாக நீங்கி... ஒருவித வெறியும் வைராக்கியமும் தெரிந்தது. எனக்கோ ரத்தம் கொதித்தது. என் தங்கை என்ற ஒரே காரணத்துக்காகத்தான் இந்த வக்கிர மிருகம் ஸப்னாவைக் கடத்தி வந்திருக்கிறது. அந்த வகையிலும் என் குடும்பத்துக்கு என்னால்தான் துன்பமா?*

*''வா, உடம்பைத் திருப்புவோம். அவன் முகத்தை நான் பார்க்கணும்!'' என்றேன்.*

*''ஐயோ, வேண்டாம்'' என்று விழிகளை மூடிக்கொண்டாள் அவள்.*

*''கொஞ்சம் ஹெல்ப் பண்ணு...'' என்றபடி, மலை மாதிரிகிடந்த அந்த உடம்பைப் புரட்டிப் போட்டேன். உதவினாள்.*

tamilbooksworld

*செத்து ரெண்டு நாள் ஆகிவிட்டதால், கான்க்ரீட் பாளம் மாதிரி உடம்பு இறுகிப் போயிருந்தது. வயிறு ஹீலியம் பலூன் கணக்காக வீங்கிக்கிடந்தது. கரும்பச்சையும் நீலமும் கலந்த நிறத்துக்கு தோல் மாறிப் போயிருந்தது. புரட்டிப் போட்ட அதிர்வில்... அவனுடைய வாய், மூக்கு, காதுகளில் இருந்து கொழகொழவென்று திரவம் கசிந்தது.*

*சின்ன வயதில் ஏற்பட்ட அம்மையின் வடுக்கள் அழுத்தமாக இருந்தது அந்தப் பெரிய முகத்தில்.*

*அந்த அறையை... அதன் சூழலை... கலைந்துகிடந்த விதத்தை நன்றாகப்*

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

பார்த்துக்கொண்டேன். என் உடையின் நுனியால் பிடித்து, அங்கிருந்த அலமாரிகள் ஒவ்வொன்றாகத் திறந்து பார்த்தேன். எல்லாமே காலியாகத்தான் இருந்தன. ஒரே ஒரு அலமாரிக்குள் கறுப்பு நிற கான்வாஸ் பை ஒன்று இருந்தது. கை ரேகை படாதபடி பத்திரமாக வெளியே எடுத்தேன். ஜிப்பைப் பிரித்தேன். புத்தம் புதிய நூறு ரூபாய் நோட்டுக் கட்டுகள் அடுக்கியிருந்தது உள்ளே.

பணக்கட்டுகள் நான் பார்க்காததா? ''ஏழிலிருந்து எட்டு லட்சம் வரைக்கும் இருக் கும்...'' என்று வேகமாக ஒரு கணக்கை முணுமுணுத்தேன்.

''இந்த பொறுக்கிப் பயல் யார் என்று தெரிந்தாக வேண்டுமே?'' என்றபடி, அவன் பைஜாமா குர்த்தா பாக்கெட்டுகளைத் துழாவினேன். ஒரு தோல் பர்ஸ் இருந்தது. நோக்கியா போன் ஒன்று இருந்தது. சார்ஜ் போய் அதுவும் அப்போதைக்குச் செத்திருந்தது. பர்ஸுக்குள் மூவாயிரத்துச் சொச்சம் பணம் இருந்தது.

www.t.me/tamilbooksworld

''ஸப்னா இங்கே நீ எதையும்

தொடாதே...'' என்று கட்டளையிட்டேன். அடுத்து அரை மணி நேரம் எனக்குத் தேவைப்பட்டது. கிட்டத்தட்ட எல்லா கைரேகைகளையும் அழித்து முடித்துவிட்டேன். துப்பாக்கியையும் துடைத்தேன். கேன்வாஸ் பைக்குள் போட்டேன். பர்ஸையும் செல்போனையும் கூடத்தான்!

''வா புறப்படலாம்...'' என்றபோது ஸப்னா என் கையை உதறினாள்.

''தீதி... இந்தப் பணத்தை நீங்க திருடிக்கிட்டுப் போறீங்களா?'' என்று ஏதோ சொல்ல வந்தாள்.

''நியாய தர்மங்கள் பற்றி எனக்குத் தெரியும். பேசாமல் என்கூட வா!'' என்று அவளை தரதரவென்று இழுத்துக்கொண்டு வெளியே வந்தேன்.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*வேகமாக எதிரில் வந்த ஆட்டோவை நிறுத்தி, ''சவாரி வர்றியாப்பா?'' என்றபோதுதான், எத்தனை பெரிய தவறைச் செய்துவிட்டேன் என்று தாமதமாக உணர்ந்தேன். ஆட்டோக்காரனிடம் பேசுவதற்காக என் புர்க்காவை நான் உயர்த்தியிருந்தேன்.*

*''நீ... நீங்க.. ஷப்னம் சக்ஸேனாதானே?'' என்று தன் பருத்த விரல்களை நீட்டி, பிரமிப்பாகக் கேட்டான் ஆட்டோக்காரன். அருகில் நடந்து போய்க்கொண்டு இருந்த இன்னொரு ஆள் திரும்பிப் பார்த்தான். அவன் கண்களும் அகண்டன. ''ஆமா, இது ஷப்னம் சக்ஸேனாவேதான்!'' என்று கூக்குரலிட்டான்.*

*ஆட்டோ டிரைவரின் வாயை அழுந்தப் பொத்திவிட்டு, உள்ளே தாவி ஏறிக்கொண்டேன். ஸப்னாவையும் இழுத்துக்கொண்டேன். ''எவ்வளவு பணம் வேணும்னாலும் தர்றேன். முதல்ல இங்கே இருந்து வண்டியை எடு!'' என்றேன் அதட்டலாக. ஜேம்ஸ்பாண்ட் படங்களில் வருகிற கார் கணக்காக சீறிக்கொண்டு துள்ளியது ஆட்டோ. நாடே வாய் பிளக்கும் ஹீரோயின் முன்பு சில நிமிஷமாவது ஹீரோயிஸம் காட்டுகிற ஆசை அவனுக்கும் இருக்காதா? சிட்டாகப் பாய்ந்து கூட்டத்தைப் பிளந்து பறந்தது ஆட்டோ.*

*சாயங்காலம் வீட்டில் உட்கார்ந்து எண்ணிப் பார்த்தபோது, பத்து லட்சத்துக்குக் கிட்டே இருந்தது பைக்குள். அம்மாவிடம் கொடுத்தேன். ''அப்பாவோட ஆபரேஷனுக்கு உடனே ஏற்பாடு பண்ணு!''*

*குழந்தைப் பருவத்தில் படுத்திருந்த அதே தரையில், ஸப்னாவுடன் சேர்ந்து படுத்தேன். என் மேல் காலைப் போட்டுக்கொண்டு கெட்டியாகக் கட்டிக்கொண்டாள் அவள். சற்று நேரத்தில் நான் தூங்கிப்போனேன். நள்ளிரவில் தூக்கம் கலைந்து விழித்தபோது ஸப்னா என் பக்கத்தில் இல்லை. அனுபவம் ஏதோ சொல்ல... அவசரமாக எழுந்து தேடினேன். பாத்ரூமுக்குள் விளக்கு எரிந்தது. தாளிடப்படாமல் வெளிச்சம் கசிந்தது. ஓடிப்போய்த் திறந்தேன். சரியான நேரம்!*

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*அப்பாவின் ஷேவிங் பிளேடை எடுத்து, தன் மணிக்கட்டில் நரம்பைத் துண்டிக்கத் துவங்கி இருந்தாள் என் தங்கை. ஓங்கி ஓர் அறைவிட்டு, அவளை இழுத்து வந்து என்னோடு அணைத்துக்கொண்டு படுத்தேன். கம்பளியை இருவருக்குமாக சேர்த்து இழுத்துப் போர்த்திக்கொண்டபோது, தங்கையின் இதயத் துடிப்பை 'தக்தக்'கென்று என்னால் நன்றாக உணர முடிந்தது. அந்த கணம் நான் முடிவெடுத்தேன்... என்ன வந்தாலும் சரி... என் தங்கையை நான் காப்பாற்றுவேன். யோசித்து யோசித்து மெதுவாக தூக்கம் என்னைத் தழுவியபோது, டி.வி. நிருபர் பர்க்கா தாஸின் குரல் திடீரென்று எனக்குள் ஒலித்தது.*

*''இந்த தேசத்தில் துன்பம் எல்லாம் ஏழைக்குத்தான். நூறு ரூபாய் லஞ்சம் வாங்கிய சர்க்கார் பியூனைக் கைது செய்வார்கள். கோடிகளில் குளிக்கும் அமைச்சரோ சட்டத்தை ஏமாற்றிவிட்டு சுலபமாக வெளியில் வருவார். பணம் இருந்தால், சட்டத்துக்குப் பயப்பட வேண்டாம் என்பதுதான் நம் நாட்டின் சாபக்கேடு!''*

www.t.me/tamilbooksworld

*பர்க்கா தாஸ் எப்போது, எதற்காக இதைச் சொன்னாள் என்று யோசித்தேன்.*

*உத்தரப் பிரதேசத்தின் உள்துறை அமைச்சர், முரட்டுத் திலகம், குறுக்கு வழி குள்ளநரி ஜெகன்னாத் ராயின் மகன்... ரூபி கில் கொலை வழக்கில் அலுங்காமல் குலுங்காமல் நிரபராதியாக விடுதலை ஆனவன்... விவேக் விக்ராய்! அவன் மீதான விடுதலைத் தீர்ப்பு வந்தபோதுதான் பர்க்கா தாஸ் இதைச் சொன்னாள்.*

*போர்வையை விலக்கிப் போட்டுவிட்டு, சட்டென்று எழுந்து உட்கார்ந்தேன்.*

*ஒரே ஒரு கொலை... அதுவும் தற்காப்புக்காக! கொல்லப்பட்டவன் ஊர் பேர் தெரியாத ஒரு ரவுடி. அதுவும், விவேக் விக்ராயின்*

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

அப்பாவுடைய பொறுப்பில் இருக்கும் உத்தரப் பிரதேசத்தில் நடந்த சம்பவம். இதில் இருந்து என் தங்கையை மீட்டுக்கொள்வது ஒரு பெரிய காரியமா?

மார்ச் 22

ரெண்டு ரிங் போனதுமே விவேக் விக்ராய் போனை எடுத்துவிட்டான்.

''ஏய் ஷப்னம்... நிஜமாவே நீதானா என்னை அழைப்பது?'' என்று சந்தோஷத்தில் வீறிட்டான்.

''விக்கி... உன்னிடம் எனக்கு ஒரு உதவி வேண்டும்!''

''உனக்கு இல்லாமலா? ஆனால், விக்கி ஏற்கெனவே உன்னிடம் ஒரு உதவி கேட்டான்...'' - என்று கடகடவென்று சிரித்தான் அந்த ராட்சஸன்.

''நினைவில் இருக்கிறது, இப்போது நீ எனக்கு முதலில் உதவு!''

www.t.me/tamilbooksworld

''சொல்லு... தேசியத் திரைப்பட விருது இந்த வருடம் உனக்கு வேண்டுமா?''

''அதெல்லாம் வேண்டாம்... இது வேறு மாதிரி உதவி! நேரில்தான் அதை விளக்கமாகச் சொல்ல முடியும்!''

மறுபடி சிரித்தான் விவேக் விக்ராய்.

''ரொம்பதான் பில்ட்-அப் கொடுக்கிறாயே... நீ என்ன இப்போது கொலையா பண்ணிவிட்டாய்?''

நான் அமைதி காத்ததைப் பார்த்து என்ன நினைத்தானோ... ''ஓகே... நேரிலேயே சந்திப்போம். நான்தான் அதற்காக உன்னிடம் வெகுநாளாக அப்பாயின்ட்மென்ட் கேட்கிறேன்!'' என்று நிறுத்தியவன்,

''இன்றைக்கு நான் உ.பி-யிலோ, டெல்லியிலோ இல்லை... வேறு ஒரு வேலையாக வெகுதூரம் வந்திருக்கிறேன். நாளை இரவு நீ டெல்லி

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

மெஹ்ரூலியில் இருக்கிற என் பண்ணை வீட்டுக்கு வர முடியுமா?'' என்றான்.

''நாளைக்கு இரவா?''

''ம்! ஒரு பெரிய பார்ட்டி கொடுக்கிறேன் நான். முக்கியமான பல மனிதர்கள் வருகிறார்கள். அங்கே நீ வந்து சிறப்பித்தால், என் பெருமை இன்னும் மேலோங்கும். கனவு தேவதையின் வருகை அந்த பார்ட்டியை சிறப்பிக்கும். பார்ட்டிக்கு நடுவிலேயே நாம் தனியாகப் பேசிக்கொள்ளலாம். நீ கேட்கிற உதவியை நான் செய்துகொடுத்துவிட்டால், நான் விரும்பியபடி அடுத்த சந்திப்பு இருக்குமல்லவா?''

- காம வெறிக்கு அழகாக கலர் தடவி, படுஜென்டி லாகக் கேட்டுச் சிரித்தான் அமைச்சர் மகன்.

www.t.me/tamilbooksworld

''ம்!'' என்றேன் பலவீனமாக!

என்னைப் படுக்கையில் சந்திக்க நினைத்தவனை இத்தனை நாளும் உறுதியாகத் தவிர்த்துவிட்டேன். இப்போது, என் தங்கைக்காக என்னைத் தந்துதான் ஆகவேண்டும்.

பகடை வேகமாக உருள ஆரம்பித்துவிட்டது. இருந்தாலும் விவேக் விக்ராயை முழுசாக நம்பிவிடவும் நான் தயாராக இல்லை. அமைச்சரின் மகன், கோடீஸ்வரத் தொழிலதிபர் ஆகிய முகமூடிகளைப் போர்த்தியிருந்தாலும்... அவனும்கூட ஈவு இரக்கம் இல்லாத ஒரு கொலைகாரன்தானே!

தாதாவின் வீட்டில் இருந்து நான் கொண்டுவந்த ரிவால்வரை எடுத்துப் பார்த்துக்கொண்டேன். உள்ளே எத்தனை குண்டுகள் என்று எண்ணிவைத்துக் கொண்டேன். சினிமா காட்சிகளில் டம்மி துப்பாக்கியில் சுட்டுத்தான் வழக்கம் என்றாலும்... நடிப்பு ரியலாக இருக்க வேண்டும்

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*என்பதற்காக நிஜத் துப்பாக்கியை வாங்கி வந்து, அதன் செயல்பாடுகள்பற்றி நான் தெரிந்து வைத்திருந்தேன்.*

*நாளை நான் டெல்லியில் இருப்பேன். விவேக் விக்ராயின் பண்ணை வீட்டில்... என்னோடு துணைக்கு வா துப்பாக்கியே!*

- தொடர்ந்து சந்தேகிப்போம்...

Copyright Ⓒ Vikas Swarup 2008

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

## மோட்டிவ் 6

### ஆவியே ஓடிப் போ!

வாசக நெஞ்சங்களே...

அருண் அத்வானி ஆகிய நான் எனக்குத் துப்பு கிடைக்கக் கிடைக்க... தொடர்ந்து எழுதி வரும் இந்தத் தொடர் கட்டுரையை கவனமாகப் படித்துக் கொண்டு இருப்பதற்கு நன்றி.

t.me/tamilbooksworld

ஊரை அடித்து உலையில் போடும் உத்தரப் பிரதேச உள்துறை மந்திரி ஜெகன்னாத் ராயின் மகன் விவேக் விக்கிராய் சுட்டுக் கொல்லப்பட்ட விவகாரம் தொடர்பாக ஆறு பேரை போலீஸ் சந்தேகிப்பதையும்... அதில் ஒருத்தராக விக்கிராயின் அப்பா ஜெகன்னாத் ராயேகூட இருப்பது பற்றியும் இதுவரைக்கும் உங்களுக்கு நான் எல்லா விவரங்களையும் துப்பறிந்து கொடுத்து இருக்கிறேன். இவை அத்தனையும் சத்தியம்... சத்தியம்... சத்தியம் தவிர வேறொன்றுமில்லை!

இந்த ஆறு பேரும் அந்தப் பண்ணை வீட்டு பார்ட்டிக்கு வந்து சேருவதற்கான காரணங்களையும் உங்களுக்குத் துல்லியமாக நான் விளக்கி இருக்கிறேன். ஆறு பேருமே ஏதோ ஒரு வகையில் துப்பாக்கி வைத்து இருந்ததையும், ஆதிவாசி எகேடி தவிர- விக்கிராயின் அப்பா உள்பட - மற்றவர்களுக்கு விவேக் விக்கி ராயைக் கொல்லக்கூடிய 'மோட்டிவ்' இருந்தது பற்றியும் நீங்கள் நினைவில் நிறுத்தியிருப்பீர்கள்.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*இதோ, கொலை தினம் மார்ச் 23-க்கு வந்துவிட்டோம். ரூபி கில் கொலை வழக்கில் 'நிரபராதி' என்று விடுதலை ஆனதற்காக, விவேக் விக்கிராய் பார்ட்டி கொடுக்கும் அவனுடைய பண்ணை வீட்டுக்குள் நாம் நுழைந்துவிட்டோம். இனி நடப்பதைப் பார்ப்போம்..!*

www.tamilbooksworld

*முன்னாள் தலைமைச் செயலாளர் மோகன்குமார் பண்ணை வீட்டுக்கு வந்து சேர்ந்து ஒரு மணி நேரம் ஆகியிருந்தது. பதற்றமாகக் கைக்கடிகாரத்தைப் பார்த்துக் கொண்டே இருந்தார். இடையிடையே பேன்ட் பாக்கெட்டுக்குள் கைவிட்டு, ஜில்லிப்பாக இருந்த கைத்துப்பாக்கியை உணர்ந்து கொண்டார்.*

*பண்ணை வீட்டுக்குள் அவர் நுழையும்போது, வாசலில் போலீஸ் நின்றிருந்ததைப் பார்த்துக் கொஞ்சம் கெதக் என்றாகிப் போனது.*

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

நல்லகாலமாக, பார்ட்டிக்கான பிரத்தியேக அழைப்பிதழ் வைத்திருந்தவர்களை அந்த போலீஸார் ஏதும் விசாரிக்கவில்லை. நுழைவிடத்தில் வைக்கப்பட்டிருந்த டோர் ஃபிரேம் மெட்டல் டிடெக்டர் வழியாக அவரைப் போகச் சொல்லவும் இல்லை.

விக்கி ராய் இவரைப் பார்த்ததும் ஏக நக்கலாகச் சிரித்தான். போர்டு மீட்டிங்கில் தனக்கெதிராக யூனியன் ஆசாமியைத் திருப்பி விட்டார் என்ற ஆத்திரம் மோகன்குமார் மீது பொங்கி வழிந்துகொண்டே இருந்தது விக்கிராய்க்கு. தன் செக்ரெட்டரி பண்ணிய குழப்பத்தால் அவருக்கும் ஓர் அழைப்பிதழ் போனதில் ஏக வருத்தம்தான். இருந்தாலும் அதை சாமர்த்தியமாக மறைத்துக்கொண்டு வரவேற்றான்.

''என்ன மிஸ்டர் மோகன்குமார்... அல்லது, உங்களை நான் காந்தி பாபா என்றுதான் கூப்பிட வேண்டுமா? தினத்துக்கு ஒரு ஸ்டண்ட் அடித்து உங்களை முதல் பக்க செய்தியிலேயே தக்க வைத்துக் கொள்கிறீர்களே... இந்த வயசில் அசாத்திய குயுக்திதான் உங்களுக்கு!'' என்றான் விக்கி.

மோகன்குமார் அந்த நேரம் மோகன்குமாராக இருந்தால்தானே... ரூபி கில் கொலை வழக்கில் தந்திரமாக விடுதலையாகிவிட்டு, அந்த அக்கிரமத்தைக் கொண்டாட ஒரு பார்ட்டியும் வைத்திருக்கும் விவேக் விக்கிராய்க்கு இனிமேல் வாழத் தகுதியில்லை என்று முடிவெடுத்துவிட்ட கலிகால மகாத்மாவாக அல்லவா அந்த பண்ணை வீட்டுக்குள் அவர் நுழைந்து இருந்தார்.

சட்டென்று துப்பாக்கியை எடுத்து அப்போதே, அங்கேயே அவன் கதையை முடித்துவிடலாமா என்று ஒரு கணம் யோசித்தார். ஆனால், அந்த நினைப்பு உள்ளே ஓடிய கணத்திலேயே ஏராளமான படபடப்பு அவருக்குள் ஊடுருவி நிலை தடுமாற வைக்கவும்... 'வேண்டாம். சற்று நேரம் போகட்டும். நிதானப்படுத்திக் கொண்டு குறி பார்த்து இவனை காலி செய்கிறேன்!' என்று தனக்குள் சொல்லிக்கொண்டே, அவனைப் பார்த்துச் சிரித்து வைத்தார். அதுவும் தவிர, ஒரு கோழையைப்போல

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

மறைந்திருந்து சுடாமல், நேருக்கு நேராக நின்று, சமூகத்தில் மிகுந்த அந்தஸ்து பெற்ற அத்தனை விருந்தினர்களுக்கு மத்தியிலும் அவனைச் சுட்டுத் தள்ளுவதுதான், எதிர்கால 'விக்கிராய்'களுக்கு கொடுக்கக்கூடிய தெளிவான எச்சரிக்கையாக இருக்கும் என்றும் நினைத்தார்.

மார்பிலும் நெற்றிப் பொட்டிலும் ரத்தம் கசிய அவன் உயிரை விடும்போதே, அத்தனை பேர் மத்தியிலும் தன் செயலுக்கு விளக்கமும் கொடுத்துவிட வேண்டும் என்பதே மோகன்குமாரின் - அதாவது மோகன்குமாருக்குள் இருந்த அந்த இன்னொரு ஆத்மாவின் எண்ணம்!

அவர் நினைத்ததைவிட மிகப்பெரியதாகவே பார்ட்டியை ஏற்பாடு பண்ணியிருந்தான் விக்கி. சுமார் அறுநூறு கெஸ்ட்கள் வரை வந்திருப்பார்கள் என்று தோன்றியது.

பண்ணை வீட்டின் பின்புறமிருந்த நீச்சல் குளத்தின் ஓரமாக நடைபோட்டார் மோகன்குமார். பிகினி அணிந்த பெண் ஒருத்தி மின்னலாகத் தண்ணீருக்குள் டைவ் அடித்தாள். சிதறிய தண்ணீரின் சில துளிகள் அவர் அணிந்திருந்த காதி குர்த்தாவை நனைத்தது. எங்கிருந்தோ பளீரென்று அவர் முகத்தை மோதிவிட்டுப் போனது ஒரு பிளாஷ் விளக்கின் ஒளி. கண்கள் சுத்தமாக இருண்டது போல் ஆனது. கண்களைக் கசக்கிக்கொண்டே அவர் தடுமாற... யாரோ ஓடி வந்து தாங்கிப் பிடித்தார்கள். அது தாடி வைத்திருந்த ஒரு வெயிட்டர். ஓட்டல் யூனிஃபார்மில் இருந்தான்.

www.t.me/tamilbooksworld

காரியத்தை முடிக்கிற வரை கவனமாக இருக்க வேண்டும் என்று நினைத்துக்கொண்டார் மோகன்குமார். நீச்சல் குளத்தை ஒட்டி கையில் கிளாஸுடன் நிறையப் பேர் அரட்டை அடித்துக்கொண்டு இருந்தார்கள். தாம்தூம் என்று மியூசிக் ஆளை அடித்தது. உடம்போடு ஒட்டிய ஒரு குட்டை சராயுடன் காணப்பட்ட ஒரு நங்கை வேகமாக இவரை நோக்கி வந்தாள். கையில் கிளாஸ்... மூச்சில் அதன் வாடை!

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

''ஹல்லோ காந்தி பாபா. உங்களைப் பற்றி நிறையப் படித்திருக்கிறேன். பேப்பரிலும் டி.வி-யிலும் உங்கள் போட்டோவைப் பார்த்திருக்கிறேன்...'' என்றவள்,

''பை தி பை... என் பெயர் லிஸா... நான் ஒரு மாடல். 'காமகன்யா' ஆணுறை விளம்பரத்துக்கான ஷூட்டிங் ஒன்றில் நடிப்பதற்காக இந்தியா வந்தேன். உங்களுக்குக்கூட புதிய பொசிஷன்களைச் சொல்லித்தர முடியும்!'' என்று உளறியவள், எக்கி அவரை முத்தமிட முயன்றாள்.

'இதென்னடா, கச்சடா கிராக்கியிடம் மாட்டினோமே' என்று பதறி அங்கிருந்து விலகி, கூட்டம் இருந்த இடத்தை விட்டே மொத்தமாக நகர்ந்து நடந்தார் இவர்.

இப்போது அவர் அடர்ந்த மரங்களுக்கு நடுவில் இருந்தார். தூரத்தில் செயற்கை நீர்வீழ்ச்சியில் சலசலப்புக் கேட்டது. நீச்சல் குள ஓரமாக இரையும் மியூஸிக்கும் கேட்டது. அவர் மூளைக்குள் திடீரென்று ஏதோ கெமிக்கல் மாற்றம் நிகழ்வது போல் இருந்தது. சில பழைய நினைவுகள், பழைய சம்பவங்கள், பழைய முகங்கள் குழப்படியாகக் கலந்தடித்து அவருக்கும் ஒரு 'கலைடாஸ்கோப்' காட்டும் வடிவங்கள் போல சுற்றிச் சுழலத் துவங்கின. அவருக்கு மூச்சு இரைக்கத் தொடங்கியது. தடுமாறி சில அடிகள் பின்னோக்கி அவர் நகர... அவருடைய காலுக்குக் கீழே வழுவழுப்பாக ஏதோ தட்டுப்பட்டது. வானத்தில் வட்டத் தட்டு போல மின்னிய நிலவின் வெளிச்சம், மர இடுக்குகளின் வழியே வழிந்து பூமியில் பட... குனிந்து பார்த்த மோகன்குமாருக்கு மூச்சு நிற்பது போல் இருந்தது. அது படமெடுத்துக் கொண்டிருந்த பாம்பு. விஷம் மிகக்கொண்ட நாகம்! 'ஒரே ஒரு அடி நகர்ந்தாலும் போட்டுத் தள்ளிவிடுவேன்' என்பதுபோல் அசைந்தாடிய அந்த நாகம், நாக்கை 'விஸ்'ஸென்று நீட்டி நீட்டி உள்ளுக்கு இழுத்தது.

வந்த காரியம் முடியாமலே போய்ச் சேரப் போகிறோம் என்று தோன்றிவிட்டது மோகன்குமாருக்கு. கண்களை மூடி பிரார்த்திக்க

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

வேண்டியதுதான் என்று அவர் நினைத்திருந்த நொடியில், எங்கிருந்து விருட்டென்று நீண்டது ஒரு கரம். அதில் சிக்கியது நாகத்தின் தலை. அதைப் பிடித்தபடி துள்ளி நிமிர்ந்தவன் ஓர் இளைஞன். இதுவரை அவர் புத்தகங்களிலும் சினிமாவிலும் மட்டுமே பார்த்திருந்த மாதிரியான முக அமைப்பு. கன்னங்கரேல் என்று அவனுடைய உருவம் நிலவின் ஒளியில் கறுப்பு வைரம் போல மின்னியது. ஆரோக்கியமான தீர்க்கமான கண்களும், சிரித்தபோது ஒளிவிட்ட பற்களும் அப்படியரு வெளுப்பாக இருந்தன.

''நீ... நீ... யார்? இங்கே என்ன செய்கிறாய்?'' என்றார் மோகன்குமார் பிரமித்தவராக.

''காத்திருக்கிறேன்!'' என்றான் அவன்.

'யாருக்காக?' என்று கேட்கத் தோன்றாதவராக, ''என் உயிரைக் காப்பாற்றியதற்கு மிகுந்த நன்றி!'' என்றார்.

www.t.me/tamilbooksworld

''உங்களை நான் காப்பாற்றியது இருக்கட்டும்... உங்களை ஒட்டியே ஒரு 'எம்பெக்டே' வந்து கொண்டிருப்பது என் கண்ணுக்குத் தெரிகிறது!'' என்றான் அந்தக் கரேல் இளைஞன்.

''எம்பெக்டே என்றால்..?''

''அது ஒருவகை ஆவி. இயற்கையாகவோ, நோய் வாய்ப்பட்டோ செத்துப்போகிறவர்களின் ஆவிக்கு 'ஈகா' எனறு பெயர். அதுவே, இயற்கைக்கு மாறாக கொல்லப்பட்டோ... விபத்திலோ இறந்து போகிறவர்களின்ஆவிதான் 'எம்பெக்டே'... அந்த மாதிரி ஆவிகள் அமைதி அடைவதில்லை. தனக்கென்று இன்னொரு உடம்பைத் தேடிக் கொள்வதற்காக சமயம் பார்த்துக் கொண்டே இருக்கும்.''

''ஐயோ... இத்தனை நாளும் நான் திடீர் திடீரென்று சித்த சுவாதீனம் இல்லாதது போல் நடந்து கொண்டதற்குக் காரணம் அந்த ஆவிதானா? அதை உன்னால் பார்க்க முடிகிறதா?''

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

''ஒரு நிழல் உருவம் போலத்தான் அது எனக்குத் தெரிகிறது!''

''அதை உன்னால் விரட்டி அடிக்க முடியுமா?''

அந்தக் கறுப்பு இளைஞன் வேறு யாருமில்லை... லிட்டில் அந்தமான் தீவிலிருந்து வந்து, அதிகாரி அஷோக் ராஜ்புத்தின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் ஆதிவாசி எகேடிதான் என்பது இந்தத் தொடரைப் படித்துக்கொண்டிருப்பவர்களுக்கு இந்நேரம் விளங்கியிருக்கும்!

எகேடி இப்போது வெள்ளந்தியாகச் சிரித்தான்.

''ஆவியை விரட்டினால் எனக்கு பணம் தருவீர்களா?'' என்றான்.

''எவ்வளவு?''

''நானும் நான் காதலிக்கும் சம்ப்பி என்ற பெண்ணும் என் தீவுக்குத் திரும்பிப் போகிற அளவுக்கு! அதாவது, ஒன்பது நூறு ரூபாய் நோட்டுகளும்... அதே போல் இன்னும் ஒன்பது ரூபாய் நோட்டுகளும்!'' - தனக்குத் தெரிந்த கணக்கை வைத்து விரல்களை எண்ணிப் பார்த்துச் சொன்னான்.

www.t.me/tamilbooksworld

மோகன்குமார் அடிக்கிற ஒரு ஃபுல் பாட்டில் ஸ்காட்ச் விஸ்கியின் விலையைவிட அது குறைவாகவே இருந்தது. 'இப்படி ஒரு விசித்திரப் பேயோட்டியா?' என்று - அந்த பீதியிலும் - வேடிக்கையாக அவனைப் பார்த்தவர்,

''ஆவியை முதலில் விரட்டு. என் நிம்மதியை மீட்டுக் கொடு. அடுத்த நொடியே நீ கேட்ட பணம் உன் கையில் இருக்கும்...'' என்றார்.

- தொடர்ந்து சந்தேகிப்போம்...

Copyright © Vikas Swarup 2008

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

## மோட்டிவ் 6

விவேக் விக்கிராய் பார்ட்டி கொடுக்கும் பண்ணை வீட்டுக்குள் நடப்பதைப் பார்த்துக்கொண்டு இருக்கிறோம். முன்னாள் தலைமைச் செயலாளர் மோகன் குமார் உடலில் இருக்கும் 'எம்பெக்டே' ஆவியை வெளியேற்றும் முயற்சியில் இறங்குகிறான் எகேடி!

www.t.me/tamilbooksworld

### அது மகாத்மா அல்ல..?

தன்னுடைய தீவின் மந்திர குருவான 'நோகாய்' தனக்குக் கொடுத்த அபூர்வக் களிமண்ணை முன்னாள் தலைமைச் செயலாளர் மோகன் குமாரின் நடு மார்பில் பூசியதோடு, அவர் நெற்றியிலும் அதைவைத்துச் சில கோடுகள் போட்டான் ஆதிவாசி எகேடி.

''வேறு சில நல்ல ஆவிகளை நான் இப்போது அழைக்கப்போகிறேன். அவை வந்து உங்களைத் தொடரும் 'எம்பெக்டே' ஆவியை இழுத்துக்கொண்டு போய்விடும். அதுவரை நீங்கள் கண்களை மூடியே இருங்கள். குறுக்கே எதுவும் பேசாதீர்கள்.''

பையில் இருந்து ஒரு எலும்பு மாலையை எடுத்து மோகன் குமாரின் மீது வைத்துவிட்டு, இடது கையை அவருடைய தலை மீது பதியவைத்தான். இன்னொரு சிறிய எலும்பை வலது கையில் பிடித்துக்கொண்டு மந்திர உச்சாடனம் செய்யத் துவங்கினான். நோகாயிடம்

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

விளையாட்டுத்தனமாகக் கற்றுக்கொண்ட மந்திரம் இப்போது செயல்படுகிறதா என்று பார்ப்பதில் அவனுக்கே பெரிய த்ரில் இருந்தது.

மந்திரத்தின் ஸ்பீடு ஏற ஏற... மோகன் குமாரின் மண்டைக்குள் ஒரு 'கார்க் ஸ்க்ரூ' இறங்கித் திருகுவதுபோல் வலி துவங்கியது. மூளையைத் துருவித் துருவி உள்ளே போகும் அந்த ஸ்க்ரூ, அங்கே இருந்து எதையோ தோண்டித் துருவி வெளியே எடுப்பதுபோல் இருக்கிறது. தாங்கொணாத வலி வாட்டினாலும், அரை மயக்க நிலைக்குள் இருக்கிறது அசைவற்ற அவரது உடல்.

கண் முழித்துப் பார்த்தபோது, எகேடி மிக ஆர்வமாக அவர் முகத்தையே கவனித்துக்கொண்டு இருந்தான். தன்னோடு இன்னோர் ஆளையும் தூக்கிச் சுமப்பதுபோல் இருந்த உணர்வு இப்போது நீங்கி இருந்தது. எழுந்து நின்று ஒரு முறை சின்னப் பையன் மாதிரி மோகன் குமார் துள்ளிக் குதித்தார்.

''சூப்பர்! கொம்பாதி கொம்பனான டாக்டர்கள் எல்லாம்கூட கைவிட்ட காரியத்தை நீ சாதித்துவிட்டாய். எனக்குள் இருந்த அந்த இன்னொரு ஆள் இப்போது இல்லை என்பதை நன்றாக உணர முடிகிறது!'' என்று எகேடியைக் கட்டிக்கொண்டார் மோகன் குமார்.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

''அந்தப் பொண்ணுக்கு உங்களைவிட்டுப் போவதில் துளிகூட இஷ்டம் இல்லை. கடைசியாக என் மந்திரத்தால் கதறியடித்துக் கொண்டுதான் உடம்பைவிட்டு வெளியேறினாள்!''

இப்போது மோகன் குமார் திகைத்தார்.

''தம்பீ... எனக்குள் இருந்தது பெண் அல்ல. அது ஆண். வயதான மனிதர். மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி. அவர்தான் என்னை இத்தனை நாளும் ஆட்டிப் படைத்துக்கொண்டு இருந்தார். மது அருந்தவிடாமல்... புலால் உண்ணவிடாமல்... கண்ணுக்குக் குளிர்ச்சியாக ஒரு நீலப் படம் பார்க்கவிடாமல்... இல்லாத வம்பைஎல்லாம் நான் இழுத்துக்கொண்டு வருவதற்குக் காரணமாக இருந்தது மகாத்மா காந்தியின் ஆவிதான்!'' என்று படபடத்தார்

மோகன் குமார்.

www.t.me/tamilbooksworld

உறுதியாகத் தலையாட்டி மறுத்தான் எகேடி. ''உங்களை அந்த ஆவி என்னவெல்லாம் செய்யவைத்தது என்று எனக்குத் தெரியாது. ஆனால், அது ஒரு பெண்ணின் ஆவிதான். வெளியேறும்போது அதன் பேரையும் நான் தெரிந்து வைத்துக்கொண்டேன்.''

''என்ன பெயர்?''

''ரூபி கில்!'' என்றான் எகேடி.

''எ... என்ன சொன்னாய்? ரூபி கில்? பாருக்குள் விவேக் விக்கிராய் சுட்டுக் கொன்ற அந்தப் பெண்ணா? அவளா மகாத்மா காந்திபோல என்னைப் பேசவும், செய்கைகள் செய்யவும் வைத்துக்கொண்டு இருந்தாள்?'' - அதிர்ச்சியுடன் கேட்டார் மோகன் குமார். தரையில் கழற்றிப் போட்டிருந்த குர்த்தாவை எடுத்தார். கனத்தது அதன் பாக்கெட்டுக்குள் இருந்த துப்பாக்கி.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

''இப்போது எனக்குப் புரிகிறது. ரூபி கில்லின் ஆவி எதற்காக என்னை துப்பாக்கியுடன் இத்தனை தூரம் பண்ணை வீட்டு பார்ட்டிக்கு வரவழைத்தது என்று!'' - மோகன் குமாருக்கு வார்த்தை தடுமாறியது. அந்த ஆவி மட்டும் இன்னும் கொஞ்ச நேரத்துக்கு அவருக்குள் இருந்திருந்தால்... விவேக் விக்ராயை சுட்டுத் தள்ளியிருப்பாரே!

அப்புறம் திகார் ஜெயிலில் நிரந்தர களிதான்!

''ஐயா... எனக்கு நீங்கள் பணம் தருவதாகச் சொன்னீர்கள்!'' - ஏகேடி கை நீட்டினான்.

பர்ஸை எடுத்தார் மோகன் குமார். மொடமொடத்த கரன்சியை கொத்தாக உருவினார். ''நீ கேட்டது ஆயிரத்து எண்ணூறு ரூபாய். நான் தருவது இருபதாயிரம் ரூபாய். உன் தீவுக்கு என்ன... அதையும் தாண்டிக்கூட பறந்து போகலாம்.''

www.t.me/tamilbooksworld

''மிக்க நன்றி!'' என்ற ஏகேடி, நொடியில் மரங்களுக்கு இடையே மறைந்து போனான். கர்ச்சீப் எடுத்து முகத்தை அழுந்தத் துடைத்து, சிவப்புக் களிமண்ணைப் போக்கினார் மோகன் குமார். தரையில் படுத்ததால், கதர் வேட்டியில் படிந்திருந்த மண்ணைத் தட்டிவிட்டார்.

''ரூபி கில் ஆவி எத்தனை பிரமாதமாக எனக்குள் புகுந்து காந்தி மாதிரியே நடித்திருக்கிறது. இந்த கதர் சட்டை, வேட்டி என்கிற கூத்துக்கெல்லாம் இன்றோடு முடிவு!'' என்று முணுமுணுத்தவராக மரக் கூட்டத்தைவிட்டு வெளியே வந்து, பார்ட்டி நடந்த இடம் நோக்கி நடக்க ஆரம்பித்தார்.

கையில் டிரே வைத்து மதுக் கோப்பைகளுடன் வந்த ஒரு வெயிட்டரை ஆர்வமாக நெருங்கி, ''ஏம்ப்பா... ஷிவாஸ் ரீகல் இருக்குதானே?'' என்றார் நாக்கை சப்பு கொட்டி. அவன் கோப்பையை அளிக்கவும் 'ரா'வாக ஏற்றிக்கொண்டு குஷி வந்த குதிரையாகக் கனைத்தார்.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

இன்னொரு கோப்பை ஸ்காட்சை கைப்பற்றிக்கொண்டு, ஒரு சிக்கன் துண்டை வாயில் கவ்வியபடியே விக்கி ராயின் டெக்ஸ்டைல் கம்பெனி அதிகாரி ஒருத்தரிடம் வலியப் போய் தோளில் தட்டினார். ''ஹலோ மிஸ்டர் ராஹா... எப்படி போய்ட்டிருக்கு வாழ்க்கை?'' என்றார். அந்த அதிகாரி வியந்து இவரை நோக்கி, ''மோகன் குமார்... ஸாரி, காந்தி பாபா... உங்களை இங்கே நான் எதிர்பார்க்கவில்லை... அதுவும் கையில் சரக்குடன்!'' என்றார்.

''காந்தி எல்லாம் கிடையாதுப்பா. ஒரு பெரிய மனக் குழப்பத்தில் சிக்கி இருந்தேன். அதனால் வந்த வினைதான் எல்லாமே. விக்கிராயைக்கூட போர்டு மீட்டிங்கில் எடக்குமடக்காகப் பேசி ரொம்ப அப்செட் ஆக்கிவிட்டேன். எல்லாம் இப்போ சரியாப்போச்சு. விளக்கமாகச் சொல்லி, விக்கி ராயிடம் மன்னிப்பு கேட்கணும். எங்கே விக்கி?'' - மோகன் குமார் ஆர்ப்பாட்டமாகப் பேசினார்.

''இப்போதான்... அதோ, மெயின் பில்டிங்கினுள் போனார்!'' என்றார் ராஹா எனப்பட்ட அதிகாரி.

மூன்றாவது கோப்பைக்கு மாறிக்கொண்டவராக, தள்ளாடி பண்ணை வீட்டின் மெயின் கட்டடம் நோக்கி நடக்க ஆரம்பித்தார் மோகன் குமார். கொஞ்ச நேரத்துக்கு முன் அவரை முத்தமிட முயன்ற மாடல் பெண் எதிரில் தென்பட... ''ஹாய்... ஒரு சின்ன மேட்டர் பேசி முடிச்சிட்டு

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

சீக்கிரமே திரும்பி வர்றேன். உன் கிஸ்ஸைப் பத்திரமா எனக்காக வெச்சிரு...'' என்று வயசுக்குத் தகாத ஓர் இளிப்பை வெளிப்படுத்தி, அவள் பின்புறத்தில் ஒரு தட்டுத் தட்டிவிட்டு நடந்தார்.

வந்தேனய்யா லாரி பேஜ்!

''ஹே டியூட்... ஐ யாம் ரிக் மியர்ஸ்...'' என்று கை குலுக்கினேன் அவனுடன்.

என்னை கால் சென்டர் வேலையில் இருந்து திட்டித் துரத்திவிட்ட அதே முதலாளிதான். பேர்கூட விவேக் விக்கி ராயாமே! சினிமாக்காரன் மாதிரி பளபளவென்று இருந்தாலும், முகத்தின் இடது புறத்தில் நீண்டிருந்த வடு, அவனுக்கு வில்லத்தனமான தோற்றத்தைக் கொடுத்தது.

''அமெரிக்கன் எம்பஸியின் முக்கிய அதிகாரி அல்லவா லிஸ்ஸி... தனக்குப் பதிலாக உங்களை அனுப்பி இருக்கிறாள் என்றால், நீங்கள் ரொம்ப முக்கியமான ஆளாகத்தான் இருக்க வேண்டும்...'' என்றான் என் கையை இறுகப் பிடித்துக் குலுக்கி.

www.t.me/tamilbooksworld

நல்ல காலம் இவனுக்கு என்னை ஞாபகம் இல்லை என்று நான் மூச்சு விடும்போதே, ''நாம் இதற்கு முன் எங்கேயாவது சந்தித்திருக்கிறோமா?'' என்றான்.

எனக்கு பக்கென்று ஆகிப்போனது. டெல்லியில் இருக்கும் கால் சென்டருக்கு அமெரிக்காவில் இருந்து போன் பண்ணி வழி கேட்ட ஒருத்தனுக்கு நான் கரெக்டாகப் பதில் சொல்லாமல் சொதப்பியதை, இன்னொரு லைனில் ஒட்டுக் கேட்டவன் அல்லவா இந்த விக்கி! ரொம்பப் பேசினால், குரலைவைத்தே அடையாளம் கண்டுகொண்டு என்னை வெளியே துரத்திவிடுவானோ என்று பயமாக இருந்தது. அப்புறம் நான் எப்படி என் ஆசைக் காதலி - ஸப்னா என்கிற - ஷப்னம் சக்ஸேனாவைப் பார்ப்பது?

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

குறைச்சலான வார்த்தைகளில் அவனிடம் இருந்து கழன்றுகொள்ள முயன்றேன்.

''நீங்கள் அமெரிக்காவில் பிரமாதமான சினிமா தயாரிப்பாளர் என்று லிஸ்ஸி சொன்னாள். நானும்கூட இந்தியாவில் பல தொழில்களை நடத்தி வந்தாலும், அவ்வப்போது பெரிய பேனரில் படம் தயாரித்துக்கொண்டு இருக்கிறேன்...'' என்று விடாப்பிடியாக என்னிடம் பேச்சுக் கொடுத்தான் விவேக் விக்கிராய். அந்த வகையில்தான் ஷப்னம் சக்ஸேனாவையும் இந்த பார்ட்டிக்கு வரவழைத்து இருப்பான் போல என்று நினைத்துக்கொண்டேன்.

இவன் பாட்டுக்கு இப்படி பிளேடு போடுகிறானே... எங்கே என் தேவதை? அவளுக்குத்தான் தெரியும் - நான் சினிமா தயாரிப்பாளன் இல்லை என்று. அமெரிக்காவில் ஒரு டிபார்ட்மென்ட்டல் ஸ்டோரில் தள்ளுவண்டி ஓட்டிக்கொண்டு இருப்பவன் என்று. அதை எல்லாம் தாண்டி என் மீது காதல்கொண்டு கடிதங்கள் எழுதித் தள்ளியவள் அல்லவா என் ஸப்னா... ஸாரி ஷப்னம்!

www.t.me/tamilbooksworld

லாரி பேஜ் என்ற நிஜப் பெயரை மாற்றிக்கொண்டு, ரிக் மியர்ஸ் என்ற பெயரில் சினிமா புரொடியூசராக வேஷம் போட்டுக்கொண்டு நான் இந்த பார்ட்டிக்கு வந்திருப்பதை அறியும்போது அவள் எத்தனை சந்தோஷப்படுவாள்? இந்திய சினிமாக்களில் வருகிற மாதிரி இங்கேயே என்னோடு சேர்ந்து டூயட் பாட ஆரம்பித்துவிடுவாள் என்று தோன்றியது.

காத்திருக்கிறேன்... வா, கண்மணியே!

- தொடர்ந்து சந்தேகிப்போம்...

Copyright © Vikas Swarup 2008

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

# மோட்டிவ் 6

*விவேக் விக்கிராய் பார்ட்டி கொடுக்கும் பண்ணை வீட்டுக்குள் நடப்பதைப் பார்த்துக்கொண்டு இருக்கிறோம். ஆசைக் காதலி - ஸப்னா என்கிற - ஷப்னம் சக்ஸேனாவைப் பார்ப்பதற்காக ஓசி பாஸ் வாங்கி வந்திருக்கிறான் லாரி பேஜ்!*

www.t. world




www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

## எங்கே என் ஆசைக் காதலி?

விக்கியிடம் இருந்து நைஸாகக் கழட்டிக்கொண்டு பண்ணை வீட்டைச் சுற்றி வந்தேன். அங்கே வருகை தந்திருந்த அத்தனை பேரும் பெரிய பெரிய ஆசாமிகள் என்பது புரிந்தது. மூன்று பேஸ்பால் கிரவுண்டுகளின் சைஸுக்கு நீண்டு அகன்று இருந்த புல்வெளியின் நடுவே ஜிகுஜிகுவென ஜொலித்தது நீச்சல் குளம். தூரத்தில் சின்னதாக ஒரு கோயில் தெரிந்தது. இங்கே இருந்து பார்த்தபோது, அந்தப் பண்ணை வீட்டின் காம்பவுண்டுக்கு உள்ளேயே ஒரு குட்டிக் காடு போல் மரங்கள் இருப்பதையும் காண முடிந்தது.

திடுக்கென்று எனக்கு ஒரு பொறி தட்டியது. தீவிரவாதிகளிடம் இருந்து என்னை மீட்டு வந்த பிறகு, அமெரிக்க எம்பஸி அதிகாரி லிஸ்ஸி எனக்குச் சொன்ன எச்சரிக்கை நினைவுக்கு வந்தது. 'மிஸ்டர் லாரி பேஜ்! எந்த நேரத்திலும் மறுபடி தீவிரவாதிகளால் உங்களுக்கு ஆபத்து வர வாய்ப்பு உண்டு. எங்கே போனாலும் ரொம்ப எச்சரிக்கையாக இருப்பது நல்லது' என்று சொல்லித்தானே என்னிடம் ஒரு துப்பாக்கியைக் கொடுத்தாள்!

www.t.me/tamilbooksworld

தூரத்தில் தெரிந்த குட்டிக் காட்டையே நான் உற்றுப் பார்த்தேன். ஒருவேளை அங்கே அல்கொய்தாவோ, லஸ்கர்-இ-தொய்பாவோ பதுங்கி இருந்து, திடீரென்று வந்து என்னைத் தாக்கினால்..?

ஓரளவு வெளிச்சம் இருக்கும்போதே, கிட்டே போய் அந்த காட்டுக்குள் செக் பண்ணிவிடுவது என்று முடிவெடுத்தேன். அதை நோக்கி நான் நடக்க ஆரம்பித்தபோது, நீல நிற சூட் அணிந்த ஒரு மனிதன் கையில் ஏதோ ஒரு பாக்கெட்டை எடுத்துக்கொண்டு, சற்றே சந்தேகப்படுகிற தோரணையில் நடந்து போவதைப் பார்த்தேன். விர்ரென்று ரத்தம் தலைக்கு ஏறியது எனக்கு. பாக்கெட்டில் இருந்த துப்பாக்கியைத் தொட்டுப் பார்த்துக்கொண்டேன். நானும் பதுங்கிப் பதுங்கி அவன் பின்னால் போனேன்.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

பண்ணை வீட்டின் சிறிய கோயிலுக்குள் அந்த ஆள் நுழைந்தான். இரண்டு கைகளையும் சேர்த்து மார்புக்கு நேராகக் குவித்து பயபக்தியாக வணங்கினான். 'ச்சே... பயத்தில் தப்புத் தப்பாக நினைக்கிறேனே' என்று பின்னந்தலையில் நானே தட்டிக்கொண்டேன்.

டென்ஷனைக் குறைப்பதற்கு ரெண்டு 'கல்ப்' விஸ்கி அடிக்கலாம் என்று மறுபடி நீச்சல் குள ஓரத்துக்கே வந்தேன். சரக்கு அடுக்கியிருந்த ஷாமியானா நோக்கி நடக்கும்போதுதான் கவனித்தேன். கொஞ்சம் பத்திரிகைக்காரர்களும் பார்ட்டிக்கு அழைக்கப்பட்டு இருந்தார்கள். தொடைக்கு மேலும், மார்புக்குக் கீழுமாக உடைகள் அணிந்தபடி, கெக்கேபிக்கேவென்று சிரித்துக்கொண்டு இருந்த பெண்களை வளைத்து வளைத்து போட்டோ பிடித்துக்கொண்டு இருந்தார்கள். இந்த ஊரின் ஞாயிற்றுக்கிழமை இணைப்புகளில் பார்த்திருக்கிறேன்... கண்கொண்டு பார்க்கச் சகிக்காத பெண்களை எல்லாம் தேவதைகள் என்று வர்ணித்து, 'பார்ட்டி கொண்டாட்ட' போட்டோக்களை மானாவாரியாகப் போட்டு நிரப்புவார்கள்.

www.t.me/tamilbooksworld

ஒரு போட்டோகிராபர் என்னை நோக்கி வந்தான். ''எக்ஸ்கியூஸ் மீ... நீங்கள் மைக்கல் ஜே ஃபாக்ஸ்தானே?'' என்றான்.

நான் லாரி பேஜ் என்று வாய் வரை வந்துவிட்ட என் பேரை அப்படியே கடித்து முழுங்கிவிட்டு, ''ஸாரி... என் பெயர் ரிக் மியர்ஸ். நான் ஹாலிவுட் சினிமா தயாரிப்பாளர்...'' என்று அசட்டுச் சிரிப்பு சிரித்துவைத்தேன்.

இதை நான் சொல்லிக்கூட முடிக்கவில்லை. கையில் கிளாஸுடன் கூத்தடித்துக்கொண்டு இருந்த நங்கையர்க் கூட்டம் படக்கென்று என் மீது பாய்ந்துவிட்டது. ''ஹாய் ரிக் மியர்ஸ். நீங்கள் இந்தியாவில் ஏதாவது சினிமா தயாரிக்க வந்தீர்களா?'' என்று வழிந்தாள் ஒருத்தி.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

''நான் நாற்பது விளம்பரங்களில் நடித்து முடித்துவிட்டேன். ஹாலிவுட் படத்தில் ஒரு நல்ல ரோல் கிடைக்கும் என்றால், உங்களுக்கு கால்ஷீட் தருவதில்ஆட்சேபனை

இல்லை...'' என்று ஓவராக 'ஜொ' காட்டினாள் இன்னொருத்தி.

''நீங்கள் எங்கே தங்கியிருக்கிறீர்கள். ரூம் நம்பர் சொல்ல முடியுமா?'' - அன்றைய ராத்திரிக்கான'கால் ஷீட்'டை நீட்டினாள் ஒருத்தி.

நல்ல காலமாக, கையில் டிரேவுடன் நடந்து வந்த ஒரு வெயிட்டர் அதை கால் தடுக்கி தடாலென்று புல் தரையில் நழுவவிட்டான். ஏக சத்தமாக எகிறி விழுந்தன கண்ணாடிக் கோப்பைகள். புல்லுக்கு மது சப்ளை நடந்துகொண்டு இருக்க.. பெண்கள் பதறி விலகிய அந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, பண்ணை வீட்டின் மெயின் பில்டிங்கை நோக்கி வேகமாக நழுவினேன்.

www.t.me/tamilbooksworld

இந்த கொழுப்பெடுத்த கோழிகளையா நான்பார்க்க வந்தேன்! என் காதல் தேவதை ஷப்னம்சக்ஸேனா இன்னுமா வந்து சேரவில்லை? கூட்டத்துக்கு நடுவே மாட்டிக்கொண்டால், ஆட்டோகிராஃப் கேட்டு டார்ச்சர் பண்ணுவார்கள் என்று, அவள்மெயின் கட்டடத்தின் ஏதாவது ஒரு அறைக்குள் அடைக்கலமாகி இருக்க வேண்டும் என்று நினைத்தேன். கட்டடத்துக்குள் படுசுவாதீனமாக நுழைந்தேன்.

பச்சைக் குழந்தையின் பின்புறம் மாதிரி வழுக் மொழுக்கென்று இருந்தது உயர் ரக தரைவிரிப்பு. உள்ளேயும் நல்ல கூட்டம். அங்கேயும் சரக்கு, சைடு விநியோகம் ஜோர். ஆளை அமுக்கும் சோபாக்களில் அமர்ந்தபடியும்... நின்றுகொண்டும் கோப்பை சூப்பிக்கொண்டு இருந்தது கூட்டம். முடிந்த வரைக்கும் ஒவ்வொரு அறையாக எட்டிப் பார்த்துக்கொண்டே வந்தேன். என் செல்லத்தைக் காணவில்லை. இன்னுமா வரவில்லை? எப்போது வருவாள்? என் அமெரிக்க இதயத்துக்குள் ஹாலிவுட் சோக கீதம் ஓடத் தொடங்கிவிட்டது.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

ராத்திரி மணி 11 தொடும் சமயத்தில் பரபரப்பு. பார்ட்டிக்கு வந்த ஜனக் கூட்டம் சலசலத்தது. வெயிட்டர் ஒருத்தனிடம் விசாரித்தேன். ''ஷப்னம் மேடம் வந்துட்டாங்க...'' என்றபடி, எனக்கு முந்திக்கொண்டு ஓடினான். 50 அடி தூரத்தில் அவள் வரும்போதே என்னை ஒரு மயக்கச் சுழல் வளைத்தது. அவள் அமெரிக்காவுக்கு அனுப்பிவைத்த போட்டோக்களில் இருந்ததைக் காட்டிலும், இந்தியத் தெருக்களின் விண் முட்டும் கட்-அவுட்களில் காட்டிய புன்னகையைவிடவும், வழவழ பத்திரிகைத் தாள்களில் நான் கண்ட அழகைவிடவும்... பன்மடங்கு கூடுதலாக இருந்தது அந்த வனப்பு. இறுக்கமான ஓர் உடையை அவள் அணிந்து இருந்தாலும், அந்தக் கவர்ச்சி ஆபாசமாகவோ, மிகையாகவோ தோன்றவில்லை. கையில் அவள் தொங்கவிட்டு இருந்த ஹேண்ட் பேகும், அவள் இடுப்பும் ஒரே ரிதத்தில் அசைந்தாட நடந்து வந்தாள் என் காதல் கண்மணி.

www.t.me/tamilbooksworld

மொத்தக் கூட்டமும் சமூகத்தின் முக்கிய அந்தஸ்துகளில் இருந்ததால், வெளிப்படையாகத் தங்கள் ஆர்வத்தை 'விசிறி'க் காட்டத் தயங்கி, சற்று தூரவே நின்று 'ஹாய்' சொல்லி ஒதுங்கிக்கொண்டார்கள். ஷப்னம் வந்து சோபாவில் உட்கார்ந்தாள். அவள் அருகில் போய் உட்கார்ந்தவன் - என்னை கால் சென்டர் வேலையைவிட்டுத் தூக்கிய காலிப் பயல் விவேக் விக்ராய்!

வழியும் இளிப்போடு பழரசக் கோப்பையை அவளிடம் நீட்டியபோது, தேவை இல்லாமல் ஓவராக உரசினான் அந்த ராஸ்கல். அதை ஷப்னம் சக்ஸேனா ரசிக்கவில்லை என்பதைச் சட்டென்று இறுகித் தளர்ந்த அவள் முகத் தசைகளை வைத்தே என்னால் கண்டுபிடிக்க முடிந்தது.

ஓடோடிப் போய் அவளை நெருங்கி, ''ஷப்னம் ஸ்வீட்டி... ஸப்னா என்ற பெயரில் உருகி உருகி நீ கடிதம் எழுதி இந்தியாவுக்கு வரவழைத்த காதலன் லாரி பேஜ் நான்தான். எத்தனை நாள் இந்தியாவில் உனக்காக

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

நான் தவம் கிடந்தேன் தெரியுமா? நான் போட்ட கடிதங்கள் எல்லாம் உன் மும்பை முகவரிக்கு வந்ததா கண்ணே?'' என்று கேட்டுக் கண்ணீர் வடிக்கத் துடித்தேன். உடம்போடு சேர்ந்து பிறந்த சொற்பப் புத்தி தடுத்தது. 'நீ அமெரிக்க டிபார்ட்மென்டல் ஸ்டோரில் வேலை பார்க்கிற அற்ப லாரி பேஜாக இங்கு வரவில்லை. ஹாலிவுட் புரொடியூசர் ரிக் மியர்ஸ்!' என்றது மூளை.

வாகான சந்தர்ப்பம் கிடைத்தபோது நெருங்கி, 'ஹேய் டியர்! தீவிரவாதிகளுக்குப் பயந்துதானே உன் காதலை வெளிப்படையாகச் சொல்லாமல் இருந்தாய். இதோ, தடைகள் தாண்டி நேரில் வந்துவிட்டேன், இப்போ ஆசை தீரச் சொல்லு!' என்று ரகசியமாக அறிமுகப்படுத்திக்கொள்ளத் துடித்தேன்.

என் போட்டோவை அவளுக்கு நான் கடிதம் மூலம் ஒன்றுக்குப் பல தடவை அனுப்பியிருக்கிறேன். அவளுக்கு என் முகம் நன்றாகத் தெரியும். அதனால், அவள் முகம் பார்க்கிற தூரத்தில் நான் தென்பட்டுக்கொண்டே இருந்தால் போதும்... நான் வந்திருப்பதை மனதில் குறித்துக்கொள்வாள். சரியான நேரம் பார்த்து அவளேகூட என்னிடம் வந்து மனசைக் கொட்டுவாள்!

சில நிமிடங்களிலேயே அந்த சந்தர்ப்பமும் வந்தது. விவேக் விக்ராயின் உதவியாளன்போல் தெரிந்த ஒருவன் வேகமாக வந்தான். ''இக்பால் மியான் வந்துவிட்டார்!'' என்றான். சட்டென்று சோபாவில் இருந்து எழுந்த விக்கி, ''ஸாரி ஷப்னம்... மிக முக்கியமான விருந்தினர். அவருக்கு ஒரு ஹாய் சொல்லிவிட்டு வருகிறேன்!'' என்று நடந்தான்.

சுற்றுமுற்றும் பார்த்தேன். கூப்பிடுகிற தூரம் வரை யாரும் இல்லை. துளியும் நான் தாமதிக்கவில்லையே. ஒரே பாய்ச்சல்தான். சோபாவில் போய் அவள் அருகில் விழுந்தேன். அவள் கண்களை ஊடுருவிப் பார்த்தேன். ஆனால், ஏன் இவள் என்னை இப்படி அந்நியமாகப் பார்க்கிறாள்?

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*''ஹலோ ஷப்னம்... ஐ'ம் ரிக் மியர்ஸ்... ஹாலிவுட் புரொடியூசர்!'' என்று கையை நீட்டினேன். மெத்தென்று பற்றிக் குலுக்கியவள், ''உங்களை சந்தித்ததில் மகிழ்ச்சி... இங்கே ஏதாவது படம் தயாரிக்க வந்தீர்களா?'' என்றாள்.*

*''யெஸ்... உங்கள் கால்ஷீட்டைப் பெற்று, உங்களை அமெரிக்காவுக்குக் கூட்டிப் போவதுதான் என் வருகையின் நோக்கம்!'' என்று டபுள் மீனிங்கில் அசத்தினேன். அவளோ புரிந்துகொண்ட மாதிரி இல்லாமல் முழித்தாள். மறுபடி சுற்றுமுற்றும் பார்த்தேன். யாரும் இல்லை. அவள் காதோரம் குனிந்து கிசுகிசுத்தேன் - ''பயப்படாதே... எனக்கு உன் பிரச்னை என்னவென்று தெரியும். சிக்கல் வராமல் நான் பார்த்துக்கொள்கிறேன்...'' என்றேன். இப்போது அவள் முகத்தில் குழப்பத்தோடு சேர்ந்து எரிச்சல்!*

*இப்போது நான், ''ஸப்னா!'' என்றேன் காதலுடன். அந்தப் பெயரை நான் சொன்னதுமே அதிர்ந்து நிமிர்ந்தாள் ஷப்னம் சக்ஸேனா.*

www.t.me/tamilbooksworld

*''ஸப்னாவைச் சுற்றும் பிரச்னை என்னவென்று எனக்குத் தெரியும். அதில் இருந்து விடுவிக்கத்தான் இங்கே வந்திருக்கிறேன்!'' என்றேன்.*

*அவள் உடம்பு விறைத்துக்கொண்டது!*

- தொடர்ந்து சந்தேகிப்போம்...

Copyright © Vikas Swarup 2008

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

## மோட்டிவ் 6

விவேக் விக்கிராய் பார்ட்டி கொடுக்கும் பண்ணை வீட்டுக்குள் நடப்பதைப் பார்த்துக்கொண்டு இருக்கிறோம். நேரில் பார்த்தே இராத ஆசைக் காதலி ஷப்னம் சக்ஸேனாவைப் பார்த்தவுடன் நெருங்கிப் பேசுகிறான் லாரி பேஜ்!

### 'எல்லாம் நான் அறிவேன்!'

www.t.me/tamilbooksworld

'ஸப்னா' என்ற பெயரை நான் சொன்னதுமே, எரிச்சல் மறைந்து அப்பட்டமான திகில் அப்பிக்கொண்டது ஷப்னம் ஸக்ஸேனாவின் முகத்தில்!

''ஸப்னாவின் பிரச்னைபற்றி உங்களுக்கு என்ன தெரியும்?'' என்றாள் நடுங்கும் குரலில்.

''டெல்லியில் நான் சந்தித்த ஒரு டிடெக்டிவ் எல்லாமே சொல்லிவிட்டான்!'' என்று நான் புன்னகைக்க... அவள் உடம்பு மெதுவாக நடுங்கத் தொடங்கியது.

''ஆமாம்... ஸப்னாவுக்கு இப்போது வந்திருப்பது சாதாரண பிரச்னை அல்ல... அதில் இருந்து மீள்வதற்காகத்தான் விக்கிராயைச் சந்திக்க இங்கே வந்திருக்கிறேன்...'' என்றாள் கண்களில் நீர் கோத்துக்கொண்டு.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

''விக்ராயை நம்பி எதையும் நீ செய்ய முடியாது. என்னை நம்பு... உன்னை மீட்பது என் கடமை!''

அடுத்தபடியாக அவள் முகத்தில் 'த்ரில்' குடிகொண்டது. ''மிஸ்டர்... நீங்கள் ஒரு ஹாலிவுட் புரொடியூசர் என்கிறீர்கள். நீங்கள் என் பிரச்னைக்கு என்ன தீர்வு தர முடியும்?''

'கூகுள்' கம்பெனியின் ஓனர் என்று நம்பி என்னை தீவிரவாதிகள் கடத்திப் போனது, அவர்களிடம் இருந்து என்னை அதிரடிப் படை மீட்டது, அதன் பிறகு, அமெரிக்க எம்பஸியின் இந்திய அதிகாரிகள் மூலமாக எனக்குப் பணமும், துப்பாக்கியும் கிடைத்தது, நான் பத்திரமாக திரும்பியதற்குப் பாராட்டு தெரிவித்து அமெரிக்க ஜனாதிபதியே எனக்குக் கடிதம் எழுதியது எல்லாவற்றையும் அவளிடம் சொல்ல இப்போது சந்தர்ப்பம் இல்லை. சட்டென்று கோட் பாக்கெட்டில் கையைவிட்டு அமெரிக்க ஜனாதிபதி எனக்கு எழுதிய கடிதத்தை அவளிடம் காட்டினேன்.

www.t.me/tamilbooksworld

''நான் சினிமா புரொடியூஸர் கிடையாது என்பதும், என் பெயர் லாரி பேஜ் என்பது தெரிந்தும் நீ தெரியாததுபோல் நடிக்கலாம். அதுபற்றி எனக்குப் பிரச்னை இல்லை. இதோ பார்... அமெரிக்க ஜனாதிபதிக்கே நான் நெருக்கமானவன். சி.ஐ.ஏ. ஆட்கள் வரையில் அறிமுகமான முகம் நான். இப்போதுகூட என்னை நீ நம்பவில்லையா, ஷப்னம்?'' என்றேன்.

''ஆனால்... இதை எல்லாம் நீங்கள் ஏன் எனக்குச் செய்ய வேண்டும்?'' என்று அவள் கேட்ட கடைசிக் கேள்வி என் இதயத்தையே நொறுக்கிவிட்டது.

''காதலை இந்தியர்கள் கடவுளுக்கும் மேலாக நினைக்கிறார்கள் என்பது உண்மையானால், நீ இப்படி ஒரு கேள்வியைக் கேட்டிருக்கக் கூடாது. நடித்தது போதும்... நான் உன்னை எவ்வளவு நேசிக்கிறேன் என்று தெரியாத மாதிரி இன்னும் எவ்வளவு நேரத்துக்குத்தான் இந்த

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

நாடகத்தை நீட்டப் போகிறாய்... சொல்லு!'' என்று அவள் தோளைத் தொட்டேன்.

அவ்வளவுதான்... துப்பாக்கியைக் கண்ட மணிப் புறா மாதிரி சிலுப்பிக்கொண்டு சோபாவைவிட்டு எழுந்தாள் அவள். ''லுக் மிஸ்டர்... உன் உதவி எதுவும் எனக்குத் தேவை இல்லை. இந்த நிமிஷத்தில் இருந்து என் கண் பார்வையை விட்டே நீ அகன்றுவிட வேண்டும். இல்லைஎன்றால் விளைவு விபரீதமாகும்!'' என்று ஆள்காட்டி விரல் நீட்டிச் சீறினாள். நான் மேலும் பொடியானேன்.

www.t.me/tamilbooksworld

அழகிய தன் பின்புறத்தை அசைத்துக்கொண்டே விசுக்கென்று அந்த இடத்தைவிட்டு அகன்று மறைந்தாள் ஷப்னம் சக்ஸேனா என்ற பிறவி நடிகை!

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

என்ன ஆனான் முக்தார்?

''திரிபுராரி?''

''நான்தான் பேசுகிறேன் பையாஜி... இன்னிக்கு நீங்க நம்ம விக்கி தம்பியோட பார்ட்டியாச்சே... நீங்க அங்கேதானே இருக்கணும்?''

''ம்... பண்ணை வீட்டுலதான் இருக்கேன்! நீ விஷயத்தைச் சொல்லு... முக்தார்கூட நீ 'டச்'லதானே இருக்கே?''

''முக்தாரா? அவன்கிட்டே நான் பேசியே ரெண்டு வாரம் ஆகுதே! பையாஜி... நீங்க அவனைத் தேடுறீங்கன்னா... விஷயம் ஏதோ சீரியஸ் மாதிரி தோணுதே? உங்க குரல்கூட ரொம்ப டென்ஷனா இருக்குற மாதிரி காட்டுதே... ஏதாச்சும் சிக்கலா பையாஜி?''

''ம்... அப்படித்தான். நான் அவனுக்கு ஒரு அசைன்மென்ட் கொடுத்தேன், ஒரு வாரத்துக்கு முந்தி! பணம்கூட உன்கிட்டே வந்து வாங்கிக்கச் சொல்லியிருந்தேனே... வரலியா?''

www.t.me/tamilbooksworld

''இல்லியே பையாஜி! அதுவும் இல்லாம, என்கிட்டே சொல்லாம நீங்க புது அசைன்மென்ட் எதுவும் அவனுக்குக் கொடுக்க மாட்டீங்களே... என்ன விஷயம் பையாஜி?''

''அப்புறம் சொல்றேன். இப்ப நீ அவனை எங்கே இருந்தாலும் தேடிப் புடிச்சு என்கிட்டே பேசச் சொல்லு. வழக்கமா அவன் யூஸ் பண்ற மொபைலுக்கு மூணு நாளா கால் அடிக்கறேன். அது ஸ்விட்ச் ஆஃப்லயே இருக்குது!''

''உங்களுக்குதான் தெரியுமே... புதுசு புதுசாப் பொண்ணுங்களை இழுத்துட்டுப் போயி அசிங்கம் பண்றது அவன் வாடிக்கையாச்சே... குடிச்சுப்புட்டு எந்தப் பொண்ணோட எங்கே உருண்டுட்டு இருக்கானோ? அவனோட சில ஆட்களை எனக்குத் தெரியும். அவங்க மூலமா கான்டாக்ட் பண்ண முடியுதான்னு பார்க்கறேன் பையாஜி!''

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

''இது அவசரம்... எப்படியும் அவனோட நான் பேசியாகணும்!''

(உத்தரப் பிரதேச உள்துறை அமைச்சர் ஜெகன்னாத் ராய் இணைப்பைக் கட் செய்கிறார்.)

கொலைவெறி முன்னா...

ரீத்து சொல்லியிருந்தபடி, அந்தப் பண்ணை வீட்டைத் தேடி வந்துவிட்டேன். வெகுநேரம் இருட்டிலேயே நின்றுகொண்டு, அந்த பங்களாவினுள் போகும் கார்களை அமைதியாக வேடிக்கை பார்த்துக்கொண்டு இருந்தேன். 'மொபைல் முன்னா'வாகிய நான் இப்போ 'பிஸ்டல் முன்னா' ஆகியிருந்தேன். என் கனவு ராணியோடு மும்பைக்கு ஓடிப் போக நான் வாங்கி வைத்திருந்த ரயில் டிக்கெட்டை விற்று, அந்தப் பணத்தில் வாங்கிய துப்பாக்கி என் பாக்கெட்டில் பத்திரமாக இருந்தது.

பண்ணை பங்களாவின் வாசலில் 'பேரிகேட்' வைத்துத் தடுத்து, காவலுக்கு கையில் வாக்கி டாக்கிகளுடன் நிறைய போலீஸார் நின்றிருந்தனர். ரோட்டின் எதிர்ப் புறத்தில் ஆர்வமாக ஜனம் கூடியிருந்தது. ''நடிகை ஷப்னம் சக்ஸேனா வர்றாங்களாம்...'' என்று சளசளத்துக்கொண்டு இருந்தார்கள்.

www.t.me/tamilbooksworld

மெதுவாக நடந்து பண்ணை வீட்டின் காம்பவுண்டை பெரிய ரவுண்டாக அடித்துச் சுற்றிக்கொண்டு போய், அதன் பின் பக்க வாசல் என் கண்ணில் படுகிற தூரத்தில் மரத்தின் பின்னால் காத்திருக்கத் துவங்கினேன். 11 அடிக்க 5 நிமிடங்கள் இருந்தபோது பின் கதவு சத்தம் இல்லாமல் திறந்தது. சிவப்பு சல்வார்-கமீஸ் அணிந்தபடி வெளிப்பட்டது ரீத்துவேதான். இருட்டில் இருந்து வெளிப்பட்ட என்னைப் பார்த்துவிட்டாள். ஓடோடி வந்து அணைத்துக்கொண்டாள். அவள் உடல் அழுகையில் குலுங்கியது. என் மார்பு கண்ணீரில் நனைந்தது.

ரீத்துவைத் தொடர்ந்து யாராவது வெளியே வருகிறார்களா என்று நோட்டமிட்டேன். யாரும் இல்லை. இருந்தாலும் பாக்கெட்டில் இருந்த

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

துப்பாக்கியை மறுபடி தொட்டுப் பார்த்துக்கொண்டேன். ஆனானப்பட்ட உள்துறை அமைச்சரின் மகள், அதிரடி தாதாக்களை ஜஸ்ட் லைக் தட் டீல் செய்யும் விவேக் விக்கிராயின் தங்கை, தான் சொன்ன வாக்கைக் காப்பாற்றிவிட்டாள். ஒன்றும் உதவாத இந்த மொபைல் திருடன் மேல்கொண்ட காதலால், நள்ளிரவில் தன் கோடீஸ்வர சொந்தங்களிடம் இருந்து பிரிந்து வெளியே வந்துவிட்டாள்.

ஆனால், நான்?

என் அப்பாவின் மரணத்துக்குக் காரணமான இவளுடைய அண்ணனைப் போட்டுத் தள்ளுவதே லட்சியம் என்று மனதை மாற்றிக்கொண்டது இவளுக்கு எப்படித் தெரியும்? நடைபாதையில் எங்கள் குடும்பமே படுத்திருந்த பின்னிரவில், குடி போதையில் அசுர வேகத்தில் வந்து என் அப்பாவை நசுக்கிக் கூழாக்கிய விவேக் விக்கி ராய் அந்த வழக்கில் இருந்து விடுபட்டு இருக்கலாம். என் துப்பாக்கியில் இருந்து அவன் தப்பிக்க முடியாது என்பதை ரீத்துவுக்கு இப்போது விளக்குவதற்கு எனக்கு நேரம் இருக்கிறதா?

''வா முன்னா... எல்லாரும் பார்ட்டி பிஸியில் இருக்காங்க. நாம் இப்போதே ரயில்வே ஸ்டேஷனுக்கு ஓடிப்போயிடுவோம்...'' என்று என் கைகளைப் பிடித்து, மெயின் ரோடு நோக்கி இழுத்தாள் ரீத்து.

''மன்னிச்சுக்கோ ரீத்து! இப்ப நான் உன்னோட வர முடியாது. பண்ணை வீட்டுக்குள்ளே எனக்கொரு புது வேலை வந்திருக்குது!'' என்று நான் சொல்ல... அவள் உடம்பு அச்சத்தில் ஆடி நின்றது.

''என்ன? நீ உள்ளே போகப்போறியா? எதுக்கு? இன்னும் கொஞ்ச நேரம் இங்கே நாம நின்னாலும், உள்ளே நான் இல்லைங்கிறது தெரிஞ்சு என்னைத் தேடி ஆட்கள் புறப்படுவாங்க. உன்னோடு நான் இருக்கிறதைப் பார்த்தா உன்னை பீஸ் பீஸாக் கிழிச்சுப் போடுவாங்க!''

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

''நீ என்னோட மறுபடி உள்ளே வாயேன்... நான் விவரமா சொல்றேன்...'' என்று அவளை பண்ணை வீட்டின் பின் கதவு வழியாக உள்ளுக்குள் இழுத்தேன். முற்றிலும் குழம்பிப்போனவளாக, கண்களைத் துடைத்துக்கொண்டு என்னோடு வந்தாள் ரீத்து.

தூரத்தில் செயற்கை அருவி ஒன்றின் சலசலப்பு... சற்றே நெருங்கினால் மனிதர்களின் சிரிப்பு சத்தங்கள்... அதோடு இழையும் இசை... இன்னும் கொஞ்சம் நெருங்கியபோது ஒரு நீச்சல் குளத்தைச் சுற்றித்தான் பார்ட்டி களை கட்டியிருக்கிறது என்று புரிந்தது. ''ஏய், நீ பாட்டுக்கு எங்கே போய்க்கிட்டே இருக்கே?'' என்று பதறி, ஒரு நாவல் மரத்தின் பின்னால் என்னை ஒளித்துக்கொண்டாள் ரீத்து.

''நடுங்காதே ரீத்து. இனிமே பயத்தில் இருந்து உனக்கு நிரந்தர விடுதலை வாங்கிக் கொடுக்கத்தான் நான் தயாரா வந்திருக்கேன்!''

''முன்னா... ஏன் என்னென்னமோ உளறுறே? விடியற்காலை கிளம்புற ரயிலில் நாம் மும்பைக்கு ஓடிப் போய், யார் கண்ணிலும் படாம நிம்மதியா வாழுறதாத்தானே திட்டம்... எதுக்கு இப்படிக் குழப்பியடிக்கிறே?'' - சின்னதொரு சிடுசிடுப்பும் வெளிப்பட்டது அவளிடம்.

www.t.me/tamilbooksworld

- தொடர்ந்து சந்தேகிப்போம்...

Copyright © Vikas Swarup 2008

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

## மோட்டிவ் 6

*விவேக் விக்கிராய் பார்ட்டி கொடுக்கும் பண்ணை வீட்டுக்குள் இருக்கிறோம். கனவு ராணி ரீத்துவுடன் மும்பைக்கு ஓடிப் போக விரும்பிய முன்னா, இப்போது அவளது அண்ணன் விவேக் விக்கி ராயைக் கொலை செய்யும் நோக்கத்துடன் இருக்கிறான். அதனால், ரீத்துவைக் கழற்றிவிட நினைக்கிறான்.*

www.t.me/tamilbooksworld

### ஒரு நாயகன் உருவாகிறான்!

ரீத்துவிடம் இருந்து விடைபெறும்போது, அவள் என்னை முற்றிலுமாக வெறுத்திருக்க வேண்டும் என்று முடிவு கட்டி இருந்தேன். மெள்ள அவள் தோளைத் தொட்டேன். ''திட்டம் நாம் போட்டது நிஜம்தான் ரீத்து. ஆனா, நீ நட்சத்திரம்... நான் தரையில் இருந்து வேடிக்கை பார்க்கத்தான் லாயக்கு! எனக்கேத்த இன்னொரு பெண்ணை இடையில் நான் சந்திச்சேன். உன்னாட்டம் அவள் அழகி இல்லை. ஆனா, என்னாட்டம் ஏழை!''

இருட்டில் என்னை ஊடுருவினாள் தன் நட்சத்திரக் கண்களால். ''என்ன முன்னா... குடிச்சிருக்கியாடா?''

பலமாகத் தலையாட்டி மறுத்தபோது, என் கண்கள் கலங்கின. இருந்தாலும் அந்தப் பொய்யிலேயே நிலைத்தேன்.

''நிஜம்தான் சொல்றேன் ரீத்து... ஒவ்வொரு வார்த்தையும் நிஜம்!''

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

''அப்ப நீ என்னை லவ் பண்ணலையா?''

''சத்தியமா இந்த நொடிகூட உன்னை நான் லவ் பண்றேன் ரீத்து. ஆனா, காதல் ஒரு கழிசடை... கனவுக்கு அது சுகமாத்தான் இருக்கும். நடைமுறைக்கு வரும்போது துக்கம்தான் அதிகம். நாம் டெல்லியைவிட்டு... உன் கொலைகார அண்ணனைவிட்டு... அராஜக அப்பாவைவிட்டு மும்பைக்கு ஓடிப்போறது பெரிய காரியம் இல்லை! ஆனா, நிதர்சனம்னு ஒண்ணு இருக்கு... அது கொடுக்கிற துன்பங்களைவிட்டு எங்கேயும் ஓடி ஒளிய முடியாது!'' - எனக்கே ஆச்சர்யம்! நானா இத்தனை கோவையாகப் பேசுகிறேன், சினிமா டயலாக் கணக்காக!

''முன்னா! என் கண்ணைப் பார்த்துச் சொல்லு. காதல் ஒரு கழிசடைன்னு இப்பத்தான் உனக்குத் தெரிஞ்சதா? அன்னிக்கு ஒரு லாட்ஜுக்குள்ளே என்னை முழுசா எடுத்துக்கிற வாய்ப்பு கிடைச்சபோதுகூட, என் கண்ணீரைப் பார்த்து, கௌரவமா விலகிப்போனியே... அப்ப என்ன தோணுச்சு? என்ன வந்தாலும் போராடிப் பார்த்துடலாம்னு உறுதியா நிக்கறவங்களுக்கு, காதல் எப்பவுமே வரம்தான் முன்னா! தயவுசெஞ்சு சொல்லு... நீ விலகிப் போக நினைக்கிறதுக்கு ஏதோ ஒரு காரணம் இருக்கு. இப்பவே அது எனக்குத் தெரிஞ்சாகணும்!'' - கிசுகிசுப்பான குரலில் கேட்டு உலுக்கினாள் ரீத்து.

www.t.me/tamilbooksworld

சூழலின் அபாயம் தாண்டி, பெரியதொரு விசும்பல் சத்தமாக வெளிப்பட்டது என்னிடம். எங்கே இருந்தோ சுழலும் ஒரு விளக்கின் வெளிச்சம் ரீத்துவின் முகத்தைத் தடவிக்கொண்டு நகர்ந்தது. களங்கமற்ற அவள் கண்களும், பால் வெள்ளை முகமும் பார்க்கையில், தூய்மையே உருவான ஒரு தேவதை என் எதிரில் நின்று சோதிப்பதுபோல் இருந்தது.

''சரி ரீத்து... இப்போதைக்கு நான் உன்னை எங்கேயும் கூட்டிப் போக முடியாது. எனக்குள்ளே சில காயங்கள் இருக்கு. அவை ஆறியதும் நான் வருகிறேன். அதுவரை நீ எனக்காகக் காத்திருக்கத் தயாரா? இடையில் இந்த முன்னா என்ன செய்தாலும் மன்னித்து

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

ஏற்றுக்கொள்ள நீ தயாரா? நீ இப்போ எந்த பதிலும் சொல்ல வேண்டாம். நடக்கப்போவதை எல்லாம் தூர நின்னு கவனி. அதுக்குப் பிறகும் மனம் இருந்தா, நான் தேடி வரும்போது நீயும் இப்படியே காத்திருந்தா... அப்போ முடிவு செய்யலாம் - காதல் ஒரு கழிசடை இல்லை; அது மகா பெரிய வரம்னு!''

என் கன்னத்தில் மிருதுவாக முத்தம் பதித்தாள். ''காத்திருப்பேன் முன்னா. காதலின் பேரை நான் காப்பாற்றுவேன். யாரும் பார்ப்பதற்குள் நீ பத்திரமாக வெளியே போய்விடு!'' - என் உள்ளங்கையை எடுத்து அங்கும் ஒரு முத்தமிட்டுவிட்டு, பண்ணை வீட்டு மெயின் கட்டடம் நோக்கி நடந்து மறைகிறாள் ரீத்து. அவள் முத்தம் பதிந்த என் கைகளுக்குள் இப்போது எடுத்துக்கொண்டேன் துப்பாக்கியை.

'எங்கே அந்த விவேக் விக்கி ராய்?' என்று என் கண்கள் அலையத் தொடங்கிய அடுத்த நொடி, ''வாவ்! பையா நீ இந்த இருட்டில் நின்னு என்ன செய்யுறே?'' என்று கிட்டத்தில் ஒரு குரல் கேட்டது.

நல்ல உயரமாக, கச்சிதமாக தாடியை கட் செய்து, சந்தன கலரில் குர்த்தா பைஜாமா அணிந்து புன்முறுவலோடு நின்று இருந்தார் அந்த நபர்.

குபுக்கென்று ஒரு பயக் குதிரை கிளம்பியது என்னுள். மிரண்டுபோய்ப் பார்த்தேன்.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

நல்ல போதையும் அந்தக் கண்களில் தெரிந்தது.

''பயப்படாதே பையா. ரீத்துவை சின்னக் குழந்தையில் இருந்தே எனக்குத் தெரியும். நீங்க பேசிக்கிட்டதை கேட்டதுக்கு ரொம்ப ஸாரி!'' - இப்போதும் அதே சிரிப்பு.

நல்ல காலம்... இருட்டில் துப்பாக்கியைப் பார்க்கவில்லை. மறுபடி பாக்கெட்டிலேயே போட்டுக்கொண்டேன். ஃப்ளாஷ் வெளிச்சம் அவ்வப்போது எங்களைக் கடந்து மறைந்துகொண்டு இருந்தது.

''காதல்னா என்னன்னு கேமரா மூலமா உலகத்துக்குச் சொல்றதில் என்னைவிட கில்லாடி கிடையாதுனு நினைச்சேன். ஆனா, ரீத்துவிடம் நீ பேசியதைக் கேட்ட பிறகு, உன்னோட கம்பீரம் கலந்த நேர்மையைப் பார்த்த பிறகு... புதுசாக ஒரு காதல் அத்தியாயம் எழுத வேண்டிய நேரம் வந்திடுச்சின்னு புரிஞ்சுது.''

''சார்... நீங்க?'' மென்று விழுங்கினேன்.

www.t.me/tamilbooksworld

''கேள்விப்பட்டது இல்லையா... பத்திரிகைகளிலும், டி.வி-யிலும் என் முகத்தை நீ பார்த்தது இல்லையா? நான்தான் ஜே.சாட்டர்ஜி. பாலிவுட் டைரக்டர். அற்புதமான ஒரு கதையைத் தயார் பண்ணி, அதுக்கு ஷப்னம் ஸக்ஸேனாவோட கால்ஷீட்டும் வாங்கி வெச்சிருக்கேன். நான் தேடுற மயக்கும் மர்மக் காதலன் ரோலுக்கு இப்ப இருக்கிற எந்த ஹீரோவும் சரிப்பட்டு வர மாட்டான். நான் தேடிக்கிட்டே இருந்த அந்தப் புதுமுகம் நீயேதான்!'' - கையில் இருந்த கோப்பையை உயரத் தூக்கிச் சிரித்தார். விஸ்கி தளும்பித் தரையில் சிதறியது.

''சார்... ரகசிய கேமரா வெச்சு ஆட்களை முட்டாளாக்குகிற ஷோ இங்கே நடக்குதா? எங்கே வெச்சிருக்கீங்க கேமராவை? நீங்க எந்த சேனல்?'' என்று நான் சுற்றுமுற்றும் பார்த்தேன். ஆனால், இந்த முகம் நிஜமாகவே அந்த டைரக்டரின் முகம்தான் என்பதாகத் தோன்றியது.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

என் தோளில் கை வைத்து அழுத்தியவர், ''ரகசிய கேமராவா? உலகமே பார்க்குற அளவுக்கு வெளிச்சத்தில் குளிப்பாட்டப்போறேன் உன்னை. ஆனா... முன்னா என்கிற பேர் உனக்குச் சரியா வராது...'' தாடியை வருடியபடி அண்ணாந்து சில நிமிடம் யோசித்தவர்,

''யெஸ்! ஷிராக்... அதான் இனி உன் பேர். ஷிராக்னா.. ஒளிவிளக்குனு அர்த்தம். ஓகே-வா?'' - லேசாகத் தடுமாறிக்கொண்டே தன் குர்த்தாவுக்குள் கைவிட்டு பர்ஸை எடுக்கிறார். அதில் இருந்து ஒரு கட்டுப் பணத்தை உருவி,

''இந்தா! இதில் இருபதாயிரம் வரை இருக்கும்னு நினைக்கிறேன். என் வாழ்த்துகள் கலந்த அட்வான்ஸ். அதாவது, அட்வான்ஸ் வாழ்த்துகள்!'' - இடி இடியெனச் சிரிக்கிறார் சூப்பர் டூப்பர் டைரக்டர் ஜே.சாட்டர்ஜி. ஆமாம், அவரேதான் இது!

www.t.me/tamilbooksworld

நான் நம்ப முடியாமல் பார்த்துக்கொண்டு இருக்கிறேன். நான் அடுத்துப் பேச வாயெடுப்பதற்குள், என் மேல் பாக்கெட்டில் இருக்கும் மொபைல் போனை சுவாதீனமாக எடுக்கிறார். அதில் இருந்து தன் மொபைலுக்கு அவரே ஒரு மிஸ்டு கால் கொடுக்கிறார். வருகிற நம்பரை உற்றுப் பார்த்துவிட்டு, 'ஹீரோ ஷிராக்' என்று பெயர் போடுகிறார்.

''நாளை காலை நான் உன்னைக் கூப்பிடுவேன். நீ டெல்லியைவிட்டு எங்கும் நகராதே!'' என்றபடியே நடந்து நீச்சல் குளத்தின் வெளிச்ச வெள்ளம் நோக்கி நடக்கிறார். கோப்பை ஏந்தாத அவருடைய மறு கை காற்றில் பியானோ வாசித்தபடி இருக்கிறது.

என்னால் நம்பத்தான் முடியவில்லை. செத்துப்போன அப்பாவின் ஆவிக்கு ஆறுதல் கொடுக்க விவேக் விக்கி ராயைப் போட்டுத் தள்ள வந்த எனக்கு, பாலிவுட் ஹீரோ சான்ஸா? அதுவும் இளைஞர்களின் இதயத் தாரகை ஷப்னம் சக்ஸேனா எனக்கு ஜோடியா? பெயிலியர் படமே கொடுக்காத ஜே.சாட்டர்ஜி என்னை இயக்கப்போகிறாரா?

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*அப்படியானால் நான் வந்த திட்டம்? என் கையில் இருக்கும் துப்பாக்கி? விவேக் விக்கி ராயின் கதை முடிப்பது? ரீத்துவுக்கு நான் கொடுத்த வாக்குறுதி?*

*திரும்பிய பக்கம் எல்லாம் மெகா போஸ்டர்களில் நான் ஜொலிக்கிறேன். மெர்சிடிஸ் பென்ஸ் காரில் என் அருகே ரீத்து அமர்ந்திருக்க... ''ஷிராக்... ஷிராக்!'' என்று எங்கும் வெறி பிடித்த ரசிகைகளின் கூச்சல். அடுத்தடுத்து கண்களைப் பறித்தெடுக்கும் ஃப்ளாஷ் மின்னல்கள். என் கைகளைப் பற்றிக்கொண்டு ரீத்து பெருமையாகக் காரைவிட்டு இறங்குகிறாள். விவேக் விக்கி ராய் எங்களைப் பெருமையாகப் பார்த்துப் புன்னகைக்கிறான்.*

*குபீரென்று கிளம்பும் வாண வேடிக்கைகள், மும்பையின் இரவை வண்ணத்தில் நிறைக்கின்றன. கண்களைக் குருடாக்கும் ஒளியில் என் உடம்பு குலுங்குகிறது. நான் தலையை உலுக்கிக்கொண்டு நிமிரும்போது நின்றிருப்பது மும்பை அல்ல... டெல்லிதான் என்று புரிகிறது.*

www.t.me/tamilbooksworld

*வாண வேடிக்கை நடப்பது உண்மைதான். பண்ணை வீட்டின் பின்பக்கத்தில் இருந்து விவேக் விக்கி ராயின் ஆட்கள் அடுத்தடுத்து வெடி கிளப்புகிறார்கள்.*

*அந்தக் கொண்டாட்ட ஒளியும் ஒலியும் யாருக்காக... கொலை செய்துவிட்டு விடுதலைத் தீர்ப்பு வாங்கிய விவேக் விக்கி ராய்க்கா? அல்லது, அவனைக் கொலை செய்ய வந்த இடத்தில் திடீர் ஹீரோ சான்ஸ் அடித்திருக்கும் எனக்கா?*

- தொடர்ந்து சந்தேகிப்போம்...

Copyright © Vikas Swarup 2008

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*மோட்டிவ் 6*

*விவேக் விக்கிராய் பார்ட்டி கொடுக்கும் பண்ணை வீட்டுக்குள் விருந்தினர்கள் வந்து குவிந்துவிட்டார்கள்.*

*முடிந்தது கதை!*

*அஷோக் ராஜ்புத் கொடுத்திருந்த அலாரம் ஒலிப்பதற்காக, மரக் கூட்டத்தின் இருளில் காத்திருந்தான் ஏகேடி. அவனுக்கு ரொம்பப் பெருமையாக இருந்தது. கொத்த வந்த பாம்பை வெறுங்கையால்*

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

பிடித்துப் போட்டு, ஒரு பெரியவரின் உயிரை அவன் காப்பாற்றி இருக்கிறான். அவர் உடம்பில் புகுந்திருந்த ஆவியை, தனது மந்திர குரு நோகாய் கற்றுக்கொடுத்த டெக்னிக் மூலம் விரட்டி அடித்த சாதனையும் செய்து இருக்கிறான்.

உயிர் காத்த பரிசாக அந்தப் பெரியவர் கொடுத்திருக்கும் ரூபாய் நோட்டுகள் அவன் பைக்குள் மொடமொடத்தன. பைக்குள் இருக்கும் அலாரம் அடித்ததும் எழுந்து போய், மெயின் ஸ்விட்ச்சை அணைக்க வேண்டியது. கார் ஷெட்களின் இடுக்கில் பதுங்கி நடந்து, தூரத்தில் தெரியும் அந்த சிறு கோயிலை அடைய வேண்டியது. அங்கே இருக்கும் புனிதக் கல் இன்கெடாயியைக் கைப்பற்றிக்கொண்டு காற்றாக இந்தப் பண்ணை வீட்டில் இருந்து பறக்க வேண்டியது.

தனக்காகவே காத்திருக்கும் பார்வையற்ற சம்ப்பியின் முகம் எகேடியின் மனதில் நிழலாடியது. இரவோடு இரவாக அவளைக் கூட்டிக்கொண்டு போய் ரயிலைப் பிடித்து கொல்கத்தா செல்வது. அங்கே இருந்து கப்பல் பிடித்து தன்னுடைய தீவுக்குப் போவதற்கு அவனிடம் தேவைக்கும் மீறியே பணம் இருந்தது.

www.t.me/tamilbooksworld

தங்கள் இனத்தின் அழிவைத் தடுக்கப் போகும் 'இன்கெடாயி' கல்லை மீட்டுக்கொண்டு வெற்றி வீரனாகத் தீவுக்குள் போய் இறங்கும்போது, தனது ஓங்கே இனத்து ஆதிவாசிகள் எத்தனை ஆரவாரமாக வரவேற்பார்கள் என்று நினைத்துப்பார்க்கும்போதே இனித்தது எகேடிக்கு. இந்தியாவில் இருந்து தன்னுடன் கூட்டிச்செல்லும் காதலி சம்ப்பிக்கும் ஏக மரியாதை இருக்கும் என்று நினைத்துக்கொண்டான்.

இதோ, அலாரம் பைக்குள் 'பீப்' ஒலிக்கிறது. சட்டென்று அதை அணைத்து அமைதியாக்கிவிட்டு பண்ணை வீட்டின் புல்வெளிப் பிரதேசத்தைப் பார்த்தான் எகேடி. பார்ட்டிக்கு வந்திருந்த கூட்டம் எல்லாம் ஏக ஆரவாரத்தோடு வெகு தூரத்தில் கொண்டாடிக்கொண்டு

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

இருந்தது. காலியாக இருந்த புல்வெளியில் ஆட்கள் யாரும் இல்லை. ஒரு காட்டுப் பூனையின் லாகவத்தோடு தரையோடு தரையாகப் பதுங்கி மரங்களைவிட்டு வெளியே வந்தான் எகேடி. சுழலும் ஃப்ளாஷ் விளக்குகளின் ஒளி தன்னைக் கடக்கும்போது அசையாது படுத்திருந்தான்.

ஊர்ந்து ஊர்ந்து முன்னேறி, மெயின் ஸ்விட்ச் போர்டை அணுகிவிட்டான். அவனுக்கென்றே போட்டுவைத்த மாதிரி அங்கே ஒரு பிளாஸ்டிக் சேர் கிடந்தது. விருட்டென்று அதில் தாவி ஏறி, ஸ்விட்சை அணைக்கக் கை நீட்டினான்.

''ஏய்... யாரு நீ?'' என்றபடி முரட்டுக் கரம் ஒன்று அவனைப் பிடித்து சேரில் இருந்து கீழே இழுத்துத் தள்ளியது. வாட்டசாட்டமாக இருந்த அந்த கறுப்பு மனிதன், சாம்பல் நிற பேன்ட்டும் வெள்ளைச் சட்டையும் அணிந்து இருந்தான். 'சிக்கல் வந்தால் என்ன சொல்வது...' என்று அஷோக் ராஜ்புத் சொல்லிக் கொடுத்தது அரைகுறையாக நினைவுக்கு வந்தது. ''நான் மிஸ்டர் சர்மாவோட டிரைவர். அவர் பார்ட்டியிலே இருக்காரு...'' என்றான்.

கையில் ஒரு ஹாக்கி ஸ்டிக் வைத்திருந்த அந்த மனிதன், அதை எகேடியின் முகத்துக்கு நேரே ஆட்டியபடி, ''டிரைவர்னா..? இங்கே எதுக்கு வர்றே? டிரைவர்களுக்குன்னே அங்கே ஒரு தனி இடம் கொடுத்திருக்கு பாரு. அதைத் தாண்டி நீ வரக் கூடாது... ஓடு!'' என்றான் மிரட்டலாக.

எகேடி ஒரே பாய்ச்சலாக அவன் காட்டிய இடத்துக்குப் போனான். கூட்டம் கூட்டமாக டிரைவர்கள் உட்கார்ந்து ரம்மி ஆடிக்கொண்டு இருந்தார்கள். சிலர் சளசளவென்று பேசிக்கொண்டு இருந்தார்கள். இன்னும் சிலர் தரையில் துண்டு விரித்துப் போட்டுப் படுத்திருந்தார்கள். உள்ளே பார்ட்டி முடிவதற்கு முன்பாகவே, இவர்களுக்கு சாப்பாடு சப்ளை ஆகியிருந்தது. ஆங்காங்கே எச்சில் தட்டுகளும், கப்புகளும் இறைந்துகிடந்தன.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*எகேடி மறைவுக்குள் இருந்தபடியே தூரத்து ஸ்விட்ச் போர்டைப் பார்த்தான். இப்போது அந்த ஹாக்கி ஸ்டிக் ஆசாமி ஸ்விட்சுக்குக் கீழே இருந்த நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு, உருட்டு விழிகளால் அங்கும் இங்கும் நோட்டமிட்டுக்கொண்டு இருந்தான். எகேடிக்குப் பயம் வந்துவிட்டது. நேரம் பாட்டுக்கு ஓடிக்கொண்டே இருக்கிறது. பார்ட்டி முடிந்து எல்லோரும் கிளம்ப ஆரம்பித்து விட்டால், அப்புறம் எப்படி அந்தக் கோயிலை நெருங்குவது? அங்கே இருக்கிற இன்கெடாயி கல்லை எப்படி எடுப்பது?*

*டிரைவர்கள் பகுதியில் இருந்து நழுவி, சுவர் ஓரமாகவே நடந்து பண்ணை வீட்டு பங்களாவை இப்போது நெருங்கிவிட்டான். ஹாக்கி ஆசாமி உட்கார்ந்திருந்த இடம் இப்போது கல்லெறி தூரத்தில் இருந்தது. அவன் ஒருகணம் நகர்ந்தாலும், ஓடிப் போய் ஸ்விட்ச் போர்டை அணைக்கத் தயாராகி நின்றான், எகேடி. இங்கே இவன் நின்றிருந்த இடத்தின் அருகே இருந்த ஜன்னல் வழியாக, பண்ணை வீட்டுக்குள் காட்சிகள் தெரிந்தன. உயரமாக, கோட்-சூட் அணிந்திருந்த மனிதன் அந்தக் கூட்டத்தின் நடுநாயகமாக நின்றான். அது வரை ஓடிக்கொண்டு இருந்த இசை சட்டென்று நின்றது. 'விய்ய்ங்' என்று ஸ்பீக்கர் ஒரு தடவை கதறியது. மைக்கை செக் பண்ணிவிட்டு கோட்-சூட்காரன் பேச ஆரம்பித்தான்.*

www.t.me/tamilbooksworld

*''அன்புள்ளம் கொண்ட அனைத்து நெஞ்சங்களுக்கும் மனமார்ந்த நன்றி. நேரடியாகவும் மறைமுகமாகவும் என் நலனுக்காக பல சந்தர்ப்பங்களில் உதவி புரிந்தவர்கள் இங்கே கூடி இருக்கிறீர்கள். செய்யாத ஒரு கொலைக்கான பழி என் மீது விழுந்தபோது, நீங்கள் அத்தனை பேரும் எவ்வளவு துடித்து இருப்பீர்கள் என்று எனக்குத் தெரியும். நீதி மட்டும் என் பக்கம் இல்லாமல் போயிருந்தால்... நீதிமன்றம் என்னை நிரபராதி என்று அடையாளம் காட்டாமல் போயிருந்தால்... இந்நேரம் நான் சிறைச்சாலைக்குள் இருந்திருப்பேன். ஆனால், நீதி*

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

பிழைத்தது. நாம் எல்லாம் மகிழ்ச்சியாக ஒன்று கூடி இருக்கிறோம்!'' என்று சொன்ன கோட்-சூட்காரன், ''இந்த உலகத்திலேயே மிக முக்கியமாக ஒருவருக்கு நான் நன்றி கூறியே ஆக வேண்டும். அது வேறு யாரும் இல்லை... என் பாசத்துக்குரிய தந்தையார்!'' என்றபடி இரு கைகளையும் நீட்டியபடி முன்னேறினான். வெள்ளை குர்த்தா - பைஜாமா அணிந்த நரைமுடி ஆசாமி ஒருத்தரும் அதுபோலவே இரு கைகளையும் நீட்டியபடி முன்னால் வந்து அந்த கோட்-சூட்காரனை அணைத்துக்கொண்டார். மாறி மாறி இருவரும் முத்தமிட்டுக்கொண்டார்கள்.

பைஜாமா - குர்த்தா ஆசாமி கண்களைத் துடைத்துக்கொள்ள, அவர் கைக்கு மைக் மாறியது. ''பாசத்துக்குரிய விருந்தினர்களே... அரசியல்வாதியின் கைக்கு மைக் வந்துவிட்டாலே ஆபத்துதான்!'' என்று அவர் சொல்ல... குடிபோதையில் இருந்த கூட்டம் கலகலத்துச் சிரித்தது. ''ஆனால், இங்கே நான் உத்தரப் பிரதேசத்தின் உள்துறை அமைச்சர் ஜெகன்னாத் ராயாக வரவில்லை. என் மகன் விவேக் விக்ராய்க்கு மறு ஜென்மம் கிடைத்ததைக் கொண்டாடும் தந்தையாக மட்டுமே வந்திருக்கிறேன். என் மகனின் வாழ்க்கையில் நீண்டிருந்த கறுப்பு இரவு, நீதிமன்றத் தீர்ப்பின் மூலமாக முடிவுக்கு வந்துவிட்டது. அவனோடு இத்தனை ஆண்டு காலமும் துணை நின்ற உங்களின் ஆதரவும் அன்பும் இனியும் தொடரவேண்டும் என்று வேண்டிக்கொள்கிறேன். அவன் நீண்ட ஆயுளுடன் வாழ்ந்து...'' - குர்த்தா - பைஜாமா ஆசாமி இதைச் சொல்லிக்கொண்டு இருக்கும்போது, எகேடி கவலையாக அந்த ஸ்விட்ச் போர்டையே பார்த்துக்கொண்டு இருந்தான். 'பார்ட்டி முடிந்து எல்லோரும் வீட்டுக்குக் கிளம்பும் நேரமும் வந்துவிட்டது போலிருக்கே! எப்படி கரன்ட்டை அணைப்பது' என்று அவன் படபடத்துக்கொண்டு இருந்த அதே நேரம், பிளாஸ்டிக் சேரில் அமர்ந்திருந்த ஆசாமி

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

எழுந்தான். சுற்றுமுற்றும் பார்த்தான். பிளாஸ்டிக் சேர் மீது ஏறினான். மெயின் ஸ்விட்ச் போர்டில் கையைவைத்து இழுத்தான்.

'படக்'கென்று சர்வமும் இருளானது.

''ஏய், யாரப்பா அங்கே? கரன்ட் போயிடுச்சு போலிருக்கே... ஜெனரேட்டரைப் போடுங்க'' என்று இருட்டில் யாரோ உரக்கச் சொல்லிக் கொண்டிருக்க... எகேடி அயர்ந்தே போனான். ஸ்விட்ச் போர்டை அணைத்துவிட்டு சுவரோரமாகப் பதுங்கியபடி கோயிலை அடைய வேண்டும் என்பது அஷோக் ராஜ்புத் இவனுக்குக் கொடுத்திருந்த கட்டளை. ஆனால், கரன்ட்டை வேறு யாரோ ஒருத்தன் அணைக்கிறானே! யார் அணைத்தால் என்ன... வேலை சுலபமாச்சு என்று எண்ணியபடி, ஒரே தாவாகக் கோயிலை நோக்கி ஓடினான் எகேடி. ஜெனரேட்டர் எனப்படும் மின் உற்பத்தி சாதனம் உயிர் பெற்று, எங்கும் வெளிச்சம் சூழ்வதற்குள் 'இன்டொடாயி' கல்லை எடுத்துவிடத் துடித்தது உள்ளம்.

www.t.me/tamilbooksworld

''டமார்!'' - என்று எகேடி மோதி விழுந்தான் புல்வெளியில். அங்கே போட்டிருந்த சிறிய மேஜையோ என்னவோ... அவனை இடறியிருந்தது. காலில் பட்ட காயம் விண்ணென்று மண்டை வரை ஏறித் தாக்க... நொண்டியபடித்தபடி எழுந்து மறுபடி ஓடத் தொடங்கினான். ''படீர்!'' - இந்த தடவை பண்ணை வீட்டுக் கட்டடத்துக்குள் இருந்து கேட்டது சத்தம். அடைத்துக்கொண்ட கார் இன்ஜின் திடீரென்று விடுபட்டால் கேட்குமே... அப்படி ஒரு சத்தம். நின்று நிதானிக்க எகேடிக்கு நேரம் இல்லை. கோயிலை அடைந்தான். இருட்டுக்கு கண்களைப் பழக்கிக்கொண்டு விறுவிறுவென்று தடவினான். வழுவழுப்பாக அவன் கைகளில் கிடைத்த வஸ்துவை எடுத்து கண்களுக்கு அருகில் வைத்துப் பார்த்தான்.

- தொடர்ந்து சந்தேகிப்போம்...

Copyright © Vikas Swarup 2008

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

## மோட்டிவ் 6

விவேக் விக்கி ராய் பார்ட்டி கொடுக்கும் பண்ணை வீட்டுக்குள் கரன்ட் கட்டாகி 'படீர்' சப்தம் கேட்கிறது. ஆனால், ஏகேடி அதைப்பற்றிக் கவலைப்படாமல் இன்கெடாயியைக் கையில் எடுக்கிறான்.

www.t... world

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

## பிடிபட்டான் எகேடி!

இருட்டில் தன் உள்ளங்கைக்குள் எடுத்துத் துழாவிப் பார்த்ததுமே, எகேடியின் உடம்பு முழுவதும் மின்னோட்டம் பாய்ந்தது. 'தெய்வமே! இது நீயேதான். எங்கள் குலத்தைக் காக்க வந்த இன்கெடாயி கல்லேதான்!' என்றபடி அந்த வழுவழு கல்லை உள்ளங்கைக்குள் இறுக்கியபடி, மார்பில் சந்தோஷமாக அறைந்துகொண்டான். பைக்குள் அதைத் திணித்துக்கொண்டு, அதன் சுருக்குவாயை இறுக்கி மூடிக்கொண்டு, பையைத் தோளில் மாட்டிக்கொண்டு, சிறுத்தைக் குட்டி மாதிரி ஓடினான். அவன் ஏற்கெனவே பார்த்துவைத்து இருந்த இடத்தில் காம்பவுண்டு சுவர் மீது ஏறுவதற்குப் பிடிமானம் இருந்தது. அதன் வழியே ஏறி, சுவர் உச்சிக்குப் போய், சற்றே தள்ளி வெளியே நிற்கும் மரத்தின் கிளைக்குத் தாவிவிட்டால்... வெற்றி... விடுதலை... உல்லாசம்!

'சம்ப்பி! இதோ வந்துகொண்டே இருக்கிறேன். நாம் கொல்கத்தா போய் கப்பல் பிடிக்க வேண்டியதுதான்!' என்று மனசுக்குள் வீறிட்டபடி, குறிப்பிட்ட பகுதியை அடைந்து, அசாத்திய உயரம்கொண்ட காம்பவுண்டு சுவர் மீது ஏறுவதற்கு எகேடி வாகு பார்த்த நொடியில்... இரைச்சலோடு ஜெனரேட்டர் இயங்கத் தொடங்கியது. குபீரென்று வெளிச்சம் எங்கும் பரவியது. உச்சியில் பொருத்தியிருந்த சுழல் விளக்குகளும் ஒளி வெள்ளம் துப்பியபடி சுழல ஆரம்பித்தன. எகேடியை தாண்டிச் சென்ற வெளிச்ச வட்டம், சற்றுத் தயங்கி மறுபடி அவனிடமே வந்து நின்றது. திடுக்கிட்ட பெருச்சாளியாகத் தயங்கி முழித்தான் எகேடி.

''ஏய், யார் நீ? அசையாம அப்படியே நில்லு...'' என்று ஓடி வந்த ஒரு போலீஸ்காரர் அவன் இடுப்பில் தன் துப்பாக்கியைவைத்து அழுத்தினார். ''எதுக்காக இங்கே வந்தே?'' என்றபடி கைகளை முறுக்கி எகேடியைக் குப்புறப் படுக்கவைத்தார். அவன் தோளில் இருந்த பையை வாங்கி தரையில் உதறினார். சிவப்புக் களிமண் உருண்டைகள்...

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

எலும்புத் துண்டுகளால் ஆன மாலை... ஒரு அலாரம்... அதோடு வழுவழுவென்று என்ன இது? எடுத்துப் பார்த்தார்.

''இது என்னடா? ஏதோ குட்டி சிவலிங்கம் மாதிரித் தெரியுது?'' என்றபடி பையை அவர் மேலும் வேகமாக உதற... பளபளவென்று ஒரு கைத்துப்பாக்கி கடைசியாக வெளியே வந்து விழுந்தது.

எகேடியைத் தங்கள் இயக்கத்துக்குள் இழுப்பதற்காக அவன் குடிசைக்கு முன்பு வந்த ஜார்கண்ட் தீவிரவாதிகள், இவனுடைய விருப்பமே இல்லாமல் திணித்துவிட்டுப் போயிருந்த துப்பாக்கி.

அதைப் பார்த்ததும் போலீஸ்காரர் பதறி நிமிர்ந்தார். ''ஏய், என்ன பண்றதுக்காக இங்கே வந்தே... சொல்லுடா!'' என்று எகேடியின் முதுகில் ஏறி ஒரு காலை வைத்து மிதித்தார். தூரத்தில் பண்ணை வீட்டுக்குள் இருந்து வீறிட்டு அலறும் சத்தம் கேட்டது -

www.t.me/tamilbooksworld

''ஐயோ... விவேக் விக்கி ராயை யாரோ சுட்டுட்டாங்க!'' என்ற கதறல் தீனமாகக் கேட்டது. ''மகனே!'' என்று மந்திரி ஜெகன்னாத் ராய் அலறுவதும் காதில் விழுந்தது!

## போலீஸ் ஸ்டேஷனில் கனவுக் கன்னி

விவேக் விக்கி ராய் படுகொலை வழக்கில் நான் கைதாகி இருக்கிறேன். இந்திய கனவுக் கன்னி ஷப்னம் சக்ஸேனா, மெஹ்ரௌலி போலீஸ் ஸ்டேஷனின் கால் உடைந்த பெஞ்ச்சில் உட்கார்ந்திருப்பாள் என்று என் ரசிகர்கள் நினைத்தும் பார்த்திருக்க மாட்டார்கள். நாளை காலை பேப்பர்களில் எப்படி வெளியாகுமோ இந்தச் செய்தி!

பண்ணை வீட்டு பார்ட்டியில் கனவுபோல காரியங்கள் எத்தனை வேகமாக நடந்துவிட்டன!

மந்திரி ஜெகன்னாத் ராய் மைக்கில் எல்லோருக்கும் நன்றி சொல்லி முடித்ததும், விவேக் விக்கி ராய் மறுபடி அவரைக் கட்டி அணைத்து

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

முத்தமிட்டான். பிறகு, தன்னுடைய கிளாஸில் மதுவை நிரப்பிக்கொள்வதற்காக சற்று தூரம் நடந்து போனான். அப்போதுதான் கரன்ட் கட் ஆனது.

மின்வெட்டு என்பது நாட்டில் சகஜமான விஷயம்தான். என்றாலும்... ஆனானப்பட்ட விவேக் விக்கி ராயின் பங்களா இருக்கும் ஏரியாவில் முன்னறிவிப்பு இல்லாமல் நடக்க சாத்தியமே இல்லையே என்று எனக்கு உறுத்தியது. இதில் ஏதோ சூது இருக்கிறது என்று உள்மனசு சொல்லி முடிப்பதற்குள், 'படீர்' என்று வெடிச் சத்தம் கேட்டது.

''ஊஊஊஊஊ!'' என்று தீனமான ஓர் அலறல். அதையடுத்து, 'ஐயோ' என்று ஒரு குரல். நானும் அங்கே இருந்த மற்ற விருந்தினர்களும் குழம்பிப் போய் அங்கும் இங்கும் அலைபாய்ந்துகொண்டு இருந்தோம்.

''ஜெனரேட்டரைப் போடுங்க!'' என்று யாரோ கத்தினார்கள். சுமார் மூன்று நான்கு நிமிடங்கள் வரை கரன்ட் வரவில்லை. ஜெனரேட்டர் இயங்கி, விளக்குகள் எரிய ஆரம்பித்தபோது, மதுக் கோப்பை தரையில் சிதறிக்கிடக்க, அணிந்திருந்த கோட்டை மீறிக்கொண்டு ரத்தம் வடிய, கண்களைத் திறந்தபடியே அசையாமல் கீழே படுத்துக்கிடந்தான் விவேக் விக்கி ராய்.

பார்ட்டிக்கு பந்தோபஸ்து கொடுக்க வந்திருந்த சில கான்ஸ்டபிள்களும், முறுக்கு மீசை வைத்த ஒரு இன்ஸ்பெக்டரும் பாய்ந்தோடி வந்தார்கள்.

விழுந்துகிடந்த விக்கி ராயின் மணிக்கட்டுப் பகுதியைப் பிடித்துப் பார்த்த இன்ஸ்பெக்டர், ''உயிர் போயிடுச்சு...'' என்று உதட்டைப் பிதுக்கியபோது, அலறினார் ஜெகன்னாத் ராய். நாங்கள் பேயறைந்த மாதிரி நின்றோம். முறுக்கு மீசை இன்ஸ்பெக்டரோ, ''யாரும் அசையாதீங்க. இங்கே நிக்கிறவங்களில் யாரோ

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

ஒருத்தர்தான்சுட்டிருக்கீங்க...'' என்று உரத்த குரலில் அறிவித்துவிட்டு, ''பங்களாவுக்கு உள்ளே இருந்து வெளியிலோ, வெளியில் இருந்து உள்ளேயோ... ஒரு பூச்சி பொட்டுகூட நகரக் கூடாது. டைட்டா காவல் போடுங்கய்யா!'' என்று உத்தரவிட்டார் கான்ஸ்டபிள்களுக்கு.

''இங்கே யார்கிட்டே துப்பாக்கி இருக்குதுனு பாருங்கய்யா'' என்று இன்ஸ்பெக்டர் உறும... மளமளவென்று சோதனை ஆரம்பித்தது. எங்களை வரிசையாக நிற்கவைத்தார்கள். எனக்கு கைகால் ஜில்லிட்டுப் போனது. கைப்பைக்குள் இருந்த துப்பாக்கியை தூக்கி ஒரு ஓரமாகக் கடாசிவிட நினைத்தாலும்... இனி அது முடியாது!

என் பக்கத்திலேயே நின்றுகொண்டு இருந்தான் அந்த லூஸு அமெரிக்கன். அவன் முகமும் ஏனோ இஞ்சி தின்ன குரங்கு மாதிரியே இருந்தது. அமெரிக்க ஜனாதிபதியின் மச்சான் மாதிரியே கொஞ்ச நேரத்துக்கு முன்பு பேசிக்கொண்டு இருந்தவன், இப்போது பேய் முழி முழிக்கிற காரணம் புரியவில்லை. அவன்தான் சுட்டிருப்பானோ..?

www.t.me/tamilbooksworld

இதை நான் நினைத்துக்கொண்டு இருந்தபோதே, முதல் சோதனை அமெரிக்கனிடம்தான் நடந்தது. அவனுடைய கோட்டுப் பையைத் துழாவிய கான்ஸ்டபிள் திகுதிகுவென்று மின்னும் துப்பாக்கியை வெளியே எடுத்து, ''சார், இவன்தான் சார் அக்யூஸ்ட்...'' என்று இன்ஸ்பெக்டரைப் பார்த்துக் கத்த... அமெரிக்கனின் கழுத்தில் பட்டென்று ஒரு அடி போட்டு, சுவர் ஓரமாகக் கொண்டு போய் குத்தவைத்து உட்காரச் சொன்னார்கள். அவன் அப்படி இப்படி அசைய முடியாதபடி ஒரு கான்ஸ்டபிளைக் காவல் போட்டார்கள்.

அடுத்தது என்னிடம்தான். ''ஷப்னம் மேடம்தானே நீங்க..? உங்க கைப்பையைக் கொஞ்சம் கொடுங்க...'' என்று வாங்கினார் இன்ஸ்பெக்டர். ஜிப்பைப் பிரித்ததுமே இளித்தது துப்பாக்கி. என் தங்கை ஸப்னாவைக் கெடுக்க முயன்று, அவள் கையால் சூடு பட்டுச் செத்த தாதாவின் துப்பாக்கி!

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

''மேடம், இந்த பார்ட்டிக்கு நீங்க எதுக்கு துப்பாக்கி கொண்டுவந்தீங்கன்னு தெரிஞ்சுக்கலாமா?'' என்று இன்ஸ்பெக்டர் கேட்கும்போதே எனக்கு அழுகை முட்டிக்கொண்டு வந்தது. ''தற்காப்புக்கு நான் எப்பவுமே வெச்சிக்கு

வேன்... '' என்று சொல்லும்போதே, ''லைசென்ஸ் எல்லாம் வெச்சிருக்கீங்கதானே...'' என்று கேட்டுக் கலங்கடித்தார். நான் பலவீனமாகத் தலையை ஆட்ட.... துப்பாக்கியின் மேகஸினை உருவிப் பார்த்தவர், ''ஒரு குண்டு ஏற்கெனவே சுட்டிருக்கு. எப்போ எதுக்காக சுட்டீங்கன்னு ஸ்டேஷன்ல விசாரிச்சுக்கறேன்...'' என்றபடி, ஒரு லேடி கான்ஸ்டபிள் பக்கம் திரும்பிப் பார்த்தார். அவள் வந்து என் கையைப் பிடித்து, ஒரு வித இறுக்கத்தோடு சற்று தூரம் இழுத்துப் போய் தனியே நிறுத்தினாள்.

அடுத்தடுத்த சோதனையில், பத்தாவது ஆளாக நின்றிருந்த 'காந்தி பாபா' மோகன் குமாரிடம் ஒரு துப்பாக்கி சிக்கியது. வலிப்பு வந்த மாதிரி உதடு கோணிக்கொண்டது அவருக்கு. ''என்ன காந்தி பாபா... ஊருக்கெல்லாம் அகிம்சை சொல்றீங்க... உள்ளே ஆயுதம் வெச்சிருக்கீங்களே...'' என்றபடி அவரையும் ஓரமாக உட்காரவைத்தார்கள். செத்துப்போன விக்கி ராயின் அப்பா ஜெகன்னாத் ராயிடமும் துப்பாக்கி இருந்தது. அது போலீஸுக்கு பெரிய ஆச்சர்யம் ஏற்படுத்தவில்லை. ''இது வெப்ளி அண்டு ஸ்காட் ரகம். லைசென்ஸ் பக்காவா இருக்கு. பத்து வருஷத்துக்கு மேலே வெச்சிருக்கேன். எப்பவுமே என்னோடு இருக்கும். அரசியல் எதிரிகள் அதிகம்!'' என்று சொன்னார் ஜெகன்னாத் ராய். மகனின் உடம்பைத் திரும்பித் திரும்பிப் பார்த்தபடி விசும்பிக்கொண்டே இருந்தார்.

''மத்தவங்ககிட்டே எதுவும் இல்லை சார்...'' என்று கான்ஸ்டபிள்கள் சொல்ல... ''எல்லார்கிட்டேயும் அட்ரஸ், போன் நம்பர் வாங்கிட்டு அனுப்புய்யா. அத்தனை பேரும் கார்த்தால ஸ்டேஷனுக்கு வரணும்!''

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

என்று கண்டிப்பான குரலில் சொன்ன இன்ஸ்பெக்டர், ''துப்பாக்கி வெச்சிருந்த நாலு பேரையும் ஜீப்புல ஏத்து...'' என்றார்.

ஜெகன்னாத் ராய் இடியாக முழங்கினார். ''இன்ஸ்பெக்டர்... என் மகன் இப்படி அநியாயமாக் கொல்லப்பட்ட அதிர்ச்சியும் துக்கமும் தாங்க முடியலை. இந்த நேரத்தில் என்னையே சந்தேகப்படுறீங்களா? ஒரு மந்திரியைப் பார்த்து இதைச் சொல்ல என்ன தைரியம்?'' என்றார்.

அவரை நெருங்கிப் போய் மூக்கோடு மூக்காக உரசும்படி நின்ற இன்ஸ்பெக்டர், ''சார்... நீங்க மந்திரிதான். ஆனா, கொஞ்ச தூரம் தள்ளி இருக்கிற உத்தரப் பிரதேசத்தில். இது டெல்லி. இங்கே நான் சொல்றதைத்தான் நீங்க கேட்கணும்!'' என்று அதட்டினார். அப்புறம் ஜெகன்னாத் ராய் பேசவில்லை.

இங்கே ஸ்டேஷனுக்கு வந்தால், ஏற்கெனவே ஒருத்தனை பண்ணை வீட்டுக்குள் இருந்து பிடித்துக்கொண்டு வந்து வைத்து இருந்தார்கள். கன்னங்கரேல் என்று இருந்த அவனும், துப்பாக்கியோடு இருந்தானாம். காம்பவுண்ட்டை தாண்டித் தப்பிக்கப் பார்த்தபோது மடக்கி இருந்தார்கள். ஏற்கெனவே செமத்தியாக உதை வாங்கி முகம் வீங்கிப் போயிருந்த அவன், ''சம்ப்பி... சம்ப்பி'' என்று ஜெபம் பண்ணுகிற மாதிரி புலம்பிக்கொண்டே இருந்தான்.

www.t.me/tamilbooksworld

சற்று நேரத்தில் வெடவென்று உயரமாக ஓர் இளைஞனைத் தள்ளிக்கொண்டு வந்தார்கள். ''மொபைல் திருடுற பார்ட்டி சார்... இவன் பேரு முன்னா. இந்த ஏரியாக்காரன்தான்!'' என்று இன்ஸ்பெக்டர் முன்பு நிறுத்திய ஒரு கான்ஸ்டபிள், ''பண்ணை வீட்டுல நிறைய மரம் இருக்குதே... அங்கே ஒளிஞ்சுக்கிட்டு இருந்தான் சார். இவனும் துப்பாக்கி வெச்சிருக்கான்...'' என்றார். அவன் துளிகூட கவலையோ, கலக்கமோ இல்லாமல் மரக்கட்டை மாதிரி நின்றான்.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

கைக்கு எட்டும் தூரத்தில் 'காந்தி பாபா' மோகன்குமார் உட்கார்ந்து இருந்தார். பயம் மெதுவாகத் தெளிந்து, ஒரு மாதிரி இளிப்புடன் என்னையே வெறித்துப் பார்த்துக்கொண்டு இருந்தது அந்தக் கிழக் கோட்டான். ''பிளான் பி அப்படினு ஒரு படத்துல நீங்க நடிக்கப்போறதா ஒரு நியூஸ் படிச்சேனே... ரொம்ப செக்ஸி ரோல்னு சொன்னாங்களே... சூப்பராக் கலக்கிடுவீங்கனு சொல்லுங்க!'' என்றது கோட்டான். ஒரு முன்னாள் தலைமைச் செயலாளர் பேசுகிற பேச்சாகவே இல்லை!

எனக்கு நினைப்பு பின்னோக்கி ஓடியது. தங்கை ஸப்னாவைக் காப்பாற்றுவதற்காகப் போய், ஏற்கெனவே ஒரு கொலையின் தடயங்களை அழித்துவிட்டு வந்திருக்கிறேன். அந்த தாதாவின் உடலை இன்றைக்கோ நாளைக்கோ போலீஸ் பார்த்துவிடும். விசாரணை சூடு பிடிக்கும். ஸப்னாவோடு சேர்ந்து அந்த வீட்டைவிட்டு வெளியே வந்த என்னை நெருக்கத்தில் பார்த்த ஆட்டோக்காரனும் மற்ற சிலரும் கட்டாயம் அதை போலீஸிடம் சொல்வார்கள். அநேகமாக நானும் ஸப்னாவும் சிக்கிவிடுவோம். தாதாவை சுட்டுக் கொன்றது நான்தான் என்று போலீஸிடம் சொன்னால் ஒழிய, தங்கை ஸப்னாவைக் காப்பாற்ற முடியாது.

www.t.me/tamilbooksworld

இதை நான் யோசித்துக்கொண்டு இருக்கும்போதே, என் உதவியாளன் போலாவும், என்னைப்போலவே அச்சு அசலாக இருக்கும் ராம் துலாரியும் நடத்திய துரோக நாடகம் நினைவுக்கு வந்து கசப்பைக் கூட்டியது. ஏழெட்டுத் தயாரிப்பாளர்களிடம் ராம் துலாரியைக் கூட்டிப் போய், என்னை மாதிரியே நடிக்கவைத்து, கால்ஷீட் ஒப்பந்தத்தில் கையெழுத்து போட்டு... எக்கச்சக்கமாக அட்வான்ஸ் வாங்கி இருக்கிறான் போலா ராஸ்கல்! என் வீட்டில் இருந்த நகைகள், வங்கியில் இருந்த பணம் அத்தனையும் வழித்துக்கொண்டு என்னை நடுத் தெருவில் நிறுத்திவிட்டான்.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

இதோ, விக்கி ராய் கொலை வழக்கில் ஸ்டேஷனுக்கு வந்திருக்கும் என்னை... இன்னும் என்னென்ன துன்பங்கள் தொடரப்போகிறதோ என்று குழம்பிக்கொண்டு இருந்தபோது... எதிர் பெஞ்சில் உட்கார்ந்திருந்த அமெரிக்கன் மெதுவாக வந்து என் மேல் மூச்சு படுகிற தூரத்தில் உட்கார்ந்தான். அவன் கண்ணில் அநியாயத்துக்கு 'காதல்' வழிந்தது. என்னை சிக்கலில் இருந்து காப்பாற்றக்கூடிய ஒருத்தன் உண்டென்றால்... இப்போதைக்கு இவனாகத்தான் இருக்கும் என்று கணக்கு போட்டேன்.

''மிஸ்டர் லாரி பேஜ்... என்னை ஆபத்தில் இருந்து காப்பாற்றுவதாகச் சொன்னீர்களே. ஸப்னாவின் பிரச்னை முழுக்கத் தெரியும் என்றீர்களே... அமெரிக்க ஜனாதிபதிக்கே நீங்கள் அறிமுகம் என்றீர்களே... அதை எல்லாம் நிரூபிக்க இப்போது உங்களுக்கு சான்ஸ் வந்திருக்கிறது'' என்று நைச்சியமாகச் சிரித்தேன். அவன் ஆர்வமாகிவிட்டான்.

www.t.me/tamilbooksworld

''ஷப்னம்... உனக்காக நான் எதுவும் செய்யத் தயாராக இருக்கிறேன். பொழுது விடிந்ததுமே அமெரிக்கன் எம்பஸியில் இருந்து ஆள் வரப்போகிறது, என்னை விடுவிக்க. உனக்கு நான் என்ன செய்ய வேண்டும் சொல்!'' என்றான் பரபரப்பாக. எனக்கு கூடுதல் தெம்பு வந்தது.

- தொடர்ந்து சந்தேகிப்போம்...

Copyright © Vikas Swarup 2008

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

## மோட்டிவ் 6

*போலீஸ் ஸ்டேஷன்... நடிகை ஷப்னம் சக்ஸேனா, அடுத்தடுத்து தன்னைச் சூழ்ந்த துன்பங்களில் இருந்து தப்பிக்க ஒரே 'ரூட்' அமெரிக்கன் லாரி பேஜ்தான் என்று தீர்மானிக்கிறாள். அவனுடைய ஒருதலைக் காதலையே புழுவாக்கி, கொக்கி போடுகிறாள்...*

### ஓடிப் போலாமா?

www.t.me/tamilbooksworld

''இந்தக் கொலையை நீங்கள் செய்யவில்லை என்ற பட்சத்தில், மிகச் சீக்கிரமே போலீஸ் உங்களை விடுவித்துவிடும். உங்களோடு சேர்ந்து என்னை அமெரிக்காவுக்குக் கூட்டிப் போவீர்களா?'' என்றேன் நான் லாரி பேஜிடம்.

விட்டால் எழுந்து என்னோடு டூயட் ஆடிவிடுவான் போல் ஆனான். ''நான் காத்திருந்தது வீண் போகவில்லை. கனவு பலிக்கிறது. ஜீஸஸ் அற்புதங்களை ஆரம்பித்துவிட்டார்!'' என்று வானத்தை நோக்கி ஒரு முத்தம் பறக்கவிட்டான். ''உனக்கு ஒரு விஷயம் தெரியுமா ஷப்னம்... அமெரிக்கன் எம்பஸியில் இருக்கும் அதிகாரி லிஸ்ஸி எனக்காக எந்த உதவியும் செய்வாள். அதுவும் தவிர, தீவிரவாதிகளால் எனக்கு ஆபத்து இருப்பதாலும், அமெரிக்க அரசாங்கம் என்னைப் பத்திரமாக திரும்ப அழைத்துக்கொள்ள நினைப்பதாலும்... நான் எது சொன்னாலும் கேட்பார்கள். நாலு நாளைக்கு முந்தி என்னை போனில் அழைத்த லிஸ்ஸி

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

என்ன சொன்னாள் தெரியுமா... என்னை காஷ்மீரில் கடத்திப் போய் வைத்திருந்த தீவிரவாதிகளைப்பற்றி, ஏராளமான விவரங்களை என்னிடம் கேட்டுத் தெரிந்துகொள்ள சி.ஐ.ஏ. அதிகாரிகள் காத்திருக்கிறார்களாம். தேவைப்பட்டால், தீவிரவாதிகள் ஒழிப்புப் பிரிவில் என்னை ஒரு கௌரவ உளவாளியாகவே சேர்த்துக்கொள்ளவும் அவர்கள் தயாராம்...'' என்றான். கதை அடிக்கிற மாதிரி தெரியவில்லை அவன் பேச்சு. நான் ஷார்ப்பாகக் கவனித்தேன்.

www.t. world

''உனக்கும் தீவிரவாதிகளால் ஏகப்பட்ட ஆபத்து இருப்பதாக டெல்லியில் நான் சந்தித்த டிடெக்டிவ் சொன்னான். அதனால், வேறு ஒரு பெயரில் உனக்கு பாஸ்போர்ட் எடுத்து, படுரகசியமாக அமெரிக்காவுக்குக் கூட்டிப் போக என்னால் முடியும். உனக்காக நான் எதுவும் செய்வேன்!'' என்றபோது, காதலோடு சேர்த்து லேசாகக் கண்ணீரும் எட்டிப் பார்த்தது அவனிடம்.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

எனக்கும் அவன்மேல் ஒரு கரிசனம் வந்திருந்தது. சுயநலம் கலந்த கரிசனம். இவனைவிட்டால்... வேறு கதி இல்லை என்கிறபோது, எனக்காகவே பைத்தியக்காரத்தனமாக அலையும் இவனை நம்பி அமெரிக்கா போவது தப்பு இல்லை என்று தோன்றியது. இனி இந்தியாவில் எனக்கு எந்த எதிர்காலமும் இருப்பதாகத் தெரியவில்லை. பாவிப் பயல் போலா, நான் பாத்ரூமில் குளிக்கும் போது எடுத்த ரகசிய வீடியோ நினைவுக்கு வந்தது. என்னை மாதிரியே இருக்கும் ராம் துலாரியோடு அவன் கட்டிப் புரள்கிற வீடியோவும் நிழலாடிப் பயமுறுத்தியது. எந்த நேரமும் அதை 'நெட்'டில் ஏற்றிவிடுவான் அந்தக் கிராதக போலா. அப்புறம் நாடே என்னைப் பார்த்துச் சிரிக்கும். அதற்குள், இந்த அமெரிக்கனோடு சேர்ந்து கண் காணாத தூரத்துக்குக் கடல் கடந்து போவதே நிம்மதி.

''நான் தயார். என்ன செய்ய வேண்டும் சொல்லுங்கள் லாரி பேஜ்'' என்றேன்.

www.t.me/tamilbooksworld

''உன் சொந்த பாஸ்போர்ட்டில் நாம் போவது சரியாக வராது. வேறு பெயரில் ரெடி பண்ண வேண்டும். நான் சொன்னால், லிஸ்ஸி கட்டாயம் உதவி செய்வாள். உனக்கு வேறு ஏதாவது பெயரைச் சொல்... நாளையே போலி பாஸ்போட்டுக்கு ஏற்பாடு பண்ணுவோம்'' என்றான்.

ஜன்னலுக்கு வெளியே பொழுது விடிவதற்கான அறிகுறிகள் தெரிய ஆரம்பித்தன. போலீஸ் ஸ்டேஷனில் அரவம் கூடியது. வெவ்வேறு ஏரியாக்களுக்கு ராத்திரி ரோந்து போன போலீஸ்காரர்கள் திரும்பிக்கொண்டு இருந்தார்கள். கொஞ்ச நேரம் யோசித்தேன். என்ன பெயரில் பாஸ்போர்ட் எடுக்கலாம்... ஒரு ஃபிளாஷ் மின்னி அடங்கியது. திரும்பிப் பார்த்து, அமெரிக்கனிடம் சொன்னேன் - ''இனிமேல் என் பெயர் ராம் துலாரி!''

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

## கிளைமாக்ஸ்

**வாசகர்களே! இன்றைக்குத் தேதி மார்ச் 27...**

விவேக் விக்கிராய் அவனுடைய பண்ணை வீட்டில் சுட்டுக் கொல்லப்பட்டு நாலு நாட்கள் ஆகிவிட்டன. துப்பாக்கியோடு அங்கே பிடிபட்ட ஆறு பேரில் யார் அவனைச் சுட்டார்கள்? சுட்டவனின் 'மோட்டிவ்' என்ன என்று டெல்லி மாநகர போலீஸ் தீவிரமாகப் புலன் விசாரணை நடத்துகிறது. அருண் அத்வானியாகிய நான் எழுதி வரும் இந்தத் தொடர் கட்டுரையில், கிட்டத்தட்ட கடைசிப் பகுதியை நாம் நெருங்கிவிட்டோம்.

முன்பெல்லாம் கொலைகளுக்குப் பின்னால் மூன்றில் ஒரு மோட்டிவ்தான் இருக்கும். மண், பெண், பணம்!

ஆனால், இப்போது சாக்கடையாகிவிட்ட சமூகத்தில் ஏகப்பட்ட சைக்கோ நடமாட்டம். காரணமே இல்லாத தொடர் கொலைகள்... இரக்கமே இல்லாத கேங் ரேப்புகள்... கோடீஸ்வர இளைஞர்கள் சிலர் சந்தோஷத்துக்காகச் செய்கிற சித்ரவதைக் கொலைகள்...

www.t.me/tamilbooksworld

போலீஸைவிட கொலைகாரர்கள் புத்திசாலிகளாக இருக்கிறார்கள்! பல வழக்குகளில் தடயங்கள் சுத்தமாக அழிக்கப்பட்டு, கடைசி வரை துப்புத் துலக்க முடியாமலே போகிறது. மீடியாவின் கேள்விகளுக்கு பதில் சொல்ல முடியாத போலீஸார், யாராவது தலை காய்ந்தவனைப் பிடித்து அவன்தான் அந்தக் கொலையைச் செய்தான் என்று ஃபைலை மூடுகிற கொடுமையும் அடிக்கடி நடக்கிறது.

அனுபவமுள்ள ஒரு பத்திரிகையாளன் என்ற முறையில் சொல்வதானால், இப்போதெல்லாம் கொலைக்கான 'மோட்டிவ்' என்பது புதுசு புதுசாக... நினைத்தே பார்க்க முடியாத கோணத்தில்கூட இருக்கிறது! கொன்றவனுக்கும் கொல்லப்பட்டவனுக்கும் எந்தப் பகையும்

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

இல்லாமலேகூட கொலைகள் நடக்கின்றன. அப்படியானால், அதைக் கண்டுபிடிக்க போலீஸ் ரொம்பவும் திணறத்தானே வேண்டும்.

விக்கிராயின் அப்பா ஜெகன்னாத் ராய் ஒரு மந்திரி என்பதால், அவரை முழுமையாக விசாரிப்பதில் ஏகப்பட்ட சிக்கல் போலீஸுக்கு. சொந்த அப்பாவே பையனை போட்டுத் தள்ளுவாரா என்று முதலில் கேள்விகள் எழுந்தாலும், ஊர் வயிற்றெரிச்சலை எல்லாம் கொட்டிக்கொண்டு... ஏகத்துக்கும் கெட்ட பெயர் வாங்கியிருக்கும் அந்தப் பையன் உயிரோடு இருக்கிற வரையில், அவருடைய அரசியல் வாழ்க்கையில் அடுத்த முன்னேற்றம் கிடைக்காது என்பதாகச் சில பத்திரிகைகள் எழுதி இருக்கின்றன. உத்தரப் பிரதேச மாநிலத்தின் எதிர்க் கட்சியோடு சேர்ந்துகொண்டு, தற்போதைய உ.பி. முதல்வரைக் கவிழ்த்துவிட்டு, தானே முதல்வர் பதவியில் அமர ஜெகன்னாத் ராய் சதி வலை விரிப்பதாகவும்... அவர் மகன் விக்கி ராய் மீதான சர்ச்சைகளைச் சுட்டிக்காட்டிய எதிர்க் கட்சித் தலைவர், அதனாலேயே ஜெகன்னாத் ராயின் கவிழ்ப்பு முயற்சிக்கு ஆதரவு தரவில்லை என்றும் அந்த பேப்பர்கள் கூறுகின்றன.

www.t.me/tamilbooksworld

விவேக் விக்கிராய் கொலையைத் துப்பறியும் விதமாக இந்தத் தொடர் கட்டுரையை நான் எழுத ஆரம்பித்த பிறகு, பல்வேறு திசைகளில் இருந்து எனக்குத் தகவல்களும் தடயங்களும், முகம் காட்ட விரும்பாத முக்கிய மனிதர்களால் அனுப்பி வைக்கப்பட்டுக்கொண்டே இருக்கின்றன. நேற்று எனக்கு வந்த பார்சலும் அப்படித்தான். அதனுள் பக்காவாக 'பேக்' செய்யப்பட்டு இருந்தவை - எட்டு ஆடியோ சி.டி-க்கள். இரவு முழுவதும் உட்கார்ந்து அந்த எட்டு சி.டி-க்களையுமே நான் முழுவதுமாகக் கேட்டேன். அதில் இருக்கும் அதிர்ச்சியூட்டும் விவரங்கள் இதே தொடர் பகுதியில் வெளியாகும். இப்போதே உங்கள் பிரதிக்குச் சொல்லிவைத்துவிடுங்கள் காரணம் - மந்திரி ஜெகன்னாத் ராயின் முகத்

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*திரையை மொத்தமாகக் கிழிக்கும் வெடிகுண்டு விவரங்கள் அதில் உள்ளன.*

*பண்ணை வீட்டுக்குள் துப்பாக்கி வைத்திருந்த ஆறு பேர் மீதும் போலீஸ் சந்தேகப்பட்டு விசாரிக்கிறது. ஆனால், அவர்கள் தங்கள் முடிவைக் கூறும் வரையில் நாம் காத்திருக்க வேண்டியது இல்லை. கொலைகாரனின் பெயர் - முக்தார் அன்சாரி. உத்தரப் பிரதேசத்தைச் சேர்ந்த மிகப் பயங்கரமான தாதா!*

*எத்தனையோ கொலை வழக்குகளிலும், கற்பழிப்புப் புகார்களிலும் சிக்கியிருக்கும் கொடூரன், இந்த முக்தார் அன்சாரி. விக்ராயைக் கொலை செய்வதற்கான நேரடி மோட்டிவ் எதுவும் இந்த தாதாவுக்குக் கிடையாது. இவனுக்கு இந்த அசைன்மென்ட்டைக் கொடுத்தது வேறு யாரும் அல்ல - விக்ராயின் அப்பாவான ஜெகன்னாத் ராய்தான்!*

www.t.me/tamilbooksworld

*பதவிக்காக ஓர் அரசியல்வாதி தன் சொந்த மகனையே ஆள் வைத்துக் கொல்லத் துணிய மாட்டான் என்ற அருவருப்பான உண்மையை உணர்த்தும் விதமாகவே ஆடியோ சி.டி-க்களில் விவரம் இருக்கிறது. தொலைபேசி உரையாடல்களில் ரகசியப் பதிவாக இருக்கும் அந்த சி.டி-க்கள் சொல்லும் மற்றோர் உண்மை - இன்றைய அரசியலில் யாருமே மகாத்மாக்கள் கிடையாது என்பது!*

*குற்ற வழக்குளில் சிக்கியவர்களையும், கண் எதிரில் கொள்ளை அடித்துவிட்டு ஓட்டுக்கு காசு கொடுப்பவர்களையும், கூச்ச நாச்சமே இல்லாமல் சந்திக்கு வந்து கேவலமாக அடித்துக்கொள்பவர்களையும் நாம் தலைவர்கள் ஆக்குகிறோம். அதன் விளைவுதான் - இது போன்ற நடப்புகள்!*

*என்ன குற்றம் செய்தாலும் அதை மறைத்துவிடலாம் - பதவியில் ஒட்டிக்கொண்டு இருக்கிற வரையில் எந்த சிக்கலில் இருந்தும் தங்களைத்*

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*தற்காத்துக்கொண்டுவிடலாம் என்று இந்த அரசியல்வாதிகளுக்கு உண்டாகியுள்ள தைரியம் - வாக்காளர்களாகிய நாம் கொடுத்ததுதான்!*

*சி.டி. பதிவுகளின் மூலம் ஜெகன்னாத் ராய் மட்டுமின்றி... இன்னும் பல முகங்களும் கிழிபடப்போகின்றன. அதற்கு முன்... விவேக் விக்ராய் கொல்லப்பட்ட இரவில் நடந்தது என்ன என்பதை யாருக்கும் அஞ்சாமல் இங்கே வாசகர்களுடன் நான் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன்...*

*எதிர்க் கட்சித் தலைவரின் மனதை மாற்றி, எதிர்க் கட்சி எம்.எல்.ஏ-க்களின் ஆதரவையும் பெற்று முதல்வர் ஆவதற்கு ஜெகன்னாத் துடியாகத் துடித்துக்கொண்டு இருந்தார். அதற்காக தன் மகனைத் தீர்த்துக்கட்டி, ஒரு வித அனுதாபத்தையும் தேடிக்கொள்ள முடிவெடுத்தார். பார்ட்டி நடந்த இரவில், அந்தப் பண்ணை வீட்டின் பின் கதவை உள்பக்கம் தாழிடாமல், திறந்தேவைப்பதற்கு ஏற்பாடு செய்தார் ஜெகன்னாத் ராய். அந்த வழியாக சத்தம் இல்லாமல் நுழைந்தான் தாதாவான முக்தார் அன்சாரி.*

www.t.me/tamilbooksworld

*சொல்லிவைத்த மாதிரி விளக்குகள் அணைக்கப்பட்டன. கிடைத்த சில நிமிட இடைவெளியில் வந்த வேலையை முடித்துவிட்டு, வந்த வழியிலேயே தப்பிவிட்டான். மின்சாரம் திரும்பி வந்து, போலீஸார் வந்து பார்த்து... பண்ணை வீட்டின் எல்லா வாசல்களையும் அடைப்பதற்கு முன்பே முக்தார் அன்சாரி தப்பிப் போயிருந்தான்.*

*அத்தனைக்கும் ஆதாரமான ஆடியோ சி.டி-யை எனக்கு அனுப்பிய மனிதருக்கு - நான் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*நாட்டின் மீதுகொண்ட அக்கறையோ, ஜெகன்னாத் ராய் மீதுகொண்ட விரோதமோ... எந்த 'மோட்டிவ்' கருதி அந்த மனிதர் இந்தப் பதிவுகளை எனக்கு அனுப்பியிருந்தாலும் சரி...*

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*அந்தப் பதிவுகளின் விவரங்களைப் பார்த்த பிறகாவது, அரசியலைத் தூய்மை ஆக்குவதற்கு ஒவ்வொரு வாக்காளனும் தன்னாலான சபதம் எடுத்தே தீரவேண்டும்.*

*ஜெகன்னாத் ராயின் பதவி பறிபோகுமா? சொந்த மகனைக் கொன்ற அவருக்கு சட்டத்தின் முன் தண்டனை கிடைக்குமா? அல்லது, நீதியையே வளைத்துப் பார்ப்பதற்கான கேவலமான காரியம் அரங்கேறுமா? இதெல்லாம் நாம் பொறுத்திருந்து பார்க்க வேண்டியவை.*

*அருண் அத்வானியாகிய என்னுடைய அடுத்த அத்தியாயத்துக்காகக் காத்திருங்கள்!*

- தொடர்ந்து சந்தேகிப்போம்...

Copyright © Vikas Swarup 2008

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

## மோட்டிவ் 6

### பிரேக்கிங் நியூஸ்...

*மார்ச் 28... காலை மணி 10.07... ஐ.டி.என். தொலைக்காட்சியில் பிரேக்கிங் நியூஸ்...*

www.t.r




world

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

பர்க்காதாஸ்: ''வணக்கம். பத்திரிகையாளர் அருண் அத்வானி எழுதி வரும் தொடர் கட்டுரையில், இன்று வெளியான ஆடியோ டேப் விவரங்களைத் தொடர்ந்து, உத்தரப் பிரதேச அரசியல் கிடுகிடுக்கத் துவங்கியுள்ளது. உள்துறை அமைச்சர் ஜெகன்னாத் ராய் உடனடியாக போலீஸால் கைது செய்யப்பட்டு உள்ளார். தன் சொந்த மகன் விவேக் விக்ராய் மட்டுமின்றி... இதற்கு முன்பு பிரதீப் துபே, லக்கன் தாகூர், நவீன் ப்ரார் மற்றும் ருக்ஸானா அப்ஸர் ஆகியோரைக் கொன்றதாகவும் அவர் மீது வழக்குகள் பாய்ந்துள்ளன. போட்டி அரசியல்வாதி, தன் வழியில் குறுக்கிட்ட போலீஸ் அதிகாரி, தங்கள் குடும்பத்துக்கு எதிராக சாட்சி சொல்லத் துணிந்த அப்பாவி மற்றும் தன்னுடன் கள்ள உறவு கொண்டிருந்த பெண்மணி என்று அமைச்சர் செய்த கொலைகளுக்கான 'மோட்டிவ்'கள் பல வகையாக உள்ளதென்று கூறுகிறது காவல் துறை. நம்முடைய சிறப்பு நிருபர் ஆனந்த் ரஸ்தோகி தற்போது லக்னோவில் முகாம் இட்டுள்ளார். அவருடன் இப்போது நாம் பேசுவோம்... ரஸ்தோகி, அங்கே என்ன நடந்துகொண்டிருக்கிறது?''

www.t.me/tamilbooksworld

ஆனந்த் ரஸ்தோகி: ''வணக்கம் பர்க்கா... கிட்டத்தட்ட இருபது வருடங்களாக உத்தரப் பிரதேச அரசியலை தன்னுடைய இரும்புப் பிடிக்குள் வைத்திருந்த ஜெகன்னாத் ராயின் அரசியல் வாழ்க்கை இதோடு முடிந்துவிட்டதாகவே தெரிகிறது. அவர் சார்ந்திருக்கும் மக்கள் நல்வாழ்வுக் கட்சிக்கும் இது மிகப் பெரிய அடியாகவே இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.''

பர்க்கா: ''ஆனால், 'இந்த வழக்குகள் அனைத்துமே, உத்தரப் பிரதேசத்தின் முதலமைச்சரால் புனையப்பட்ட பொய் வழக்குகள் என்றும்... அவருடைய செல்வாக்கை மீறி தான் வளர்வது பிடிக்காமல் 'அரசியல் பழிவாங்கலாகவே' இப்படி முதல்வர் செய்கிறார் என்றும் கைதாவதற்கு முன்பு ஜெகன்னாத் ராய் கூறியிருக்கிறாரே...''

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

ரஸ்தோகி: ''அப்படிச் சொல்லி அவர் தப்ப முடியாது என்றே தெரிகிறது, பர்க்கா! ஆடியோ சி.டி. பதிவுகள் உண்மையானவை என்றும், அவற்றில் உள்ள விவரங்களின் அடிப்படையில் ஏராளமான விவரங்களை வேகமாக போலீஸ் திரட்டி வருவதாகவும் உத்தரப் பிரதேசக் காவல் துறை வட்டாரங்களில் இருந்து தெரிய வருகிறது பர்க்கா.''

பர்க்கா: ''நன்றி ரஸ்தோகி. தொடர்ந்து உங்கள் செய்திகளுக்காகக் காத்திருப்போம். இதற்கிடையே, உத்தரப் பிரதேச முதல்வர் நேரடியாக பத்திரிகையாளர்களை சந்தித்து இருக்கிறார். அதை இங்கே பார்ப்போம்...''

உ.பி. முதல்வர்: ''காவல் துறை தனது கடமையைச் செய்யும். இதில் எந்த விதமானத் தூண்டுதலோ குறுக்கீடுகளோ இருக்காது என்று உத்தரவாதம் அளிக்கிறேன். சட்டம் அளிக்கும் தீர்ப்பு எதுவோ... அதற்கு ஜெகன்னாத் ராய் கட்டுப்பட்டே ஆக வேண்டும். மக்கள் நல்வாழ்வுக் கட்சியின் உடனடி நடவடிக்கையாக அவ ரை அமைச்சர் பதவியில் இருந்து நீக்கியுள்ளோம். கட்சியின் அடிப்படை உறுப்பினர் பதவியில் இருந்தும் நீக்கியுள்ளோம். கிரிமினல் வழக்கு பதிவாகியுள்ள எவரையும் அமைச்சராக மட்டுமல்ல... கட்சியின் அடிப்படை உறுப்பினராகக்கூட இனி வைத்திருப்பது இல்லை என்பதை நாட்டு மக்களுக்கு இந்த நேரத்தில் உறுதியாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.''

www.t.me/tamilbooksworld

பர்க்கா தாஸ்: ''ஓகே வியூவர்ஸ்... உ.பி. முதல்வரின் வாக்குறுதியை நீங்கள் கேட்டீர்கள். இதை அந்தக் கட்சி எந்த அளவுக்கு உறுதியாக எடுத்துச் செய்யப்போகிறது என்பதை பொறுத்திருந்து பார்ப்போம். இப்போது நமது கவனம் எல்லாம், அமைச்சர் ஜெகன்னாத் ராயின் கூலிப் படையாகச் செயல்பட்டு, விவேக் விக்கி ராயை சுட்டுக் கொன்ற தாதா முக்தார் அன்சாரி எங்கே இருக்கிறான் என்பதை அறிவதுதான். போலீஸும் மிகத் தீவிரமாக அவனைத் தேடிக்கொண்டு இருக்கிறது. இது

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

தொடர்பான அனைத்து தகவல்களையும் உடனுக்குடன் உங்களுக்கு அளிப்பதில் முந்தியிருப்பது எங்கள் ஐ.டி.என். டி.வி-தான் என்பதை பெருமையுடன் கூறிக்கொள்கிறோம்.

அதே தினம்... அதே டி.வி.... மதியம் மணி 02.35...

''இன்று காலை அமைச்சர் ஜெகன்னாத் ராய் கைது செய்யப்பட்டதற்குப் பிறகு மளமளவென்று பல திடுக்கிடும் விஷயங்கள் வெளியாகி வருகின்றன. அமைச்சரின் கையாளாகக் கொலையைச் செய்த தாதா முக்தார் அன்சாரியின் சடலம் இப்போது அழுகிய நிலையில் கண்டெடுக்கப்பட்டு உள்ளது. அஸம்கர் பகுதியைச் சேர்ந்த சராய்மீர் என்ற ஏரியாவில் உள்ள ஒரு வீட்டில் அந்த சடலத்தை போலீஸார் கைப்பற்றி உள்ளனர். துப்பாக்கியால் சுட்டு அவனுடைய மரணம் நிகழ்ந்துள்ளது என்பது முதல் கட்டமாகத் தெரியவந்துள்ளது. அன்சாரியின் மரணம் சுமார் ஒரு வார காலத்துக்கு முன்பாக நடந்திருக்கலாம் என்றும் போலீஸார் கூறுகிறார்கள்.

www.t.me/tamilbooksworld

இது சரியாக இருந்தால், விவேக் விக்கி ராய் படுகொலைக்கு முன்பாகவே முக்தார் அன்சாரி இறந்து போயிருக்க வேண்டும். அப்படியானால், மார்ச் 23-ம் தேதி பண்ணை வீட்டுக்குள் விக்கி ராயை சுட்டுக் கொன்றது யார் என்ற கேள்வி பூதாகாரமாக எழுந்துள்ளது. இப்போது டெல்லி போலீஸ் கமிஷனர் மிஸ்டர் சஹாய் நம்மோடு உரையாடுகிறார்...''

கமிஷனர்: ''பர்க்கா முதலில் நான் மீடியாக்களுக்கு ஒன்றைத் தெரிவித்துக்கொள்கிறேன். அருண் அத்வானி எழுதிய தகவல்களை வைத்துத்தான் இந்த வழக்கில் முதல் கட்ட முன்னேற்றங்கள் நிகழ்ந்துள்ளன. அதே சமயம், அந்தப் பத்திரிகையாளர் கூறியுள்ள எல்லாமே நூறு சதவிகிதம் நம்பகமான தகவல்தான் என்று எடுத்துக்கொள்ள வேண்டியது இல்லை. கொலையைச் செய்தது முக்தார் அன்சாரிதான் என்று அருண் அத்வானி கூறியுள்ள தகவல் தவறானது.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

இது அந்த தாதாவின் அதிகாரபூர்வமான போஸ்ட்மார்ட்டம் ரிப்போர்ட் வரும்போது உறுதியாகிவிடும் என்றே நம்புகிறேன்.''

பர்க்கா: ''ஆனால், ஒரு பத்திரிகையாளர் என்ற முறையில் அவருக்குக் கிடைத்த ஆடியோ சி.டி. ஆதாரங்களின் அடிப்படையில் அருண் அத்வானி கூறியிருக்கிறார். விக்கி ராயைக் கொன்றது வேறு யாராக இருக்க முடியும் என்று நீங்கள் கருதுகிறீர்கள்?''

கமிஷனர்: இந்த வழக்கில் கணிசமான முன்னேற்றத்தை நாங்கள் குறுகிய அவகாசத்தில் அடைந்திருக்கிறோம். விக்கி ராயின் உடலில் பாய்ந்த குண்டு பாலிஸ்டிக் சோதனைக்கு உட்படுத்தப்பட்டது. பண்ணை வீட்டில் அந்த நேரத்தில் துப்பாக்கியுடன் இருந்தவர்கள் ஆறு பேர். அந்த ஆறில், ஜிபா கோர்வா என்ற பெயர்கொண்ட ஆதிவாசி ஒருவனுடைய துப்பாக்கியில் இருந்துதான் அந்த குண்டு வந்ததாக பாலிஸ்டிக் ரிப்போர்ட் மூலம் தெரிகிறது. ஜார்க்கண்ட் மாநிலத்தில் இருந்து ஏதோ ஒரு நோக்கத்துடன் கிளம்பி வந்திருக்கிறான் இந்த ஆதிவாசி. 'ஜார்க்கண்ட் மாநிலம், ஜிபா கோர்வா' என்ற இரண்டு வார்த்தைகளைத் தவிர வேறு எதுவும் கூற மறுக்கிறான். இடையிடையில், 'சம்ப்பி' என்ற பெயரை சொல்லிப் புலம்புகிறான். நக்ஸலைட் கும்பலைச் சேர்ந்த அவன் மிக மிக அழுத்தமான ஆளாகத் தெரிகிறான். துப்பாக்கி வைத்து இருந்தது மட்டும் அல்ல... விக்கி ராய் கொல்லப்படுவதற்கு சிறிது நேரம் முன்பு, மெயின் ஸ்விட்ச் போர்டுக்கு அருகில் அவன் நின்று இருந்ததைப் பார்த்ததாக ஒரு சாட்சியும் எங்களுக்குக் கிடைத்திருக்கிறது.''

www.t.me/tamilbooksworld

பர்க்கா: ''கொலை செய்ததை மறுக்கும் பட்சத்தில், பண்ணை வீட்டுக்குள் எதற்காக வந்ததாக அந்த ஆதிவாசி கூறுகிறான்?''

கமிஷனர்: ''அவன் ஏதேதோ காக்கா - நரி கதை எல்லாம் சொல்கிறான். தங்கள் ஆதிவாசி இனத்துக்குச் சொந்தமான ஒரு சிவ லிங்கம் அந்த பண்ணை வீட்டுக்குள் இருந்ததாகவும், அதை எடுக்கவே வந்ததாகவும் கூறுகிறான். அவன் காட்டும் அந்த சிவ லிங்கம் அதற்கு

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

முன்பு அந்த பண்ணை வீட்டுக்குள் இருந்ததாகவே தெரியவில்லை. மேலும், தமிழ்நாட்டில் நைஜீரியாக்காரன் ஒருவனோடு சேர்ந்து ஒரு தொழிலதிபரிடம் மோசடி செய்ய முயன்றபோது பிடிபட்டு இருக்கிறான் அவன். பீகார் மாநில போலீஸ் அதிகாரி ஒருவர் அவனை சென்னையில் கைது செய்து கூட்டிச் சென்றபோது, ரயில் பயணத்தின் இடையே தப்பித்து ஓடியிருக்கிறான். டெல்லியில் மெஹ்ரூலி குடிசைப் பகுதியில் ஒரு குடிசை வீட்டில் தங்கியிருந்த அவனை, ஜார்க்கண்ட் ஆட்கள் சிலர் வந்து சந்தித்துவிட்டுப் போனதற்கான ஆதாரங்களையும் திரட்டியுள்ளோம். அவனுடைய முழுமையான பின்புலங்கள் பற்றி விசாரிக்க ஜார்க்கண்ட் மாநிலத்துக்கு ஒரு படையை அனுப்பி உள்ளோம்.''

பர்க்கா: ''விக்கி ராயை நக்ஸலைட்கள் கொல்ல வேண்டிய அவசியம் என்ன, மிஸ்டர் கமிஷனர்?''

www.t.me/tamilbooksworld

கமிஷனர்: ''நல்ல கேள்வி. அமைச்சரின் மகனான விக்கி ராய் பெரும் தொழிலதிபர் என்பது அனைவருக்கும் தெரியும். அவர், ஜார்க்கண்ட் மாநிலத்தில் சிறப்புப் பொருளாதார மையத்தில் புதிய கான்ட்ராக்ட் ஒன்றை எடுத்திருந்தார். அதன் மூலம் இயற்கை வளங்கள் சுரண்டப்படும் என்றும், ஆதிவாசிகள் சுரண்டப்படுவார்கள் என்றும் இந்த பிராஜெக்ட்டை அனுமதிக்கக் கூடாது என்று ஏற்கெனவே அந்த மாநில அரசுக்கு நக்ஸலைட்கள் எச்சரிக்கை விடுத்திருந்தார்கள். அதையும் மீறி இந்த பிராஜெக்ட் ஓகே ஆகிவிட்ட நிலையில்தான், விக்கி ராய் கொல்லப்பட்டார் என்பதைக் கவனிக்க வேண்டும்.''

பர்க்கா: ''நன்றி மிஸ்டர் கமிஷனர்... ஓகே வியூவர்ஸ்... போலீஸ் தரப்பு கூறுவதைப் பார்த்தால், விக்கிராய் கொலை வழக்கை நோக்கி சரியான பாதையில் போலீஸ் பயணிக்கத் தொடங்கிவிட்டது என்றே தோன்றுகிறது. விக்கிராயின் தந்தை அமைச்சர் ஜெகன்னாத் ராய் இனி விடுவிக்கப்படுவாரா? அவர் மீது கட்சி எடுத்த நடவடிக்கை என்னாகும்?

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*அவர் மீது பத்திரிகையாளர் அருண் அத்வானி கூறியிருக்கும் மற்ற கொலைக் குற்றங்கள் என்ன ஆகும்? முழுமையான செய்திகளுக்காக ஐ.டி.என். சேனலில் ஸ்டே டியூன்ட்!''*

- தொடர்ந்து சந்தேகிப்போம்...

Copyright © Vikas Swarup 2008

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

மோட்டிவ் 6

## ஒரு நடிகை வேடம் போடுகிறாள்!

மார்ச், 31




www.t... world

ஐ.டி.என். சேனல்... மதியம் 01.21 ஒளிபரப்பு...

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

பர்க்கா தாஸ் : ''அதிரவைக்கும் புதிய திருப்பங்கள்..! விக்கி ராய் கொலை நடந்தபோது, பண்ணை வீட்டில் துப்பாக்கியுடன் இருந்தவர்களில் நடிகை ஷப்னம் சக்ஸேனாவும் ஒருவர் என்பதை அனைவரும் அறிவோம். அவரிடம் இருந்த துப்பாக்கிக்கும் விக்கிராய் உடலில் பாய்ந்த தோட்டாவுக்கும் சம்பந்தம் இல்லை என்று பாலிஸ்டிக் ரிப்போர்ட் கூறியதைத் தொடர்ந்து, ஷப்னம் சக்ஸேனா தற்காலிகமாக டெல்லி போலீஸால் விடுவிக்கப்பட்டார். ஆனால், இன்று காலை மும்பையின் ஒதுக்குப்புறமான ஏரியாவில் இருந்த ஒரு சிறு அபார்ட்மென்ட்டில் அவருடைய உதவியாளர் போலா சகிதம் நடிகை ஷப்னம் சக்ஸேனா கைது செய்யப்பட்டு இருக்கிறார். உதவியாளரும் அவரும் சேர்ந்து இருக்கும் ஆபாச காட்சிகள்கொண்ட வீடியோ டேப்களையும் போலீஸார் அந்த அபார்ட்மென்ட்டில் கண்டெடுத்து உள்ளனர். 1993-ல் மும்பை தொடர் குண்டுவெடிப்பு வழக்கோடு முடிச்சுப் போட்டு நடிகர் சஞ்சய் தத் கைதானதற்குப் பிறகு, ஒட்டுமொத்த பாலிவுட்டையும் உலுக்கும் மிகப் பெரிய வழக்காக இது வடிவெடுத்து இருக்கிறது. மும்பையில் உள்ள நமது சிறப்பு நிருபர் ராகேஷ் வைத்யாவுடன் இப்போது நாம் பேசலாம்...''

www.t.me/tamilbooksworld

ராகேஷ் வைத்யா: ''வெல் பர்க்கா... ஷப்னம் சக்ஸேனாவும் அவருடைய உதவியாளர் போலாவும் நீண்ட நாட்களாகவே காதலித்து வந்திருக்கிறார்கள். காதலியோடு, தான் இருக்கும் அந்தரங்கமான காட்சிகளை அவருக்குத் தெரியாமலேகூட போலா பதிவு செய்து இருக்கலாம். ஆனால், ஆபாசக் காட்சிகள் அடங்கிய அந்த சி.டி. பதிவுகள் எப்படியோ உ.பி-யின் பயங்கர தாதாவான முக்தார் அன்சாரியின் கையில் கிடைத்துவிட்டது. அதை வைத்து பல கோடிகளைக் கேட்டு, அந்த தாதா பிளாக்மெயில் செய்திருக்க வேண்டும். பேரம் பேசி சி.டி-க்களை மீட்பதற்காக ஷப்னம் சக்ஸேனா நேரடியாக அஸம்கர் ஏரியாவுக்குப் போய் இருக்கிறார். முக்தார் அன்சாரியின் உடல் தற்போது கைப்பற்றப்பட்டு இருக்கும் அந்த வீட்டில் இருந்து வெளியே வந்து

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

ஆட்டோ பிடித்தபோது ஷப்னம் சக்ஸேனாவை மிக அருகில் பார்த்த சாட்சிகள் இருக்கிறார்கள். இதை மும்பை போலீஸ் தற்போது உ.பி. போலீஸ் மூலம் உறுதிப்படுத்தி உள்ளது. முக்தார் அன்சாரி உடலில் பாய்ந்துள்ள தோட்டா தொடர்பான பாலிஸ்டிக் ரிப்போர்ட்டையும், ஷப்னம் வைத்திருந்த துப்பாக்கியையும் டெல்லி போலீஸார் ஒப்பிட்டுப் பார்த்தால், முக்தார் அன்சாரியை சுட்டுக் கொன்றது ஷப்னம் சக்ஸேனாதானா என்பது மேலும் உறுதியாகிவிடும் பர்க்கா.''

பர்க்கா : ''கைதாகி இருக்கும் நடிகை என்ன சொல்கிறார்?''

ராகேஷ் வைத்யா : ''முற்றிலும் எதிர்பாராத ஒரு பதிலை அவர் சொல்கிறார். தான் நடிகை ஷப்னம் சக்ஸேனாவே அல்ல என்றும்... அவரைப்போலவே இருக்கும் வேறு பெண் என்றும்... தன் பெயர் ராம் துலாரி என்றும் கூறுகிறார். ஷப்னம் சக்ஸேனாவுக்கு டூப்பாக சில நிகழ்ச்சிகளில் ஏற்கெனவே கலந்துகொண்டதாகவும் கூறுகிறார். இந்த வாதம் துளியும் ஏற்கும்படியாக இல்லை. அநேகமாக, மனநிலை பிறழ்ந்துவிட்டதுபோலக் காட்டி, அந்த அடிப்படையில் சட்டத்தின் பிடியில் இருந்து தப்புவதற்காக ஷப்னம் சக்ஸேனா திட்டம் இடுவதாகவே மும்பை போலீஸ் கருதுகிறது. மேலும்...''

www.t.me/tamilbooksworld

பர்க்கா : ''ராகேஷ், ஒன் மினிட்! டியர் வியூவர்ஸ்... தற்போது வந்திருக்கும் லேட்டஸ்ட் தகவலைப் பார்த்துவிடுவோம்... டெல்லி போலீஸின் பிடியில் விசாரணையில் இருந்த ஜார்க்கண்ட் தீவிரவாதி ஜிபா கோர்வா, அவர்களிடம் இருந்து தப்பிச் செல்ல முயன்றபோது சுட்டுக் கொல்லப்பட்டான். அவன் எங்கே எப்போது சுடப்பட்டான் என்பது குறித்த விவரங்கள் இன்னும் சில நிமிடங்களில் விரிவாகக் கிடைக்கும். ஓகே. மீண்டும் மும்பைக்குச் செல்வோம்... ராகேஷ்... நீங்கள் தொடருங்கள்...''

ராகேஷ் : ''இப்போதைக்கு ஒரு விஷயம் உறுதியாகச் சொல்ல முடியும், பர்க்கா... போலீஸ் பிடியில் இருந்து ஷப்னம் சக்ஸேனா ரிலீஸ்

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*ஆகிறாரோ இல்லையோ... அடுத்த சில மாதங்களுக்கு அவருடைய படங்கள் எதுவும் ரிலீஸ் ஆக வாய்ப்பு இல்லை... (சிரிப்பு) அவர் நடித்து முடிக்க வேண்டிய மூன்று படங்கள் அரைகுறையாக அப்படியே நின்றுவிடும். தயாரிப்பாளர்கள் இபபோதே இடிந்துபோய் காணப்படுகிறார்கள்.''*

*பர்க்கா : ''விக்கிராய் படுகொலையைத் தொடர்ந்து, எந்த ஒரு சினிமாவுக்கும் சளைக்காத அளவுக்கு அதிரடித் திருப்பங்களுடன் முன்னேறுகிறது போலீஸின் விசாரணை. மேலும் புதிய செய்திகளுடன் நாங்கள் வரும் வரையில், ப்ளீஸ் ஸ்டே டியூன்டு.''*

***பகீர் கடிதம்***

***ஏப்ரல் 1....***

*'உறையவைக்கும் உண்மையும்... மூடி மறைக்கும் போலீஸும்' என்ற தலைப்பில் பத்திரிகையாளர் அருண் அத்வானியின் தொடர் கட்டுரையில் இந்திய ஜனாதிபதிக்கு ஒரு பகிரங்கக் கடிதம்....*

*ஜனநாயகத்தின் மாண்புமிக்க, மிக உயர்ந்த பதவியில் அமர்ந்திருக்கும் ஜனாதிபதி அம்மையார் அவர்களுக்கு...*

*இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை அவ்வப்போது கேலிக்குரியதாக மாற்றி வரும் காவல் துறையின் கொடுங்கோல் செயல்பாடுகள் உங்களுக்குத் தெரியாதது அல்ல. அதன் மிக மோசமான சமீபத்து நிகழ்வுதான் 'ஜிபா கோர்வா என்ற ஜார்கண்ட் நக்ஸலைட் போலீஸின் பிடியில் இருந்து தப்பி ஓட முயன்றபோது சுட்டுக் கொல்லப்பட்டான்' என்று வெளியாகி உள்ள செய்தி! நீங்களும் கட்டாயம் அதைப்படித்து இருப்பீர்கள். காவல் துறையின் நேர்மை இல்லாத தோட்டாவின் சத்தம் எட்ட முடியாத மதில் சுவர்களுக்குள்ளே ஜனாதிபதி மாளிகைக்குள் நீங்கள் இருந்தாலும், உங்கள் மனசாட்சியின் காதுகளுக்கு நான் ஒலிக்க வேண்டிய தகவல் ஒன்று இருக்கிறது. அதைத்தான் என்னுடைய*

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

கட்டுரைத் தொடரில் இன்றைய அத்தியாயமாக நான் எழுதுகிறேன். நீங்கள் இந்த செய்தித் தாளைப் படிக்கிற வழக்கம் உண்டோ இல்லையோ.... எனவே, இந்த அத்தியா யத்தையே எனது கடிதமாக எழுதி உங்களின் மாளிகைக்கு பதிவுத் தபாலில் அனுப்புகிறேன்.

ஜனாதிபதி அம்மையார் அவர்களே...

'ஜிபா கோர்வா' என்ற இளைஞனை சுட்டுக் கொன்ற 'வீர சாகச'த்துக்காக விஜய் யாதவ் என்ற சப்-இன்ஸ்பெக்டருக்கு பதக்கம் கொடுக்க சீக்கிரமே சிபாரிசு செய்யப்படும். ஒரு குடியரசு நாளில் உங்கள் கையாலேயேகூட அந்தப் பதக்கத்தை அணிவிக்க வேண்டிய தருணம் வரலாம். அந்த துரதிருஷ்டமான சந்தர்ப்பத்துக்கு முன்பாக நான் உங்களுக்குச் சொல்ல வேண்டிய தகவல் ஒன்று உண்டு.

'ஜிபா கோர்வா' என்பவன் கட்டாயம் நக்ஸலைட் அல்ல. அப்படி ஒரு சாயம் பூசப்பட்டு, அவசரமாக சுட்டுக் கொல்லப்பட்ட அப்பாவி. அவன் பெயர் எகேடி. அந்தமான் தீவுக் கூட்டத்தின் ஒரு புள்ளியில் வசிக்கும் 'ஓங்கே' என்ற ஆதிவாசி இனத்தைச் சேர்ந்தவன். தங்களின் ஆதிவாசி இனம் மர்ம நோயால் அழிந்துகொண்டு இருப்பதற்குக் காரணமே, தங்கள் வசம் இருந்த புனிதக் கல் ஒன்று திருட்டுப் போய்விட்டதுதான் என்று நம்புகிறது அந்த ஆதிவாசிக் கூட்டம். திருட்டுப் போன கல்லை மீட்டு வரத்தான் தீவில் இருந்து கிளம்பி வந்து, உ.பி. உள்துறை அமைச்சர் ஜெகன்னாத் ராயின் மகனுடைய பண்ணை வீட்டுக்குள் நுழைந்தான் எகேடி.

www.t.me/tamilbooksworld

போலீஸார் பொய்யாகச் சித்திரிக்கும் 'என்கவுன்ட்டர்' சம்பவத்துக்கு முன்பாக அந்த ஆதிவாசியிடம் அவர்கள் எழுதி வாங்கிக்கொண்ட வாக்குமூலத்தில், அவனே தன்னை ஜார்கண்ட் தீவிரவாதி என்று ஒப்புக்கொண்டு விரல் ரேகை பதித்து இருக்கிறான் என்றும் அறிகிறேன். தோகை விரித்தாடும் அழகிய மயிலைக்கூட, 'நான் ஒரு காக்கா' என்று

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

கையெழுத்துப் போடவைக்கிற சாமர்த்தியம் இந்திய போலீஸாரைத் தவிர வேறு யாருக்கு வரும்?

ஜனாதிபதி அவர்களே... இவை எல்லாம் எனக்கு எப்படித் தெரியும் என்று நீங்கள் கேட்கலாம். அவன் சுட்டுக் கொல்லப்படுவதற்கு முந்தைய தினம், மத்திய உளவுத் துறையான ஐ.பி-யின் அடையாள அட்டை போலவே போலியாக ஒன்றைத் தயார் செய்துகொண்டு, அந்த ஆதிவாசி வைக்கப்பட்டிருந்த மெஹ்ரூலி காவல் நிலையத்துக்குள் நான் போனேன். நக்ஸலைட்களால் மேற்கொண்டு என்னவெல்லாம் அபாயங்கள் நேரலாம் என்று சர்வே செய்வதற்காக ஸ்பெஷல் டியூட்டியில் வந்திருக்கும் ஐ.பி. உயர் அதிகாரியாக என்னைக் காட்டிக்கொண்டேன். போலீஸாரும் நம்பினார்கள். ஆதிவாசி அடைக்கப்பட்டு இருந்த லாக்-அப் அறைக்கு என்னைக் கூட்டிச் செல்லும்படி கூறினேன். சல்யூட் அடித்து அதைச் செய்தார்கள் அங்கே இருந்த போலீஸ்காரர்கள். விசாரணைக் கைதிகளை எப்படி எல்லாம் நடத்தவேண்டும் என்று சட்டம் சொல்கிறதோ... அதில் ஒரு துளியைக்கூட கடைப்பிடிக்கவில்லை காவல் துறை! மூச்சே விடமுடியாத, நாற்றம் மிகுந்த லாக்-அப் அறைக்குள், கால்களில் விலங்கிட்டு ஒரு மிருகம்போல அடைத்து வைத்து இருந்தார்கள் அந்த இளைஞனை. காவல் துறையின் தொடர் சித்ரவதைகளால் உடல் எங்கும் காயங்களுடன் காணப்பட்டான் அந்த அப்பாவி. என்னை அழைத்துச் சென்ற போலீஸ்காரர்கூட, 'ஏய் எழுந்திருடா! பெரிய அதிகாரி வந்திருக்கார். உன்னை விசாரிக்கணுமாம்' என்று சொல்லி, என் கண் எதிரிலேயே தன் பூட்ஸ் கால்களால் ஓங்கி வயிற்றில் மிதித்தார். நான்தான் அவரைத் தடுத்துவிட்டு, 'இவனிடம் என்னைக் கொஞ்ச நேரம் தனியாகவிடுங்கள்' என்று சொல்லி அவரை அனுப்பிவைத்தேன். அந்த இளைஞனின் முதுகில் மெள்ளத் தட்டி எழுப்பினேன்.

www.t.me/tamilbooksworld

- தொடர்ந்து சந்தேகிப்போம்...

Copyright © Vikas Swarup 2008

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

# மோட்டிவ் 6

பத்திரிகையாளர் அருண் அத்வானியின் தொடர் கட்டுரையில் இந்திய ஜனாதிபதிக்கு எழுதும் பகிரங்கக் கடிதம் தொடர்கிறது. ஐ.பி. உயர் அதிகாரி என்று போலீஸை ஏமாற்றி, சிறையில் இருந்த ஆதிவாசி எகேடியை சந்தித்தபோது நிகழ்ந்ததை எழுதுகிறார்...

www.t sworld




www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

## இவன்தான் கொலைகாரன்!

சுருண்டுகிடந்த எகேடி முதுகில் மெள்ளத் தட்டி எழுப்பினேன். அவனுடைய உள்ளங்கைகளை என் கைகளுக்குள் பொதித்துக்கொண்டு, 'நண்பனே! நீ நக்ஸலைட் இல்லை என்று எனக்குத் தெரியும். அந்தப் பண்ணை வீட்டில் விக்கிராயை சுட்டுக் கொன்றது நீ இல்லை என்றும் தெரியும். ஆனால், எதற்காக அங்கே போனாய் என்று சொல். உன்னை விடுவிப்பதற்கு நான் முயற்சி செய்கிறேன்' என்று கூறினேன்.

என்னிடமும் அவன் சுலபத்தில் பேசிவிடவில்லை. ஆனால், என் அன்பான அணுகுமுறையில் கரைந்துபோனவன்... தன்னைப்பற்றி சொல்ல ஆரம்பித்தான். அதன் பிறகு எதையுமே ஒளிக்கவில்லை... மறைக்கவில்லை.

ஜனாதிபதி அம்மையார் அவர்களே... அவன் ஆதிவாசிக் குலத்தின் பெயர் 'ஓங்கே' என்று கூறினேன். அதற்கு பொருள் என்ன தெரியுமா? 'மனிதன்'!

www.t.me/tamilbooksworld

ஆம்... வெகு காலத்துக்குப் பிறகு நான் ஒரு உண்மையான மனிதனை லாக்-அப்பில் சந்தித்தேன். அவனைப்போலவேதான் அவனுடைய தீவில் அழிந்துகொண்டு இருக்கும் ஆதிவாசிகளும் வஞ்சனை, சூது தெரியாத உண்மையான மனிதர்களாக வாழ்கிறார்கள். ஆனால், அந்த இனம் கிட்டத்தட்ட அழிந்து மறையும் நிலையில் இருப்பது என்னவொரு துரதிருஷ்டம்!

அஷோக் ராஜ்புத் என்ற, பேராசை பிடித்த ஒரு அதிகாரிதான் இந்த ஆதிவாசி இளைஞன் மரணத்துக்கு முதல் காரணம். திருட்டுப்போன புனிதக் கல்லை இந்த இளைஞன் மூலமாக தேடிப் பிடித்துவிட்டால்... அதை விற்று, பல லட்சங்களை சம்பாதிக்கலாம் என்று முதலில் திட்டம் போட்டான் அந்த அதிகாரி. அவன்தான் இவனை அந்தமான் தீவுக் கூட்டத்தின் கண்காணாத தொலைவில் இருந்து இங்கே கூட்டி வந்தவன்.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

அவன்தான் பண்ணை வீட்டுக்குள் புனிதக் கல் இருப்பதாக இவனை ஏவிவிட்டவன். துப்பாக்கி என்பது இந்த இளைஞனின் விருப்பமே இல்லாமல், இவனிடம் திணிக்கப்பட்ட ஒன்று. அதை எப்படிப் பயன்படுத்துவது என்பதுகூட இவனுக்குத் தெரியாது.

விரும்பாமல் திணிக்கப்பட்ட ஒன்றை பண்ணை வீட்டுக்குள் எதற்காக அந்த ஆதிவாசி கொண்டுவர வேண்டும் என்று நீங்கள் கேட்கலாம். அங்கேதான் அஷோக் ராஜ்புத்தின் சொந்த வாழ்க்கை மர்மம் ஒன்று ஒளிந்து இருக்கிறது.

ஜனாதிபதி அவர்களே... அஷோக் ராஜ்புத் ஒரு ராஜஸ்தானியன். அவனுடைய அண்ணன் கிஷோர் ராஜ்புத், ஒரு வனத் துறை அதிகாரி. 12 வருடங்களுக்கு முன்பு ஒரு 'செட்-அப்' விபத்தில் கொடூரமாகக் கொல்லப்பட்டார் அந்த வனத் துறை அதிகாரி. கொன்றது வேறு யாரும் அல்ல... இப்போது பண்ணை வீட்டில் சுட்டுக் கொல்லப்பட்ட விவேக் விக்ராய். ஏன் அந்த வனத் துறை அதிகாரியைக் கொல்ல வேண்டும்? ராஜஸ்தான் எல்லைக்குள் இருக்கும் காட்டில் தன் நண்பர்களுடன் மான் வேட்டை ஆடச் சென்று, இந்த கிஷோர் ராஜ்புத்திடம் கையும் களவுமாகப் பிடிபட்டான் விக்ராய். எந்த அரசியல் செல்வாக்குக்கும் அஞ்சாமல் விக்ராய் மீது வழக்கு போட்டார் கிஷோர். அதில் எழுந்த அவமானத்தை ஜீரணிக்க முடியாமல்தான், கிஷோர் ராஜ்புத்தை கூலிப் படை வைத்துக் கொன்றான் விக்ராய்.

www.t.me/tamilbooksworld

ஜனாதிபதி அவர்களே... நான் சொல்வது உங்களுக்குத் திரைப்படங்களில் வரும் கதைபோலத் தோன்றலாம். ஆனால், ராஜஸ்தானியக் காவல் துறை ஆவணங்களைத் தேடி எடுத்து வரச் சொல்லிப் பாருங்கள். மான் வேட்டை வழக்கு, கிஷோர் விபத்தில் இறந்த வழக்கு ஆகிய தேதிகளையும்... சில தொடர்புகளையும் நீங்கள் ஒப்பிட்டுப் பார்க்கலாம்.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

ராஜஸ்தானிய பெண்களின் பதி பக்தி பற்றியும், பழிக்குப் பழி உணர்வு பற்றியும் நீங்கள் கேள்விப்பட்டு இருப்பீர்கள். கிஷோர் ராஜ்புத்தின் மனைவி - அதாவது அஷோக் ராஜ்புத்தின் அண்ணி - வெறிகொண்டாள். தன் கொழுந்தனிடம் ஒரு வரம் கேட்டாள். 'என் கணவனைக் கொன்ற விவேக் விக்கிராயை நீ வாய்ப்பு கிடைக்கும்போது, கொன்று போட வேண்டும்' என்பதுதான் அந்த வரம்.

மத்திய அரசுப் பணி காரணமாக அந்தமான் தீவுக்கு அஷோக் ராஜ்புத் செல்ல வேண்டிய கட்டாயம் வந்தாலும், அவன் மனதுக்குள் அண்ணி கேட்ட வரம் சுழன்றுகொண்டே இருந்தது. தக்க சமயத்துக்காகக் காத்திருந்தபோதுதான், அஷோக் ராஜ்புத்துக்கு இந்த புனிதக் கல் காணாமல் போன விஷயம் தெரிந்தது. அதைத் தேடி எடுத்து விற்றால், பல லட்சங்கள் கிடைக்கும் என்றும் தெரிந்தது.

சென்னை வரையில் அந்தக் கல்லைத் துரத்திப் போனவனுக்கு, அலகாபாத்தில் மகா பிரயாக் நிகழ்ச்சியில் கலந்துகொண்ட பலே அரசியல் சாமியாரிடம் அது இருப்பது தெரிந்தது. அலகாபாத்துக்கு வந்த அஷோக் ராஜ்புத், சாமியாரின் மடத்தில் அந்தக் கல்லைக் கைப்பற்றிவிட்டான். ஆனால், அங்கே இருந்து அதை வேறு யாரோ முந்திக்கொண்டு களவாடிவிட்டதாகவும்... அதைத் தொடர்ந்து தேடியாக வேண்டும் என்றும் ஆதிவாசி எகேடியிடம் பொய் சொல்லி டெல்லிக்குக் கூட்டி வந்தான்.

www.t.me/tamilbooksworld

ரூபி கில் கொலை வழக்கில் விக்கிராய் விடுதலை செய்யப்பட்ட செய்தியால் கொதித்துப் போனவர்களில் அஷோக் ராஜ்புத்தும் ஒருவன். ஏற்கெனவே தன் அண்ணன் படுகொலையில் கொந்தளித்துக் கிடந்தவன், மீண்டும் மீண்டும் சட்டத்தின் பிடியிலிருந்து மந்திரி மகன் தப்பித்துக்கொண்டே போனதால் எரிமலை ஆனான். தீர்ப்பைக் கொண்டாடுவதற்காக பண்ணை வீட்டில் விவேக் விக்கிராய் பார்ட்டி கொடுக்கப் போவது தெரிந்ததும்... அண்ணியின் சபதத்தை நிறைவேற்ற

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

நாள் வந்துவிட்டதாக முடிவெடுத்தான். விக்கிராயை சுட்டுக் கொன்றுவிட்டு, தடயங்கள் இன்றித் தப்பிக்க ஒரு புதிய திட்டம் வகுத்தான். தன் கட்டுப்பாட்டில் இருந்த ஆதிவாசி எகேடியிடம், 'பண்ணை வீட்டுக்குள்தான் புனிதக் கல் இருக்கிறது' என்று நம்பவைத்தான். ஆதிவாசியை அன்றைய இரவில் உள்ளே அனுப்பினான். பின்னாடியே பண்ணை வீட்டின் பின் கதவு வழியாக அஷோக் ராஜ்புத்தும் உள்ளே நுழைந்து இருக்கிறான். கோட்டு - சூட்டு அணிந்து கம்பீரமாக இருந்த இவன் மீது, அங்கே இருந்த மற்ற விருந்தினர்களுக்கு எந்த சந்தேகமும் வரவில்லை. டெல்லியின் குடிசைப் பகுதிக்குள் தான் தங்கியிருந்தபோது, தன்னைச் சந்தித்த தீவிரவாதிகள் வலுக்கட்டாயமாகத் திணித்துவிட்டுப் போன துப்பாக்கியைத்தான் பிறகு தன் பைக்குள் இருந்து போலீஸ் எடுத்தது என்று என்னிடம் கூறினான் ஆதிவாசி எகேடி. அதை என்னால் உறுதி செய்ய முடியவில்லை. ஆனால், அவனுக்குத் துப்பாக்கியால் எப்படி சுடுவது என்றுகூட தெரியாது என்பதுதான் உண்மை. அந்தப் பைக்குள் திடீரென்று துப்பாக்கி வந்ததற்குக் காரணம் அஷோக் ராஜ்புத். அதை மட்டும் என்னால் உறுதியாகச் சொல்ல முடிகிறது!

www.t.me/tamilbooksworld

### எப்படி?

பண்ணை வீட்டுக்குள் துப்பாக்கியுடன் புகுந்த அஷோக் ராஜ்புத், மெயின் ஸ்விட்ச்சை சமயம் பார்த்து அணைப்பதற்கு மிகச் சாமர்த்தியமாக ஏற்பாடு செய்து இருக்கிறான் என்பதே என் வாதம். விளக்கு அணைந்ததும் விவேக் விக்கிராயை சுட்டுக் கொன்ற அஷோக் ராஜ்புத், ஏற்கெனவே தன் வசம் இருந்த புனிதக் கல்லைக் கொண்டுபோய் அங்கே இருக்கும் கோயிலுக்குள் வைத்துவிட்டு அருகிலேயே ஒளிந்து இருந்தான். புனிதக் கல்லை எடுப்பதற்காக, தன் தோளில் இருந்த பையை ஆதிவாசி கீழே வைத்தபோது, விவேக் விக்கிராயைச் சுட்டுக் கொல்லப் பயன்படுத்திய துப்பாக்கியை அந்தப் பைக்குள் அஷோக் ராஜ்புத் வைத்திருக்க வேண்டும். இருட்டு

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

காரணமாகவும், பதற்றம் காரணமாகவும் இதை ஆதிவாசி கவனிக்கத் தவறிவிட்டான்.

பழிக்குப் பழி கொலையை முடித்துக்கொண்டு மிகத் திறமையாக அதே பின் வாசல் கதவின் வழியே அஷோக் ராஜ்புத் நழுவிச் சென்றுவிட்டான். புனிதக் கல்லையும் கொலை ஆயுதமான துப்பாக்கியையும் ஆதிவாசி இளைஞன் எல்லா கட்டுக் காவலையும் மீறி எப்படியாவது வெளியே கொண்டுவந்து சேர்த்துவிடுவான் என்பது அவனுடைய அசைக்க முடியாத நம்பிக்கை. ஒருவேளை போலீஸிடம் சிக்கினாலும் பரவாயில்லை என்று நினைத்து இருக்கலாம். ஆதிவாசியோ, போலீஸிடம் சிக்கிக்கொண்டான். அவன் பைக்குள் இருந்து போலீஸ் எடுத்த துப்பாக்கி அவனைக் கொலைகாரனாகக் காட்டியது. பெரிய இடத்துப் படுகொலை வழக்கில் உடனடியாகத் 'துப்பு துலக்க' வேண்டிய கட்டாயத்தில் இருந்த போலீஸார், இந்த இளைஞன் தப்பி ஓட முயன்றபோது 'என்கவுன்ட்டர்' செய்யும் கட்டாயம் ஏற்பட்டதாகச் சொல்லி, வழக்கை சுலபமாக மூடும் வேலையில் இறங்கிவிட்டார்கள்!

ஜனாதிபதி அம்மையார் அவர்களே...

இதில் பெரும்பாலான விஷயங்கள் ஆதிவாசி எகேடியிடம் பேசியதன் மூலம் நான் அறிந்துகொண்டவை. வேறு சில விவரங்கள் டெல்லி போலீஸ் வட்டாரத்தில் அறிந்தவை... மற்ற சில விஷயங்கள் ராஜஸ்தானில் உள்ள என் பத்திரிகை நண்பர்கள் மூலம் துப்பறிந்தவை. அஷோக் ராஜ்புத்துக்கு, விவேக் விக்கிராய் மீது உள்ள 'மோட்டிவ்' ஒன்றே போதும்... உடைந்த துண்டுகளாக சிதறிக்கிடக்கும் காட்சிகளை ஒட்டவைத்துப் பார்க்க முடியும்!

இதை எல்லாம் நான் சொல்வதால்... என் மீது வெவ்வேறு தரப்புகளில் இருந்து அவதூறு வழக்குகள் பாயும் என்பது எனக்குத் தெரியும். அதுபற்றிய கவலைகளை ஒதுக்கிவிட்டுத்தான் உங்களுக்கு

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*இதை எழுதுகிறேன். லட்சக்கணக்கான வாசகர்களின் பார்வைக்கும் அச்சில் ஏற்றுகிறேன்.*

*வழக்கு என் மீது பாயட்டும்... கை விலங்கு தேடி வரட்டும். உண்மை வெளிச்சத்துக்கு வருமானால், அது ஒன்றே போதும்... அருண் அத்வானியாகிய நான் பத்திரிகையாளன் என்ற பணியைத் தேர்ந்து எடுத்ததற்குப் பலன் கிட்டியதாகத் திருப்தி அடைவேன்!*

- தொடர்ந்து சந்தேகிப்போம்...

Copyright © Vikas Swarup 2008

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

## மோட்டிவ் 6

*உத்தரப் பிரதேச உள்துறை அமைச்சரின் மகன் விவேக் விக்கிராயின் மரணம் நாடெங்கும் பரபரப்பாகிறது!*

**பிரேக்கிங் நியூஸ்**

*ஏப்ரல் 2... மதியம் மணி 15:37... ஐ.டி.என். தொலைக்காட்சியில்...*

www.t.me/tamilbooksworld

*பர்க்கா தாஸ்: ''இதுவரை இந்த தேசம் இப்படி ஒரு தருணத்தைச் சந்தித்து இருக்குமா என்பது சந்தேகம்தான். புலனாய்வுப் பத்திரிகையாளர் அருண் அத்வானி, ஜனாதிபதிக்கு எழுதிய கடிதம் நம்ப முடியாத திருப்பங்களை உண்டாக்கி இருக்கிறது. இன்று காலை பத்திரிகை மூலமாகவும் மக்களைச் சென்றடைந்த அந்தக் கடிதத்தின் உண்மைகள் நாட்டையே குலுக்கி இருக்கிறது!*

*ஆதிவாசி எகேடி மீது நக்ஸலைட் என்று முத்திரை குத்தி அநியாயமாகச் சுட்டுக் கொன்ற போலீஸார் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது. டெல்லி மாநகர போலீஸ் கமிஷனரும் சஸ்பெண்ட் செய்யப்பட்டு உள்ளார். மெஹ்ரௌலி காவல் நிலையத்தின் வாசலில் இப்போது இருக்கும் நமது நிருபர் ஜதின் மகாஜன் என்ன கூறுகிறார் என்று கவனிப்போம்...''*

*ஜதின் மகாஜன்: ''பர்க்கா... போலீஸ் மீது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் போதாது என்றும், மேலும்*

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*கடுமையான நடவடிக்கைகள் கோரியும் காவல் நிலையத்தை மக்கள் முற்றுகை இட்டிருக்கிறார்கள். இதே மெஹ்ரூலி ஏரியாவைச் சேர்ந்த குடிசைப் பகுதி மக்கள்தான் இந்தப் போராட்டத்தை நடத்துகிறார்கள். ஆச்சர்யமான விஷயம் என்னவென்றால், இந்தக் கூட்டத்துக்குத் தலைமை தாங்கி கோஷமிட்டுக்கொண்டு இருப்பது - 'மொபைல்' முன்னா... ஆதிவாசி எகேடி கைது செய்யப்பட்ட அதே விவேக் விக்கி ராய் கொலை வழக்கில் சந்தேகத்தின் அடிப்படையில் கைதாகி, பிறகு விடுதலை செய்யப்பட்ட இளைஞர்தான் இந்த 'மொபைல்' முன்னா...''*

*பர்க்கா: ''போராடுபவர்களின் முக்கியக் கோரிக்கை என்ன?''*

*ஜதின்: ''ஏழைக்கு ஒரு நீதி... பணக்காரனுக்கு ஒரு நீதி என்பதை இனிமேலும் பொறுக்க மாட்டோம் என்று கூறும் இந்தக் குடிசைவாசிகளுக்கு, டெல்லி மாநகர மக்கள் மத்தியில் ஆதரவு கூடி வருகிறது. நேரம் ஆக ஆக ,போலீஸ் ஸ்டேஷன் வாசலில் பல தரப்பு மக்களும் கூடி கோஷமிடத் தொடங்கி இருக்கிறார்கள். பத்திரிகையாளர் அருண் அத்வானி எழுதி வரும் கட்டுரைத் தொடரின் விளைவாகவே இந்தப் புரட்சி வெடித்து இருப்பதாகக் காவல் துறையினர் கவலையோடு பேசுகிறார்கள். இதற்கிடையே, இந்தக் காவல் நிலையத்துக்கு வந்து இறங்கி இருக்கும் டெல்லி மாநகர முதல்வரை மக்கள் சூழ்ந்துகொண்டு கோஷமிடுகிற காட்சியைத்தான் இப்போது நீங்கள் பார்க்கிறீர்கள். 'வசதி படைத்த மனிதர்கள் மீது பதிவாகி... பிறகு பல்வேறு நெருக்கடிகளால் கைவிடப்பட்ட பல வழக்குகளை மறுபடி விசாரணைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும்!' என்று முதல்வரிடம் வாக்குறுதி கேட்கிறார்கள் மக்கள். முதல்வரும், அது குறித்து மந்திரிசபையில் விவாதம் நடத்திவிட்டு, மிக விரைவிலேயே அறிவிப்பு வெளியிடுவதாகக் கூறுகிறார், பர்க்கா...''*

*பர்க்கா: ''எகேடி 'என்கவுன்ட்டர்' விவகாரத்தில் இப்போது சம்ப்பி என்று ஒரு பெண்ணைப்பற்றியும் பரபரப்பாக செய்திகள் வந்தபடி இருக்கிறதே, ஜதின்...''*

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*ஜதின்: ''ஆமாம் பர்க்கா... எகேடியை இந்தப் பெண் காதலித்து இருக்கிறாள். போபால் விஷ வாயுக் கசிவின்போது பாதிக்கப்பட்டவர்களில் இவளுடைய தாயாரும் ஒருவர். அந்த கசிவு பயங்கரத்துக்குப் பிறகு பிறந்த குழந்தையான சம்ப்பிக்கு இரு கண்களிலும் பார்வை கிடையாது. முகத்திலும் பல்வேறு விதமான பாதிப்புகள் பிறந்தபோதே காணப்பட்டன. குரூரமான முகத் தோற்றத்தோடு இருந்தபோதும், இவளை மனமாரக் காதலித்து இருக்கிறான் ஆதிவாசி எகேடி. தீவுக்குத் திரும்பும்போது தன்னோடு அவளை அழைத்துச் செல்வதாக வாக்குறுதியும் கொடுத்து இருக்கிறான். 'மொபைல்' முன்னாவின் வளர்ப்புத் தங்கையான இந்த சம்ப்பியும் இப்போது மக்களோடு சேர்ந்து போராட்டக் களத்தில் நிற்கிறாள். போபால் பயங்கரம் தொடர்பாக நஷ்ட ஈடு கேட்டு நீதிமன்றத்தில் போராடிக்கொண்டு இருக்கும் தன்னார்வ அமைப்புகளின் பார்வை இப்போது சம்ப்பி மீது விழுந்து இருக்கிறது. அவளுடைய கண்களுக்கு அறுவை சிகிச்சை மூலம் பார்வை வரச் செய்யவும், முகத்துக்கு பிளாஸ்டிக் சர்ஜரி செய்து சரியாக்கவும் நன்கொடை திரட்டும் பணியில் உடனடியாக இந்தத் தன்னார்வ அமைப்புகள் இறங்கிவிட்டன. இதோ, இந்த ஸ்பாட்டிலேயே நிதி உதவி கணிசமாக சேரத் தொடங்கி இருக்கிறது...''*

www.t.me/tamilbooksworld

*பர்க்கா: ''பணத்தின் தகிப்பால் நீதியை உருக்கப் பார்க்கும் செயலுக்கு மக்கள் மத்தியில் கிளம்பி இருக்கும் இந்த எதிர்ப்பு, அரசாங்கத்தை அசைத்துப் பார்க்குமா? அடுத்தடுத்து பல ஆரோக்கியமான விளைவுகளை உண்டாக்குமா? இன்றிரவு ஒன்பது மணிக்கு நமது 'எரியும் பிரச்னைகள்' நிகழ்ச்சியில் பிரபலங்கள் கலந்துகொள்ளும் விவாதத்தில் விளக்கமாகப் பார்க்கலாம்!''*

### *ஸ்டிங் ஆபரேஷன்*

*''ஐயாவுக்கு வணக்கம்! ரொம்ப நாளாச்சு, உங்களை நேரில் பார்த்து!''*

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

''வாங்க சிங்கானியா... உக்காருங்க... அரசியல் போர்க் களத்துல உள்ளேயும் வெளியேயும் எதிரிகளோட யுத்தம் நடத்தவே நேரம் சரியாக இருக்குது. உங்களை மாதிரி தொழில் அதிபர்களை சந்திக்க எங்கே நேரம் இருக்கு?''

''நடக்கிற விஷயங்களைப் பார்க்கும்போது, உங்க பக்கம் எல்லாமே ஜெயம் ஆகிட்டு வருதுன்னு புரியுது. எவ்வளவு சந்தோஷமா இருக்கு தெரியுமா!''

''நல்லா சொன்னீங்க... மீண்டும் மீண்டும் முதல்வர் பதவிக்கு வந்தபோதெல்லாம் அடையாத ஒரு மகிழ்ச்சியை, இப்ப நான் அனுபவிச்சுகிட்டு இருக்கேன்...''

''உங்களுக்கு எதிராப் புரட்சி பண்ணி, முதல்வர் பதவியைப் பிடிக்கப் பார்த்த ஜெகன்னாத் ராய் இப்போ வகையா மாட்டிக்கிட்டு ஜெயிலுக்குப் போனது யாருமே எதிர்பார்க்காத திருப்பம்தான்! ஐயா... அவரோட சொந்த மகன் செத்துப்போன வழக்கில் சிக்காட்டியும் வேறு பல கொலை வழக்குகளில் மொத்தமா மாட்டிக்கிட்டாரே... இதோட அவருடைய அரசியல் வாழ்க்கை அஸ்தமிச்சுப் போச்சுனுதான் வெளியிலே பேசுறாங்க...''

www.t.me/tamilbooksworld

''அது மட்டுமா... ஜெகன்னாத் ராய்கூட சேர்ந்து என்னைக் கவிழ்க்கப் பார்த்த எங்க கட்சி எம்.எல்.ஏ. அத்தனை பேரையும் மொத்தமா கட்டம் கட்டப் போறேன்... அவங்க மேலே இருக்கிற பல வகை வழக்குகளைக் காரணம் காட்டப்போறேன். கட்சியை சுத்தப்படுத்துறதுக்காகத்தான் இதைச் செய்யறேன்னு மக்களை ஜோரா நம்பவெச்சிடுவேன். இப்ப காத்து என் பக்கம் பலமா வீசுது...''

''இன்னிக்கு காலையில் வெளியான 'மார்னிங் போஸ்ட்' பத்திரிகையில் கருத்துக் கணிப்பு பார்த்தீங்களாய்யா... கிரிமினல் அரசியல்வாதிகளுக்கு எதிராக நீங்க குரல் கொடுப்பதைத் தொடர்ந்து,

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*மக்கள் மத்தியில் உங்களோட இமேஜ் பத்து பெர்சன்ட் கூடியிருக்கிறதா, அந்தக் கணிப்பு சொல்லுது!''*

www.t.me/tamilbooksworld

*(வெடிச் சிரிப்போடு) ''அதான் சொன்னேனே... காத்து நம்ம பக்கம் அடிக்குதுன்னு! தாதாக்களை வெச்சுக்கிட்டு அந்த ஜெகன்னாத் ராய், தன்னோட அரசியல் வாழ்க்கையைப் பலப்படுத்திக்கலாம்னு நினைச்சான். நேருக்கு நேரா எனக்கே சவால் விட்டான்னா பாருங்களேன்... இப்ப அவனுக்குப் புரிஞ்சிருக்கும் - என்னோட அரை நூற்றாண்டு அரசியல் அனுபவத்துக்கு முன்னாடி, அவனோட தாதாயிஸம் எல்லாம் தூசுன்னு! உள்துறை அமைச்சர் பதவியில் இருந்தா... போலீஸை வெச்சுக்கிட்டு என்ன வேணா விளையாடலாம்னு திமிரு அவனுக்கு. ஆனா, அவனுக்குத் தெரியாது... அதே போலீஸை வெச்சு மூணு வருஷமா அவனோட போனை நான் ஒட்டுக்கேட்டுக்கிட்டு இருக்கேன்னு!''*

*''ஐயா, அருண் அத்வானினு ஒருத்தன் கட்டுரை எழுதிக்கிட்டே இருக்கானே... அவனுக்கு இந்த டெலிபோன் டேப்பை அனுப்பிவெச்சது...?''*

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

(மீண்டும் வெடிச்சிரிப்பு) ''வேற யாரு... சர்வமும் நானே! நேர்மையான நல்ல பத்திரிகைக்காரங்க எப்பவுமே அரசியல்வாதிகளுக்குத் தொல்லைதான். ஆனா, என்னை மாதிரி புத்திசாலி அரசியல்வாதிகள் நினைச்சா, தங்களோட எதிரிகளை ஒழிக்கிறதுக்குப் பத்திரிகைக்காரங்களை பக்காவா யூஸ் பண்ணிக்க முடியும். அந்த ஆடியோ பதிவை எல்லாம் ஒரு மாநிலத்தோட முதல்வரே தனக்கு அனுப்பி வெச்சிருப்பாருன்னு அந்த அருண் அத்வானி கனவுலகூட கற்பனை பண்ணி இருக்க மாட்டான். அது தெரிஞ்சா என்னையும் சேர்த்து சேத்துக்குள்ளே இழுத்துடுவான்!''

''ஐயா... உங்க கட்சிக்காக நான் எவ்ளோ நிதியை அள்ளிக் கொடுத்து இருக்கேன்னு உங்களுக்கே தெரியும். வரப்போற பொதுத் தேர்தல்லேயும் இருபது தொகுதி வரைக்கும் எல்லா செலவையும் நானே கவனிச்சிக்கறேன். ஆனா, விவேக் விக்ராய் கொலை விவகாரத்துல எனக்கு ஒரு உதவி நீங்க செய்யணும்...''

www.t.me/tamilbooksworld

''யோவ் சிங்கானியா... என்ன குழப்பறே..? உனக்கும் அந்தக் கொலைக்கும் என்னய்யா சம்பந்தம்?''

''ஐயா, விக்ராயைக் கொலை செஞ்சது அஷோக் ராஜ்புத்னு ஒரு வெல்ஃபேர் ஆபீஸர்தான் அப்படினு அருண் அத்வானி எழுதுறதைப் பார்த்திருப்பீங்க... அந்த ஆதிவாசியை என்கவுன்ட்டர் பண்ணதோட விவகாரம் ஓய்ஞ்சுபோகும்னு பார்த்தா, இப்ப ஜனாதிபதி வரைக்கும் விவகாரம் போயிருக்கு. அஷோக் ராஜ்புத்தை இந்த விவகாரத்துல இருந்து நீங்கதான்யா எப்படியாச்சும் காப்பாத்தணும்...''

''அண்ணி சொன்னதுக்காக பழி வாங்கத்தான் இந்தக் கொலையை அஷோக் ராஜ்புத் செஞ்சதா அருண் அத்வானி எழுதுறானே... அப்ப அது உண்மைதானா? அந்த ராஜ்புத்துக்கும் உனக்கும் என்னய்யா சம்பந்தம்?''

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

''நானும் ராஜஸ்தான்காரன்தான்னு உங்களுக்குத் தெரியும். சாதாரணக் குடும்பத்துல அங்கே பிறந்து வளர்ந்தவன்யா நான்... அந்த அஷோக் ராஜ்புத் குடும்பம் எங்க குடும்பத்துக்காக எவ்ளோ உதவிகளை அந்தக் காலத்துல செஞ்சிருக்குன்னு வெச்சிக்கோங்களேன்... இப்ப தன் பேரு ஜனாதிபதி வரைக்கும் போயிட்டதால, அஷோக் ராஜ்புத் என்கிட்டே வந்து கதறி அழுவுறான். எப்படியாச்சும் இதுல இருந்து மீட்கும்படி கேக்குறான்!''

(சிறு அமைதி) ''நன்றிக்கடன், நட்பு அப்படின்னு எதுக்குய்யா வம்பை இழுத்துப் போட்டுக்குறே?''

''இல்லீங்கய்யா... அவனை நீங்க மீட்டுக் கொடுத்தா, பதிலுக்கு அவன் ஒண்ணு கொடுக்குறதா சொல்றான். விலை மதிப்பே இல்லாத, எல்லா அதிர்ஷ்டங்களையும் கொண்டுவந்து சேர்க்குற, அபூர்வ சிவலிங்கம் இப்ப அவன்கிட்டேதான் இருக்குது. அது உங்ககிட்டே வந்துட்டா, அதுக்கப்புறம் வாழ்நாள் முழுக்க நீங்கதான்யா உ.பி-க்கு முதலமைச்சர்! உங்களை எந்தக் கொம்பனும் நெருங்கக்கூட முடியாதபடி தடுக்குற சக்தி அந்த சிவலிங்கத்துக்கு இருக்கு...''

www.t.me/tamilbooksworld

- தொடர்ந்து சந்தேகிப்போம்...

Copyright © Vikas Swarup 2008

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

# மோட்டிவ் 6

மோட்டிவ் 6

SIX SUSPECTS

• விகாஸ் ஸ்வரூப் • தமிழில்: அஞ்சனா தேவ்

81

உத்தரப் பிரதேச முதல்வரிடம், அஷோக் ராஜ்புத்தை, விவேக் விக்கி ராய் கொலை வழக்கில் இருந்து விடுவிக்க வேண்டுகிறார் தொழில் அதிபர் சிங்கானியா. அதற்குப் பரிசாக அபூர்வ சிவலிங்கம் ஒன்றைத் தருவதாகச் சொல்கிறார்!

## காதலுக்காகக் கொலை?

www.t.me/tamilbooksworld

''சிவலிங்கம்னா... பண்ணை வீட்டுல அந்த ஆதிவாசி எகேடியை போலீஸ் மடக்கும்போது, அவன் பைக்குள்ளே இருந்து கைப்பற்றினதாச் சொல்றாங்களே... அதுவா? அதைத்தான் போலீஸ் இப்ப கஸ்டடியில் வெச்சிருகே.''

''அது அப்படி இல்லீங்கய்யா... அருண் அத்வானியே அந்த விஷயத்துல தப்பாத்தான் தெரிஞ்சுவெச்சிருக்கான். ஆதிவாசி கைக்குப் போனது அதே மாதிரி அஷோக் ராஜ்புத் செஞ்சுவெச்ச போலி லிங்கம். ஒரிஜினல் இதோ என்கிட்டே இருக்கு பாருங்க!''

(சிறு இடைவெளி)

''அடேங்கப்பா... கையில் எடுத்துப் பார்க்கும்போதே உடம்புக்குள்ளே ஏதோ பண்ணுதேய்யா... இப்படி ஒரு கல்லை நான் வாழ்க்கையில் பார்த்ததே இல்லை. அது சரி... ஏதோ பொடி சைஸ்ல புரியாத பாஷையில் இந்த சிவலிங்கக் கல் மேலே ஏதோ எழுதியிருக்குதே... அது என்ன?''

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

''உலகத்தின் முதல் மனுஷன்தான் இதை எழுதினதா, அந்த 'ஓங்கே' ஆதிவாசிகள் நம்புறாங்கய்யா... 'இன்கெடாயி'னு சொல்ற இந்த புனிதக் கல்தான் இந்த உலகத்திலேயே மனிதன் கையாண்ட மிகப் பழைமையான பொருள். இதுக்கு விலை மதிப்பே சொல்ல முடியாதுய்யா!''

''சரிய்யா! நீயும் ரொம்பவும் கெஞ்சுறே... உன்னோட ஃபேமிலி ஃப்ரெண்டை எப்படியாச்சும் இந்த கேஸ்ல சிக்காம வெளியே எடுத்துடுவோம்!''

''பிரச்னை இல்லாம இதைச் செய்ய முடியுமாய்யா? அந்த அருண் அத்வானி ஏடாகூடமா எல்லாத்தையும் எழுதி சிக்கல் பண்ணிட்டானேய்யா...''

''உனக்கே தெரியாத ஒரு விஷயத்தை இப்ப நான் சொல்லவா... உன்னோட ஃபேமிலி ஃப்ரெண்டு இருக்கானே - அந்த அஷோக் ராஜ்புத்... இருட்டுல அவன் சுட்ட குண்டு விவேக் விக்கி ராய் மேலே பாயவே இல்லை. அது குறி தவறிப்போச்சு. அந்த ஹால்ல ஒயின் பாட்டில்களை அடுக்கிவைக்கிற மர அலமாரிக்குள்ளே போய் பொத்துக்கிட்டு நின்னுடுச்சு. அந்த குண்டு வெளிப்பட்ட துப்பாக்கியைத்தான் ஆதிவாசி எகேடியோட பையில் போட்டுட்டு இவன் எஸ்கேப் ஆகியிருக்கான், புரியுதா? விக்கி ராய் உடம்புல பாய்ஞ்சு வேற ஒருத்தர் சுட்டது! இருந்தாலும், அந்த குண்டு வெளிப்பட்ட துப்பாக்கியைக் கண்டுபிடிக்காம,

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*இதை போலீஸால் நிரூபிக்க முடியாது. அதான், அந்த ஆதிவாசிதான் சுட்டதா சொல்லி கேஸை முடிக்க முடிவு பண்ணாங்க. அதுக்கு முந்தி அந்த ஆதிவாசி கதையையும் உஷாரா முடிச்சிட்டாங்க!''*

*''ஐயா, ரொம்பப் பிரமிப்பா இருக்குதுங்களே... நம்பவே முடியலைங்களே...''*

*''ஆமாய்யா... நிஜமாவே உன் ஃப்ரெண்டு இந்தக் கொலையை பண்ணலே. டெல்லி போலீஸ் கமிஷனர் இருக்காரே... அந்த ஆளு என்னோட தனிப்பட்ட நண்பர். அந்த ஆளுக்கு நான் எவ்வளவோ செஞ்சிருக்கேன். அந்தாளுதான் இந்த விவரம் எல்லாம் என்கிட்டே சொன்னார்.''*

*''அப்படின்னா, நிஜமாவே விக்கி ராயை சுட்ட ஆளை போலீஸால் ஆஃப் தி ரிகார்டாக்கூட கண்டுபிடிக்க முடியாதுங்களா?''*

www.t.me/tamilbooksworld

*''ஆனா, நான் கண்டுபிடிச்சிட்டேன்யா... விக்கி ராயைச் சுட்டது யாரு தெரியுமா? அவனோட சொந்தத் தங்கை ரீத்து ராய்!''*

*''தலை சுத்துதுங்களே...''*

*''உன்கிட்டே பணம் இருக்கிற அளவுக்கு மூளை இல்லை... அதான் பிரச்னையே. ஆனா, நான் ஜெகன்னாத் ராயோட வலது கரத்தையே என் உளவாளியா வெச்சிருந்தேன். அவன் மூலமாகத்தான் இதெல்லாம் எனக்குத் தெரிஞ்சது... இப்ப நான் சொல்லப்போற விஷயம், அந்த ஜெகன்னாத் ராய்க்கே இன்னி வரைக்கும் தெரியாது... அதான் இதுல பியூட்டி!''*

*(அமைதி)*

*''முதல்ல இருந்தே வர்றேனே... சோட்டு லோச்சன் அப்படின்னு ஒரு ரவுடிப் பயலைப் பத்தி நீ கேள்விப்பட்டிருக்கியா?''*

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

''நம்ம மாநிலத்துலயும், டெல்லியிலேயும் மாறி மாறி கிரைம் பண்றதா பத்திரிகையில் எழுதிக்கிட்டே இருப்பாங்களே... பெரிய 'கேங்' லீடர்னு சொல்வாங்களே... அவனா?''

''அவனேதான்! ஜெகன்னாத் ராய் எப்படி முக்தார் அன்சாரியை வெச்சுக்கிட்டு சில வேலைகளைப் பார்த்தாரோ... அதே மாதிரி எனக்கும் கொஞ்சம் காரியங்களுக்கு அப்பப்ப ஆள் தேவைப்படும். அதை இந்த சோட்டு லோச்சன் கச்சிதமா முடிச்சுக் கொடுப்பான். என்ன பண்றது... முதலமைச்சரா இருந்தாலும், சந்தடி இல்லாம சில குடைச்சல்களைச் சமாளிக்க இந்த மாதிரி ரவுடி நாய்களோட ஹெல்ப் தேவைப்படுதே... இந்த சோட்டு லோச்சன் கொஞ்ச நாளைக்கு முந்தி ஒரு கோடீஸ்வரனோட குழந்தையைக் கடத்தி பணம் கேட்டு மிரட்டி இருக்கான். கேட்ட பணத்தை டெல்லியில் ஒரு பள்ளிக்கூடத்துக்குப் பக்கத்துல குப்பைத் தொட்டியில போட்டுட்டு குழந்தையை மீட்டுக்கச் சொல்லி இருக்கான். குழந்தையைப் பெத்தவனும், பெட்டியைப் போட்டுட்டு தகவல் சொல்லி இருக்கான். சோட்டு லோச்சன் ஆளுங்க போயி அந்தப் பெட்டியை எடுக்கறதுக்குள்ளே... முன்னா அப்படிங்கிற ஒரு மொபைல் திருடன் போய் அதை எடுத்திட்டானாம்! அதான்யா... விக்கி ராய் செத்ததுமே அந்த பண்ணை வீட்டுக்குள்ளே போலீஸ் பிடிச்சுதே... அந்த ஆறு பேர்ல ஒருத்தன்!''

www.t.me/tamilbooksworld

''ஓ, 'மொபைல்' முன்னா அப்படினு போலீஸ் சொல்லுதே... அவனா? ஐயா, குப்பைத் தொட்டியிலே பணம் அங்கே இருக்குதுனு இந்த மொபைல் திருடனுக்கு எப்படித் தெரியும்ங்க?''

''பணம் எடுக்குறதுக்காக கார்ல கிளம்பிப் போய்க்கிட்டிருந்த சோட்டு லோச்சன் ஆள் ஒருத்தனோட மொபைலைத் தற்செயலா இந்த திருடன் அடிச்சிருக்கான். ஆள் மாறாட்டம் தெரியாம, சோட்டு லோச்சன் அந்த மொபைல் மூலமா தந்த இன்ஸ்ட்ரக்ஷனை 'உம்' கொட்டிக் கேட்டுக்கிட்டு,

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

கரெக்டா போய் அந்த சூட்கேஸை அடிச்சிட்டான். 75 லட்சத்தை தன்னோட குடிசைக்குள் பதுக்கி வெச்சிருந்தானாம்!''

''சினிமா மாதிரியே இருக்குதுங்களே...''

''சோட்டு லோச்சன் இருக்கானே... அவன் அப்படி இப்படி கண்ணி வெச்சு, அந்த மொபைல் திருடன் முன்னாவோட குடிசையைக் கண்டுபிடிச்சிட்டான். அந்தப் பயலோட கை காலை முறிச்சுப் போட்டுட்டு பணத்தை மீட்டுக்கிட்டு வந்தானுங்களாம் சோட்டுவோட ஆளுங்க! வேற ஒரு அசைன்மென்ட்டுக்காக கூப்பிடுறப்ப... அந்த சோட்டு பயலே என்கிட்டே உளறுனதுதான் இது!''

''ஆனா, இதுல ஜெகன்னாத் ராயோட பொண்ணு ரீத்து ராய் எங்கே வருதுங்க?''

''சொன்னா ஆச்சரியப்படுவே... இந்த மொபைல் திருடனை அந்த ரீத்து ராய் லவ் பண்ணி இருக்குது. இந்த விஷயத்தை எனக்கு சொன்னது, ஜெகன்னாத் ராய் வீட்டுலயே நான் வெச்சிருந்த உளவாளி!''

www.t.me/tamilbooksworld

''சரிங்க...''

''அந்தப் பையனோட சேர்ந்து ஊரைவிட்டே ஓடிப் போறதுக்கு ரீத்து ராய் திட்டம் போட்டிருக்குது. அதைத் தெரிஞ்சுகிட்டான் அவங்க அண்ணன் விக்கி ராய். அவனும், அவங்க அப்பா ஜெகன்னாத் ராயும் சேர்ந்து இந்தப் பொண்ணை அடி பின்னிட்டாங்களாம். இந்த சமயம் பார்த்து மொபைல் திருடனை சோட்டுவோட ஆளுங்க அடிச்சுப் போடவும்... தன்னோட அண்ணன் விக்கி ராய்தான் ஆள் வெச்சு அடிச்சிட்டதா அந்தப் பொண்ணு நினைச்சிடுச்சாம். காதல்தான் கன்னாபின்னானு கண்ணை மறைக்குமே... போற போக்குல தன் அண்ணனைப் போட்டுத் தள்ளிட்டு, இந்த மொபைல் திருடனோட சேர்ந்து ஓடிப் போகத் திட்டம் போட்டிருக்கு. அதான், பார்ட்டி நடந்த ராத்திரி தன் காதலனையும் பண்ணை வீட்டுக்கு வரச் சொல்லி பின் கதவைத்

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*திறந்துவிட்டிருக்கு. ரெண்டு பேர்ல யாராச்சும் ஒருத்தர் சான்ஸ் கிடைச்சதும் சுடுறது... அப்படியே ஓடிப் போயிடுறது... இதான்யா திட்டம்.''*

*(அமைதி)*

*''மொபைல் திருடனுக்கு சுடறதுக்கு சான்ஸ் கிடைக்கலைபோல இருக்கு. ஆனா, அந்தப் பொண்ணு தயாரா வெச்சிருந்த வேறொரு துப்பாக்கியால கரெக்டாப் போட்டுத் தள்ளிட்டு, தனக்கு ரொம்பவும் பழக்கமான அந்த வீட்டுக்குள்ளேயே துப்பாக்கியைப் பக்காவா மறைச்சுவெச்சிடுச்சு. அதான், போலீஸ் எவ்வளவு தேடியும் அந்த ஆறு துப்பாக்கிகளைத் தவிர வேற ஒண்ணும் சிக்கலை!''*

*''ஐயா, இப்படி எல்லாம் நடந்திருக்குமா?''*

*''ஜெகன்னாத் ராயும் அவன் மகனும் பண்ற பல க்ரைம்களுக்குத் துணையா இருந்தாலும், சின்னக் குழந்தையில இருந்தே அந்த ரீத்து ராயைத் தூக்கி வளர்த்த ஆளுய்யா நான் சொல்ற உளவாளி! அந்தப் பொண்ணு மேலே உள்ள பாசத்தாலே, அவளுக்கே தெரியாம அவளுக்குப் பாதுகாப்பாக் கண்காணிச்சுகிட்டு இருப்பான்போலிருக்கு. புள்ளை செத்து, அப்பனும் ஜெயிலுக்குப் போயிட்டதாலே... 'இப்படித்தான்யா நடந்திருக்கணும்... ஆனா, நாளைக்கே அந்தப் பொண்ணை போலீஸ் நெருங்கிடாமப் பார்த்துக்கோங்க'ன்னு என்கிட்டே கேட்டுக்கிட்டான்!''*

*''அப்ப, அஷோக் ராஜ்புத்துக்கு பிரச்னை ஒண்ணும் இல்லைங்களா..?''*

*''நான் சொல்ற வரைக்கும் தலைமறைவா இருக்கச் சொல்லு! செத்துப்போன ஆதிவாசியை வெச்சே கேஸை போலீஸ் முடிச்சிடும். அதுக்கு அப்புறமும் எந்தப் பிரச்னையும் வராம நான் பார்த்துக்கறேன்... அதே சமயம், என்னதான் என் எதிரியா இருந்தாலும், அவனோட*

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*பொண்ணை இதுல மாட்டிக் கொடுக்க எனக்கும் இஷ்டம் கிடையாது. அவ லவ் பண்ற அந்த மொபைல் திருடனுக்கு திடீர்னு சினிமா சான்ஸ் வேற அடிச்சிருக்காமே... ரெண்டு பேருமே கல்யாணம் பண்ணிக்கிட்டு சந்தோஷமா இருக்கட்டும்னு என் உளவாளி மூலமா ஆசீர்வாதம் பண்ணிட்டேன்!''*

*''ஐயா இந்த லிங்கம்...?''*

*''என் வீட்டைவிட பாதுகாப்பான, கௌரவமான இடம் இதுக்கு வேற என்ன இருக்கு? டீல் ஓவர்!''*

*''உங்க நேரத்தை ரொம்ப நேரம் எடுத்துக்கிட்டதுக்கு மன்னிக்கணும்... புது சிமென்ட் ஃபேக்டரி பர்மிஷன் சம்பந்தமா கேட்டிருந்தேன்... அதுக்கு ஒரு ஓகே சொல்லிட்டீங்கன்னா...''*

*''சிமென்ட் ஃபேக்டரி என்ன... டெக்ஸ்டைல் ஃபேக்டரி பத்திகூட முந்தி பேசிக்கிட்டு இருந்தியே... ஜாம் ஜாம்னு தொடங்கு. என் ஆசீர்வாதம் உனக்கு எப்பவும் உண்டு! தொழில் துறை வளர்ச்சி எந்த அளவுக்கு முக்கியமோ... அந்த அளவுக்கு உன்னை மாதிரித் தொழில் அதிபர்களும் எனக்கு முக்கியம்!''*

*(பெரும் சிரிப்பு)*

- தொடர்ந்து சந்தேகிப்போம்...

Copyright © Vikas Swarup 2008

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

மோட்டிவ் 6 - அடுத்த இதழில் முடியும்

SIX SUSPECTS
# மோட்டிவ் 6

விகாஸ் ஸ்வரூப்
தமிழில்
அஞ்சனா தேவ்

82

மந்திரி மகன் விவேக் விக்ராயை, அவனுடைய பண்ணை வீட்டுக்குள் நடந்த பார்ட்டியின்போது சுட்டுக் கொன்றது யார் என்ற கேள்விக்கான விடையை நெருங்கிவிட்டோம். இதோ அதற்கான ஒப்புதல் வாக்குமூலம்...

உண்மையைச் சொல்வதைவிட கடினமான காரியம் உலகில் வேறு இல்லை. விவேக் விக்ராய் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து, பண்ணை வீட்டுக்குள் போலீஸார் நடத்திய சோதனையில் நான் மாட்டிக்கொள்ளவே இல்லை. என்னையும் போலீஸார் சோதித்தார்கள். அவர்களிடம் நான் என் பெயரை என்னவென்று சொன்னேன் என்பது முக்கியம் இல்லை. பார்ட்டியில் உணவு சப்ளை செய்யவும் மற்ற சர்வீஸ்கள் செய்யவும் அழைக்கப்பட்டு இருந்த பணியாளர்கள் கூட்டத்தில் ஒருவனாக நான் எப்படி கலந்தேன் என்பதும் முக்கியம் இல்லை. அதற்கென்றே நான் அணிந்திருந்த சீருடை பற்றிய விவரங்களும் தேவை இல்லை. முக்கியமான 'க்ளூ'... நான் அணிந்திருந்த தடிப்பான ஷூக்கள்தான்!

www.t.me/tamilbooksworld

பார்ட்டிக்கு சர்வீஸ் செய்ய அழைக்கப்பட்ட நட்சத்திர ஹோட்டல் எது என்பதைத் தெரிந்துகொள்வது எனக்கு பெரிய சிரமமாக இல்லை. அதனால், முகம் தெரியாத அந்த வெயிட்டர்கள் கூட்டத்தில் நானும் ஒருவனாகக் கலந்து நடமாடுவதும் எளிதாகவே இருந்தது.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

விவேக் விக்ராயின் அருகிலேயே நின்று இருந்தேன் நான் - விளக்குகள் அணைந்தபோது! மிகச் சுலபமாக, அந்த மையிருட்டில் என்னால் குறி தவறாமல் அவனைச் சுட்டுக் கொல்ல முடிந்தது என்றால், எத்தனை நெருக்கத்தில் நிற்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்து இருக்கும் என்று பாருங்கள்!

இப்படி நான் திடீரென்று சொல்வதால், என் மீது யாரும் வருத்தப்படக் கூடாது. நன்மைக்கும் தீமைக்கும் இடையே காலம் காலமாக நடக்கும் யுத்தத்தில், தீமைக்கான தண்டனைகள் எல்லாமே சட்டப்படி கிடைத்துவிடுவது இல்லை. சில சமயங்களில் தந்திரத்தைத் தந்திரத்தால் வேர் அறுக்கும் அவசியம் வரத்தான் செய்கிறது!

சுருக்கமாக - தீமையின் மொத்த உருவமான விவேக் விக்ராயைக் கொன்று ஒழித்து, தர்மத்தை நிலைநாட்டி இருக்கிறேன் நான்.

www.t.me/tamilbooksworld

சத்தியமாக நம்புங்கள்... அந்தப் பாதகனுக்கு எதிராக எனக்கு தனிப்பட்ட எந்த பாதிப்பு - அதாவது, 'பெர்சனல் மோட்டிவ்' சத்தியமாகக் கிடையாது.

மூச்சு முட்டக் குடித்துவிட்டு, அசுரகதியில் காரை ஓட்டி... அவன் நசுக்கிக் கொன்ற பிளாட்பாரத்துக் குடும்பங்களில் நான் ஒருவன் கிடையாது. மான் வேட்டை நடத்தி இவன் மாட்டிக்கொண்டபோது, சட்டத்தின் பிடிக்குள் இவனைக் கொண்டு வந்து... அதனாலேயே உயிரை இழந்த கிஷோர் ராஜ்புத் எனக்கு எந்த வகையிலும் உறவினனோ, வேண்டியவனோ கிடையாது. அனுமதிக்கப்பட்ட நேரம் தாண்டி மது சப்ளை செய்ய முடியாது என்று மறுத்ததால், விக்ராயின் துப்பாக்கியால் மரணத்தைத் தழுவிய ரூபி கில் எனக்கு சகோதரியோ, காதலியோ... கூடப் படித்த மாணவியோ கிடையாது. கொல்லப்பட்ட அவளை நான் செய்தித் தாள்களிலும் தொலைக்காட்சிகளிலும் புகைப்படமாகப் பார்த்தது மட்டும்தான்!

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

எத்தனையோ கொலை வழக்குகளில் நியாயத் தீர்ப்பு வழங்கும் நீதிபதிகள் - செத்துப்போனவர்களோடு எந்த வகையிலாவது சம்பந்தப்பட்டு இருக்கிறார்களா என்ன? கொலை செய்யத்தான் மோட்டிவ் வேண்டும். நான் செய்தது கொலையே அல்ல... தீர்ப்பு! அதற்கு எதற்கு மோட்டிவ்?

எத்தனை குற்றங்கள் செய்திருப்பான் அந்த விக்கிராய்? எத்தனை ஊடகங்கள் அவனுடைய அராஜகங்களைப்பற்றி அலறி இருக்கும்! எத்தனை வழக்குகள் பாய்ந்து இருக்கும்! ஒன்றன் பின் ஒன்றாக அந்த வழக்குகளை உடைத்துக்கொண்டு அவன் வெளியே வந்தபோது, நீதியின் மீது மக்களுக்கு இருக்கும் நம்பிக்கையும் சேர்ந்து அல்லவா உடைந்துபோனது? நீதித் தராசை சமன்படுத்துவதற்கு என்னைப்போன்ற ஒரு குடிமகனாவது வேண்டாமா? அதனால்தான் சுட்டேன் - நெருக்கத்தில் நின்று!

என்னைப் பொறுத்த வரை, எந்தவொரு நாட்டின் தலைவிதியையும் நிர்ணயிக்கும் இடத்தில் இருக்க வேண்டியது மத்தியதர வர்க்கம்தான். அவர்கள் மனசாட்சியே இல்லாத பணக்காரர்களும் அல்ல... தவறுகளுக்கு எதிராகப் போராடும் அறிவோ, ஆற்றலோ, இல்லாத கீழ்த்தட்டு பரம ஏழைகளும் அல்ல... பிரான்ஸ், சீனா, ரஷ்யா, மெக்ஸிகோ, அல்ஜீரியா, வியட்நாம்... இப்படி நான் அறிந்த வரையில் பல நாடுகளில் புரட்சிக்கு வித்திட்டவர்கள் நடுத்தர வர்க்கத்து மக்களே!

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*அந்தியின் வெப்பம் தாளாமல், மனசாட்சியின் புழுக்கத்தை சமாளிக்க முடியாமல், வீதிக்கு வந்து இன்று போராடிக்கொண்டு இருக்கும் மற்ற சில நாட்டுப் புரட்சியாளர்களும்கூட அநேகமாக நடுத்தர வர்க்கத்து மக்களாகத்தான் இருப்பார்கள்!*

*ஆனால், இந்திய தேசத்தில் அந்தப் புரட்சி வெடிப்பதற்கான அறிகுறிகள் இன்னும் தெரியவில்லை. அன்னா ஹஸாரே போன்ற சில அபூர்வமான மனசாட்சிகள் இடையிடையே கிளப்பும் புரட்சிப் பொறியைக்கூட, அரசியலின் தந்திரக் கரங்கள் குயுக்தியாக அணைத்துப்போடவே பார்க்கிறது!*

*அடுத்தவன் வீட்டுப் படுக்கை அறையில் நடப்பதை, ஓட்டை வழியே பார்த்துக்கொண்டு இருக்கிற மாதிரி... சொந்த நாட்டில் வலியவர்கள் அரங்கேற்றும் அக்கிரமங்களை ஒரு வித சுவாரஸ்யத்தோடு தள்ளி நின்று பார்ப்பவர்கள்தான் இங்கே அதிகமாக இருக்கிறார்கள். விருப்பம் இல்லாத ஒரு பெண்ணை - அடுத்தவன் மனைவியை - வலுக்கட்டாயமாகப் புணர்ந்து... தன் இச்சைக்குப் பணியாத அவளைக் கழுத்தை நெரித்துக் கொல்லவும் ஒருவன் துணிந்துவிடுகிறபோது... கதவை உடைத்துக்கொண்டு உள்ளே போய் அவனை பீஸ் பீஸாக்க வேண்டாமா?*

www.t.me/tamilbooksworld

*ஏன் அதற்கான துணிச்சல் இங்கே உள்ள மத்திய தர மக்களில் யாருக்குமே இல்லை? இன்று பக்கத்து வீட்டில் புகுந்து நடப்பதுதான் நாளை நம் வீட்டுக்குள்ளும் அரங்கேறும் என்று இவர்களுக்கு ஏன் புரிவதே இல்லை? என்றைக்கோ ஒரு நாள் மட்டும் வெளியில் வந்து, மெழுகுவத்தியை ஏந்திக்கொண்டு மீடியாவின் கேமராக்களுக்கு முன்னால் கோஷம் போட்டுவிட்டாலே... இந்த நாட்டுக்கு நம் கடைமையை ஆற்றி முடித்துவிட்டதாக அர்த்தமா?*

*யாருடைய ஓட்டையோ யாரோ ஒருத்தன் போட்டுவிட்டுப் போகிறான்... இதில் எனக்கு என்ன என்று ஒதுங்கிப் போவதற்கு இந்த*

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

மத்திய வர்க்கத்தால் எப்படி முடிகிறது? காசு கொடுத்து ஓட்டு வாங்க ஒரு கூட்டம் வருகிறபோது, அடித்து விரட்டாமல் இவர்களால் எப்படி அமைதியாக இருக்க முடிகிறது? பறிக்கப்படுவது யாரோ ஒருத்தனின் உரிமை அல்ல.... விலைக்கு வாங்கப்படுவது யாரோ ஒருவனின் ஓட்டு மட்டும் அல்ல... அது தன்னையும் சேர்த்து நாளைக்கு ஆளப்போவது யார் என்பதை நிர்ணயிக்கும் உரிமையைத் தகர்க்கின்ற வேட்டு என்று ஏன் நடுத்தர வர்க்கம் கொந்தளிப்பதே இல்லை?

ஆனால், நான் கொந்தளித்தேன். இதற்கு முன்பும் பல தடவை கொந்தளித்து இருக்கிறேன். என் கொந்தளிப்பை என்னால் முடிந்த வகையில் வெளிப்படுத்திக்கொண்டே இருந்தேன். முடிந்தவரை, அந்தக் கொந்தளிப்பை அடுத்தவர்கள் மனதிலும் விதைத்துக்கொண்டேதான் இருந்தேன். ஆனால், இப்போதுதான் முதல் முறையாக ஒரு கொலையைச் செய்து இருக்கிறேன்! ஆமாம், நான் உருவாக்க நினைத்த வெளிப்படையான புரட்சிக்கு வேண்டிய கூட்டத்தை இப்போதைக்குத் திரட்ட முடியாது என்று நினைத்ததால்... அதர்மத்தின் உச்சகட்ட உருவமான விவேக் விக்கிராயைக் கொன்றே ஆக வேண்டிய கட்டாயம் எனக்கு ஏற்பட்டது.

'தர்மம் தோற்று, அதர்மம் தலை தூக்கும்போதெல்லாம் நான் அவதரிப்பேன்' என்பது தெய்வ வாக்கு அல்லவா? அதனால், இப்போது நானும் இறைவனே!

விக்கிராய் மீதான என் கொதிப்பு, கொலைத் தீர்ப்பாக உருவெடுக்கக் காரணம், முக்கியமான ஒரு டெலிபோன் பேச்சுதான். கடந்த இரண்டு வருடங்களாகவே நான் அவனுடைய தொலைபேசியை ஒட்டுக் கேட்டுக்கொண்டு இருக்கிறேன் - உ.பி. உள்துறை மந்திரி ஜெகன்னாத் ராயின் போனை முதலமைச்சர் ஒட்டுக் கேட்கிற மாதிரி! அடுத்தவர் போனை ஒட்டுக் கேட்க ஒரு மாநிலத்தின் முதல்வர் நினைத்தால், அவருக்கு உதவி செய்ய உளவுத் துறை இருக்கிறது. என்னைப்போன்ற

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*சாமான்ய நிலையில் உள்ள புத்திசாலிகள் நினைத்தால், அதற்கும் டெக்னாலஜி உதவத் தயாராகவே இருக்கிறது.*

*டெல்லியின் பாலிகா பஜாருக்கு வாருங்கள்... கொஞ்சம் பணம் செலவழித்தால், ஒட்டுக் கேட்பதற்கு எத்தனை சுலபமான கருவிகள் கிடைக்கிறது என்று காட்டுகிறேன்.*

*ரூபி கில் கொலை வழக்கில் இருந்து தண்டனை பெறாமல் தப்புவதற்காக, விவேக் விக்கிராயும் அவனுக்காக அவன் அப்பா ஜெகன்னாத் ராயும் நடத்திய பேரங்களின் பதிவுகள்தான், 'நீதியைக் கையில் எடு' என்ற அலறலாக எனக்குள் பொங்கிவிட்டது!*

*எங்கே, எப்படி விக்கிக்கு மரண தண்டனை கொடுக்கலாம்? அதில் சிக்கிக்கொள்ளாமல் எப்படி தப்பிக்கலாம்? இதை நான் யோசித்துக்கொண்டே இருந்தபோதுதான்... மார்ச் 17-ம் தேதி அவனுடைய போனில் அந்த உரையாடலைக் கேட்க நேர்ந்தது.*

www.t.me/tamilbooksworld

- தொடர்ந்து சந்தேகிப்போம்...

Copyright © Vikas Swarup 2008

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

## மோட்டிவ் 6

பண்ணை வீட்டுக்குள் நடந்த பார்ட்டியின்போது, விவேக் விக்கி ராயை சுட்டுக் கொன்றது யார் என்ற கேள்விக்கான ஒப்புதல் வாக்குமூலம் தொடர்கிறது!

83

### கொலை அல்ல... தீர்ப்பு!

மார்ச் 17-ம் தேதி விவேக் விக்கி ராய் போனில் நான் கேட்ட உரையாடல் பதிவை அப்படியே உங்கள்முன் வைக்கிறேன்..!

www.t.me/tamilbooksworld

''ஹலோ, விக்கி தம்பியா?''

''ஆமாம்... முக்தார் அன்சாரிதானே... என்ன இந்த நேரத்துல கூப்பிடுறே?''

''மனசே சரியில்லை தம்பி... சின்னக் குழந்தையா இருந்த காலம் தொட்டு உங்களை எனக்குத் தெரியும். லக்னோவுல உங்க வீட்டுல நீங்க என் முதுகுல உட்கார்ந்து யானை சவாரி செஞ்ச காலத்துல இருந்து உங்க மேலே நான் தனி அன்பு வெச்சிருக்கேன் தம்பி...''

''பழைய கதை பேசுறதுக்கா இந்த அர்த்த ராத்திரியில் கூப்பிட்ட? உனக்கு ஏதாச்சும் பெரிய பிரச்னையா?''

''தம்பி... பிரச்னை எனக்கு இல்லீங்க... உங்களுக்குத்தான்!''

''என்ன முக்தார்... தண்ணி கிண்ணி போட்டிருக்கியா?''

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

''இல்லை தம்பி. தெளிவாத்தான் இருக்கேன். ஒரு மணி நேரத்துக்கு முந்தி ஜெகன்னாத் ஐயா போன்ல பேசுனாரு...''

www.t.me/tamilbooksworld

''யாரு அப்பாவா? என்ன புதுசா ஏதாச்சும் வில்லங்கமா? வழக்கமா யாரையாச்சும் போட்டுத்தள்ளத்தானே உன்னைக் கூப்பிடுவாரு... இப்போ யாரை?''

''அ... அது... உங்களைத்தான் தம்பி!''

''எ... என்ன முத்தார்... மென்டல் ஆயிட்டியா? இப்படி எல்லாம் நீ பேசுனதா அப்பாவுக்குத் தெரிஞ்சா என்னாகும் தெரியுமா?''

(அழுகை) ''சத்தியமா நிஜம் சொல்றேன் தம்பி... எவ்வளவோ அசைன்மென்ட் பண்ணி இருக்கேன். ஆனா, ஒரு நாளும் மனசுக்குள்ள குழப்பமோ, பயமோ, கிடையாது. இன்னிக்கு... (மறுபடி அழுகை)''

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

''இதோ பாரு முக்தார்... (சிறு அமைதி) என்னால நம்பவே முடியலை. ஆனா, அப்பா ஏன் இப்படி? என்னையேவா? எதுக்கு..?''

''அப்பாவுக்கு உங்க மேலே எவ்ளோ பாசம்னு எனக்கும் தெரியும் தம்பி. ஆனா, முதல்வர் பதவி மேலே அவருக்கு அதைவிட அதிகமாப் பாசம் வந்திடுச்சுபோல. சொந்தக் கட்சியில இருந்து நிறைய எம்.எல்.ஏ-க்களை இழுக்க ஏற்பாடு பண்ணிட்டார். ஆனா, நம்பர் பத்தலை. கூட்டணி மந்திரி சபை போடலாம்னா, எதிர்க் கட்சிக்காரங்க மறுக்குறாங்க. நீங்க இருக்கிற வரைக்கும் கூட்டணிக்கு எதிர்க் கட்சிக்காரங்க சம்மதம் சொல்ல மாட்டாங்களாமே... (மறுபடி அழுகை)''

''முக்தார்... அழுறதை முதல்ல நிறுத்து! எங்கே வெச்சு, எப்படிப் போட்டுத் தள்ளணும்னு அப்பா ஏதாச்சும் சொன்னாரா?''

''மார்ச் 23-ம் தேதி நீங்க பார்ட்டி கொடுக்குறீங்களாமே... அப்பாகூட அன்னிக்கு அங்கேதான் இருப்பாராமே...''

www.t.me/tamilbooksworld

(நீண்ட மௌனம்) ''முக்தார்... நீ எனக்கு ஒரு காரியம் செய்வியா?''

''சொல்லுங்க தம்பி!''

''அப்பா சொன்னபடியே செய்... எப்படி வரச் சொன்னாரோ அப்படியே அங்கே வா. போட்டுத் தள்ளிடு, அப்பாவை!''

''தம்பீ...''

''வேற வழி இல்லை முக்தார். நீ எங்கே இருக்கேன்னு சொல்லு. நாளைக் காலைக்குள்ளே பத்து லட்ச ரூபாய் அட்வான்ஸா அனுப்பி வெக்கிறேன். நீ வேலையை முடிச்ச பின்னாடி, பேலன்ஸ் வந்து சேரும்!''

''இத்தனை வருஷமா மந்திரி ஐயாவுக்கு நான் அடிமைத் தொழில் பண்ணி இருக்கேன். அவரையே எப்படி தம்பீ...?''

''முக்தார்... நாளைக் காலை உனக்கு இருபது லட்சமா அட்வான்ஸ் வந்து சேரும், ரைட்டா? இன்னும் ஈஸியா உனக்கு நான் வேலையை

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*முடிச்சுத் தர்றேன்... என்னோட மிக நம்பகமான ஆளு சங்கர்னு ஒருத்தன்... பண்ணை வீட்டில் அன்னிக்கு இருப்பான். பின் கதவைத் திறந்துவெச்சிருப்பான். அந்த வழியா வா... மறைஞ்சு இரு. நேரம் பார்த்து நான் கரன்ட்டை கட் பண்ணச் சொல்றேன்... நீ வேலையை முடிச்சிட்டு பின் கதவு வழியா போய்க்கிட்டே இரு!''*

*''விக்கி தம்பீ... இது சரிங்களா?''*

*''நம்ம டீல் முடிஞ்சாச்சு. நீ இந்த அசைன்மென்ட்டை செய்றே! பார்ட்டி நடக்குற நாள் வரைக்கும் இனி யார்கிட்டேயும் எதுவும் பேசாதே... முக்கியமா அப்பா கூப்பிட்டா, நீ பேசவே கூடாது. ஒண்ணு செய்! உன் மொபைலை ஸ்விட்ச் ஆஃப் பண்ணியே வெச்சிரு. அந்தாளைக் காலி பண்ணிட்டு, தலைமறைவாயிடு. கலாட்டா எல்லாம் ஓய்ஞ்ச பிறகு நாம பேசிக்கலாம், ரைட்டா?''*

www.t.me/tamilbooksworld

*''சரிங்க தம்பீ... அஸம்கர்ல சராய்மீர் ஏரியாவுல நமக்கு ஒரு வீடு இருக்குது. அங்கேயே இருப்பேன். மார்ச் 23 ராத்திரி வேலை முடிக்கிறதுக்குத்தான் கிளம்பி வருவேன். அட்வான்ஸை நீங்க அங்கேயே அனுப்பிவெச்சிடுங்க. நான் வெச்சிடுறேன் தம்பீ...''*

*- என்ன... கேட்டீர்களா இந்தப் பதிவை! அப்பனும் பிள்ளையும் ஒருத்தனை ஒருத்தன் அடித்துத் தின்னத் திட்டமிட்டதில் எனக்கு அதிர்ச்சி ஏதும் இல்லை. மாறாக, வாய்ப்பு தேடி வருவதில் மகிழ்ச்சியே..!*

*விக்கி ராயை நெருக்கத்தில் நின்று சுட்டுத் தள்ள, எனக்காகவே விளக்குகள் அணையப்போகின்றன. அன்றைக்கு வெடிக்கப்போவது முக்தார் அன்சாரியின் துப்பாக்கி மட்டும் அல்ல... என் துப்பாக்கியும்தான். அடுத்தடுத்து ரெண்டு தோட்டா சத்தம். ஊரை அடித்து உலையில் போடும் அப்பாவும் மகனும் ஒரே ஸ்தலத்தில் காலி!*

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*ஒரு மனிதனை மிக நெருக்கத்தில் நின்று சுட்டுக் கொல்ல மூன்று விஷயங்கள் அவசியமாகின்றன. பலமான 'மோட்டிவ்'... அசைக்க முடியாத துணிச்சல்... சுமாரான துப்பாக்கி!*

*என்னிடம் இருக்கும் மோட்டிவ், பொதுநலன் சார்ந்தது. அதனால், போலீஸால் தங்கள் வழக்கமான விசாரணை முறைகளின் மூலம் அதைக் கண்டு பிடிக்க முடியாது. நீதி தேவதையின் பணியைச் செய்யப்போகிறேன் என்பதால், துணிச்சல் தாராளமாகவே வந்துவிட்டது. உரசுகிற தூரத்தில் நின்று சுடுவதற்கு 'பிராண்டட்' துப்பாக்கியெல்லாம் அவசியம் இல்லை... நாட்டுத் துப்பாக்கி கிடைக்கும் இடங்கள் எனக்கு நிறையவே தெரியும். அதை உடனே வாங்கிக்கொண்டு தயாரானேன்.*

*ஆரம்பத்திலேயே சொன்னேனே... தடித்த, உயரமான 'ஷூ'வுடன் பார்ட்டிக்குப் போனதாக. உணவோ, டிரிங்ஸோ சப்ளை பண்ணும் ஒரு வெயிட்டர், கனமான 'ஷூ' அணிந்து இருக்கக் கூடாது என்று சட்டமா என்ன?*

www.t.me/tamilbooksworld

*ஆனால், தெருவோரக் கடைக்காரனிடம் ஸ்பெஷலாக ஆர்டர் கொடுத்துச் செய்த அந்த 'ஷூ'வின் அடிப்பாகத்தில் என்னுடைய நாட்டுத் துப்பாக்கியை கச்சிதமாகப் பொதித்துவைத்துக்கொண்டு போனது சட்டப்படி குற்றமே. ஆனால், கடைசி வரை போலீஸ் கண்டுபிடிக்கவே இல்லை!*

*விளக்கு அணைந்து... நான் கொன்று... மறுபடி வெளிச்சம் வந்து... போலீஸ் எல்லோரையும் சோதனை செய்தபோது 'வெயிட்டர்' என்று சொல்லி நான் கொடுத்த டுபாகூர் வசிப்பிட முகவரியைக்கூட அவர்கள் சந்தேகப்படவே இல்லை. வேலையை முடித்த துப்பாக்கி மறுபடி என் ஷூவுக்குள்ளே இருந்ததால்... ரெடியாக நான் தயாரித்துவைத்து இருந்த பிரபல ஹோட்டலின் அடையாள அட்டையை எடுத்துக் காட்டிவிட்டு, அங்கே இருந்து போலீஸ் அனுமதியோடு மற்றவர்கள்போலவே கிளம்பி வெளியே வருவதிலும் எனக்கு சிரமங்கள் இருக்கவில்லை. ஒட்டுத் தாடி இல்லாமல் என் நிஜ முகத்தைப் பார்க்கும்போது... இனிமேல் எந்நாளும்*

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

போலீஸால் இந்த டெல்லி மாநகரின் ஜனக் கூட்டத்தில் அடையாளம் காண முடியாது! சந்தேகம் என்று ஒன்று இருந்தால்தானே, என்னைத் தேடி வந்து கண்டுபிடிப்பதற்கு! அவர்கள்தான் ஆதிவாசியின் தலையில் போட்டு, அவனை என்கவுன்ட்டர் பண்ணி வழக்கையே முடித்துவிட்டார்களே..!

இருட்டில் நான் சட்டென்று துப்பாக்கியை எடுத்து கையில் வைத்துக்கொண்டேன். எதிர்பார்த்த மாதிரியே முதல் துப்பாக்கி வெடித்தது. அதைத் தொடர்ந்து அலறியது ஜெகன்னாத் ராய் மாதிரிதான் இருந்தது. முக்தார் அன்சாரி தன் வேலையை முடித்துவிட்டான் என்று முடிவு கட்டி, நான் என் துப்பாக்கியை விவேக் விக்கி ராய் நோக்கி அழுத்தினேன். அவன் சன்னமான ஒரு அலறலோடு கீழே சரியும் வரை மிகக் கிட்டத்தில் இருந்த என்னால் உணர முடிந்தது.

இதில் அதிர்ச்சி என்பது, விளக்கு வந்தபோது ஜெகன்னாத் ராய் சாகாமல் இருந்ததுதான். விக்கி ராயிடம் சொன்னபடி, முக்தார் அன்சாரி அந்தப் பண்ணை வீட்டுக்கு வரவில்லை என்பதைப் பிறகுதான் புரிந்துகொண்டேன். அதற்கு முன்பே அவன் அஸம்கரில் செத்துப் போய்விட்டான் என்று எனக்குத் தெரியாது.

www.t.me/tamilbooksworld

அப்படியானால், எனக்கு முன்பாக முழங்கிய துப்பாக்கி?

அது அஷோக் ராஜ்புத் சுட்டது என்பதைக் கண்டுபிடித்து... 'அருண் அத்வானி' கட்டுரைத் தொடரில் எழுதியதைப் பார்த்து இருப்பீர்களே..!

ஜெகன்னாத் ராய் சாகாவிட்டால்தான் என்ன? கிட்டத்தட்ட செத்த மாதிரிதான். எத்தனை வருடங்கள் கழித்து ஜெயிலில் இருந்து அந்த ஆள் வெளியே வருவானோ? வந்தாலோ, முன்புபோல அரசியலில் கொடி கட்டிப் பறப்பது எல்லாம் முடியாத காரியம்! அதற்குள், உத்தரப் பிரதேச அரசியலில் ஜித்தனுக்கு ஜித்தன் எல்லாம் வந்து இருப்பார்கள்.

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*நான் நடத்தியது கொலை அல்ல... தீர்ப்பு வழங்கி இருக்கிறேன்! கோர்ட்டில் தீர்ப்பு அளிக்கும் நீதிபதிகளின் பெயர்கள், பேப்பர்களில் செய்தியாக வரும். சேனல்களில்கூட சொல்வார்கள். என் பெயர் எங்கும் வரவில்லை. என் மனைவிக்கு நான் என்ன காரியம் செய்தேன் என்று தெரியாது. என்னோடு வேலை பார்க்கிறவர்களுக்குத் தெரியாது. எப்போதும்போல நான் ஆபீஸ் போய்க்கொண்டு இருக்கிறேன். மணிக் கணக்காக போனில் பேசுகிறேன்... கட்டுரைகள் எழுதுகிறேன்...*

*'கட்... கட்டுரையா?!' என்கிறீர்களா?*

*இந்த சமுதாயத்தில் ஒரு பத்திரிகையாளன் என்பவன், அநீதிகளைக் கண்டு பொங்கும்போது கட்டுரை எழுதுவதைத் தவிர வேறு என்ன செய்ய முடியும்? தப்பு செய்கிறவனை நேரில் போய் சுட்டுத் தள்ளவா முடியும்?*

*இத்தனை நாட்களாக, என் தொடர் கட்டுரைகளின் வாயிலாக உங்களோடு பேசிக்கொண்டு இருந்த நான் எனக்குத் தெரிந்த எல்லா விவரங்களையும் உடனுக்குடன் உங்களோடு பகிர்ந்துகொண்டு இருக்கிறேன். இடையில் முக்கியமாக ஏதாவது சொல்ல மறந்து இருந்தால், தயவு பண்ணி மன்னித்துவிடுங்கள். வேண்டும் என்றே மறைக்க வேண்டும் என்றெல்லாம் நினைக்கவில்லை!*

www.t.me/tamilbooksworld

*போற்றிப் புகழும் உயர்ந்த பதவியில் இருந்துகொண்டு நாற்றம் எடுக்கும் காரியங்களைச் செய்பவர்களுக்கு எதிராகப் புரட்சியைத் தூண்டும் காரியத்தை நான் தொடர்ந்து செய்துகொண்டே இருப்பேன். தொடர்ந்து போன்களை ஒட்டுக்கேட்பேன்... பெரிய மனிதர்களின் அந்தரங்கத்துக்குள் புகுந்து பார்ப்பேன்... எழுத்தில் வெளிப்படுத்தக் கூடியவற்றை வெளிப்படுத்துவேன். என் ரத்தம் கொதித்துக்கொண்டேதான் இருக்கும். மூளை வெடிக்கிற மாதிரி பிரஷர் இருந்துகொண்டேதான் இருக்கும். சமயங்களில் அந்த பிரஷர் பொறுக்க முடியாத அளவுக்கு விவேக் விக்கி ராய் போன்றவர்களுக்கு நானே மறுபடி நேரடித் தீர்ப்பு வழங்கவேண்டி வரலாம்.*

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

*என்ன செய்வது... சில சமயங்களில் கொலை பண்ணுவதுகூட ஒரு போதை மாதிரி ஆகிவிடுகிறது!*

மோட்டிவ் நிறைவு பெற்றது

Copyright © Vikas Swarup 2008

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld

www.t.me/tamilbooksworld